தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

**OFFICIAL REPORT**

திங்கட்கிழமை 1975 பிப்ரவரி 24

**Monday 24th February 1975**

தொகுதி LXII—எண் 3

**Volume LXII—No. 3**


©

தமிழ் நாடு அரசு

1975

GOVERNMENT OF TAMIL NADU

1975



சட்டமன்றப் பேரவைத் துறை

சென்னை-600009.

*Legislative Assembly Department*

*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]

**Price 50 Paise]**

V2:11,31'N75
31N75.62
61683

# Tamil Nadu Legislative Assembly Debates

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

21ST, 22ND, 24TH, 25TH, 26TH AND 27TH FEBRUARY 1975.
LXII (Nos. 1 to 6)

TABLE OF CONTENTS.

*Friday, 21st February* 1975.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... | vii |
| List of members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... | ix—xvi |
| 1. Obituary reference— | |
| Death of Thiru M. J. Jamal Mohideen, Thirumathi Mary Clubwala Jadav and Thiru L. N. Misra ... | 1 |
| 2. Condolence Resolution— | |
| Demise of Thiru J. Sivashanmugam Pillai, former Speaker ... ... ... ... ... | 2—3 |
| 3. Questions and Answers ... ... ... ... | 3—38 |
| 4. Announcements— | |
| (*a*) Business of the House ... ... ... | 39 |
| (*b*) Panel of Chairmen ... ... ... ... | 39 |
| 5. Points of Information— | |
| (*a*) Notice of a Privilege Matter by a member ... | 39—40 |
| (*b*) Issue of more than one gallery ticket by members ... ... ... ... | 41 |

*Friday, 21st February 1975—cont.*


| | PAGES |
|---|---|
| 6. Point of order— Permission to move the amendments immediately after the Motion of Thanks to Governor's Address is moved ... ... ... ... | 41—46 |
| 7. Discussion on the Motion of Thanks to the Governor's Address ... ... ... ... | 46—123 |
| 8. Papers laid on the Table ... ... ... ... | 123—138 |


*Saturday, 22nd February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 181—218 |
| 2. Points of order— | |
| (*a*) Views of Karnataka State's Public Works Minister on Cauvery water dispute ... | 218—219 |
| (*b*) Death of a Harijan in lock-up at Ottapidaram. | 219—220 |
| 3. Statement by Minister— Correction to answer given on 29th March 1974 about rehabilitation of Ceylon repatriates ... | 220—221 |
| 4. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* ... ... | 221—299 |
| 5. Papers laid on the Table ... ... ... ... | 299—301 |


*Monday, 24th February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 323—354 |
| 2. Point of order— Prime Minister's statement in the press *re.* the improper utilisation of drought relief funds ... | 354—357 |
| 3. Privilege Matter— P.W.D. Minister's Press statement attacking Estimates Committee Chairman ... ... ... | 357—384 |
| 4. Adjournment Motion— Failure of Inter-State talks on the Cauvery river water distribution ... ... ... ... | 384—421 |




*Monday, 24th February 1976—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Presentation of Report— Report of the Committee on Public Undertakings on Electricity Board ... ... ... ... | 422 |
| 6. Announcement— Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 ... ... ... ... ... | 422 |
| 7. Government Bill— Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 ... ... ... ... ... | 422 |
| 8. Discussion on the Motion of Thanks to Governor's Address—*cont.* ... ... ... ... | 423—447 |
| 9. Papers laid on the Table ... ... ... ... | 448 |


*Tuesday, 25th February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 449—476 |
| 2. Point of order— Supply of lengthy answers to questions in advance to members ... ... ... ... ... | 476—477 |
| 3. Privilege Matter— Motion of Privilege against 'Makkal Kural', 'Annai Nadu', 'Samaneethi' and 'Statesman'. | 477—478 |
| 4. Adjournment Motion— Need for proper execution of Drought relief works ... ... ... ... ... | 478—507 |
| 5. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* ... ... ... | 507—571 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 572 |

*Friday, 21st February 1975—cont.*


| | PAGES |
|---|---|
| 6. Point of order— | |
| Permission to move the amendments immediately after the Motion of Thanks to Governor's Address is moved ... ... ... ... ... | 41—46 |
| 7. Discussion on the Motion of Thanks to the Governor's Address ... ... ... ... | 46—123 |
| 8. Papers laid on the Table ... ... ... ... | 123—138 |


*Saturday, 22nd February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 181—218 |
| 2. Points of order— | |
| (*a*) Views of Karnataka State's Public Works Minister on Cauvery water dispute ... | 218—219 |
| (*b*) Death of a Harijan in lock-up at Ottapidaram. | 219—220 |
| 3. Statement by Minister— | |
| Correction to answer given on 29th March 1974 about rehabilitation of Ceylon repatriates ... | 220—221 |
| 4. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* ... ... | 221—299 |
| 5. Papers laid on the Table ... ... ... ... | 299—301 |


*Monday, 24th February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 323—354 |
| 2. Point of order— | |
| Prime Minister's statement in the press *re.* the improper utilisation of drought relief funds ... | 354—357 |
| 3. Privilege Matter— | |
| P.W.D. Minister's Press statement attacking Estimates Committee Chairman ... ... ... | 357—384 |
| 4. Adjournment Motion— | |
| Failure of Inter-State talks on the Cauvery river water distribution ... ... ... ... | 384—421 |




*Monday, 24th February 1976—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Presentation of Report— | |
| Report of the Committee on Public Undertakings on Electricity Board ... ... ... ... | 422 |
| 6. Announcement— | |
| Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 ... ... ... ... ... | 422 |
| 7. Government Bill— | |
| Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 ... ... ... ... ... | 422 |
| 8. Discussion on the Motion of Thanks to Governor's Address—*cont.* ... ... ... ... | 423—447 |
| 9. Papers laid on the Table ... ... ... ... | 448 |


*Tuesday, 25th February 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... ... | 449—476 |
| 2. Point of order— | |
| Supply of lengthy answers to questions in advance to members ... ... ... ... ... | 476—477 |
| 3. Privilege Matter— | |
| Motion of Privilege against 'Makkal Kural', 'Annai Nadu', 'Samaneethi' and 'Statesman'. | 477—478 |
| 4. Adjournment Motion— | |
| Need for proper execution of Drought relief works ... ... ... ... ... | 478—507 |
| 5. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* ... ... ... | 507—571 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 572 |

*Wednesday, 26th February 1975.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 577—609 |
| 2. Adjournment Motion— Strike in Christian Medical College Hospital, Vellore ... ... ... ... ... | 609—650 |
| 3. Calling Attention— Necessity to provide adequate drinking water facility in Madras City ... ... ... | 650—658 |
| 4. Discussion on the Motion of Thanks to Governor's Address—*cont.* ... ... ... ... | 659—713 |
| 5. Point of order— Attack on Thiru Venga, M.L.C., in the Legislators' Hostel ... ... ... ... ... | 669—670 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 713—714 |


*Thursday, 27th February 1975.*


| | |
|---|---|
| 1. Government Motion— Suspension of question hour ... ... ... | 717 |
| 2. Adjournment Motion— Attack on Thiru Venga, M.L.C. in the Legislator's Hostel ... ... ... ... ... | 718—731 |
| 3. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* ... ... ... | 731—821 |
| 4. Papers laid on the Table ... ... ... ... | 829—830 |


## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1975 பிப்ரவரி 24.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### அரசு ஊழியர் சிறப்புக் குடும்ப நலத்திட்டம்

* 41 வினா—திரு. கே. கந்தசாமி
திரு. என். கிட்டப்பா
திரு. எல். கணேசன் மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் சிறப்புக் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் இது வரை பயனடைந்த அரசு ஊழியர்களின் குடும்பங்கள் எத்தனை, மாவட்டவாரியாக?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு அரசின் சிறப்புக் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை—1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரை—934 அரசுப் பணியாளர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மாவட்டவாரியான புள்ளி விவரங்கள் வருமாறு:

| மாவட்டம். | எண்ணிக்கை. |
|---|---|
| செங்கற்பட்டு ... ... ... ... ... | 98 |
| தென் ஆற்காடு ... ... ... ... ... | 56 |
| வட ஆற்காடு ... ... ... ... ... | 69 |
| தஞ்சாவூர் ... ... ... ... ... | 50 |
| திருச்சிராப்பள்ளி ... ... ... ... | 59 |
| புதுக்கோட்டை ... ... ... ... ... | 9 |

[1975 பிப்ரவரி 24

| மாவட்டம். | எண்ணிக்கை. |
| --- | --- |
| இராமநாதபுரம் | 65 |
| மதுரை | 86 |
| திருநெல்வேலி | 100 |
| கன்னியாகுமரி | 35 |
| சேலம் | 46 |
| தருமபுரி | 21 |
| கோயம்புத்தூர் | 75 |
| நீலகிரி | 20 |
| சென்னை | 145 |
| மொத்தம் | 934 |

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த நல்லதொரு திட்டத்தின்கீழ், எதிர்பாராத விபத்தின் காரணமாக உயிர் இழக்கிற ஊழியர்கள் குடும்பத்தினருக்கு நல்ல பலன் கிடைக்கிறது என்பது குறித்து எல்லோரும் பாராட்டுகிறார்கள். அதே நிலையில் 10, 15 ஆண்டுகள் தொடர்ச்சியாக வேலையிலிருந்தும் நிரந்தரமாக்கப் படாமலிருப்பவர்களுக்கும் இத் திட்டம் உண்டு என்று உத்தரவு பிறப் பிப்பது நலம் அல்லவா? அப்படிப்பட்டவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கும் உதவுவது நல்லது. கடைநிலை ஊழியர்கள், ஸ்கூல் கண்டக்ட்ரஸ் போன்றவர்களுக்கும் உதவும் வகையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தில் ஏதாவது வசதி செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே கடை நிலை ஊழியர்களுக்கு இந்தத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. மாநில அரசின்கீழ் பணி புரிகிற நிரந்தர ஊழியர்கள், தற்காலிக ஊழியர்கள், பென்ஷன் பெறத் தகுதி இல்லாத ஊழியர்களாக இருந்தாலும் அவர்களுக்கும், வேலை நிதி ஊதியம் பெறும் ஊழியர்கள் (ஒர்க்-சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்ட்), மாநில பணி சார்ந்த எல்லா அதிகாரிகளுக்கும். (ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அதிகாரிகள் உட்பட) அனைவருக்கும் இச் சலுகை வழங்கப்படுகிறது. கடைநிலை ஊழியர் என்று சொல்லப்படுகிற ப்யூன்களுக்கும், காவலர்கள், ஆசிரியர்கள், டிரைவர்கள், பி.டபிள்யூ.டி. மேஸ்திரி, கேங் மேஸ்திரி, ரோடு இன்ஸ்பெக்டர் குடும்பங்களும் இதில் சேர்கின்றன.



1975 பிப்ரவரி 24]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் செயல்படுத்தப் படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், சென்னை–மதுரை மாநகராட்சிகளின் பணியாளர்கள், மின் வாரியப் பணியாளர்கள், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர்கள் ஆகியோருக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்மூலம் அரசுக்கு ஒட்டுமொத்தமாக வசூலாகக்கூடிய தொகை எவ்வளவு? ஊழியர்களிடமிருந்து நாம் நிதி வசூலிப்பதிலிருந்தே இந்தச் செலவினத்தைச் சரிக்கட்டிவிட முடியுமா? அதல்லாமல், நம்முடைய அரசின் "ரெவினியூ"விலிருந்து அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலையும் ஏற்படுமா? இது எப்படிக் கணக்கிடப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலில் பத்து ரூபாய் கட்ட வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கேட்கின்ற கேள்வியின் அடிப்படையில் இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிற சூழ்நிலையின் நிலவரத்தை மாத்திரம் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்பொழுது அவர்களுடைய ஊதியத்திலிருந்து ஒரு ரூபாய் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையை அமுலாக்கியிருக்கிறோம். இந்த 934 பேர்களுக்கு ரூ. 93,40,000 வழங்கியிருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மாதம் ஒரு ரூபாய் என்று வைத்துக்கொண்டால்கூட–கிட்டத்தட்ட ஐந்து லட்சம் ஊழியர்கள் இருப்பார்கள்—அதன்மூலமாக வருஷத்திற்குக் கிடைக்கின்ற தொகை ஐம்பது முதல் அறுபது லட்சம் வரை இருக்கும். அதற்கு மேற்கொண்டும் அரசு தரவேண்டியதாக இருக்கிறது. இந்தக் காரணத்தினால்தான் எல்.ஐ.சி.யோடு நாம் தொடர்பு கொண்டு ஆயுள் தொகுப்பு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். ஒவ்வொரு ஊழியர் சார்பாகவும் ரூ. 12 கிடைக்கிறது. அரசின் சார்பாக ரூ. 4 வீதம் சேர்த்து, ரூ. 16 நாம் கொடுக்கிறோம். இந்தப் பத்தாயிரம் ரூபாய்–ஐயாயிரம் ரூபாய் அரசும் ஐயாயிரம் ரூபாய் எல்.ஐ.சி. மூலமாகவும் வழங்கப்படுகிறது.

[1975 பிப்ரவரி 24

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறப்பு குடும்பப் பாதுகாப்புத் திட்டம் கிராமக் கர்ணம், கிராம முன்சிப் போன்ற கிராமத்தில் பணியாற்றுகிறவர்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதா? பத்து வருடத்திற்குமேல் இந்தப் பணத்தைச் செலுத்தும் ஊழியர்களுக்குப் போனஸ் வழங்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போனஸ் வழங்கும் திட்டம் ஒன்றும் இல்லை. கிராம அதிகாரிகளுக்கும் இதை விஸ்தரிக்கலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி . தலைவர் அவர்களே, இந்த ஏற்பாட்டினால் பலன் அடைந்த குடும்பங்களில் ஏழ்மையான நிலையிலுள்ள குடும்பங்கள் எத்தனை என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். போன்றவர்கள் அதிகமா என்ற அடிப்படையில் அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 934 குடும்பங்கள் பலன் அடைந்தன என்று நான் புள்ளிவிவரம் சொன்னேன். 934 குடும்பங் களில் 300 ரூபாய்க்கும் குறைந்து மாத வருமானம் பெற்றுவந்த ஊழியர்கள் மரணம் அடைந்த வகையில் 800க்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன் அடைந்திருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். ஆனால், உள்ளாட்சித் துறையில்—பல நகர மன்றங்கள்—பல கிராமப் பஞ்சாயத்துக்கள் தாங்களாகவே இந்தத் திட்டத்திற்கான பண உதவியைச் செய்வதற்கு வழி இல்லாமல் இருக்கின்றன. அந்தக் காரணத்தினால் இந்தத் திட்டத்தின் பயனை அங்குள்ள ஊழியர்கள் அடைய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பொறுப் பினையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டத்தின்படி மாதந்தோறும் அவர்களுடைய ஊதியத்திலிருந்து ஒரு ரூபாய் தான் பிடித்துக்கொள்ளப்படுகிறது, ஆகவே, பணம் செலுத்தக் கஷ்டப் படத் தேவையில்லை என்று கருதுகிறேன்.



1975 பிப்ரவரி 24]

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டத்தின் பிரகாரம் மாதமொன்றுக்கு சர்க்கார் பத்து ரூபாயும் ஊழியர் பத்து ரூபாயும் போடவேண்டும். முப்பது வருஷம் கழித்து 7,200 ரூபாய் கிடைக்கும். ஆனால், நான்கு மாதங்கள் ஆன பிறகு, சர்க்கார் இந்தத் திட்டத்திற்குப் பணம் போட முடியாது என்று சொன்னதற்குக் காரணம் என்ன? அந்தத் திட்டம் பூராவும் இப்பொழுது இல்லையா? ஒரு ரூபாய் பிடித்தம் போக நான்கு ரூபாய் கையில் கிடைக்கிறது. பத்து ரூபாய் என்னவாயிற்று?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பத்து ரூபாய் கட்ட வேண்டும் என்ற திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டது. 13 மாதங்கள் அப்படிப் பத்து ரூபாய் கட்டியிருக்கிறார்கள். அப்படி கட்டப்பட்டிருக்கிற தொகை ஒரு அலுவலரைப் பொறுத்த வரையில் 130 ரூபாய் என்று கணக்கு வருகிறது. அந்த 130 ரூபாயையும் பிராவிடன்ட் பண்டில் சேர்த்துவிடலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் முதலில் சமூகப் பாது காப்புத் திட்டம் என்ற மிகப் பெரிய திட்டத்தை அரசு தொடங்கி வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தில் பத்து ரூபாய் சேர்வதால் அந்தப் பயனை அவர்கள் பெறமுடியும் என்பதால் இந்தத் திட்டத்தைத் தனியாக இன்றைக்கு அரசு நடைமுறைப்படுத்துகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சிறப்புத் திட்டத்தின் மூலமாக, கடை நிலை ஊழியர்களாக உள்ளவர்கள் இறந்த பின்னர் அவர்களுடைய குடும்பத்திற்குத் தொகை கிடைக்கவில்லை என்று பரவலாகப் புகார் சொல்லப்படுகிறது. அம்மாதிரியான புகார்கள் முதலமைச்சரின் கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அப்படிப்பட்ட வர்களுக்குத் தொகை வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் இதுவரையில் எனக்கு வரவில்லை. உடனடியாக அந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றுதான் உத்தரவிடப் பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அப்படி இறந்துபோன வர்களின் சவங்கள் எடுக்கப்படுகிற நேரத்தில் உதவும் வகையில் உடனடியாக ரூ. 100 முதல் ரூ. 200 வரை வழங்கவும் அனுமதிக்கப் படுகிறது. செலவழித்த தொகையைப் பிறகு மொத்தத் தொகையில் கழித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால், சில இடங்களில் நான் நேரடியாகச் சென்று அப்படிப்பட்ட தொகை வழங்கும் நேரத்தில், ஏற்கெனவே கொடுத்த தொகையைக் கழித்துக் கொள்ளாமல் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன்.

[1975 பிப்ரவரி 24

*Bifurcation of Revenue Department*

*42 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Revenue Department in the Secretariat has been bifurcated into Department of Revenue and Department of Commercial Taxes; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தலைமைச் செயலகத்திலுள்ள மிகப் பெரிய துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்றாகும். இத்துறை சரியாகவும் திறமையுடனும் செயல்படும் பொருட்டும், துறை கவனிக்கின்ற பல்வேறு முக்கியப் பொருட்கள் மீது திறமையான கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தும் பொருட்டும் அரசு இத் துறையை 15—7—74 ஆம் நாள் முதற்கொண்டு வருவாய்த் துறை, வணிக வரி—சமய அறக்கட்டளைகள் துறை என இரு துறைகளாகப் பிரித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இது பிரித்ததற்குப் பின்னாலே என்னென்ன முறையில் இது அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. வரி வசூல் முறைகளிலே ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது வருவாய்த் துறையின் கீழ் நிலவரி, நிலச்சீர்திருத்தம், அகதிகள் மறுவாழ்வு போன்ற பிரிவுகளும், வணிக வரிகள்—சமய அறக்கட்டளைத் துறையின் கீழ் வணிகவரிகள், இந்து சமய அறக்கட்டளைகள், பத்திரப்பதிவு, முத்திரைத்தாள், நிலஅளவை—நிலவரி ஏற்பாடு போன்ற பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் ஒழுங்காகவும், செம்மையாகவும் விரிவாகவும், வேகமாகவும் செயல்பட வேண்டும் என்பதற்காகத் தான் அதிகாரங்களும், எல்லாப் பொறுப்புக்களும் ஒரே துறையிலேயே குவிந்துவிடாமல் இவைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன்: வருவாய்த் துறை என்பது அரசாங்கத்தினுடைய ஒரு அங்கம். அதில் வருவாய் சம்பந்தமான இலாகாக்கள் மட்டும் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலேயர் காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரை வருவாய்க்கு என்று வைத்திருந்த காரணத்தினால்



1975 பிப்ரவரி 24]

கலெக்டர் என்ற பெயரை வைத்து, பணத்தை வசூல் செய்வதற்கென்று குறிப்பிட்டிருந்தார்கள். இப்பொழுது அதை தமிழில் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று கூறுவதைப் போல், கலெக்டர் என்ற பெயரை மாற்றி, டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ரேட்டர் என்ற பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். கலெக்டர் வசூலுக்கு மட்டும் அல்ல, ஆட்சியையும் நிர்வகிக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற தமிழுக்குச் சரியான ஆங்கில மொழி பெயர்ப்பாக திரு. கோவை செழியன் கூறிய ஆங்கில வார்த்தை பொருந்தும். ஆனாலும் கலெக்டர் என்ற பெருமை வாய்ந்த சொல்லை இழப்பதற்கு யாரும் இப்பொழுது தயாராக இல்லை.

திரு. கே. கந்தசாமி: வருவாய்த் துறையை ரெவின்யூ டிபார்ட்மெண்ட், கமெர்ஷியல் டாக்ஸஸ் டிபார்ட்மெண்ட் என்று இரண்டாகப் பிரித்ததன் மூலமாக அதிகப்படியான செலவு அரசுக்கு ஏற்படுமா? அது சம்பந்தமாக வொர்க் அவுட் பண்ணி பிறகு பிரிக்கப்பட்டதா? அப்படியானால் அதனால் ஏற்படக்கூடிய அதிகச் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதிகப்படியான செலவு அதிகப்படியான வருமானத்தையும் ஈட்டித் தரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ரெவின்யூ செக்ரடேரியட்டை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகு கமெர்ஷியல் டாக்ஸஸ் செக்ரடேரியட் தனியாக செயல்படுகிறது என்றால், அது ரெவின்யூ அமைச்சரின் கீழ் செயல்படுமா அல்லது கமர்ஷியல் டாக்ஸ்க்கு என்று இருக்கக்கூடிய தனி அமைச்சரின் கீழே செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வணிக வரித் துறை அமைச்சரின் கீழே செயல்படும்.

[1975 பிப்ரவரி 24

*Bifurcation of Revenue Department*

*42 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Revenue Department in the Secretariat has been bifurcated into Department of Revenue and Department of Commercial Taxes; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தலைமைச் செயலகத்திலுள்ள மிகப் பெரிய துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்றாகும். இத்துறை சரியாகவும் திறமையுடனும் செயல்படும் பொருட்டும், துறை கவனிக்கின்ற பல்வேறு முக்கியப் பொருட்கள் மீது திறமையான கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தும் பொருட்டும் அரசு இத் துறையை 15—7—74 ஆம் நாள் முதற்கொண்டு வருவாய்த் துறை, வணிக வரி—சமய அறக்கட்டளைகள் துறை என இரு துறைகளாகப் பிரித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இது பிரித்ததற்குப் பின்னாலே என்னென்ன முறையில் இது அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. வரி வசூல் முறைகளிலே ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது வருவாய்த் துறையின் கீழ் நிலவரி, நிலச்சீர்திருத்தம், அகதிகள் மறுவாழ்வு போன்ற பிரிவுகளும், வணிக வரிகள்—சமய அறக்கட்டளைத் துறையின் கீழ் வணிகவரிகள், இந்து சமய அறக்கட்டளைகள், பத்திரப்பதிவு, முத்திரைத்தாள், நிலஅளவை—நிலவரி ஏற்பாடு போன்ற பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் ஒழுங்காகவும், செம்மையாகவும் விரிவாகவும், வேகமாகவும் செயல்பட வேண்டும் என்பதற்காகத் தான் அதிகாரங்களும், எல்லாப் பொறுப்புக்களும் ஒரே துறையிலேயே குவிந்துவிடாமல் இவைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன்: வருவாய்த் துறை என்பது அரசாங்கத்தினுடைய ஒரு அங்கம். அதில் வருவாய் சம்பந்தமான இலாகாக்கள் மட்டும் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலேயர் காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரை வருவாய்க்கு என்று வைத்திருந்த காரணத்தினால்



1975 பிப்ரவரி 24]

கலெக்டர் என்ற பெயரை வைத்து, பணத்தை வசூல் செய்வதற்கென்று குறிப்பிட்டிருந்தார்கள். இப்பொழுது அதை தமிழில் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று கூறுவதைப் போல். கலெக்டர் என்ற பெயரை மாற்றி, டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ரேட்டர் என்ற பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். கலெக்டர் வசூலுக்கு மட்டும் அல்ல, ஆட்சியையும் நிர்வகிக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற தமிழுக்குச் சரியான ஆங்கில மொழி பெயர்ப்பாக திரு. கோவை செழியன் கூறிய ஆங்கில வார்த்தை பொருந்தும். ஆனாலும் கலெக்டர் என்ற பெருமை வாய்ந்த சொல்லை இழப்பதற்கு யாரும் இப்பொழுது தயாராக இல்லை.

திரு. கே. கந்தசாமி: வருவாய்த் துறையை ரெவின்யூ டிபார்ட்மெண்ட், கமெர்ஷியல் டாக்ஸஸ் டிபார்ட்மெண்ட் என்று இரண்டாகப் பிரித்ததன் மூலமாக அதிகப்படியான செலவு அரசுக்கு ஏற்படுமா? அது சம்பந்தமாக வொர்க் அவுட் பண்ணி பிறகு பிரிக்கப்பட்டதா? அப்படியானால் அதனால் ஏற்படக்கூடிய அதிகச் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதிகப்படியான செலவு அதிகப்படியான வருமானத்தையும் ஈட்டித் தரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ரெவின்யூ செக்ரடேரியட்டை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகு கமெர்ஷியல் டாக்ஸஸ் செக்ரடேரியட் தனியாக செயல்படுகிறது என்றால், அது ரெவின்யூ அமைச்சரின் கீழ் செயல்படுமா அல்லது கமர்ஷியல் டாக்ஸ்க்கு என்று இருக்கக்கூடிய தனி அமைச்சரின் கீழே செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வணிக வரித் துறை அமைச்சரின் கீழே செயல்படும்.

[1975 பிப்ரவரி 24

## திருச்சிராப்பள்ளி உருக்கிநோய் மருத்துவ மனை

* 43 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள ராஜாஜி க்ஷயரோக ஆஸ்பத்திரியை (டி.பி. சானிடோரியம்) அரசு ஏற்றுக்கொள்ளக் கோரி மருத்துவ மனையின் நிர்வாகக் கமிட்டி அரசுக்கு கோரிக்கை ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இந்த காசநோய் மருத்துவ மனையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

(இ) நலத் துறை இயக்குநர் இதுபற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா : பொதுவாக நம்முடைய தமிழகத்திலுள்ள எல்லா க்ஷயரோக மருத்துவ மனைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்த முன்வந்தால் அதிகமான வசதிகள் கிடைக்கும் என்று பொது மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, எல்லா க்ஷயரோக மருத்துவ மனைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்திச் செல்வதற்கான ஒரு திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் திருச்சி காச நோய் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், செலவை இன்னும் அரசாங்கம் மிகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியில்லாத நிலையில், இன்றைய தினம் பயன் படுவதைவிட இன்னும் பயன்படுவதற்கு நல்ல முறையில் நடத்த முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருப்பதன் காரணத்தினால் அதைப் பற்றி இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதிகப் பொருள் செலவு ஏற்படக்கூடிய தனிப்பட்ட அம்மாதிரி மருத்துவ மனைகளை ஏற்றுக்கொள்வது இப்பொழுது உள்ள பொருளாதார நிலையில் சற்று கஷ்டமான காரியமாகும்.



1975 பிப்ரவரி 24]

* திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சியில் உள்ள ராஜாஜி டி.பி. சானடோரியத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன காரணம் கூறியிருக்கிறார். அது எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ள காரணம் அந்த மருத்துவ மனையில் நல்ல இட வசதி உள்ளது. மிகப் பெரிய கட்டடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டிருக் கின்றன. நல்ல கருவிகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளலாம். அரசாங்க மருத்துவ மனை யோடு அது இணைக்கப்பட்டால், மாவட்ட மருத்துவ மனை காசநோய் பகுதியையும் இந்த மருத்துவ மனையையும் இணைத்து, அதிகமான பேர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் நிர்வகிக்க முடியும். அப்படி நிர்வகிப்பதன் மூலம் அதிகமான பேர்களை ஏற்றுக் கொள்ள வசதி இருக்கிறது. செலவு மிகுதியாக இல்லாத வகையில் குறிப்பிட்ட அளவு செலவிலே இதை நிர்வகிக்க முடியும் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார். அதைத் தான் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. பரிசீலனைக்குப் பின்னாலே தான் எப்பொழுது எடுத்துக்கொள்வது என்பது தெரிவிக்கப்படும்.

## *Neyyoor Cancer Centre*

* 44 *Q*.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any assistance to the International Cancer Centre at Neyyoor, Kanyakumari district ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் . (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : இந்த மருத்துவ மனையில் விசேஷ கருவிகள் இருக்கின்றன. நிபுணர்கள் இருக்கிறார்கள். தென் மாவட்டங்களில் குறிப்பாக கன்னியாகுமரிக்கு புற்று நோய் சிகிச்சைக்காக வேறு மருத்துவ மனை இல்லாத நிலை இருக்கிறது. இதனால் இந்த மருத்துவ மனைக்கு கவர்ன்மெண்ட் கிராண்டு, அசிஸ்டென்ஸ் கொடுத்து உதவ முன்வருமா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உலக நாடுகளின் நிறுவனத்தின் சார்பில் இந்தப் புற்று நோய் மருத்துவ மனை அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலமாக தேவைப்படுகிற கட்டடமும், உதவித் தொகையும் மத்திய அரசாங்கத்திலிடமிருந்து பெரிய அளவுக்குப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சாதனங்கள் வாங்குவதற்காகக் கூட இந்திய அரசு நிதி வழங்கியுள்ளது. எனவே உலக நாடுகளின் நிறுவனத்தின் சார்பான அமைப்பு என்ற முறையில் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து அவர்கள் உதவி பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறது. மாநில அரசை அவர்கள் அவ்வாறு உதவி கேட்கவும் இல்லை. நாம் அப்படி உதவி செய்ய ஆரம்பித்தால் அது மத்திய அரசு செய்கின்ற உதவிக்கு இடையூறாக அமையும். அது தமிழ் நாட்டிற்கும் அவ்வளவு நல்லது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த நிறுவனத்தில் கோபால்ட் ட்ரீட்மெண்ட் விசேஷமாகக் கொடுக்கப்படுகிறது. இதைப் பலபேர்கள் பல இடங்களிலிருந்து வந்து பிரயோசனப்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, இது ஒரு முக்கியமான நிலையமாக இருக்கிற காரணத்தினால், பணம் கொடுக்காவிட்டாலும், கருவிகள் கொடுப்பதற்கும் அல்லது வேறு வகையில் உதவி செய்வதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகின்ற அப்படிப்பட்ட கருவிகள் அரசாங்க மருத்துவ மனைகளுக்கே கிடைக்காத ஒரு கஷ்டத்தில் நாம் இருக்கிறோம். அந்த அமைப்பு உலக நாடுகளின் நிறுவனத்தின் சார்பாக இருக்கிற காரணத்தினால், வேண்டிய ஃபாரின் எக்ஸ்சேஞ் பகுதிக்கு மத்திய அரசு விதிவிலக்கு அளித்துவிடுகிறது. அதனால் அவர்கள் அந்தக் கருவிகளைக் கொண்டு வரமுடிகிறது. அதைப்போல கொண்டு வர தமிழ் நாடு அரசுக்குக் கூட மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை. தனியார் நிறுவனங்களுக்கு சில தனிச் சலுகைகள் இருக்கின்றன. அதனால் அவர்கள் அப்படிப்பட்ட கருவிகளைப் பெற முடிகிறது. அது நாட்டிற்கு நன்மையான காரியம். நாம் வழங்கக்கூடிய கருவிகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.



*Cases of dog bites in Coimbatore*

* 45 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether cases of dog-bites in the Coimbatore City are on the increase in recent times; and

(*b*) the action taken by the municipal and other authorities to arrest it?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் . (அ) இல்லை.

(இ) தெருவில் திரிகின்ற நாய்களைப் பிடிப்பதற்காக கோயம்புத்தூர் நகராட்சி நாய் பிடிப்பவர் மூவரை அமர்த்தியுள்ளது. நாய் பிடிக்கும் வேலை தவறாமல் நடந்து வருகிறது. நாய் பிடிக்குமாறு நகராட்சி வட்டங்களைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

Intensive Family Planning Programme.

* 46. *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government have issued orders for the grant of higher incentives to persons undergo sterilisation as a Family Planning Drive; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் ரூ. 30 ஊக்கத் தொகையோடு மேலும் ரூ. 30 ஊக்கத் தொகை வழங்க, 1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : முன்பு மத்திய அரசு நமக்கு கிராண்டு கொடுக்கக்கூடிய சமயத்திலே அதிகமாகவும், வேகமாகவும் வேலை நடந்தது. இப்பொழுது ஜெயிலுக்குப் போகின்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் அறுவை சிகிச்சை செய்துவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல. கிழவர்களுக்கும் செய்துவிடுகிறார்கள். இப்பொழுது அப்படிப்பட்டவர்கள் தான் வருகிறார்களே தவிர, இதற்கு அதிகமான பேர்கள் வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? உடல் நலம் பாதிக்கப்பட்டது தான் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணமா.

[1975 பிப்ரவரி 24

அதிகம் பேர்கள் இப்பொழுது ஆபரேஷன் செய்துகொள்வதற்கு முன் வராததற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த ஆண்டு கூட இதுவரையில் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பெண்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பிடத்தக்க அளவுக்கு நமது நாட்டு பெண்கள் கூட ட்யூபெக்டமி அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். ஆனால், எந்தெந்த வட்டாரத்தில் அந்தக் கருத்துக்கள் நல்ல முறையில் பரவியிருக்கிறதோ, அதிலே நம்பிக்கை ஏற்படுகிறதோ, அந்த வட்டாரத்தில் அதிகமான பேர்களுக்கு ஊக்கமும் ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் ஏற்கெனவே இப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சைக்கு ஊக்கத் தொகையாக "இன்ஸென்டிவ் எமௌண்ட்" ரூ. 100 கொடுத்து வந்தபொழுது சற்று அதிகமான பேர்களை ஊக்கப்படுத்துவதற்கு வாய்ப்பு இருந்தது. இப்பொழுது மத்திய அரசு இந்தத் தொகையை ரூ. 30 ஆகக் குறைத்து, இன்னும் கூட அதைப் பங்கிட்டுத் தருகிற அளவுக்கு ரூ. 20 என்ற அளவுக்குக் குறைந்த நிலைமைக்கு அந்தத் திட்டத்தை மாற்றியிருக்கிறது ஆகவே, மாநில அரசாங்கமே மேலும் ரூ. 30 கொடுத்து, மொத்தம் இதையும் சேர்த்து ரூ. 60 வழங்கி, அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர், ஒன்றியத் தலைவர் ஆகியோர்கள் மூலம் இந்தத் திட்டம் தமிழ் நாட்டில் மேலும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கு முன்னால் நான் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொண்டபோது எனக்கு 30 ரூபாய் கொடுத்தார்கள். இப்போது 60 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, எனக்கு மீதமுள்ள 30 ரூபாயும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்ட பின்னால் அதன் பலன் எவ்வளவு மகத்தானது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைத்தேன்; அதில் ஏமாற்றம்தான். ஏனென்றால் ஒரு குழந்தை பிறந்தால் ஆண்டு ஒன்றுக்கு 600 ரூபாய் அதிகம் செலவாகும். அதனால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி 30 ரூபாய் போனாலும், மீதி 570 ரூபாய் அரசாங்கத்திற்குத்தான் அவர்கள் கொடுக்க வேண்டுமே அல்லாமல் அரசாங்கம் 30 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதில்லை.



1975 பிப்ரவரி 24]

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தீவிரமாக குடும்பக் கட்டுப்பாட்டை எந்த மாவட்டத்தில் அதிகம் செய்திருக்கிறார்கள்? அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 30,000 பேர்கள் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். அதற்கு பாராட்டு விழா கூட நடைபெற்றிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் 12,000, 10,000 என்று அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. கடந்த ஆண்டில் தென்னார்காடு மாவட்டத்தில் அதிகம் நடைபெற்றிருந்தது. ஆகவே, தென்னார்காடு, தஞ்சை இந்த இரண்டு மாவட்டங்கள்தான் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that many industrialists have come forward to contribute heavily towards this in the City of Madras? May I know whether there is success in this attempt that is being made in Madras?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சென்னை போன்ற நகரங்களில் இத் திட்டத்தை ஒரு முனைப்பு இயக்கமாக நடத்துகிறபோது பல்வேறு தொழிலதிபர்கள் ஒத்துழைப்புத் தர முன்வந்தால்தான் முனைப்பு இயக்கம் வெற்றிபெற முடியும். அந்தக் கருத்து இன்றையதினம் எடுத்துச் சொல்லப்பட்டு, அமைச்சர்களின் வேண்டுகோள் தவிர, மாநகராட்சிகள் அலுவலர்கள் பல்வேறு தொழிலதிபர்களையும் மற்றுமுள்ள முக்கியமானவர்களையும் சந்தித்துப் பேசி, இத் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு செய்துகொள்ளும் காலத்தில் அவர்கள் தொழிற்சாலைகளில் விடுமுறை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்பட்டு, சமூக நல அடிப்படையில் அந்த உதவியைச் செய்ய தொழிலதிபர்களும், ரோட்டரி சங்கங்கள், வேறு கில்டு ஆப் சர்வீஸ் ஸ்தாபனங்களும் முன்வந்திருக்கின்றன. அவர்களுக்கு அரசாங்கம் எப்போதும் நன்றி தெரிவித்துக்கொள்ளும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, அறுவை சிகிச்சை செய்துகொண்டால் தாம்பத்திய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்ற ஒரு எண்ணம் பொதுவாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அறுவை சிகிச்சை செய்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் எங்களைப் போன்றவர்களுடையவும் மக்களுடையவும் பயத்தைப் போக்குகின்ற வகையில் அறிக்கை ஒன்று தயார் செய்து தங்கள் மூலமாக எங்களுக்குத் தர ஏற்பாடு செய்யப்படுமா?

[1975 பிப்ரவரி 24

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> கிட்டப்பா அவர்களும் அறிக்கை தருவார்கள் ; தண்டராம்பட்டு உறுப்பினர் அவர்களும் அறிக்கை தருவார்கள். அது போதாது என்றால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கணபதி அவர்களும் அறிக்கைத் தருவார்கள். கோவை செழியன் அவர்களுக்கும் இதில் சந்தேகம் இருக்க முடியாது. ஏனென்றால் கோவை மாவட்டத்தில் பெரும்பாலும் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்கள் இந்தக் குடும்பக்கட்டுப்பாட்டை ரகசிய மாகவேனும் கடைப்பிடிக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே, இதில் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எதையுமே சந்தேகத்தோடு பார்க் கின்றவர்களுக்கு இதிலும் சந்தேகம் ஏற்படுகிறது. இன்னும் சிலர் வேண்டுமென்றே சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கிற ஒரு திட்டம். இதுவரை யில் உலகத்தில் ஒரு கோடி மக்களுக்கு மேல் இந்த அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 18, 20 லட்சம் பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டொரு தவறுகளைத் தவிர, ஒருவருக்கும் பாதகம் ஏற்படவில்லை.

*Bridges across Kuzhithurai river.*

* 47 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is a proposal to construct a bridge across the river Kuzhithurai connecting Thengapattanam and Eramanthurai in Kanyakumari district?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> இல்லை.

<u>திரு. என். டென்னிஸ் :</u> தலைவரவர்களே, குழித்துறையில் ஆற்றின் ஒரு பக்கம் இருந்து மறுபக்கம் செல்ல பல மைல்கள் சுற்றிப் போக வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் மீனவர்கள். பல மைல் சுற்றிப் போக வேண்டியிருப்பதால் அவர் களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அங்கு ஒரு பாலத்தைக் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, அங்கத் தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று அதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் வரையுள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கும் பாலம் கட்டுவதற்கும் மொத்தம் 35 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை சீரான பின்னல் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.



1975 பிப்ரவரி 24]

* 48 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to put up a bridge at Thickurichy across Kuzhithurai river in the Payanam-Chitharai road in Kanyakumari district?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> இல்லை.

<u>திரு. என். டென்னிஸ் :</u> தலைவரார்களே, இந்தப் பாலம் இல்லாத தினலும் ஆற்றின் ஒரு பக்கம் இருக்கிறவர்கள் மறு பக்கம் செல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது ; பல மைல்கள் சுற்றி வரவேண்டி யிருக்கிறது. ஆற்றின் இரு பக்கத்திற்கும் தொடர்பு இல்லை. மழைக் காலங்களில் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு ஒரு பாலம் கட்டித்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, முன் கேள்வி யைப் போன்றதுதான் இதுவும். இதற்கு 18 லட்சம் ரூபாய் தேவைப் படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் மார்த்தாண்டம்— பனிச்சமூடு சாலையில் உறுப்பினர் குறிப்பிடும் ஆற்றின் மேல்புறம் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் ஒரு பாலத்தைக் கட்டுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதன் மதிப்பீடு 25 லட்சம் ரூபாய். அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, அந்தப் பாலம் கட்டப் படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இருந்தபோதிலும் இன்னும் வேலை தொடங்க வில்லை. அந்த வேலை எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> டெண்டர் செட்டில் ஆக வேண்டியிருக்கிறது. செட்டிலானவுடன் வேலை தொடங்கப்படும்.

*Madurai Central Jail.*

* 49 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to expand the Madurai Central Jail; and

(*b*) if so, the details thereof?

[1975 பிப்ரவரி 24

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், போதுமான இடவசதி இல்லாததால் அங்கிருந்து வேறிடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் அதை விரிவுபடுத்தி வேறிடத்தில் அமைக்க விரைவான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் சிறைக்கூடத்திற்கு பக்கத்தில் ஒரு துணைச் சிறைக்கூடம் உருவாக்கப்படுமானால் இந்த நெருக்கடி குறையும் என்ற ஆலோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## கல்வி பயிலும் சிறைக் கைதிகள்.

* 50 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் தற்போது கல்வி பயின்று வருவோர் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. பயிலுபவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1,740.

(இ) 10.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சிறைச்சாலைகளில் கல்வி பயில்வதற்கு அரசாங்கம் எந்தவிதமான உதவியும் ஊக்கமும் அளித்து வருகிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1968-ம் ஆண்டிலிருந்து பல்வேறு உதவிகளை செய்து கொடுத்திருக்கிறோம். அவர்கள் எந்தப் பிரிவில் இருந்தாலும் தேர்வு எழுத விரும்பினால் தேர்வுக் கட்டணம், தேவையான புத்தகங்களை நாம் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். சிறைத் துறைத் தலைவர்களே இந்த அனுமதிகளையும் சலுகைகளையும் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 1973-ம் ஆண்டுக்கு பின்னால் பல்கலைக் கழகங்களில் நூல் அஞ்சல் மூலம் படிக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கும் உதவி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.



1975 பிப்ரவரி 24]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, சிறைச்சாலைகளில் கல்வி பயின்று, விடுதலையாகி வெளியே வந்திருக்கிற எத்தனை பேர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதன் விபரம் இல்லை.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தங்களுடைய சுய முயற்சியால் ஒழுங்கான முறையில் படித்து தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு தண்டனையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்களுடைய நன்னடத்தையில் அதுவும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்போது சிறையில் திருக்குறள் போன்ற அறநெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அதே மாதிரி எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ள வல்லுநர்களைக் கொண்டு வாரம் ஒரு முறையாவது வகுப்புகள் நடத்தி, கைதிகள் தேர்வு எழுதுவதற்கு துணை புரிந்திட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: படிப்பவர்களுக்கு என்று கல்வி வசதி செய்து தரப்படுகிறது. மொத்தமாக எல்லோருக்கும் ஏற்கெனவே கதாகாலட்சேபம் செய்கின்ற நிலை முன்பு இருந்தது. அதை மாற்றி தமிழ் பேராசிரியர்களைக் கொண்டு அற நூல்களை கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இப்போது முடிவு செய்திருக்கிறோம்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, பெரிய சிறைச்சாலைகளில் இருக்கிற சிறைக் கைதிகள் பட்டப் படிப்பும் படிக்க விரும்பினால் அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே பட்டப் படிப்பு படிக்க விரும்பினால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, உபகாரச் சம்பளம் பெறத் தகுதி பெற்றவர்களுக்கு ஏதாவது உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறதா? இல்லை என்றால் இனிமேல் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கமே எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளும்போது உபகாரச் சம்பளம் தேவையில்லை. தேர்வுக் கட்டணம், புத்தகச் செலவு எல்லாம் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

[1975 பிப்ரவரி 24

[முற்பகல் 9-30]

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :— தலைவர் அவர்களே, சிறைச் சாலையில் அவர்கள் கல்வி பயின்று, தேர்வில் வெற்றிபெற்று, அவர்கள் வெளியில் வந்த பிறகும், அவர்கள் சிறைச்சாலையில் இருந்த காரணத்தினால் சமூகத்தில் அவர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இவர்களுக்கு அரசே முதலிடம் கொடுத்து வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலையில்லாத் திண்டாட்டம் பொதுவாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் இருக்கிறது.

*New industry in Manavalakurichi area.*

* 51 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to start any industry in Manavalakurichi and Colachel in Kanyakumari district with a view to utilise the mineral sand available there ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கன்யாகுமரி மாவட்டத்தில் கிடைக்கின்ற கனிப்பொருள்கள் சார்ந்த மணலை மூலப் பொருளாகக் கொண்டு டிட்டேனியம் டையாக்ஸைடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான வாய்ப்புபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது, முதல் நடவடிக்கையாக, மணவாளக்குறிச்சி பகுதியில் கிடைக்கிற இல்மெனைட்டினைப் பயன் படுத்தி ஆண்டொன்றுக்கு 30,000 டன் தயாரிக்கும் திறன் கொண்ட டிட்டேனியம் மூலப்பொருள் Rutile தயாரிப்புச் சாலையொன்றை நிறுவுவதற்காக இசைவுக் கடிதம் வழங்குமாறு கேட்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இந்திய அரசிடம் முன்னரே விண்ணப்பம் செய்துள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சித் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்தால் போதும் என்று இந்திய அரசு பதில் அளித்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இப்போது தொழில் நுட்ப வளர்ச்சித் துறை தலைமை இயக்குநருக்கு விண்ணப் பித்துள்ளது. இக்கழகம் டிட்டேனியம் டையாக்ஸைடு தயாரிப் பதற்கும் இசைவுக் கடிதம் கேட்டு விண்ணப்பித்துள்ளது.



1975 பிப்ரவரி 24]

திரு. என். கே. பழனிசாமி : இந்த டிட்டேனியம் தொழிலை ஆரம் பித்தால் சர்க்காருக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும்? சர்க்கார் மூல தனம் எவ்வளவு? மத்திய சர்க்காரிடம் உதவி ஏதாவது கோரப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தி னுடைய எஸ்டிமேட் 9 கோடி ரூபாய் என்று இங்கு குறிப்பிடப் பட்டிருக்கிறது. நாம் மத்திய அரசிடம் இசைவுக் கடிதம் வழங்குமாறு கேட்டிருந்தோம். அதற்குத்தான் அவர்கள் தொழில் நுட்ப வளர்ச்சித் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த உலோகப் பொருளைக் கொண்டு ரூடயல் தயாரிக்கும் பாக்டரி கேரளாவில் ஆரம்பிப்பதற்கு கேரள அரசு இசைவு தந்திருப்பதாகவும், கேரள அரசாங்கம் அந்தத் தொழிற்சாலைக்கு மின்சாரத்தை கன்செஷனில் கொடுக்க முன்வந் திருப்பதாகவும், ஆகவே இங்கு கிடைக்கும் மூலப்பொருள்களை அங்கே கொண்டு செல்லத்தான் இருப்பதாகவும் தெரிகிறதே—இது சம்பந்தமாக நமது அரசாங்கத்திடம் ஏதாவது தகவல் இருக்கிறதா? அதுபோல இங்கே கிடைக்கிற மூலப்பொருள்களை அங்கே கொண்டு போகாமல் இங்கேயே ரூடையல் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : Tapar Group was given a letter of intent ஒரு ஏற்பாடு முன்பு இருந்தது. அது கான்சல் ஆகிவிட்டது என்ற தகவல் கிடைத்தவுடன் தான் நம்முடைய தமிழ்நாட்டிலேயே அதுபோன்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்பதாகப் பரிசீலித்து டிட்கோ மூலமாக அதற்கான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நமது அரசு ஆரம்பிப்பதாக இருக்கிற தொழிற்சாலையை வேறு எந்தத் தொழிற்சாலையும் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே., சாதிக் பாட்சா : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மணவாளக்குறிச்சி பகுதியில் ஆரம்பிப்பதாக இருக்கிறது என்றுதான் சொன்னேன். வேறு விவரம் என்னிடத்தில் இல்லை.

[1975 பிப்ரவரி 24

*Cigarette Faitory*

* 52 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the present stage of the proposal to set up a Cigarette Factory in the State ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்துறையில் நிறுவப்பட்ட "ஆசியா புகையிலை நிறுவனம்" தர்மபுரி மாவட்டத்தில் முகுந்தப்பள்ளி என்ற இடத்தில் தேவையான நிலத்தைப் பெற்று, கட்டட வேலையை ஆரம்பித்துவிட்டது. இயந்திர தளவாடங்களை இறக்குமதி செய்வதற்கான மத்திய அரசின் ஒப்புதல், தொழிற்சாலை கட்டுவதற்கான ஆலோசகர்களை நியமித்தல் போன்ற ஆரம்ப வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தம் எவ்வளவு எஸ்டிமேட்? இதன்காரணமாக எவ்வளவு சிகரெட் வருஷம் ஒன்றுக்கு உற்பத்தி செய்ய முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எஸ்டிமேட் 4.18 கோடி ரூபாய். உற்பத்தி நாலாயிரத்து ஐநூறு மில்லியன் பீசஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the acreage that has been taken for constructing this factory and when it is going to be implemented there?

THE HON THIRU S. J. SADIQ PASHA : The project is to be located in Mukunthapalli of Dharmapuri district which is naturally backward ; the required land is 52.73 acress and that has been taken possession by the Company.

திரு. மா. வே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இந்த சிகரெட் தொழிற்சாலையை நமது அரசே அமைக்கின்றதா? அல்லது ஏதாவது புகழ்பெற்ற நிறுவனத்துடன் இணைந்து இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே சொன்னபடி இந்தியா சிமிண்டு நிறுவனத்தோடு கூட்டுத்துறையில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



1975 பிப்ரவரி 24]

THIRU K. M. SUBRAMANIAM : Since it has been declared that Cigarette leads to cancer, why should Government engage themselves in starting a factory for this ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I think my learned friend is not a smoker and so, he need not trouble himself much about this (Laughter).

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புக்காக இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைத்தாலும் சிகரெட் குடிப்பது உயிருக்கே ஆபத்தானது என்று வெளிநாடுகளில் எல்லாம் விளம்பரம் செய்யப்படுவதாக அறிகிறேன். அதுவும் மாணவர்கள் சமுதாயத்தின் மத்தியில்தான் சிகரெட்டுகள் குடிக்கும் பழக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்கு இந்த சிகரெட்டுகளுக்கு மலிவான விலை வைக்காமல் அதிகமான விலையில் விற்க ஏற்பாடு செய்வார்களா? மேலும், சிகரெட் குடிப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நமது அரசாங்கம் அதன்மீது 10 சதவீதம் டாக்சை விதிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபற்றி நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். சிகரெட் உற்பத்தியின்மீது மத்திய அரசாங்கம் வரி விதிக்கிறது. சிகரெட் குடிப்பது மிகவும் தீங்கானது என்பதாக விளம்பரப்படுத்துவதற்கு இப்போது ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். சிகரெட் குடிப்பவர்களின் எண்ணிக்கை குறைகிறபோது சிகரெட் தயாரிப்பின் அளவும் குறைந்துவிடும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வீட்டு மனைகள்

* 53 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொந்த வீடு இல்லாத சுதந்திர போராட்ட விடுதலை வீரர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென்று தனியாக மனைக்கட்டுகள் வழங்கும் திட்டம் ஒன்றும் இல்லை. ஆனால், பொதுவாக, வீடுகளில்லாத ஏழை

[1975 பிப்ரவரி 24

களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டமொன்று நடைமுறையில் இருந்துவருகிறது. மேலும், வீடில்லாத ஏழை மக்கள், அரசு நிலத்தில் வீடு கட்டி ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமான தாக இல்லாதிருந்தால், அந்த இடங்களை அவர்களுக்கே ஒப்படை செய்வது அரசின் குறிக்கோளாகும். இந்தத் திட்டத்தின் கீழ் விடுதலைப் போராட்ட வீரர்களும் பயன்பெறுவர்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களில் சர்வசாதாரணமாக நூற்றுக்கு 10 பேர் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மனைக்கட்டு வழங்கி, வரிசை மூலமாக வீடுகள் கட்டிக்கொடுத்து 20 வருஷ தவணையில் அதன் கிரயத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்களுக்கென்று தனியாக எந்தத் திட்டமும் இல்லை. ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தியாகிகள் என்பவர்களில் பலபேர் வறுமையில் உழன்று கொண்டிருக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு என்று ஸ்பெஷல் ஸ்கீம் இல்லாவிட்டாலும் ஏழைகளுக்கு என்கிற ஸ்கீமில் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்கள் மிகவும் வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் அரசு அவர்களுக்கு மானியம் வழங்கிவருகிறது. தனிப்பட்ட முறையில் வீடுகள் கட்டிக்கொடுக்கிற திட்டம் எதுவும் இல்லை என்று தெரிவித்தேன்.

திரு. மு. சுருளிவேல்: சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போலவே தமிழகத்தின் தனிப்பெருமையைக்காக்க மொழிப்போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கும் வீடுகள் கட்டித்தர ஆணைகள் பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தியாகிகளுக்கு வீட்டு மனைகள் வீடுகள் வழங்க தனித்திட்டம் இல்லை—அதுபோல இவர்களுக்கும் இல்லை.



1975 பிப்ரவரி 24]

திரு. எஸ். வடிவேல்: தேசவிடுதலை இயக்கத்தின் முன்னோடியாக இருந்தவர்கள் அவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க தனித்திட்டம் இல்லையென்றாலும்—மற்றவர்களுக்கு எல்லாம் வழங்குகிறபோது இவர்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்கவேண்டும் என்றுவது செய்யக்கூடாதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தனியாக அதுபற்றி எழுதி அனுப்பிவைத்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: வீடு கட்டிக் கொள்ள 3 செண்ட் நிலம்தான் வழங்கப்படுகிறது. அது மிகக் குறைவானது. ஆகவே அதைக் குறைந்த பட்சம் 5 செண்டாகவாவது உயர்த்திக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஐந்து செண்டுக்கும் ஒரு திட்டம் இருக்கிறது. ஒரு சிறிய வீட்டுக்கு 3 செண்ட் அவசியம் என்பதால் குறைந்தபட்சம் 3 செண்டாவது வழங்க வேண்டும் என்று தான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் பலருக்கு ரூ. 75, அல்லது ரூ. 200 சில டெக்னிக்கல் காரணங்களாலே கிடைக்காமலிருக்கிறது. அப்படிப் பட்டவர்களுக்கு இம்மாதிரியாக விடுதலை வீரர்களுக்கு மனை இடம் கொடுக்கும்போது, முதலிடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுக்கின்ற யோசனை இப்பொழுது எதுவும் இல்லை. இருந்தாலும் அதுபற்றி பரிசீலனை செய்யலாம் என்றுதான் சொல்லி இருக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் குடிசைவாசிகளுக்கு வழங்கிய வீடுகள் போக எஞ்சிய வீடுகள் ஏழைகளுக்கு மாதத் தவணைகளில் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட வீடுகளில் சில வீடுகளைத் தியாகிகளும் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி வழங்கப்பட்ட விவரம் என்னிடத்திலே இல்லை.

[1975 பிப்ரவரி 24

## துணை வட்ட அலுவலகக் கட்டடங்கள்

* 54 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையிலும், கும்முடிப்பூண்டியிலும் துணை வட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இவை எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : செங்கற்பட்டு மாவட்டத்தில், ஊத்துக்கோட்டையிலும், கும்முடிப்பூண்டியிலும் துணை வட்ட அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்குத் தகுந்த அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லாததால், நில ஆர்ஜிதம் செய்தபின் மேற்படி கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருந்தது தற்போதுள்ள நிதி நெருக்கடி நிலை காரணமாக ரூ. 4 லட்சம் செலவில் செங்கற்பட்டு மாவட்டத்தில் புதுக் கட்டடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மேற்கண்ட இரண்டு இடங்களிலே இருக்கிற வட்ட அலுவலகங்கள் நெருக்கடியான வாடகைக் கட்டிடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிகாரிகளும் பொதுமக்களும் அங்கே செல்வதற்குக் கூடச் சிரமமாக இருக்கிறது. இப்பொழுது புறம்போக்கு நிலத்தை எடுத்துக் கொடுக்கக் கூடிய புதிய முயற்சியை கலெக்டர் மேற்கொண்டிருக்கிறார். ஆகவே, வரும் ஆண்டிலாவது இரண்டு இடங்களிலும் கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, செங்கற்பட்டில் புறம்போக்கு நிலம் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து எந்தக் குறிப்பும் வரவில்லை. ஊத்துக்கோட்டையில் ரூ. 1,23,500க்கு 3.5 ஏக்கர் நிலத்தையும் அதைப் போலவே கும்மிடிப்பூண்டியில் 4.32 ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்துவதற்கு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே அதுபற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.



1975 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 55, 56 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகின்றன.

## உடல் ஊனமுற்றோர்களுக்கு மறு வாழ்வு

* 57 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974 ஆம் ஆண்டு, செப்டம்பர் முடிய உடல் ஊனமுற்றோர் நிதிக்குச் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : ரூ. 1,21,20,919.01 வசூலாகியிருக்கிறது.

* 58 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர்க்கான-மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) சுமார் 22,000 பேர்.

(இ) சுமார் ரூ. 1 கோடி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டத்தின்கீழ் மாவட்டவாரியாக இதுவரையில் பயன் பெற்றோர்களின் எண்ணிக்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவரவர்களே, மாவட்டவாரியாக என்கிற அளவில் இப்பொழுது என்னிடம் விவரமில்லை. ஆனால், இந்தத் திட்டத்தை மாவட்டவாரியாக விரிவுபடுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு 9 இடங்களில் இது போன்ற நிறுவனங்களை நிறுவ வேண்டுமென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

[1975 பிப்ரவரி 24

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தத் திட்டம் நல்ல திட்டமாக இருந்தாலும் இதற்கு அதிகப்படியாக தேவை இருக்கிற காரணத்தாலேயும், இப்பொழுதுள்ள பணமும் கொஞ்சம் பேருக்குத்தான் பிரயோசனமாக இருக்குமென்பதாலேயும், இதனைச் சர்க்கார் வரவு—செலவு கணக்கிலே இருந்து அதற்குக் கணிசமான தொகையை ஒதுக்கி அபிவிருத்தி செய்ய திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு நிதியாகச் சேர்ந்துள்ள தொகை செலவழிக்கப்பட்டு அது முடிந்தபிறகு மேலும் தேவைப்படுமேயானால் அரசாங்கச் சார்பில் அதற்காக நிச்சயமாகச் செலவழிக்க அரசு முன் வரும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கு எந்தவகையான உதவிகள் செய்யப்படுகின்றன? உதாரணமாக, அவர்கள் செல்வதற்கு சைக்கிள் மட்டுமே கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் சைக்கிள்களால் பிரயோஜனமில்லை. சிறிய வாணிபம் செய்வதற்குச் சிறு தொகையைக் கடனாக அல்லது மானியமாகக் கொடுத்தால் வாழ்வில் வளம் பெற முடியும் என்ற கோரிக்கைகள் வருகின்றனவே அந்த மாதிரியான கோரிக்கைகளை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் யார் என்பதைப் பற்றி ஆராய்ந்து, அதுபற்றி முடிவு செய்வதற்கு மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு செய்கின்ற பரிந்துரைகளின் அடிப்படையிலே உடல் ஊனமுற்றவர்கள் யார், யார் எந்த விருப்பத்தின் அடிப்படையிலே உதவி கோருகின்றனரோ அந்த விருப்பத்தை நிறைவு செய்கின்ற வகையில் தட்டெழுத்துப் பயிற்சி, அரசாங்க வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை, அதுபோலவே விசைத்தறிப் பயிற்சி, அதுபோல் தையல் பயிற்சி, சிற்பக் கலைப் பயிற்சி, மற்றும் பலவித தொழிற்பயிற்சிகளெல்லாம் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், உறுப்பினர் அவர்கள் வாணிகத்திற்கென்று தனி நிதி உதவி கேட்கின்றார்கள். அது போன்ற விண்ணப்பங்கள் ஏதும் தற்பொழுது வரவில்லை. வந்த பிறகு அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.



1975 பிப்ரவரி 24]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது இந்தத் திட்டம் 9 இடங்களுக்கு அமுல்படுத்தப்படும் என்று கூறினார்கள். அதில் கன்னியாகுமரி சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். கன்னியாகுமரியில் உடல் ஊனமுற்றோர் சங்கம் ஒன்றிருக்கிறது. அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அங்கிருப்பவர்களுக்கும் இத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கன்னியாகுமரியிலும் உடல் ஊனமுற்றோர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் 9 மாவட்டங்களில் முதலில் தொடங்கப்படும் என்பதால் அதோடு நின்றுவிடுவதாக அர்த்தம் இல்லை. எல்லா மாவட்டங்களிலும் பரவலாக இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும். திட்டம் தொடங்கப்பட்டு நாட்கள் குறைவாக இருந்த காரணத்தாலேதான் ஒரேயடியாக எல்லா மாவட்டங்களையும் கவனிக்க முடியவில்லை.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக அரசு நல்ல பணிகளைச் செய்து வருகிறது. ஆனால், உடல் ஊனமுற்றோரிலே சிலர் அரசு ஊழியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு புரமோஷன் கொடுப்பதற்கு ஏதாவது தனிச் சலுகைகளை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, அவரவர்களுடைய தகுதியின் அடிப்படையிலே இப்பொழுது எப்படி பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறதோ, அதுவே இவர்கள் விஷயத்திலும் பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்குத் தொழில் பயிற்சி அளிப்பதற்காக முட்டுக்காடு என்ற இடத்தில் ஒரு நிலையம் அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்ததே அது எந்த அளவில் இருக்கிறது? அந்தத் தொழில் பயிற்சி நிலையத்தில் எப்படிப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, முட்டுக்காடு என்ற இடத்தில் ரூ. 24 லட்சம் மதிப்பீட்டில் ஒரு நிலையான கட்டடத்தையும் அதற்குரிய பயிற்சித் தொழில்

நிறுவனத்தையும் ஏற்படுத்துவது என்றும் தற்பொழுது அங்கே தொழிற் பயிற்சி அளிக்க இருக்கிற அந்த நிறுவனத்தில் இயந்திரங்களுக்குத் தேவைப்படுகின்ற உறுப்புகளை முதலிலே தயாரிப்பது என்றும் அதன் மூலம் அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, உடல் ஊன முற்றோர் மறுவாழ்வு திட்டத்திற்கு உதவுகின்ற வகையில் மத்திய அரசாங்கம் ஏதாவது உதவி செய்து வருகின்றதா? ஆமெனில், என்னென்ன உதவியை அளித்து வருகிறது என அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, இந்தத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பிறந்த நாளினுடைய அறிவிப்பாகத் தெரிவிக்கப்பட்ட திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகையினாலே, தற்பொழுது பொதுமக்களுடைய நன்கொடை மூலமாக இதனைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனுடைய நல்ல திறன்மிகு நிலைமைகளை மத்திய அரசு கண்டு, இச் சமுதாய நலப் பணிக்கு இணக்கம் தெரிவித்து உதவி செய்தால் நன்றியோடு இவ்வரசு வரவேற்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றோர் வாழ்வுக்காகப் பல சேவா சங்கங்கள் பலத் திட்டங்களை நடத்தி வருகின்றன. அரசாங்கம் பல இலட்சம் ரூபாயைப் போட்டு இனிமேல் இந்த வேலையைச் செய்வதைக் காட்டிலும், ஏற்கெனவே இந்த வேலைகளிலே ஈடுபட்டுள்ள எல்லா சேவாசங்கங்களின் வேலைகளை இன்னும் அதிக அளவில் உயர்த்த, அவர்கள் ஈடுபட, அவர்களுக்கு வேண்டிய பணமுதவியை செய்யவும் அரசாங்கம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தனிப்பட்ட முறையிலே உடல் ஊனமுற்றவர்கள், திக்கற்றவர்கள் இவர்களுக்காக நடத்தப்படுகின்ற நிறுவனங்கள் ஒரு குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களுக்குத்தான் பணிகளைச் செய்து முடிக்க முடியும். ஆனால், அவர்களுக்கு அரசின் சார்பிலே விரிவான ஏற்பாடுகளைச் செய்து பரவலாக இந்தப் பணியினை நாம் வெற்றிகரமாக ஆற்றிட முடியும். உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பணியை அரசின் சார்பிலே செய்கின்ற காரணத்தால் தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற காரியங்களைத்



தடைப்படுத்த வேண்டுமென்றோ அல்லது அவை நடக்கக் கூடாது என்றோ அரசு கருதவில்லை. ஒழுங்காக நடைபெறுகின்ற நிறுவனங்கள் எவையாக இருந்தாலும் அவைகள் அரசின் உதவியைப் பெறலாம்.

## அரிசன குடியிருப்புகளுக்கு நீர் வழங்கல்

* 59 வினா—திரு. கா. வேழவேந்தன். மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கூரம்பாக்கம் அரிசனக் காலனிக்கு குழாய் குடி நீர்த் திட்டம் அமைப்பதில் மேலும் கால தாமதம் ஆவதேன்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் கூரம்பாக்கம் அரிசன காலனிக்கு குழாய்க் குடி நீர் வசதி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

* 60 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர், பல்லடம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உட்பட்ட அரிசன கிராமங்களுக்குக் குடி நீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) சூலூர், பல்லடம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட செம்மந்தம் பாளையம், ராக்கியபாளையம் ஆகிய அரிசன கிராமங்களுக்குக் குடி நீர் வசதி அளிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சூலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முனுகள்ளிபாளையம், கண்ணம் பாளையம், கருமுத்தம்பட்டி, கலங்கல், கூத்தம்பாளையம் அரிசன கிராமங்களுக்கும் நடப்பு ஆண்டிலேயே குடி நீர் வசதி அளிக்க தேவையான நடவடிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து வருகிறார்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த வறட்சியான சூழ்நிலையில் அந்தக் காலனியில் குடி நீர் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அரசு தீவிர நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட சில மாதங்களில் அந்த வேலையை முடிக்கவேண்டுமென்ற முயற்சியை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை கோரப்பட்டு அவரது அறிக்கை வரப் பெற்றது. பெண்ணலூர்பேட்டை துணை வட்டத்தில் மன்னான்கரணை கிராமத்திலுள்ள கூரம்பாக்கம் அரிசன காலனியை பார்வையிட்டு அந்த அரிசன காலனிக்கு குழாய் குடி நீர் வசதி அளிக்க வேண்டிய அவசியத்தைக் காணும்படி மாவட்ட அரிசன நல அலுவலரை கேட்டுள்ளதாயும், உடனே மதிப்பீட்டைத் தயார் செய்யும்படி அரிசன நல மேற்பார்வையாளரை அறிவுறுத்தியுள்ளதாயும், குடிநீர் வசதி அளிக்க உண்மையான அவசியம் இருந்தால் உடனே வேலை தொடங்கச் செய்ய உறுதி அளிப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, அரிசனங்கள் வசிக்கின்ற இடம் எல்லாம் பெரும்பாலும் சுத்தமான தண்ணீர் கிடைக்காத இடங்களாகத்தான் இருக்கின்றன. ஆகவே, எல்லா இடங்களிலும் சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கிற அரிசனங்களுக்குக் குடிநீர் கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இந்தத் திட்டம் வேகமாகச் செயல்பட இருக்கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இத்திட்டம் வேகமாகத் தீவிரமாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதிகள் முழுவதும் எப்படி விளக்கு வசதியை செய்து கொடுத்தோமோ அதைப்போன்று பஞ்ச நிவாரணப் பணிகள் மூலமாக தமிழ்நாட்டிலே உள்ள எல்லா தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்கும் கண்டிப்பாக குடிநீர் வசதிச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: வறட்சி நிவாரணப் பணிகளில் அந்த அடிப்படையில் முக்கிய இடமாக அரிசனக் காலனிகளுக்கு குடி நீர் வழங்குவதை செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன்: இந்தக் குறிப்பிட்ட ஒன்றியத்திலே அரிசன நலத் துறையின் மூலமாக செய்யப்படுகிற பல்வேறு காலனி குடி நீர்த் திட்டங்கள் ஒன்றரை இரண்டாண்டுக்காலமாக தாமதப்



பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே முழுக் கணக்கையும் எடுத்து எல்லாத் திட்டங்களும் தாமதமின்றி இந்த ஏப்ரல் மாதத்திற்குள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: பல ஆண்டுக்காலம் இருந்துவந்த நடைமுறை வேறு. அரிசன நல இலாகாவில் குடிநீர் வசதிக்காக ஒதுக்கப்பட்ட தொகையை வைத்துக்கொண்டே அதைக் கவனித்து வந்தோம். ஆனால் ஒன்றியங்கள் செலவிடுகின்ற நிதியிலே 20 சதவீதம் பாதைக்காகவும், குடிநீருக்காகவும் செலவிடவேண்டுமென்று இப்போது வரையறுக்கப்பட்டிருக்கிறது. இரண்டும் செய்யப்பட்டு வருகிறது. இப்போது புதிதாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகையிலும் பாதை வசதி, குடிநீர் வசதி செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மூன்று வழிகளிலும் இப்படிப்பட்ட வசதிக் குறைவுகளை அரசின் திட்டப்படி நீக்கலாம் என்று நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரிசனங்களுடைய தேவைகளைக் கவனிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவும், அரிசன நலத் துறை டைரக்டர் மூலமாகவும் அதைத் தவிர இப்போது கார்ப்பரேஷன் என்று ஒன்று ஏற்படுத்தியிருக்கிறீர்கள், அதன் மூலமாகவும் இப்படி மூன்று ஏஜன்ஸிஸ்கள் மூலமாகச் செய்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் கார்ப்பரேஷன் மூலமாகவே எல்லா வசதிகளையும் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா அரிசனங்களுக்கும் தேவையானவற்றை எல்லாம் வீட்டு வசதி, விளக்கு வசதி, தெரு வசதி எல்லாவற்றையும் செய்துகொடுக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: வீடுகள் கட்டிக்கொடுப்பது மாத்திரமல்ல, விளக்கு வசதி, பாதை வசதி, குடிநீர் வசதி, மளிகைக் கடைகள் வசதி, பள்ளிக்கூட வசதி, பொது மண்டபம் கட்டுவது, திருமணம் போன்ற காரியங்களுக்காகவும் பொதுக் காரியங்களுக்காகவும் வசதிகள் உள்ள மண்டபம் கட்டுவது ஆகியவை எல்லாம் அமைத்துத்தான் இப்போது தருகிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. இந்த கார்ப்பரேஷனுக்குப் பெயரே அரிசன வீட்டு வசதி கார்ப்பரேஷன் என்பதல்ல, வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் வீடு கட்டுவது மாத்திரமல்ல, மேம்பாட்டுப் பணிகளையும் அந்தக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி.

### பஞ்ச நிவாரண நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என இந்தியப் பிரதமர் கூறியதாக வந்துள்ள செய்தி குறித்து

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், நல்ல எண்ணத்தோடு இந்த மன்றத்திற்கு ஒரு புதிய விளக்கம் தேவை என்பதற்காக நான் இந்த பாயின்ட் ஆப் ஆர்டரைக் கிளப்புகிறேன். தயவு செய்து நான் சொல்வதை முழுவதும் கேளுங்கள், தப்பு என்றால் சொன்னதை எக்ஸ்பஞ்ச் செய்துவிடுங்கள், தயவு செய்து பாதியிலே நிறுத்திவிடாதீர்கள். நேற்றையப் பத்திரிகையிலே இந்தியப் பிரதமர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற முறை தமிழகத்திற்கு அளித்த பஞ்ச நிவாரண நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இந்தியப் பிரதமர் சுமத்தியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டு எந்த அளவிற்கு உண்மை என்பதை நாடு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இந்த அவைக்கு ஒரு விளக்கம் அளித்தால் நமக்கும் நல்லதாக இருக்கும், இந்த நாட்டிற்கும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தியப் பிரதமர் 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளைக் குறிப்பிட்டதாக பத்திரிகையிலே வந்துள்ளதை திரு. செழியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். பத்திரிகைகளிலே அந்தச் செய்தி வெவ்வேறு வகையிலே வந்துள்ளது. சில பத்திரிகையிலே வேண்டுமென்றே வறட்சி நிவாரணப் பணியிலே ஊழல், பிரதமர் பேச்சு என்று தலைப்பிட்டு வந்துள்ளது. ஆனால்



பிரதமர் என்ன பேசினார் என்பது வேறு சில பத்திரிகைகளிலே வெளி வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது சென்ற முறை நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகள் சரியாக நடைபெறவில்லை என்ற புகார்கள் எனக்கு வந்தன என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை சரியா அல்லவா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. இப்படிப்பட்டப் புகார்கள் எல்லா மாநிலங்களிலிருந்தும் வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காண்ட்ராக்ட் முறை இருக்கலாமா என்ற பிரச்சினைக்குப் பதில் சொல்கிற நேரத்தில் காண்ட்ராக்ட் முறையிலே தவறுகள் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காண்ட்ராக்ட் முறை என்பது ஏதோ 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு உருவாக்கப்பட்ட முறையல்ல, அகில இந்தியாவிலேயும் நீண்டநெடுநாட்களாக இருந்து வருகிற முறை. வறட்சி நிவாரணப் பணிகளிலே நம்முடைய கழக அரசு எந்தவிதமானத் தவறும் நடைபெறாது கண்காணிப்பதில் மெத்தவும் கவனம் செலுத்தி வருகிறது. ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக எங்காவது தவறு நடைபெறக்கூடும். புகார்கள் எப்படிப்பட்ட புகார்கள் கூறப்படுகின்றன என்பதைப்பற்றி பிரதமரே சொல்லியிருக்கிறார்கள். ஊழல் ஊழல் என்று எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட பழக்கம் எல்லா நாடுகளிலும் இருந்துவருகிறது. உலகம் முழுவதும் இப்படிப் பட்ட புகார்கள் கூறப்படுகின்றன. இந்த அரசு—இந்த அரசு என்று அம்மையார் அவர்கள் தன்னுடைய அரசைக் குறிப்பிட்டு உள்ளார்கள்—ஊழல் நடைபெற்றதா என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கிறது தவறான முறையிலே ஆதாரமில்லாமல் ஊழல் ஊழல் என்று சொல்கிறார்களே—கறுப்புப் பணக்காரர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களே ஊழல் புரிகிறார்கள், ஊழல் புரிந்துவிட்டு எங்கள் மீது ஊழல் என்று கூறுகிறார்கள்—என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே அவர்களே புகார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் இந்த அரசைக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள் என்று சொன்னாலும் 1969 ஆம் ஆண்டிலே புகார்கள் வந்தன என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதே விசாரித்து இருக்கலாம். ஒருவேளை எங்களுக்கும் அவர்களுக்கும் அப்போது இருந்த உறவு காரணத்தினாலே விசாரிக்கவில்லை என்ற பழி அவர்களுக்கு வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இப்படிப்பட்ட புகார்கள் ஆதாரமில்லாதவையாக இருந்தால் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே கூறியபடி இவை நிராகரிக்கப்பட வேண்டியவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 பிப்ரவரி 24

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தவறான தகவலைச் சொல்கிறார்கள். 1971 ஆம் ஆண்டிலேதான் உறவு இருந்தது, 1969லே எங்கே இருந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் அந்த உறவிலே கலக்காத நேரம் அது. உங்களுக்குப் புரியாது. 1969 ஆம் ஆண்டிலே எங்கள் உறவு இருந்தது. அப்போதுதான் திரு. கிரியே வெல்லமுடிந்தது, இந்திரா காங்கிரஸ் ஆட்சியே நிலைக்கமுடிந்தது.

திரு. ஜே. ஜேம்ஸ்: 1969 ஆம் ஆண்டு புகார் என்று பிரதமர் கூறினதாகச் சொன்னார்கள். அதற்குப்பிறகு இது சம்பந்தமாக இந்த அரசுக்கு ஏதாவது கடிதம் வந்துள்ளதா? அதற்கு இந்த அரசாங்கம் பதில் கூறியிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இது சம்பந்தமாக முதலமைச்சரவர்கள் விளக்கம் அளித்தது ரொம்பவும் உதவிகரமாக இருக்கிறது. ஆனால் பிரதம மந்திரியவர்கள் இப்பொழுது வறட்சியினால் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவழிக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே, அதைப்பற்றி முதலமைச்சரவர்களின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொறுப்பிலேயிருக்கின்ற எந்த முதலமைச்சரோ அல்லது பிரதமரோ வறட்சிக்காக அல்லது நல்ல பொதுக் காரியங்களுக்காகச் செலவழிக்கப்படும் பணம் முறையாகச் செலவழிக்கப்படக் கூடாது என்று சொல்லுவார்களா? பொறுப்பிலேயுள்ளவர்கள், செலவழிக்கப்படும் பணம் முறையாகச் செலவழிக்கப்பட வேண்டுமென்றுதான் சொல்வார்கள். அப்படித்தான் பிரதமரும் சொல்லியிருக்கிறார். பிரதமர் முதலமைச்சருக்கு அல்லது மாநிலத்திற்குச் சொல்லும்பொழுது முறையாகச் செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார். அதைப்போல நாட்டுமக்கள் மத்திய அரசைப்பார்த்து அங்கே செலவழிக்கப்படும்



1975 பிப்ரவரி 24] [டாக்டர் மு. கருணாநிதி]

பணம் முறையாகச் செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, எதுவும் முறையாகச் செலவழிக்கப்பட வேண்டுமென்பதுதான் பொதுவான கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செழியன் அவர்கள் எழுந்திருக்கும்பொழுது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன், அது முறையாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள், இல்லையென்றால், "எக்ஸ்பஞ்ச்" செய்யுங்கள் என்று சொன்னார்கள். இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, ஆனாலும் எக்ஸ்பஞ்ச் செய்யவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

**மதிப்பீட்டுக்குழுத் தலைவரை குறைகூறி பொதுப் பணித் துறை அமைச்சர் பத்திரிகைகளுக்கு அளித்ததாகக் கூறப்படும் செய்தி குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் "உணவுத் துறை" பற்றிய 24-வது அறிக்கை குறித்து செய்தி நிருபர்களிடையே பேசும்போது, அக்குழுவின் தலைவருக்கும் . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: There is a privileg motion raised by some of us. இந்த பிரிவிலேஜ் மோஷனைப் பொறுத்தவரையில், அது என்ன பிரிவிலேஜ் மோஷன் என்ற கருத்தை எங்களிடத்தில் கேட்க வேண்டும். அதற்குப் பிறகுதான் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அறிக்கைக் கொடுக்கவேண்டும். அந்த நிலைமையிலே பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வந்தவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் கொடுக்காமல் நீங்கள் திடீரென்று அந்த பிரிவிலேஜ் மோஷன் யார் பேரிலே இருக்கிறதோ அவர்கள் கொடுத்த பதிலை மட்டும் சொல்வது என்றால் அது உடனடியாக ஒரு முடிவிற்கு வந்து விடும் நிலைமை இருக்கும். அதற்கு ஒரு புரொசிஜர் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரிவிலேஜ் மோஷனைக் கொடுத்தால் You giveconsent to raise it. என்ன பிரிவிலேஜ் மோஷன் என்று விளக்குகிறோம். பிரிவிலேஜ் மோஷனைப்பற்றி எங்களுடைய லிமிட்டிற்குள் எக்ஸ்ப்ளெயின் பண்ணியதற்குப் பிறகு பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக மன்றத்திலே பதில் சொல்லலாம். அப்படிச் சொன்னதற்குப் பிறகு அதில் முடிவு சொல்ல தங்களுக்கு அதிகாரம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 பிப்ரவரி 24

இருக்கிறது. அதுதான் முறையாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரிந்த விஷயத்தைச் சொல்கிறேன். நான் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தவன் என்ற முறையில் அது எப்படி பிரிவிலேஜ் மோஷன் ஆகும் என்பதை விளக்குவதற்குத் தாங்கள் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த பிரிவிலேஜ் மோஷனை நானும் கொடுத்திருக்கிறேன், மாண்புமிகு உறுப்பினரும் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் என்ன தீர்ப்பு சொல்லப் போகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதாவது எங்களைப் பேச அனுமதிக்கப்போவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஆந்திர சட்ட மன்றத்திலே இதேமாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்தது. தங்களுடைய தீர்ப்பிற்குச் சாதகமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். அங்கேயிருந்த அமைச்சர் திரு. திம்மா ரெட்டியார் என்பவர் அரிசனங்களைப்பற்றி பத்திரிகைகளில் ஒரு பேட்டி கொடுத்தார்கள். அதிலே அரிசனங்களைப்பற்றி தாழ்வாகக் கூறியதாக "பேட்ரியாட்" என்ற பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தது. அதைப்பற்றி பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தபொழுது அந்த அமைச்சரவர்கள் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். உடனே அமைச்சர் வார்த்தையை ஏற்றுக் கொண்டு இது பிரிவிலேஜ் மோஷன் இல்லை என்று சபாநாயகர் சொன்னார்கள். உடனே அப்பொழுது இருந்த பிரமானந்த ரெட்டி எழுந்து நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். அமைச்சர் இல்லை என்று சொல்கிறார், அங்கத்தினர்கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள், ஆகவே நானே விசாரித்து அது உண்மையா இல்லையா என்பதை அறிந்து இந்தச் சட்ட மன்றத்தில் சொல்கிறேன் என்று சொல்லி, அவர்களே விசாரித்து அமைச்சர் சொல்லியது உண்மைதான், சொல்லவில்லை என்று மறுப்புக் கடிதம் எழுதியது தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது போல இப்பொழுதும் முதலமைச்சரவர்கள் பொறுப்பை எடுத்துக் கொள்வதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அது பற்றிப் பேசுவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கமணி அவர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பியவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். உரிமைப் பிரச்சினையைப்பற்றி முடிவு செய்யும் நிலையில் இரண்டு மூன்று முறைகள் உள்ளன. அறையிலேயே இதற்கு ஒரு தீர்ப்பை பேரவைத் தலைவர் அளிக்கலாம். அவையிலே வரும் நேரத்திலும்கூட அறையிலே எடுத்த முடிவை அவையிலே அவராகவே எழுப்பிக்கொண்டு தீர்ப்பு அளிக்கும் முறையும் இருக்கிறது. அதில் "பிரைமா ஃபேஸி" கேஸ் இருக்கிறதா என்று அறிய சில நேரங்களில் வேண்டுமானால் அந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பியவரிடம் விளக்கம் கேட்கலாம் என்று இருக்கிறதே தவிர, விளக்கம் கேட்கத்தான் வேண்டுமென்று இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Rule 185 says,—

"When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker *shall* read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Consent of the Speaker" "கன்செண்ட்" கொடுத்த பிறகுதான்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: You are reading the matter here. That means you have given your consent.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ரெய்ஸ்" பண்ண கன்செண்ட் கொடுக்கவில்லை, அந்த நிலைமைக்கு வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இங்கே படிக்கிறீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே தீர்ப்பு அளிக்கிறேன். கன்செண்ட் கொடுக்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: கன்செண்ட் கொடுக்கவில்லை என்றால் அறையிலேயே தள்ளிவிட வேண்டும். "Shall read the matter and decide whether a prima facie case is made out or not" என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்யும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு உண்டு. அவராகவே எடுக்கலாம், அவருக்கு விளக்கம் தேவை என்றால் அப்படி நினைக்கும் நேரத்தில் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுத்து பிரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதற்கு விளக்கம் தாருங்கள் என்று கேட்டு, அதில் பிரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறது என்று சொன்னதற்குப் பிறகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் முறை இருக்கிறது. அதுதான் நாம் கடைப்பிடித்து வரும் முறை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், இப்பொழுது இந்தச் சபைக்கு முன்னால் இதை "ரெய்ஸ்" பண்ணுகிறீர்கள், இல்லாதுபோனால் அறையிலேயே முடித்து விடலாம். அப்படிச் செய்தால் இந்த ரூலிலேயே கிளியராகத்தான் இருக்கிறது. A member may, with the consent of the Speaker, raise a question involving breach of privilege either of a member or of the House or a Committe thereof என்று. இது ரொம்ப பாசிட்டிவாக இருக்கிறது. So I have given notice to the Hon. Speaker expressing a wish that I want to raise a matter of privilege. அதை உங்கள் கையில் கொடுத்திருக்கிறோம். கொடுத்தவுடனே உண்மையிலேயே அதைச் சபைக்குக் கொண்டு வருவதும் வராமல் இருப்பதற்கும் அதிகாரம் தங்களுக்கு உண்டு. தங்களால் சபைக்கு முன் கொண்டுவரப்பட்டு அந்தச் சபையின் அங்கீகாரத்தோடு நீங்கள் உங்களுடைய ரூலிங்கைக் கொடுக்கும்பொழுது சபையைக் கட்டுப்படுத்துகிறது. அப்படி வரும்பொழுது கன்செண்ட் கொடுத்து நீங்கள் பிரிவிலேஜ் மோஷனைக் கொண்டு வருகிறீர்கள். அப்பொழுது நாங்கள் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். எப்படி பிரிவிலேஜ் ஆகிறது என்று சொல்வதற்கு சந்தர்ப்பம் வேண்டும். ஷக்தர் தெளிவாகச் சொல்கிறார். The affected party must be given an opportunity to emphasise his position என்று.

ஏற்கெனவே கோவை செழியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இது மாதிரியாக மக்கள் சபையிலே ஒரு இரயில்வே அமைச்சர் மீது பத்திரிகையில் வந்த செய்தியைப்பற்றி எழுப்பிய



நேரத்தில் தொடர்ந்து இரயில்வே அமைச்சர் இதைச் சொல்லவே இல்லை என்று மறுத்து விட்டார்கள். 1961 ஆம் ஆண்டு இராஜ்ய சபையில், சென்னையிலே திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களின் புகைப்படத்தைத் திறந்தபொழுது கோவிந்த வல்லப பந்த் அவர்கள் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு விவியன் போஸ் கமிஷன் ரிப்போர்ட் சாதகமாக இருக்கிறது என்று சொல்லியதைப்பற்றி பூபேஷ் குப்தா அவர்கள் ராஜ்ய சபையில் எழுப்பினார்கள். அப்பொழுது திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைவராக இருந்தார்கள். பூபேஷ் குப்தா மறுபடியும் எழுப்பிய பிரச்சினைமீது, கோவிந்த வல்லப பந்த் அவர்கள் நான் அப்படிப் பேசியது உண்மை, உண்மையிலேயே ஒருவருடைய படத்தைத் திறக்கும்பொழுது அவர் மேல் களங்கம் இல்லாமல் இருக்கும் என்பதற்காக அப்படிச் சொன்னேன். அதற்காக வருந்துகிறேன் என்று சொன்னார்கள். எனவே, நாங்கள் இப்பொழுது கொடுத்திருப்பது சாதாரண உறுப்பினர்கள் மீது அல்ல. பொறுப்புள்ள அமைச்சரின்பேரில் கொடுத்திருக்கிறோம். ஆகவே சபைக்கு அதைப்பற்றித் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும். குறிப்பிட்ட அமைச்சரின்பேரில் தனிப்பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி எங்களைப் பொறுத்தவரையில் கிடையாது, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் கிடையாது. என்னைப் பொறுத்தவரையில் கிடையாது. இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்பட்ட பிறகு சென்ற சட்டமன்றக் கூட்டம் பூராவும் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதில் "டீட்டெயில்ஸ்க்கு" உள்ளே போகாதீர்கள். என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்ற பொருளின்கீழ் போகிறீர்கள். பொருளின் கீழ் போக வேண்டாம். இப்பொழுது நீங்கள் கொடுத்திருப்பதன் பொருளுக்கு உள்ளே போக வேண்டாம். இப்பொழுது வேண்டியதெல்லாம், பேரவைத் தலைவரிடம் கொடுத்த நோட்டீஸ்பற்றி விளக்கிச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்காமல் தீர்ப்பு அளிக்கிறீர்கள். அது முறையா இல்லையா என்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்சினை. அந்த நிலைமையில்தான் பேச வேண்டுமே தவிர அந்த நோட்டீஸில் உள்ள பொருளைப்பற்றி பேசுவது சரியல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாங்கள் கொடுத்த பிரிவிலேஜ் மோஷன் எப்படி பிரிவிலேஜ் மோஷன் என்பதன்கீழ் வரும் என்று நாங்கள் சொல்ல வேண்டும். அதற்கு நம்முடைய விதிகளிலே சில

[திரு. கே. டி. கே. தங்கமணி]   [1975 பிப்ரவரி 24

விஷயங்கள் இருக்கின்றன. அது சமீபத்தில் நடந்திருக்க வேண்டும். அது சமீபத்தில் நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் தங்களிடத்திலே 25—1—1975-ம் தேதியிட்ட ஒரு பத்திரிகையையும் கொடுத்திருக்கிறேன்.

Privilege Question is an important question, Sir.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தப் பேரவையில் இருக்கும் உறுப்பினர்களால் பாராட்டக்கூடிய நிலையில் இந்தப் பேரவையை நடத்திச் சென்ற திரு. கிருஷ்ணராவ் அவர்கள் அளித்த தீர்ப்பைப் படிக்கிறேன்.

Before deciding whether a prima facie case has been made out, it was a matter for the Speaker to decide whether he should get help or suggestion of members. அதுதான் நிலைமை.

பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்று முடிவு எடுக்கும் நேரத்தில் பேரவைத் தலைவர் தானாகவே முடிவு செய்யலாம். சில நேரங்களில் இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களை, நோட்டீஸ் கொடுத்த உறுப்பினர்களை மட்டுமல்லாது சீனியர் மெம்பர்களையும் பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறதா என்பதுபற்றி விளக்க வாய்ப்பு அளிக்கலாம். அப்படி வாய்ப்புக் கொடுத்துத்தான் தீர வேண்டுமென்று விதிமுறைகளில் எதுவும் இல்லை. திரு. கிருஷ்ணராவ் அவர்கள் It was a matter for the speaker to decide whether he should get help or suggestion of the members. என்று ஏற்கெனவே இப்படி ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி :</u> திரு. கிருஷ்ணராவ் கொடுத்த தீர்ப்பு வேறு. ஸ்பீக்கருக்கு ரெசிட்யுவரி பவர்ஸ் இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷன் வந்திருக்கிறது. பிரிவிலேஜ் மோஷன் போன்ற முக்கியமான விஷயங்கள் கிளப்பப்படுகிறபோது லோக் சபையைப் பொறுத்தவரை பல அனுபவங்கள் இருக்கின்றன. ஷக்தர் அவர்கள் சொல்லுகிறார்கள்—யார் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தார்களோ அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மோஷன்



1975 பிப்ரவரி 24]   [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொடுக்காத மற்றவர்களைப் பேச அனுமதிப்பது உங்களுடைய அதிகாரத்தில் இருக்கிறது. ஆனால் சாதாரணமாக பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தவர் எதற்காகக் கொடுத்தார், என்ன விவரங்களை வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டு சபாநாயகர் அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். ஆர்கியூமென்டுக்காகச் சொல்லுகிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் நான் அப்படிச் சொல்லவில்லை என்று ஏற்கெனவே தங்களுக்குச் சொல்லிவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். அப்படியிருந்தால் தங்களுக்கு வேறு வழி இல்லை. அமைச்சர் சொன்னதை நம்பத்தான் வேண்டும். பொறுப்புள்ள உறுப்பினர்கள் இந்த மாதிரி பிரிவிலேஜ் மோஷன் ரெய்ஸ் பண்ணினார்கள். அமைச்சர் இப்படிச் சொல்லிவிட்டார் என்றால் மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களும் ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள் ; மக்களும் ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள். அதற்காகத்தான் பிரிவிலேஜ் மோஷனை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுப்பியதிலே பாயின்ட் ஆர் ஆர்டர் எதுவும் இல்லை. அவர்கள் விரும்புவார்களானால் நோட்டீஸ் கொடுத்தவர்கள் தங்கள் கருத்தைக் கூறுவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்—

Soon after the conclusion of the last session, Thiru P. U. Shanmugam, the then Food Minister and the present Public Works Department Minister in a Press Conference attacked the Chairman of the Estimates Committee as motivated and referred to participants as criticising him only when things were done at the instance of the Chief Minister and with the approval of other Ministers. This is clearly meant to cause disaffection upon the House and will invoke 'Privilege' under our rules."
என்றும், திரு. கோவை செழியன் அவர்கள்—

"21—1—1975 ஆம் தேதி மாண்புமிகு பி.டபிள்யூ.டி. அமைச்சர் பத்திரிகைகளுக்குக் கொடுத்த பேட்டியில் எஸ்டிமேட் கமிட்டியின் (1973–74) தலைவராக இருந்து, சிவில் சப்ளை டிப்பார்ட்மென்ட் பற்றிய அறிக்கையை வெளியிட்ட திரு. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ., அவர்கள், தன்மீது வேண்டுமென்று பகையில் அவமானப் படுத்த, மகாபலிபுரத்தில் இருந்து எழுதி வெளியிட்டார். அது

உண்மைக்குப் புறம்பானது என்று கூறியிருப்பது இந்த அவையின் உரிமையைப் பாதிக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"

என்றும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்

"On 21st January 1975 Honourable Thiru P. U. Shanmugam, Minister for Public Works in a Press Conference convened by him in the Secretariat has made disparaging and derogatory remarks against the Chairman of the Estimates Committeee of the House and cast aspersions on him and the members of the Committee and their conduct in preparing the 24th Report of the Estimates Committee . . . .

The impugned remarks of the Minister constitute a breach of privilege.

என்றும் உரிமைப் பிரச்சினைக்கான நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி உரிமை மீறிய நிகழ்ச்சி என்று விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் விதி 185ஐ வாசிக்கிறேன்—

A member may with the consent of the Speaker raise a question involving a breach of privilege either of a member or of the House or of a Committee thereof

நான் கொடுத்திருக்கும் விஷயத்திலே, இது ஒரு கமிட்டியின் உரிமையைப் பாதிப்பதாகவும், இந்த ஹவுசிங் உரிமையைப் பாதிப்பதாகவும் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். கமிட்டி என்று சொல்லக் கூடிய நேரத்திலே எஸ்டிமேட் கமிட்டி இந்த ஹவுசால் நியமிக்கப் பட்டிருக்கிறது. அந்த எஸ்டிமேட் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அதைப்பற்றி ஒரு கருத்தை அமைச்சராக இருக்கும் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சபையிலே சென்ற சட்டமன்றத் தொடரிலே நடந்ததை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்றைக்கு இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திரு. கோவை செழியன் அவர்களும், சென்ஷூர் மோஷனைத் திரு. ஏ. சுப்பிரமணியம்



அவர்களும் கொண்டு வந்தார்கள். அந்த விவாதத்திலே பல உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். கலந்து கொண்ட அத்தனை உறுப்பினர்களும் பிரதானமாக எடுத்துக் கொண்டு பேசியது எஸ்டிமேட் கமிட்டியின் 24 ஆவது ரிப்போர்ட் பற்றித்தான். அது சம்பந்தமான ரெக்கார்டுகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்ட பிறகு தாங்கள் அந்த ரெக்கார்டுகளை மனமுவந்து யார் யார் பார்க்க விரும்பினார்களோ அவர்களுக்குக் காட்டினீர்கள். அந்த ரெக்கார்டுகளைப் பார்க்கும்போதுதான்—இன்றைக்கு உணவு அமைச்சராக இருப்பவர் அல்ல—அன்றைக்கு உணவு அமைச்சராக இருந்த, இன்றைக்குப் பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ப. உ. சண்முகம் அவர்கள் அந்த டிராப்டில் கையொப்பமிட்டிருக்கிறார்கள். அந்த டிரான்சாக்ஷன் பற்றிக் கடைசியில் கையொப்பமிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அதில் இருக்கக் கூடிய சிவில் சப்ளை கமிஷனர் அவர்கள்—

The Hon. Minister has orally asked me to expedite it.

என்ற கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இதெல்லாம் முடிந்த ஒரு மாதத்திற்குப் பின்னால்தான் அன்றைக்கு இருந்த கூட்டுறவு அமைச்சர் கையொப்பம் இருக்கிறது; முதலமைச்சர் கையொப்பம் இருக்கிறது என்ற விபரங்கள் தெரிய வந்தன.

நாங்கள் இதையெல்லாம் வைத்து அன்றைக்குப் பல கருத்துக்களைக் கூறினோம். அன்றைக்கு உணவு அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் காலத்திலே இந்தத் தவறு நடந்திருக்கிறது; அதுபற்றி எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதுபற்றிச் சில விஷயங்கள் அப்போது சொன்னோம். ஒரு பெரு முதலாளி—அவருக்குக் கொடுத்தார் என்றெல்லாம் அன்று சொல்லியிருக்கிறோம். அது இன்றைக்கு ரெலவன்ட் அல்ல. 21—1—75 அன்று அன்றைக்கு உணவு அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பத்திரிகை நிருபர்களைக் கூட்டி ஒரு இன்டர்வ்யூ கொடுத்திருக்கிறார். மறுநாள் "அன்னை நாடு" என்ற பத்திரிகையில் குறைந்த அளவு வந்தது. மறு நாள் 25-ம் தேதி "முழுமையும் நாங்கள் போடுகிறோம்" என்று சொல்லி "மக்கள் குரல்" பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். சிறு அளவு "நவசக்தி" பத்திரிகையிலும் வந்திருக்கிறது. "தென்னகம்" பத்திரிகையிலும் முழுமையாக வந்திருக்கிறது. வடநாட்டிலுள்ள ஒரு

சில ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அவரே "இதை வெளியிட வேண்டாமென்று குறிப்பிடுகிறார்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. மறுநாள் அவர் அதற்கு மறுப்பு விட்டிருக்கிறார். அதைச் சில பத்திரிகைகளில் போட்டிருக்கிறார்கள்.

25—1—1975 அன்று "மக்கள் குரல்" பத்திரிகையில் இப்படி அன்றைக்கு உணவு அமைச்சர், இப்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்த இன்டர்வ்யூவில் கூறினார் என்று முழுவதும் வெளியிட்டிருக் கிறது. அதுதான் எங்களுக்கு அஸ்திவாரமாக இருக்கும் என்ற முறை யில் அப்படியே கொடுத்திருக்கிறேன். கொடுத்த பிறகு அமைச்சர் அவர்கள் மறுப்பு வந்திருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இது ஏதோ திடீரென்று கொடுத்த இன்டர்வ்யூ அல்ல.

ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக 17 நிருபர்களை வைத்துக் கொண்டு அவர்கள் இன்டர்வ்யூ கொடுத்ததாகவும் கூறியிருக் கிறார்கள். அதை அவர்கள் மறுக்க முடியாது.

இன்னொரு முக்கியமான விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன். திரு. ப. உ. ச. இன்று பொதுப் பணித் துறை அமைச்சர், திரு. ராம்சந்தர் பொதுப் பணித் துறை செயலாளர், திரு. வரதராஜன் உள்ளாட்சித் துறை துணைச் செயலாளர் இவர்கள் மூவரும் அன்று நிருபர்களிடம் பேசும்போது கையில் உணவு இலாகா சம்பந்தப்பட்ட பைல்களை வைத்திருந்தார்களே, இது எப்படி? அந்தப் பைல்களைக் காட்டி தான் நிரபராதி என்று திரு. ப.உ.ச. வாதிட்டார். உணவுத் துறை சம்பந்தப்பட்ட பைல்கள் பொதுப் பணித் துறை அமைச் சரிடமும், பொதுப் பணித் துறை செயலாளரிடமும் ஒப்படைக்கப் பட்டது எப்படி? எந்த இலாகா சம்பந்தப்பட்ட பைலையும் தருவித்துப் பார்க்க திரு. ப. உ. சண்முகம், முதலமைச்சரோ அல்லது அந்த அளவுக்கு பதவி அந்தஸ்து உள்ள இலாகா பொறுப்பு இல்லாத மந்திரியோ அல்லவே. மறைந்த திரு. ராஜாஜி, திரு. டி. டி. கே., திரு. லால்பகதூர் போன்ற மூத்த தலைவர்கள் நேரு காலத்தில் அவருடைய பதவிச் சுமையைக் குறைக்க இலாகா பொறுப்பு இல்லாத மந்திரி என நியமிக்கப்பட்டு பெரும் அளவுக்கு பிரதமருக்கு அடுத்தபடியாக அனைத்து இலாகா பைல்களையும் தருவித்துப்



பார்க்கும் சட்டபூர்வமான அதிகார உரிமை பெற்றிருந்தார்கள். அப்படிப்பட்ட அதிகார உரிமை அமைச்சர் திரு. ப. உ. ச.-வுக்கு கொடுக்கப்பட்டுள்ளதோ? இதற்கும் விளக்கம் தேவை.

எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அன்று நடந்த அந்த நிகழ்ச்சியின் போது சம்பந்தப்பட்ட 2–3 அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட பைல்களைக் கையில் வைத்து இருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு அமைச்சர் பதில் சொல்லும்போது இதை முழுமையாக மறுக்க வேண்டும். முழுமையாக மறுப்பது என்று சொன்னால் எப்படி என்றால், அன்று திரு. கோவிந்த வல்லப பந்த் "நான் அன்று சம்பந்தப்பட்ட அமைச்சராக இருக்கவில்லை. ஆகவே, நேரடியாக என்னால் பதில் சொல்ல முடியவில்லை, பதில் சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் தேவைப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் இம் மாதிரி பத்திரிக்கையின் மூலம் பதில் சொன்னேன். அப்படி அளித்தது தவறு என்று அரசாங்கம் கருதியதால் நான் வாபஸ் வாங்கிக் கொண்டேன்" என்று சொன்னார்கள். எப்படி திரு. கோவிந்த வல்லப பந்த் அவர்கள் அன்று திரு. டி.டி.கே. அவர்கள் படத்தைத் திறந்து வைக்கிறபோது, அவரைப்பற்றிக் குறைத்துப் பேசக்கூடாது. அவர்கள் பேரில் உள்ள கறுப்புப் புள்ளி நீக்கப்படவேண்டும் என்று சொன்னதை, பாராளுமன்றத்தில் உரிமைப் பிரச்சினையாகக் கிளப்பிய காரணத்தால், அதற்காக வருத்தம் தெரிவித்து இருக்கிறார்கள். அவ்வாறு அமைச்சர் திரு. ப.உ.ச. அவர்களும் சொன்னால் இந்தச் சபைக்கு, இந்த உறுப்பினர்களுக்கு இம்மாதிரியான விவகாரங்களை எடுத்துச்சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, 25—2—75 அன்று வெளிவந்த பத்திரிகை செய்தி உண்மை யென்றால் it is a clear case of breach of privilege of the House.

அது மட்டுமல்ல, இன்னொரு விஷயத்தையும் நான் கூற விரும்பு கிறேன். நாங்கள் எல்லாம் சேர்த்து உங்களைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். சபாநாயகரைப் பற்றி அவதூறாக வேறு யாராவது வெளியே பேசினால், அல்லது பத்திரிக்கையில் வந்தாலும், அது சபாநாயகரை அவமதித்ததாக ஆகும், சபையை அவமதித்ததாகும் என்று உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கு எங்களுக்கும் அதிகாரம் உண்டு. அதே மாதிரி, இந்தச் சபையால் அமைக்கப்படும் ஒரு கமிட்டியின் தலைவர் மீதோ, உறுப்பினர்

மீதோ—இங்கே அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அந்த ரிப்போர்ட் இங்கே விவாதிக்கப்பட்ட பிறகு—உள்நோக்கம் சொன்னால், அதுவும் உரிமை மீறிய நிகழ்ச்சிதான். இந்த ரிப்போர்ட்டைக் கொடுத்த தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி இந்த அறிக்கையை மகாபலிபுரத்தில் சென்று தயாரித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரோடு வேறு யார் போனார்கள், யார் அந்த அறிக்கையைத் தயார் செய்ய உதவி செய்தார்கள், அந்தக் கமிட்டியில் இருக்கும் எல்லா உறுப்பினர்களும் அவர்களுடன் சென்றார்களா, என்பது எங்களுக்குத் தெரிய வேண்டும். அவற்றையெல்லாம் எஸ்டிமேட் கமிட்டியில் உள்ள தலைவரோ உறுப்பினரோ எடுத்துச் சொல்ல முடியாது. அந்தக் கமிட்டியின் தலைவர் எப்படிச் செயல்பட்டார், யாரைக் கூப்பிட்டு இப்படிச் செய்தார்கள் என்றெல்லாம் எங்களுக்குத் தெரியவேண்டும். இதுவரையிலும் நான் கூறியுள்ள சம்பவங்களிலிருந்து இந்த நிகழ்ச்சி சட்டமீறியதொன்றாகும் பாராளுமன்ற மரபுகளுக்கு விரோதமாக் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே,

I contend that it constitutes a gross contempt of the Committee appointed by the House and also of the House which discussed that Committee's report by way of no-confidence motion and censure motion. The House is also brought to contempt on two counts. This is a clear case of contempt of the House

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், இது ஒரு "கிளியர் கேஸ் ஆப் பிரிவிலேஜ்" ஆகும். இதிலே "பிரைமா பேசி" கேஸ் இருக்கிறது என்று சொல்லி, இதை "பிரிவிலேஜ் கமிட்டிக்கு" அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விடுவது எங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற முறையில் எதிர்க்கட்சியில் இருக்கும் நாங்கள் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறேன். மீண்டும் ஒரு முறை கூறிக்கொள்கிறேன், எனக்கு தனிப்பட்ட முறையிலோ, அல்லது எங்கள் கட்சிக்கோ, அன்று உணவு அமைச்சராக இருந்து, இன்றைக்கு பொதுப் பணித்துறை அமைச்சராக இருக்கும் திரு. ப.உ.ச. அவர்கள் மீது எந்தவிதமான விருப்பு, வெறுப்பும் இல்லை, வேற்றுமையும் இல்லை. உண்மையிலேயே வேறு எந்த அமைச்சராக இருந்தாலும் அப்படி இல்லை. நான் திரு. ப.உ.ச. என்று சொல்கிறபோது, அவர்கள் மூன்று அமைச்சர்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அன்று திரு. மன்னை உணவு அமைச்சராக இருந்தார். அவர்களைக் குறை



சொல்லி இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆதித்தன் அவர்களைக் குறை சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களைக் குறை சொல்லி இருக்கிறார்கள். இப்படி மூன்று அமைச்சர்களையும் குறை சொல்லியிருக்கிற காரணத்தால், மந்திரிகளிடையே கூட்டுப் பொறுப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விடுவது பொருத்தமாக இருக்கும் என்று மீண்டும் ஒரு முறை சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினையை நான் தங்களிடம் கொடுத்து, இந்த மன்றத்தில் அது விவாதிக்கப்பட வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம். இந்த மன்றம் தான் பொதுவாக அரசாங்கத்தின் உயர்ந்த அதிகாரம் பெற்ற அமைப்பு. இந்த மன்றம் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம். இந்த மன்றத்தில் அங்கம் வகிக்கின்றவர்கள் தான் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவையைவிட இந்த மன்றம்தான் அதிக அதிகாரத்தைப் பெற்றது. அதிக வல்லமை படைத்தது என்பதை நான் உணர்ந்து இருக்கிற காரணத்தால் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் சம்பந்தமாக எஸ்டிமேட் கமிட்டி தன்னுடைய 24-வது அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக ஒருவர் உள் நோக்கம் கற்பித்து எழுதியதைக் கண்டித்து நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தேன். அதைத் தாங்களும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, உரிமைக் குழுவின் முடிவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதாவது, திரு. அப்துல் சலாம் என்பவர் ஒரு நோட்டீஸ் மூலமாக அந்த எஸ்டிமேட் கமிட்டி தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு களங்கம் கற்பிக்கிற முறையில், தனிப்பட்ட முறையில் பல தவறான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியின் தலைவரை அவமானப்படுத்துவதாகும் என்று சொல்லி, தங்களிடத்தில் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்தேன். அதைத் தாங்களும் ஏற்று பிரிவிலேஜ் கமிட்டிக்கு அதை அனுப்பியிருக்கிறீர்கள். அது பற்றிய முடிவு பின்னர் வரும்.

[திரு. கோவை செழியன்] [1975 பிப்ரவரி 24

அதைப்போலவே, அடுத்ததாக 21—1—1975 அன்று பொதுப் பணித்துறை அமைச்சர் ப.உ.ச. அவர்கள் பத்திரிகை நிருபர்களை அழைத்து கூறிய கருத்துக்கள் சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. பத்திரிகை நிருபர்கள் அனைவரையும் அழைத்து வைத்துக் கொண்டு—உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி அன்று 18–19 பத்திரிக்கை நிருபர்கள் வந்திருக்கிறார்கள்—அவர்கள் சொன்ன கருத்து இந்த மன்றத்தையும், தங்களையும் அவமானப்படுத்துகிற வகையில் நம்முடைய உரிமையை மீறும் வகையில் அமைந்து இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், அந்த வாசகம், அவர் அன்று சொன்ன அந்த வாசகம், எப்படி திரு. அப்துல் சலாம் அவர்கள் குற்றம் சாட்டினார்களோ, அதே பாணியில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அந்தக் குற்றத்தில் தான் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதது போலவும், அதிலே மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் மன்னை, அமைச்சர் ஆதித்தன் ஆகியவர்களைச் சம்பந்தப்படுத்தி, "என்னை மட்டும் ஏன் திருப்பித் திருப்பி எல்லோரும் குறை சொல்கிறார்கள், சொன்னால் அத்தனை பேரையும் குறை சொல்லவேண்டுமென்று" சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, உண்மை ஒன்று வெளியே வந்திருக்கிறது. நாங்கள் சென்ற முறை பேசியபோது, மாண்புமிகு ப. உ. ச. அவர்களைப்பற்றி மட்டுமே பேசிக்கொண்டு இருந்தோம். ஆனால் இப்போது வேறு ஒரு உண்மையும் கிடைத்து இருக்கிறது. அவர் மட்டும் குற்றவாளி இல்லை, மற்றவர்களும் குற்றவாளிகள் என்று தெரிகிறது.

இந்த மன்றத்தாலே ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்களால் நியமிக்கப்பட்ட அந்தக் கமிட்டியின் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்த ரிப்போர்ட்டை மகாபலிபுரத்திற்கு போய் எழுதினார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களாக அங்கு சென்று எழுதியிருக்கிறார்களா, மற்ற உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று எழுதியிருக்கிறார்களா, சொந்த பணத்திலே அங்கு சென்றார்களா, அவர்களாகவே தனியாக உட்கார்ந்து கொண்டு அறையைத் தாள்போட்டுக் கொண்டு அந்த அறிக்கையைத் தயார் செய்தார்களா, அல்லது வேறு என்ன விவரம் என்பதை அறிந்து கொள்ள இந்த மன்றம் ஆவலாக இருக்கிறது. அது பற்றிய விளக்கம்



1975 பிப்ரவரி 24] [திரு. கோவை செழியன்]

அவர்கள் அளிக்க வேண்டும். மகாபலிபுரத்தில் உட்கார்ந்து எழுதினார்கள் என்று சொன்னால், அதிலே ஏதோ உள் அர்த்தம் தொனிக்கிறது. "அந்த ரிப்போர்ட்டை என்னைக் களங்கப்படுத்தவேண்டுமென்பதற்காக திரு. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருக்கிறார். என்மீது அவருக்கு கோபம் இருக்கிறது. அந்தக் கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, அந்த அரிப்பைத் தீர்த்துக்கொள்வதற்காக அந்த ரிப்போர்ட்டை எழுதியிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

[முற்பகல் 10-30]

அதுமட்டுமல்ல. பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலே ஃபைல்களோடு இன்றைக்கு பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருப்பவர், வேறு ஒரு இலாகாவில் அமைச்சரிடத்தில் இருக்கிற ஃபைல்களை வைத்துக் கொண்டு "நான் மனம் திறந்து பேசுகிறேன், நான் மட்டும் இதில் குற்றவாளி அல்ல" என்பதை பரவலாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அத்தனை பத்திரிகை நிருபர்களையும் வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிறார். ஆனால் இப்பொழுது ஒரே ஒரு வார்த்தையில் "நான் அப்படிச் சொல்லவில்லை" என்று சொல்லிவிட்டால் அதை ஏற்றுக்கொண்டால், எதிர்காலத்தில் எந்தப் பத்திரிகையும் செய்திகளைப் போடுவதற்கோ அல்லது அமைச்சர்களைச் சந்திப்பதற்கோ அஞ்சுவார்கள். நாங்களும் இம்மாதிரி பேசுவதற்கு முடியாமல் போய்விடும். "நான் அப்படிப் பேசவில்லை" என்று அவர் சொல்லிவிட்ட காரணத்தினாலே மட்டும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதே உரிமை எங்களுக்கும் இருக்கிறது.

ஆகவே, நாங்கள் பொறுப்பு வாய்ந்த இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறோம். நீங்கள் இதைப் பற்றி முடிவு செய்வதற்கு முன்பு யார், யார் பத்திரிகை நிருபர்கள் அன்று வந்திருந்தார்களோ அந்த நிருபர்களையெல்லாம் அழைத்து விசாரிக்கவேண்டும். இந்தச் செய்தி "மக்கள் குரலிலே" வந்திருக்கிறது, "அன்னை நாட்டிலே" வந்திருக்கிறது "தென்னகத்தில்" வந்திருக்கிறது. "ஸ்டேட்ஸ்மென்" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அது ஆங்கிலப் பத்திரிகை. அதிலும் வந்திருக்கிறது. அத்தனை பத்திரிகைகளும் பொய் சொல்லியதா என்பதை அறிந்து கொள்ளவேண்டும். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்றால், இந்த மன்றத்திற்கு முன்னாலே அந்தப் பத்திரிகைகளின் நிருபர்கள் அனைவரை

யும் அழைத்து விசாரணை செய்யவேண்டும். இது "இம்பீச்மெண்ட்" என்ற விதத்திலே நடைபெற்றாலும் எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. அமைச்சர் அவர்கள் "நான் தமிழன்மீது ஆணையாகச் சொல்கிறேன். அண்ணாமீது ஆணையாகச் சொல்கிறேன் என்று சொல்கிறார். அப்படி அவர்கள் சத்தியம் செய்வது போல, நிருபர்களையும் அழைத்து "நீங்களும் சத்தியமாகச் சொல்லுங்கள், அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னாரா, இல்லையா?" என்று விசாரிக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு நிருபரையும் கேட்டு, இந்த மன்றமே விசாரணை செய்து ஒரு முடிவு எடுக்கவேண்டும். நிச்சயமாக நான் சொல்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றத்தினுடைய மரியாதையே போகிறது, நம்முடைய உரிமையும் போகிறது. சட்ட மன்றத்தினுடைய மரியாதையையும், உரிமையையும் நீங்கள் காப்பாற்ற வேண்டும். அதற்காகத்தான் இன்றைக்கு தாங்கள் இருக்கிற காரணத்தினால், தயவுசெய்து ஒரே வார்த்தையில் முடிவை சொல்லிவிடாமல், அத்தனை பேர்களையும் அழைத்து விசாரணை செய்து, அதைப் பற்றிய முடிவை இந்த மன்றமே எடுப்பதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லி, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அன்றையதினம் உணவு அமைச்சராகவும் இன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சராகவும் இருக்கிற மாண்புமிகு திரு. ப. உ. சண்முகத்தின்மீது உரிமை மீறல் தீர்மானத்தைக் கொண்டு வர இந்தப் பிரச்சினையை நான் இங்கே மிகுந்த பொறுப்பு உணர்ச்சியோடு தான் எழுப்பியிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தினுடைய கண்ணியமும், கௌரவமும், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்களுடைய கண்ணியமும், கௌரவமும், இந்த மாமன்றம் அமைக்கின்ற குழுக்களுடைய கண்ணியமும், கௌரவமும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான். இது பாதுகாக்கப்படும் என்று மாநிலத்தி லுள்ள 5 கோடி மக்களுக்கும் உறுதி ஏற்பட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த மன்றத்தினுடைய உரிமையை தனிப்பட்டவர் ஒருவர் மீறினாலும், அல்லது அமைச்சர் மீறினாலும், இரண்டும் ஒரே வகையாகத்தான் இந்த மன்றத்தினால் பார்க்கப்படும். இருக்கிற சட்டத்தையும், விதி



களையும் வைத்து சரியான முறையில் விசாரணை செய்து, சரியான தீர்ப்பு அளிக்கப்படும் என்று இந்த மாநிலத்திலுள்ள அத்தனை மக்களுக்கும் உறுதி ஏற்பட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதாரம் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பத்திரிகையாளர்கள் கூட்டத்தை கூட்டி பத்திரிகையாளர் களிடத்தில் அவரே சில கருத்துக்களை மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை யின் மீது கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பற்றி மட்டு மல்ல, அந்த அறிக்கையைவிட, அதைவிட கூடுதலாக இந்த அறிக்கையை தயாரித்து இந்த மன்றத்திற்கு வழங்கிய மதிப்பீட்டுக் குழு தலைவரைப்பற்றியும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

"சரித்திரத்திலேயே இல்லாத முறையில் சட்டசபை மதிப் பீட்டுக் குழுவின் தலைவர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, குழு வின் அறிக்கையை மகாபலிபுரத்தில் போய் இருந்து கொண்டு தயாரித்து இருக்கிறார்"

என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த அறிக்கையை தயாரிப் பதிலேயே நோக்கம் கற்பிக்கிறார். தயாரிக்கின்ற முறையிலேயே நோக்கம் கற்பிக்கின்றார்.

"திரு. கிருஷ்ணமூர்த்திக்கு அரசியல் விரோதம் உண்டு. இந்த அறிக்கை நடைமுறைக்கு விரோதமானது. இந்த அறிக்கையை திரு. கிருஷ்ணமூர்த்தி தானே கைப்பட எழுதி தயாரித்து இருக்கிறார்." என்று சொல்லியிருக்கிறார். அந்த அறிக்கையில் இருக்கிற கருத்துக் களுக்கும் பகிரங்கமாக நோக்கம் கற்பிக்கின்றார். அதுமட்டுமல்ல. இன்னும் சொல்கிறார்.

"குழுவின் தலைவர் எம்.ஏ., பி.எல். படித்தவர். நான் இந்த அமைச்சர் பதவி வகிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அரசியல் பகைமை காரணமாக இப்படி அறிக்கை எழுதினார். அது அப்படியே வெளியிடப்பட்டுவிட்டது."

என்றும் சொல்கிறார். மதிப்பீட்டுக் குழுத் தலைவரைப் பற்றி "இம்ப்யூடேஷன்" செய்கிறார். குழுத் தலைவருக்கு தவறான நோக்கம் கற்பிக்கிறார். அதுமட்டுமல்ல. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைப் பற்றி வெளிப்படையாக கருத்துக்களை நிருபர்களுடன்

விவாதிக்கவும் செய்திருக்கிறார்: அந்த அறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துக்களின் "மெரிட்ஸுக்குள்ளே" புகுந்து விமர்சனம் செய் திருக்கிறார். அவர் சொல்கிறார்:

"டெண்டர் கேட்டவர் ஒரு திவால் பேர்வழியா அல்லவா என்பதை கலெக்டர்கள் கூடக் கேட்கவில்லை" . . .
இப்படியெல்லாம் இதைப்பற்றி பத்திரிகை நிருபர்களிடம் விவாதம் செய்திருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு ஒரு மறுப்பு வந்திருக்கிறது. அந்த மறுப்பில் என்ன சொல்கிறார்: bland denial அதாவது பொதுப்படையாக "இப்படியெல்லாம் நான் பேசவில்லை" என்று மறுத்திருக்கிறாரே தவிர, வேறு ஒன்றுமில்லை. பத்திரிகையிலே வந்திருக்கிற இந்த விஷயம் ஒரு பத்திரிகையில் மட்டும் வரவில்லை. பல பத்திரிகை களிலும் வந்திருக்கிறது. இங்கே இருக்கிற பத்திரிகைகளிலும் வந் திருக்கிறது. வட நாட்டிலே இருக்கிற பத்திரிகைகளிலும் வந்திருக் கிறது. பொறுப்பு வாய்ந்த "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையிலும் வந்திருக்கிறது. பிரபலமான பத்திரிகை, லட்சக்கணக்கான சர்குலேஷன் உடைய பத்திரிகை. சாதாரண பத்திரிகை அல்ல. லட்சக் கணக்கான மக்கள் படிக்கின்ற பத்திரிகை. அம்மாதிரி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இதற்கு மறுப்பு இருக்கிறதா என்றால் இல்லை. "பாயின்ட் பை பாயின்ட்" மறுப்பு இருக்கிறதா என்றால் இல்லை. பொதுப்படையாக "நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை" என்று தான் மறுத்திருக்கிறார்கள். அப்படியானால் இப்படி வந்த செய்தி உண்மையா, இல்லையா? ஏதோ ஒரு பத்திரிகை சொல்கிறது என்றால் ஏதோ தவறாகச் சொல்லியிருக்கலாம் என்று விட்டு விடலாம். அப்படி அல்ல. பல பத்திரிகைகள் சொல்லியிருக்கின்றன.

மக்கள் குரல் பத்திரிகை இதற்கு ஒரு மறுப்பும் வெளியிட்டிருக் கிறது. அதாவது ரிஜாயின்டர் வெளியிட்டிருக்கிறது. விரிவாக வெளியிட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டிருக்கிறது:

"மதிப்பீட்டுக்குழு அறிக்கையைத் தயாரிக்க குழு உறுப்பினர் களை திரு. கிருஷ்ணமூர்த்தி மகாபலிபுரத்திற்கு அழைத்துச் சென்ற விவகாரத்தை நீங்கள் வெளிப்படுத்திய பிறகுதானே "அய்யா" நிருபர்கள் அறிவார்கள்."
என்று கேட்டிருக்கிறார்கள்.





"நீங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியைத் தட்டி" இங்கு நான் உட்கார்ந்திருப்பது (மந்திரியாக இருப்பது) திரு. கிருஷ்ணமூர்த்திக்கு பிடிக்கவில்லை என்று சொல்லவில்லையா?, மறுப்புக்கும் ஒரு எல்லை—வரையறை வேண்டாமா? மனச்சாட்சியை அறவே ஒதுக்கிவிட்டு இட்ட ஆணைகளை இடுகாட்டுக்கு அனுப்பி விட்டு மறுப்பு வெளியிடுவது தமிழன் மரபு அல்லவே அய்யா"
என்று "டைல்" ஆக, அங்கு என்ன பேசப்பட்டது, எப்படி பேசப் பட்டது என்றெல்லாம் விவரங்களைக் கொடுத்து "ரிஜாயின்டர்" வெளியிட்டிருக்கிறது அந்தப் பத்திரிகை.

இன்னும் கேட்டிருக்கிறார்கள், வேறு துறையைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் வைத்திருக்கும் ஃபைல்கள் அங்கே எப்படி வந்தது என்று கேட்டிருக்கிறார்கள்.

"உணவு கடத்தல் தடுப்பு போலீஸ் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக இருந்த போது எஸ். எம். டயஸ் எழுதிய குறிப்பு நடவடிக்கைக் குறிப்பு ஆகியவற்றை எல்லாம் நிருபர்களுக்கு விளக்கமாக திரு. ப.உ.ச. படித்துக் காட்டினாரே, அந்த "பைல்" இன்று பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கும் அவரிடம் வந்தது எப்படி? முறைப்படி காரணம் சொல்லி எழுதிப்பெற்றாரா? இதற்கும் விளக்கம் தேவை. அளிப்பார்கள் என்று நம்புகிறோம்."
மறுபடியும் சொல்கிறார்கள்.

"நடைபெற்ற இந்த கலந்துரையாடல் பேட்டிச் செய்தியைப் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்று நிருபர்களிடம் அமைச்சர் திரு. ப.உ.ச. கேட்டுக்கொண்டது உண்மை. ஆனால் அப்படி வெளியிட்டால் என்ன செய்வது என்றும் அவர் கூறினார். "மக்கள் குரல்" அந்தப் பேட்டிச் செய்தியை வெளியிட்டதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தி உள்ளோம். ஏற்கெனவே ஒரு காலைப் பத்திரிகையில் வெளிவந்துவிட்டது என்பதுடன் திரு. ப.உ.ச.. கூறும் விளக்கங்கள் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டியது கடமை என்று மக்கள் குரல் கருதியதால்தான் பேட்டிச் செய்தியை வெளியிட்டது!".

இப்படி அமைச்சர் அவர்களுடைய மறுப்பு அறிக்கைக்கு விளக்கமாக நீண்டதொரு "ரிஜாயின்டர்" இந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட் டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், இதை ஒரேயடியாக யாரும் தூக்கி எறிந்துவிட முடியாது. உண்மை

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 பிப்ரவரி 24

இருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு எல்லோருக்கும் இருக்கிறது. பத்திரிகையாளர்களிடம் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றி விளக்கம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி ஒன்றும் சொல்லவில்லை என்று மட்டும் பொதுப்படையாக ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இதை "சம்மரி"யாக தள்ளிவிடக்கூடாது. இதைப்பற்றி தீவிரமாக விசாரிக்கவேண்டும். நிருபர்களையும் அழைத்துக் கேட்கவேண்டும், அமைச்சர் அவர்களையும் கேட்கவேண்டும். ஒழுங்காக விசாரணை செய்து உண்மை என்ன என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். உண்மையாகவே அமைச்சர் அவர்கள் இப்படியெல்லாம் பேசியிருந்தால், அது மிகக் கடுமையான குற்றமாகிறது என்பதற்கு எத்தனையோ தீர்ப்புகள் இருக்கின்றன. திரு. ஷக்தர் அவர்கள் தன்னுடைய நூலில் சொல்லியிருக்கிறார்.

It is a breach of privilege and contempt of the House to make speeches or print or pblish any libellous report reflecting on the character and proceedings of the House or its Committee or any member of the House or relating to the character and conduct of a Member of Parliament.

நாடாளுமன்ற பிரிவிலேஜ் முறைகளைத் தான் நாம் பின்பற்றி வருகிறோம். அந்த வகையில் இதுபற்றி எத்தனையோ தீர்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த மன்றம் நியமித்த குழு, அந்தக் குழுவினுடைய உறுப்பினர் தலைவர், அவரே குழு உறுப்பினர், தலைவர் என்ற வகையிலே, மன்ற உறுப்பினர் என்ற வகையிலே அவரைப்பற்றி செய்கின்ற குண தோஷ விமர்சனம் "ரிஃப்ளெக்ஷன்" செய்வது போலாகும். அது "கண்டெம்ப்ட்" ஆகும். பிரீச் ஆஃப் பிரிவிலேஜ் ஆகும் என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். எங்களுக்கு இன்னும் ஒரு ஆசையும் இருக்கிறது. அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இதனை உண்மையாகச் செய்திருந்தால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற நோக்கம், தான் செய்த பிழையைத் திருத்திக்கொள்ளவேண்டும். அப்படித் திருத்திக்கொள்வதற்கு வெளிப்படையாக, பகிரங்கமாக அவருக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கட்டும் என்பதுதான். அமைச்சர் அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அமைச்சரவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த



1975 பிப்ரவரி 24] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

உரிமைப் பிரச்சினையை நாங்கள் எழுப்பவில்லை. ஆனால் மரபு காப்பாற்றப்பட வேண்டும். நம்முடைய அமைச்சர் திரு. ப.உ.ச. அவர்கள் சற்று முன்கோபக்காரர். திடீர் திடீரென்று கோபம் வரும். உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். சில அனுபவங்களின் மூலம் அதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு அப்படிச் சொல்லியிருந்தால், அவர்கள் தன்னைத் திருத்திக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இல்லை என்றால் இந்த மாமன்றத்தை அவமதித்து விட்டதாக மக்கள் சொல்வார்கள். பத்திரிகைச் செய்தியின்படி இந்த மாமன்றம் அவமதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தட்டிக் கேட்க இந்த மன்றத்தில் ஆளே இல்லை என்று மக்கள் நினைத்துவிடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் மக்கள் மத்தியிலே ஏற்படக் கூடாது என்பதற்காகவே இந்தத் தீர்மானத்தைப்பற்றி நான் விவாதிக்கிறேன். ஆகவே, தலைவரவர்களே

It is a very clear case of contempt of the House. It is a breach of privilege of the House. So, I would request the Hon. Speaker to uphold our contentions and hold that this is a clear case of breach of privilege, that there is a prima facie case of contempt of the House, its Committee and its Chairman and so, he was referring the issue to the Committee of Privileges

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி நீண்டநேரம் விவாதம் செய்துவிட்டோம். சில பத்திரிகைகளிலே வந்த செய்தியை வைத்து, உரிமை மீறல் என்று சொல்லி, அதுதான் உண்மை என்று சொல்லி மூன்று உறுப்பினர்களும் பேசினார்கள். அதுபற்றி என்னுடைய கருத்து என்ன என்பதை விவரமாக எழுதித் தங்களிடம் தந்திருக்கிறேன். அதுதான் முழுக்க முழுக்க உண்மை என்று என்னுடைய மனசாட்சியின்படி எழுதித் தந்திருக்கிறேன். இந்த உரிமைப் பிரச்சினைக்கு அதுதான் என்னுடைய விளக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு அமைச்சரவர்கள் என்ன எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்களே சொல்லிவிடக் கூடாதா? அவர் மீதுதான் உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏன் அவரே விளக்கம் சொல்லக்கூடாது? அவர்களுடைய வேத வாக்கியம் என்ன என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வேத வாக்கியம் நான்காக இருக்கும்; பிசாசுகள் வாக்கியம் 40-ஆக இருக்கும். நான் என்ன எழுதி இருக்கிறேன் என்பதைத் தலைவரவர்கள் படிப்பார்கள். தலைவரவர்களே, நான் எழுதிக் கொடுத்திருப்பதை படிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: பிசாசுகள் வாக்கியம் என்று யார் சொன்னது? அமைச்சரவர்கள் யாரைப் பிசாசு என்று குறிப்பிடு கிறார்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பியதால் நாங்கள் பிசாசுகளா? எங்களுக்கு பிசாசுகள் பட்டமா கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் அப்படிச் சொல்ல வில்லை. திரு. அருணாதான் சொன்னார்.

திரு. ஆலடி அருணா: பிசாசுகள் வாக்கியம் என்று நான் சொல்ல வில்லை. வேத வாக்கியம் என்றுதான் சொன்னேன்; நாகரிகமாகச் சொன்னேன்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஒரு விளக்கம். சில விஷயங்களை கமிட்டித் தலைவர் பத்திரிகைகளில் வெளி வெளியிடக் கூடாது என்று சொன்னால் அதைப் பத்திரிகையாளர்கள் வெளியிடக் கூடாது என்ற மரபு இருக்கிறது. அதேமாதிரி அமைச்சரவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி பேட்டி கொடுத்து, அதை வெளியிடக் கூடாது என்று சொன்னதாகத் தெரிகிறது. அம்மாதிரி சொன்ன விஷயம் வெளியிடப்பட்டது சரிதானா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக இருந்த என்னைப் பற்றியும் குழுவைப்பற்றியும் ஒரு நபர் பத்திரிகைக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். அந்த நோட்டீசில் இருக்கிற ஒரே ஒரு வரிக்காக அதைத் தாங்கள் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி யிருப்பதாக அறிகிறேன். அதுவும் இன்றையதினம் திரு. கோவை செழியன் அவர்கள் சொன்ன பிறகுதான் எனக்குத் தெரியும்



பத்திரிகைகளில் வந்த செய்தியை வைத்து, மாண்புமிகு அமைச் சரவர்கள் மீது ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவந்து விளக்கமாக விவாதித்திருக்கிறார்கள். அதற்கு அமைச்சரவர்கள் மறுப்பும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த இடத்தில் நான் ஒரு விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. நானாக குழுவை அழைத்துச் செல்லவில்லை; தங்களுடைய அனுமதியின் பேரில்தான் மகாபலிபுரத் திற்குக் குழு சென்றது.

ஒரு வக்கீல் எஸ்டிமேட் கமிட்டியின் சேர்மனை இன்வால்வ் செய்து நோட்டீஸ் அனுப்பினார் என்பதற்காகவே, அந்த நோட்டீஸ் குறிப்பிட்டுள்ள ஒரே ஒரு வரிக்காகவே தாங்கள் பெருமனது வைத்து, உரிமைக் குழுவிற்கு அதை அனுப்பியிருக்கிறீர்கள். அந்த அளவுக்கு நீதி வழங்கக் கூடிய ஸ்தானத்தில் தாங்கள் இருக்கிறீர்கள்; மக்கள் மதிக்கக்கூடிய இடத்தில் தாங்கள் இருக்கிறீர்கள். இந்த மாமன்றத்திலே இருக்கிற ஒரு அமைச்சரைப்பற்றிப் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து இங்கே பெரிய விவாதம் நடைபெற்றிருக் கிறது. அமைச்சர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறார். வக்கீல் நோட்டீசில் குறிப்பிட்ட ஒரு வரிக்காக தாங்களாகவே அதை உரிமைக் குழுவுக்கு அனுப்பியிருக்கும்போது, அமைச்சரவர்களால் மறுக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது சரியா என்பதை "சுவோ மோட்டாவாக" தாங்களாகவே சொல்ல முடியும். ஆகவே, அமைச்சரவர்கள் சொன்னதாகச் செய்திகள் வெளி யிட்டிருக்கிற பத்திரிகைகள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? அதுபற்றி முடிவு செய்ய உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு உறுப் பினர்கள் மூன்று பேர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்கு என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன். (குறுக்கீடு—அமைச்சரின் விளக்கம் என்ன) அமைச்சரின் விளக்கத்தைப் படிக்கிறேன். அதைப் படித்துவிட்டு என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த மூன்று நோட்டீஸ்களும் அமைச்சரவர் களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. அதற்கு அவர்கள் கொடுத்த பதில்:

" தங்களின் 20—2—75 அன்றைய தேதியிட்ட கடிதம் பெற்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தங்கமணி, திரு. கோவை செழியன் இருவரும்—அப்போது சுப்பிரமணியம் அவர்களின்

நோட்டீஸ் எனக்கு வரவில்லை—தந்துள்ள அவை உரிமை மீறல் தீர்மானங்களின் நகல்களைப் படித்துப் பார்த்தேன். நிருபர்களிடம் நான் அவ்வாறு பேசியதாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்ததை அறிந்த உடனேயே அந்தச் செய்திகளில் பல உண்மைக்குப் புறம்பானவை என்றும் குறிப்பாக நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் அந்தப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது போல் நான் தவறாக எதுவும் கூறவில்லை என்றும் விளக்கம் தந்து அறிக்கை வெளியிட்டுள்ளேன். அது 23—1—75 நாளிட்ட "முரசொலி" நாளிதழில் வெளியாகி உள்ளது. அதன் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். நான் மதிப்பீட்டுக் குழுவைப் பற்றியோ, அதன் தலைவரைப் பற்றியோ அமைச்சர்களைப் பற்றியோ தவறான முறையில் கூறவுமில்லை. கூறவேண்டிய அவசியமும் இல்லை" என்று கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

இங்கே உறுப்பினர்கள் கூறியதைப்போல, வந்த செய்திகள் உண்மையாக இருந்தால் அது உரிமை மீறல் என்பதில் ஐயமில்லை. ஆனால் உறுப்பினர்கள் காட்டிய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் "நான் சொன்னவை அல்ல" என்று அமைச்சரவர்கள் மறுத்திருக்கிறார்கள். அதுவும் பத்திரிகையில் வந்துள்ள செய்திகள். இந்த அவைக்கு வெளியே நடைபெற்றவை. அமைச்சரவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று மறுத்திருக்கிறார்கள். பத்திரிகையாளர்களை அழைத்து இதைப்பற்றி விவாதிப்பது நம்முடைய மரபு அல்ல. இம்மன்றத்திற்கு வெளியே ஒரு உறுப்பினர் கூறியதாக வருகின்ற செய்தியை அந்த உறுப்பினர் "நான் அவ்வாறு சொல்லவில்லை" என்று இந்த மன்றத்தில் கூறினால் அதை ஏற்றுக்கொள்வது மரபாக இருக்கிறது. நாம் அதற்கு மேல் விவாதம் நடத்துவதற்கு இடமளிக்கவில்லை. பொதுவாக இந்த மன்றத்தில் நாம் இதுவரை கடைப்பிடித்து வரும் மரபு—இம்மன்ற உறுப்பினர் ஒருவர் இம்மன்றத்திற்கு வெளியே, வெளியிட்டதாகக் கூறப்படும் செய்தியையோ, மேற்கொண்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சியையோ ஆதாரம் காட்டி, அம்மன்ற உறுப்பினர்மீது குற்றம் சாட்டப்படும்போது, அம்மன்ற உறுப்பினர் அத்தகைய செய்தி எதையும் வெளியிடவில்லை என்றும் அத்தகைய நிகழ்ச்சி எதையும் மேற்கொள்ளவில்லை என்றும் மறுப்பாரேயானால், அவர் மறுப்புரையினை ஏற்றுக்கொள்வதே ஆகும். அந்த மரபின்படியே, இதற்கும் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.



திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். சுவோ மோட்டாவாக தீர்ப்புச் சொல்வதாக இருந்தாலும், பேரவைத் தலைவருக்கு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிபற்றி நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும். அப்படி நோட்டீசே இல்லாத ஒரு நிகழ்ச்சியைப்பற்றி பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : May I submit to the Hon. Speaker that there is a very serious irregularity that has taken place in the matter of publishing of.........

MR. SPEAKER : இது ஒன்றும் பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. நீங்கள் உட்காருங்கள்.

DR. H. V. HANDE : I want to know whether they are in order. The Hon. Minister has categorically stated that he has not mentioned any of those things. It is our duty to find out whether the press conference has taken place at all. We do not know where this press conference took place, what was spoken there, etc. The Hon. Minister has not denied the holding of press conference. He has said that he had not told such and such things. Therefore the Hon. Speaker's contention is that *suo motu* he cannot refer the question to the Committee. I do not know whether it is within the rules. When a gross irregularity against the press is alleged by an hon. Minister it is our democratic duty to analyse and find out what has happened subsequently. This arises as a consequential thing, just as there are consequential amendments. We must know what has happened in the press conference.

I am quite sure you will be convinced of what I wish to point out. Whenever a decision is given or a ruling is given, there are consequential orders the Speaker has to pass. Even in amendments, we have consequential amendments passed. Now the Hon. Speaker has accepted the statement of Mr. P. U. Shanmugam as truth. Therefore, automatically, the corollary arises and that is this. What is the difficulty in allowing the whole thing to be discussed threadbare? What is the difficulty

[Dr. H. V. Hande] [1975 பிப்ரவரி 24

in the Speaker referring the other consequential matter to the Committee ? Why should the Speaker wait for somebody to give a notice for that? There are instances and precedents where the Honourable Speaker has, whenever a matter is brought to his notice, referred it to the Committee *suo motu*. What is his difficulty now? I would like to know, is there any serious difficulty for him? I am afraid we will be giving the public a wrong impression that somebody is so important like Pa.U.Sa. and attempts are made to shield him. Whoever it is, however high he may be, even if it be the Chief Minister, when a breach of privilege is brought, it should be gone through. He has convened a Press Conference, he does not deny that. Then, what did he speak there?

Therefore, there are only two alternatives. One is the Hon. Speaker can *suo motu* refer it to the Committee. Or the other alternative is he should not mistake me if I say that the Hon. Minister should submit his resignation and face the public. This is a very, very serious matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் எல்லோரிடமும் நமது சட்டமன்ற விதிகள் புத்தகம் இருக்கிறது. இந்தச் சபையில் நிகழ்ச்சி நடக்கிறபோது ஏதாவது விதிமுறைகளுக்கு மாறான நிகழ்ச்சி நடந்தால் அதை யாரும் உடனே பேரவைத் தலைவர் கவனத்திற்குக் கொண்டுவரலாம். விதி 184 இன் கீழ்

Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice . . .

என்பதாக இருக்கிறது. அது அந்தச் சட்டமன்றத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பற்றியது. பேரவைத் தலைவர் அதுபற்றி உடனே சுவோ மோடோவாக உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்க முடியும். ஆனால் இது வெளியில் நடந்த நிகழ்ச்சி—இதுபற்றி நோட்டீஸ் கொடுங்கள். பேரவைத் தலைவர் அதைப் பரிசீலித்து தம் முடிவைத் தெரிவிப்பார்.

THIRU V. KRISHNAMOORTHY (Nellikuppam) : Sir, I will move . . .

DR. H. V. HANDE : When he is moving, what is your difficulty ?



1975 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் ஆத்திரப்படாமல் விதிமுறைகளைப் பார்க்க வேண்டும். நடைபெறுகிற நிகழ்ச்சிகளில் விதிமுறைக்கு மீறிய நிகழ்ச்சி வருகிறபோது காலவரம்பு இல்லாமல் உடனே சுவோ மோட்டோவாக பேரவைத் தலைவர் முடிவு செய்யலாம். இது வெளியில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சி—இதற்கு நோட்டீஸ் கொடுக்காமல் இப்போதே கொண்டுவருகிறோம் என்பது சரியல்ல. நோட்டீஸ் கொடுங்கள். அதன்மீது நாளைக்கு முடிவு காணலாம்.

திரு. ஆலடி அருணா : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகத்தின் மீது கொண்டுவரப்பட்ட உரிமை மீறல் பிரச்சினையின் மீது தாங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டீர்கள். அவர் தாம் பத்திரிகைகளுக்கு அந்தவிதமாக எந்தச் செய்தியும் சொல்லவில்லை என்று சொன்ன வாதத்தை ஏற்று அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். அப்படி அந்தத் தீர்ப்பை வழங்குகிறபோதே திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல—பத்திரிகைகள் அமைச்சர் சொல்லாதவற்றைப்போட்டு இந்த அவை உறுப்பினர்களுக்கு மாசு கற்பிக்கிற வகையில்—வேண்டுமென்றே அமைச்சர் மீது மாசு கற்பிக்கின்ற முறையில் எழுதியிருக்கிற இன்னொரு உரிமை மீறல் பிரச்சினை எழுகிறது. இதற்காகத் தனியாக நோட்டீஸ் கொடுக்க வேண்டியதில்லை. அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்சினை இல்லையென்கிறபோதே பத்திரிகைகள் அவர் சொல்லாததை வெளியிட்டது தவறு என்பதற்கு ப்ரைமாபசி கேஸ் இருக்கிறது. *ஆகவே, இந்தத் தீர்ப்பை ஒத்திவைத்து உரிமைக் குழுவிற்கே தாங்கள் இந்தப் பிரச்சினையை ஏன் அனுப்பிவைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. கோவை செழியன் : நாங்கள் இவ்வளவு நேரம் பேசி ஓர் உண்மையான கருத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். தாங்கள் அதுபற்றி முழுமையும் விவாதிக்கக் கடமைப்

பட்டிருக்கிறீர்கள். இவ்வளவு நேரம் பேசி எங்களது குற்றச் சாட்டிற்கு ஆதாரங்களைச் சொல்லியும் தாங்கள் எங்களது வாதத்தை ஏற்காத காரணத்தினால் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அண்ணா தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்தார்கள்.)

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of clarification, Sir. Who is the Leader of the ADMK, Mr. Edmund or Mr. Kovai Cheziyan ? (Laughter)

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

## காவிரி நீர்ப் பங்கீடுபற்றிய பேச்சு வார்த்தை முறிவு குறித்து

MR. SPEAKER : Dr. H. V. Hande, Thiru K. T. K. Tangamani, Thiru R. Ponnappa Nadar, Thiru A. K. Subbiah, Thiru A. R. Marimuthu and Thiru N. K. Palanisamy have given the following adjournment motion, namely,

'do hereby give notice under rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules—

"I move that the business of the House stands adjourned to discuss a matter of urgent public importance namely the failure of inter-State talks with regard to the sharing of water from Cauvery river."

இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை சுருக்கமாக விளக்கும்படி முதலில் திரு. பொன்னப்ப நாடார் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டிற்கே முக்கியமாக இருக்கின்ற பிரச்சினை—ஜீவாதார மாக இருக்கின்ற பிரச்சினை இந்தக் காவேரி பிரச்சினை—இதுபற்றி இந்த மன்றத்தின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்துவிட்டு உடனடி யாக விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தின் அவசியம் என்ன என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு





உறுப்பினர்கள் தம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் நாம் அதுபற்றி ஆர அமர விவாதித்து சரியான முடிவை எடுத்தாக வேண்டிய நிலையில் இருக் கிறோம். இதைக் கட்சிப் பிரச்சினையாக்காமல் இதைத் தமிழகத்தின் பொதுப் பிரச்சினை என்ற முறையில் அணுக வேண்டுமென்று முதன் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"வான் பொய்த்தாலும் தான் பொய்யா காவேரி" என்று நாம் காவேரியின் புகழ்பாடிக் கொண்டிருந்தோம். இந்தக் காவேரி யானது எங்கே பொய்த்துவிடுமோ? பாலாறாக ஆகிவிடுமோ? தஞ்சைமாவட்டம் பாலைவனமாக மாறிவிடுமோ என்று அஞ்ச வேண்டிய துரதிருஷ்டமான நிலைமை உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினைபற்றி கலந்தாலோசிக்க 19—2—75 அன்று சர்வ கட்சித் தலைவர்களது கூட்டத்தை அரசு சார்பில் கூட்டி பல விவரங்களை முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிற்பாடு நடந்த நிகழ்ச்சியின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இது சம்பந்தமாக மைசூர் மாநில சட்ட மன்ற அமைச்சர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பல கருத்துக் களைக் கூறியிருக்கிறார்கள். ஒரு தலைவர் தமிழ் நாட்டில் இருந்துதான் முட்டுக்கட்டையான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அது இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது. Recalcitrant stand taken by Tamil Nadu என்பதாகச் சொல்லியிருக்கிறார். உண்மையில் முட்டுக்கட்டையான முரடான எந்த வாதத்தையும் நாம் வைத்திருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை இந்த மன்றம் உணரும் என்று நினைக் கிறேன். அதுமட்டுமல்ல. இதற்காக ஏற்படுத்தப்பட்ட பாக்ட்ஸ் பைண்டிங் கமிட்டி, படேல் கமிட்டி அறிக்கைகளானது புதைக்கப் பட்டுவிட்டது—பர்ரீடு என்ற வார்த்தையையே உபயோகித்திருக் கிறார். இது சம்பந்தமாக உண்மையான நிலை என்ன என்பதை நாம் அறிந்தால்தான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொன்று பாக்ட்ஸ் பைண்டிங் கமிட்டி ரிப்போர்ட்டானது தமிழ் நாட்டிற்குச் சாதகமாக இருக்கிறது என்பதைப் பலரும் உணர்ந்துதான் இருக்கிறோம். ஒரு சில கருத்துக்கள் ஒருவேளை நமக்குப் பாதகமாக இருந்தாலும் நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு இது ஒரு முக்கியமான பிரச்சினை என்ற அடிப்படையில் நாம் இதை விவாதித்தாக வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 பிப்ரவரி 24

அடுத்த ஒருவாதம் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் 24 ஆம் ஆண்டு ஒப்பந்தம் " லாப்ஸ் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். அந்த ஒப்பந்தத்திலேயே இதுபற்றி 50 ஆண்டுகளுக்குப் பிறகு புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறதே தவிர, 50 ஆண்டுகளுக்குப் பிறகு அது லாப்ஸ் ஆகிவிடும் என்று சொல்லப்படவில்லை. ஆகவே, அந்த வாதத்தையும் சட்டபூர்வமாக நாம் ஏற்பதற்கில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

1924-ம் ஆண்டும் அதற்கு முன்பும் ஏற்பட்ட ஒப்பந்தங்களையும் படிக்கின்ற நேரத்திலே, தமிழகத்திலே காவிரி நீரை எந்த அளவிற்கு பிரயோஜனப்படுத்தி எவ்வளவு பூமியை நாம் கிருஷிக்காகக் கொண்டு வந்தோம் என்ற விவரங்கள் இதிலே இருப்பதை நாம் எல்லோரும் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப் பார்க்கின்ற நேரத்திலே இந்த ஒப்பந்தங்களை நாம் மீறியதாக அவர்கள் கூறுகின்ற வாதம் உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறமுடியும். அவர்கள் சொல்கிற மாதிரி There is no gross violation of the 1924 Agreement ஆதலால், இதைப் பற்றியெல்லாம் நமது அரசாங்கத் தரப்பிலேயிருந்து ஒரு கடுமையான திட்டவட்டமான முடிவை எடுத்தாக வேண்டும்.

அது மட்டுமல்லாமல், இன்னொரு வாதத்தையும் அவர்கள் அங்கு சட்டமன்றத்திலே கூறியிருக்கிறார்கள்.

Tamil Nadu enjoys the lion's share.

முழுமையான தண்ணீரை, அதிகமான தண்ணீரை நாம் உபயோகப்படுத்தியிருக்கிறோம் என்ற ஒரு குற்றச்சாட்டையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அப்பொழுதிருந்த திட்டத்தின் அடிப்படையிலே தஞ்சாவூரிலே இந்துமாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இங்கிருக்கிற நிலத்தையும் அடுத்த ஜில்லாவிலே இருக்கிற நிலத்தையும் சேர்த்து கணக்கெடுத்துப் பார்க்கும்போது, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமையால், தமிழ்நாட்டை இருள் சூழ்ந்திடும் என்ற நிலைமைதான் இருக்கிறது.

இப்பொழுது இருக்கிற ஆயக்கட்டிற்குக் கொடுக்கின்ற தண்ணீரைப் பாதிக்காத வகையிலே, தமிழ் நாடு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். அதற்குக் கர்நாடக அரசாங்கமும், தமிழ்



1975 பிப்ரவரி 24] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நாட்டு அரசாங்கமும், மத்திய அரசாங்கமும், கேரள அரசாங்கமும் ஒத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது 28 லட்சம் ஏக்கர் நிலங்களைத் தமிழ் நாட்டில் பாசனத்திற்காக எடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி, அண்டை மாநிலமான பாண்டிச்சேரியிலே 27 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிக்கையிலேயிருந்து தெரிந்துகொள்கிறோம். ஆகையால், தமிழ் நாட்டிற்கும் பாண்டிச்சேரிக்கும் இருக்கிற உரிமையைப் பறிக்காத முறையிலே நாம் செய்வது தான் பொருத்தமானது என்ற வாதத்தினை மத்திய அரசாங்க அமைச்சரிடம் நமது அரசாங்கத் தரப்பிலேயிருந்து எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வாதங்களெல்லாம் சரியான வகையிலே ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்றால், நம்மை எள்ளி நகையாடக்கூடிய முறையிலே நடத்துகிறார்களோ என்று எண்ணக் கூடிய வகையிலேதான் அவர்கள் செயல் இருக்கிறது. இப்பொழுது நமக்குக் கொடுக்கின்ற தண்ணீரிலே 125 மில்லியன் கியூபிக் கன அடி தண்ணீரை இலாபப்படுத்த வேண்டும். அதை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற விவரமும், அந்த விவாதமும் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. 4 டி.எம்.சி. நமக்கும், 87 டி.எம்.சி. கர்நாடகத்திற்கும், 37 டி.எம்.சி. கேரளாவிற்கும் என்ற வகையில் 125 டி.எம்.சி.யைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற விவரங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், அந்தத் தண்ணீரை நமக்கு எப்படி கொடுப்பது? எங்கு குறைத்துக் கொள்வது? எத்தனை வருஷத்திலே குறைத்துக் கொள்ளவேண்டியது என்ற விவரமெல்லாம் கூறியிருக்கிறார்கள். அத்தண்ணீரை மேட்டூர் பாய்ன்ட்டிலே குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தையும் நமது அரசாங்கத்தரப்பிலேயிருந்து வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இதுதான் நியாயத்திற்கு ஏற்றது என்பதையும் நாமெல்லாரும் உணர வேண்டும்.

அதெல்லாம், முழுமையாகத் தஞ்சாவூரிலேயும், ஏனைய கீழ்ப் பகுதியிலேயும் பெய்கின்ற மழையைக் கணக்கெடுத்து, எங்கேயெல்லாம் விவசாயம் செய்கிறார்களோ, அதையெல்லாம் முறையாகக் கணக்கெடுத்துக் கழித்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் கூறுகின்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலேயுள்ள மக்களை, தஞ்சைத் தரணியிலே நமக்கெல்லாம் சோறு போகின்ற—சோறுடைத்து சோழநாடு என்று சொல்கின்ற பகுதியை—இன்னும் வறட்சியாக ஆக்குவதற்கு இந்தக் காரியங்கள் ஒரு நிலையை உருவாக்கிவிடுமோ என்ற நிலைமை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 பிப்ரவரி 24

இன்று உருவாகியிருக்கிறது. இதிலே மத்திய அரசாங்கமும் சற்று தைரியமாகத் தீர்ப்பினை வழங்கவேண்டும். இப்பொழுது கர்நாடக மாநிலத்திற்கு 500 டி.எம்.சி. கிருஷ்ணா நதி டிரிபியூனல் அவார்டில் கிடைத்திருக்கிறது. அதைக் கூட அவர்கள் பிரயோஜனப்படுத்தி இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு அதிகமான தண்ணீர் அவார்டிலே கிடைத்திருக்கிறது. அப்படி இருக்கும்போது சட்ட மன்றத்திலே அங்குள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கர்நாடக அரசு நமக்கு நீதி வழங்கக் கூடாது என்று தீவிரமாகக் கடுமையான வாதங்களையெல்லாம் கூறிக்கொண்டிருக்கிறார்களே என்று காணும்போது உள்ளபடியே வேதனைப்படுகிறோம்.

இதை ஒரு கட்சிப் பிரச்சினையாகக் கருதக் கூடாது என்று நான் மீண்டும் கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் கடுமையான தீர்ப்பைக் கூறுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிலே அரசியலைப் புகுத்துவது என்று சொன்னால், நிச்சயமாகத் தமிழ் நாட்டிற்குச் செய்கின்ற துரோகச் செயலாக இது இருக்கும் என்ற காரணத்தால், எல்லா பாகங்களையும், பாண்டிச்சேரி பகுதியையும் நியாயமாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று அன்றையதினம் சர்வ கட்சிக் கூட்டம் ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறது. நடுவர் தீர்ப்புக்கு மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருப்பதாக, இந்து பத்திரிகையிலே செய்தி வந்திருப்பதைப் பார்க்கிறோம். உண்மையான நிலைமையை நாமெல்லோரும் நிதானமாகச் சிந்திக்கின்ற நேரத்திலே 125 டி.எம்.சி.யை 15 வருஷத்திலே குறைத்துக்கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரி நியாய உணர்வோடு கூறியிருக்கிற கருத்தினை மத்திய அரசாங்கமும் கர்நாடக அரசாங்கமும் தமிழ்நாட்டு மக்களின், 4½ கோடி மக்களின் பிரச்சினை என்ற அளவிலே ஏற்று நல்ல தீர்ப்பினை வழங்க முற்படவேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், நடுவர் தீர்ப்புக்கு விட சுணக்கம் காட்டாமல் மத்திய அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்கவேண்டும்.

இந்தக் காவிரி நீர் பங்கீட்டில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால் அவற்றையெல்லாம் விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



1975 பிப்ரவரி 24]

* DR. H. V. HANDE : On my adjournment motion I would like to offer a few remarks. I would like to impress upon the Hon. Speaker the necessity to adjourn the business of the House and have the whole House properly discuss the whole thing thoroughly.

Sir, it is known that Tamil Nadu is in a very serious position so far as the supply of water from Cauveri is concerned. Our information is that only yesterday or so, orders have been issued to let out water from Mettur for the withering crops in the Thanjavur delta. After a good deal of deliberation and thinking by the department has thought it fit to let out some water from Mettur to save the withering crops. That is the serious situation in which we are today, with our crops withering for want of water. I do not know whether our friends in Karnataka have realised that by shutting out water to us and by storing it in Kabini, Hemavathi or K. R. Sagar, to what extent it will damage the crop position of Tamil Nadu. Obviously they have not really understood the gravity of the situation. Whether they have been properly briefed, I do not know. Such shutting out of water to us will completely ruin us.

I do not know why they are unfriendly to us. As far as we are concerned, we are a friendly State and we have been maintaining the best of relationships with our neighbouring States and whenever we were able to produce more, we shared our surplus with Karnataka State.

I would like also to tell one important thing to our friends in Karnataka. We have used every inch of water. Let our Karnataka friends realise that one TMC of water let out to Tamil Nadu will fetch three to four times the return it would fetch in Karnataka, in the upper reaches. I do not know whether this point has been made known to the Karnataka Chief Minister and Central Minister by our Honourable Chief Minister. I wish to be enlightened on this point while the Minister is giving his reply. It is a simple thing. One TMC of water in Thanjavur will produce 3 to 4 times more than what the same quantity of water will produce in Karnataka in the upper reaches of Cauvery because of the silt it brings. We have not wasted any

water. When that is the case, how can we economise more in the use of water. It is said that we have agreed to cut some TMCs of water. That means that we may have to reduce the irrigation area of about 22 lakhs of acres by a few lakhs. This point has to be properly explained before the Central Ministers. We should be informed whether this has been told by State Government. We do not know. That is why we have brought in this adjournment motion. Let the Honourable Minister explain the position clearly to us.

During the last Delhi meet, we seem to have tried to have some sort of agreement. There was no proper agreement as such. Our Chief Minister told us that it was scribbled on a piece of paper and shown to the Central Minister. Out of 385 TMC, Tamil Nadu seemed to have agreed to reduce 100 TMC. Originally that was the plan. At the second meeting of the Chief Ministers, we were told that we have to reduce from 325 TMC, taking the average of the past five years even though we pleaded for taking an average of the past 30 years. How it has been reduced from 385 TMC to 325 TMC. I do not know. Did we agree to it? If that is so, we are doomed. Are we not then getting a reduced area of ayacut? Then how did the Honourable Chief Minister give a press statement some time ago that as far as the last agreement in Delhi is concerned, the ayacut area will not be reduced. The Honourable Minister Mr. Madhavan told me when we met accidentally in the Governor's party that the ayacut is not going to be reduced. Now if the quantity of water given to us is reduced it means that we will lose a portion of the ayacut area and that means the whole Tamil Nadu will be ruined. It is a very very serious matter.

Then, again, some years ago, the Honourable late Balasubramaniam of S.S.P. had mentioned and drawn the attention of the Honourable Chief Minister to the proposed construction of a dam in Hemavathi. I do not know whether the Honourable Chief Minister woke up in time then. He was then the Public Works Minister. I wonder if he understood the seriousness of the matter then. I also raised this point a few days ago. If we had taken proper anticipatory measures and if he had made a hue and cry then, perhaps we could have made our point of view felt. Whether we have missed the bus I do not know.



Let us now thrash it out threadbare and discuss in this Assembly. That is why I say we have to discuss this matter at least for a couple of hours in this House.

I do not know whether going to the Tribunal also is worthwhile. What is going to be the result in the Tribunal, even that we cannot guess. Of course, I am quite confident that the Tribunal might be in our favour, for on our side there is justice; we are on the right path. The Tribunal if it is honest, it should give its decision in our favour. But then, there are instances where the Tribunal has given its judgment, but it was flouted by the State concerned. It happened in the matter of Krishna water dispute. Thus we find that even Tribunal is no solution. Therefore, it is my plea that we have to discuss the matter calmly and carefully in this House and find out whether it is advantageous for us to go to the Tribunal or not.

Then another point is in regard to saving of water. The Government originally thought 100 TMC will be saved by our State. Karnataka will save 25 TMC. The total will be 125. The Honourable Speaker will be surprised to know that we are getting out of that 125 TMC only 4 TMC and Karnataka gets 85 TMC and the other 34 TMC goes to Kerala. The funniest thing here is Kerala cannot utilise that water and the excess again goes to Karnataka. This particular aspect, I do not know, whether it was made known at the time of our first agreement. But the Chief Minister had natively accepted it. The 34 TMC for Kerala cannot be utilised by that State, unless the river is diverted westwards. Karnataka is not agreeing to Kerala diverting or changing the course of the river westwards. Thus Karnataka coolly gets 85 plus 34 TMC. That particular point should have been made clear to the Delhi authorities.

Another thing is this. Recently in the Karnataka State Assembly, the Leader of the Opposition belonging to the Organisation Congress party had raised the subject and they have raised a big hue and cry, which we are not competent to discuss here. When they have raised the subject there, why not we be given an opportunity to raise the matter here in our Assembly and attack their stand.

[Dr. H. V. Hande] [1975 பிப்ரவரி 24

The Honourable Speaker knows that we in this House are very well disciplined. But my point is when an opportunity has been given in the Karnataka Assembly for the Organisation Congress to raise it and talk about us and abuse Tamil Nadu, why not we be given an opportunity to say that they have ignored and accused us and flouted the agreement and ignored the welfare of the whole country by accusing Tamil Nadu, since Tamil Nadu is a part of India; otherwise where is the question of integration? ORUMAI PADU, ORUMAI PADU we shout, but they think Tamil Nadu is another country.

Finally, Karnataka says that we are responsible for the breakdown of talks. We want to know whether that is a fact. We want to know whether Karnataka was responsible? What was the discussion that took place originally and what was the discussion in the second meeting and where was the difference of opinion and discrepancy and whether the difference of opinion could not be bridged. All these things will have to be thoroughly and threadbare discussed.

I once again reiterate that the situation is very, very serious and the whole country is going to suffer, for the target of food production is 110 million tons of foodgrains. If there is less production in Tamil Nadu, the whole country will be affected and the target will not be reached. That is a very very important point on which we expect the Honourable Chief Minister to give us some information. Whether he has clearly expressed at the Conference that one TMC utilised in Thanjavur, will give three times more production of rice than the same quantity utilised in the upper reaches should also be told.

With these words, I once again reiterate that the whole thing should be discussed completely and we should be allowed to discuss the subject for a couple of hours. If this is not possible today, it should be done in the course of two or three days, before the discussion on the Governor's Address runs out. We should be given an opportunity to discuss this very very serious matter. Thank you.



1975 பிப்ரவரி 24]

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உயிர்நாடியான ஒரு பெரும் பிரச்சினையை இங்கே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நான் சுருக்கமாகவே பேசுகிறேன். இது மேஜர் இஷ்யூ. கொஞ்சம் விவரமாகப் பேசினாலும் கூட தவறில்லையென்று நினைக்கிறேன். இந்த காவிரி நதி நீர்ப் பிரச்சினைபற்றி அண்மையிலே டெல்லியிலே நடந்த கூட்டத்திலேயே நல்லமுறையிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுவிடும் என்று தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் எதிர்பார்த்தார்கள். அரசியல் தலைவர்கள் எல்லாம் எதிர்பார்த்த ஒன்று. ஆனால் அந்த ஒப்பந்தம் சமரஸமான முறையில் முடிவு பெறாதது ரொம்ப மனதிற்குச் சங்கடமான ஒன்று என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கர்நாடகத்திலே இருக்கிற தலைவர்கள் அமைச்சர்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கின்றவர்கள் சொல்கிற கோரிக்கை, தமிழக அரசு சொல்கிற கோரிக்கை, தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே சொல்லப்படுகிற கோரிக்கை நியாயமற்றது என்ற முறையிலே வாதிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அவர்கள் கருதுவது தவறு. தமிழ்நாட்டிலே காவிரி நீரை இன்றைக்கு நாம் புதிதாகப் பயன்படுத்தவில்லை. வெகு நீண்ட காலமாக, நமக்கெல்லாம் தெரியாத காலத்திற்கு முன்பிருந்தே அந்தத் தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்தி வருகிறோம். நாம் புதிதாக பாசனத்தில் சேர்த்ததைப் பார்க்கும்பொழுது, அதோடு பழைய ஆயக்கட்டுகளைப் பார்க்கும்பொழுது பழைய ஆயக்கட்டுகள் தான் அதிகம். தஞ்சை மாவட்டத்திலே, புதிதாக மேட்டூர் அணை கட்டிய பிறகு உள்ளது இரண்டு அல்லது இரண்டரை லட்சம் ஏக்கர்கள்தான் இருக்கும். ஆனால் அதற்கு முன்பு 10 லட்சம் ஏக்கர் இருந்தது. நாம் மிகவும் அதிகமாக விஸ்தரித்துக்கொண்டு, மைசூர் உபயோகிக்கும் தண்ணீரை நாம் அதிகமாக எடுத்துக்கொண்டதாக அங்கே பேசுவது தவறு. வந்த தண்ணீரை வீணாக்காமல் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர அங்கேயுள்ள தண்ணீரை நாம் அபகரித்துக் கொண்டு வரவில்லை. அப்படிச் சொல்லப்படும் வாதம் தவறு. ஆகவே, நாம் அப்படி அந்த வளர்ச்சியைச் செய்வது, ஆயக்கட்டுகளை விரிவுபடுத்தி தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டு இருப்பது நாட்டினுடைய ஒட்டுமொத்தமான நலனுக்கு, மைசூர் மாநிலத்திற்கும் சேர்த்து பயன்தரக்கூடிய ஒன்றே தவிர வேறல்ல. இவ்வளவு பாசன வசதி ஏற்பட்ட பிறகும் இன்றைக்கு உணவுப் பற்றாக்குறையினால் திண்டாடிக் கொண்டிருக்கிறோம். அப்படி ஒட்டு மொத்தமாக முழு விளைச்சல் வந்தாலும்கூட "மார்ஜினல் சர்ப்ளஸ் ஆகத்தான் நம்முடைய மாநிலம் இருக்கிறதே தவிர

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 பிப்ரவரி 24

ஆந்திர மாநிலத்தைப் போல பெரும் உபரி உள்ள மாநிலமாக இல்லை. இப்பொழுதுள்ள ஆயக்கட்டுகளை வேண்டுமானால் விஸ்தரிக்கக் கூடாது என்று சொல்லலாமே தவிர இருப்பதைக் குறைப்பதற்கான நடவடிக்கையோ அல்லது அவர்கள் சொல்வது மாதிரி நம்முடைய ஆயக்கட்டுகளை குறைத்துக் கொள்வதோ முடியாது. அது தமிழ் நாட்டிற்குத் தீங்கு பயக்கும் ஒன்றாகும்.

நாம் ஆரம்ப காலம் தொட்டே, 1924-இல் ஏற்பட்ட அக்ரிமெண்ட், 1974-க்குப் பிறகு புதிய அக்ரிமெண்டிற்குப் புதிய பரிசிலனை செய்ய வேண்டுமென்ற கருத்து வந்தபொழுது தமிழக அரசைப் பொறுத்தவரையில், சர்வ கட்சியைப் பொறுத்தவரையில் நாம் ஒத்துக்கொண்டது என்னவென்றால், கபினியிலும், மற்றவைகளிலும் அணை கட்டும்பொழுது, அணை கட்டுவதை நாங்கள் முழுவதும் ஆட்சேபிக்கவில்லை, ஆனால் எங்களுக்கு வரும் தண்ணீருக்கு உத்தரவாதம் வேண்டும், எங்களுக்கு இருக்கக்கூடிய ஆயக்கட்டுகளுக்கு தண்ணீருக்கு உத்தரவாதம் கொடுத்து உபரி நீரை நீங்கள் பயன்படுத்திக் கொள்வதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றுதான் கூறினோம். மைசூர் மக்களும் வாழவேண்டும், அங்கேயும் அபிவிருத்தியடைய வேண்டும், அங்கேயும் உணவு உற்பத்தியாக வேண்டும் என்ற கருத்துக்கு நாம் மாறுபடவில்லை. ஆனால் தமிழ்நாட்டிலே உள்ள ஆயக்கட்டுகளைக் குறைத்து விளைச்சலைக் குறைப்பது சரியல்ல.

ஒட்டுமொத்தமாக நாடு ஒன்று என்ற நிலையில் பார்க்கும்பொழுது, பெரிய நாட்டிற்கு நஷ்டம் என்ற கண்ணோட்டத்தில் அதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுதும், நமது சர்க்கார் தரப்பிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாம் ஓரளவிற்கு இன்றைக்கு உபயோகித்து வரும் தண்ணீரில் 20 சதவிகிதம் தண்ணீரைக் குறைத்துக் கொள்ளக்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன செய்ய முடியும் நாம்? இதைக் குறைத்துக் கொள்வதைக் கூட உடனடியாகச் செய்ய முடியாது. வாய்க்கால்களை நவீனப் படுத்த செய்து இந்தத் தண்ணீரைக் குறைத்துப் பயன்படுத்துவதற்கான முயற்சியைப் படிப்படியாகச் செய்து குறைக்க முன் வர வேண்டுமே தவிர உடனடியாகச் செய்வதால் பெரும் விபரீதம் தமிழ்நாட்டில் ஏற்படும். இவ்வளவு விட்டுக் கொடுத்த பிறகும் எந்தச் சமாதானத்தையும், சமரசத்தையும் ஏற்படுத்த் முடியவில்லையென்றால் அது தமிழ்நாடு தரப்பிலுள்ள



1975 பிப்ரவரி 24] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தவறான கொள்கை அல்ல. அது மைசூர் மாநிலத்தின் மாறுபாடான கருத்து, நாம் வெகு நீண்ட காலமாக அனுபவித்துக் கொண்டு வந்ததை மறுத்ததன் விளைவு இதை ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் கருதுகிறேன்.

ஆகவே, மத்திய அரசு இதற்கு வேண்டிய முயற்சியை எடுத்தும் இது முடியவில்லை என்பது மிகவும் சங்கடத்திற்குரிய ஒன்று. கடைசிக் கட்டமாக நம்முடைய கோரிக்கையை, நம்முடைய நியாயத்தை வலியுறுத்த டிரிப்யூனலுக்கு அனுப்புங்கள் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. இருந்தாலும் மத்திய அரசு இன்னும் முயற்சிக்கலாம் என்று பேச்சு வார்த்தை மூலமாக இதற்கு மத்திய அரசு முயற்சியெடுத்தால் தமிழ்நாட்டிலேயிருக்கும் நாம் அதற்கு ஒத்துக்கொண்டு பேச்சு வார்த்தைக்குப் போகத் தயங்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து. பத்திரிகையிலே, மறுபடியும்கூட மத்திய அரசு முயற்சிக்கலாம் என்ற கருத்துகூட வந்திருக்கிறது. அப்படி முயற்சித்தால் அந்தப் பேச்சு வார்த்தைகளுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எந்தவகையிலேயும் இது அரசியல் பிரச்சினை அல்ல. தமிழகத்து மக்களின் ஒட்டுமொத்தமான பிரச்சினை. அரசியல் கருத்து மாறுபாடில்லாமல் நாமெல்லாம் சேர்ந்து, நமக்கிருக்கும் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். கர்நாடக அரசுக்கும், மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன், உங்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி வெற்றி பெற எடுக்கின்ற முயற்சியல்ல அது, அத்தகைய தவறான கருத்தைத் தயவு செய்து நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே இதுவரையிலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சி எங்களுடைய தேவைக்கு அதிகமானது அல்ல, தேவைக்கு உட்பட்டதுதான், அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள நாங்களே உற்பத்தி செய்து கொள்வதற்கான வழிவகைகளைக்காண நீங்கள் உடன்பட்டு தண்ணீர் வழங்குவதற்கு ஒத்துக்கொண்டு, சமரசமாக இதைத் தீர்த்துக்கொள்ள மைசூர் அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, அப்படி ஒத்துவரவில்லை, சமரசம் இல்லையென்றால் இதை ட்ரிப்யூனலுக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்து, இதை ட்ரிப்யூனலுக்கு விட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, அதேசமயத்தில் மத்திய அரசு மறுபடியும் சமரசமாகப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்க்க

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை விவாதிப்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகரவர்களே, இந்த காவிரி நீர்ப்பங்கீடு சம்பந்தமாக இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்ததன் நோக்கத்தை நான் விளக்கிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

சர்வ கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை முதலமைச்சரவர்கள் கூட்டிய சமயத்தில் இந்தப் பிரச்சினையை ட்ரிப்யூனலுக்கு விட்டு விட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கும் அனுப்பியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில், நாடாளுமன்றத்தில் இருக்கும் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களும் பிரதமர் அவர்களையும், ஜனாதிபதி அவர்களையும், திரு. ஜெகஜீவன்ராம் அவர்களையும் சந்தித்து இதை ட்ரிப்யூனலுக்குச் சீக்கிரம் விட வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்ற கருத்தும் இருந்தது. இப்பொழுது அந்த நிலைதான் உண்மையிலேயே நான் சார்ந்திருக்கும் கட்சியின் நிலையும் இந்த ஆற்று நீரைப் பிரித்துக் கொள்வது சம்பந்தமாக வரும் டிஸ்ப்யூட்டில் அகில இந்தியக் கட்சியாக இருப்பவை இரண்டு குரலில் பேசக் கூடாது. அப்படிப் பேசாமல் இருப்பதற்கு அந்தந்தக் கட்சிகளுக்கு அவர்கள் வேண்டுகோள் விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் கர்நாடகத்தில் விடவே மாட்டோம் என்று ஒரு கட்சி சொல்லும்பொழுது அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் அதற்கு மாறாக இங்கே வேகமாகப் பேசுகிறார்கள், அப்படிப் பேசும்பொழுது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது நான் சார்ந்திருக்கும் கட்சியைப் பொறுத்தவரையில் இதிலே ஒரே குரலில் நாங்கள் பேசிக்கொண்டு இருக்கிறோம், பேசுவோம் என்று நான் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த ட்ரிப்யூனல் வேண்டுமென்ற கருத்தை கேரளாவில் எங்கள் கட்சியின் சார்பில் முதலமைச்சர் அச்சுதமேனன் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களை நாங்கள் கலந்து கேட்ட நேரத்தில் பேச்சு வார்த்தை நடந்த ஒவ்வொரு முறையும் சில தவறான பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ட்ரிப்யூனலுக்குவிட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். ஆனால் அதே



நேரத்தில் இதற்குண்டான பேச்சுவார்த்தை மூலமாக இதை முடிப்பது என்பது சிறந்ததாக இருக்கும். அந்த முறையிலே இன்றைக்கு மத்திய அரசு நாங்கள் பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவங்கத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்வார்களேயானால் அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

அந்த நேரத்தில் நான் ஒரு கருத்தை ஆரம்பத்திலிருந்தே, கடந்த நான்கைந்து மாதங்களாக வலியுறுத்தி வருகிறேன். புதுச்சேரி தனி இராஜ்யமாக இருக்கிறது. அந்தப் புதுச்சேரிக்கும் 27,000 ஏக்கர் ஆயக்கட்டு இருக்கிறது. அந்த ஆயக்கட்டுகளும் பாதுகாக்கப்பட வேண்டும். கேரளாவைப் பொறுத்தவரையில் நமக்கு விரோதம் இல்லை. அவர்களது ஆயக்கட்டு கம்மியானாலும் இன்றைக்கு கேரள அரசும், கர்நாடக அரசும், தமிழக அரசும் பேச்சு வார்த்தை நடத்துவது மாதிரி, மத்திய அரசு நாளைக்கு பேச்சு வார்த்தைக்கு கூப்பிட்டால், நம்முடைய சார்பிலே புதுவை இராஜ்யத்தின் பிரதிநிதியும் வர வேண்டுமென்று கேட்க வேண்டும். அப்படிக் கேட்கும்பொழுது தான் கிட்டத்தட்ட எல்லா இராஜ்யங்களுக்கும் நியாயம் வழங்கப் பட்டது என்ற நிலை ஏற்படும். அதில் கவனம் தேவை.

இன்றைக்கிருக்கும் தண்ணீரெல்லாம், பொதுவாக இன்றைக்கல்ல, கடந்த இருபதாண்டுக்காலமாக நல்லமுறையில், சேதம் இல்லாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு. அது நம் தவறு அல்ல. வேறு முறையிலே தண்ணீர் கிடைக்கவில்லை. கிடைக்கும் தண்ணீரைப் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்கிறோம், சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்கிறோம். ஆகவேதான் எல்லாக் கட்சிகளின் சார்பில், நாம்கூட இனிமேல் உபயோகிக்கும் தண்ணீரைக் குறைத்துக் கொள்கிறோம், டெக்னிகல் டெர்ம்ஸ்படி 100 டி.எம்.சி. அதை 15 ஆண்டுக்காலத்தில் குறைத்துக் கொள்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

[முற்பகல் 11-30]

அந்த வாக்குறுதியிலே உறுதியாக நிற்பதுதான் கர்நாடகத்திலே இருக்கக்கூடிய அவர்களுக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும். அந்த வாக்குறுதியிலே நிற்கும்போது நாம் மாடர்னைசேஷன் செய்ய எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவு பணத்தையும் கொடுத்து உதவ வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மாடர்னைசேஷன் செய்ய இவ்வளவு தொகை தேவை என்று கேட்டு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 பிப்ரவரி 24

வேகமாக ஆரம்பிப்போமானால் 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கூட செய்துவிட முடியும். கர்நாடக மாநிலத்திற்கு இன்றைக்கு ஓரளவு ஆந்திர மாநிலம் உதவி செய்கிறது. அதற்கு அவர்களுடைய மாடர்னைசேஷன் பிராசஸ் என்ன? அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அந்த மாநில அரசுதான் பொறுப்பு. ஆந்திர அரசு கர்நாடகத்தைப் பார்த்து அதற்கு சீக்கிரமாக வழி பாருங்கள் என்று சொல்ல முடியும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை—

A river must be treated as a unit.

என்பதுதான்.

எங்கள் மாநிலத்தில் உற்பத்தியாவதால் எங்களுக்கு அதிகமாகப் பங்கு என்ற கருத்தோட்டம் கூடாது. அதுதான் சோஷலிஸ்ட் நாடுகள் பூராவும் இருக்கக்கூடிய நிலை. அந்த வகையில்தான் சைனாவில் இந்தப் பெரிய பிரச்சினையைத் தீர்த்தார்கள். இதிலே எல்லோரும் ஒத்துக்கொண்டால் நல்லது. அந்தக் கருத்து தமிழக அரசுக்குக் கொஞ்சம் சரி என்று படக்கூடிய அளவுக்கு வந்தால் நல்லது. அதிலே கொஞ்சம் ரிசர்வேஷன் இருக்கிறது. அப்படி சிக்கல் இல்லாத முறையில் தீர்த்துவைக்க முடியும். எங்கு இப்படிப் பிரச்சினை வந்தாலும் ஒரே குரலில் நிற்கவேண்டும்.

உதாரணமாக, சென்னை நகரத்தைத் தமிழகத்தின் தலைநகரமாக்க வேண்டுமென்ற பிரச்சினையில் ஆந்திராவில் பல கட்சியினரும் ஆந்திராவின் சார்பில் பேசிய நேரத்தில் எங்கள் கட்சியினர் ஆந்திராவிலும் தமிழகத்திலும் ஒரே குரலில் பேசினார்கள். இன்றைக்குக் கர்நாடகத்தில் இருப்பவர்கள் எங்கள் கட்சியினரிடத்தில் சொல்லுகிறார்கள்—நாங்கள் பாதிக்கப்பட்ட மாநிலமாக இருக்கிறோம். இந்தப் பக்கத்தில் தமிழ்நாடு ஜவான் மாதிரி இருக்கிறது; அந்தப் பக்கம் ஆந்திரா; இன்னொரு பக்கம் மகராஷ்டிரா; ஆகவே, நீங்கள் எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்கள் கூட "உங்களை ஏமாற்ற வேண்டுமென்ற முறையில் தமிழக அரசு அணுகவில்லை; நாங்கள் பஞ்சப்பட்டு உள்ளவர்கள், எங்கள் மாநிலத்தில் ஒரு நதி கூட உற்பத்தியாகவில்லை; அது நாங்கள் செய்த பாவம், நாங்கள் செய்த தவறு அல்ல" என்று சொல்லியிருக்கிறோம்.



1975 பிப்ரவரி 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நாங்கள் ரைப்பேரியன் ரைட்ஸ் என்று கூடக் கேட்கவில்லை; எங்களுக்கு இருக்கக்கூடிய ஆயக்கட்டுகள் பாதிக்கப்படக்கூடாது என்றுதான் சொல்லுகிறோம் என்று சொன்னோம். தமிழக அரசு சார்பில் நல்ல அறிக்கையை விட்டார்கள். சர்வ கட்சிக் கூட்டத்தில் பேசிய விஷயங்களை வெளியே சொல்லுவது சரியாக இருக்காது. அந்த முறையில் நாம் ரெஸ்ட்ரெயின்ட் ஆக இருந்தும் கர்நாடகத்தில் அங்கே நடந்த கூட்டத்தில் நடந்தது வெளியே வரக்கூடிய அளவுக்கு மீறப்பட்டுவிட்ட நேரத்தில் நம்முடைய நிலையைக் கொஞ்சம் தெளிவு படுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை தமிழக அரசிடம் இருக்கிற குறையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழக அரசின்மீது உள்ள குறையைச் சுட்டிக்காட்டவில்லை என்றால் இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷன் வருவதற்கே இடம் இல்லை.

for an adjournment motion to be moved there must be some failure on the part of Government. Otherwise there would not be any criterion for an adjournment motion.

அந்த முறையில் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த அளவுக்கு விவாதிக்க சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். நாங்கள் சொன்ன காரணங்களை மனதில் வைத்து அரசாங்கத்தின் சார்பில் பதில் வந்தால் உதவிகரமாக இருக்கும். அப்படிப் பதில் சொல்லாமல் சமாதானம் சொல்ல வேண்டுமென்ற முறையில் பதில் இருந்தால் இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பது உதவிகரமாக இருக்குமென்று கூறி அமருகிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இன்றையதினம் காவிரி நதி நீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் சர்வ கட்சி கூடி ஒரு முடிவு எடுத்த பிறகு அது தமிழ்நாட்டுப் பிரச்சினையாகவே கிளப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தமிழகத்தில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல் இந்தியாவில் இருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள். இது ஒரு தேசியப் பிரச்சினையாகும்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் உணவு உற்பத்தி செய்கிறார்கள் என்றால் தமிழகத்திற்குப் போக உபரி உணவை இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மக்களுக்குக் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள். இதை ஒரு தேசியப் பிரச்சினையாகப் பார்க்காமல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட 1924-ம் ஆண்டு

ஏற்பட்ட ஒப்பந்தத்தை வைத்து மட்டும் பார்ப்பது பத்தாம்பசலி வாதமாக இருக்கிறது. எவ்வளவோ ஒப்பந்தங்கள், முடிவுகள் மாறு கின்றன. அரசியல் சட்டமே திருத்தப்படுகிறது. அந்த முறையில் ஒப்பந்தத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பேசிக் கொண் டிருப்பதால் ஒரு ராஜ்யத்தின் மக்களைப் பாதிக்கக்கூடியதாக இருக் கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

கபினி, ஹேமாவதி கிளை நதிகளில் அணை கட்ட மத்திய அரசு அனுமதித்திருக்கக்கூடாது. ஆரம்ப முதலே தமிழகத்தில் இருக்கக் கூடியவர்களும் தமிழக அரசும் அதை எதிர்த்துக் கொண்டு வந்திருக் கிறார்கள். அந்தச் சமயத்தில் வழக்குத் தொடருகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு "நாங்கள் முறையாகப் பைசல் செய்துவைக்கிறோம்" என்று மத்திய அரசு வாக்குறுதி கொடுத்ததன் காரணமாக வழக்குத் தொடராமல் நிறுத்தப்பட்டது.

இப்போது மேட்டூர் பாசனம் பாழடைகின்ற அளவுக்கு நிலைமை கள் மோசமாகியிருக்கின்றன. ஒரு பெரிய குற்றச்சாட்டை கர்நாடக மாநில அமைச்சர் தமிழக அரசு மீது சுமத்தியிருக்கிறார். ஒப்பந் தத்தை மீறி 4,97,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தத் தண்ணீர் முழுவதும் வீணாகக் கடலில் சென்று விழுந்து கொண்டிருந்ததைப் புத்திசாலித் தனமாகப் பயன்படுத்தி ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவருகிறார்கள். அப்படித் தண்ணீரைப் பயன்படுத்தி உணவு உற்பத்தி செய்வது என்பது இந்தியாவில் இருக்கும் எல்லா மக்களுக்கும் நன்மை தரக்கூடியது. அதை ஒரு குற்றச்சாட்டாகச் சுமத்துவது பொருத்தமல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இம்மாதிரியாக நடைமுறைக்கு விரோதமாக, நியாயத் திற்கு விரோதமாக, இந்தியாவில் இருக்கக்கூடிய மக்களுக்கு விரோத மாக ஒரு மாநிலத்தில் இருக்கக்கூடிய அரசு தவறு செய்கிறது என்றால் தக்க காலத்தில் இதிலே தலையிட்டு தீர்த்து வைக்கக்கூடிய பொறுப்பு மத்தியில் ஏகபோகமாக ஆண்டு கொண்டிருக்கும் மத்திய அரசுக்கு ஏற்பட்டாகவேண்டும். இப்படி மாற்றாந்தாய் மனப்பான்மை யோடு நடந்து கொள்வதன் காரணமாக தமிழகத்தில் இருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலை நீடிக்குமானால் தஞ்சையில் இருப்பவர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள்.



தஞ்சையில் இருக்கக்கூடிய நிலங்கள் அவ்வளவும் விவசாய நிலங்கள். "சோழநாடு சோறுடைத்து" என்ற பெயரைப் பெற்றது தஞ்சை. தஞ்சை மக்கள் அதிகமான உணவு உற்பத்தி செய்து நம் முடைய மாநில மக்களுக்கு மட்டுமல்லாது மற்ற மாநிலங்களுக்கும் உதவி செய்து வருகிறார்கள். இந்த மக்கள் பெரிய அளவு பாதிக்கப் படக்கூடிய அளவுக்கு நிலைமை நீடித்துக்கொண்டு போக விடக் கூடாது. இதைப் பற்றித் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டுமென் பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறேன். தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்று சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்க அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவர் அவர்களே, நாட்டிலே மிக முக்கியமாகப் பேசப்படுகிற அதிமுக்கியமான பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்து அதன் மூலம் சில கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள். காவிரி நீர்ப் பிரச்[illegible]த்தமட்டில் கண்ணாடிப் பாத்திரம் போல் மிகவும் [illegible]ளப்பட வேண்டிய ஒன்று என்று கருதி தமி[illegible] அரசு இதுவரை[illegible]—ஏன், இனிமேலும் கூட மிகவும் எச்சரி[illegible]கவே இருக்குமென்[illegible]றுதி கூறுகிறேன்.

கர்நாடக மாநிலத்திலும் கே[illegible] மாநிலத்திலும் அவ்வ[illegible]ாது நதி நீர்ப் பங்கீட்டைப் பற்றி அ[illegible]நில அவைகளிலே [illegible]ல்லது மாநிலத்திலுள்ள வேறு பல பகு[illegible]லே அமைச்சர்[illegible] பேசும் போது கருத்துக்களை விளக்கியிருக்கும் பல செய்[illegible]கைகளில் வெளி வந்திருக்கின்றன. அத்தகைய செய்[illegible]ந்த நேரத்தில் எல்லாம் நம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாமா என்று முதல்வர் அவர்களைக் கேட்டபோது "நாம் அதைப் பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் இருப்பது, மேலும் இதைச் சிக்கலாக்காமல் இருப்பது நல்லது" என்று எடுத்துக்கூறி அது பற்றி எந்தக் கருத்தும் கூற வேண்டாம். அறிக்கை விட வேண்டாம். அப்படியே இருக்கட்டும் என்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

ஆனால், துர்ப்பாக்யவசமாக மேலும் சிக்கலாக்கும் வகையில் பல பிரச்சினைகள் கிளப்பப்பட்டு விட்டன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நாங்கள் பல விஷயங்களை, டெல்லியிலே பேசிய பல செய்தி களை முழுமையாகப் பத்திரிக்கைகளுக்கு தந்து, அதன் மூலம் மேலும்

[திரு. ப. உ. சண்முகம்] [1975 பிப்ரவரி 24

ஒரு கடுமையான சிக்கலை உருவாக்கி, அதன் காரணமாக காவிரி நதி நீர் பங்கீட்டு ஒப்பந்தம் முறிந்து விடக்கூடாது என்று பயந்தோம். ஆனால் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து கருத்துக்களை முழுமையாக தெரிவித்து இருக்கிறோம். அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்கள் இருவரையும்—பெரியவர் பக்தவத்சலத்தையும், மதிப்பிற்குரிய காமராஜரையும்—சந்தித்து அனைத்தையும் கூறி, தமிழக அரசின் நிலையையும் விளக்கியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் அங்கத்தினர்கள் கோருகிற நியாயமான கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிற காரணத்தால், அதைப் பற்றி மட்டும் தெரிவித்து விட நினைக்கிறேன்.

1924 ஆம் ஆண்டு இந்தக் காவிரி நதி நீர் பங்கீடு குறித்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு ரத்தாகி விட்டது, காலாவதி ஆகிவிட்டது என்று கர்நாடக மாநிலத்தினர் கூறுகின்றனர். அந்த ஒப்பந்தத்தில் இருக்கும் ஷரத்துப்படி, அந்த ஒப்பந்தத்தின்படி மீதமுள்ள சர்ப்ளஸ் வாட்டரை, அதிகப்படியான தண்ணீரைத்தான் எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது பற்றி 1974 ஆம் ஆண்டு பேசி முடிவு எடுக்கவேண்டுமென்று இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. ஆகவே, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று சொல்வது நியாயம் அற்றது, முறையற்றது, சட்டப்படி சரியானது அல்ல என்பது நம்முடைய வாதம். அந்த வாதத்தை அவர்களும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி—கிருஷ்ணராஜசாகரில் 2,500 கியூசெக்ஸ் தண்ணீர் வந்தால்—முழுமையாக தமிழ் நாட்டிற்கு திறந்து விடவேண்டும். 2,500-க்கு மேல் 60,000 கியூசெக்ஸ் தண்ணீர் வந்தால், ஒரு சிலாப் வழி வைத்து, இவ்வளவு தமிழ் நாட்டிற்கு கொடுக்க வேண்டும், மீதம் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று வைத்து இருக்கிறார்கள். 60,000 கியூசெக்ஸ்க்கு மேல் தண்ணீர் வந்தால் அவர்களே முழுமையாக வைத்துக்கொள்ளலாம் என்று 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலே இருக்கிறது.



1975 பிப்ரவரி 24] [திரு. ப. உ. சண்முகம்]

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலேயே இன்னும் சில அணைகள்—கபினி, ஹேமாவதி, ஹேரங்கி—ஆகியவற்றிலும்—கட்டிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மெயின் ஸ்டீரிமில் கட்டப்படும் அணைகளில் 32 டி.எம்.சி. நீர் பிடித்துக்கொள்ளலாம் என்று ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. கபினியில் கட்டப்படும் அணையில் 19.2 டி.எம்.சி. நீர் பிடித்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கபினி, ஹேரங்கி, ஹேமாவதி, ஸ்வர்ணமுகி ஆகியவற்றில் அணைகள் கட்டுவதற்கு தமிழ் நாட்டின் அனுமதி பெற்று அவர்கள் செய்யவேண்டும். பவானி அமராவதி ஆகிய திட்டங்களுக்கு நாம் எந்த அளவுக்கு தண்ணீரைப் பயன்படுத்துகிறோமோ—அதாவது 100 பங்கு தண்ணீர் நாம் பயன்படுத்தினால் அவர்கள் 60 சதவிகிதம் தண்ணீர் பிடித்துக்கொள்கிற வகையில் டாம் கட்டிக்கொள்ளலாம் என்று ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆகவே, அவர்கள் அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்று சொல்வது சரியல்ல.

அவர்கள் கட்டியிருக்கும் அணைகள்—ஹேமாவதி ஆரம்பித்து இருக்கிறார்கள், ஸ்வர்ணமுகி பாதியில் இருக்கிறது. ஹேரங்கி, கபினி கட்டி முடித்தாகிவிட்டது—நான் இரண்டைப் பார்வையிட்டேன். மற்ற இரண்டு அணைகளைப் பார்க்கவில்லை.

நான் முதலில் சொல்ல விரும்புவது, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி அவர்கள் தமிழ்நாட்டின் கன்சன்ட் பெற்றுத்தான் அணைகளைக் கட்டவேண்டும். அவர்கள் அணை கட்டுவதற்கான டிசைன் போட்டு, நமக்கு அனுப்பி நம் அனுமதி பெற்றுத்தான் கட்டவேண்டும். இருந்தாலுங்கூட, அதை நாம் வலியுறுத்தவில்லை. நாம் வலியுறுத்துவது எல்லாம் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடவேண்டும், தண்ணீரை எப்படி ஒழுங்கமுறைப்படுத்த வேண்டுமென்று இருக்கவேண்டும், நாம் சாத்தனூர், கிருஷ்ணகிரி ஆகியவற்றில் அணைகள் கட்டியிருக்கிறோம். அவைகள் தமிழ் நாட்டிற்குள்ளேயே இருப்பவை. இருந்த போதிலும், நாம் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன் வைத்து இருக்கிறோம். ஆகவே, இரண்டு மூன்று மாநிலங்களை இணைக்கும் ஆறுகளிடையே அணைகள் கட்டும்போது, ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன் இருக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துவதை எந்த அரசும் மறுத்து விட முடியாது. இது தான் உண்மையான நிலைமை.

[திரு. ப. உ. சண்முகம்] [1975 பிப்ரவரி 24

7—9—1967 ஆம் நாளன்று இரண்டு மாலத்தின் தலைமைப் பொறியாளர்களும்—கருநாடகத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர், தமிழகத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர்—சேர்ந்து, சென்டிரல் பவர் அண்டு வாட்டர் கமிஷன் அவர்களுடைய தலைமையில் உட்கார்ந்து பேசும்போது, ஹேமாவதி பற்றிப் பேசினார்கள். ஹேமாவதியில் அணை கட்டிக்கொள்ளலாம். ஆனால் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போட வேண்டும் என்று நாம் சொன்னோம். அவர்களும் ஒப்புக்கொண்டு, இரண்டு தலைமைப் பொறியாளர்களும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் என் கையில் இருக்கிறது. 27—10—1967-ல் கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள முடியாது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டில் முடியப் போகிறது, அது சாகப்போகிறது, ஆகவே, அதற்கு காரண்டியாக இருக்க மாட்டேன் என்று சொன்னார்கள்.

இதற்கிடையில் அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். வேறு வழி இல்லாத காரணத்தால் 1971 ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுங்கள் என்று கேட்டோம். அணை கட்டுவதை தடுத்து நிறுத்த இடைக்காலத் தடை கொடுங்கள் என்று நாம் சுப்ரீம் கோர்ட்டிடம் கேட்டோம். இடைக்காலத் தடை உத்தரவைக் கேட்டபோது, அவர்கள் அணை கட்டுவதால் தமிழ் நாட்டிற்கு எந்தவிதமான பாதகமும் இப்போது இல்லை, பாதகம் ஏற்படுகிறபோது ஸ்டே கொடுக்கிறோம் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது. அதற்குக் காரணம் கூட, கருநாடக மாநிலம் "நாங்கள் இப்போது பாதி அணை கட்டிக் கொண்டிருக்கிறோம். இப்போது ஸ்டே கொடுத்து விட்டால் கோடிக்கணக்கான பணம் பாழாகி விடும். விலைவாசிகள் ஏறிவருகிற காரணத்தால் பின்னால் எங்களுக்கு ஏராளமாகச் செலவு ஆகும். காண்டிராக்ட் ஏற்பாடு செய்து இருக்கிறோம். அதனால் சில சிக்கல்கள் வரும். தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் பாதிக்கப்படுவார்கள், ஆகவே அணையைக் கட்டி முடித்து விடுகிறோம்" என்று சொன்னார்கள். அதன் காரணமாக, தமிழ் நாட்டிற்கு பாதகம் ஏற்பட்டால் வாருங்கள் என்று நாம் கேட்ட தடை உத்தரவு விண்ணப்பத்தை சுப்ரீம் கோர்ட் தள்ளி விட்டார்கள். சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு, நாம் மத்திய அரசை இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்.



1975 பிப்ரவரி 24] [திரு. ப. உ. சண்முகம்]

அந்த நேரத்தில் இந்தியப் பிரதம மந்திரி அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து இருந்தார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களைச் சந்தித்தார்கள். நீங்கள் ஏன் நீதி மன்றத்திற்குச் செல்லவேண்டும், நான் மூன்று முதலமைச்சர்களையும் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி பிரதமர் டெல்லிக்கு வரச் சொன்னார்கள். டெல்லிக்குச் சென்றோம். டெல்லிக்குச் சென்று மூன்று முதலமைச்சர்களும் பேசினோம். 29, 30, 31—5—1972 ஆகிய மூன்று நாட்கள் டெல்லியில் உட்கார்ந்து பேசினோம். பேசி என்ன முடிவு எடுத்தார்கள் என்றால், வழக்கை வாபஸ் பெறுவது; ஒரு பாக்ட் பைண்டிங் கமிட்டி நியமிப்பது என்று சொல்லி, அந்த மாதிரி ஒரு கமிட்டியை மத்திய அரசாங்கம் நியமித்தது. என்ன உண்மை நிலை என்பதைக் கண்டறிய இந்தக் குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. மீண்டும் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் கருநாடகம் என்ன தெரிவித்தது என்றால், தமிழ் நாட்டில் 566 டி.எம்.சி. நீர் உபயோகிப்பதாகச் சொல்கிறார்கள். இது உண்மை தானா? 28 லட்சம் ஏக்கர் தமிழ் நாட்டில் பயிர் வைப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது மிகைப்படுத்திச் சொல்கிறார்கள். உண்மை நிலை என்ன என்பது தெரிய வேண்டுமென்பதற்காக இந்த பாக்ட் பைண்டிங் கமிட்டி ஒவ்வொரு மாநிலத்திற்கும் போய் உண்மையை அறிய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக ஒத்துக்கொண்டு, அந்தக் குழு திரும்பி வந்து, எல்லா மாநிலத்தையும் பார்வையிட்டது. நம்முடைய அலுவலகத்திற்கும் வந்து ரிக்கார்டுகளையெல்லாம் பார்த்தார்கள். ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று பார்த்தார்கள். நாம் கொடுத்து இருக்கும் புள்ளி விவரம் சரியான புள்ளி விவரம் என்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மீண்டும் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.

அப்போது என்ன சொல்லப்பட்டது என்றால், தமிழ்நாட்டில் லோயர் அணைக்கட்டுக்குக் கீழே கொள்ளிடத்தில் 90 டி.எம்.சி. நீர் வீணாகப் போகிறது. அதை தமிழகம் நல்ல முறையில் பயன்படுத்தலாம் என்று குற்றம் சாட்டினார்கள். நாம் சொன்னோம், அந்தத் தண்ணீரை ஒன்றுமே செய்யமுடியாது, குறுவை அறுவடையாகும் போது வருகிறது. கீழே தேக்கி வைப்பதற்கு எங்களுக்கு வழியே இல்லை. தேக்கி வைக்க முடியாது. மேலும் வீணாவது 90 டி.எம்.சி. அல்ல. ஏறக்குறைய 45–50 டி.எம்.சி. தான் இருக்கும். அதுவும் ஏதோ

ஒரு முறை வந்து போகிறது என்று தெரிவித்தோம். உண்மை நிலை என்ன என்று பார்க்கவேண்டுமென்று வந்தார்கள். பார்த்து விட்டுப் போய் உண்மை அதுதான் என்று ஒப்புக்கொண்டார்கள்.

அதற்கு முன்பு மத்திய அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் கடைசியாகக் கூடிய கூட்டத்தில் தனக்கு ஆலோசனை சொல்வதற்காக திரு. படேல் என்ற அடிஷனல் செக்ரிடரியை நியமித்து, தனக்கு ஆலோசனை கூறச் சொன்னார்கள். ஏனெனில் பாக்ட் பைன்டிங் கமிட்டி கொடுத்து இருக்கும் அறிக்கையில் காவிரி நீர் முழுவதும் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. எந்தெந்த மாநிலம் எவ்வளவு தண்ணீரை மிச்சப்படுத்த முடியும், மிச்சப்படுத்துகிற தண்ணீரை யார் யாருக்கு எப்படிப் பிரிக்கலாம் என்று அரசுக்கு ஆலோசனை சொல்லுங்கள் என்று திருவாளர் பட்டேலை திரு. கே. எல். ராவ் அவர்கள் நியமித்தார்கள். அவர்கள் இப்பொழுது அமைச்சர் அவையிலிருந்து விலகி விட்டார்கள்.

அதற்குப் பிறகு திரு. கே. ஸி. பந்த் அவர்கள் அமைச்சர் ஆனார்கள். இங்கு வந்து மாநாடு போட்டார்கள். தென் மாநில மூன்று முதல் அமைச்சர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதாவது "அண்டர் கிரௌண்ட் வாட்டர்", பூமிக்கு அடியிலுள்ள தண்ணிரை பயன்படுத்தக் கூடாதா என்று கேட்டார்கள். பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்துவது என்பது சாத்தியமல்ல. அப்படிப் பயன்படுத்த முடியாது. இப்பொழுது இந்த ஆண்டு பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரை எடுத்துக் கொண்டுவிட்டால், அடுத்த ஆண்டு காவிரியில் தண்ணீர் வரும்பொழுது, வருகிற தண்ணீர் முதலில் பூமிக்கு அடியில் ஊற ஆரம்பித்துவிடும். ஆகவே முழு அளவு தண்ணீரும் ரீச் ஆகாது. எடுக்கிற அளவு "ரீசார்ஜிங்" பூமிக்கு அடியிலே போய்விடும் என்றெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே, பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்த முடியாது என்று எடுத்துச் சொன்னோம். அவர்களும் ஒத்துக்கொண்டார்கள்.

பிறகு டெல்லி சென்றார்கள். மீண்டும் எங்களை டெல்லியில் சந்தித்தார்கள். அவர்கள் டெல்லி சேர்ந்ததும் இப்பொழுது ஜகஜீவன்ராம் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு உட்கார்ந்து பேசும்பொழுது, கடைசியாக நடந்த இரண்டு கூட்டங்கள்தான் சிக்கலான கூட்டங்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முதலில் நடைபெற்ற





கூட்டத்தில் அன்று ஒரு கொள்கையை அறிவித்தார். காவேரி வாலி அதாரிட்டி என்ற ஒரு அதாரிடியை நியமிக்கலாம், அதாவது காவேரி வாலி அதாரிட்டி என்பது மூன்று மாநிலங்களிலும் ஓடுகின்ற ஆறுகளை பார்க்கவும், பராமரிக்கவும் என்று சொல்லி, கொள்கை அளவில் ஒத்துக்கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் தாராளமாகக் கொள்கை அளவில் ஒத்துக்கொள்கிறோம் என்று சொல்லி, ஆனால் காவேரி வாலி அதாரிட்டிக்கு என்னென்ன வேலைகள் என்பதைப்பற்றி பின்னால் ஆராயலாம், கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறோம், ஒத்துக்கொள்கிறோம் என்று சொன்னோம். மூன்று மாநிலத்து முதலமைச்சர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. திரு. பட்டேல் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு 100 டி.எம்.சி. தண்ணீரை மிச்சப்படுத்தலாம். கர்நாடகம் 25 டி.எம்.சி. தண்ணீரை மிச்சப்படுத்தலாம் என்று திரு. படேல் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன பதில்—மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட பேசும்பொழுது சொன்னார் "நீங்கள் ஏன் 50 டி.எம்.சி. என்று சொல்லியிருக்கலாமே 100 டி.எம்.சி. என்று ஏன் ஒத்துக்கொண்டீர்கள்?" என்று கேட்டார். நியாயமான கேள்வி—60 டி.எம்.சி.க்கு மேல் ஒத்துக்கொள்ள முடியாது, அதற்கு மேல் மிச்சப்படுத்த முடியாது என்று வலியுறுத்தினார். 60 டி.எம்.சி.க்கு மேல் மிச்சப்படுத்துவது சிரமப்படும், அதுவும் மார்டர்னைசேஷன் செய்தாகவேண்டும். அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல, 60 டி.எம்.சி.க்கு மேல் ஒத்துக்கொள்ள முடியாது என்று வலியுறுத்திச் சொன்னார்கள். ஆனால் ஒரு இணக்கம், நெருக்கம் வரவேண்டும் என்ற நிலைமை வந்தபொழுது, நாம் 28 லட்சம் ஏக்கரா பயிர் வைக்கிறோம், கருநாடகம் 7 லட்சம் ஏக்கரா பயிர் வைக்கின்றது—கேரளா மாநிலம் ஏறத்தாழ 5,000 ஏக்கர் பயிர் வைக்கின்றது—பாண்டிச்சேரியும் சேர்த்துத்தான் நான் 28 லட்சம் ஏக்கரா என்று சொன்னேன்—நம்மில் நான்கில் ஒரு பங்கு பயிர் வைக்கிறார்கள். நாம் தண்ணீர் மிச்சப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தினால் 60 டி.எம்.சி. மிச்சப்படுத்துவதாக மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள், திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கேட்டுக்கொண்ட காரணத்தினால், 80 டி.எம்.சி.க்கு ஒப்புக்கொண்டார் மீண்டும் வற்புறுத்தியதன் காரணமாக. சரி, ஒப்பந்தம் வருகிறது என்ற நிலைமையில் 100 டி.எம்.சி.க்கு விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி ஒத்துக்கொண்டோம்.

ஆனால் ஒரு பிரச்சினையில் சிக்கல் எழுந்தது. பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி ரிப்போர்ட்டை அப்படியே ஒத்துக்கொள்ளவேண்டும் என்பது எங்களுடைய வாதமாகும். ஆனால் பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி ரிப்போர்ட்டை அப்படியே ஒத்துக்கொள்வதற்கு பட்டேல் அவர்கள் மறுத்துவிட்டார்கள். மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கொண்ட குழுவின் அறிக்கையை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள். அங்குதான் சிக்கல் ஆரம்பித்தது நாம் சொன்னது, இன்ப்ளோ 100 டி.எம்.சி. குறைத்துக்கொள்கிறோம் என்பது. முதல் அமைச்சர் அவர்கள் அதை எழுதியே காட்டினார்கள். கே. ஸி. பந்த் அவர்களுக்கு இன்ப்ளோவில் 384 டி.எம்.சி.யில் மைனஸ் 100 டி.எம்.சி. அதாவது 284 டி.எம்.சி.க்கு ஒத்துக்கொள்கிறேன் என்று எழுதிக் காட்டினார்கள். அப்பொழுது நடைபெற்ற கூட்டத்திலேயே நான் கேட்டேன். தமிழ் நாட்டு முதல் அமைச்சர் அதைத்தான் ஒத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் அதை உறுதிப்படுத்தியதற்காக. இன்ப்ளோ என்பது வேறு. யுடிலைசேஷன் என்பது வேறு. தமிழ் நாட்டிற்கு உள்ளே வந்துகொண்டிருக்கிற வரத்து அளவு, கொள் அளவு, 38 வருஷ கால அளவு ஆவரேஜாக எடுத்துக்கொண்டால் எவ்வளவு ஆகிறது என்றால், 38 வருஷக் கணக்கை எடுத்துக்கொண்டால் அது தான் 384 டி.எம்.சி. வருகிறது. 384 டி.எம்.சி. நாம் மேட்டூரில் சொன்னோம். மேட்டூர் வழியாக வருகிற தண்ணீரில் 384 டி.எம்.சி.யில் 100 டி.எம்.சி. குறைத்துக்கொள்கிறோம் என்று சொன்னோம். திரு. பட்டேல் அவர்கள் சொன்ன கருத்து—கடந்த ஐந்து வருஷ காலத்திய யுடிலைசேஷன் மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். யுடிலைசேஷன் என்பதை எடுத்துக்கொள்வதை நாம் ஆட்சேபிக்கிறோம், ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று தெளிவாகச் சொன்னோம். அவர்கள் 5 வருஷ ஆவரேஜ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கடந்த 5 வருஷ காலம் நமக்குப் பாதகமாக இருந்த காலம், அதை ஒத்துக்கொள்ள முடியாது என்பதுதான் நம்முடைய வாதம்.

இது எப்படி வந்தது என்று கேட்டால் முதல் கூட்டம் நடைபெற்றபொழுது இரவு ஒரு மணி இருக்கும். ஒரு டிராப்ட் அக்ரிமெண்ட் எடுத்துக்கொண்டு வந்து காட்டினார்கள். அப்பொழுது தான் அந்த அக்ரிமெண்டை நாங்கள் பார்த்தோம். இரவு ஒரு மணிக்கு முதல் அமைச்சர் அவர்களை எழுப்பி அதைப் படித்துப் பார்த்தோம். நாங்கள் விடியற்காலை 6 மணிக்கு ப்ளேன் ஏறவேண்டும்.



தங்கியிருக்கலாம் என்றால், அடுத்த நாள் மத்திய அமைச்சர் இல்லை. அடுத்த நாள் அவர் போகாமல் இருந்தால், அன்றே கூட தங்கி அதைப்பற்றி பேசியிருக்கலாம். இரவு ஒரு மணிக்குத்தான் டிராப்ட் அக்ரிமெண்ட் வந்தது. திரு. பட்டேல் வந்தபொழுது சொன்னோம். நாங்கள் இதை ஒத்துக்கொள்வதற்கு இல்லை. நாம் பேசியதற்கும், இதற்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. இது பற்றி அடுத்த கூட்டத்தில் விவாதித்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டோம். அதை ஒத்துக்கொள்ளவில்லை. பத்திரிகையில் வெளியிடவேண்டாம் என்று சொன்னார்கள். நாங்கள் பத்திரிகைக்குச் சொல்வதாக இல்லை என்று கூறிவிட்டு வந்துவிட்டோம். இதுதான் முதலில் நடைபெற்றது.

அடுத்த கூட்டத்திற்கு இப்பொழுது சென்றபொழுது டிராப்ட் அக்ரிமெண்டை ஒத்துக்கொண்டீர்கள் என்று பேச ஆரம்பித்தார்கள். நாங்கள் டிராப்ட் அக்ரிமெண்டை ஒத்துக்கொள்ளவில்லை. எங்கே ஒத்துக்கொண்டோம். அந்தப் பேச்சே கிடையாது; கருத்து மாறுபாடு இருக்கிறது என்று நாம் தெளிவுபடுத்தினோம். டிராப்ட் அக்ரிமெண்டில் அவர்கள் சொல்லியிருந்தது 125 டி.எம்.சி., எப்படி என்பதற்கு ஒரு முறை சொன்னார்கள். தமிழ் நாட்டிற்கு 4 டி.எம்.சி., கர்நாடகத்திற்கு 87 டி.எம்.சி., கேரளாவிற்கு 34 டி.எம்.சி. என்று பிரித்தார்கள். தமிழ் நாட்டிற்கு 4 டி.எம்.சி. என்பதில், இரண்டு டி.எம்.சி. குடி தண்ணீருக்கும், இரண்டு விவசாயத்திற்கும் என்று பிரித்தார்கள். இப்படி 125 டி.எம்.சி. என்று கணக்குப் போட்டார்கள். reasonable requirement of each state என்று சொல்லி ஒரு ஃபார்முலா கொடுத்தார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு தேவை, நியாயமாக எவ்வளவு தேவை என்பதை . . .

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: 125 டி.எம்.சி. என்று சொன்னால், You must make it clear whether it is surplus water.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: 100 டி.எம்.சி. குறைத்துக் கொள்ளவேண்டும் என்றால் இன்ப்ளோவில் தான். சர்ப்ளஸ் என்ற பிரச்சினையே இல்லை. இன்ப்ளோவில் தமிழ் நாடு 100 டி.எம்.சி. தண்ணீரை மிச்சப்படுத்த வேண்டும். கர்நாடகா 25 டி.எம்.சி. மிச்சப்படுத்தவேண்டும். கடந்த 38 வருஷ கால ஆவரேஜை எடுத்துக்கொண்டால் மேட்டூரில் 384 டி.எம்.சி. வருகிறது. அதிலே 100 டி.எம்.சி. விட்டுக்கொடுக்கிறோம். மீதி 284 டி.எம்.சி. தண்ணீரை உபயோகப்படுத்துவதற்கு ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடுவதற்கு ஒத்துக்கொண்டோம். தமிழ் நாட்டிற்கு ரீஸனபிள் ரிக்கொயர்

[திரு. ப. உ. சண்முகம்] [1975 பிப்ரவரி 24

மெண்ட்ஸ் 4 டி. எம்.சி., கர்நாடகாவிற்கு ரீஸனபிள் ரிக்கொயர் மெண்ட்ஸ் 138 டி.எம்.சி., கேரளாவிற்கு 53 டி.எம்.சி. என்று கணக்குப் போட்டார்கள். எதை வைத்துக்கொண்டு அப்படி கணக்குப் போடுகிறீர்கள் என்று நாம் கேட்டோம். கர்நாடகா கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். நாமும் கேட்டோம்—தமிழ் நாட்டில் இன்னும் பல திட்டங்கள் அமுலாகாமல் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத் திற்காக காத்திருக்கின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்றியாக வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று கேட்டோம். வீராணம் குடி தண்ணீர் திட்டம் பல கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுக்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்கு பக்கத் தில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வீராணம் குடி தண்ணீர் திட்டத் திற்கு 3.61 டி.எம்.சி. தண்ணீர் வேண்டும்; சின்னாறு திட்டம் இருக் கிறது; பொன்னியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிவுற்று திறப்பு விழா நடக்கவேண்டியதுதான்; குட்கனாறு திட்டத்திற்கு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்படி பல்வேறு திட்டங்கள் இருப் பதை எடுத்துச்சொன்னோம். அவர்கள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: 100 டி.எம்.சி.க்கு அப்பொழுதே நீங்கள் மறுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்பொழுதே 100 டி.எம்.சி.க்கு ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லி வெளியே வந்திருந்தால், ஒரு வேளை இப்பொழுது சுலபமாக இருந்திருக்கும்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: 100 டி.எம்.சி. இன்ப்ளோவில் குறைத்துக்கொள்கிறோம் என்றுதான் சொன்னோம் ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி ஒத்துக்கொண்டோமே தவிர, அதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. எழுதும்பொழுதே முதலிலேயே இருக்கின்ற ஆயக்கட்டு களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஒப்பந்தத்தின் பேரில்தான், மூன்று மாநிலங்களும் ஒத்துக்கொண்டு தான் செய்தோம். இருக்கிற விஷயம் என்னவென்றால், 5 ஆண்டு கால ஆவரேஜ் வைத்துக்கொண்டு தமிழ் நாடு எப்படியாவது குறைத் துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

இந்த ஐந்தாண்டு ஆவரேஜுக்கு நாம் ஒப்புக்கொள்ளவில்லை. 38 வருஷ ஆவரேஜுக்குத்தான் ஒப்புக்கொள்வோம் என்று சொல்லி யிருக்கிறோம். முட்டுக்கட்டை யாரும் போடவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் வேறு வழியில்லை.



1975 பிப்ரவரி 24] [திரு. ப. உ. சண்முகம்]

நாம் இன்னொன்றும் சொல்லியிருக்கிறோம். கிருஷ்ணா நதியிலிருந்து கர்நாடகத்திற்கு 500 டி.எம்.சி. கிடைத்துக்கொண்டிருக் கிறது. அவர்கள் 700 டி.எம்.சி. கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 500 டி.எம்.சி.யை முழுமையாகப் பயன்படுத்துவதற்கே இன்னும் 100 வருடங்கள் கூட ஆகலாம். எங்களுக்கு இருக்கிறது காவேரி ஒன்று தான். இந்த காவேரி தண்ணீரைக் குறைத்துவிட்டால் எங்களுக்கு இருக்கிற ஆயக்கட்டு பாதகமடையும். ஆகவே, குறைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

கர்நாடக முதலமைச்சர் 1924-ம் ஆண்டு ஒப்பந்தமே நீடிக்க லாமா என்று கேட்டார்கள். அப்படியே ஒப்புக்கொள்கிறோம். அதற்கு ஒரு ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடுங்கள் என்று சொன்னோம். அதை மறுத்துவிட்டார்கள். அதனால் நமக்கு வேறு வழியில்லை.

கர்நாடகத்தில் இப்போது பயனடைவது 7 லட்சம் ஏக்கர் ஆயக் கட்டுகள். அவர்கள் கூடுதலாக $8\frac{1}{2}$ லட்சம் ஏக்கருக்குக் கேட்கிறார்கள். மொத்தம் $15\frac{1}{2}$ லட்சம் ஏக்கருக்குக் காவிரி நீர் வேண்டுமென்று கேட் கிறார்கள். அதை ஒத்துக்கொண்டால் நமக்கு எவ்வளவு பாதகம் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பவானி தண்ணீரை மிச்சப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். முடியாது என்று சொல்லியிருக்கிறோம்.

நான் இதுவரையில் தமிழ்நாட்டின் தேவையைப்பற்றிச் சொன்னேன். மற்ற மாநிலங்களைப்பற்றிச் சொல்வது சரியாகாது. அவர்களே சொல்லியிருந்தாலும் நாம் சொல்லக்கூடாது. நம்மைப் பொறுத்த வரையில் இருக்கிற ஆயக்கட்டுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது. வேறு வழியில்லாமல் இப்போது பயன்படுத்துவதில் 100 டி.எம்.சி. வேண்டுமானால் குறைத்துக்கொள்கிறோம் என்று சொல்லி யிருக்கிறோம். ஆனால் அவர்கள் 5 ஆண்டு ஆவரேஜ் கணக்கை எடுத் துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். முடியாது என்று நாம் சொல்லியிருக்கிறோம்.

மத்திய அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறோம்; 100 டி.எம்.சி. தண்ணீரைப் படிப்படியாக 15 ஆண்டுகளில் குறைத்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். மத்திய அமைச்சர் திரு. பட்டேல் அவர்கள் சொன்ன கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. "பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி" சொல்லிய கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்; அவர்கள் ஏற்றுக்

[திரு. ப. உ. சண்முகம்] [1975 பிப்ரவரி 24

கொள்ள தயாராக இல்லே. அதற்குப் பிறகு சர்வ கட்சி கூட்டத்தைக் கூட்டி, நாம் ஒரு முடிவை எடுத்திருக்கிறோம். அது அனைவருக்கும் தெரியும். இந்த விளக்கத்திற்குப் பிறகு மேலும் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : A point of clarification, Sir. No doubt 384 TMC is the inflow. What exactly is the utilisation in Tamil Nadu?

THE HON. THIRU P. U. SHANMUGAM : 566 TMC.

THIRU R. PONNAPPA NADAR : What objection can the Karnataka Government have regarding the report of the Fact Finding Committee that is accepted by the Centre and Tamil Nadu?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாக்ட் பைண்டிங் கமிட்டி ரிப்போர்ட்டில் தமிழ்நாட்டிற்கு 566 டி.எம்.சி. தண்ணீர் என்று சொல்லியிருக்கிறது. 5 வருஷ ஆவரேஜ் எடுத்தால் 489 டி.எம்.சி. வருகிறது. கர்னடகம் ஏன் 5 வருஷ ஆவரேஜை ஒப்புக்கொள்கிறது என்றால் அவர்களுக்கு 1938லும் 138 டி.எம்.சி. தான். இப்போதும் 138 டி.எம்.சி. தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் ஆயக்கட்டுபற்றிச் சொன்னீர்கள். ஆயக்கட்டைப் பொறுத்தவரையில் நமக்கு அஷ்ஷூரன்ஸ் இருக்கிறது என்று சொன்னீர்கள். நமக்கு எவ்வளவு தேவை? அதைக் கொடுத்துவிடுகிறோம் என்று எழுத்து மூலமாக வாக்குறுதி கொடுத்தார்களா அல்லது வாய் மூலமாக வாக்குறுதி கொடுத்தார்களா? இப்போது ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எவ்வளவு தண்ணீர் தேவை என்பதில் வித்தியாசம் இருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நமக்கு எவ்வளவு தேவையோ அதை வேண்டுமென்று நாம் கேட்கிறோம். அதைத்தான் பாக்ட் பைண்டிங் கமிட்டியும் சொல்லியிருக்கிறது. இன்னொரு மாநிலத்துத் தண்ணீரைப்பெற்று தமிழ்நாட்டுக் கட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று நாம் சொல்லவில்லே, தமிழ் நாட்டுக்கு உரிய தண்ணீர் தேவை. 28 லட்சம் ஏக்கர் ஆயக்கட்டுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுத்தால் போதும்; மேற்கொண்டு எதையும் நாம் சொல்லவில்லே.



1975 பிப்ரவரி 24]

(மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி எழுந்தார்)

திரு. என். கே. பழனிசாமி : சார், ஒரு விளக்கம் கேட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள். அதன் பிறகு உங்கள் விளக்கத்தைக் கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மிக முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சி தலைவர்களுடைய கூட்டங்கள் அடிக்கடி கூட்டப்பெற்று, அவர்கள் வழங்கிய அரிய ஆலோசனைகள் அடிப்படையில் தமிழக அரசு கர்னடக முதல்வருடனும் கேரள முதல்வருடனும் மத்திய அமைச்சருடைய முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறது என்பதை இந்த அவையும் நாடும் நன்கு அறியும்.

காவிரி பிரச்சினை நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை இங்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசிய எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப்போல ஒரு உயிர்ப் பிரச்சினையாகும்.

காவிரி நதி தமிழகத்தில் இல்லாவிட்டால் எந்த அளவுக்கு நம்முடைய மாநிலம் வறண்டு போய்விடும் என்பதைச் சொல்லத் தேவையில்லே. பல ஆண்டு காலமாக நாம் காவிரியினுடைய பயனை அனுபவித்து வருகிறோம். 1924-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் 1974-ம் ஆண்டுடன் முடிவுறுகிறது. அதற்குப் பிறகு காவிரியில் நமக்கு எந்தவிதமான பாத்தியதையும் கிடையாது என்ற தவருன பிரச்சாரம் நாட்டில் நடைபெறுகிறது. அந்த அடிப்படை மிகத் தவருனது என்பதைப் பல நேரங்களில் இந்த அவையிலே கூட நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ம் ஆண்டில் உபரித் தண்ணீரைப் பொறுத்து புதுப்பிக்கப்பட வேண்டிய ஒன்றே அல்லாமல் 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ல் கிழித்தெறியப் பட்டு, வேருெரு புதிய ஒப்பந்தம் செய்துகொள்வது என்பது பொருளல்ல. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகி வருகிறோம்.

தேசிய அளவில் பல பிரச்சினைகளை அணுக வேண்டுமென்ற அறிவுரை மிகப் பெரியவர்களால் நாட்டுக்கு வழங்கப்படுகிறது. நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் கூட பேசுகிறபோது இந்திய ஒருமைப்பாடு பற்றி பேசிவிட்டு, ஒரு மாநிலத்தை இந்த அளவுக்கு வறண்டு போகவிடலாமா, அதற்கு மத்திய அரசு துணை போகலாமா என்ற கருத்துப்பட ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.

கர்நாடக மாநிலம் காவிரியினுடைய பயனைப் பெறவே கூடாது என்பது நம்முடைய வாதம் அல்ல. காவிரி கர்நாடகத்திலே தோன்றி தமிழகத்திலே நீண்ட நெடுநாட்களாகப் பயனை வழங்கிக்கொண்டிருக்கிற ஒரு பெரும் நதியாகும். இந்தியாவிலே இருக்கிற 4, 5 பெரிய நதிகளில் காவிரி நதியும் ஒன்று.

அந்தக் காவிரி நதி, கர்நாடகத்தைப் பொறுத்தவரை தமிழகத்துடன் ஒப்பிடுகிற நேரத்தில் மிகக் குறைவான ஆயக்கட்டுகளுக்குத்தான் பாசன வசதி தந்துகொண்டிருக்கிறது. அதில் இருந்து ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கர்நாடக அரசு கருதுவதும், கர்நாடக மக்கள் விரும்புவதும் இயற்கை. அதை நாம் மறுப்பதற்கில்லை.

அதே நேரத்தில் தமிழ்நாடு ஏற்கெனவே அனுபவித்து வந்த பாத்தியதையை, பயனை இழந்துவிட்டு, ஏற்கெனவே இருக்கிற ஆயக்கட்டுகளை எல்லாம் காய வைத்துவிட்டு, இனிமேல் புதிதாகத் தோன்றப் போகிற கர்நாடக ஆயக்கட்டுகளுக்கு காவிரித் தண்ணீரை வழங்குவதில் தேசிய அளவில் என்ன லாபம் ஏன்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. பொன்னப்ப நாடார் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கிருஷ்ணா அவார்டு என்பதன் வாயிலாக கர்நாடக மாநிலத்திற்கு 500 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதற்கு வழிவகை காணப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அவார்டு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 500 டி.எம்.சி. தண்ணீரே தங்களுக்குப் போதாது என்று கர்நாடகம் வாதிடுவதாகச் செய்திகள் வருகின்றன. அந்த 500 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்களானால் காவேரி தண்ணீரை அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்கின்ற நிலையே எழாது என்பதுதான் நம்முடைய எண்ணம். அதற்காக அவர்கள் காவேரித் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடாது என்று நாம் வாதமிடவில்லை.





நம்முடைய அடிப்படை கருத்தெல்லாம் ஏற்கெனவே பயன்பட்டு வருகிற நம்முடைய தமிழகத்து ஆயக்கட்டுகள் பாழாகிவிடக் கூடாது என்பதுதான். நாம் நூறு டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்துக்கொள்கிறோம் என்று கூறியதன் பொருள் அதற்கான ஆயக்கட்டுப் பரப்பளவைக் குறைத்துக்கொள்கிறோம் என்பது அல்ல. இதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். சிலபேர் ஆயக்கட்டுகளைக் குறைத்துக்கொள்ளப்போகிறோமோ என்று தவறாகக் கருதுகிறார்கள் என்று நான் உணர்கிறேன். அது அல்ல உண்மை. இருக்கிற ஆயக்கட்டுகள் அப்படியே இருக்கும். இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக்கொள்கிறோம் என்பது—நம்முடைய பாசனக் கால்களை நவீனப்படுத்துவதன் மூலம்—மாடர்னைசேஷன் ஸ்கீம் மூலம்—வாய்க்கால்களை நவீனப்படுத்தி, அதன்மூலம் தண்ணீரைச் சிக்கனப்படுத்தி இருக்கிற ஆயக்கட்டுகள் எல்லாவற்றுக்கும் தண்ணீர் அளிக்கலாம் என்கிற அடிப்படையில்தான் இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக்கொள்ள ஒத்துக்கொள்கிறோம். அதுவும் உடனடியாக அல்ல. இன்றைக்கு ஒப்பந்தம் கையெழுத்தானால் நாளையதினமே 100 டி.எம்.சி.யைக் குறைத்துக்கொள்கிறோம் என்று சொல்லவில்லை. இந்த 100 டி.எம்.சி. தண்ணீரையும் முற்றும் குறைத்துக்கொள்வதற்கு 15 ஆண்டுக்காலம் ஆகும். இந்த 15 ஆண்டுக் காலத்திற்குள் இந்த 100 டி.எம்.சி.யைக் குறைத்துக்கொள்வதனால் நம்முடைய இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாதிருக்கக் கால்வாய்களை மாடர்னைசேஷன் ஸ்கீம் மூலம் நவீனப்படுத்தி தண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்ளலாம் என்று கருதியே ஒத்துக்கொண்டோம்.

இருக்கிற ஒப்பந்தம் நிறைவேறவில்லை. நீங்கள் கொஞ்சம் பேரம் பேசியிருக்கவேண்டும். பிகு காட்டியிருக்கவேண்டும் என்பதாக பேரம் பேசுகின்ற முறைகளை டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை. தயவு செய்து தவறாக எடுத்துக்கொள்ளவேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரம் பேசுகின்ற முறை என்றல்ல. நம்மைப்பொறுத்தவரையில் நமது ஆயக்கட்டுகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். நமது தேவைகளைத் தட்டிக் கேட்க வேண்டியது நமது கடமை என்பதை மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே முழுக்க முழுக்க நமக்கு ஆதரவாகத்தான் சொல்கிறார்கள். "நீங்கள் ஏன் 50 டி.எம்.சி தான் குறைத்துக்கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கக் கூடாது" என்று கேட்டார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 பிப்ரவரி 24

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல 50 டி.எம்.சி. தான் குறைத்துக்கொள்ள முடியும் என்று சொல்லி—பிற்பாடு 60 டி.எம்.சி. குறைத்துக்கொள்வது என்று பேச்சைத் தொடங்கி பிறகு 80 டி.எம்.சி. என்கிற அளவில் ஒப்புக் கொண்டு இரவு பத்து அல்லது பதினொரு மணிக்கு ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு இந்த 20 டி.எம்.சி. தான் தடையாக இருக் கிறது என்று மத்திய அமைச்சர் மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர் களும் திரு. பந்த அவர்களும் குறிப்பிட்ட காரணத்தினால் ஒப்பந்தம் கையெழுத்தானால் போதும் என்கிற அளவில் நூறு டி.எம்.சி.யை 15 ஆண்டுகளில் குறைத்துக்கொள்ள தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்தோம். இதையும்கூட தமிழக அரசின் சார்பில் நான் முதலமைச்சர் என்ற முறையிலோ—தமிழக மந்திரிகள் என்கிற முறை யில் நாங்களாகவோ இந்த முடிவை அறிவித்துவிடவில்லை என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் அறிவார்கள். இந்தப் பேச்சு வார்த்தைக்கு முன்பு கூட அனைத்துக் கட்சித் தலைவர்களது கூட்டத்தை நமது தமிழக தலைமைச் செயலகத்தில் கூட்டி—நீங்கள் தண்ணீரைக் கொஞ்சம் மிச்சப்படுத்திக் கொள்ள முன்வந்தாக வேண்டும் என்று கேட்டால் அதற்கு இணக்கம் தெரிவிக்கலாமா என்று கேட்டு—அனைத்துக் கட்சித் தலைவர்களது சம்மதத்தைப் பெற்று—அதன் பிறகுதான் தண்ணிரைக் குறைத்துக் கொள்ள 100 டி.எம்.சி. அளவுக்கு ஒப்புதலை வழங்கினோம்.

பொதுப் பணித் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப்போல இரவு ஒரு மணி ஒன்னரை மணிக்கு ஒப்பந்தத்திற்கான வரைவுத் தாள்களைக் கொண்டுவந்தபோது "நாங்கள் பேசியதற்கும் அந்த வரைவுத் தாள் களுக்கும் நிரம்ப வேறுபாடுகள் இருந்தன. ஆகவே, கொள்கை அளவில் ஒப்பந்தத்தாள் இருக்கிறது. ஆனால், சில நுணுக்கங்கள் ஆபத்தை விளைவிக்கின்ற அளவில் அமைந்திருக்கின்றன. ஆகவே, அதை ஒத்துக்கொள்வதற்கில்லை" என்று குறிப்பிட்டோம். அந்த வரைவுத் தாள்களைத் தமிழக அரசும் சரி, கேரள அரசும் சரி, கர்நாடக அரசும் சரி ஒத்துக்கொண்டார்களா என்றால் இல்லை. அவரவர்களுக்கு அதில் அபிப்பிராய பேதம் இருந்தது. ஆகவே, ஒத்துக்கொண்டு, பிறகு நாம்தான் பின்வாங்கி ஒத்துக்கொள்ளவில்லை என்ற வாதம் உண்மையானது அல்ல என்பதற்காக அதைக் குறிப் பிட்டேன். மூன்று மாநில அரசுகளுக்குமே அந்த ஒப்பந்த வரைவுத் தாளைப் பொறுத்தவரையில் அபிப்பிராய பேதம் இருந்தன. ஆகவே, அதனை ஒத்துக்கொள்ளவில்லை.



1975 பிப்ரவரி 24] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தக் கூட்டத்தில் 100 டி.எம்.சி. தண்ணீரை எப்படிக் குறைத்துக் கொள்வது—என்கிறபோது பதினைந்து ஆண்டுகளில் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஐந்து ஆண்டுகள்—பத்து ஆண்டுகள் —பதினைந்து ஆண்டுகள் என்கிற அடிப்படையில் முதல் ஐந்தாண்டின் முடிவில் 20 டி.எம்.சி., பத்தாண்டின் முடிவில் 60 டி.எம்.சி., 15-வது ஆண்டின் முடிவில் 100 டி.எம்.சி. என்ற அளவில் நீங்களே எங்களுக்கு விடுகிற தண்ணீரைக் குறைத்துக்கொள்ளுங்கள். அந்தக் காலத் திற்குள் நாங்கள் எங்களது கால்வாய்களை—மாடர்னைசேஷன் ஸ்கீம் படி நவீனப்படுத்திக்கொண்டு விடுகிறோம் என்பதாகத் தமிழக அரசின் சார்பில் கர்நாடக அரசினிடத்தில் தெரிவித்துக்கொண்டோம். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல மத்திய சர்க்காரும் அந்த மாடர்னைசேஷன் ஸ்கீமுக்கு பண உதவி செய்து தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பண உதவியைப் பெற்று மூன்று கட்டத்தில் முதலில் 20 டி.எம்.சி., பிறகு 60 டி.எம்.சி., இறுதியாக 100 டி.எம்.சி. குறைத்துக்கொள்வது என்ற கருத்தைத் தெரிவித்தோம்.

வந்த வழக்கெல்லாம் பொதுப் பணித் துறை அமைச்சர் குறிப் பிட்டதைப்போல அவர்கள் கொடுக்கிற தண்ணீரில் குறைப்பு செய்து கொள்வதா, நாம் பயன்படுத்துகிற தண்ணீரிலா என்பதாகும். பயன் படுத்திக்கொள்கிற தண்ணீரைக் குறைத்துக்கொள்ள வேண்டு மென்பது பேசுவதற்கு எளிமையாக இருக்கலாம். கேட்பதற்குக் கூட ஆமாம் என்று சொல்லத் தோன்றலாம். ஆனால் இங்கே பயன் படுத்துகிற தண்ணீரைக் குறைத்துக்கொள்வது என்பது நம் மாநிலத்தில் பெய்கிற மழை—அதையும் சேர்த்துச் சராசரிக் கணக்கில்போட்டு குறைத்துக்கொள்கிற நிலைமைக்குப்போகும். ஆகவே 100 டி.எம்.சி. என்கிறபோது ஒவ்வொரு ஆண்டும் விடப் பட்ட தண்ணீரின் அளவை வரிசையாக எடுத்து ஒட்டுமொத்தமாக சராசரி கணக்குப்போட்டு அதில் 100 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் தமிழகத்திற்கு விடும்போதே குறைத்துக்கொள்ளலாம் என்பது நாம் தெரிவித்த கருத்தாகும். அதற்கு அவர்கள் இணங்கி வரவில்லை. முதலில் ஒப்புக்கொண்ட நிலையில் இருந்து நாம் பின்வாங்கவில்லை. முதலில் ஒத்துக்கொண்டது ஒன்று, இப்போது பேசுவது ஒன்று என்று தமிழக அரசைப் பொறுத்தவரையில் இல்லை.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு கர்நாடக மாநிலத்தில் எவ்வித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகையில் வந்த செய்திகள் எத்தகையன என்பதும் ஒப்பந்தம் முடிவுறாமல் போனதற்கு

யார் காரணமாக இருக்கக்கூடும் என்பதும் இந்த அவையும், நாடும் நன்கு அறிந்த விஷயம் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் "இன்னும் பேசி முடிவு காண்பதற்கு இடமில்லாமல் போகவில்லை. ஆனாலும் நடுவர் தீர்ப்புத் தேவை" என்று குறிப்பிட்டார்கள். நடுவர் தீர்ப்புத் தேவை என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல.

1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக கபினி அணையில் தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். தமிழகத்திற்கு இதுவரை அங்கே இருந்து வந்துகொண்டிருந்த தண்ணீர்—ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன் போட்டதற்குப் பின்னால் எவ்வளவு தண்ணீரைவிடுவது அங்கே எவ்வளவு தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்வது என்று தீர்மானிக்கலாம். கபினி தண்ணீர் தமிழகத்திற்கு வரவேண்டிய தண்ணீர்—1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக அந்தத் தண்ணீரை அங்கே தேக்கி வைக்கர்து—அந்தத் தண்ணீரைத் திறந்து விட வேண்டுமென்று உரிமையின் அடிப்படையில் மத்திய சர்க்கார் இதில் தலையிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இனி பேச்சு வார்த்தை என்பது—நான் மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்வேன் மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொள்கிறதோ என்று ஐயம் ஏற்படுகிற அளவு நிலைமை வளர்ந்திருக்கிறது. ஏனென்றால் அந்தத் திட்டங்களுக்கு அந்த அணைகளுக்கு மத்திய அரசு இன்னும் கன்கரன்ஸ் என்கின்ற சம்பிரதாயபூர்வமான சம்மதம் அளிக்கவில்லை என்கிற நிலையில் தவறாகவோ, சரியாகவோ, மறைமுகமாகவோ அந்த அணைகளைக் கட்டுவதற்கான உதவிகள் மத்திய அரசின் சார்பில் செய்யப்பட்டிருக்கின்றன. திரு. விரேந்திரபட்டீல் ராஜீநாமாச் செய்து அந்த மாநிலத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் கர்னாடக பட்ஜெட்டில் இந்த அணைக்கட்டுத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப் பட்டு—பாராளுமன்றத்தில் இதற்கு மறைமுகமாக மத்திய அரசின் ஆதரவு இருந்திருக்கிறது என்பது கண்கூடான விஷயம். இதை மத்திய சர்க்காரைக் குறைகூற வேண்டுமென்று சொல்லவில்லை.

மத்திய அரசு இதில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் கபினி தண்ணீர் நமக்குக் கிடைக்கும். இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற நிலங்களை வற்றவிட்டு, பாழாக்கிவிட்டு மற்றொரு மாநிலம் வாழ வேண்டுமென்ற அளவுக்கு குறுகிய எண்ணம் படைத்ததாக மத்திய



அரசு இருக்குமென்று நான் கருதவில்லை. அல்லது பேச்சு வார்த்தைக்கு நிபந்தனையாகவும் போடவில்லை. பேச்சுவார்த்தைக்கு மனம் பக்குவமடைய வேண்டும். பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் குறைந்த பட்சம் கபினி அணையில் தேக்கிவைத்திருக்கிற தண்ணீரை—இப்போது காபந்து கொண்டிருக்கிற தஞ்சை மாவட்டத்திற்கு முதல் கட்டமாக விடுவிக்கின்ற முயற்சியை மேற்கொண்டால்தான் பேச்சு வார்த்தையில் ஏதாவது பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையைப் பெற இயலும். அந்த வகையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களின் மூலமாக இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொடுத்தவர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்து இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒரே அணியில் இருக்கிறார்கள் என்கின்ற அந்தப் பெருமை மிக்கச் செய்தியினைத் தெரிவித்து, இதற்கு மேல் இப்பிரச்சினையை அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தலைவரவர்களே தங்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, 1924-ம் ஆண்டு அக்ரிமெண்ட்படியே, மைசூர் ஏதாவது புது அணைக்கட்டுகளைக் கட்ட வேண்டுமென்றால் நம்முடைய கன்கரன்ஸை, நம்முடைய இணக்கத்தைக் கேட்டிருக்கவேண்டும். தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல், அன்றைக்கே இணக்கம் கொடுக்காமல் இருந்திருந்தால் கபினி எழும்பியிருக்காது. ஹேரங்கி, ஹேமாவதி அணைகளை அவர்கள் கட்டியிருக்க முடியாது. மத்திய அரசாங்கம் அவர்கள் திட்டத்திற்கு மறைமுகமாக உதவி செய்கிறதோ என்று பேசவேண்டிய அவசியமும் இருக்காது. அன்றைக்குத் தமிழ்நாடு அரசாங்கம் அவற்றிற்கு ஒத்துக் கொண்டிருக்காவிட்டால், இன்றைக்குத் தீங்கு செய்யப்படுவதற்கு மத்திய அரசாங்கம் வசதி செய்து கொடுக்கிறதோ என்று பேச வேண்டிய அவசியமில்லையே! இப்பொழுது போராட வேண்டியதில்லையே!

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் மறந்து போய் தன் கட்சியைக் குற்றம் சாட்டிக்கொண்டார்கள். இவைகளை 1957-லே ஆரம்பித்தார்கள், 1967-ல் அல்ல. நாம், 1967-ல் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறோம். 1967-லேயே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். போராட்டம் என்றால் அங்கே போய் குண்டு போட்டுவிடுவதா? அப்படி கிடையாது. பட்டுக்கோட்டை சீனிவாச ஐயர் அவர்கள் இந்த அவையிலேயிருந்

[திரு. ப. உ. சண்முகம்] [1975 பிப்ரவரி 24

பொழுது (குறுக்கீடு) வெளியிலே பேசினார்கள்—படை எடுக்கலாம் என்று கூடப் பேசினார்கள். ஆனால் நடக்கவில்லை. 1957-லே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று இது. நான் அதைக் குற்றமாகச் சொல்லவில்லை. நாம் எந்தக் கட்டத்திலும், எந்த இடத்திலும் தெரிவிக்க வேண்டிய ஆட்சேபணையை தெரிவிக்காமலில்லை.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நாம் அங்கீகாரம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது கன்செண்ட் கொடுத்திருக்கிறோமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பலமுறையும் இந்த அவையிலே சொல்லியிருக்கிறோம். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் கர்நாடக மக்களுடைய நலனும் பாதிக்கக் கூடாது என்று இந்த அரசின் சார்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அணைகள் கட்டுவதைப் பற்றி நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போடும் போது, பழைய ஆயக்கட்டுகளுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படக் கூடாது; அதற்குப் போதுமான தண்ணீர் வேண்டும். அது போதுமான அளவு இருக்கின்ற வகையில் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போட வேண்டுமென்று சொன்னோம். ஹேமாவதி அணையைக் கட்ட அங்கீகாரம் கொடுக்கவில்லை. ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் போட்ட பிறகு, அதனைப் பார்த்தபிறகுதான் அங்கீகாரம் என்று நிபந்தனையின் அடிப்படையிலேதான் கொடுத்திருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நம்முடைய முதலமைச்சரவர்கள் தன்னுடைய உரையில் நம்மை வாட வைத்து, கர்நாடகாவை வாழ வைக்க மத்திய அரசு மறைமுகமாக உதவி செய்கிறதோ என்று சொன்னார்கள். என்னுடைய கருத்தெல்லாம் நம்மை வாடவைத்து, அவர்கள் வாழ முடியாது. அதுபற்றி முதலமைச்சரவர்களிடம் கடிதம் கூடக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது இந்த அணைக் கட்டுகள் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அங்கே முழுகிவிடக் கூடிய நிலைமையிருக்கின்றன. அதை எழுதி முதலமைச்சரிடத்திலே கொடுத்திருக்கிறோம். அங்கேயே அணைக்கட்டுகளுக்கு எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே, நம்மை வாட வைத்து அவர்கள் வாழ முடியாது. அதில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. இந்தக் கருத்துக்களை மத்திய அரசுக்குச் சொல்வதன்மூலமாக நம்முடைய கருத்து வலிவடையும். அதனை மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.



1975 பிப்ரவரி 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், விஸ்வேஸ்வரய்யா–கெனால்–வாய்க்கால் இருக்கிறது. அந்தக் கால்வாய் மூலமாகப் பயன்படுகிற ஆயக்கட்டுக்காரர்கள் ஹேமாவதி அணையை எதிர்க்கிறார்கள். அந்தக் கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் முதலில் சொன்னதுபோல், கிருஷ்ணா நதி அவார்டிலே அவர்களுக்கு 500 டி.எம்.சி. கிடைக்கும் போது, அதை முதலிலே பயன்படுத்திக்கொள்ளட்டும், அதற்குப் பிறகு இதைப்பற்றி பேசலாம் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்த ஆண்டு காவிரியில் எவ்வளவு தண்ணீர் வந்தது என்று குறிப்பிடுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என் பேச்சிலே முதலிலேயே குறிப்பிட விரும்பினேன். அது முக்கியமான பிரச்சினை. நாங்கள் 384 டி.எம்.சி.யை 284 டி.எம்.சி.யாகக் குறைத்துக்கொள்கிறோம் என்று சொல்கிறோம். அதைத்தான் முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், மத்திய அரசாங்கம் 314-லிருந்து 214-ஆகக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த 100 டி.எம்.சி.யைக் குறைப்பதிலே கர்நாடக மாநிலம் சொல்வது என்னவென்றால், அதிகமான தண்ணீர் வந்தால் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். தண்ணீர் குறைவாக வந்தால், 214-ஐ விடக் குறைப்பார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுதே இந்த விஷயம் இவ்வளவு சிக்கலாக இருக்கிறது. இப்பொழுது 254 டி.எம்.சி. தண்ணீர் வந்தே இந்த கதி. 214 டி.எம்.சி.தான் என்று மத்திய அரசு சொல்கின்ற கருத்தையொட்டி நடப்பதாக இருந்தால், நாம் மிச்சப்படுத்த முடியுமா, எப்படி ஆயக்கட்டைப் பாதுகாக்க முடியும் என்பதை உணர வேண்டும், தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நானே சொல்லவேண்டுமென்று நினைத்தேன். இந்த ஆண்டு மேட்டூரிலிருந்து காவிரிக்கு வந்தது 254 டி.எம்.சி. தண்ணீர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடையவும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடையவும் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை, அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்கத் தேவையில்லையென்று நான் கருதுவதால் அவற்றிற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மின்வாரியம் தொடர்பான பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

THIRU ALADI ARUNA: Sir, I rise to present the second report of the Committee on Public Undertakings for 1974-75 on the accounts relating to the Tamil Nadu Electricity Board contained in the report of the Comptroller and Auditor-General of India for 1970-71.

6. அறிவிப்பு.

தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நன்றியுரை தெரிவிக்கும் தீர்மானத்தின் இறுதியில் நான் சொல்லக் கூடிய கீழ்க்கண்ட திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1. காவிரி நதி நீர்ப்பிரச்சினை பற்றியும்,

2. பஞ்ச நிவாரண வேலைகள் காலத்தோடு தேவையான அளவு செய்யப்படவில்லை என்பது பற்றியும்,

3. உணவுப் பற்றுக்குறையை போக்கும் வகையில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது பற்றியும்,

4. அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பதற்காக நிரந்தர ஏற்பாடு எதையும் செய்யவில்லை என்பது பற்றியும்,

5. படித்தவர்களிடையே உள்ள வேலையின்மையைப் போக்குவது பற்றியும்,

6. விவசாயிகளின் பழைய கடன்களை ரத்து செய்வது பற்றியும்,

7. இப்போதுள்ள கல்வி முறையை மாற்றியமைப்பது பற்றியும்,

8. இப்போதுள்ள நிர்வாக அமைப்பை மாற்றியமைப்பது பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தங்கள் முறையாக வழிமொழியப்பட்டது.

THIRU A. SUBRAMANIAM: Sir, I move—

Add at the end, the following :—

' but regret to note that no mention is made about—

1. the effective steps to curb the abnormal and continuing rise in the prices of rice, millets and other essential articles;

2. any scheme to ensure provision of adequate quantities of rice and other food grains at cheap prices to all the people of the State, without discrimination against the rural people;

3. the steps taken by the Government to maintain that maize and other coarse grains supplied by them to Panchayat Unions are not priced at rates higher than even those obtaining in the open market;

4. the increasing tempo and extent of the drought relief works to such a level as to provide employment opportunities to all the agricultural workers and other poor people till the next monsoon sets in and drought conditions disappear ;

5. securing full wages to the thousands of permanent workers in the Textiles Mills in the State whose employment has been affected by power-cut and lay off, compensation under the provisions of the Industrial Disputes Act to the many thousands of non-permanent workers like badlis and temporary and casual workers;

6. the effective and urgent steps to help the several lakhs of handloom weavers in the State out of their pitiable plight due to lack of employment for the past many months;

7. the necessary steps to fix statutory minimum wages for handloom weavers at rates at least double those that are obtaining now;

8. any proposal to declare as famine areas all the villages that have no assured irrigational facilities;

9. any proposal to pay dearness allowance to the State Government employees, teachers and employees of local bodies and other quasi-Government bodies on par with the Central Govern-Government employees;

10. any proposal to take steps for the take-over by the Government of India Meters' Limited, Madras, whose employees numbering nearly thousand are being continuously laid off for the past many months;

11. the effective steps to get the concurrence of the Kerala Government for the Pandiyar-Punnambuzha Scheme for the benefit of the agriculturists of Coimbatore district;

 [Thiru A. Subramaniam]

12. taking effective steps to bring out the hoarded stocks of rice in the State and to prevent smuggling of rice outside the State;

13. any proposal to fix pay scales for the College Teachers in the State at the rates fixed by the University Grants Commission;

14. any steps to bring to book the culprits in the unprecedentedly high number of house-breakings and thefts and the gruesome murders that occurred in and around the Tiruppur Town during the past one year.

The amendments were duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir I move :

Add at the end, the following :—

'but regret to note that no mention is made about—

1. the steps taken by the Government to wipe out the scarcity of rice in various parts of Tamil Nadu to bring down the price;

2. the emergent steps to be taken by the Government and the Corporation to solve the acute water scarcity in the City of Madras;

3. deteriorating law and order situation in the Madras City;

4. the positive steps to be taken by the Government to tackle the Electricity cut in Tamil Nadu;

5. the drought relief measures in detail;

6. the Cauvery Water dispute;

7. the concrete steps taken by the Government to open as many Fair Price Shops as possible:

8. the total neglect of Pudukkottai district which is a drought prone area;

9. the long-term measures taken to solve the problems in chronic famine stricken areas in Tamil Nadu;

[Thirumathi T. N. Anandanayaki] [1975 பிப்ரவரி 24

10. the failure of the Government to solve the N.G.O.s' problems sympathetically;

11. the failure of the Government to open gruel centres in drought affected areas so as to stop the exodus of people from such areas to other areas.

The amendments were duly seconded.

*[பிற்பகல் 12-30]*

* திரு. வீ. சா. இளஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மேல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே, இந்த நாட்டிலே இருக்கக் கூடிய புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இருக்கிற மக்கள் இன்றைய தினம் பெரிய அளவிலே உண்ண உணவின்றி, குடும்பம் குடும்பமாக தங்களுடைய வீடுவாசல்களை விட்டுவிட்டு தங்களுடைய ஆடுமாடுகளையெல்லாம் கேட்ட விலைக்கு விற்றுவிட்டு தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற தென்னை மரங்களுக்கு அடியிலே குடும்பம் நடத்துகின்ற பரிதாபத்தைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது, எடுக்கப்போகிறார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் இல்லாதது வருந்தத் தக்கதாகும். வறட்சி இருக்கிறது பெரிய அளவிலே, அதற்கு அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றெல்லாம் பேசினார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள பர்மா தமிழர்கள் 51 பேர்களுக்கு மேல் பட்டினிச் சாவிலே இறந்து இருக்கிறார்கள், அது மட்டுமல்லாமல் அனைத்து மக்களும் தங்களுடைய பொருட்களை பாதுகாக்கவேண்டுமென்ற நிலைமை கூட இல்லாமல் எப்படியாவது பிழைத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே இருக்கிறார்கள், ஆனால் அரசின் தரப்பிலே புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகைதந்த அமைச்சர் பெரு மக்களும், முதலமைச்சர் கூட, அங்கே வந்து வருகின்ற அதிகாரிகளைப் பார்த்து என்ன செய்யலாம் என்று கேட்டுவிட்டுப் போகிறார்களே தவிர இதைப்பற்றிக் கேட்கவில்லை. திருவரங்குளத்திலே இறந்த 51 பர்மா தமிழர்களைப்பற்றிய செய்தி பத்திரிகையிலே வந்தும்கூட எந்த அமைச்சரும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதைப் பற்றிய நிவாரணங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.



1975 பிப்ரவரி 24] [திரு. வீ. சா. இளஞ்செழியன்]

கஞ்சித் தொட்டிகள் திறக்கப்படுவதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது இப்படியெல்லாம் திறக்கிறார்களே, தமிழ்நாட்டு மக்களை மிகக் கேவலப்படுத்துகிறார்களே என்று சொன்னார்கள். என்னைப் போன்ற கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும், கிராமங்களிலே உள்ள மக்கள் கஞ்சி மட்டுமல்ல, சோற்றிலே வடித்தெடுக்கிற தண்ணீர் இருந்தால்போதும், அது கிடைத்தால் போதுமென்ற அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களும், மறவர்குடி மக்களும் அந்தத் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள், ஆனால் கஞ்சித் தொட்டி திறப்பதைப்பற்றி இங்கே கேவலமாகப் பேசினார்கள். அங்கே நடைபெற்ற பர்மா தமிழர்கள் கூட்டத்திலே பேசினார்கள், பட்டினியால் செத்தோம் அரசாங்கம் பேசாமல் இருந்துவிட்டது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாவது இந்த உப்புப் போட்ட கஞ்சியை எங்களுக்குக் கொடுக்கிறதே நாங்கள் நன்றி பாராட்டுகிறோம் என்று சொன்னார்கள். ஆளுநர் உரையிலே எப்போதும் இல்லாத அளவிற்கு நூறாண்டுகளாக இல்லாத அளவிற்கு இயற்கை பொய்த்துவிட்டதுதான் இதற்குக் காரணம், அதுதான் வறட்சி என்று சொன்னார்கள். நான் இதை முழுக்க ஏற்றுக்கொள்ள முடியாது. வறட்சியால் அல்ல இந்த நிலைமை, என்றைக்கு அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே உள்ள செக்போஸ்ட்களை வர்த்தக சூதாடிகளுக்காக கொள்ளை லாப வியாபாரிகளுக்காக எடுத்தார்களோ, என்றைக்கு அந்த செக்போஸ்ட்களை தூக்கிவிட்டார்களோ, அன்றைக்கே வறட்சி வர ஆரம்பித்துவிட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விவசாய பெருங்குடி மக்களுக்கு நன்றாகத் தெரியும். வறட்சி வந்தால் அதற்குப் பின்னாலே வருகிற காலங்களிலேதான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும். ஆனால் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பேயிருந்து வறட்சி ஆரம்பித்துவிட்டது, 33 லட்சம் டன்னை வைத்துக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் ரூபாய்க்கு படியரிசி போட்டார்கள். 1967-ம் ஆண்டு, 1968-ம் ஆண்டு, 1969-ம் ஆண்டிலே கூட புதுக்கோட்டையிலே 1½ ரூபாய் 2 ரூபாய்க்குத்தான் படியரிசி விற்றது. ஆனால் சென்ற ஆண்டு உற்பத்தியின் அளவு என்ன? சென்ற ஆண்டு 56 லட்சம் டன் உற்பத்தி என்று நீங்களே கணக்குக் கொடுத்து இருக்கிறீர்கள், சென்ற ஆண்டு புதுக்கோட்டையிலே அரிசி விலை என்ன தெரியுமா? படியரிசி 7 ரூபாய். என்ன காரணம்? அங்கே இன்றைக்கு நிலைமை என்ன? அந்தத் திடீர் விலையேற்றத்

[திரு. வீ. சா. இளஞ்செழியன்] [1975 பிப்ரவரி 24

திற்குக் காரணமென்ன? நாட்டிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் ஏன் சில அமைச்சர்களுக்கேகூடத் தெரியாமல் தஞ்சை மாவட்டத்திலே உள்ள செக் போஸ்ட்கள் எல்லாம் தூக்கப்பட்டன. என்றைக்கு அவையெல்லாம் தூக்கப்பட்டனவோ அன்றைக்கே விலை யேறிவிட்டது.

இந்த விவாதத்தைத் துவக்கிவைத்த திரு. கணேசன் அவர்கள் பேசினார்கள். போர்க்கால நடவடிக்கையை ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் ஆதரிக்கிறார்கள், லெவியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் பாதகமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சிறிய விவசாயிகளுக்குப் பாதகமாக அவர்களுக்கு அதிகமாக லெவி போடக்கூடாது என்று சொல்கிறது, அவ்வளவுதான்.

ஆனால் நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரத்தநாட்டிலே தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள், பொறுப்புகளை வகிப்பவர்கள், நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள், எப்படி அதைப் பாழ்படுத்துகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரத்தநாட்டிலிருந்து இரவு 9 மணிக்கு புறப்படவேண்டிய பஸ் இரவு 1½ மணிக்குப் புறப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் ஆர்.டி.ஓ. ரகுபதி என்பவர் அதை வழிமறிக்கிறார். காலம் தாழ்ந்து வருகிற அந்த பஸ்ஸில், நேரம் இல்லாத நேரத்தில் வருகிற அந்த பஸ்ஸில் 45 அரிசி சிப்பங்கள் வருகின்றது, அது பிடிக்கப்படுகிறது. அந்த அரிசி எடுத்துச்செல்லப்படுகிறது, அந்த பஸ்ஸில் அதை எடுத்துவந்தது பற்றி யார்மீதும் வழக்குப் போடப்படவில்லை. காரணம் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், மாவட்டச் செயலாளரும் போய்ச் சிபாரிசு செய்கிறார்கள். பிடிக்கப்பட்ட பஸ் விடப்படுகிறது. இன்றைய சட்ட மன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய தியாகராஜ காடுவெட்டியார் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவர் கூறியபோது, இங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லாரும் மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக எல்லா அதிகாரிகளும் இரவோடு இரவாக நடக்கிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தெரிந்தே அனுமதிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். அவர்கள் மேலும் கூறியபோது மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து நீங்களே சென்றுதான் பிடிக்கவேண்டும். வேறு எந்த



1975 பிப்ரவரி 24] [திரு. வீ. சா. இளஞ்செழியன்]

அதிகாரியும் பிடிக்கமுடியாது எல்லோருடைய ஒப்புதலின்பேரில் இது நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார்கள். இரவோடு இரவாக 10, 20 லோடுகள் அடிக்கிற லாரியை மாவட்ட ஆட்சித் தலைவர் பிடிக்கிறார். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உறவினராக இருக்கக்கூடிய ஒருவருடைய லாரி அது என்பதால், உடனே அதை விட்டுவிடுங்கள், பிடிக்காமல் விட்டுவிடுங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டார்கள். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்கவில்லை. அவர் அதைக் கேட்காததால் அவரிடமே அவர்கள் பதில் சொல்லிவிட்டு வந்தார்கள். உங்களை மூன்று நாட்களில் மாற்றுகிறோம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், மாற்றினார்கள். புதுக்கோட்டை தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு அதற்குள் 3 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாறிவிட்டார்கள், என்ன காரணம்? என்ன அங்கே நடக்கிறது? ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தினந்தோறும் காரைக்குடிக்குப் போய்க்கொண்டிருக்கிற லாரியைப் பிடிக்கிறார்கள், என்ன ஆயிற்று? விட்டுவிடுகிறார்கள்.

ஃபைர் சர்வீஸ் என்றால் நாம் எல்லாம், நெருப்பை அணைப்பதற்காக இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவருக்கே இந்தக் கதியா என்று ஃபயர் சர்வீஸ்காரர்கள் நினைத்து, மாவட்ட செயலாளருடைய நிலத்திற்கு இன்னொருவருடைய கேணியிலிருந்து ஃபயர் சர்வீசைக்கொண்டு தண்ணீர் திருடி இறைத்திருக்கிறார்கள். மச்சுவாடி பண்ணைக்கு உரம் போகிறது. மாவட்ட ஆட்சித் தலைவராலே இதையெல்லாம் கண்ட்ரோல் பண்ண முடியவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நியாயமாகச் செய்தால் மூன்று நாட்களிலே மாறுதல் வருகிறது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கூட ஆளுங்கட்சி சட்ட மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கத்தான் அந்த நல்ல நடவடிக்கையை எடுத்தார்கள். அவருக்கே அந்தக் கதி என்றால் அங்கே எப்படிச் செயல்பட முடியும்?

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற மிகப்பெரிய பஞ்சம் இயற்கையால் ஏற்பட்டது மட்டுமல்ல, செயற்கையாகவும் சென்ற ஆண்டு பஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதோடு இயற்கைப் பஞ்சமும் சேர்ந்து கொண்டது. அதனால்தான் புதுக்கோட்டை மாவட்டத்து மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன நிவாரணம் சொல்

லுகிறார்கள்? பஞ்சாயத்துக்குக் கூட மாண்புமிகு அன்பில் அவர்கள் வந்தார்கள். 10, 100 பேரை ஒரு குளத்தை வெட்டச் சொன்னார்கள். அங்குள்ள மக்கள் தொகை, 5,000 அல்லது 6,000 பேர் இருக்கும். ஆனால் 50, 100 பேருக்கு 1,500 ரூபாய் என்று இருப்பதை 2,500 ஆக்குங்கள் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். அவ்வளவுதான் பஞ்சாயத்துக்கள் எந்த வேலையையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. சாகின்ற மக்களைத் தடுத்து நிறுத்தும் அளவிற்கு ஒன்றும் செய்யவில்லை. விவசாயிகளுக்கு எதையும் செய்யவில்லை. மின்சார இணைப்பு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். முன்பு மின்சார அமைச்சரவர்களும் சொன்னார்கள். நான் நிலவள வங்கியின் தலைவராக இருக்கிறேன். இப்பொழுது நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பதால் இதிலிருந்து என்னைத் தூக்கி எறிய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

இதுபற்றிக் கேட்டால் ரிசர்வ் வங்கி 600 அடி இருந்தால்தான் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். இது கூட தவறான ஒப்பந்தம் செய்து கொண்டதால்தான் ஏற்பட்டது. சர்வதேச வங்கியிடம் அதுபோட்ட கண்டிஷன்களை ஒப்புக்கொண்டு அப்போதைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டதன் விளைவுதான் இது. இதற்குமுன் ஏ.ஆர்.சி.யில் சொன்னார்கள். ஒரு ஏக்கர் நிலம் இருந்தாலும் கிணறுக்கு லோன் கொடுக்கலாம் என்று இருந்தது. ஆனால் ரிசர்வ் வங்கி சர்வதேச வங்கி ஒப்பந்தத்திற்கு பின் இம்மாதிரி கண்டிஷன்களைப் போட்டார்கள். சர்வதேச வங்கி போட்ட கண்டிஷன்களைப் போட்டார்கள். ஆனால் இங்கேயுள்ளவர்கள் விவசாயிகளின் பரிதாபகரமான நிலைமையை அறியாமல் இருந்ததால் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல செக் போஸ்ட் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை. இப்படிப்பட்ட உங்களது நடவடிக்கைகளினால் மக்கள் திருப்தியாக இருக்க முடியவில்லை. விவசாயத்திற்கு என்று 60 லட்சம் ரூபாய்க்கு விதை நெல் வாங்கப் போவதாகச் சொல்கிறார்கள். 60 லட்சம் ரூபாய்க்கு விதை நெல் வாங்கினால் அது புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கூடப் போதாது. அப்படி வழங்குகின்ற விதையையும் சப்சிடியோடு கூடிய விதையாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்



திரு. மு. சுருளிவேல்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் முன்மொழிந்திருக்கக் கூடிய மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே கடந்த மூன்று தினங்களாகப் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இன்றைய தமிழகத்தில் எந்த அளவிற்கு இயற்கையின் சீற்றம் தன்னுடைய கொடூரத்தை விளைவித்திருக்கிறது, வரலாறு காணாத வறட்சியிலே அல்லல்படும் மக்களுக்கு, அவர்களுடைய நலன்களைப் பேணிக் காப்பதற்கு உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்றெல்லாம் மிகத் தெளிவாக இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுககு ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் கேள்வி நேரத்தின்பொழுது கூட அந்தப் பிரச்சினை இங்கே அலசி ஆராயப்பட்டது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளஞ்செழியன் அவர்களும் இதைச் சுட்டிக் காட்டினார்கள். நாம் புதிய கிணறுகளை வெட்டுவதற்கு நிலவள வங்கியின் மூலமாக கடன் தரும்பொழுது, உலக வங்கியும், ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவும் கூறிய ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 558 அடி தூரம் இருக்க வேண்டுமென்பதை, புதிய கிணறுகளுக்கு அந்த ஷரத்தை ஏற்றுக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்குத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலையில். இருக்கின்ற நீர்ப்பாசனத்தைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், வறட்சி நிவாரணத்திற்காக நிலவள வங்கிகளுக்கு நாம் புதிதாகக் கடன் கொடுத்திருக்கிறோம். ஆனால் பழைய கிணறுகளுக்கும் 558 அடி தூரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதிக்கும்பொழுது, நம்மால் எந்த நோக்கத்திற்காக அந்தப் பணம் ஒதுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இந்த நியாயமான கோரிக்கைக்கு மத்திய சர்க்காரின் மூலமாக ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவை

நிர்பந்தித்து அந்த நிபந்தனையை மாற்ற வேண்டும் அல்லது பாசன வசதிகளைப் பெருக்க, விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதியைப் பெருக்க இந்த அரசின் மூலமாக மாற்று வழிகளைக் கண்டுபிடித்து நிலவள வங்கிகள் மூலம் உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வறட்சியான நிலைமையில் எங்கள் போடி, கம்பம், தேனி, ஆண்டிப்பட்டி போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் வெளியிலே அதிக வட்டிக்குக் கடன் வாங்கி உற்பத்தி செய்யும் பருத்தி, வரலட்சுமி வகையைச் சேர்ந்தது. 40,000 குவிண்டாலும், அதைப்போல எம்.யூ.சி.-5 என்ற வகையில் 2,50,000 குவிண்டாலும் இன்றைக்கு விலை போகாமல் இருக்கிறது. தேனி மார்க்கெட்டில் இருக்கும் வியாபாரிகள் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து விவசாயிகளுக்குச் சேர வேண்டிய விலையைக் கொடுக்கத் தயங்குவதால் ஒட்டுமொத்தமாகச் சென்ற ஆண்டிலிருந்து பாதியாகக் குறைத்து விற்கும்படியான நிர்ப்பந்தத்தை உண்டாக்கி வருவதால் ஆயிரக்கணக்கான விவசாயிகளுடைய பருத்தி தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் எண்ணற்ற அவதிகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

இன்றைய தினம் மத்திய அரசு கூட 10 கோடி ரூபாயை "காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா"விற்கு ஒதுக்கி, அதைக் கூட இன்றைக்கு மகாராஷ்டிரத்திலே கொள்முதல் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நேரத்தில் நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த 10 கோடி ரூபாயில், தமிழக அரசின் நேரடிக் கண்காணிப்போடு, "டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஆஃப் தமிழ்நாடு"-ம் தேக்கி வைத்திருக்கிற பருத்தியை நியாய விலை கொடுத்து விவசாயிகளிடமிருந்து வாங்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு ஒரு மாநில அரசு என்ற முறையில் தன்னுடைய குறைந்தபட்ச நிதி ஆதாரங்களைக் கொண்டு இத்தகைய வறட்சியை எதிர்த்துப் போராடுகிறது என்பதை பல்வேறு உறுப்பினர்களும் கூறியதை அறிவோம். ஆனால் இப்படித் தத்தளிக்கின்ற மாநில அரசுக்கு, இயற்கையோடு போராடும் மாநில அரசுக்கு இன்றைய தினம் மத்திய அரசு தன்னுடைய கடமையை, தன்னுடைய பொறுப்பை சரிவர நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள்





கூறியதைப்போல் மத்திய அரசு தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் வகையில் நடந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் சீற்றத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தான் காரணம் என்ற அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இயங்குவது உண்மையிலேயே துர்ப்பாக்கியமானதாகும்.

நான்காவது நிதிக் குழுவிலேயும், ஐந்தாவது நிதிக் குழுவிலேயும் வறட்சிக்கும், வெள்ளத்திற்கும், பஞ்ச நிலைமைகளைச் சமாளிக்கவும் நிதி உதவிகளை அவர்கள் மானியமாக, திட்டத்தொகையுடன் சேர்க்காமல் வந்தார்கள். ஆனால் ஆறாவது நிதிக் குழுவைப் பொறுத்தவரையில், இன்றையதினம் உள்துறை அமைச்சராக இருக்கின்ற, அன்றையதினம் நிதிக் குழுவின் தலைவராக இருந்த பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இன்றையதினம் வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் ஆகியவற்றிற்கும் மத்திய அரசு மாநில அரசுக்கு நிதி கொடுத்தால் அதைத் திட்டத் தொகையுடன் சேர்க்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதனால் நம்முடைய நிதி ஆதாரங்கள் குறைக்கப்படுகிறது. இன்றைக்கு மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கும் சில அரசியல் கட்சிகள் அதை நன்கு உணர்ந்து மத்திய அரசினுடைய இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ்நாட்டு வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்றுத் தான் அந்த மன்றத்தில் வீற்றிருக்கிறோம் என்ற மனச்சாட்சியோடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தனை சோதனைகளை நாம் மேற்கொண்டிருக்கும் நேரத்தில், இந்த அவதிகளைச் சமாளிக்கும் நேரத்தில் நம்முடைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் சென்னை நகருக்கு வருகை தந்தார்கள்.

நாமெல்லாம் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்தோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து தன்னுடைய ஆட்சிக்கு வாக்களித்த தமிழக மக்கள் படுகின்ற அல்லல்களைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் தனிப்பட்ட தொழில் அதிபரின் அழைப்பை ஏற்று சென்னை நகருக்கு எலிசபெத் மகாராணியார் போல் திக்விஜயம் செய்துவிட்டு கோலாகலமாகச் சென்று விட்டார். இது உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது. கோடிக்கணக்கான மக்கள், லட்சக்கணக்கான மக்கள் இங்கு வறுமையின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொறுப்பிலே இருக்கக்கூடிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இங்கு அந்த மக்களைப்

[திரு. மு. சுருளிவேல்] [1975 பிப்ரவரி 24

பார்த்து ஆறுதல் வழங்காமல் திரும்பிச் சென்றுவிட்டிருப்பது உண்மையிலேயே அவர்கள் எந்த மனோபாவத்தோடு இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. நாம்தான் "இந்தியன், இந்தியன்" என்று கூறிக் கொண்டிருக்கிறோமே தவிர வடக்கே இருக்கக்கூடியவர்கள், மத்தியில் இருக்கக்கூடியவர்கள் நம்மை இந்தியர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

நம்முடைய அரசு பல்வேறு கோரிக்கைகளை வைத்தது. வெளி நாட்டிலிருந்து அரிசியை வரவழைத்துக் கொடுங்கள் என்று கேட்டது. தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அனுமதி கேட்டோம்; மறுக்கப்படுகிறது. அரிசி கொடுக்க மறுக்கிறார்கள்; அரிசி உற்பத்தி செய்ய காவிரித் தண்ணீர் கேட்டோம். கர்நாடகம் தவறான பாதையில் செல்வதைத் தடுத்து நிறுத்தி தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை மத்திய அரசு . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசிடம் அரிசி கேட்டோம். கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். 50,000 டன் கோதுமை மாதாமாதம் கொடுக்கிறார்கள். அது வேண்டாமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா?

திரு. மு. சுருளிவேல்: அவர்கள் வழங்கும் 50,000 டன் கோதுமையை மறுக்கவில்லை.

ஆனால் இந்த நாட்டு மக்கள் அரிசியை உட்கொண்டு பழக்கப்பட்டவர்கள். மத்திய சர்க்கார் நினைத்தால் அரிசியைக் கொடுக்க முடியும். அதைக் கொடுக்க தயக்கம் காட்டுவது ஏன்? தமிழர்கள், தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் தம்முடைய கலாசாரத்தைப் பழக்க வழக்கத்தைப் பின்பற்ற முடியாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் மத்திய சர்க்கார் தயக்கம் காட்டுகிறது. அரசியல் கண்ணோட்டத்தின் காரணமாக, கலாசார வேறுபாட்டின் காரணமாக, டில்லியில் இருக்கக்கூடியவர்கள், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், நாம் நம்மை இந்தியர்கள் என்று சொல்லிக் கொண்டாலும் நம்மைக் கவனிக்காத மனோபாவத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே நம்முடைய கடமை என்ன என்பதை தமிழ்நாட்டுச் சட்டமன்ற உறுப்பினர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கூறி ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 24]

* திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்: தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது ஒருசில கருத்துக்களை முஸ்லீம் லீக் சார்பில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் நிலவி வருகிற வறட்சியைப் பற்றியும், மக்களுடைய நிலைமையைப் பற்றியும் மேதகு ஆளுநர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழக மக்கள் வறட்சியாலும், பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கின்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு தமிழகத்தில் 65 சதவிகித மழை குறைவு காரணமாக உணவு உற்பத்தி குறைந்துள்ளது. அரசுடைய பசுமைப் புரட்சியின் காரணமாக நம்முடைய உற்பத்தி மிக அதிக அளவில் பெருகி அதன் மூலம் நம்முடைய தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் கூட உணவுப் பொருளை விநியோகிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இன்று உணவுப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் பருவ மழை தவறியதுதான். இராமநாதபுரம் மாட்டத்திலும் தமிழகத்தின் மற்றப் பகுதிகளிலும் ஏற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளாக தமிழக அரசு பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. அதற்காக பல நல்ல திட்டங்களை எடுத்து நிறைவேற்றி வருவதோடு மட்டுமல்லாமல் நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் வறட்சிப் பகுதிகளுக்குச் சென்று கண்காணித்து அந்த பணிகளை விரைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த நாலைந்து நாட்களுக்கு முன்னதாக நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்து வறட்சியாக இருக்கும் பகுதிகளை எல்லாம் சுற்றிப்பார்த்து அந்தப் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் முடிவு செய்தார்கள். வேலை வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிற மக்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறியதோடு அவர்களுடைய மற்றப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இதே சமயத்தில் நாம் மற்ற மாநிலங்களைப் பார்த்தால், பயங்கரமாக உள்ளது. உதாரணமாக குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அங்குள்ள அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கட்டளையை அதிகாரிகளுக்குப் பிறப்பித்திருக்கிறது. அதைச் சரியான முறையில் செயல்படுத்த முடியாத நிலையில் 12

[திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்] [1975 பிப்ரவரி 24

லட்சம் ரூபாய் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட உணவு அங்கே கையாடல் செய்யப்பட்டிருக்கிறது என்று அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர் இப்ராகிம் கலானியா புகார் செய்திருக்கிறார். ஆனால் அதே சமயத்தில் தமிழகத்திலே வறட்சி நிவாரணப் பணிகள் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றன. அமைச்சர்கள் நேரடியாகச் சென்று அந்தப்பகுதி மக்களுடைய குறைகளைக் கண்டறிகிறார்கள். அந்த மக்கள் எல்லாம் தமிழக அரசுடைய நல்ல திட்டங்களை எல்லாம் பாராட்டுகிறார்கள்.

வறட்சி நிவாரணப் பணியைச் செய்யும்போது சில சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன. உதாரணமாக, கிணறுகளை வெட்டுவது, ஆழப்படுத்த கடன் கொடுக்க வேண்டுமென்றால் அந்தக் கிணறுகள் ஒன்றுக்கொன்று 400 அடி தூரத்திற்குள் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த உத்தரவின் காரணமாக வறட்சிப் பகுதிகளில் கிணறுகளைத் தோண்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கடன் கிடைக்கவில்லை. இந்த நிலையை மாற்றி அவர்களுக்கெல்லாம் கிணறு வெட்ட கடன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் குடிதண்ணீர் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சென்னை மாநகர மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக 4,000 கிணறுகள் தோண்டவும், 5,000 குழாய் கிணறுகள் அமைக்கவும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதைப் போல் மற்ற நகராட்சிப் பகுதிகளிலும் குடிதண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு திட்டமிட்டு நிறைவேற்றித் தரவேண்டும்.

[பிற்பகல் 1-00]

நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், உதாரணத்திற்கு தென்காசி நகர மன்றத்தை எடுத்துக்கொள்ளலாம். தென்காசிக்குப் பக்கத்தில் குற்றாலம் இருந்தாலும், தென்காசியில் இருக்கும் மக்களுக்கு குடி நீர் இல்லாத கஷ்டம் இருக்கிறது. அங்கேயுள்ள மக்களுக்கு குடிநீர் கிடைக்கவேண்டுமென்பதற்காக நகர மன்றம் ஒரு திட்டத்தைத் தீட்டி, அதற்காக எல்.ஐ.சி. யிடமிருந்தும் கடன் பெற்று இருக்கிறார்கள். அந்தக் கடனைப் பெற்று கிட்டதட்ட மூன்று ஆண்டுகள் ஆகிறது. இதுவரையில் அந்தத் திட்டத்திற்கான வேலை அங்கே செய்யப்படவில்லை. ஆனால் அங்கே நடக்கிற விநோதம் என்னவென்றால், அந்த நகர சபை எல்.ஐ.சி.யிடமிருந்து வாங்கிய கடனுக்கு மக்கள் வரி பணத்திலிருந்து வட்டி கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் குடி நீர் திட்டத்திற்காக வாங்கப்பட்ட பணம் அதற்காக



1975 பிப்ரவரி 24] [திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்]

செலவழிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்து சட்ட மன்ற உறுப்பினர் கதிரவன் அவர்கள்கூட பலமுறை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குடி நீர் திட்டம் நிறைவேற அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. என்றுமே வற்றாத நதியாக இருக்கும் தாம்பிரபரணி கடந்த 2–3 மாதங்களுக்கு முன்பு வற்றிப்போயிருந்தது. அந் நதியை நம்பி பயிரான நிலங்கள் எல்லாம் எங்கே கருகி விடுமோ என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால் திடீரென மழையின் ஒத்துழைப்பு மூலம் அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்களில் எல்லாம் ஓரளவு விளைச்சல் வரும் சூழ்நிலை இருக்கிறது. அப்படி விளைகிற நிலங்களில் இருந்து லெவி கட்டாயமாகத் தர வேண்டுமென்று இருக்கிறது. அரசுக்கு நெல் கொடுக்க விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அரசு வைத்து இருக்கும் லெவி முறையானது மிகவும் விவசாயிகளை பாதிப்பதாக இருக்கிறது. ½ ஏக்கர் நிலம் வைத்து இருக்கும் விவசாயிக்கும், 5 ஏக்கர் நிலம் வைத்து இருக்கும் விவசாயிக்கும் ஒரே மாதிரியான அடிப்படையில் லெவி கொடுக்கமுடியாத நிலையில் லெவி போடப்பட்டுள்ளது. மகசூல் அடிப்படையில் லெவி போடவில்லை. ஆகவே, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், மகசூல் அடிப்படையில் லெவி முறை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வறட்சி பகுதியில் இருக்கும் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டு இருப்பதை நான் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரை மீது சில கருத்துக்களை நான் சொல்ல நினைக்கிறேன். ஆளுநர் உரையைப் பொதுவாக எடுத்துக்கொண்டால், கடந்த ஆண்டில் இந்த அரசு என்ன திட்டங்களை, என்ன கொள்கைகளைச் சொன்னது, அது எந்த அளவில் நிறைவேற்றப்பட்டது, வரும் ஆண்டில் என்ன கொள்கைகள், திட்டங்கள் செயல்படுத்த இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையில் இடம் பெற்று இருக்கும். ஆனால் இந்த உரையில் கடந்த கால திட்டங்களை எந்த அளவு அரசாங்கம் நிறைவேற்றியது, எந்தக் கொள்கையின் அடிப்படையில் செயலாற்றிற்று என்பது இடம் பெறாமல் இருக்கிறது. வரும் ஆண்டிற்கான திட்டங்கள், கொள்கை விளக்கங்கள் என்ன, புது அம்சங்கள்,

[திரு. என். டென்னிஸ்] [1975 பிப்ரவரி 24

சமுதாயத்தில் செய்யப்போகும் மாற்றங்கள், இந்த உரையில் இடம் பெறுமல் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் விண்ணப்பம் செய்யும் நிலையில் இந்த உரை காணப்படுகிறது. இந்த உரையானது ஒரு பார்மல் ரிப்போர்ட்டாக, அதைவிட ஒரு பார்மல் ஸ்டேட்மென்ட்டாக இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

மற்றும், இந்த மாநிலத்தை வாட்டிக்கொண்டிருக்கும் பெரிய பொருளாதாரப் பிரச்சினைகள், அதைத் தீர்ப்பதற்கான திட்டங்கள், வழிவகைகள் இந்த உரையில் இடம் பெறவில்லை. விலைவாசி உயர்வு, குறிப்பாக அத்யாவசியப் பண்டங்களின் விலை உயர்வு, உணவுப் பண்டங்களின் விலை உயர்வு, படித்தவர்கள் மத்தியிலே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் மாணவர்கள் மத்தியில் காணப்படும் அமைதியின்மை, விவசாயிகளுக்கு இருக்கும் கஷ்டங்கள், உரம் கிடைக்காததால் விவசாயிகள் கஷ்டப்படும் நிலைமைகள், நெசவாளர் களுக்கு இருக்கும் சங்கடங்கள் தொழிலாளர்கள் மத்தியில் காணப் படுகிற கஷ்டங்கள், பொதுமக்களுக்கு இருக்கும் பொருளாதார சிக்கல்கள், பிரச்சினைகள், மின்சார வெட்டு, சிமெண்ட் தட்டுப்பாடு, மண்ணெண்ணெய், சீனி கிடைக்காத நிலை, காவிரி பிரச்சினை போன்ற முக்கியமான பிரச்சினைகள் இந்த கவர்னர் உரையில் இடம் பெறுமல் இருக்கிறது.

ஆளுநர் உரையில் ஆரம்பத்தில் பார்த்தால் வறட்சியைப் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பஞ்சத்திற்கு, மழை குறைவு என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனல் மழை குறைவு பஞ்சத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஒரே காரணமாக அது இருக்க முடியாது. அல்லது ஏக காரணமாக இருக்க முடியாது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். பஞ்சத்திற்குக் காரணம் மழை பொய்த்து விட்டது என்று கூறி கடமையைத் தட்டிக் கழிப்பதை விட அதைப் போக்குவதற்கு அரசு முன்பு சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கவேண்டும். பல முறை இந்த மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆதலால் அவ்வித நிலைமைகளைச் சமாளிக்க திட்டங்களை முன்பே எடுத்து இருந்தால் நல்ல முறையில் இவற்றைச் சமாளித்து இருக்க முடியும். வறட்சி பஞ்சம் ஏற்பட்டு இருக்காது. உணவு தானியங்கள் கிடைக்காமல் மக்கள் பசியால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். அத்யாவசியப்பண்டங்களின் விலை உயர்ந்து இருக்கிறது. குடி நீர் கஷ்டம் இருக்கிறது. கன்றுக் காலைகள் ஆகாரம் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கின்றன. மக்களுக்கு குடிநீர்



1975 பிப்ரவரி 24] [திரு. என். டென்னிஸ்]

இல்லாத நிலையில், கன்று காலிகளுக்கு எங்கே தண்ணீர் கொடுக்க முடியும்? படி அரிசி ரூபாய் 8 விற்கிறது. அரிசி சாப்பிட்டுப் பழகிய மக்கள் இன்று கோதுமை, சோளம் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். அரிசி வாங்கிச் சாப்பிட மக்களிடம் பொருளாதார வசதி இல்லை. வாழ்வதற்கு வசதி இல்லாத காரணத்தால் மக்கள் வாழ்க்கை வசதி தேடி வெளியூர் செல்லவேண்டியிருக்கிறது. அங்கேயும் அவர் களுக்கு தொழில் கிடைக்காததால் அவர்கள் வாழ வழியின்றி மறுபடியும் அவர்கள் ஊருக்கே அலைந்து திரும்பி வரவேண்டியிருக் கிறது. மனிதனுக்கே ஆகாரம் இல்லாததால் அவர்கள் கன்று காலி களை விற்க வேண்டியதாகயிருக்கிறது. அதோடு கன்று காலிகளுக்கு ஆகாரம் இல்லை, தண்ணீர் இல்லை. மக்களுக்கு இருக்கும் பஞ்சம் இந்த வகையில் ஓரளவு தீர்ந்தாலும், நாளடைவில் கன்று காலிகள் இல்லாத பஞ்சம் வந்து விடும். இன்று கன்று காலிகள் விவசாயி களால் விற்கப்பட்டு கேரளத்திற்குச் சென்று கொண்டு இருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

200 கோடியாக இருந்த வருமானம் தற்போது 500 கோடியாக இந்த 8 ஆண்டு காலத்தில் ஆகியிருக்கிறது. ஆனல் மக்களுடைய பிரச்சினைகள் கஷ்டங்கள் ஒன்றும் தீர்ந்தபாடில்லை. ஆட்சியைப் காப்பாற்றுவதற்கும், தங்கள் கட்சியைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் ஆகிய அரசியல் பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்தி வருகிறதே தவிர பொருளாதாரப் பிரச்சினைகளில், மக்கள் பிரச்சினை களில் அரசு கவனம் செலுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதனல் பொதுமக்கள் இதன் கேடுகளையும் கஷ்டத்தையும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இவற்றைத் தீர்ப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வேகமாக தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தீவிரமான திட்டங்களை நிறைவேற்றவேண்டும். நிரந்தரமான திட்டங்களை நிறைவேற்றவேண்டும். மாஸ்டர் பிளான் தீட்டவேண்டியது மிகவும் அவசியம். விரிவான திட்டம் தீட்டினல்தான் நிலையாக இந்தப் பிரச்சினையை சமாளிக்க முடியும். சிறு சிறு பணிகளாகச் செய்தால், இந்தப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண முடியாது. அது ஒரு கண்துடைப்பு வேலையாகத்தான் இருக்கும். ஆதலால், இந்தப் பிரச்சினையை சமாளிப்பதற்கு பாழாகப்போகக்கூடிய தண்ணீரை

பயன்படுத்துவதற்கு அணைகள் கட்டுவதற்கும், பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை விவசாயத்திற்கு3, குடிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் பல திட்டங்களை தீட்டவேண்டும். இவ்வளவு பெரிய உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதன் காரணம் என்ன?

கடந்த ஆண்டு ஆளுநர் அவர்களின் உரையில் 12-வது பத்தியில் இந்த மாநிலம் ஒரு உபரி மாநிலம் என்று குறிப்பிட்டிருக்கிறார், வறட்சி ஆரம்பித்து உடன் இவ்விதமான பற்றாக்குறை இவ்வளவு பெரிய அளவுக்கு ஏற்படுவதற்குக் காரணம் என்ன? பதுக்கல், கடத்தல், கருஞ்சந்தைதான் காரணம். உணவுக் கொள்கையில் நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற கோளாறுகள்தான் இதற்குக் காரணம். சில மாதங்களுக்கு முன்பு குறிப்பிட்ட சில வியாபாரிகளுக்கு மாத்திரம் மாவட்டத்திலிருந்து உணவு தானியத்தை வெளியே கொண்டு போகலாம் என்று ஒரு உத்தரவு பிறப்பித்ததினால், லாரிலாரியாக உணவு தான்யம் வெளியே கொண்டுபோகப்பட்டு விட்டது. மாவட்டங்களுக்கு வெளியே மட்டுமல்ல, மாநிலத்திற்கு வெளியேயும் தேசத்திற்கு வெளியேயும் கொண்டு செல்லக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. உணவுக் கொள்கையில் ஏற்பட்டிருக்கிற ஸ்திரமற்ற நிலை, விநியோகத்தில் ஏற்பட்டிருக்கிற கோளாறுகள் இந்த உணவு நெருக்கடிக்குக் காரணமாக அமைந்தன. உணவு உற்பத்தியை இன்னும் அதிகமாக பெருக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை ஒன்றையும் எடுக்கவில்லை.

மாநில அரசும், மத்திய அரசும் மனிதாபிமானத்தோடு அரசியலை இதில் கலக்காமல் நிதி ஒதுக்குவது மிகவும் அவசியமாகும். ஏற்ற வேளையிலே ஏற்றவாறு நிதி உதவி மக்களுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. மத்திய அரசு ரூ. 7½ கோடி ஒதுக்கியிருக்கிறது. கடந்த காலத்தில் ரூ. 17 கோடி ஒதுக்கியது. மத்திய அரசு தேவைக்கேற்ப நிதி உதவியை மாநில அரசுக்கு வழங்கவேண்டியது மிகவும் அவசியம். அதற்கான நடவடிக்கையை மாநில அரசு எடுக்க வேண்டும். தேவைக்கேற்றபடி அரிசியை ஒதுக்காவிட்டால் இதை விட பெரிய நெருக்கடி குறுகிய காலத்தில் வந்து சேரும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் மக்கள் பலவிதமான நெருக்கடிக்கும் கஷ்டத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

லெவி முறையை பற்றி சொல்லவேண்டுமென்றால், சிறு சிறு விவசாயிகள் மழையின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது மிகவும் எடுபடியாக நடவடிக்கை எடுத்து, லெவி வசூல்





செய்கிறார்கள். 50 சென்ட் நிலம் உள்ளவர்களிடம் கூட லெவி வசூலிக்கப்படுகிறது. கரிவு ஏற்பட்டாலும் கூட லெவி வசூலிக்கப்படுகிறது என்று கேள்விப்படுகிறோம். இன்னும் உர விநியோகத்தை எடுத்துக்கொண்டால் ஏற்ற விலையில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியினால் பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 17½ கோடி மத்திய அரசும், மாநில அரசும் செலவிட்டும் இம்மாவட்டத்தில் இன்னும் வறட்சிப்பணிகள் தொடங்கியதாகக் காணவில்லை. அதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். வறட்சிப்பணிகளுக்காக அங்கு வேண்டிய தொகையை ஒதுக்கி, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

<u>திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்</u>: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய ஒரு மெம்பர் தி.மு.க.விலிருந்து கட்சி மாறி இருப்பதாக லாபியில் பேசிக்கொள்ளப்படுகிறது. லாபியும் இந்த மன்றத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படுவதால், சபைக்கு ஏதாவது அதுபற்றி அறிவிப்பு வந்திருக்கிறதா, அப்படி வந்திருந்தால் அதுபற்றி தலைவர் அவர்கள் சபைக்கு அறிவிப்பார்களா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அம்மாதிரி அவைத் தலைவருக்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை.

<u>திரு. மா. வே. நாராயணசாமி</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசு தற்போதைய வறட்சி சூழ்நிலையில், நெருக்கடியான சூழ்நிலையில் என்னென்ன பணிகளை மிகத் திறம்பட திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது என்பதை மிகத் தெளிவாக ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த அரசைப் பொறுத்த மட்டிலே சோதனைகளையெல்லாம் கூட சாதனைகளாக ஆக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் பெற்றுள்ள ஒரு அரசு என்பதனை நிரூபிக்கக் கூடிய வகையில் இந்த அரசு போர்க்கால நடவடிக்கை என்று சொல்லப்படத்தக்க வகையிலே பல்வேறு பணிகளை, வறட்சி நிவாரண பணிகளை மேற்கொண்டு இருப்பதை ஆளுநர் அவர்கள் தனது உரையிலே தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். தற்பொழுதுள்ள உணவு

[திரு. மா. வே. நாராயணசாமி] [1975 பிப்ரவரி 24

தட்டுப்பாடு சூழ்நிலை, குடிநீர் தட்டுப்பாடு சூழ்நிலையில் கிராமத்தி லுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் உழைக்கின்ற மக்களுக்கெல்லாம் வாங்கும் சக்தியை உருவாக்கிடத்தக்க வேலை வாய்ப்புத் திட்டங் களையும், இன்னும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல்வேறு விதமான பணிகளையும், பல்வேறு விதமான உதவிகளையும் பலவற்றையும் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த அரசு மேற்கொள்ளக்கூடிய அத்தனை பணிகளையும் நான் மனதார பாராட்டுகிறேன். அந்தப் பணிகள் சிறப்புற நடைபெறுதல் வேண்டும் என்பதில் நிச்சயமாக நாட்டு மக்கள் மெத்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்பதனையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு கிறேன்.

குறிப்பாக குடி நீர் வழங்கும் திட்டம் வறட்சி நிவாரணப் பணி களில் முதலாவதாகக் கருதப்படவேண்டியிருக்கிறது. அதைத் தான் நம்முடைய அரசும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அந்த வகையிலே எல்லா கிராமங்களுக்கும் எல்லா மக்களுக்கும் குடி நீர் வழங்குவதிலே நம்முடைய அரசு மிக சிறப்பான முறையில் பல்வேறு திட்டங்களை ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தீட்டி அவைகள் மிக நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், இப்பொழுது வறட்சி சூழ்நிலையில் அந்தப் பணிகளை மிகவும் தீவிரப் படுத்தவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியம் பல நகரங்களிலும் கிராமங்களிலும் குடிநீர் திட்டங்களை நிறைவு செய்திருந்தாலும், என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களிலும், நகரங்களிலும், அதுவும் என்னுடைய தொகுதியாக சென்னை மாநகரத்தை ஒட்டியுள்ள தொகுதி திருவொற்றியூர் தொகுதி யில் பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், குறிப்பாக கத்திவாக்கம், மாதவரம், வில்லிவாக்கம், அம்பத்தூர் மற்றும் அதை ஒட்டியுள்ள இன்னும் சில கிராமங்கள், குறிப்பாக மணலி போன்ற கிராமங்கள் ஏராளமான தொழிற்சாலைகள் அங்கே வளர்ந்திருக்கக்கூடிய காரணத் தினால், அது போன்ற பகுதிகளுக்கும் இன்னும் சில பகுதிகளுக்கும் குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் திட்டங்களை மேற்கொள்ள ஆய்வுப் பணிகளுக்காக தொகை செலுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளை விரைவாக நிறைவேற்றவேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைய வறட்சி சூழ்நிலையில் பல கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதை நாம் காண முடி கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் மணலி போன்ற பகுதி யில் இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகளுக்கு குடிநீர் பெரிய



1975 பிப்ரவரி 24] [திரு. மா. வே. நாராயணசாமி]

குழாய்கள் மூலமாகக் கொண்டு செல்லப்படுகிறது. அந்தப் பெரும் குழாய்கள், பைப் லைன்ஸ், பல கிராமங்களின் வழியாகச் செல்கின்றன. அந்தக் கிராம மக்கள் குடிநீர் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண் டிருக்கிற இந்த நேரத்தில், என்ன தான் நாம் போர் வெல்ஸ் போட்டு குழாய்கள் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டாலும், அவசர அவசியத்தை முன்னிட்டு, குறிப்பாக எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைக்கு மெட்ராஸ் ரிபைனரீஸ்— செல்லக்கூடிய பைப் லைன்ஸிலிருந்து ஒரு குறிப்பிட்ட நேரத்திற் காகவது, குறிப்பிட்ட அளவிற்காவது குடிநீரை அந்த பைப் லைன்கள் செல்லக்கூடிய கிராமங்களில் இருக்கக்கூடிய தண்ணீர் தட்டுப் பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு வழங்குமாறு ஏற்பாட்டினைச் செய்யலாம்.

அடுத்து, இந்த குடிதண்ணீர் திட்டங்கள் எல்லா கிராமங் களுக்கும், இந்த வறட்சி நிவாரணப் பணிகள் என்ற அளவிலே கிடைக்க வேண்டும். நம்முடைய அரசு எடுத்துவருகிற நடவடிக்கை வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் அந்தப் பணிகளை விரைவாக அரசு அலுவலர்கள் மேற்கொள்கிறார்களா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

குடிதண்ணீர் திட்டங்கள் சில கிராமங்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால் அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படு கின்ற கிராமங்களுக்கு பக்கத்தில் இருக்கிற அரிசன காலனிகளுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடு இல்லாத நிலை இருக்கிறது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம் பைப் லைன்ஸ் மூலம் எடுத்துச் செல்கிற தண்ணீரை அரிசன காலனிகளுக்கு எடுத்துச்செல்ல முடியாது என்பதாகும். அந்த நிலையை மாற்றி அரிசன காலனி களுக்கும் குடிதண்ணீர் வழங்கக்கூடிய ஏற்பாடுகளை அமைச்சர்கள் அதற்கானப் பணிகளை மேற்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்; விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்புகளை வழங்கும் தொழில்களை பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை நம்முடைய அரசு கொண்டு வருகிறது. அதை வரவேற்கிறோம். அதேநேரத்தில், என்னுடைய தொகுதியில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற கிராம மக்கள் விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டதால் வேலையில்லாமல் திண்டாடு கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் தொழிலதிபர்கள் வேலையில் லாமல் திண்டாடுகின்ற விவசாயிகளுக்கு வேலை கொடுக்க வேண்டும்;

வறட்சி நிவாரணப் பணிகளில் தொழிலதிபர்களும் பங்குகொள்ள வேண்டும். வேலை வாய்ப்பு இல்லாத கிராம மக்களுக்கு "காஷுவல் லேபர், டெம்பரரி லேபர்" என்ற அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கக்கூடிய பிரச்சினை நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய வகையில் இருக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள பம்புசெட்டுகளில் 1/3 பாகம் பம்புசெட்டுகளுக்கு, 7 லட்சம் பம்புசெட்டுகளுக்கு நம்முடைய தமிழ்நாட்டில் மின்னிணைப்புக் கொடுத்திருக்கிறோம். 1974–75 ஆம் ஆண்டில் 30,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. 1975–76 ஆம் ஆண்டில் 60,000 பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இது பெரிதும் வரவேற்கத் தக்கது.

ஆனால் அதே நேரத்தில், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ரெட் ஹில்ஸ் பகுதியில் இரண்டு கிணறுகளுக்கிடையே 100 மீட்டர் தூரம் இடைவெளி இருந்தால்தான் மின்னிணைப்புக் கொடுக்கப்படும் என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தடையை நீக்க வேண்டும். மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அந்தத் தடையை நீக்கிவிடுவதாகச் சொல்லி இருந்தார்கள். ஆகவே, விரைவில் அந்தத் தடையை நீக்கி, நல்லமுறையில் மின்னிணைப்பு வழங்கிட உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு வியாபாரத்தைப் பொறுத்த வரையில், சைதை வட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தபோதிலும், சிட்டி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் வருகிறது. சைதை வட்டம் பெல்ட் ஏரியாவாக இருப்பதால், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அங்கு அரிசி கொண்டுவர முடியவில்லை. ஆகவே, சென்னை நகர மக்களுக்கு குடும்ப கார்டு வழங்கப்பட்டிருப்பதைப்போல அந்தப் பகுதிக்கும் வழங்கப்பட வேண்டும். கார்டு வழங்கப்பட்டிருந்தாலும், அது 3 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கப்பட்ட கார்டின் அடிப்படையில் உணவுப்பொருள் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் அந்த கார்டு களுக்கு சர்க்கரை மட்டும்தான் வழங்கப்படும் நிலை இருக்கிறது. இன்னும் ஏராளமான மக்கள் கார்டு இல்லாமல் இருக்கிறார்கள். அதேநேரத்தில் சில இடங்களில் தவறான கார்டுகளை பயன்படுத்துவ





தாகச் சொல்லப்படுகிறது. சென்னை மாநகரில் புதிய கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல சைதை வட்டத்திலும் சரியான கணக்கு எடுக்கப்பட்டு, எல்லோருக்கும் கார்டு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டமும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறோம். சில இடங்களில் விவசாயம் நடைபெற்றிருந்தாலும் கூட மொத்தத்தில் செங்கற்பட்டு மாவட்டம் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. 4½ கோடி ரூபாய் செங்கற்பட்டு மாவட்ட வறட்சி நிவாரணப் பணி வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென்று ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் டெவலெப்மென்ட் ஸ்கீம் இருக்கிறது. இந்த பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும். ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களுக்கு 20, 30 மைல் சுற்றளவில் வளர்ச்சியடைவதற்கு மத்திய அரசு திட்டமிட்டு நிதி உதவி அளித்து வருகிறது. அதைப் போன்று சென்னைக்கும் ஏற்கெனவே நிதி உதவி அளித்திருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அளிக்கவில்லை. இனிமேலாவது நிதி உதவி அளிக்க வேண்டும். அதன் மூலம் சென்னை பெருநகர் திட்டமிட்ட முறையில் வளர்ச்சியடையும் என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். அழகுத் தேவர் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையானது நல்லமுறையில் பல அம்சங்களைக் கொண்டதாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் வறட்சியைப் பற்றி, குறிப்பாக எங்களுடைய ராமநாதபுரம் மாவட்டம் ரொம்ப வறண்ட பகுதியாகப் பாதிக்கப்பட்டு, இங்கே பேசியவர்கள் எல்லாம் அங்குள்ள வறட்சி நிலையைப்பற்றி அதிகமாகப் பேசினார்கள். கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்யாத காரணத்தால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும் வறட்சியாக இருக்கிறது. அதனால் தமிழ்நாடு சர்க்கார் நல்லமுறையில்

[திரு. எஸ். அழகுத் தேவர்] [1975 பிப்ரவரி 24

பல திட்டங்களைத் தீட்டி, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணப் பணிக்காக ஒதுக்கியிருக்கிறது. கடந்த 15-ந்தேதி நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட எல்லா அதிகாரிகளையும் அழைத்து, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 95 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும், எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அந்தப் பணம் ஜனத்தொகையின் அடிப்படையில் பங்கீடு செய்து, நல்ல முறையில் பணிகள் நடந்து வருவதாக கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தப் பணம் போதாது என்று நான் எண்ணுகிறேன். ஒன்றியம் ஒன்றுக்கு குடி தண்ணீருக்காக 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிக மிக குறைவு. இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்த 300 ரூபாய், 500 ரூபாய்தான் செலவிடப்படுகிறது. புதிய கிணறுகள் வெட்ட வேண்டுமானால் பெரும் தொகை செலவாகும். இந்தப் பணத்தினால் வேலை வாய்ப்பும் பெருகவில்லை. ஆகவே, மேலும் அதிகமாகச் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். கிராமச் சாலைகள் போடுதல், கண்மாய்களை ஆழப்படுத்தல், ஊருணிகளை ஆழப்படுத்தல், போன்ற திட்டங்களுக்கெல்லாம் பணம் ஒதுக்கினால் கிராம மக்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எண்ணுகிறேன்.

[பிற்பகல் 1-30]

இப்போது ஒதுக்கியிருக்கிற பணத்திற்குத் தக்கபடி பல திட்டங்களை வரையறை செய்து அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறோம். பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் பஞ்சாயத்துக்கள் மூலம் கொடுத்திருக்கிறோம். மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. திட்டமிட்டும் பணிகள் நடக்கவில்லை. ஆனால் இப்படி பல திட்டத்தை வரையறை பண்ணி வைத்ததனால் கிடைத்த ரூபாயை சரியான முறையில் செலவழிக்க முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு கிராமத்தில் வேலை நடைபெறுகிறது. சீராக எல்லா கிராமங்களிலும் வேலை நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை. எல்லா கிராமங்களில் உள்ள மக்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அந்தந்த கிராமத்தில் என்ன என்ன வேலை இருக்கிறதோ—மண் வெட்டுவது—ரோடு போடுவது—கண்மாயை ஆழப்படுத்துவது—கிணறுகளை வெட்டுவது போன்று எந்த எந்த



1975 பிப்ரவரி 24] [திரு. எஸ். அழகுத் தேவர்]

வேலை இருந்தாலும் அதை எடுத்து—இந்த வறட்சிக் காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் வேலை நடைபெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தொடர்ந்து நாளைய தினம் பேசலாமே?

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர் அந்தக் கட்சியில் ஒரு முக்கியமான உறுப்பினர். இன்றைக்கு 5 நிமிடம்தான் பேசியிருக்கிறார். மேலும் 10 நிமிடங்கள் பேசக்கூடும். ஆகவே, அவரை மீண்டும் தொடர்ந்து நாளைய தினம் பேச அழைக்கலாம்.

திரு. எஸ். அழகுத் தேவர்: நான் இன்னும் 2 நிமிடங்களில் இன்றே பேசி முடித்துவிடுகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி விநியோகம் செய்ய வேண்டும் என்கிறபோது சங்கங்கள் இல்லாத கிராமங்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது ஏழெட்டு கிராமங்களைச் சேர்த்து 500 கார்டுகளுக்கு மேல் போகாமல் எல்லா கிராமங்களுக்கும் அரிசி சப்ளை செய்ய ஏற்பாடு செய்து வந்தார்கள். அந்த வேலை இப்போது நன்கு நடைபெறுகிறது. சர்க்காரைப் பாராட்ட வேண்டிய விஷயம். இராமநாதபுரம் மாவட்டம் என்றைக்கும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதனால் இந்த நேரத்தில் ஓமெட்டுப்பட்டியில் புதிய கண்மாய் ஏற்படுத்தி புதுக்குளம் ஆகியவற்றை செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும். புதுக் கண்மாயை நல்லமுறையில் ஆழப்படுத்தினால் வருகிற ஆண்டுகளில் அதனால் அங்குள்ள மக்களுக்கு நல்ல பயன் ஏற்படும்.

இன்னும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிகமான பணம் ஒதுக்கி எல்லா கிராமங்களிலும் வேலை நடக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, இவ்வளவு நேரம் பேச வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

78. Notification issued in G.O. Ms. No. 1374, Rural Development and Local Administration, dated the 30th May 1974 in regard to declaration of the areas forming the Rajapalayam local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

79. Notification issued in G.O. Ms. No. 177, Excise and Prohibition, dated the 2nd September 1974 in regard to certain amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

### B. *Reports, Notifications and Other Papers.*

23. Errata issued in Memo. No. 8398/ME/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to Notification No. II (2)/RUL/ 100 (d)/74, published at pages 5 to 9 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

24. Errata issued in Memo. No. 7731/ME/74-1, Rural Development and Local Administration, dated the 2nd March 1974 to Notification No. II/(2)/RUL/100(b)/74, published at pages 1 to 5 of Part II—Section (2) of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

25. Errata issued in Memo. No. 164694/ME/74-1, Rural Development and Local Administration, dated the 8th April 1974 pages 5 to 7 of Part II Section 2 of the *Tamil Nadu Government* to Notification II-1 No. 5773/(1) of 1973 published at pages 5 to 7 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 3rd December 1973.

26. Report of the Committee on Public Undertakings on the accounts relating to the Tamil Nadu Electricity Board contained in the Report of the Comptroller and Auditor-General of India for 1970-71.

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 பிப்ரவரி, 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### *Oriental Manuscripts Library.*

* 61. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the State Government Oriental Manuscripts Library located at the Madras University Library Campus has been receiving grants and loans from the Central Government; and

(*b*) if so, the details thereof for the last three calendar years?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: (அ) & (இ) அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் கடனோ அல்லது உதவி தொகையோ மத்திய அரசிடமிருந்து பெற வில்லை.

<u>திரு. என். டென்னிஸ்</u>: தலைவர் அவர்களே, இப்படிக் கடனோ உதவியோ பெறுவதன்மூலம் அந்த நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கு வழி ஏற்படும் அல்லவா? ஆகையால், அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: தலைவர் அவர்களே, அருமையான சுவடிகள் பலவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றைப் படி எடுப்பதற்கும் போதுமான அளவுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்பதை மத்திய அரசுக்கு அவ்வப்போது வற்புறுத்தி வருகிறோம். 1960–61 ஆம் ஆண்டில் மட்டும் அவர்கள் ரூ. 1,09,960 உதவித் தொகை அளித்தார்கள். அதற்குப்பிறகு அளிக்கவில்லை. கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்திற்கான முழுச் செலவுப் பொறுப்பையும் இப்பொழுது தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Oriental Manuscripts Library contains very old rare books in different fields in all languages in India. I think it is an asset to our State, Now we find that there

is no arrangement for carrying on linguistic studies, research work in Dravidian philology in our State. Such books are not available elsewhere. So, will the Hon. Minister think of declaring it as a centre for linguistic studies and research and give aid to it?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதில் மிக அருமையான சுவடிகளெல்லாம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 65,596 சுவடிகள் பல்வேறு மொழிகளில் இருக்கின்றன. தமிழ், சமஸ்க்ருதம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, இஸ்லாமிய மொழிகள் போன்றவைகளில் இருந்து வருகின்றன. மொழித் துறையில் ஆராய்ச்சி செய்கின்றவர்களும் மற்றவர்களும் அந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். சுவடிகளைப் படி எடுக்கின்ற வேலையும், பழஞ்சுவடிகளையெல்லாம் வரிசைப்படுத்தி "காட்டலாக்" பண்ணும் வேலையும் நடைபெற்று வருகிறது. 51,102 சுவடிகள் படி எடுக்கப்பட்டு, வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன. 14,494 சுவடிகள் படி எடுக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆராய்ச்சித் துறைக்கு அந்த நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு முழுமையாக எல்லா உதவியும் செய்து தரப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பழமையாக இருக்கக்கூடிய இந்தச் சுவடிகளை நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் அமைத்திருப்பது மிகவும் போற்றத்தக்கதுத்ான். "ஃபோட்டோஸ்டாட்" காப்பிகள் ஏதாவது எடுத்து அவை பாதுகாக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் எனக்குக் கிடைக்கப்பெறவில்லை. பழஞ்சுவடிகளைப் படி எடுத்துத் தனியாகக் காக்கவேண்டும் என்ற முயற்சி இருக்கிறது. "போட்டோஸ்டாட் காப்பி" எடுக்க வேண்டும் என்ற எண்ணம்தான். அந்த முயற்சி அங்கே இருக்கிறதா என்பதற்குத் தெளிவாகக் விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. 51,102 பழைய சுவடிகள் படி எடுக்கப்பட்டு காட்டலாக் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், படிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூலகத்தில் இருக்கும் பழங்காலச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு உதவி செய்கிறதா? அல்லது மாநில அரசே அந்தச் சுவடிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறதா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. மாநில அரசுதான் பெரும்பகுதி ஏற்றுக்கொண்டு வருகிறது. தனிக் கேள்வி போட்டால் எந்த எந்த தலைப்பில் உதவி கிடைத்தது என்பதைப் பற்றிக் கூறலாம்.

## விஞ்ஞான காட்சி நிலையங்கள்.

* 62 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஞ்ஞான ஆர்வத்தையும், அறிவையும் வளர்க்கும் வகையில் மாவட்ட தலைநகரங்களில் விஞ்ஞான காட்சி நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரில் விஞ்ஞான காட்சி நிலையம் ஒன்றை அமைக்கச் செயற்குறிப்பு இருந்ததே, அது கைவிடப்பட்டதா? அப்படியானால், இனி மேலாவது மறுபரிசீலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அப்படிப்பட்ட அருங்காட்சியகங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பு இல்லை. "ஸயன்ஸ் அண்டு டெக்னலஜி மியூசியம்" என்ற முறையில் தொழில் நுட்ப அருங்காட்சியகங்களைப் பொறியியற் கல்லூரிகளிலும் பல்தொழில் பயிற்றகங்களிலும் நிறுவுவதற்காக ரூ. 14 லட்சமும், பொது மக்களுக்கான அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் ஒன்று அமைத்திட ரூ. 25 லட்சமும் நாம் ஒதுக்கிவைத்தோம். 1974–75-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் நுட்பக் கல்விக்காக ரூ. 10 கோடியே 15 லட்சமும் செலவில் இப்படி அருங்காட்சியகங்கள் அமைக்க முயற்சி எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்டந்தோறும் இல்லையென்றாலும், தமிழகத்தில் எங்கேனும் ஓரிடத்தில் சென்னையிலுள்ள பாலிடெக்னிக் காம்பசில் சிறந்த ஸயன்ஸ்

அண்டு டெக்னாலஜி மியூசியம் வைக்கவேண்டும் என்ற செயற்குறிப்பு இருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொகை ஒதுக்கீடு நமக்குக் கிடைத்ததற்குப்பிறகு, அதிலும் கவனம் செலுத்தலாம் என்று இருக்கிறோம். அருங்காட்சியகங்கள் நிறுவவில்லையென்றாலும், அறிவியல் கண்காட்சிகள் ஆங்காங்கு இருக்கிற பொறியியல் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், மாவட்டந்தோறும் மூன்று நாட்கள், நான்கு நாட்கள் அளவில் நடைபெற்று வருகின்றன.

## விளையாட்டுகளில் தனிப்பயிற்சித் திட்டம்.

* 63 வினா—திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களிடம் விளையாட்டுத் திறனை வளர்க்க தனித் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் உள் மதிப்பீட்டுத் திட்டம் எனப் பெயர் பெறும், இத்திட்டத்திற்கிணங்க ஒவ்வொரு மாணவனும் விளையாட்டு Games மற்றும் உடற்பயிற்சி விளையாட்டு Sports ஆகிய இரண்டிலும் கட்டாயமாகப் பங்கு கொள்ள வேண்டும், மாணவர்கள் குறைந்தது விளையாட்டுக்களில் ஏதேனும் ஒன்றிலும், உடற்பயிற்சி விளையாட்டுக்களில் ஏதேனும் ஒன்றிலும் திறமை பெறுவதற்குப் பள்ளிகளில் வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அவைகளில் மாணவனின் தேர்ச்சி, பள்ளி ஆண்டில் மும்முறைகள் அதாவது ஒவ்வொரு பருவ இறுதியிலும் மதிப்பிடப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, விளையாட்டில் திறமை உள்ளவர்களுக்கு, தேர்வு எழுதும்போது கூடுதலாக விளையாட்டு திறமைக்காக மதிப்பெண் கொடுக்க அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உள்மதிப்பீட்டுத் திட்டத்தின்படி 250 உயர்நிலைப் பள்ளிகளில் இப்பொழுது செயலாய்வுத் திட்டமாக (எக்ஸ்பெரிமென்டல் ப்ராஜெக்ட்) மேற்கொண்டிருக்கிறோம். அந்தப் பள்ளிகளில் உள் மதிப்பீட்டுத் திட்டத்தின்படி விளையாட்டுக்கும் உரிய மதிப்பெண்கள்





அவர்கள் வாங்கினால்தான் மேல் வகுப்புக்கு அனுப்பப்படவேண்டும் என்பது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது ஓரளவுக்கு வெற்றிகரமான பலனைத் தந்திருப்பதால் எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் இதைப் புகுத்த வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. மேலும், உடற்பயிற்சி—விளையாட்டுக்கள் ஆகியவற்றைக் கட்டாய பாடமாக ஆக்கவேண்டுமென்ற செயற்குறிப்பும் இருந்து வருகிறது. பஞ்சாப் மாநிலத்தில் சென்ற ஆண்டு இதைக் கட்டாயமாக்கி இருக்கிறார்கள். அதன் விவரங்களைக் கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழகத்திலும் கட்டாயமாக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதுபற்றி செயற்குறிப்பு தரும்படியாகப் பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, மேலும் ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையில் கேரளத்தில், படிப்பு முடிந்தபிறகு அப்படிப்பட்டவர்களுக்கு போலீசில் பெரிய உத்தியோகம் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்த முறையில், நல்ல உத்தியோகம் கொடுப்பதாகக்கூறி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் திட்டம் ஏதாவது நமது சர்க்கார் வகுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் சிறந்த விளையாட்டு வீரர்களாக பெயரும் புகழும் வாய்ந்த பத்து, பதினைந்து மாணவர்களுக்கு நாம் உதவித் தொகை அளித்துவருகிறோம். கல்லூரிகளில் இருக்கும் மாணவர்களுக்கும் இத்தகைய உதவித் தொகை அளித்துவருகிறோம். மாநில அளவில் சிறந்த விளையாட்டு விரர்களாக விளங்குபவர்களையும், அகில இந்திய விளையாட்டுக்களில் மாநிலத்திற்குப் புகழும் பெருமையும் தேடித் தருகிறவர்களை தனிப்பட்ட நிறுவனங்களில் வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி சிபார்சு செய்கிறோம். ஆனால், அவர்களிடத்தில் வேலை வாங்காமல் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் தரும்படி இரண்டு மூன்று பேர்களை சிபார்சு செய்கிறோம். வேலை வாங்காமல் சம்பளம் தந்து, இந்த விளையாட்டுக்களில் ஈடுபடுத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். மூன்று நான்கு நிறுவனங்கள் அந்த அளவுக்கு இசைந்து இருக்கின்றன. கிரிக்கெட், ஹாக்கி, கால் பந்து, வாலிபால் ஆகிய விளையாட்டுக்களில் சிறந்தவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த மாதிரி விளையாட்டுப் பயிற்சி கொடுக்கும்போது அவர்களுக்கு நல்ல சத்துணவு கொடுத்து நல்ல முறையில் அவர்களை ஊக்குவித்து விளையாட்டில் ஈடுபடுத்த வழிவகை செய்வதற்கு அரசாங்கம் மேலும் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அப்படிப்பட்ட சத்துணவு தந்து பயிற்சி தருவதற்காகத்தான், பள்ளிகளில் பத்து, பதினைந்து பேர்களுக்கு மாநில விளையாட்டுக் குழுவினர் உதவித் தொகை அளித்து வருகின்றனர். அதை மேலும் பெருக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. சிறந்த விளையாட்டு வீரர்களை குறிப்பிட்ட இடங்களில் கொண்டுவந்து வைத்து, ஒரு பள்ளியில் தனிப்பயிற்சி அளிக்கலாமா என்பதும் அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விடையிலிருந்து எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி கட்டாயப் பாடமாக வைக்கப்படும் என்று தெரிய வருகிறது. எனவே, எல்லா பள்ளிகளிலும் போதிய அளவு விளையாடுமிடம் இருக்க வழிவகை காண அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதையும் நாம் கவனத்திலே கொண்டுதான் இம்முயற்சியிலே ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், இப்பொழுது எற்படுத்துகின்ற வகையில் எல்லா பள்ளிகளிலும் விளையாடுமிடம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையினுடைய அடிப்படையிலேதான் அனுமதி தருகிறோம். ஐந்து ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்து இருக்கிற எந்தப் புதிய பள்ளிக்கும் நாம் அனுமதி அளிப்பதில்லை: தற்பொழுதுள்ள பள்ளிகள் ½ மைல், 1 மைல், 1½ மைல் தூரத்திலுள்ள விளையாடுமிடத்தைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று நாம் எல்லா பள்ளிகளுக்கும் ஆலோசனை கூறி இருக்கிறோம்.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, now-a-days, there is great glamour for group games like Criket, Foot-ball, etc., but individual events like running race, high jump, long jump, etc. are not given adequate attention; they are most importanι. May I know whether instructions will be issued to High Schools to pay proper attention to individual games also?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஓட்டப் பந்தய விளையாட்டுகளுக்கும் நாம் ஊக்கம் அளித்துவருகிறோம். அந்தந்தப் பள்ளிகளிலேயே ஆண்டுக்காண்டு ஓட்டப் பந்தய விளையாட்டுகள் நடைபெறுகின்றன. மாவட்ட அளவிலே நடைபெற்று வருகின்றன. குடியரசு நாளையொட்டி, மாநில அளவில் எல்லா பள்ளிகளுக்கும் சேர்த்து ஓட்டப் பந்தயம் நடத்தி வருகிறோம். பொங்கல் திருநாளை முன்னிட்டு, எல்லா கட்டங்களிலும், ஒன்றிய அளவிலே நடத்தி பிறகு மாவட்ட அளவிலே நடத்தி, பிறகு மாநில அளவிலே நடத்திவருகிறோம். இவைகள் எல்லாம் ஓட்டப் பந்தயங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்ற வகையிலேதான் அமைந்திருக்கின்றன. எல்லாப் பள்ளிகளிலும் இதற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம். கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ் இரண்டுக்கும் முக்கியத்துவம் தருகிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த உடற்பயிற்சி விளையாட்டை 250 பள்ளிகளிலே கட்டாயமாக வைத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளும் இடம் பெற்றிருக்கின்றனவா? இல்லையென்றால், பெண்களுக்கும் அப்படிப்பட்ட பயிற்சி தர அரசு முன் வருமா? ஆமென்றால், என்ன என்ன விளையாட்டுகளைப் பெண்களுக்குக் கற்றுத் தர அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது என அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 250 பள்ளிகளில் ஆண்கள் பள்ளிகளும் பெண்கள் பள்ளிகளும் இடம் பெற்றிருக்கின்றன. பெண்களுக்கு எந்த எந்த விளையாட்டுக்கள் ஏற்றனவோ அந்தந்த விளையாட்டுக்கள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, விளையாட்டுத் திறனில் பஞ்சாப் மாநிலம் முதலிடம் பெறுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் எப்படி ஊக்குவிக்கிறார்கள், எந்த அடிப்படையில், எந்த முறையில் என்பதைக் கண்டறிவதற்கு தமிழகத்திலேயிருந்து ஒரு ஸ்டடி டீமை அனுப்பி அதைச் செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அங்கே விளையாட்டுகளிலே கொஞ்சம் அதிகம் ஊக்கமும் ஆக்கமும் காட்டி வருகிறார்கள். அதே அளவிலேதான் இங்கேயும் காட்ட

வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது. நான் முதலிலேயே குறிப்பிட்டேன்—பஞ்சாப் மாலத்திலேதான் சென்ற ஆண்டிலிருந்து இந்த உடற்பயிற்சி விளையாட்டுகளைப் பள்ளிக்கூடங்களிலே கட்டாயப் பாடமாக ஆக்கியிருக்கிறார்கள். அப்படி இங்கும் ஆக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. பஞ்சாப் மாநிலத்திலேயிருந்து அது பற்றிய விவரக் குறிப்புகளைக் கேட்டுப் பெற்றிருக்கிறோம். தேவைப்பட்டால், அங்கே போய் பார்த்து வருகிற ஏற்பாடுகளையும் நாம் செய்யலாம்.

*Accommodation for Tourists.*

* 64. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to form an agency in Madras to help Tourists secure accommodation ; and

(b) if so, the details thereof ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: (அ) சுற்றுலாப் பயணிகள் இடவசதி பெறுவதில் அவர்களுக்கு உதவி புரிய சென்னையில் முகவரமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

<u>திரு. என். கே. பழனிசாமி</u>: சார், சென்னைக்கும் மற்ற இடங்களுக்கும் தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அவர்களுக்குத் தங்கக் கூடிய வசதி எந்த இடத்திலும் இல்லை. குறைந்த கட்டணத்திலே தங்க வசதி இருந்தால், இன்னும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். ஆகவே, அந்த மாதிரி ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: தலைவரவர்களே, வெளிநாடுகளிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வருகிற சுற்றுலாப் பயணிகள் அல்லது உள் மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகள் அங்கங்கு இடம் பெறுவதற்கான வழிவகைகளை டிராவல் ஏஜன்சீஸ் என்ற பயணிகள் முகவரமைப்புகள் ஏற்பாடு செய்கின்றன. சென்னையிலே 100-க்கு மேற்பட்ட திருமண மண்டபங்கள் இருக்கின்றன. அந்தத்



திருமண மண்டபச் சொந்தக்காரர்களையெல்லாம் அழைத்துக் கூட்டம் நடத்தி பஸ்ஸிலே 60 பேர், 70 பேர், 100 பேர் என்று வந்து தங்குபவர்களுக்குக் குறைந்த வாடகை வாங்கி—நாளொன்றுக்கு—திருமண மண்டபத்தை விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு, அத்திருமண மண்டபங்களுடைய முகவரிகள், விவரங்கள் எல்லாம் திரட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கல்யாண மண்டபத்திற்கும் எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும், அதிலே 60 பேர், 70 பேர், 100 பேர் தங்க எப்படி வசதியிருக்கிறது என்ற விவரமெல்லாம் தரப்படுகிறது. அந்த வசதி இப்பொழுது ஓரளவு பயன்பட்டு வருகிறது. அதற்குக் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஒரு முகவரமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சுற்றுலாத் துறையால், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பஸ்ஸிலே வருகிறவர்கள் கடற்கரையிலே தங்கிவிட்டு, கடற்கரையையும் அசுத்தப்படுத்திவிட்டு செல்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வழியில்லாமல், இருக்கிற நிலையைப் போக்கத்தான், தண்ணீர் வசதி, மற்றவைகள் இருக்கின்ற வகையில் கல்யாண மண்டபங்கள் சிறந்த ஏற்பாடாக இருக்கின்றன. அவர்களும் உறுதுணையாக இருக்கிறார்கள். அரசாங்கச் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வாரியமும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

<u>திரு. ஏ. சுப்பிரமணியம்</u>: தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளைப் பலபேர் அடிக்கடி ஏமாற்றுகின்ற, பணத்தை ஏமாற்றுகின்ற செய்திகள் வருகின்றன. அத்தகைய செய்திகள் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படும்போது, சுற்றுலாத் திட்டத்தையே பாதிக்குமே, இதனைத் தடுக்க அரசாங்கம் என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்து வருகிறது?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: அது இருந்தது, ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட டாக்ஸிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறார்கள். சென்னை ஆகாயவிமான நிலையத்திலும் மற்ற இடங்களிலும் தனிப் போலீசாரையும் நாம் நியமித்திருக்கிறோம். இன்னின்ன டாக்ஸிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பல்வேறு ஓட்டல்களிலே அவர்களே, தங்கள் சொந்த டாக்ஸிகளை ஏற்பாடு செய்து, பயன்படுத்தச் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சாமான்களை வாங்க வேண்டுமானால், இன்னின்ன கடைகளில் வாங்கினால் ஏமாற்றப்படாமல் இருப்பார்கள் என்று கூறி, அதற்காக அக்கடைகளின் முகவரி குறிப்பிட்ட அட்டைகளைத் தர ஏற்பாடு

[1975 பிப்ரவரி 25

செய்திருக்கிறோம். வேறு இடங்களிலே சாமான்களை வாங்கினால், ஏமாற்றப்படலாம். ஏமாற்றப்படக் கூடும் என்று ஓரளவு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. முன்பு இருந்ததில் இப்பொழுது ஏமாற்றப்படுவது குறைந்திருக்கிறது. தனிப்பட்ட டாக்ஸிகளை பயன் படுத்தாமல், அந்நிலைமைகளை ஏற்படுத்தாமல் குறிப்பிட்ட டாக்ஸிகளை பயன்படுத்துகின்ற ஏற்பாட்டினை சுற்றுலா வாரியமும், சுற்றுலா துறையினரும் செய்து கொண்டு வருகிறார்கள்.

*Primary Health Centres.*

* 65. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to post one trained staff nurse and one laboratory technician to each Primary Health Centre ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தொடக்கச் சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும் துணைச் செவிலி மருத்துவச்சி ஒருவரும், சுகாதாரப் பார்வையாளர்கள் ஒருவரும் ஏற்கெனவே அமர்த்தப்பட்டுள்ளனர். மலேரியா ஒழிப்புப் பேணுதல் பணியை மேற்கொண்டுள்ள 353 நிலையங்கள் ஒவ்வொன்றிலும் ஆய்வுக்கூட உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். குழந்தைகளுக்கு மூன்றுவகை நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டத்தின்கீழ் ஒன்று விட்டொரு தொடக்க சுகாதார நிலையங்களுக்கு ஒரு சுகாதாரப் பார்வையாளர் என்ற வீதப்படி தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தோராயமாக பத்து சுகாதாரப் பார்வையாளர்களை நியமிக்க அரசு அண்மையில் அனுமதி வழங்கி உள்ளது.

* 66. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that Central aid is given to the State Government for the opening of Primary Health Centres ; and

(*b*) if so, the details thereof for the periods, 1971-72 and 1972-73 ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.



1975 பிப்ரவரி 25]

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மாதிரி ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டு ஆஸ்பத்திரிகள் நிறுவுவதாக இருந்ததே அந்தத் திட்டம் என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்திய அரசினுடைய சுகாதார ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, இந்தத் திட்டத்திலே அப்படி அதிக மக்கள் தொகையுள்ள ஒன்றியத்திலே இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் தேவை என்று கேட்கப்பட்டது. அதை ஆலோசிப்பதாகத் தெரிவித்திருந்த அவர்கள் பொருளாதார நிலை காரணமாக, அதை ஏற்கமுடியாது என்று தெரிவித்துவிட்டார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : சார், அதிக ஜனத்தொகையுள்ள இடங்களில் இந்த ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருப்பதன் காரணமாக எல்லா இடங்களும் பலன் பெறமுடியவில்லை. ஆகவே, மெட்டர்னிட்டி சென்டர் இருக்கக்கூடிய இந்த மாதிரி இருக்கக் கூடிய இடங்களுக்காவது, அந்தக் குறிப்பிட்ட யூனியனுக்காவது டாக்டர் அடிக்கடி சென்று பார்த்துவிட்டு வர, வற்புறுத்த, சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையத்திலேயுள்ள மருத்துவரும் குடும்ப நலத் திட்ட நிலையத்திலே உள்ள மருத்துவரும் இவர்கள் இருவரும் அங்கேயுள்ள துணை நிலையங்கள்—சப் செண்டர்களுக்கு வாரத்திலே இன்னின்ன நாட்கள் செல்லவேண்டுமென்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட கிழமைகளில், குறிப்பிட்ட நேரத்தில் அங்கே சென்று பார்த்து, அங்கே சிகிச்சை பெற விரும்புபவர்கள், ஆலோசனை பெற விரும்புபவர்கள் இருப்பார்களானால், ஆலோசனை வழங்குவது—இன்னும் சொல்லப்போனால் மகப்பேறுக்கு முன்னால் தாய்மார்களுக்குத் தேவையான மருத்துவ உதவி அவர்களுக்கு வழங்கவேண்டுமென்ற முறையிருக்கிறது. ஆகவே, துணை நிலையங்கள் மூலமாக அந்தப் பணி நடைபெற்று வருகிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே குடும்ப நலத் திட்டமும் அதேமாதிரி வைத்தியமும் செய்கின்ற அமைப்பும் இரண்டும் சில யூனியன்களிலே இருக்கின்றன, இரண்டையும் ஒன்றாக இணைத்து இருக்கிறார்கள். சில யூனியன்களிலே குடும்ப நலத் திட்டம் மட்டும் இருக்கிறது, வைத்திய முறை இல்லை, அப்படிப்பட்ட யூனியன்களிலாவது அதை வேறு ஒரு இடத்தில் அமைக்கும் செயற்குறிப்பாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, குடும்ப நலப் பணி ஒவ்வொரு இடத்திலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடைபெறுகிறது. அதற்காக டாக்டர்கள், உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், மருந்துகள் வழங்கப்படுகின்றன. அது செயல்முறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏன் கட்டடங்கள் கட்டப்படவில்லை என்பதுதான். அதைக் கட்டுவதற்கு மத்திய அரசு தனியாக எந்தவிதமான உதவியும் செய்வதில்லை. ஆனால் மாநில அரசு அதை நிறைவேற்றுவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

மாவட்ட மருத்துவமனை, காஞ்சிபுரம்

*67 வினா—திரு. கா. வேழவேந்தன் . மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனையின் படுக்கைகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட காசநோய் தடுப்பு சங்கத்தின் நன்கொடையைக் கொண்டு 10 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு ஒன்று மாவட்ட மருத்துவமனையில் கட்டப்பட இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு ஏதேனும் கொள்கை இருக்கிறதா? பாபுலேஷன்-பெட் ரேஷியோ அல்லது இன்சிடன்ட்ஸ் ஆப் சிக்னஸ் என்பனபோன்ற கணக்குகள் எடுத்து அந்த அடிப்படையில் செய்யப்படுகிறதா? மாவட்ட மருத்துவ மனைகளிலாவது இப்படிப்பட்ட ஸ்டடி செய்து படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக மாவட்ட மருத்துவ மனைகளிலே 300 படுக்கைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்பது நோக்கமாக இருக்கிறது ஒரு வேளை புறநோயாளிகள் பகுதிகளுக்காக கட்டட வசதி இல்லாமல் இருக்குமானால் எந்த இடத்திலே உடனடியாகத் தேவைப்படுகிறதோ அங்கே கட்டுவதற்கு மாவட்ட மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த முறையிலே புறநோயாளிகள் பகுதிக்குக் கட்டடம் இல்லாத காரணத்தினாலே அங்கே நாலரை லட்சம் ரூபாய் செலவிலே கட்டடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.



திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகராக அது மாறியபிறகு முக்கியத்துவம் பெற்ற காஞ்சிபுரத்திலே நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக வருகிறது. ஆகவே, அந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் மேம்பாட்டுத் திட்டங்கள் என்ன என்ன செய்யப்பட இருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாவட்டத் தலைநகராக ஆன காரணத்தினாலே நோயாளிகள் அதிகமாகிவிட்டார்கள் என்று சொல்வார்களானால் அந்தக் கருத்து தவறான முடிவுக்குக் கொண்டுபோய் விடும், பிறகு மாவட்டத் தலைநகரம் வேண்டுமென்று யாரும் கேட்கமாட்டார்கள். காஞ்சிபுரத்தைப் பொறுத்தவரையில் அதற்குப் பக்கத்திலே செங்கற்பட்டிலே ஒரு மருத்துவமனையும் அதோடு மருத்துவக் கல்லூரியும் இணைந்தும் இருப்பதாலே காஞ்சிபுரத்திற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை ஓரளவிற்குள்தான் இருக்கும். அதைத் தவிர அங்கே கேன்சர் இன்ஸ்டிட்யூட் ஏறத்தாழ 27 லட்சம் ரூபாய் செலவில் 350 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்கும் ஏற்பாடு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு சிறப்புப் பணியாற்றுகிறபோது ஒவ்வொன்றிற்கும் குறிப்பாக அவற்றை நிறைவேற்றுவதற்கு நிதி வசதி கிடைப்பதில்லை.

அரசு மருத்துவமனை, சூலூர்

* 68 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூரில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1975 பிப்ரவரி 25

*Additional Courts.*

* 69. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there are proposals under the consideration of the Government to establish a Second Class Magistrate Court at Kuzhithurai?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் நீதிமன்றங்களின் அதிகார எல்லைப் பகுதிகள் குறித்த குழு, தான் அளித்துள்ள பரிவுரைகளில், கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் துணை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்று தனியே நிறுவப்படலாம் என்றும் பரிந்துரைத்துள்ளது. அக்குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. அவற்றை ஐந்தாண்டுக் காலத்தில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் செயற்படுத்தக் கருதியுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, குழித்துறையிலே சமீபகாலம் வரையில் ஒரு ஹானரரி பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட் இருந்தது. இப்போது பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்டில் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. ஒரு மாஜிஸ்திரேட்டால் அந்த வேலைப் பளுவை நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு செகண்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட்டை உடனே ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆரம்பிப்பது என்பது கொள்கையளவிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையோடு மீண்டும் அது பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, தாலுகாவின் தலைநகரத்தில் வேறு கட்டடம் போன்றவையெல்லாம் தேவையில்லாமல் இருக்கிறது ஆதலால் அந்த பகுதியிலே 5 வருட கெடுவை மனதிலே வைத்துக்கொண்டு இல்லாமல் முதலாவது வருடத்திலேயே இதை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதி மன்றம், 5 ஆண்டுகளிலே எந்த எந்த இடங்களிலே எங்கே வேலைப் பளு அதிகமாக இருக்கிறதோ அங்கே கொடுக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அது வந்தவுடன் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி. வரதராஜன் குழுவின் சிபாரிசுகள் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சிபாரிசின்படி எத்தனை



1975 பிப்ரவரி 25]

கோர்ட்டுகள் இதுவரை திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த சிபாரிசின் அடிப்படையிலே என்ன என்ன அமல் நடத்தப்படும் என்பதைப் பற்றி ஒரு விவர அறிக்கையை இங்கே வைப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வைப்பதற்கு ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன். 45 லட்சம் ரூபாய் செலவாகும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பணம் ஒதுக்கி எங்கெங்கே வேலைப் பளு அதிகமாக இருக்கிறதோ அங்கேயெல்லாம் எடுக்கலாம் என்பதுதான் முடிவு. அப்போது சட்டசபைக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. த. சோலையா: தமிழ்நாடு பூராவும் அந்தக் குழு சுற்றிவந்து நீதிமன்றங்கள்பற்றி அறிக்கை கொடுத்திருக்கிறதே, மானாமதுரையில் ஒரு மாஜிஸ்திரேட் கோர்ட் வேண்டுமென்று அங்கேயுள்ள பொது மக்களால் கேட்கப்பட்டிருக்கிறதே அதுசம்பந்தமாக அந்தக் குழு ஏதாவது கருத்துத் தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன். அதைப்பற்றிய தகவல் இல்லை.

* 70 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் கூடுதலாக சப்-கோர்ட்டுகள் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே கரூர், குளித்தலை, அரியலூர் ஆகிய பகுதிகளிலே சப்-கோர்ட்டுகள் துவக்க வேண்டுமென்ற திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டுவிட்டதா? அல்லது எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருச்சி மாவட்டத்திற்கு திருச்சியிலே 5 துணை நீதி மன்றங்கள் இருப்பதாகவும் அதில் இரண்டை அரியலூருக்கும் கரூருக்கும் மாற்றவேண்டுமென்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி உயர் நீதி மன்றத்தோடு கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக தாமதமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு முயற்சியெடுக்குமா?

[1975 பிப்ரவரி 25

மாண்புமிகு திரு. செ. மாதவன்: புதிய இடத்திற்குக் கொண்டு போனால், அதனால் ஏற்படும் செலவுதான் பிரச்னை, வேறு பிரச்னை கிடையாது.

*Production of Pine Apple*

* 71. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government for the intensive and extensive cultivation of pine Apples in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, ,Kew", என்ற வகை அன்னாசிப்பழ கன்றுகளின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு அன்னாசிப்பழ நாற்றுப் பண்ணை ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அன்னாசிப் பயிர் நாளுக்குநாள் அழிந்துவருகிற நிலைமையிருக்கிறது. ஆதலால் தீவிர சாகுபடி திட்டத்தை அமல் நடத்தி அந்தப் பயிரை அபிவிருத்தி செய்ய அரசு முன்வருமா? எடுக்கப்போகிற நடவடிக்கை எப்போது அமலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே முதலிலே நல்ல ரகக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு நாற்றுப் பண்ணைகளை நிறுவவேண்டும். அதற்குத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கும் வேலை நடந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதைப்பற்றி ஏதாவது கருத்து இருக்குமானால் அதைப்பற்றி தெரிவித்தால் கவனிக்கப்படும்.

*Cultivation of Basmati rice.*

* 72. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an experiment has been conducted by the Government, to cultivate a new variety of Basmati rice in Thanjavur district; and

(*b*) if so, the details thereof?



1975 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, (அ) ஆம். (இ) ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணையிலே புதிய ரக பூசா என்ற பசுமதி நெல் பயிரிடப்பட்டு சோதனை செய்து பார்த்ததில் அது 107 நாட்களில் உற்பத்தியாகிறது என்றும், ஏக்கருக்கு 1,600 கிலோ அறுவடையாகும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

(முற்பகல் 9-30)

திரு. என். கே. பழனிசாமி: சார், பசுமதி நெல் பிரியாணி போன்றவைகளைச் செய்வதற்கு மிகவும் பயன்படுகிறது. மத்திய அரசு இதற்கு ஊக்கம் கொடுத்து குவெய்த் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதனால் அதிகமாக ஃபாரின் எக்சேஞ்ச் கிடைப்பதால் இதனை விஸ்தரிப்பதற்கான திட்டம் எதுவும் சர்க்காரிடம் இருக்கிறதா? இருந்தால் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, முன்னால் பசுமதி நெல் தமிழ்நாட்டில் அதிகமாக விளைவதில்லை. இப்பொழுதுதான் புதிதாக இந்த ரகம் கண்டுபிடிக்கப்பட்டு, வேண்டுமென்றால் சொல்கிறேன். 5 கிலோ நெல்லை நான் டெல்லியிலிருந்து கையில் கொண்டு வந்து அதைப் பெருக்கியிருக்கிறோம். மேலும் அதைப் பெருக்குவதற்கான நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது. நாளாவட்டத்தில் உற்பத்தி அதிகமாகும் என்றும், ஒரு ஏக்கருக்கு ஏறத்தாழ 1,600 கிலோதான் உற்பத்தி செய்யமுடியும் என்றும், 107 நாட்களில் அறுவடைக்கு வரும் என்றும் எதிர்பார்த்து வேண்டிய நடவடிக்கைகளைச் செய்து வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பயிரிடுவதற்கு இந்த பசுமதி போன்ற வேறு எந்தெந்தவகையான நெல் பயிரிடுவதற்கான சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்தச் சோதனை தற்பொழுது தஞ்சை மாவட்டத்தில்தான் நடைபெற்று வருகிறது. ஆடுதுறை தஞ்சை மாவட்டத்தில்தான் இருக்கிறது. ஆனால் இருக்கின்ற சங்கடம் என்னவென்றால் போதிய அளவிற்கு அந்த விதை நெல் கிடைக்கவில்லை. நான் நேரில் சென்றபொழுது 5 கிலோ நெல்லை பெட்டியிலே கொண்டு வந்தேன். அதைத்தான் வைத்திருக்கிறோம். காரணம் என்னவென்றால் டெல்லியிலே இந்த பூசா—33 கண்டுபிடிக்கப்பட்டது. பசுமதி நெல் நீண்ட ரகம், சன்ன ரகம், சூப்பர் ஃபைனாக இருக்கும். நல்ல வாசனையாக இருக்கும். இதை

நாளாவட்டத்தில் ஏற்றுமதி செய்ய முடியும். இதில் தமிழ்நாட்டில் உள்ள சங்கடம் என்னவென்றால், இதற்கு நீண்ட நாள் பிடித்து, ஏக்கருக்கு 1 டன்னுக்கு மேல் என்றைக்கும் விளைந்தது இல்லை. இப்பொழுது கார்காலத்திலே மீண்டும் பயிரிடுகிறோம். அதைப் பெருக்குவதற்காகத்தான் பயிரிடுகிறோம். நெல்லைத் திடீரென்று பெருக்கிவிட முடியாது. ஒருமுறை 5 கிலோ இருந்தால் அதை 40-ஆல் பெருக்க வேண்டும். ஒருமுறை பெருக்கும்பொழுது 40 மடங்குதான் கிடைக்கும். இரண்டாவது முறை இப்பொழுது பெருக்கிக்கொண்டிருக்கிறோம். அந்தச் சோதனையில் வெற்றி பெற்று தஞ்சை மாவட்டத்தில் இந்த பசுமதி நெல் பெருவாரியான அளவில் பயிராகும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது டெல்லியிலிருந்து நெல்லைக் கொண்டு வந்ததாகக் கூறினார்கள். பர்மிட் வாங்கி அதைக் கொண்டு வந்தார்களா அல்லது வேறு எந்த முறையில் கொண்டு வந்தார்கள் என்று சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் திரு. பழனிசாமி அவர்கள் பிரியாணிக்கு இந்த நெல் மிகவும் நன்றாக இருக்கும் என்ற கருத்தைக் கூறினார்கள். அதற்கும் உபயோகப்படுத்திப் பார்த்தார்களா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, விதையைக் கொண்டு வர தனியாக பர்மிட் தேவையில்லை. ஏனென்றால் மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொண்டு வருவதற்கு ஒருவேளை பர்மிட் வேண்டுமென்றால் அதை அவர்கள்தான் கொடுக்க வேண்டும். ரிக்கார்ட் செய்து கொண்டு வந்திருக்கிறேன், தனியாகவோ அல்லது கடத்தியோ கொண்டு வரவில்லை. அவர்கள் சம்மதத்துடன்தான் கொண்டு வந்திருக்கிறேன். இந்த அரிசியைச் சாதாரணமாக பிரியாணிக்குப் பயன்படுத்தலாம் என்று சொன்னார்கள். என்னுடைய ரூமில் அரிசியை மாதிரிக்காக வைத்திருக்கிறேன். அங்கே வந்தால் காட்டுகிறேன், அரிசியாக்கி வைத்திருக்கிறேன். நீண்ட ரகம், சன்ன ரகம். வாசனையோடு இருக்கிறது. அது உற்பத்தியானால் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கும் என்பது ஒருபுறம் இருக்க, தற்பொழுது பசுமதி நெல்லைப் போட வேண்டுமென்று அதிக விருப்பமில்லை. ஏனென்றால் உணவு உற்பத்தி அதிகமாக வேண்டுமென்று சொன்னால் ஐ.ஆர். 8, ஏ.டி.டி. 31 போன்ற நெல் ரகங்களைப் போட்டால் ஏறத்தாழ 3 டன், 4 டன் கிடைக்கிறது. குறைந்த காலத்தில் கிடைக்கிறது. ஏ.டி.டி. 31 சுமார் 105 நாட்களில்





விளைகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 டன் விளைவித்திருக்கிறோம். ஒரு ஏக்கரில், அப்படிப்பட்ட அதிகமாக விளையும் நெல் ரகங்களைப் பயிரிடுவதாக நாம் இப்பொழுது உத்தேசித்திருக்கிறோம்.

*Crops of cumbu, etc.*

*73. THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that there was a set back in the production of Cholam, Cumbu and Ragi in the State during 1973-74; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், கனம் அமைச்சரவர்கள் கொடுத்த பதிலில் 75 பாகம் தண்ணீர் இல்லாமல், மானம் பார்த்த பூமியில் வருகிற மழையைப் பொறுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். சோளத்திற்கு வேண்டுமானால் அப்படிச் சொல்லலாம். ஆனால் கம்புக்கும், ராகிக்கும் தண்ணீர் அவசியம் தேவை. முக்கியமாக பூச்சித் தொல்லைக் காரணத்தினால் குறைவு என்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு சர்க்கார் கொடுக்கும் விதையிலும் "டிஃபெக்ட்" இருக்கிறது. ராகி-4 போன்றவைகள் பிரயோசனம் இல்லை. சர்க்கார் கொடுக்கும் மோசமான விதைகளினால் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுவதற்கு அமைச்சரவர்கள் கூறும் பதில் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதைப் பற்றி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. அழகர்சாமி அவர்கள் மீண்டும் மீண்டும் கேட்டு பலமுறை மீண்டும் மீண்டும் பதில் சொல்லியிருக்கிறேன். சில தனியாரிடத்திலிருந்து விதை பெறப்பட்டு கொடுத்துப் பார்த்ததில் சிலவிடங்களில் தோல்வியடைந்திருப்பது உண்மை. ஆனால் அதற்காக அந்த வீரிய ரக விதையே தவறு என்று சொல்ல முடியாது. அரசாங்கப் பண்ணையிலிருந்து கொடுக்கப்பட்ட விதை நல்லமுறையில் விளைந்திருக்கிறது.

@ -573-575-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 பிப்ரவரி 25

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த விவரத்தில் கம்பு, சோளம் ஓரளவு பாதிக்கப்படவில்லை என்றும், ஆனால் கேழ்வரகைப் பொறுத்தவரையில் 1970–71-ல் 3,34,000 ஆக இருந்தது. 1973–74-ல் 2,86,900 மெட்ரிக் டன்னாகக் குறைந்திருக்கிறது என்றும் பார்க்கிறோம். ஏழை எளியவர்களுக்குப் பயன்படுவதும், நன்றாக வேலை செய்வதற்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதும் கேழ்வரகுதான். அது குறைந்ததற்குக் காரணம் 12 லட்சம் கேணிகளை, தமிழ்நாட்டில் ஆழப்படுத்துவதற்கு நிலவள வங்கி விதிக்கும் கண்டிஷன்கள் தடங்கலாக இருப்பதால் 4 ஏக்கர் போட்டவர்கள் இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் தான் போட முடிகிறது. ஆகவே, இப்பொழுதாவது வறட்சிப் பணியை முன்னிட்டாவது இந்தத் தமிழகத்திலே உள்ள கேணிகளை ஆழப்படுத்தி, அதிக பூமியிலே கேழ்வரகு விளைவிப்பதற்கு ஏதாவது .ஏற்பாட்டினை அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, கிணறுகளைப் புதிதாகத் தோண்டுவதற்கோ அல்லது ஆழப்படுத்துவதற்கோ ஏதோ தடையிருப்பதாகச் சொல்வதாகத் தெரிகிறது. நான் "ஐடா" அக்ரிமெண்ட் காப்பியைக் கொடுத்தேன், அதில் 500 அடி, 600 அடி என்று குறிப்பிடவில்லை. அதிலே சொல்லியிருப்பது ஃபார்முலா, உலகம் முழுவதற்கும் உள்ள ஃபார்முலா. ஒரு கேணிக்கும் அடுத்த கேணிக்கும் இவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்பது உலகம் முழுவதற்கும் உள்ள ஃபார்முலா. எங்கே தண்ணீர் கிடைத்தாலும் வெட்டிக் கொள்ளலாம். இதற்காக வேறு எங்கும் போக வேண்டியதில்லை. நமது எஞ்சினியர்கள்தான் முடிவானவர்கள். [Your Panchanatham, that is the Chief Engineer (Ground water) is the Ceiling]
அவர் சொன்னதுதான் முடிவு என்று எழுதி கையெழுத்து வாங்கியிருக்கிறோம். கிணறு ஆழப்படுத்துவது, புதிதாகக் கிணறு வெட்டுவதற்கெல்லாம் மேற்கொண்டு தடையாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சொன்னால், நானும் கலந்து நெல்லை மாவட்டத்திற்காவது செய்ய முயற்சி செய்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதில்லை, என்னவென்று சொல்லுங்கள்,



1975 பிப்ரவரி 25]

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் பதில் சொல்லும்பொழுது மாற்ற முடியாதது, "இன்ஃப்ளக்சிபில்", "ரிஜிட்" என்றும், ஒரு கிணறுக்கும் இன்னொரு கிணறுக்கும் 600 அடி என்பது மாற்ற முடியாதது என்றும் சொன்னார்கள். இப்பொழுது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் "ரிஜிட்" இல்லை, தண்ணீர் இருந்தால் போதும் என்று சொல்கிறார்கள். இரண்டில் எது சரியான விடை, ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறதே. அவர்கள் சொன்ன பதில் 600 அடிக்கும் குறைவாக இருந்தால் முடியாது, ரிசர்வ் பேங்க் மாற்றினால்தான் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் ஆதித்தன் அவர்கள் சொல்லும்பொழுது அது "இன்ஃப்ளக்சிபில்" அல்ல என்று சொல்கிறார்கள். இரண்டில் எது சரியானது என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இரண்டு அமைச்சர்கள் சொன்னதும் சரி. "ஐடா" அக்ரிமெண்ட் காப்பியைச் சீக்கிரமாகக் கொண்டு வந்து மெம்பர்களுக்குக் கொடுக்கிறேன். திரு. அழகிரிசாமி அவர்கள் பார்த்து விட்டுப் போனார்கள். அந்த ஃபார்முலாவிலே 400 அடி, 500 அடி என்ற கணக்கு எதுவும் கிடையாது.
$(a + b)(a - b) = a^2 - b^2$ is an algebraic formula.
இதை யார் மாற்ற முடியும்? "ஏ" என்பதற்கு என்ன வால்யூ "பி" என்பதற்கு என்ன வால்யூ என்பதை எல்லாம் முடிவு செய்ய வேண்டியது நம்முடைய எஞ்சினியர் கையில் இருக்கிறது. ஃபார்முலா பூராவும் வாசிக்க இப்போது நேரம் இல்லை. ஃபார்முலா உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஃபார்முலா. அல்ஜிப்ரா ஃபார்முலா. இதை மனித வர்க்கத்தினால் மாற்ற முடியாது. ஃபார்முலாவில் "ஏ" என்பது என்ன. "எக்ஸ்" என்பது என்ன, "ஆர்" என்பது என்ன. "எம்.எம்" என்பது என்ன என்பதை நாம் முடிவு செய்து கொள்ளலாம். "ஸ்மால் ஆர், எம்.எம்." என்பது "ரிஜெனரேஷன்". அதைவைத்து எஞ்சினியர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படி முடிவு செய்யப்படும்..விழுப்புரம் தாலுகாவில் முன்பு 800 அடியாக இருந்தது 600 அடியாகி, 400 அடியாகி 200 அடியாகியிருக்கிறது. ரிசர்வ் வங்கியோ, ஏ.ஆர்.சியோ கொடுக்க வேண்டியதில்லை. இதைவிட எப்படி புரியவைப்பது என்று தெரியவில்லை. ஃபார்முலாவை யாரும் அசைக்க முடியாது; மறுக்க முடியாது.

(பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: எல்லோரும் உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் கொடுக்கிற கருத்தும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொடுக்கிற கருத்தும் வேறுபடுகிறது என்று உறுப்பினர்கள் கருதுவார்களானால் அதைப் பற்றிக் கிளப்புவதற்குக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்தத் தேவையில்லை. அதற்கு வேறு முறை இருக்கிறது. இப்போது கேள்வி நேரத்தைத் தொடரலாம்.

(திரு. சுரேந்திரன், திரு. கோவை செழியன், திரு. ஆலடி அருணா ஆகியோர் எழுந்து நின்றனர்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. துணைக் கேள்விகள் கேட்க வேண்டுமென்றால் நான் அனுமதி கொடுத்த பிறகுதான் கேட்க வேண்டும். இரண்டு அமைச்சர்கள் கொடுக்கிற கருத்தில் வேறுபாடு இருக்கிறது என்று உறுப்பினர்கள் கருதுவார்களானால் அதைப்பற்றி எழுப்ப வேறு முறைகள் இருக்கின்றன. அடுத்து கேள்வி 74 . . .

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: "ஐடா" அக்ரிமென்ட் காப்பியை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கேள்வி எண் 74-க்கு பதில் கூறுங்கள்.

*Agricultural University.*

* 74. *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Agricultural University has prepared a Master Plan for the development of the University ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: (அ) ஆம்.

(ஆ) இந்த "பிளானுடைய" நகல் புத்தகம் @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

<u>திரு. என். கே. பழனிசாமி</u>: இந்தத் திட்டத்திற்கு 16 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவு செய்யப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 38 கோடி ரூபாய் செல

@ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நடவடிக்கைக் குறிப்பில் இணைக்கப்படவில்லை.





வாகும். அதற்கு சென்ட்ரல் அக்ரிகல்சுரல் இன்ஸ்டிடியூட்டைக் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். திட்டம் நல்ல திட்டம். கார்லிக், பவுடர், பர்ப்யூம்ஸ் போன்றவற்றை வெளிநாட்டுக்கு அனுப்பும் திட்டம் நல்ல திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: ஏற்கெனவே இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் தகவலைவிட மேற்கொண்டு இந்தத் திட்டத்தைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. இதிலே இருக்கிற தகவல்களைத் தவிர வேறு எதுபற்றியும் கேட்க முடியாது. விதி 31 துணைவிதி 16-ல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

An hon. Member shall not require information set forth in accessible documents. இதிலே இருக்கிற தகவலைத் தவிர மேற்கொண்டு தகவல் ஏதேனும் வேண்டுமென்றால் தனி வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. என். கே. பழனிசாமி</u>: 16 கோடியே 18 லட்சம் ரூபாய் திட்டத்திற்குச் செலவு செய்வதாகக் கூறுகிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 38 கோடி ரூபாய் செலவாகும். அதற்காக சென்ட்ரல் அக்ரிகல்சுரல் இன்ஸ்டிடியூட்டில் கேட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் கொடுக்காவிட்டால் என்ன செய்யப் போகிறார்கள்?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கோவை செழியன்</u>: வேளாண்மைப் பல்கலைக்கழகம் சம்பந்தமான கேள்விக்கு விவர அறிக்கை தருகிறார்கள். பொதுவாக இந்த மாதிரி விவர அறிக்கைகளை ஒரு நாள் முன்னதாகக் கொடுத்தால் படித்துவிட்டு கேள்வி போட வசதியாக இருக்கும். இருந்தாலும் நான் அந்தப் பல்கலைக் கழகத்தில் உறுப்பினராக இருந்த காரணத்தால் ஒரு கேள்வி போட ஆசைப்படுகிறேன். அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அனிமல் ஹஸ்பண்டரி காலேஜ் தேவை, ஹோம் சயன்ஸ் காலேஜ் தேவை. அதற்கு இருக்கின்ற காலேஜுகளை அந்தப் பல்கலைக் கழகத்துடன் அபிலியேட் செய்து கொள்ளலாம். இப்படி அபிலியேட் செய்யாமல் அங்கிருக்கும் வைஸ் சான்சலர் பிடிவாதமாக தன்னுடைய கன்ட்ரோலின் கீழ் எல்லாம் வரவேண்டுமென்பதற்காக பணத்தை விரயம் செய்து கொண்டிருக்கிறார். இதைப்

[1975 பிப்ரவரி 25

பற்றி முன்னுள் விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள்கூடக் கூறியிருக்கிறுர்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்தப் பல்கலைக் கழகத்தில் பணம் விரயமாகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற தகவல். அக்ரிகல்சுரல் யூனிவர்சிடி சட்டத்தின்படி இந்தக் கணக்குகளை எல்லாம் சட்டப் பேரவை முன் வைத்தாக வேண்டும். அது வைக்கப்படும்போது என்ன தவறு என்று சுட்டிக் காட்டினுல் பதில் சொல்ல முடியும்.

## சீரணி பயணிகள் ஓய்வுக்கூடம்

* 75 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் வெளியூர் பயணிகள் வசதிக்கென " சீரணி பயணிகள் ஓய்வுக்கூடம் " கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும். எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விக்டோரியா பொதுக் கூடத்தைச் சுற்றியுள்ள 57 மனைகளில் இது கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று சீரணியினர் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஆகும் செலவுத் தொகை பூராவும் பொதுமக்களிடமிருந்து பங்குத் தொகையாகப் பெறப்பட வேண்டுமென்றும், சீரணியினர் உழைப்பைத் தரவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே அரசுக்கு வேறு எந்தச் செலவும் கிடையாது.

திரு. ஆலடி அருணு : சீரணியினர் சேவா மனப்பான்மை படைத் தவர்கள். தலைநகரில் அவர்களுக்கென்று ஓய்வு விடுதிகள் கட்ட ஆரம்பித்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓய்வு விடுதிகள் தேவை என்று சொல்லுவார்கள். ஆகவே, இத்தகைய திட்டங்கள் தேவை யில்லை, வேண்டாம் என்று முடிவு செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்ட யோசனை எதுவும் தற்போது இல்லை.



1975 பிப்ரவரி 25]

## *Prosperity Brigade works in Kanyakumari district.*

* 76. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state the total amount allotted to Kanyakumari district to execute the works under the Prosperity Brigade ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1974–75 நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சீரணி திட்டங்களை செயல்படுத்த ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்பா நாடார் : ஒதுக்கீடு செய்த ஒரு லட்சம் ரூபாயில் எவ்வளவு ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது? என்னென்ன திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த மாவட்டத்திற்கு 1974–75-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் ரூபாயில் மடிச்சல் கால்வாய்க்காக ஒதுக்கப்பட்டுள்ள 20,000 ரூபாயும் சேர்க்கப்பட்டுள்ளது. மீதி ரூபாய் சீரணித் திட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், ஏரிகள், கால்வாய்களுக்குத் தூர் எடுத்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், திறந்தவெளி அரங்குகள், வானொலி அறைகள் கட்டுதல், மற்றும் சமுதாய நலத் திட்டத்தின்கீழ் செய்யப் படாத எல்லோருக்கும் தேவைப்படும் பணிகள் செய்யப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : இந்த மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அந்தத் தொகை முழுவதும் செலவானதா? மாநிலம் பூராவுக்கும் இந்த ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கெனவே சொன்னது போல் மடிச்சல் கால்வாய்த் திட்டத்திற்கு 20,000 ரூபாய் செலவு. இதுவரை முடிக்கப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பீடு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை ரூ. 32,546. இன்னும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

அதோடு, தமிழ்நாடு பூராவும் செலவழிப்பதற்காக ரூ. 14,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 1974–75-ம் ஆண்டு நிதி செலவினத் தில் பொதுவாக 10 சதவிகிதம் குறைக்கப்பட்டதால் அவ்வாண்டு

திருத்திய மதிப்பீடு தொகையும் குறைக்கப்பட்டது. அந்தத் திருத்திய மதிப்பீடு தொகை வருமாறு :—

சேலம் ரூ. 1,10,000; திருச்சிராப்பள்ளி ரூ. 1,10,000; தஞ்சாவூர் ரூ. 1,10,000; மதுரை ரூ. 1,10,000; இராமநாதபுரம்; ரூ. 1,10,000; திருநெல்வேலி ரூ. 1,10,000; வட ஆற்காடு ரூ. 1,10,000; தென் ஆற்காடு ரூ. 1,10,000; செங்கற்பட்டு ரூ. 1,10,000; கோயம்புத்தூர் ரூ. 1,10,000; கன்னியாகுமரி ரூ. 1,00,000; தர்மபுரி ரூ. 65,000; புதுக்கோட்டை ரூ. 55,00 நீலகிரி ரூ. 45,000; சென்னை நகரம் ரூ. 75,000 ஆக மொத்தம் 14,40,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மடிச்சல் வாய்க்காலுக்கு ரூ. 20,000 செலவழித்ததாகச் சொன்னார்கள். அது போதாது. இப்போது ஒருசில பகுதிகளுக்கு இந்த வாய்க்காலிலிருந்து விடப் பட்டிருக்கிறது. நெய்யாற்றிலிருந்து தண்ணீரைவிட உடனடியாக ஆணை பிறப்பித்து அங்கு தீய்ந்து போகிற நிலங்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த ரூ. 20,000 போக பொதுமக்கள் பங்குத் தொகை வசூலிக்கப்படுகிறது. சீரணித் தொண்டர்களை ஓய்வு நேரத்தில் பயன்படுத்தித்தான் இந்த வேலையில் அவர்கள் ஈடுபடவேண்டும். எனவே அதிகத் தொகை இதில் சேர்க்க இயலாது. தனியாகச் சேர்க்கவேண்டுமென்றால் தனியாகக் கவனிக்க வேண்டும்.

*Artificial Inseminations.*

* 77. *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether any mobile Artificial Insemination Van has been commissioned by the Veterinary College at Madras ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 573-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பர்கூர் மலைப்பகுதியில் வனவிலங்குகள் சரணாலயம்

* 78. வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வணிக-வரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் வன விலங்குகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது குறித்த செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

சென்னை—எளாவூர் பேருந்து வழித்தடம்

* 79. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத் துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 80 பேருந்துகளை எளாவூரிலிருந்து கும்புளி கிராமம் வரை நீட்டிக்கும் வேலை மேன்மேலும் காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை—எளாவூர் இடையே ஓடிக்கொண்டிருந்த 80 ஆம் எண் வழித்தடப் பேருந்து குறைந்த வசூல் காரணமாக தற்போது சென்னை—பெரியபாளையம் வரை குறைக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தை எளாவூர் வழி யாக கும்புளிக்கு நீட்டிப்பதானால் கூடுதலாக 32 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். பெரியபாளையத்திற்கும் எளாவூருக்கும் 28 கிலோ மீட்டர் தூரமுள்ளது. கும்புளி, எளாவூரிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. கும்புளியிலிருந்து கணிசமான அளவிற்குப் பயணிகள் போக்குவரத்து இருக்காதாகையால், இந்த வழித்தடத்தை எளாவூர் வழியாக கும்புளி வரை நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு இல்லை. மேலும், கும்புளி இரண்டாயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட ஒரு சிறு கிராமமாகும்.

திரு. கா. வேழவேந்தன் : அந்த கும்புளி கிராமத்தில் அவ்வளவு மக்கள் தொகை இல்லை என்றாலும் சுற்றுவட்டாரத்தில் பல கிராமங் கள் உள்ளன. அங்கு வேறு பஸ் வசதி இல்லை. இப்போது அங்கு சாலை வேறு சீராகப் போட்டிருக்கிறோம். எனவே வேறு ஏதேனும் ஒரு பஸ்ஸையாவது அந்த ஊர் வரை நீட்டிக்க முயற்சிக்கப்படுமா?

[1975 பிப்ரவரி 25

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவும் தற்போது இல்லை.

பிராட்வே–பென்னலூர்ப்பேட்டை பேருந்து வழித்தடம்.

* 80. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 101 (பிராட்வே–பென்னலூர்ப் பேட்டை) பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், இப்பேருந்துகளை வழக்கம்போல் ஓட்டு வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பேருந்துகள் குறைவினால், தடம் எண் 101 (சென்னை–பென்னலூர்ப்பேட்டை) தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால், இத்தடத்தில் பேருந்துகள் திரும்ப 8—10—1974லிருந்து செலுத்தப்படுகின்றன. அதன் பின்னர் இப்பேருந்துகள் சரிவர செலுத்தப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : ஓடிக்கொண்டே இருக்கிற பேருந்துகள் சில நாட்களில் நின்றுவிடுவதால் பயணிகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. எனவே எதிர்காலத்தில் இப்படி நேராமல் ஓடக்கூடிய முறையை பல்லவன் கார்ப்பரேஷன் ஏற்படுத்த முனையுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய முறையை பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொள்ளவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி

ஓர் வினாவிற்குரிய விடையாக உள்ள நீண்ட விவர அறிக்கைகளை முன்னதாகவே உறுப்பினர்களுக்கு வழங்குவது குறித்து.

திரு. நா. வீராசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று கேள்வி நேரத்தில் 74-வது வினாவிற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவர அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்



1975 பிப்ரவரி 25] [திரு. நா. வீராசாமி]

திருக்கிறார்கள். உள்ளபடியே எல்லோருக்கும் பயன்படக்கூடிய அளவிற்கு நல்ல ஒரு விளக்கம் கொண்ட புத்தகமாக அது இருக்கிறது. 213 பக்கங்கள் இருக்கின்றன. ஆனால் காலையில் மாண்புமிகு உறுப் பினர்கள் வந்து படித்துவிட்டு அதன் பிறகு துணைக் கேள்விகள் கேட்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆகவே இப்படிப்பட்ட விவர அறிக்கைகளை ஒரு நாளைக்கு முன்னால் கொடுத்தால் உறுப்பினர் கள் படித்துவிட்டு துணை வினாக்கள் கேட்க வசதியாக இருக்கும். எனவே அந்த ஏற்பாட்டை அவைத் தலைவர் அவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுமான வரையில் இப்படிப் பட்ட பெரிய விடைகள் இருக்கிற நேரத்தில் அதை முன்னாலே கொடுக்க வழி செய்ய முடியுமா என்று நான் பார்க்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை

மக்கள் குரல், அன்னை நாடு, தென்னகம், சமநீதி, ஸ்டேட்ஸ்மென் ஆகிய நாளிதழ்கள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப் பினர்கள் திருவாளர்கள் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, திரு. கோவை செழியன், திரு. கே. டி. கே. தங்கமணி, திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் "மக்கள் குரல்", "அன்னை நாடு", "தென்னகம்", மற்றும் "சமநீதி", "ஸ்டேட்ஸ்மன்" ஆகிய நாளிதழ்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பத்திரிகைகளில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் 21—1—1975 அன்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தாதகக் கூறப்படும் ஒரு பேட்டி வரம் வெளியாகி உள்ளது. இந்தப் பேட்டி யில் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் 24-வது அறிக்கை குறித்து, அக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள்மீது நோக்கம் கற்பித்து கூறப்பட்டுள்ளது.

பேரவையின் குழுவின் உறுப்பினர்கள் அல்லது அதன் தலைவர்கள் மீது நோக்கம் கற்பித்தோ அல்லது அவதூறாகவோ பேசுவதும் எழுதுவதும், பேரவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பது தெளிவு.

எனவே அப்படிப்பட்ட அவதூறான, நோக்கம் கற்பிக்கும் அறிக்கையை மேலே குறிப்பிட்டுள்ள பத்திரிகைகள் வெளியிட்டது அவை உரிமையை மீறிய செயலாகும்.

[பேரவைத் தலைவர்]

ஆனால் உறுப்பினர்கள் மக்கள் குரல், அன்னை நாடு, தென்னகம், சமநீதி ஆகிய பத்திரிகைகளின் நகல்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் நகல் கொடுக்கப்படவில்லை. எனவே அதன் மீது என்னுடைய முடிவுவைத் தெரிவிக்க முடியவில்லை. எனவே ஸ்டேட்ஸ்மன் நீங்கலாக மற்றப் பத்திரிகைகள் மீது எழுப்பப் பட்டுள்ள பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

வறட்சி நிவாரணப் பணிகளை அரசு சரிவரச் செய்வதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாட்டில் நிலவி வரும் வறட்சி குறித்து எடுக்க வேண்டிய நிவாரண வேலை குறித்து பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து பேரவையின் 42-வது விதியின் கீழும், 41-வது விதியின்கீழும் அறிக்கைகள் வந்திருக்கின்றன. ஒத்தி வைப்புத் தீர்மானங்களும் கொடுத்திருக்கிறார்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கா. காளிமுத்து, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. கந்தசாமி, திரு. கே. என். குமாரசாமி, திரு. பி. வெங்கடசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. என். மருதாசலம், திரு. என். கே. பழனிசாமி. 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்திருப்பவர்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. கே. என். குமாரசாமி, திரு. என். கே. பழனிசாமி. அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஒரு நீண்ட அறிக்கை கொடுக்க இருக்கிறார்கள். எனவே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருப்பவர்கள் இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்கும்போது—நேற்று ஒரு மணி நேரம் தான் விவாதத்திற்கு கிடைத்திருக்கிறது. அதை மனதில் வைத்து அது தேவையா என்பது பற்றி அவர்கள் முடிவு எடுத்தால் நன்றாக யிருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர்கள் ஸ்டேட்மென்ட் கொடுப் பதற்கு முன்னால் என்னென்ன காரியங்கள் செய்யப்படவில்லை என்ற விஷயத்தைச் சொன்னால் அவர்கள் ஸ்டேட்மென்ட் கொடுக்க உதவி கரமாக இருக்கும். இல்லாதுபோனால் ரூல் 82ன் கீழ் ஸ்டேட்மென்ட்





கொடுத்துவிட்டு போயிருக்கலாம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. நாங்கள் இதைக் கொடுத்துள்ளதின் நோக்கம், சில தவறுகள் இருக் கின்றன, சில விஷயங்கள் சரியாகச் செய்யப்படவில்லை. ஏற்கெனவே தயாரித்த அறிக்கையை விட, எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத் தால், வேறு சில விஷயங்கள் கூட சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகளை சரியான வகையில் அரசாங்கம் செய்யவில்லை என்பதைக் குறிப்பிடக்கூடிய அளவிற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கொடுத்திருக்கிறேன். அதேமாதிரி திரு. காளிமுத்து அவர் களும் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஒன்றரை மாதங்களாக பல்வேறு இடங்களில் நிவாரணப் பணிகள் நடைபெறுவதாக பத்திரிகைகளில் பார்க்கிறோம். நம்முடைய சென்னையிலிருந்து பெரிய பெரிய மந்திரிகளாக இருந்தாலும் சரி, உயர்ந்த மட்டத்தில் இருக்கக் கூடியவர்கள்—கவர்னர் என்று நான் சொன்னால் சொல்லக்கூடாது என்று நீங்கள் சொல்வீர்கள்—இந்த இடங்களுக்குச் சென்று பார்க் கக்கூடியவர்கள் சென்று பார்வையிடும்போது ஒரு இடத்தில் எவ்வளவு வேலை நடந்துகொண்டிருக்கிறது என்று பார்க்கும்போது அங்குள்ள மஸ்டர் ரோலில் இவ்வளவு பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பு தரப்படுகிறது. அதேநேரத்தில் அங்குபோய் விசாரித்தால், எவ்வளவு பேர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று விசாரித்தபோது அவ்வளவு பேர்கள் அங்கு கிடையாது. மஸ்டர் ரோலில் இருக்கக்கூடிய எண்ணிக்கைக் கும் அந்த இடத்தில் வேலை பார்த்துக்கொண்டிருக்கக் கூடியவர் களின் எண்ணிக்கைக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது என்று செய்திகள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் நாம் தெரிந்து கொள் கிறோம். உயர்ந்த மட்டத்தில் இருக்கும் ஒருவர் அங்கு சென்று விசாரித்தபோது, செக் செய்யக்கூடிய நேரத்தில், அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாக கேள்வி கேட்க அங்குள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆச்சரியப்பட்டு அதை நான் பார்க்கிறேன், விசாரிக்கிறேன் என்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒத்துக்கொள்ளக் கூடிய அளவிற்கு அங்கு வேலை சரியாக நடைபெறவில்லை என்பது தெரிகிறது. ஆகவே தான் இதிலே அரசு செய்யக்கூடிய பணிகளைத் தவறாக இருக்கும் முறையில் செய்து இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 பிப்ரவரி 25

[முற்பகல் 10-00]

புதுக்கோட்டை மாவட்டத்தில்—என்னிடத்தில் அது பற்றிய குறிப்புகள் இருக்கின்றன—ஒரு டெண்டர் வறட்சி நிவாரணப் பணிகள் செய்வதற்காகக் கோரப்பட்டு இருக்கிறது. டெண்டர் இத்தனும் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தத் தேதியை இரண்டு நாட்கள் நீடித்து இருக்கிறார்கள். ஆனால் பல பேர் வந்து கேட்டபோது ஏற்கெனவே அந்த டெண்டர்கள் கொடுக்கப்பட்டு விட்டன என்று கூறியிருக்கிறார்கள். டெண்டர் கொடுக்கும் தேதியை ஒத்திவைத்து விட்டு, டெண்டர் கொடுக்க வந்தபோது "ஆல்ரெடீ கொடுத்தாகிவிட்டது" என்று சொல்லியிருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஏனெனில் சில பேர் ஏற்கெனவே டெண்டர் கொடுத்தவர்கள் மாற்றிக் கொடுக்கலாம். பரவலாக, பொதுவாக இப்படிப்பட்ட தவறான எண்ணம் வரக்கூடிய அளவுக்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பிரதம அமைச்சர் அவர்கள் இங்கே வந்து இருந்தபோது, அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த வறட்சிப் பணிகளைப் பொறுத்த வரையில் என்னிடத்தில் ஏராளமான கம்ப்ளெயிண்ட்கள் வந்து இருக்கின்றன என்று திட்டவட்டமாக அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். ஆக, இந்த நாட்டின் பிரதம மந்திரி அவர்களே திட்டவட்டமாக பணிகள் சீராக நடக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஏதோ நான்தான் இந்தச் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறோம் என்பது அல்ல. பிரதம மந்திரி அவர்கள் ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரி மாகாண அரசாங்கம் தவறு செய்து இருக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கு ... சில "ப்ரொப்பிரைடீஸ்" இருக்கிறது. அவர்கள் நேரடியாகச் சொல்ல முடியாது. ஆகவேதான் இதில் ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள், கஷ்டங்களை சூசகமாக இந்த மாகாண அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லி, செய்ய வேண்டிய வேலைகளை சரிவர செய்யுங்கள், என்னிடத்தில் நிறைய கம்ப்ளெயிண்ட் வந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நேற்று கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1969-ல் கம்ப்ளெயிண்ட் வந்து இருக்கிறது என்று சொன்னால், அப்போதே பார்த்து இருக்கலாமே என்று சொன்னார்கள். அவர்கள் பரவலாகச் சொன்னார்கள். இந்த மாகாண அரசு தவறு செய்து இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னார்கள்.



1975 பிப்ரவரி 25] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

பிரதம மந்திரியைப் பொறுத்தவரையில் அவர்கள் தன்னிச்சையாக எதையும் சொல்ல மாட்டார்கள். அவர்களிடத்தில் சி.பி.ஐ. என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அவர்கள் இங்கே ஆராய்ச்சி செய்து பிரதம அமைச்சருக்கு தகவல் கொடுக்கிறார்கள். ஆகவே, பிரதம அமைச்சர் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டு பொறுப்புள்ள குற்றச்சாட்டாகும். சி.பி.ஐ. ரகசியமாகக் கொடுத்துள்ள குறிப்புகளை வைத்து இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இல்லை என்று சொல்ல முடியாது. வெறும் கம்ப்ளயிண்ட் மட்டும் வந்து இருந்தால் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று சொல்லியிருப்பார்கள்.

In addition to the complaints she has also received.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஷயத்திற்குள்ளே போய் பேச ஆரம்பித்தால் தனி விவாதம் போல் ஆகிவிடும். கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். என்ன நடந்தது என்று தனி விவாதத்தில் பேசுவது போல் பேசினால் நன்றாக இருக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சுருக்கமாகவே சொல்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை நான் சுட்டிக் காட்டாவிட்டால் நன்றாக இருக்காது. நான் சொல்கிற பாயிண்ட், சி.பி.ஐ. மூலமாக பிரதம அமைச்சர் அவர்கள் இங்கே நடக்கிற அனைத்தையும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, ஒரு பிரதம அமைச்சர் சரியான வகையில் செயல்படவில்லை என்று மறைமுகமாக, சூசகமாகச் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னால் அது பயங்கரமான பிரச்சினையாகி விடும். ஆகவேதான் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவேண்டுமென்று சொல்கிறேன். ஆகவே, இது ஒரு முக்கியமான விஷயம்.

அதே நேரத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். பல இடங்களில் குளங்களை ஆழப்படுத்துகிறார்கள். அவற்றிற்குப் படிகள் கட்டிக்கொண்டு இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். படிகள் போடுவதாலோ, ஆழப்படுத்துவதாலோ தண்ணீர் அவற்றிற்கு வரவில்லை. அவைகள் எல்லாம் "டோடலி டிரை". இந்த நேரத்தில் இந்தப் பணிகள் செய்து கொண்டிருந்தால் என்ன பிரயோசனம். முக்கியமாகச் செய்யவேண்டிய பணிகள் செய்யப்படவில்லை. முக்கியமாக இருக்கிற கிணறுகளை உடனடியாக ஆழப்படுத்த வேண்டும். அப்படிச் சில பகுதிகளில் கிணறுகள் இல்லாவிட்டால்,

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 பிப்ரவரி 25

அங்கே திடீர்க் கிணறுகள் போட்டு அதன் மூலம் தண்ணீர் கிடைக்க வழி செய்யவேண்டும். அதை விட்டு விட்டு, குளங்களை ஆழப்படுத்து கிறோம், படிகள் போடுகிறோம், இது லாங்க் ரேஞ்ச் ப்ரொக்கிராம் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நான் சொல்வதற்கு சிரிக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சிரிப்புத் தான் வருகிறது. தண்ணீர் இல்லாத நேரத்தில்தான் குளங்களை ஆழப்படுத்த முடியும், அவற்றிற்குப் படிகள் கட்ட முடியும். தண்ணீர் இல்லாத இடங்களில் டெராமீட்டர் வைத்துப் பார்த்து, எந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறதோ அந்த இடங் களில் போர் வெல்ஸ் போட்டு இருக்கிறோம். ராக் பிளாஸ்டிங் செய் தால் செலவைச் சரிகட்ட முடியவில்லை என்றால், அதற்கு காஸ்ட் அதிகரித்துக் கொடுத்து தண்ணீர் கொண்டு வருகிறோம். எங்கேயும் தண்ணீர் கொண்டுவராமல் இல்லை. தண்ணீர் வராத இடத்தில் கூட அதிக அளவில் தோண்டி தண்ணீர் கொண்டு வந்து இருக்கிறோம். எங்கேயும் தண்ணீர் இல்லாமல் போகாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சாதாரணமாக உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் சில பேருக்கு சிரிப்பு ஏற்படலாம். ஆனால், சிரிப் புத்தான் வருகிறது என்று பேசுவது முறைதானா அல்லது அழுகை தான் வருகிறது என்று பேசுவது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பக்கத்தில் உறுப்பினர் பேசுகிறபோது "சிரிக்கவேண்டாம்" என்று இங்கேயும் சொல்ல வேண்டாம். அப்படி அவர் சொன்னதால்தான், "சிரிப்புத்தான் வருகிறது" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் சொல்வது, சிரிக்க உரிமை உண்டு, அழுவதற்கு உரிமை உண்டு. நாங்களும் அமைச்சர் பதில் சொல்கிறபோது அழுகைதான் வருகிறது என்று சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி வந்தது என்றால், அமைச்சரவர்களைப் பார்த்துப் பேசியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் சிரித்து இருக்கிறார்கள். ஹாண்டே அவர்கள் அப்போது சிரிக்கவேண்டாம் என்று சொன்னார்கள். அவர் சொன்னதைக் கேட்ட வுடன் அமைச்சர் அவர்களும் சிரிப்புத்தான் வருகிறது என்று சொன் னார்கள். இப்படியும் பேசவேண்டாம், அப்படியும் பேச வேண்டாம்.



1975 பிப்ரவரி 25]

டாக்டர் எச். வி. ஹாண்டே: சிரிப்பதைப் பற்றி நான் பிரச்சினை யாக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றிப் பேசவேண்டாம். சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். விவாதம் எப்படி முக்கியத்துவம் வாய்ந் தது என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள். இதுவே ஒரு ராங்க் பிரிசி டென்ட். நான் கொஞ்சம் கண்டிப்பாக நடக்க வேண்டிவரும். பிறகு உறுப்பினர்கள் வருத்தப்படக் கூடாது. எப்படி இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் பேச வேண்டும் தவிர, என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் பேசுவது முறையல்ல. ஆகவே, அந்த முறையைப் பின்பற்றுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யத் தவறி விட்டது என்பதற்கு ஆதாரமாக இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஆழக்குழாய் கிணறுகள், போர்வெல்ஸ் போட்டு இருக்கிறோம், குளங்களை ஆழப்படுத்துகிறோம், படிகளைக் கட்டு கிறோம் என்று சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம், போர் வெல்ஸ் போடவில்லை, அப்படிப் போட்டால் தண்ணீர் வரவில்லை, தண்ணீர் வருகிற வகையில் ஏற்பாடு செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மிகவும் பயங்கரமான ஒரு சூழ்நிலை நாட்டில் இருக்கிறது. மக்கள் பட்டினியோடும், பசி யோடும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ வழியில்லாத பயங்கரமான ஒரு நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது. அவர் களுக்கு அரிசி கிடைக்கவில்லை. அரிசி கிடைப்பதற்கும் அரசு வழி செய்யவில்லை. ஆகவே, ஒரு வார்–புட்டிங் என்ற அடிப்படையில், ஒரு யுத்த கால நடவடிக்கையாக இதைக் கருதிக்கொண்டு, எல்லா மக்களுக்கும் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஆகவே, ஒட்டு மொத்தமாக நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், சரியான வகையில் உணவுப்பொருள்கள் வழங்கப்படவில்லை, பிரதம மந்திரி அவர்கள் சொல்லும் அளவுக்கு வறட்சி நிவாரணப் பணிகளில் தவறுகள் நடந்து இருக்கின்றன. டெண்டர் கொடுப்பதில் பல கோளாறுகள் நடந்து இருக்கின்றன, மக்களுக்கு தண்ணீர்

கொடுக்க அரசு தவறி விட்டது, மக்கள் பசியாலும், பட்டினியாலும் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இங்கேயுள்ள மக்கள் மாகாணம் விட்டு மாகாணம் போய்க்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பாடு, சாதம் போடும் வகையில், பெரிய கிச்சன் ஏற்பாடு செய்யவேண்டும். அதையும் செய்யவில்லை. அரசு இவற்றையெல்லாம் "கூலாக" எடுத்துக்கொள்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினைகளை அரசு சரியான வகையில் சமாளிக்கத் தவறி விட்டது என்ற காரணத்தால், இந்த முக்கியமான பிரச்சினை குறித்து விவாதிக்க 2–3 மணி நேரம் வேண்டும், ஆனால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியம் குறித்து பேசுவதற்கு நேரம் இல்லாத நிலையில் நாம் இருப்பதால், இந்தப் பிரச்சினை குறித்து முழுமையாக விவாதிக்க இந்த மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கூறி, மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த பிரச்சினை குறித்து விவாதிக்கத்தக்க வகையில் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. அதிலும், உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது என்று நான் கருதுகிற காரணத்தால், இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய சில விவரங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்போது ஏறத்தாழ ரூ. 55 கோடி அளவில் ஒரு பெரிய திட்டத்தை மாநில அரசு வைத்து இருக்கிறது. இன்றையதினம் பல்வேறு மாவட்டங்களில் இருக்கிற நிலைமைகளைப் பார்க்கிறபோது, ஒரு வேளைக்கு ஒரு படி அரிசி கிடைத்தாலும் கூட, அதனை வேக வைத்து சமைத்துச் சாப்பிடுவதற்கு உள்ள தண்ணீர் இல்லாத அத்தகைய வறட்சியான சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. ஆகவே, இந்தப் பிரச்சினையை உடனடியாக கவனிக்கவேண்டும்.

இன்று பல்வேறு இடங்களில் நாம் செய்கின்ற வறட்சி பணி வேலைகள் கண்டிராக்டர்களுக்குக் கொடுத்து செய்கின்ற காரணத்தினால் நேரடியாக பொதுமக்களுக்கு அதன் வாயிலாகக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்கவேண்டிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் ஆங்காங்கே இருந்துகொண்டிருக்கிறது. இதைத் தான் நமது பாரதப் பிரதம மந்திரி கூட இங்கு வந்திருந்தபொழுது சுட்டிக்



காட்டினார்கள். கண்டிராக்டர் சிஸ்டம் நிறுத்தப்படவேண்டும். இந்தப் பணிகளை நேரடியாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கிற மக்கள் தானாகவே செய்வதற்கு உள்ள வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், அதே வேளையில் பாரதப் பிரதமர் அவர்கள் சென்ற வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு கொடுத்த உதவி சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்ற புகார்கள் தனக்குக் கிடைத்திருக்கிறது. அது போல இப்பொழுதும் கூட அவ்வண்ணமே புகார்கள் வந்தவண்ணம் இருக்கிறது. காங்கிரஸ்காரர்களிடமிருந்து வந்தது மட்டுமல்ல, இன்னும் பல்வேறு ஆட்களிடமிருந்து வருகிறது என்ற குற்றச்சாட்டினை அம்மையார் அவர்கள் இங்கு வந்திருந்த பொழுது கூறினார்கள்.

நாங்கள் 1969-ம் ஆண்டில் ஏக எதிர்க்கட்சியாக இந்த மன்றத்தில் இருந்தபொழுது அன்றையதினம் வறட்சி நிவாரணப் பணிகள் சரியாக செயல்படவில்லை என்று, ஆங்காங்கே குறைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினோம். இருந்தாலும் கூட இந்த அரசாங்கமோ அல்லது மத்திய அரசாங்கமோ அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனால் இன்று மத்திய அரசு நாங்கள் அன்று கூறிய குற்றச்சாட்டினை ஏற்று இருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயம் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நான் இதை எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னால், ஒரு வேளை என்ன காரணத்தினாலோ அன்றையதினம் நாங்கள் கூறிய குற்றச்சாட்டினை மத்திய அரசும், இந்த அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னாலும், இப்பொழுதாகிலும் மத்திய அரசு அதற்கு செவி சாய்க்கிறது என்று காணும்பொழுது மக்களுக்கு நம்பிக்கை வரக்கூடியதாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்பொழுது அம்மாதிரியான குறைபாடுகள் இல்லாத முறையில் நாம் வகுக்கின்ற திட்டங்கள் நேரடியாக மக்களுக்குச் சென்று சேரத்தக்க முறையில் செயல்படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறட்சிப் பணிக்கு ஏறத்தாழ ரூ. 17½ கோடி மார்ச் 31-ம் தேதிக்கு முன்னதாக செலவு செய்ய இருக்கிறோம். இதில் கன்னியாகுமரிக்கு ரூ. 4 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 70,000 ஏக்கரா நிலத்தில் 30,000 ஏக்கரா கரிந்து போயிருக்கிறது. அந்த அளவுக்கு வறட்சி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 பிப்ரவரி 25

ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் அந்த நிலைமையை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அந்தப் பகுதிகளுக்கு கூடுதலாகப் பணம் ஒதுக்கீடு செய்யவேண்டும்.

அதோடு மட்டுமல்ல. இன்றையதினம் மிகவும் முக்கியமாக இருக்கின்ற பிரச்சினை கிராமங்களில் வறட்சி ஏற்பட்டிருந்தாலும் கூட அதனுடைய ரீஆக்ஷன் பட்டணங்களிலும் கூட இருக்கிறது. நாம் அரிசியை ரூ. 9, ரூ. 8 என்ற அளவில் விற்றுக்கொண்டிருக்கிறோம். பட்டணங்களில் இருக்கிற மக்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அரசாங்கம் சென்ற ஆண்டு 1½ லட்சம் டன் கொள்முதல் செய்த இடத்தில் இப்பொழுது 2½ லட்சம் அரிசி கொள்முதல் செய்து வைத்திருக்கிறது. ஆனால் அதை ஒழுங்கான முறையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தேவைக்கேற்ற வகையில் நியாய விலைக் கடைகளின் மூலம் மக்களுக்குக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்திருந்தால் உண்மையில் இப்பொழுதிருக்கிற குறைபாடுகள், வறட்சி ஓரளவுக்கு நீங்குவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். அது மட்டுமல்ல. நியாயவிலைக் கடைகள் கிராமங்களிலும், பட்டணங்களிலும் திறந்தால் நிச்சயம் விலை ஏற்றம் ஓரளவுக்கு குறையவும் வாய்ப்பு இருக்கிறது. நமது அரசாங்கம் ஸ்டாக் இருக்கும் அளவுக்கு அதனை மக்களுக்கு விநியோகம் செய்திருக்கவேண்டும். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற அளவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, இப்போது கொள்முதல் செய்துவைத்திருக்கிற நெல்லை உடனடியாக நியாயவிலைக் கடைகள் மூலம் மாநிலத்திலுள்ள பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளுக்கும் விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டு, ஆக இந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இது இருக்கின்ற காரணத்தினால், அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. KANDASWAMY: Sir, my motion is—

'Very serious and unprecedented hardships created to the people in Madurai and Ramnad districts due to drought and the inadequate measures of relief to protect the life of the people and cattle resulting in half-starvation and sale of cattle at a very much less value, forcing people to lose hope of their future is likely to create tension affecting peace and tranquility leading to law and order problem.'



1975 பிப்ரவரி 25] [திரு. கே. கந்தசாமி]

நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிற சரித்திரம் கண்டறியாத வறட்சி நிலையை சமாளிக்க நமது அரசு இரக்க சிந்தனையோடு எத்தனையோ முயற்சிகளை எடுத்தாலும் கூட, கிடைக்கவேண்டிய உதவி மக்களுக்கு கிடைக்கவில்லை, அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு இன்னும் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்ற கருத்து நிலவி வருவதை நான் ஆணித்தரமாக இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

நான் சென்ற சட்டமன்றத் தொடக்கத்தில் சபையில் ஒத்திவைப்பு தீர்மானம் விதி 42-ன் கீழ் கிளப்பியிருக்கிறேன். அப்பொழுது பல உறுப்பினர்களுக்குக் கூட ஆச்சரியமாக இருந்தது. ஏதோ பஞ்சம் என்று இந்த ஆள் முதலிலேயே சொல்கிறாரே என்று நினைத்தவர்களும் உண்டு. நான் ஒரு விவசாயியாக இருக்கிற காரணத்தினால், கிராம நிலையை உணர்ந்தவன் என்ற காரணத்தினால் நாட்டில் வரப்போகிற ஆபத்தை முன்கூட்டியே சொன்னேன். மிக பயங்கரமான நிலை ஏற்படப்போகிறது, உயிருக்கு ஆபத்து, உடைமைக்கு ஆபத்து ஏற்படும் என்ற பரிதாபகரமான நிலைமை, பயங்கரமான சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாக இருக்கிறது என்று எச்சரித்தேன். சபாநாயகர் அவர்கள் மணி அடித்து விரைவாகப் பேச்சை முடிக்க வேண்டும் என்று சொன்னதும், உயிர் கொள்ளைபோகிற நிலைமை ஏற்படும், உடைமையை பறித்துச்செல்கிற நிலைமை ஏற்படும் என்று எச்சரித்தேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இப்பொழுது மிக சாதாரணமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் நிதர்சனமாக உணர்கிறோம்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையில் மக்களுக்கு நிவாரணம் உடனடியாகக் கிடைக்கவேண்டும். குறிப்பாக மதுரை, இராமனாதபுரம் மாவட்டங்களில் நான் சுற்றுப் பயணம் செய்தேன். அதிகாரிகளோடும், தனியாகவும் சென்று பார்த்தேன். அங்கெல்லாம் சில பிரச்சினைகளை நேரடியாகக் கண்டறிந்தேன். சென்ற இடங்களிலெல்லாம் குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமத்திலும், பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமங்களிலாகிலும் நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தும், இன்னும் பல கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை. நகர்ப்புறங்களில் வேண்டுமென்றால் நியாய விலைக் கடைகள் திறந்துவைத்திருப்பதால், அங்கிருக்கும் மக்களுடைய பிரச்சினையை ஓரளவுக்கு சமாளிக்கலாமே ஒழிய, கிராமப்புறங்களில் வேண்டிய உணவு

[திரு. கே. கந்தசாமி] [1975 பிப்ரவரி 25

தானியம் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படவில்லை. இன்னும் அநேக கிராமங்களிலுள்ள மக்கள் வாங்கும் சக்தி இழந்த நிலையில் தான் உள்ளார்கள் என்பது ஒரு புறம் இருக்க, எப்படியாவது சமாளித்து எதையாவது வாங்கி உண்டு உயிர் வாழலாம் என்றால், உணவு தானியங்கள் அங்கெல்லாம் விநியோகிக்கப்படவில்லை, கிடைக்கவும் வேறு ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல டெண்டர் விட்டு வேலைகள் செய்கிறபொழுது "ஆல் பார்ட்டி கமிட்டி விஜிலன்ஸ்" வேண்டும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே நான் சொன்னேன். அதற்குக் காரணம், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சி களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இந்த அரசைச் சார்ந்தவர் களாக இருந்தாலும் சரி, செல்வாக்குப் படைத்தவர்களாக இருந் தாலும் சரி, அப்படிப்பட்டவர்கள் மட்டும் தான் சில வேலைகளை எடுத்துச் செய்து ஊதியம் பெறுகிறார்கள் என்ற பரவலான ஒரு குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அரசுக்கு களங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது. அந்த நிலைமையை மாற்றவேண்டும். மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை ஏற்படவேண்டும்.

ஆகவே, பல கிராமங்களில் இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களை வைத்து, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வேறு தனிப்பட்ட குரூப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எல்லோருடைய பிரதிநிதித்துவமும் கொண்ட ஒரு உஷார் கமிட்டி ஒன்றை அமைத்து உணவு பங்கீட்டு முறை செய்வதோ அல்லது கூட்டுறவுத் துறை மூலம் உணவு பங்கிடு செய்வதை கண்காணிப் பதோ, அங்கே நடைபெறுகின்ற பஞ்ச நிவாரணப் பணிகளை கண்காணிப்பதோ என்ற நிலைமை ஏற்பட்டால் உதவிகரமாக இருக்கும். அதிகாரிகளும், சிப்பந்திகளும் மேலும் ஊக்கத்தோடு வேலை செய்ய முடியும் என்ற கருத்தை தெரிவித்தோம். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து, நிவாரண வேலைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித் தார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மதுரை மாவட்டத்தில் அப்படிப்பட்ட உஷார் கமிட்டி அமைக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டாலும், இன்னும் பலதரப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைத்தபாடில்லை.



1975 பிப்ரவரி 25] [திரு. கே. கந்தசாமி]

எல்லோருக்கும் நன்மை கிடைத்திருக்கிறது என்ற கருத்தை பிரதிபலிக் கின்ற அளவுக்கு அந்த வேலைகள் நடைபெறவில்லை. விவசாய ஏழை நடுத்தர மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மக்கள் வறட்சியால் பாதிக்கப் பட்டு ஆடுமாடுகளைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ரூ. 1,000 பெறுமான மாட்டை ரூ. 250, 300, 400 என்று விற்கிறார்கள். மேலப் பாளையம் சந்தைக்கும், கேரளாவுக்கும் அனுப்பி விற்கிறார்கள். ஆடு மாடுகளையும் குடும்பங்களையும் கூட்டிக்கொண்டு வந்து தஞ்சை மாவட்டத்திற்கு வருகிறார்கள்.

மதுரை மாவட்டம் கம்பம் பகுதியிலிருந்து ஆடுமாடுகளை வண்டி களில் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள். ரோடுகளில் மரத்தடியில் படுத்துக்கிடக்கிறார்கள். பட்டினிச் சாவு என்று சட்ட ரீதியாக நிரூபிக்க முடியாது என்பதை நாம் உணர்கிறோம். இருந்தாலும் பாதுகாப்பற்ற நிலையில் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் உழைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள், எப்படியாவது உணவு கிடைத்தால் போதும் என்று தான் நிலை இருக்கிறது. ஒரு ஊழியர் மதுரை பைகாராவிலிருந்து வந்தார். "மூன்று நாட்களாக சாப்பாடு இல்லை, லாரியில் ரூ. 5 கொடுத்து வந்தேன்" என்று சொன்னார். அவர் என்னிடம் பேசிக்கொண்டு இருக்கும்பொழுதே ரூமில் மயங்கி விழுந்து விட்டார். அவரை எழுப்பி, குளிக்க வைத்து, காப்பி, டிபன் கொடுத்து, 5 ரூபாய் கையில் கொடுத்து உட்காரச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இனி வேறு யாராவது இப்படிக் கொடுத்தால்தான் அவர் சாப்பிட முடியும். இல்லை என்றால் நிலைமை என்னவாகும் என்று சொல்ல முடியாது. சாப்பிடுவதற்கு வேறு வழி யில்லை என்றால் மரணம் அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி அவர் மரணமடைந்துவிட்டால் பட்டினிச் சாவு இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று என்னால் நிரூபிக்க முடியும்.

அதேநேரத்தில் இந்தப் பிரச்சினையை ஒரு அரசியல் பிரச்சினை யாக்க நான் விரும்பவில்லை. அரசியல் பிரச்சினையாக்கப்படுவது யாராலும் விரும்பத்தக்கது அல்ல. அனைத்துக் கட்சிக்காரர்களும் இதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக, ஒரு தேசியப் பிரச்சினை யாக ஏற்றுக்கொள்ளவேண்டும். மாநில அளவில், (Vigilance Committee) என்று இருக்க வேண்டும்.

மத்திய அரசு ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தாலும் ஒரு தாயாக இருந்து நிவாரணத்திற்கு வழி செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, மாற்றான் தாய் மனப் பான்மையில் காரியங்கள் செய்வது வருந்தத்தக்கது: வேதனைப்படத் தக்கது. சென்னைக்கு வந்துசென்ற இந்திரா காந்தி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்து ஒரு மணி நேரம் சுற்றிப் பார்த்திருந்தால் நிலைமை எப்படி இருக்கிறது என்பது தெரிந்திருக்கும். அங்கே அரைப் பட்டினி, கால் பட்டினி கிடக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்வது, மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு வேண்டும்.

நிவாரணப் பணிகளைச் செய்யும்போது சில குறைபாடுகள் ஏற்படு கின்றன. கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுக்கிறார்கள். ஆனால் நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில் இரண்டு கிணறுகளுக்கிடையில் 600 அடி தூரம் இடைவெளி இருந்தால்தான் கடன் கொடுப்போம் என்கிறார்கள். அந்த அளவுக்கு இடைவெளி இல்லை என்றால் கடன் கொடுப்பதில்லை. மற்ற உதவிகளும் செய்வதில்லை. கிணறுகளை ஆழப்படுத்த பணம் கொடுப்பதில்லை. ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கிற சம்சாரிகள் என்ன செய்வார்கள்? கிணற்றை ஆழப்படுத்த வேண்டுமானால் அல்லது புதிய கிணறு வெட்ட வேண்டுமானால் 3 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும். 600 அடி தூரம் இடைவெளி இருக்கவேண்டுமென்று சொன்னால் சாதாரண ஏழை விவசாயிகள் எப்படி பயன் பெற முடியும்? இந்த விதியினால் எல்.டி. பாங்க் லோன் சிறு விவசாயிகளுக்கு கிடைக்காமல் போய்விடு கிறது. to sustain starving cattle alive and to get human life for some time to keep on going என்ற நிலைமையை ஓரளவேனும் உருவாக்க வேண்டுமானால் உடனடியாக தற்காலிகமாக அவரவர் குடும்பத்திற்கு ஏற்ற முறையில் 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை கடனை கொடுக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: உங்களுடைய ஆலோசனைகள், விவாதங்களை எல்லாம் பின்னால் வைத்துக்கொள்ளுங்கள், இந்தச் சபையின் பிற அலுவல்களை ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்பதற் கான காரணங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

<u>திரு. கே. கந்தசாமி</u>: இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமை யில் இந்த அரசின் உதவி மட்டும் போதாது; மத்திய அரசின் உதவி இன்னும் பெருமளவில் தேவைப்படுகிறது. இது ஒரு உயிர்ப்





பிரச்சினை; ஒரு உடைமைப் பிரச்சினை. இந்த உயிர்-உடைமையைக் காப்பதைத் தவிர ஒரு அரசுக்கு வேறு வேலை இல்லை. இதைப்பற்றி தெளிவாக விவாதித்து, ஒரு தீர்மானத்தை வேண்டுமானாலும் போட்டு மத்திய அரசுக்கு அனுப்புவோம். மத்திய அரசின் உதவி நமக்கு பெருமளவில் தேவைப்படுகிறது. எந்தெந்த வகையில், எவ்வளவு தேவை என்பதைப்பற்றி எல்லாம் தெளிவாக விவாதித்து முடிவு செய்ய, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u>: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கவர்னர் உரைக்கு அடுத்த தினமே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இது ரொம்ப முக்கியமான ஒரு விஷயம். காலதாமதமாகி இந்த விஷயத்தை எடுத் துக்கொண்டதினால் இதை ஒரு சாதாரணப் பிரச்சினையாக கருதியிருக் கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. இதை ஒரு சாதாரணப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய இந்த இரண்டு மாவட்டங்களும் பின்தங்கிய மாவட்டங்கள் என்று மத்திய அரசாங்கத்தால் 2 வருஷங்களுக்கு முன்னால் அறிவிக்கப்பட்டிருக் கிறது. அப்படி இருந்தும் இந்த இரண்டு வருஷ காலத்தில் இந்த அரசாங்கம் அந்த இரண்டு மாவட்டங்களுக்கும் என்ன செய்திருக் கிறது? தேவையான அபிவிருத்திக் காரியங்களைச் செய்திருக் கிறதா? தேவையான ஏற்பாடுகளைச் செய்யாததால் இந்த வறட்சிக் காலத்தில் ரொம்ப மோசமாகி இருக்கிறது. அதற்குக் காரணம் இந்த அரசுதான் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

பஞ்ச காலத்தில்தான் சில மாவட்டங்களில் நல்ல காரியங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றிப் பேசும்போது உறுப்பினர்கள் சொன்னார்கள். வறட்சி நிவாரணப் பணியாக புதுக் குளங்கள் தோண்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் என்ன என்ன பணிகள் செய்ய வேண்டுமென்று அங்குள்ள மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். குடிதண்ணீர் கூட கொடுக்க முடியாத நிலைமை புதுக்கோட்டையில் இருக்கிறது. அதைப்போல சேலம், தர்மபுரி மாவட்டங்கள் இருக் கின்றன. அதற்குத் தேவையான நடவடிக்கைகளும் இன்னும் சரியாக

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 பிப்ரவரி 25

அங்கெல்லாம் நடைபெறவும் இல்லை. இங்கே அமைச்சர்கள் கொடுக்கின்ற அறிவிப்புகளுக்கும் அங்கே அதிகாரிகள் செய்கின்ற வேலைகளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது.

தினக் கூலி 3 ரூபாய்க்கு குறையாமல் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாக இங்கே அமைச்சர்கள் சொல்கிறார்கள். இப்போது மேட்டூரில் இருந்து வந்த உறுப்பினர் அந்தமாதிரி அங்கே உத்தரவு வரவில்லை என்று அதிகாரிகள் சொல்வதாகச் சொல்கிறார்கள். இப்போது கடன்களை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று இங்கே சொல்கிறார்கள். ஆனால் அங்கே கடன் பாக்கிக்காக ஆடு மாடுகளை ஜப்தி செய்யும் நடவடிக்கை தொடர்ந்து நடக்கிறது. கிணற்றை ஆழப்படுத்த தேவையான உத்தரவு அனுப்பியிருக்கிறோம் என்று இங்கே சொல்கிறார்கள். அங்கே உத்தரவு வரவில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்; 600 அடி தூரம் இடைவெளி இருந்தால்தான் கடன் கொடுக்கவோ, வேறு உதவிகள் செய்யவோ வேண்டுமென்று உத்தரவு இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி அமைச்சர்களின் அறிக்கைகளுக்கும் அதிகாரிகளின் செயல்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது. அதனால் சொல்கிற காரியங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. அதையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் பொதுவாக

An extraordinary situation has come and there must be extraordinary steps. என்று இந்திரா காந்தி அம்மையார் சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகள் அறிக்கை அளவில்தான் இருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 10 கோடி ரூபாய் நாங்கள் செலவழிக்கிறோம்; மத்திய அரசு $7\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். It is nothing but tall claim. அதற்கு விபரங்கள் வேண்டும். நாம் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே இருக்கிறோம். நமக்குப் பல விஷயங்கள் தெரியும். நான் இராமநாதபுரம், புதுக்கோட்டை, சேலம் மாவட்டங்களைப் போய் பார்த்திருக்கிறேன். அங்கே குடிதண்ணீர் கூட இல்லை. சென்னை மாநகரில் குடி தண்ணீர் இல்லை என்று சொன்னால், குடிதண்ணீர் இல்லை என்று சொன்ன ஒரு வாரத்திற்குள் கிணற்றைத் தோண்டி, கை பம்பு போட்டுக் கொடுக்கிறேன் என்று மாநகரின் ஸ்பெஷல் ஆபீசர் சொல்கிறார். அதே மாதிரி மற்ற இடங்களிலும் நடக்க வேண்டாமா?



1975 பிப்ரவரி 25] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பஞ்சாயத்துக்கு 100 கிணறுகள் வெட்டச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்தில் 100 கிராமங்களா இருக்கின்றன? கிராமத்திற்கு From A to Z Government have failed ஒரு கிணறாவது வேண்டாமா? இங்கே சொல்கிற வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் நிலைமைகள் ஓரளவுக்காவது சமாளிக்கப்பட்டிருக்கும். இங்கே கொடுக்கின்ற வாக்குறுதிகளை அமுல்படுத்தும் சக்தி இந்த அரசாங்கத்திற்கு இல்லை. அமைச்சர் வாக்குறுதி கொடுத்துவிட்டாரே என்று அதிகாரிகளைக் கேட்டால் அதற்கான ஜி.ஓ. வரவில்லையே என்று சொல்கிறார்கள். எதற்கெடுத்தாலும் ஜி.ஓ. வரவில்லை. ஜி.ஓ. வரவில்லை என்று சொல்லிக் கொள்வதைப் பார்த்தால் இந்த ஜி.ஓ. ஒரு பெரிய வியாதியாக இருக்கிறது. இந்த வியாதி மாற வேண்டும்.

அரசாங்கம் ஒரு அறிவிப்பைச் செய்கிறது. முதலமைச்சர் பத்திரிகைக்கு செய்தி கொடுக்கிறார். அதற்கு ஜி.ஓ. வரவேண்டுமென்று டி.ஆர்.ஓ. சொல்கிறார். ஆக, எல்லாக் கட்டங்களிலும் அமைச்சர்கள் சொல்வதற்கும் அதிகாரிகள் செய்வதற்கும் சம்பந்தமே இல்லாமல், இருக்கிறது. இப்பேர்பட்ட ஒரு அவல நிலை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதைவிட ஒரு மோசமான நிலைமை "சென்ஷூர் மோஷன்" கொடுப்பதற்கு தேவையில்லை. because an adjournment motion is in the nature of a censure motion. மத்திய அரசுக்குக் கூட இப்போது ஒரு சென்ஷூர் மோஷன் கொடுத்து, அது விவாதிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் என்னென்ன பணிகள் நடைபெற வேண்டும். அரசாங்கம் செய்யத் தவறியது என்ன என்பதைப்பற்றி விவாதிக்கத்தான் இந்த மோஷனை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அப்போதாவது இந்த அரசாங்கத்திற்கு உருக்கம் வரும், சூடு வரும், சொரணை வரும் என்று கருதுகிறேன். ஆகவே, சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலை பற்றிச் சில காரியங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நான் குறைகள் என்று எடுத்துக் கொள்ளாமல், அவைகள் மூலம் செய்ய வேண்டிய பணிகளை விரைவான முறையிலே தீவிரமாகச் செயல்படுத்த வேண்டு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 பிப்ரவரி 25

மென்ற யோசனையாக ஏற்று, அவைகளைச் செய்வதற்கான முதற் கட்டமாக நடைபெறுகின்ற வேலைகளைப்பற்றி இங்கே விளக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

1974-ம் ஆண்டு தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவக்காற்று அறவே தவறியது. அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் 462 மி.மீ. இயல்பான சராசரி மழைக்குப் பதிலாக 1974-ம் ஆண்டு இம் மாதங்களில் பெய்த மொத்த மழையின் அளவு 195 மி.மீ. ஆகும். இந்த மிகக் குறைவான மழைகூட வளரும் பயிர்களுக்கு அவசியமான நாட்களில் அல்லாமல் அங்குமிங்குமாகவும் பெய்தது. இதன் காரணமாக நீர்ப்பாசன ஏரிகளில் தேவையான காலங்களில் தண்ணீர் இல்லாமல், வறண்டு போயின. ஆற்றுப் பாசன சம்பந்தப்பட்ட நீர் நிலையங்களில்கூட ஆறுதலளிக்கும் வகையில், நிலைமை அமையவில்லை. வறண்ட நிலப் பகுதிகளில் இயல்பாகவே வறட்சியின் கடுமை அதிகமாய் நிலவிற்று.

2. 1974 டிசம்பர் மாதம் மூன்றும் வாரம், நிலவருவாய் வாரிய உறுப்பினர்கள் வறட்சி நிலைமையைக் கண்டறிய மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையின்படி, நிரந்தரமான ஆற்று நீர்ப் பாசன வசதியற்ற, ஆனால் முன்னர் பெய்த பருவ மழையின் காரணமாகவும் அவ்வப் போது பெய்யும் மழைத் தண்ணீரை நீர்நிலையங்களில் தேக்கி அவைகளின் மூலம் வாலாயமாய் குறுகிய கால நெற்பயிர் சாகுபடி செய்யும் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு பெரும் பகுதியிலும், சேலம், தர்மபுரி மாவட்டங்களிலும், மேலும் ஆற்று நீர் பாசன வசதியற்றும் சாதாரணமாக தென்மேற்கு பருவ மழை பெய்யாத காரணத்தினால் புஞ்செய் தானியங்களைக்கூட விளைவிக்க முடியாத, வடகிழக்கு பருவ மழையையே நம்பி இருக்கும் பகுதிகளான இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை மாவட்டம் பெரும் பகுதி, மேலும் கோவை மாவட்டங்களிலும் நெல் சாகுபடி செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லாமல் போய்விட்டது. தென்மேற்கு பருவமழைத் தண்ணீரைக் கொண்டு பயிரிட்ட புஞ்செய் பயிர்கள் வடகிழக்கு பருவ மழை தவறியதால் அடியோடு காய்ந்துவிட்டன.

3. பருவமழையை மட்டுமே நம்பியிராத ஆனால் நீர்பிடிப்பு வசதியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் மொர்காரா முதலிய பகுதியிலிருந்து உற்பத்தியாகும் நதிகளின் நீரைக்கொண்டு நஞ்செய்



1975 பிப்ரவரி 25] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

தானியம் முக்கியமாக, நெல் சாகுபடி செய்யும் பகுதிகளான, தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் பெருமபாலான பகுதிகள், திருநெல்வேலி, தென் ஆற்காடு, கோவை, மதுரை மற்றும் தருமபுரி மாவட்டங்கள் தவிர தமிழ்நாடு முழுவதுமே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆற்று நீர்ப் பசான வசதியுள்ள இம் மாவட்டங்களில் கூட நீண்ட கால நெற் பயிர்கள் அற்பமான மகசூலையே கொடுத்துள்ளது. இரண்டாம் போக பயிர்கள் பெரும்பகுதிகளில் சாவியாய்விட்டன. மழையையே நம்பியுள்ள மானாவாரி பயிர்களின் உற்பத்தி அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதியின் பேரில் பல்வேறு கிராமங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள். இதுவரை அறிவிக்கப்படாத பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு அவசியமானால் 15—3—75க்குள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாய் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

4. மேற்சொன்ன நிலைமையையும், வருவாய் வாரியத்தின் அறிக்கையையும் ஆய்ந்த அரசு வறட்சிப் பகுதிகளென பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு கீழே கூறப்பட்டுள்ள உடனடி நிவாரணங்களை அளிக்க முடிவு செய்தது :—

(அ) நிலச்சுவான்தார்களுக்கு நிலவரித் தள்ளுபடி, தண்டல் மற்றும் கடன் பாக்கி வசூல் ஒத்திவைப்பு.

(ஆ) பொதுமக்களுக்கு குடிநீர் வசதிகளை அமைத்தல்.

(இ) உழவையே நம்பியுள்ள உழவர் பெருமக்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளுதல்.

5. அங்கீகரிக்கப்பட்ட நிவாரணப் பணிகளில் முதற்கண் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில்—

(அ) 1384 பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய சர்க்கார் கடன்கள் பழைய பாக்கி உள்பட, நடப்பு ஆண்டில் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி வசூலை அடுத்த பசலிக்கு ஒத்திவைப்பு.

(ஆ) நடப்பு பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய கூடுதல் நஞ்செய் தீர்வை உட்பட நிலவரி, நீர்த் தீர்வை, கூடுதல் நீர்த் தீர்வை, நஞ்செய் மற்றும் புஞ்செய் மானாவாரி நிலங்களுக்கு உள்ளூர் வரி வஜா செய்யப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில், பஞ்சாயத்துத் தீர்வை மேல்வரி விதிக்க வேண்டாம்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 பிப்ரவரி 25

என ஊராட்சி ஒன்றியங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உள்ளாட்சி மன்றங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியும் மேல் வரியும் இப்பிரதேசங்களில் வசூலிக்கப்படுவதில்லை.

(இ) 1383 பசலி, அதற்கு முன்னர் உள்ள பசலிகளுக்கும் செலுத்தப்பட வேண்டிய நிலவரி வசூலை 1385-ம் பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஒத்திவைக்கப்பட்டதும், வஜா செய்யப்பட்டதுமான வரிப் பணத்தின் சரியான தொகை எவ்வளவு என்பது வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பரப்பளவு அதற்கான தீர்வை முதலான விவரங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டும். ஆயினும், வரி வஜா உள்ளாட்சி மன்றங்களுக்கு செலவு ஈடு செய்ய வேண்டிய தொகை, வசூல் ஒத்திவைப்புத் தொகை முதலியன சுமார் ரூ. 25 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

6. தொடர்ச்சியாக உரிய காலங்களில் மழையில்லாத காரணத்தால் வறட்சிப் பகுதிகளில் நில நீர்மட்டம் குறைந்து கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெருவாரியான கிணறுகள் வற்றிவிட்டன. இதுகாறும் வற்றுத சில கிணறுகளிலும், தண்ணீர் மிக ஆழத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் டிசம்பர், சனவரி மாதங்களில் இம்மாதிரி குடிநீர் பிரச்சினை ஏற்படுவது மிகவும் அபூர்வமான நிலையாகும். ஆகையால், வறட்சிப் பிரதேசங்களில் குடிநீர் தட்டுப்படாமல் கிடைக்க ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதிலும், மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் இடங்களில் புதிய கிணறுகளைத் தோண்டுவதிலும் தீவிர முதல் கவனம் செலுத்தப்படுகிறது.

7. தண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்க, வேளாண்மைத் துறையின் பொறியியல் பகுதியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ஊராட்சி ஒன்றியங்களும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

8. குறைந்த அளவுள்ள துளைபோடும் யந்திர கருவிகளும், கைத் துளைக் கருவிகளும் தீவிரமாக திட்டப்படி செயலாற்ற போதியவையாக இல்லை. 6 சம்மட்டித் துளை யந்திரங்களை Hammer in the hole கட்டுகை வழங்கவும் 1,000 கைத்துளை (ஜால்ரு வகை) பம்புகளை நன்கொடையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கும்படியும், மத்தியப் பேரரசின் மூலமாக இந்தியாவில் உள்ள யூனிசெப் நிறுவனத்தாரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம் ஆகிய அரசுகளை



1975 பிப்ரவரி 25] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இம்மாநிலத்திற்கு துளைபோடும் யந்திரக் கருவிகளைத் தாற்காலிக உபயோகத்திற்கு கொடுத்துதவுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

9. இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் தொன்றுதொட்டு மழைநீரை மிக ஆழமில்லாத ஊரணிகளில் தேக்கி குடிநீராக உபயோகப்படுத்தும் வழக்கம் உள்ளது. ஆகையால் பெருவாரியான வற்றிப் போன ஊரணிகள் ஆழப்படுத்தப்படுகின்றன. இம்மாதிரித் திட்டங்கள் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும் பயன்படுகின்றன.

10. நகராட்சி மன்றங்களும் குடிநீர் வழங்குவதில் கடுமையான இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. சில நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை உண்மையில் மோசமாக உள்ளது. நகராட்சிகளின் நிதி உதவி கோரிக்கை தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. பற்றுக்குறை நிதி நிலைமையைச் சமாளிக்க இதுவரை சில நகராட்சிகளுக்கு ரூ. 29 லட்சம் வரை பாதி கடனாகவும் பாதி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதி என அறிவிக்கப்படாத பகுதிகளில்கூட எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயலாற்றப்படுகின்றன. குறிப்பாக, பேரூராட்சிகளில்கூட குடிதண்ணீர் வசதியைப் பெருக்குவதற்கு வேண்டிய நிதி உதவியை வறட்சித் துயர் தணிப்பு நிதியிலிருந்து வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது.

11. நீலகிரி மாவட்டத்தில் நிலவரி ஒத்திவைப்புக்குத் தகுதி பெறும் வகையில், உதகை மற்றும் கூனூர் வட்டங்களில் காபி, தேயிலை முதலான மலைத்தோட்டப் பயிர் செய்யாத பகுதிகள் மட்டும் வறட்சி பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிநீரைப் பொருத்த வரையில் ரூ. 15.81 லட்சம் மதிப்புள்ள வேலைகளை செயலாற்ற நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தப் பகுதியும் வறட்சி பகுதியாக அறிவிக்கப்படாவிடினும் குடிநீர் வழங்க ரூ. 4 லட்சம் மதிப்புள்ள திட்டங்களை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

12. மேலே கூறியவாறு 1975-ம் ஆண்டு சனவரி முதல் செப்டம்பர் வரை விவசாய வேலைகளின்று அல்லலுறும் உழவுத் தொழிலாளர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 பிப்ரவரி 25

நிவாரணப் பணிகளைத் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இதுபோன்ற தொழிலாளர்கள், மற்றும் சிறு விவசாயிகளின் பொருளாதார வசதிகளை இம்மாதிரி நிவாரணப் பணிகள் செயலாற்றுவதின் மூலம் தான் அதிகரிக்க இயலும். நிவாரணத்திற்காக செயலாற்றப்படும் பணிகளை நாளடைவில் மாநிலத்தில் நிரந்தரமாகப் பயன்படும் நீர் நிலைகள், கிணறுகள், சாலைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுபாசன நிலையங்களின் மேம்பாடு பொதுப் பணித் துறை வேலைகள், சாலை செப்பனிடும் வேலைகள் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் இதில் அடங்கும். நிவாரண வேலைகளைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளும்போது அந்தந்த வட்டாரங்களில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை, பணி தொடங்க வேண்டிய இடங்களின் அமைப்பு, மற்றும் குறித்த வேலையை எத்தனை நாட்களில் முடிக்க இயலும் என்ற நிலைகளை ஆராய்ந்து அதற்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன. நிவாரணப் பணியின் அளவு, செலவிடப்படும் மதிப்பீடு ஆகியவைகளை வறட்சி நிவாரணப் பணி தொடங்க வேண்டிய இடத்தில் வேளாண்மையை சார்ந்த தொழில், மற்றும் இதர தொழிலில் ஈடுபடுபவர்களை நிவாரணத் தொழில்களில் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயத்தைப் பொருத்து, நிர்ணயிக்கப்படும். கூடிய வரையில் நிவாரணப் பணிகளில் உள்ளூர் தொழிலாளிகளுக்கே வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென கண்டிப்பான உத்திரவு இடப்பட்டிருக்கிறது.

13. நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய தொழிலாளர்கள் எண்ணிக்கை, பணியின் கால அளவு இவைகளை மனதிற்கொண்டு மிகக் குறைந்த கூலியாகிய நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ. 3 என்ற அடிப்படையிலும் மாதம் ஒன்றுக்கு 20 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கணக்கிடும் போது ரூ. 55 கோடி இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண (unskilled) வேலைகளை மேற்கொள்ளும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ. 3-க்குக் குறையாமல் கொடுக்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. பெரும்பாலான தொழிலாளர்கள் அன்றாடம் அவர்கள் முடிக்கும் பணிகளின் அடிப்படையிலும், நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரப்படியும் நாளொன்றுக்கு ரூ. 4-ம் அதற்கு மேலும் பெறுகிறார்கள்.



1975 பிப்ரவரி 25] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

15. இவைகளின் அடிப்படையில் குடிநீர் வசதிப் பணிகளுக்கும் மற்ற நிவாரணப் பணிகளுக்கும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாநில அரசு தனி ஒதுக்கீடாக கீழ்க்கண்டபடி மூன்று தவணைகளில் ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது.

| நாள் | | | | ஒதுக்கிய பணம் (இலட்சக் கணக்கில்) |
|---|---|---|---|---|
| 13—12—74 | ... | ... | ... | 300 |
| 4— 1—75 | ... | ... | ... | 200 |
| 7— 2—75 | ... | ... | ... | 500 |
| | | | மொத்தம் ... | 1,000 |

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்ட நிலைமையைப் பற்றிய சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

செங்கல்பட்டு மாவட்டத்தில் 2,199 கிராமங்களில் 1,365 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 65.00 லட்சம். இதுவரை ரூ. 86.92 லட்சம் மதிப்புள்ள 2,121 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—75 வரை ரூ. 26.66 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூ. 25.18 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் 1,921 கிராமங்களில் 1,051 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 65.00 லட்சம். இதுகாறும் ரூ. 62:00 லட்சம் மதிப்புள்ள 2,188 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—75 வரை ரூ. 12.99 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 6.84 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்தில் 2,391 கிராமங்களில் 1,889 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 90.00 லட்சம் இதுகாறும் ரூ. 76.00 லட்சம் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 45.00 பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 பிப்ரவரி 25

தஞ்சை மாவட்டத்திலுள்ள 2,035 கிராமங்களில் 88 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 45.00 லட்சம். இதுகாறும் ரூ. 57.71 லட்சம் மதிப்புள்ள 1,065 வேலைகள் அனுமதிக்கபபட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 12.65 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு ரூ. 12.65 லட்சம் செலவிடப் பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்திலுள்ள 939 கிராமங்களில் 710 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூ. 75.00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதுகாறும் ரூ. 63.50 லட்சம் மதிப்புள்ள 1,994 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 28.33 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 22.06 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 713 கிராமங்களில் 626 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூ. 99.50 லட்சம் ஒதுக்கப் பட்டது. இதுகாறும் ரூ. 135.32 லட்சம் மதிப்புள்ள 3,434 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 7.68 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 3.66 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்திலுள்ள 1,077 கிராமங்களில் 828 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் ரூ. 92.65 லட்சம் மதிப் புள்ள 2,953 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. 22—2—1975 வரை ரூ. 31.32 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு, ரூ. 22.06 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 1,370 கிராமங்களில் 1,336 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது ரூ. 150 லட்சம். இதுகாறும் ரூ. 153.33 லட்சம் மதிப்புள்ள 5,215 வேலைகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 56.87 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூ. 36.04 லட்சம் செலவிடப் பட்டுள்ளது.



V211.31'N75 3;N75-62

1975 பிப்ரவரி 25] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

திருநெல்வேலி மாவட்டத்தில் 1,045 கிராமங்களில் 793 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு ரூ. 74.50 லட்சம் வறட்சிப் பணிக்காக ஒதுக்கப் பட்டது. இதுகாறும் ரூ. 97.00 லட்சம் மதிப்புள்ள 1,298 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 14.98 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூ. 4.58 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 1,019 கிராமங்களில் 992 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் ரூ. 70 லட்சம் வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூ. 94.59 லட்சம் மதிப்புள்ள 2,243 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 13.43 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூ. 8.63 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

61683

தருமபுரி மாவட்டத்தில் 1,109 கிராமங்களில் 519 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது ரூ. [illegible] லட்சம். இதுகாறும் ரூ. 41.73 லட்சம் மதிப்புள்ள 1,102 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 9.82 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 8.66 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்திலுள்ள 991 கிராமங்களில் 612 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூ. 100.00 லட்சம் ஒதுக்கப் பட்டது. இதுகாறும் ரூ. 164.75 லட்சம் மதிப்புள்ள 2,478 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. 22—2—1975 வரை ரூ. 33.50 லட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூ. 23.96 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 54 கிராமங்களில் உதகை, கூனூர் தாலுகாவிலுள்ள 42 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டில் இதுகாறும் ரூ. 15.85 லட்சம் மதிப்புள்ள வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரை ரூ. 65 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக, 124 கிணறுகளை ஆழப்படுத்தும் வேலைக்கு ரூ. 4 லட்சம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

மாநிலத்தில் மொத்தம் 17,069 ரெவின்யூ கிராமங்களில் 10,968 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பணிக்காக ரூ. 10 கோடி தனியாக ஒதுக்கப்பட்டது. இது காறும் ரூ. 11.41 கோடி மதிப்புள்ள 28,735 வேலைகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. 22—2—1975 வரை ரூ. 2.70 கோடி மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு அதற்கு ரூ. 1.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.

16. நிவாரணப் பணிகளுக்காக மதிப்பிட்ட ரூ. 55 கோடியில், ரூ. 17 கோடியை 1974–1975 ஆண்டிலும் (சனவரி 1975-லிருந்து மார்ச் 1975 முடிய) எஞ்சிய ரூ. 38 கோடியை 1975-ம் ஆண்டு செப்டம்பர் வரை செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தனி ஒதுக்கீடான ரூ. 10 கோடி ஏற்கெனவே அரசால் மாவட்டங்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் ரூ. 7 கோடி 1974–75-ல் இயல்பான ஐந்தாண்டு திட்ட வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து வறட்சிப் பிரதேசங்களில் மற்ற பணிகளுக்காக சம்பந்தப்பட்ட துறையினர் மூலம் செலவிடப்படு கிறது. இந்த அடிப்படையில் 1974–75-ம் ஆண்டுக்கு இந்திய அரசு நமக்கு $7\frac{1}{2}$ கோடி தந்து உதவ வாக்களித்துள்ளது. 1975–76லும் நிவாரணப் பணிகளின் முன்னேற்றத்தையும் அதற்கான செலவினங் களுக்காக தொகையை அவ்வப்போதே பட்டுவாடா செய்வதற் கேற்ற வகையில் இயல்பான நடைமுறை விதிகளைத் தளர்த்தியும், இயன்றவரை வறட்சிப் பணிகள் சம்மந்தப்பட்டுள்ள பல்வேறு அதிகாரிகளே மேற்கொள்ளும் வகையிலும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

வருவாய் வாரிய ஆணையர் ஒருவரை அரசு வறட்சி நிவாரண ஆணையராக நியமித்துள்ளது. அவர் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்து வருகிறார். அவரே, அரசு மட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக அலுவலால் வருவாய்த் துறை தனிச் செயலாள ராகவும் பணியாற்றி வருகிறார். இந்திய அரசுப் பணியைச் சேர்ந்த முதுநிலை அலுவலர் ஒருவர் ஆணையருக்கு வறட்சி நிவாரணப் பணியில் உதவ வேண்டி வருவாய்த் துறை வாரியத்தில் செயலராக நியமிக்கப் பட்டுள்ளார். மாண்புமிகு மாநில முதலமைச்சர் அவர்களும், இதர அமைச்சர்களும் வறட்சி நிவாரண ஆணையர் முதலியவர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று நிவாரணப் பணி களைப் பார்வையிட்டும் மேற்படி பணிகளை மேற்கொள்ளும் மாவட்ட



ஆட்சித் தலைவர்கள், இதர அலுவலர்களுடன் பேசியும் இந்தப் பணிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். வறட்சி நிவாரணப் பணிகள் இப்போது விரைவாக நடைபெறுகின்றன. இனிமேல் வாரம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் பெருமானமுள்ள பணிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாண்டு திட்ட செலவினங்களிலிருந்து நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் தொகையும் இவ்வாண்டு 31—3—75-க்குள் செலவிடப்படும் என எதிர்பார்க்கலாம்.

வறட்சி நிவாரணப் பணிகள் அந்தந்த வட்டாரங்களின் தேவை களுக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ரூ. 5,000 வரையுள்ள பணி களை வட்டார வளர்ச்சி அலுவலர்களே அனுமதிக்கின்றனர். ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை மதிப்புள்ள வேலைகளை கோட்ட வளர்ச்சி அலுவலர்களும் அதற்கு மேற்பட்டு ரூபாய் ஒரு லட்சம் வரை மதிப் புள்ள வேலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அனுமதிக் கின்றனர். சம்பந்தப்பட்ட பொறியியல் அலுவலர்களால் மதிப்பீடுகள் தயார் செய்யப்படுகின்றன. வறட்சி நிவாரணப் பணிகள் அவசரமாய் முடிக்கவேண்டியுள்ளதால் "டெண்டர்கள்" இன்றி நேரிடையாய் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்படைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. கண்மாய் வேலைகளில் ஆயக்கட்டுதாரர்களின் பிரதிநிதியாக யாராவது முன்வந்தால் அவருக்கே அந்த வேலையை ஒப்படைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்துக்களின் சார்பில் வேலைகள் ஒப்புக்கொள்ளலாமே தவிர தன் சொந்த பொறுப்பில் ஒப்புக்கொள்ளக் கூடாது என தெளிவாக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மேற்கொள்ளப்படும் வேலைகளின் விவரங்களை அந்தந்த வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், யாவருக்கும் தெரி யப்படுத்தப்படுவதுடன் வாரம் ஒரு முறை கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடி எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள், அவை களின் முன்னேற்றம் ஆன செலவு முதலியன ஆய்வு செய்யப்படுகிறது. அந்தச் சமயம் பஞ்சாயத்து ஒன்றிய தலைவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலானோரின் யோசனைகளையும் கேட்டு செயலாற்ற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

வறட்சி நிவாரணப் பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு அளிக்கப்படும் கூலியை தானியங்களாக வழங்க வேண்டும் என்ற யோசனை கூறப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு வழங்குவதில்

உள்ள நிர்வாகக் கஷ்டங்கள், அனுபவ சாத்தியங்கள் இவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டியுள்ளதால் இந்த யோசனையை விவரமாகப் பரிசீலிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இனி வறட்சியை ஏற்படாதவாறு ஒரு ஐந்தாண்டு திட்டம் தயார் செய்யவேண்டும் என்ற யோசனையை சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கெனவே D.P.A.P. திட்டப்படி இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் திட்டங்கள் தயார் செய்யப்பெற்று அமுலாக்கப்படுகிறது. அம்மாதிரி வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கான திட்டங்கள் அமுல் நடத்த மாவட்டங்களை மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுத் தானியங்களைப் பரவலாக விநியோகம் செய்ய உணவுத் துறை தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நம்முடைய மாநிலத்தில் 37.34 லட்சம் குடும்பங்களுக்கு, பொது விநியோகத்தின்கீழ் உணவுத் தானியங்கள் முன்பு வழங்கப்பட்டு வந்தன. வறட்சி நிலைமையை முன்னிட்டு, இந்த விநியோகம் விரிவாக்கப்பட்டு இப்போது 70 லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுத் தானியங்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்த விநியோக முறையின் கீழ், பெரும்பாலான இடங்களுக்கு கோதுமை வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு பிப்ரவரி முதற்கொண்டு 41,000 டன் கோதுமையைப் பொது விநியோகத்திற்காக ஒதுக்கியுள்ளது. கோதுமையைத் தவிர, மற்ற மாநிலங்களிலிருந்து கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய சிறு தானியங்கள் பெருமளவில் வாங்கி இங்கு விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வறட்சிப் பகுதிகளில் ஓரளவாகிலும் அரிசி விநியோகம் செய்வதற்காக மத்திய அரசு நமக்குக் கணிசமான அளவில் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இதுவரை, மத்திய அரசிடமிருந்து நமக்கு அரிசி எதுவும் கிடைக்கவில்லை. இதற்குத் தனி ஒதுக்கீடு கிடைத்தால் கோதுமை, சிறு தானியங்களுடன் அரிசியையும் சேர்த்து வழங்க வழி ஏற்படும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட இன்றைய கடுமையான நிலைமையை எதிர்த்துப் போராடி சமாளிக்க அரசு ஆவனவெல்லாம் செய்யத் தயங்காது என இம்மன்றத்திற்கு உறுதி கூறுகிறேன். வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களைத் துரிதமாகவும், திறமையுடனும் சமாளிக்க இம்மன்றத்தின் அங்கத்தினர்களை அரசுடனும் அதன்





அலுவலர்களுடனும் முழு மனதுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளைச் செயலாற்றும்போது நமக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் வேறுபாடுகள் குறுக்கே நிற்கவோ, நிற்க விடவோ மாட்டாது என நிச்சயமாக நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கிறேன். அடுத்து, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

திரு. எஸ். வடிவேல்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் பிரிவ்லேஜ் மோஷன் ஒன்று கொடுத்திருக்கிறேன், அதைப்பற்றி . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உடனே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேட்பது பாயின்ட் ஆர் ஆர்டர் இல்லை, உட்காருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I want a clarification I have also given a notice under Rule 41. If this reply is going to be clubbed, I must be given an opportunity to put some questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல் 41-ன்கீழ் கொடுத்திருக்கலாம். உங்களுடைய நோட்டீஸ் ஒட்டி வந்த அறிக்கையல்ல இது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே எழுந்த பிரச்சினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கொடுத்த பதிலை யொட்டிய உரிமைப் பிரச்சினைபற்றி கொடுத்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். நான் அதை இங்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு அதைப்பற்றி அமைச்சர் மாதவன் அவர்கள் என்ன தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டாமா, நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன், இன்னும் எழுந்திருக்கவேயில்லை, எனக்கு நேரம்

வேண்டாமா, செயலாளரிடத்திலே உரிமைப்பிரச்சினை பற்றி கொடுத்திருக்கிறீர்கள். அவர் எனக்குக் கொடுக்க வேண்டாமா? அதை நான் பார்க்கவேண்டும், அதற்குள்ளாக கொடுத்தவுடனே என்ன ஆயிற்று என்று கேட்பது முறையல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயின்ட் ஆப் சார் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் விதிமுறைகள் நடைமுறைகள் மீறியிருந்தால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர். ஏதாவது விஷயம் கேட்பதற்காக என்று பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் நான் அனுமதிக்கமாட்டேன். அது பத்திரிகையிலும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இன்றைக்குச் சட்டமன்றத்திலே அனுமதிக்கப்பட்ட கேள்வியிலே கேள்வி எண் 72 இல் தஞ்சாவூர் மாவட்டத்தில் "பசுமதி" என்ற புதியவகை அரிசி பயிரிடப்படுவதற்கான சோதனை ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது உண்மையா" என்று கேட்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பழக்கம் நெல்லைத்தான் பயிரிட வேண்டும். அரிசியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரிசியல்ல, நெல்தான் அவர் சொன்னார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆங்கிலக் கேள்வியிலே கூட "பசுமதி ரைஸ்" என்றுதான் போடப்பட்டிருக்கிறது, தமிழில் "பசுமதி" என்ற புதிய வகை நெல் என்று போடப்பட்டிருக்கிறது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மிகச் சிறிய பாயிண்ட் ஆப் ஆர்டர். பொருள் இல்லாத பாயின்ட் ஆப் ஆர்டர், ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: நான் 22 ஆம் தேதி பேசியபோது அமைச்சர் அவர்கள் எஸ்.இ. அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே அது இல்லை, ஆகவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.



திரு. எஸ். வடிவேல்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தஞ்சை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாகச் சேர்க்காததுபோல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கை இருக்கிறது. கொடியம்பாளையம் முதல் கோடிக்கரை வரையில் பஞ்சப் பகுதிதான். அதையும் சேர்க்க வேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளுக்கு சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஒத்துழைப்பு வேண்டுமென்று கேட்டார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—(தொடர்ச்சி)

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்பேரிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற நான் முன்வந்திருக்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையை ஆழ்ந்து படிக்கிற போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு மூன்று தலைவர்கள் பேச இருக்கிறார்கள், உறுப்பினர்கள் 11 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தலைவரும் அரை மணி நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம். உறுப்பினர் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம். இன்னும் நமக்கு இருப்பதே 150 நிமிடங்கள்தான்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்த உரையை நாம் ஆழ்ந்து படிக்கிறபோது புதிதாக ஒன்றும் பாராட்டக்கூடிய அளவுக்கு எந்தக் குறிப்புகளும் இல்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது பின்னால் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்படவிருக்கும் நிதிநிலை அறிக்கையினுடைய கொள்கை விளக்கமாக அமைந்திருக்கும் என்பதுதான் மரபு. ஆனால் அந்த மரபையொட்டி இந்த உரை நிகழ்த்தப்பட்டிருக்குமானால் வருகின்ற நிதிநிலை அறிக்கை இருக்கிறதே அது ஒன்றும் இல்லாத அறிக்கையாக, சாதாரண வரவு—செலவுக் கணக்காக இருக்கும் என்று கருதுகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 பிப்ரவரி 25

இது கொள்கை அறிவிப்பாக இல்லாமலிருக்கிற காரணத்தினால் நான் ஐயப்படுகிறேன், வருகின்ற நிதிநிலை அறிக்கை ஒன்றுமே இல்லாத உப்பு சப்பில்லாத அறிக்கையாக இருக்கும் என்று. அதற்கும் மேலாக இந்த அறிக்கையை நாம் பார்க்கிறபோது இந்த அரசு தன்னிடத்திலே இருக்கிற பொறுப்பைத் தட்டி கழிக்கின்ற முகத்தான் எல்லாவற்றையும் மத்திய அரசின் தலையிலே போட்டு அவர்கள் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதைப் பின்னால் எடுத்துக் கூறுவதற்கு ஏதுவாக இந்த உரை முழுமையாகவே அப்படித்தான் அமைந்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். நாம் என்ன செய்கிறோம், நம்முடைய நிதிநிலை என்ன, நாம் என்ன செய்ய இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக இது மத்திய சர்க்காருக்குக் கொடுக்கும் வேண்டுகோளாக அமைந்திருக்கிறது. மத்திய சர்க்காருக்கு நமக்கு இருக்கிற குறைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி அவர்களிடமிருந்து நமக்கு வேண்டிய உதவிகளைப் பெறுவதற்கு சட்டப்பேரவை, சட்ட மேலவை இரண்டையும் கூட்டி அதற்கு ஒரு நாள் ஒதுக்கி மேதகு ஆளுநர் இங்கே ஒரு அறிக்கையை அதற்காகப் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை. அரசாங்கமே ஒரு வேண்டுகோளைத் தயாரித்து அவர்களுக்குக் கொடுக்கலாம்.

நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இந்த உரையினுடைய பெரும் பகுதியைப் பார்க்கிறபோது முக்கியமான 9 இடங்களிலே மத்திய அரசுக்கு வேண்டுகோள் கொடுக்கக்கூடிய உரையாகத்தான் இருக்கிறதே தவிர நாம் எந்த அளவிற்குப் பொறுப்பை எடுத்துக் கொண்டு நடத்தப் போகிறோம் என்பதைப்பற்றி குறிப்பே கிடையாது. நான் எண்ணுவது மத்திய அரசை இங்கே ஏற்படுகிற எல்லாச் சங்கடங்களுக்கும் காரணம் என்று மத்திய அரசைச் சொல்வதற்கு பழியை அவர்கள்மேல் சுமத்துவதற்கு இதை ஒரு அடிகோலாக, இதை ஒரு அஸ்திவாரமாகத் தயாரித்து இருக்கிறார்களே தவிர அபிவிருத்தித் திட்டங்கள்பற்றி என்ன செய்யப் போகிறார்கள் என்பதுபற்றி இதிலே குறிப்பிடவில்லை.

உதாரணமாகக் கூற விரும்புகிறேன் நம்முடைய வறட்சித் தணிப்புக்காக 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை உரையிலே பார்க்கிறோம். இன்றைக்கு மாண்பமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே அது இருந்ததைக் கவனித்தோம். வறட்சி வந்தாலும், வராவிட்டாலும் செலவு செய்யப்படக்கூடிய திட்டத்துக்கு 25 கோடி ரூபாய் போக பாக்கி 30 கோடி ரூபாய் தான் நாம் இதற்காக ஸ்பெஷலாக அலாட் செய்திருக்கிறோம்.



1975 பிப்ரவரி 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

[முற்பகல் 11-00]

ஆனால் 30 கோடி ரூபாயில் மாநில அரசு எந்த அளவிற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறது என்று சொல்லாமல் அத்தனையையும் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்களே தவிர நாங்கள் இவ்வளவு போடுகிறோம், நீங்கள் இவ்வளவு போட வேண்டும் என்று கூறவில்லை. இதனால் 30 கோடி ரூபாய் கொடுக்க வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. இருந்தாலும் ஒன்றைச் சொல்வதற்கு முன்னால், எந்தக் காரியத்தைச் செய்ய முன் வந்தாலும், நீ இவ்வளவு முதலீடு போடு, பாக்கியை நான் போடுகிறேன் என்று தான் கேட்போம். அது பேங்கில் கடன் கேட்டாலும் சரி, தொழில் ஆரம்பிக்க வேண்டுமானாலும் சரி, 25 சதவிகிதமாவது குறைந்த பட்சம் அதைச் செய்பவர்கள் போட வேண்டுமென்று இருக்கிறது. நாம் இந்தத் தொகையிலே எந்த அளவுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறதோ அதற்குமேல் செலவழிக்கத்தான் வேண்டும். செலவழிக்கத்தான் போகிறீர்கள். ஆனால் இப்படிக் கேட்பதன் காரணமாக, நாங்கள் இவ்வளவு ரூபாய் மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். அவர்கள் கொடுக்காததனால் இதைச் செய்ய முடியவில்லை என்று பின்னால் கூறுவதற்கு ஏதுவாக இது அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு நாட்டிலே உள்ள அரசியல் நிலைமையைப் பார்க்கும்பொழுது ஒருவர்மேல் ஒருவர் குறை சொல்வது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சட்டப் பேரவையிலேயும் சரி, பாராளுமன்றத்திலேயும் சரி ஆட்சியில் இருக்கிற அரசுகளை விமர்சிக்கும் பொழுது இரண்டு விதமான கண்ணோட்டத்துடன் விமர்சனம் செய்ய வேண்டியிருக்கும். ஒன்று கொள்கை ரீதியாக விமர்சனம் செய்வது, மற்றொன்று நிர்வாக ரீதியாக விமர்சனம் செய்வது.

கொள்கை ரீதியாக விமர்சனம் செய்யும்பொழுது கொள்கையில் தவறு இருந்தால் அதை விமர்சிக்கும்பொழுது அதற்கான மாற்றுக் கொள்கையைச் சொல்ல வேண்டும். அப்படி மாற்றுக் கொள்கையினைச் சொல்லாமல் விமர்சித்தால் விமர்சிக்கின்றவர்களுக்குக் கொள்கை இல்லை என்பதுதான் பொருளே தவிர கொள்கை இருப்பதாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏதோவொரு சந்தர்ப்பத்தில் ஒரு கொள்கையை அறிவித்துவிட்டு அதை நடைமுறைப்படுத்தும் பொழுது பல தவறுகள், ஊழல்கள் எல்லாம் ஏற்படுவதற்கான

வாய்ப்புகள் இருக்கலாம். அந்த ஊழல்களை, நடைமுறைச் சிக்கல்களை, சங்கடங்களை, தவறுகளைக் கூறும்பொழுது அதற்கான மாற்று யோசனைகளைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நிர்வாகத் தவறுகள் எங்கெங்கே இருக்கிறது என்பதை எதிர்க்கட்சிகள் எடுத்துக் கூறத்தான் வேண்டும். அது முழுமுதற் கடமையும்கூட, ஆனால் கொள்கை ரீதியாக விமர்சிக்கும்பொழுது அதற்கான மாற்றுக் கொள்கையையும் அறிவித்தாக வேண்டும்.

இங்கே சட்டப்பேரவையிலே மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையைப்பற்றி பல உறுப்பினர்கள் பேசும்பொழுது கூறினார்கள். அந்தக் கொள்கையை விமர்சித்தார்களே தவிர, அதற்கான மாற்றுக் கொள்கை எதுவும் இங்கேயும் சொல்லப்படவில்லை, பாராளுமன்றத்திலேயும் சொல்லப்படவில்லை. வெளியிலே உள்ள ஆளுங்கட்சியை எதிர்ப்பவர்களிடத்திலும் கொள்கை ரீதியான விமர்சனம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை நான் இங்கே சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது என்றால் இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது, ஏதோ காங்கிரஸ் கட்சி மத்தியிலே தவறுகளைச் செய்தது போலப் பேசினார்கள். இதைப்பற்றி ராஜ்ய சபையிலேயோ அல்லது பாராளுமன்றத்திலேயோ அவர்கள் கட்சி உறுப்பினர்களை விட்டுப் பேசச் சொல்லிப் பேசியிருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும். ஏனென்றால் இங்கே மத்திய அரசாங்கத்தின் சார்பில் பிரதிநிதி இல்லை, அந்தக் கட்சியின் பிரதிநிதியாக இருக்கும் நாங்கள் கொள்கை ரீதியான விமர்சனங்களுக்குத்தான் பதில் சொல்ல முடியுமே தவிர, நிர்வாக ரீதியாகப் பதில் சொல்லக்கூடிய நிலைமை இல்லை, அதற்கான விவரமும் எங்களுக்குக் கிடைக்க முடியாது.

கொள்கை ரீதியாகப் பேசும்பொழுது, ரஷ்யாவோடு சேர்ந்து விட்டார்கள் என்று சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். ரஷ்யா இன்றைக்கு நம்முடைய நட்பு நாடு, ஆபத்துக் காலத்தில் உதவும் நாடு. இன்றைக்கும் சரி பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொடுக்கும் தடையை அமெரிக்கா எடுத்துவிட்டது, இந்த நிலையில் ரஷ்யாவோடு உறவு வைத்துக்கொள்ளவில்லை என்றால் அமெரிக்காவோடா உறவு வைத்துக் கொள்ள முடியும்? அப்படி அமெரிக்காவோடு போய்ச் சேர வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்களா என்பதை உணர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.





திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள், நான் பேசும்பொழுது ரஷ்யாவோடு உறவு வைததுக கொண்டிருப்பது தவறு ஏன்று சொல்வதாகச் சொல்கிறார்கள். நான் அதைச் சொல்லவில்லை. ரஷ்ய அரசாங்கத்தினால் இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லி அதற்கு இரண்டு உதாரணங்களைச் சொன்னேன். அத்தியாவசியமாக இருக்கககூடிய உரத்தில் விலையை இன்றைக்கு வேண்டுமென்று 90 சத விகிதம் ஏற்றியிருக்கிறார்கள். மேலும் 10 சதவிகிதம் ஏற்றுவார்கள். 1,500 ரூபாய்க்கு விற்க வேண்டிய காகிதம் 4,532 ரூபாய்க்கு விற்கிறது. காரணம் என்ன வென்றால், கனடா குறைவாகக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள், மத்திய அரசாங்கத்தை இந்த விலைக்குத்தான் விற்க வேண்டும். இல்லையென்றால் எங்கள் நாட்டைப் பற்றித் தவறான எண்ணம் ஏற்படும் என்று வற்புறுத்துவதாக இருக்கிறது. எனவே ரஷ்யாவோடு அடிமையாகிவிடக் கூடாது என்றுதான் சொன்னேனே தவிர, ரஷ்ய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு உதவி பெறக் கூடாது என்று சொல்லவில்லை. இந்திய மக்களின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ரஷ்யாவிற்கு இருக்கக் கூடாது என்றுதான் சொன்னேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை எந்த நாட்டிற்கும் அடகு வைக்கப்படவில்லை. எந்த நாட்டின் சொல்லையும் கேட்டுப் பொருளாதாரத்தை வகுத்துக் கொள்ளவில்லை என்பதை உறுப்பினரவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் கூறும்பொழுது உரம் சம்பந்தமாக விலையைச் சொன்னார்கள். அதை எந்தத் தகவலின் அடிப்படையில் சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். உரம் சம்பந்தப்பட்டவரையில் 1968–69 ஆம் ஆண்டு ஒரு டன் அமெரிக்காவில் 500 ரூபாய், பிரிட்டனில் 593 ரூபாய், சோவியத்தில் 440 ரூபாய் 93 காசு விலையிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அவர் எந்தத் தகவலை வைத்துச் சொல்லுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி: அது 1968–69 ஆம் ஆண்டு கணக்கு. 1973–74-க்குப் பிறகு ரஷ்ய அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை விலையேற்றச் சொன்ன காரணத்தால் 90 சதவிகிதம் உரத்தின் விலையை ஏற்றியிருப்பது நாடு பூராவிற்கும் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி : உண்மைக்குப் புறம்பாகச் சொல்வது சரியான நடைமுறை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : உண்மைக்குப் புறம்பானது அல்ல. கம்யூனிஸ்ட் நாடுகள் இந்திய அரசாங்கத்தை உரத்தின் விலையை அதிகரிக்கும்படி வற்புறுத்தின என்று எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆகவேதான் 1973, 1974, 1975 ஆகிய இந்த மூன்றாண்டுக் காலத்தில் இப்படி இருக்கிறது. அவர்கள் 1968 ஆம் ஆண்டு புள்ளி விவரத்தைச் சொல்கிறார்கள். உண்மையிலேயே அவரிடம் விவரம் இருந்தால் இந்த ஆண்டு அரசாங்கம் ரஷ்யாவிற்கு என்ன விலை கொடுத்தது என்று சட்டமன்றத்தில் சொல்லட்டும், என்னுடைய வாதத்தை வேண்டுமானால் நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான கருத்தைச் சொன்னால் அதற்கு முறையே வேறு.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இம்மாதிரி இன்றைக்கு நாட்டிலே உள்ள பொருளாதார நிலையைப் பயன்படுத்தி, இந்தப் பொருளாதாரக் கொள்கை மோசமானது, இதனால் இந்த விளைவுகள் வந்திருக்கின்றன என்று பேசும்பொழுது எத்தகைய பொருளாதாரக் கொள்கையை விரும்புகிறோம் என்று சொல்வதில்லை. ரஷ்யாவிற்கு அடிமையாகிவிட்டது, விலை அதிகமாகிவிட்டது என்று சொல்வதைத் தவிர, அதைத் தீர்ப்பதற்கான பிரச்சினைகளைத் தெளிவாகப் பேசுவதில்லை. ஏதோ கிடைத்த சேற்றை அள்ளி யார் மீதாவது வீசுவது என்று அரசியல் போய்விட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வறட்சிப் பணிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. அரசுத் தரப்பிலே பேசுபவர்களும் சரி, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்பொழுதும் சரி, உறுப்பினர்கள் பேசும்பொழுதும் சரி, எதிர்க் கட்சிகள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடப்படுகிறது. அதை நான் ஆட்சேபணை செய்யவில்லை. வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்களே, எப்படிப்பட்ட ஒத்துழைப்பை நாங்கள் தர வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஒத்துழைப்பு ஒத்துழைப்பு என்று சொல்லும்பொழுது, அரசுப் பணிகள் நடக்கும் இடத்தில் தவறுகள் நடந்தால் அதுபற்றி அரசுக்குத் தகவல் கொடுத்



தால் அதுதான் ஒத்துழைப்பு என்று கருதுகிறேன். தவறுகள் நடக்கும்பொழுது அதை எடுத்துக் கூறுவதும் ஒத்துழைப்புதான். ஆனால் அப்படியில்லாமல் அவர்கள் சொல்வதற் கெல்லாம் " ஆமாம் ஆமாம்" என்று போட்டுக் கொண்டிருப்பதுதான் ஒத்துழைப்பா? இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகவே, நான் சொல்கிறேன், இப்படிப்பட்ட பணிகள் நடக்கும் இடங்களில் சர்வ கட்சி கமிட்டிகள் அமைத்து ஆங்காங்கு செயல்படும் அதிகாரிகளோடு ஒத்துழைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு கட்சியும் ஆங்காங்கு தீர்மானம் போட்டு அனுப்பினாலும்கூட அரசு அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. போன தடவை வறட்சி வேலைகளின் போது பல தவறுகள் நடந்து விட்டது என்று புகார்கள் கூறப்பட்டது. அதனால் அரசு இன்றைக்கு எல்லாவற்றையும் காண்ட்ராக்ட் முறையில் விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறது. மஸ்டர் ரோலில் தவறு நடந்து விட்டது. ஆகவே, காண்ட்ராக்ட்டிற்கு விடுகிறோம் என்று சொல்கிறார்கள். இருக்கின்ற நிலைமையை ஆராய்ந்து சரியாக முடிவு எடுக்காமல், இது சரியில்லையா, சரி இதை வைத்துவிட்டு இதற்கு வந்துவிடு என்று அவசர கோலமாக முடிவெடுக்கும் நிலைமை இருக்கிறது. அதில் உள்ள சிரமங்கள் என்ன, இதில் உள்ள சிரமங்கள் என்ன, இதில் தவறு நடக்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்ததாகத் தெரியவில்லை.

இங்கே மஸ்டர் ரோல் தவறு நடந்திருக்கிறது. அதே போல் வறட்சி நிவாரண வேலைகளில் தவறு நடந்திருக்கலாம். நடக்காது என்பதற்கு என்ன காரண்டி? இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப்பில் எந்த முறையில் போனாலும் தவறுகள் நடக்க ஏது உண்டு.

உதாரணமாக, மனித உழைப்புத் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் நிதி கொடுத்து பல வட்டாரங்களில் நடத்தினார்கள். நான் என்னுடைய தொகுதிக்கு ஒரு கிராமத்திற்குப் போகின்றபோது ரோட்டில் மண்ணை வெட்டிப் போட்டிருந்தார்கள். அங்கு 100 ரூபாய் பெறுமான மண் கூட வெட்டிப் போடப்படவில்லை. ஆனால் 1,500 ரூபாய் வேலை செய்ததாகப் பணம் வாங்கியிருக்கிறார். மேலும் 500 ரூபாய் வாங்க செக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு ரொம்பச் சங்கடமாக இருந்தது. இதை அதிகாரிகளிடத்தில் பவ்யமாகச் சொல்லவேண்டுமென்று கருதி தலைவரிடத்திலும், கமிஷனரிடத்திலும் "உங்களை ஏமாற்றிவிட்டார்களே, 100 ரூபாய் மண் கூட வெட்டியிருக்கமாட்டார்கள். 1,500 ரூபாய் இதுவரை வாங்கிக்

கொண்டு போய்விட்டார்களே" என்று சொன்னேன். காண்டிராக்ட் முறையில் தவறுகள் இல்லை யென்று எப்படிச் சொல்ல முடியும்? 55 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கும்போது அதிலே 35 கோடி ரூபாய் உழைப்புக்காக ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 65 சதவிகிதம்.

திரு. எஸ். கணேசன்: "ரூரல் மான் பவர் ஸ்கீம்"க்கு ஊராட்சி மன்றத் தலைவர்தான் பொறுப்பு. அவர்கள் நேரடியாக வேலை செய்து அவர்களேதான் செக் போட்டுக் கொள்ள வேண்டும். இதிலே காண்டிராக்ட் சிஸ்டம் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: யார் அதைச் செய்ய வேண்டுமோ அவரே செய்யாத அளவுக்கு அடிப்படையிலேயே தவறு நடந்திருக்கிறது. காண்டிராக்ட் சிஸ்டத்தில் உழைப்பு வேலை என்று சொல்லும்போது மண் வேலைதான் செய்ய வேண்டும். ரோடு போடுவது குளம் குட்டைகளைத் தூர் எடுப்பது போன்ற வேலைகளைத்தான் செய்யவேண்டும். அந்த வேலைகளைச் செய்யும்போது காண்டிராக்ட் முறையில் தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காகத்தான் வட்டார மட்டத்தில்—கிராம மட்டத்தில் இல்லை யென்றாலும்—சர்வ கட்சிக் குழுக்களைப் போடுங்கள், அதன் மூலம் தவறுகள் குறைய வாய்ப்பு ஏற்படும், அதிகப் பணம் விரயமாகாமல் காப்பாற்றப்படும், இது தான் எல்லாக் கட்சிகளின் வேண்டுகோள். இதைச் சர்க்கார் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அதிலே என்ன சிரமங்கள் இருக்கின்றன என்று புரியவில்லை. சர்க்கார் இனிமேலாவது இம் மாதிரிக் குழுக்களை அமைத்து தவறுகள் நேராவண்ணம் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

வறட்சிப் பணிகள் எல்லா இடங்களில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. எந்த அளவுக்கு அந்தப் பணிகள் நடைபெறுகின்றன. எந்த அளவுக்கு வறட்சியைத் தணித்திருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். லிஸ்டில் இருப்பதைப் பார்த்துப் பயன் இல்லை. அனுமதிக்கப்பட்டிருக்கும் தொகையைப் பார்க்கப் பயன் இல்லை. மக்களுக்கு எந்த அளவுக்குப் பலன் போய்ச் சேர்ந்திருக்கிறது என்று கணக்குப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்கிறது.



இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1½ கோடி ரூபாய் ஒதுக்
வேலைகள் நடைபெற்று வருகிறது. அந்த வேலைகள் சரியான முன
யில் நடைபெற்று மக்களுக்குப் பலன் கிடைத்திருக்குமானால் அந்
மக்கள் லாரி லாரியாக—பஸ்ஸில் அல்ல; லாரியில் சாமான்களை
போட்டுக் கொண்டு வந்து விடுகிறார்கள்—தஞ்சை மாவட்டத்தை
நோக்கி வரக் காரணம் என்ன? தினந்தோறும் 10, 20, 30 லாரிக
என்று வந்த வண்ணம் இருக்கிறார்கள். அப்படி வருகிறவர்களை
கேட்டால் அங்கே அரிசியும் அரசு கொடுக்கவில்லை; வேலை வாய்ப்பு
கிடைக்கவில்லை, பட்டினிதான் கிடக்க வேண்டுமென்று சொல்
கிறார்கள். அவர்கள் வந்த காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில்
உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் குறைகிறது, கிடைக்கவில்லை
அதனால் அவர்களை வராதே என்றும் சொல்ல முடியாது. ஆகவே
இன்று தஞ்சை மாவட்டத்தில் செயற்கையாக ஒரு பஞ்சம் ஏற்பட்டு
கொண்டிருக்கிறது. ஆடு, மாடுகள் தீவனத்திற்கும் ஏற்பாடு செய்ய
பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் எல்லா மாடுகளும்
தஞ்சை மாவட்டத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. பஞ்ச
தில் இப்படி அடிபட்டவர்கள் என்றைக்கு எழுந்து நிற்கப் போகிற
களோ என்று சொல்லும் அளவுக்கு அவல நிலையில் இருந்து கொ
டிருக்கிறார்கள். மதுரையிலிருந்து, புதுக்கோட்டையிலிருந்தெல்லா
கூட வருகிறார்கள்.

உணவு விநியோகம்—அரிசி மட்டும் மாதா மாதம் 55,000 ட
விநியோகம் செய்வதாகச் சொல்லுகிறார்கள். இது ஒழுங்கா
முறையில் பரவலாக விநியோகிக்கப்படவில்லை. கோவை மாவட்ட
தில் அரிசி கொடுக்கப்படவில்லை. அங்கு உண்ணாவிரதம் எல்லா
நடக்கிறது. ஊர்வலங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகா
களிடம் அரிசி கொடுக்கப்படவில்லை என்ற புகார்கள் கொடுக்
பட்டிருக்கின்றன. கணக்கில் காட்டினாலும் சரியான முறையி
விநியோகம் செய்யப்படவில்லை. இதிலே அதிகக் கவனம் செலுத்
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விநியோகம் இவ்வளவு மோசமாக இருக்கும்போது கொள்முத
வேலைகள் என்ன நிலை என்பதைப் பார்ப்போம். நான்கு லட்சம் ட
கொள்முதல் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்க
நெல் கணக்கில் 5½ லட்சம் டன் ஆகும். இதைக் கொள்முதல் செ
என்ன சாத்தியக்கூறுகள் என்று ஆலோசிக்க அரசு கடமைப்பட்டி
கிறது. எதிர்க் கட்சிகள் சார்பில் ஏதோ அரசின் கொள்முதல் பணி
விரோதமாக இருப்பதாக நண்பர் கணேசன் அவர்கள் குறிப்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 பிப்ரவரி 25

டார்கள். எந்தக் கட்சியும் கொள்முதலுக்கு நெல் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. தஞ்சை மாவட்டத்தில் நிலைமைகள் மோசமாக இருக்கின்றன. அதிகாரிகளுக்கு மகஜர் கொடுத்தோம். லெவி விளைந்த அளவை விட அதிகமாகப் போட்டால் எப்படி விவசாயிகள் கொடுக்க முடியும்? விளைந்ததற்கு ஏற்ப லெவியைப் போடுங்கள் என்றுதான் கேட்கிறோம். அரசுத் தரப்பில் எதை எடுத்தாலும் பயம். பயந்தால் காரியம் ஆகாது.

> " இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
> அடுத்தூர்வது அஃது ஒப்பது இல் "

என்று வள்ளுவர் நமக்காகவே எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார். சங்கடம் வந்தாகிவிட்டது. இதிலே எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசு கொள்முதல் கொள்கைக்கு மாறாகப் போவதாகக் கருதக் கூடாது. மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு சொல்லுகிறேன். தஞ்சை மாவட்டத்தைத் திறந்து விடக் கூடாது. கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்று சென்ற கூட்டங்களிலேயே சொல்லியிருக்கிறேன். அரசு கொள்முதலை நியாயமாகச் செய்ய வேண்டும். தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டும்.

ஆகவே அதில் கருத்து மாறுபாடு இல்லை. அரசு பயந்துவிட்டது. நான தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்ததில் விளைச்சல் குறைவாகத்தான் இருக்கிறது. மாவுக்கு எட்டு, ஒன்பது, பத்து கலம். பத்துக் கலத்திற்கு மேல் போக வழியில்லை. திருக்காட்டுப்பள்ளி வளமான பகுதி என்று பெயர். அங்கு ஒரு போகத்திற்கு ஏழு கலம்தான் விளைந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். விளைச்சல் குறைவு என்பது உண்மை.

உங்கள் கொள்கை கொள்முதலைக் குறைத்து விட்டது. ரொம்பவும் குறைந்துபோய் விடும் என்ற உங்களது பய உணர்வு லெவியிலிருந்து கிடைக்கும் அளவைக் குறைத்துவிட்டது. நல்ல வசதி படைத்தவர்கள், என் போல் உள்ளவர்கள் அதிகாரிகளைப் பார்த்து சரி பண்ணி—வில்லேஜ் ஆபீசர்கள் எப்படி என்பது தெரியும்—விளைச்சல் குறைவு என்று லெவியிலிருந்து தப்பிக் கொள்கிறார்கள். சிறிய விவசாயிகள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். பரவலாகப் பார்க்கிறபோது பத்து கலத்திற்கு மேல் விளைச்சல் இல்லை. காலம் தாழ்த்திவிட்டோம்.



1975 பிப்ரவரி 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் வந்துவிட்டார்கள். தஞ்சையில் விலை உயர்ந்துவிட்டது. நீங்கள் ஆரம்பத்திலேயே கொள்முதல் செய்திருந்தால் கூடுதல் வந்திருக்கும். பட்டுகோட்டையில் ரூ. 85 என்று விற்கிறது. எப்போது கொள்முதலை அதிகப்படுத்துவது என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. ஆரம்பத்தில் விலை ஏறவில்லை. தஞ்சை மாவட்டத்தில் நெல் விற்கக்கூடியவர்கள் லெவி கொடுத்தால்தான் ஓப்பன் மார்க்கட்டில் விற்க முடியும் என்று சொன்னார்கள். இன்று ஓப்பன் மார்க்கெட்டில் ரூ. 85 போனவுடன் கொள்முதலுக்கு எப்படி வரும்? லெவி தவிர ஓப்பன் மார்க்கெட்டிலிருந்து நமக்கு வர வாய்ப்பு இல்லை. இராமநாதபுரம் முழுவதும் வந்துவிட்டது. இன்னும் இரண்டு மாதங்கள் கழிந்து விலை எப்படி ஏறுமோ?

ஆகவே, லெவி கொள்முதலை அரசாங்கம் ஒரு எதார்த்த கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டும். இருக்கக்கூடிய யதார்த்த நிலையைப் பொறுத்த லெவி அறிவித்திருந்தால் அதிகமாகக் கொள்முதல் ஆகியிருக்கும். லெவியில் குறைந்தளவில் தான் வசூலாகும் நிலையை அரசாங்கக் கொள்கை ஏற்படுத்தியிருக்கிறது.

அடுத்தபடியாக, கல்லணைக் கால்வாய்க் கோட்டத்தில் சில வேலைகள் செய்யப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கல்லணைக் கால்வாய்க் கோட்டத்தில் கடைமடைப் பகுதியில் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டு விட்டன. கல்லணைக் கால்வாய்ப் பகுதியில் 101 கிராமங்கள் வறட்சியினால் அடிபட்ட கிராமங்கள் என்று அறிவிக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளால் அனுப்பப்பட்டு அது திரும்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அங்கு பஞ்ச நிவாரண வேலைகள் செய்யப்படவேண்டும். அந்த 101 கிராமங்களையும் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகள் தண்ணீர் எங்கு சரியாகப் போகவில்லையோ அங்கு ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும். எல்லா ஊர்களிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். சும்மா ரெஜிஸ்தர் செய்து வைத்திருக்கிறார்கள். அவை உண்மையாகச் செயல்படக் கூடியனவாக இல்லை. எனவே வறண்ட பகுதிகளில் லிப்ட் இரிகேஷன் சொசைட்டீஸ் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, தொழிலுக்கும் விவசாயத்திற்கும் மின்சாரம் மிக மிகத் தேவை. எந்த அளவிற்கு மின்சாரப் பற்றாக்குறை நம் பொருளாதாரத்தைப் பாதித்துவிட்டது என்பதை எடுத்துச் சொல்லத்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 பிப்ரவரி 25

தேவை இல்லை. மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான குறுகிய காலத் திட்டங்கள் எவை எவை என்று இதில் ஒன்றுமே சொல்ல வில்லை. கல்பாக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். வேண்டியதுதான். ஆனால் ஆரம்பித்ததே முடியவில்லை. கானடாவிலிருந்து சாமான்கள் வரவில்லை. நாம் அணுகுண்டு வெடித்தவுடன் அவர்கள் சாமான்கள் அனுப்புவதை நிறுத்திவிட்டார்கள். நாம் சுயமாக வளரக் கூடாது என்பதில் பக்கத்து நாடுகள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பகுதி ஆரம்பிப்பது சிரமம்தான். 800 கோடி ரூபாய் செலவில் அனல் மின்சாரத் திட்டங்களுக்கு மத்திய அரசு திட்டம் வகுத்தபோது திரு. சேத்னு அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள், என்னைக் கேட்டால் இது அத்தனையும் விரயம். அணு மின்சாரம் உற்பத்தி செய்வதில் முதலீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஒரு கருத்து. பிற்காலத்தில் அணு மின்சாரம் குறைந்த விலையில் அதிகம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது வெகு காலதாமதமாகும். நெய்வேலித் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பினோம். மத்திய அரசும் தன் நிதிநிலையை யொட்டி பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது வந்தாலும் எட்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகுதான் உற்பத்தி கிடைக்கப் போகிறது. இந்த இடைவெளியில் நாம் என்ன செய்ய இருக்கிறோம்? நமது தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்வது? பட்ஜட்டில் வருமோ என்னமோ. அது ரகசியமானது. நாம் இப்போது அனல் மின்சாரத்தை நம்பிக்கொண்டிருக்கிறோம். சிறு சிறு திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பம்ப் செட்ஸ், டீசல் விசையேற்றங்கள் வாங்குவதற்கு விசையேற்றம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நேற்று நான் விசாரித்த போது அரசு கடனில் வாங்குவதற்கு ஒரு விலையும் ரொக்கமாகக் கொடுத்து வாங்குவதற்கு ஒரு விலையும் என்றிருக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு லாபமும் இல்லை. அந்த ஆயிரம் ரூபாய் பம்ப் செட்ஸ் விற்கிறவர்களுக்குத்தான் போய் சேருகிறது. நான் ரொக்கமாக கொடுத்து வாங்கிவிட்டேன். ஒருவர் வேண்டுமென்று கேட்டார். அனுப்பியிருக்கிறேன். எனவே நான் கேட்பது, அரசு லோனில் வாங்குகிற பம்ப் செட்களுக்கு மார்க்கெட் விலையை விட ஏன் இவ்வளவு அதிகம் விலை வைத்து விற்கிறார்கள், ஏன் அதிக விலை நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இப்போது அரிசிப் பற்றுக்குறை இருக்கிறது. மத்திய அரசை கேட்டிருக்கிறோம். மத்திய அரசும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு, இருக்கிற உபரி எவ்வளவு என்று பார்த்து அகில இந்திய ரீதியில் எவ்வளவு கொடுக்க முடியும் என்ற கண்ணோட்டத்தில் பார்த்து நிச்சயமாக ஒதுக்குவார்கள் என்று நம்புகிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசின் மீது ஒரு குற்றச்சாட்டு சுமத்தினார்கள். ஆந்திர அரிசியைக் கொடுக்க மத்திய அரசு ஏன் க்ளியரன்ஸ் கொடுக்கவில்லை என்று. மத்திய அரசு என்பது இருப்பதை எல்லாப் பகுதிகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். தமிழ் நாட்டில் மட்டு மல்ல, பல மாநிலங்களிலும் பஞ்சம் இருக்கிறது. நமக்கு இவ்வளவு வேண்டும் என்று கேட்கலாம். வேண்டுமானால் வேண்டுமென்றே கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். ஆனால் ஆந்திராவிலிருந்து நாம் நேரடியாகக் கொள்முதல் செய்ய அங்கிகாரம் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவது சரியல்ல.

[முற்பகல் 11-30]

இன்னும் பல்வேறு குறைபாடுகள் சமுதாயத்தில் இருக்கின்றன. அரசு வெளியீட்டுப் புத்தகங்களை வாங்கும் வியாபாரிகள் முதலமைச்சரைப் பார்த்து ஒரு மெமோராண்டம் கொடுத்து இருக்கிறார்கள். அவர்ளுக்கு 5 சதவிகிதம் கமிஷன் கிடைக்கிறது. தாலுக்கா அளவில் உள்ள ஏஜெண்ட்களுக்கு 5 சதவிகிதம் கமிஷன் கிடைக்கிறது. மாவட்ட அளவில் உள்ள ஏஜெண்ட்களுக்கு 5 சதவிகிதம் கமிஷன் கொடுத்து, புத்தகங்களையும் சர்க்கார் கடனாகக் கொடுக்கிறது. அவர்கள் அதனால் முதல் போடாமலேயே 5 சதவிகித கமிஷன் சம்பாதிக்கிறார்கள். அரசு இதை நன்கு ஆலோசிக்க வேண்டும். அரசு மாவட்ட அளவில் ஒரு டெப்போ ஆரம்பிக்க வேண்டும். அந்த டெப்போவிலிருந்து ஏஜெண்ட்டுகளுக்கு நேரடியாகப் புத்தகம் வினியோகம் செய்தால் அந்த ஏஜெண்ட்டுகளுக்கும் 10 சதவிகிதம் கிடைக்கும், அரசுக்கும் மேற்கொண்டு செலவு இல்லாமல் இருக்கும். ஆகவே, இது குறித்து அரசு ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் முதலமைச்சரைப் பார்த்து ஒரு மகஜர் கொடுக்க வந்தார்கள். இது மாதிரி சிறு சிறு குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருக்கிறது. அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் வேண்டும். யு.ஜி.சி. ஸ்கேல் ஆப் பே வேண்டும். அவர்களுக்கு

நேரடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டும். இம்மாதிரியாகப் பல கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். இம்மாதிரி படித்தவர்கள் தெருவில் நின்று போராட்டம் நடத்த வேண்டுமானால், சமுதாயத்தில் அத்தகைய சங்கடங்கள் இருக்கின்றன. அவற்றை அரசு கவனித்து உடனடியாகச் செயல்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது) எனக்கு 30 நிமிடம் கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 40 நிமிடம் எடுத்து இருக்கிறீர்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அதேபோல், மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படி விகிதம் மாநில அரசு ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கோரி பல இடங்களில் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். செக்ரடேரியட் ஊழியர்கள் கூட போராட்டம் நடத்தி, இன்று அமைதியாக்கப்பட்டு இருக்கிறது, அவர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, வான் நின்று உலகம் வழங்குதல் போய் வான் இன்றி உலகம் இயங்கும் சூழ்நிலையில் மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் அவர்களுடைய உரையை வழங்கியிருக்கிறார்கள். எந்தச் சூழ்நிலையில் இந்த உரை வழங்கப்பட்டு இருக்கிறது என்று பார்க்கிறபோது பாராட்டத் தோன்றுகிறது, வாயார வாழ்த்தத் தோன்றுகிறது. அந்த முறையில் தான் மாண்புமிகு உறுப்பினர் எல்.ஜி. அவர்கள் ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் முன்மொழிந்து இருக்கிறார்கள். அதை வழிமொழிகிற வகையில் சில சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையின் இறுதியில் குறிப்பிட்டு இருப்பதாவது, "நடக்கவிருக்கும் கூட்டத்தொடரில் இரு அவைகளிலும் உங்கள் நடவடிக்கைகளை அவலுடன் எதிர்பார்க்கிறேன்": அடுத்து அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி, வழக்கமாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம் அகியவை கமழும் சூழ்நிலையில் இந்த விவாதங்கள் நடத்தப்பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை". என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு வேளை





எதிர்தரப்பைச் சார்ந்தவர்கள் இவற்றை யெல்லாம் மறந்து விடுவார்களோ என்ற அச்ச உணர்வால் இவற்றைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இல்லையென எதிர்த்தரப்பினர் மறுக்க முடியுமா? மறுக்க முடியாது.

தென்மேற்குப் பருவ மழை காலம் தாழ்த்தியே தொடங்கி இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இல்லையென சொல்வார் உண்டா? இல்லை.

வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது—தென் மேற்குப் பருவ மழை காலம்தாழ்த்தியே தொடங்கியது—எனவே ஒரு அசாதாரண நிலை—வரலாறு காணாத வறட்சி—இல்லையென எதிர்த்தரப்பினர் சொல்ல முடியாது.

குறிப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. சென்ற ஆண்டில் ஏறத்தாழ 39 லட்சம் ஏக்கரில் சம்பாப் பயிர். இந்த ஆண்டில் 20 லட்சம் ஏக்கரில் சம்பாப் பயிர். அதே போல் சென்ற ஆண்டில் 56 லட்சம் டன் அரிசி விளைவு. 15 லட்சம் டன் தினை. 2 லட்சம் டன் பயறு. இந்த ஆண்டில் விளைவு 43 லட்சம் டன் அரிசி, 7 லட்சம் டன் தினை, 1 லட்சம் டன் பயறு. இல்லை யென்று சொல்ல முடியாது.

இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தும், ஏற்பட்டு இருக்கின்ற வறட்சிக்குக் காரணம் இயற்கை நிலை அல்ல, செயற்கை நிலை என்று தான் எதிர்த்தரப்பினர், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு ஏ.ஆர்.எம். அவர்கள் சொன்னார்கள். அதனால் தான் இதை நான் இங்கே சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது. என்ன சொன்னார்கள், இன்றைய அரசியல் நிலைமை மிகமிகத் தாழ்ந்து விட்டது. சேற்றை அள்ளி யார் மீது வீசுவது என்ற அளவுக்கு அரசியல் வந்து விட்டது என்று சொன்னார்கள். ஒத்துக் கொண்டு பேசியதற்கே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு உண்மையையும் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? நம்முடைய ஒத்துழைப்பைக் கேட்கிறார்கள். அதே நேரத்தில் நாங்க பாட்டுக்கு நாங்க இருக்கிறோம், நீங்க பாட்டுக்கு நீங்க இருக்கிறீங்க; வேலை பாட்டுக்கு வேலை நடைபெறுகிறது என்று சொன்னார்கள். வேலை நடக்கிறது என்று ஒத்துக் கொண்டதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்திற்காக அரசு முன்கூட்டியே என்ன செய்தது என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. குறுவையில் ஏறத்தாழ 1,50,000 டன் அரிசி கொள்முதல் செய்தது. அப்படிக் கொள்முதல் செய்யப்பட்ட காரணத்தால் தான், கோவை மாவட்டம், சென்னை, குமரி மாவட்டப் பகுதிகளில் மட்டும் அல்லாமல் மற்ற மற்ற பகுதிகளிலும் நியாய விலைக்கடைகள் மூலம் அரிசி வழங்கி வருகிறது. சென்னை நகரத்தை மட்டும் எடுத்துக் கொண்டால், முன்பெல்லாம் ஒரு கடையில் 7,000, 8,000 ஏன் 10,000 கார்டுகள் கூட இருக்கும். ஆனால் முறைப்படி அரிசி கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு கடைக்கு 2,000 கார்டுகள் என்ற அடிப்படையில் வைத்து, அரிசி வழங்கப்பட வேண்டுமென்ற முறை கையாளப்பட்டு இருக்கிறது. அதைப் பாராட்ட நாம் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, விவசாயிகளின் நன்மையைக் கருதி வறட்சிப் "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி, பிறவும் தம பொற் செயின்" என்று எதிர்பார்த்த இந்த எண்ணம் மொத்த வியாபாரிகளிடம் இல்லாத காரணத்தால் உபரியாக இருக்கும் பகுதிகளில் அவர்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்வதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்காக நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, விவசாயிகளின் நன்மையைக் கருதி வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதியாக இருக்குமானால் அங்கே வரி ரத்து செய்யப்படுகிறது, உள்ளூர்த் தீர்வை இல்லாமல் செய்யப்படுகிறது. மேல் வரி நிறுத்தப்பட்டு இருக்கிறது, அரசுக் கடன் கொடுத்து இருந்தால் அடுத்த பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது, கூட்டுறவுக் கடன்—அது குறுகிய காலக் கடனாக இருந்தால், அதை மத்திய காலக் கடனாக மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, ஒரு தனியார் கடன் கொடுத்து இருந்தால், அந்தக் கடனை ஒரு ஆண்டுக்கு வசூல் செய்யக் கூடாது என்று அவசரச் சட்டம் பிறப்பித்து இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே பாராட்டத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல. வேலை வாய்ப்புத் தேடித் தருவதற்காக, பெரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அடுத்த 9 மாதங்களில் ஏறத்தாழ 61 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.





அதேபோல் குடிநீர் பற்றிச் சொன்னார்கள். சென்னை மாநகரை எடுத்துக் கொண்டால், இங்கே கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின்றன. குழாயக் கிணறுகள் போடப்படுகின்றன . மாண்புமிகு உறுப்பினர்கள் காலையில் சொன்னார்கள். கிணறுகள் ஆழப்படுத்தப்பட வேண்டும், குழாய்க் கிணறுகள் போடப்பட வேண்டுமென்றார்கள். இந்தக் காரியங்கள் விரைவாகச் செய்யப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவற்றையெல்லாம் செய்ய இந்த அரசு தயங்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வறட்சிப் பணிக்காக தேவைப்படுகிற தொகை ஏறத்தாழ ரூ. 55 கோடியாகும். இயல்பான திட்ட ஒதுக்கீடு ரூ. 25 கோடி. மீதி 30 கோடி. அதை மத்திய அரசிடம் கேட்கிறோம். அவர்கள் கொடுத்து இருப்பது 7½ கோடி. எஞ்சி இருப்பது 22½ கோடி. எங்கே, எப்போது, உறுதி கொடுங்கள் என்று கேட்டால், சுட்டிக் காட்டினால், தவறா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நடப்பாண்டில் நமக்குத் தேவைப்படும் நைட்ரஜன் 3.25 லட்சம் டன். மத்திய அரசு ஒதுக்கியுள்ளது 2.56 லட்சம் டன். இதுவரையில் கிடைத்து இருப்பது 1.70 லட்சம் டன். இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சுட்டிக் காட்டுகிறோம். தவறு என்று சொல்வதற்கு இல்லை.

அது மட்டுமல்ல, இந்த மாநிலத்தில் மின் சக்தியைப் பெருக்குவதற்காக மத்திய அரசு உறுதுணை புரிய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இத்தனை செய்து இருந்தும், இதை எதிர்தரப்பினர் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்றாலும், அவர்கள் பேச்சில் சில உண்மை கலந்து வராமல் இல்லை. திரு. ஏ.ஆர்.எம். அவர்கள் மஸ்டர் ரோலில் தவறு இருக்கிறது. கர்ண்டிராக்ட் முறையில் தவறு இருக்கிறது. எந்தத் துறையில் இது இருக்கிறது. தவறு நடக்காமல் பார்க்க வேண்டுமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மற்றவர்கள் கான்டிராக்ட் முறையே தவறானது என்று சொன்னார்கள். அதை ஒரு குற்றமாகச் சொன்னார்கள். கான்டிராக்ட் முறை இல்லாமல் வேறு எப்படிக் காரியங்களைச் செய்ய முடியும்?

[திரு. கோ. இளங்கோவன்] [1975 பிப்ரவரி 25

அடுத்து, லெவி பற்றிச் சொன்னார்கள். அவர்களே சொன்னார்கள். முன்பு லெவி போட்டார்கள். பிறகு அந்த அளவுக்கு விளைச்சல் இல்லை. ஆகவே மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அதைக் குறைத்துக் கொள்ளச் சொல்லி ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

ஒரே நேரத்தில் அறுவடை நடைபெறுவதில்லை. அது மட்டுமல்ல. லெவி போடுகின்ற நேரத்தில் அறுவடை தொடங்குவது கிடையாது. எனவே லெவி போட வேண்டியிருக்கிறது. அறுவடை தொடங்கியவுடன் அந்த அளவுக்கு விளைச்சல் இல்லை என்றால் ஓரல் உத்தரவு போட முடியுமே ஒழிய, வேறு உத்தரவு போட்டால் அதனால் சில பாதகங்கள் ஏற்படும். லெவி மூலம் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால், அதனை எடுத்துச் சொல்வது அவசியம். ஆளுநர் அவர்களின் உரையில் சொல்லப்பட்ட திட்டங்கள் நியாயமான திட்டங்கள், மத்திய அரசுக்கு விடப்பட்டிருக்கின்ற வேண்டுகோள்கள் நியாயமான வேண்டுகோள்கள், சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற குறைபாடுகள் நியாயமான குறைபாடுகள் என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வரவேற்று, வாழ்த்தி, விடைபெறுகிறேன். வணக்கம், நன்றி.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எதிராக எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே ஆளுநர் அவர்கள் உரையைப் படிக்கின்ற நேரத்தில் நாட்டு மக்கள் தங்களுடைய உள்ளத்தில் பல்வேறு ஆசைகளையும், பல்வேறு நிலைமைகளையும் வைத்துக் கொண்டு தான் இந்த உரையைப் பார்க்கிறார்கள். இன்னும் ஓராண்டு காலத்தில் ஜனநாயக முறைப்படி தேர்தல் வர இருக்கிறது. ஜனநாயக கடமையை ஆற்றியிருக்கிற மக்கள் சிலவற்றை எதிர்பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில் ஆளுநர் அவர்களுடைய உரையிலே நம்பிக்கை தரக்கூடிய பல்வேறு அம்சங்களை நாம் காணவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் மட்டும் வறட்சி இல்லை, கவர்னர் அவர்களுடைய உரையிலும் கடுமையான வறட்சியை நான் காண்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர் இளங்கோவன் அவர்கள் ஆளுநர் அவர்களுடைய உரையிலே இறுதி பாகத்தைப் படித்துக் காட்டினார்கள். ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்று இங்கே இருக்கிற



1975 பிப்ரவரி 25] [திரு. செ. அரங்கநாயகம்]

உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்தும் வகையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அருமை நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். அதற்குக் காரணம் மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அல்ல. ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்றவர்கள் செய்கின்ற பல்வேறு செய்கைகளின் காரணமாக இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து வருகிறார்கள்.

1967-க்கு முன்னால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆண்டார்கள். அப்பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். அன்றிருந்த காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் பல்வேறு ஊழல்களை, தவறுகளைச் செய்ததாக அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை மையமாக வைத்து தேர்தல் பிரசாரம் நடந்தது. இன்றையதினம் தி.மு.கவினர் ஆட்சியில் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருக்கிற எங்களைப் போன்றவர்களும், மற்றவர்களும் இன்று அதே கருத்துக்களை வலியுறுத்தி வருகிறோம். இப்படிச் சொல்கின்ற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் ஊழல், ஊழல் என்று எந்த நேரத்திலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சலித்துக் கொள்கிறார். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுத்ததாகாது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உரிய நடவடிக்கை என்று நாங்கள் கருதுவதெல்லாம், நாங்கள் ஊழல் என்று சொல்கின்ற நேரத்தில் உரிய விசாரணைக் கமிஷன் நியமிக்கக்கூடிய நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டும். கேரளத்தில் ரூ. 500 கட்டினால் குறிப்பிட்ட மாதம், விசாரிக்கக்கூடிய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, கேரளாவில் கௌஹதி என்ற பத்திரிகையில் நிதி அமைச்சர் பற்றிய புகார் கூறப்பட்டதும், அங்கு இருக்கிற முதல் அமைச்சர் திரு. அச்சுத மேனன் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய நிதி அமைச்சர் மீது முறையான விசாரணை செய்வதற்கு விசாரணைக் கமிஷன் அமைத்து, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் முதல் அமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே அவர்கள் இரண்டு அமைச்சர்கள் மீது புகார்கள் எழுந்தபொழுது விசாரணைக் கமிஷன் அமைத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் நாட்டு மக்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். 1967-க்கு முன்னால் அவர்கள் ஆண்டார்கள். அப்படித்தான் 1967-க்கு பின்னால் இவர்கள் ஆளுகிறார்கள், இவர்களும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 பிப்ரவரி 25

அப்படித்தான். ஆகவே, 1976-ல் தேர்தல் நடைபெற்று யார் வந்தாலும் இந்த நிலைமை ஏற்படும் என்று மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கையை இழக்கிறார்கள். அவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை ஏற்படக்கூடிய விதத்தில் நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். நல்ல முறையில் விசாரணைக் கமிஷன் ஏற்பட வேண்டும். எளிய முறையில் விசாரணை நடக்க வேண்டும். கருப்புச் சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டு, பின்னால் கைகட்டிக் கொண்டு உட்கார்ந்துவிட்டதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. அதற்கான நிலைமைகளை ஆளுநர் அவர்களுடைய உரையில் நான் காணவில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்.

லெவி முறையைப்பற்றி பேசும்பொழுது, லெவி முறை என்கின்ற நேரத்தில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், லெவி முறையால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லும்பொழுது பதுக்கல்காரர்களுக்கு துணைபோகிறார்கள், சமுதாயத்திற்காகப் பரிந்து பேசவில்லை என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம் லெவி முறையைப்பற்றிய கருத்துக்களை ஆழ்ந்து பரிசீலிக்க இந்தச் சர்க்கார் தவறிவிட்டது. ஆழ்ந்து பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். லெவி முறை என்றால் சென்ற வருஷம் ரூ. 70 தந்தால் இந்த வருஷம் ரூ. 74 தருகிறார்கள். விவசாயிகளுக்குச் செலவு என்ற முறையில் பார்த்தால் 103 சத விகிதம் ஏறியிருக்கிறது. உரம் என்ற வகையில் பார்த்தால் 200 சத விகிதம் விலை ஏறியிருக்கிறது. ஆனால் சர்க்கார், விலையில் 6 சத விகிதம் மட்டுமே ஏற்றித் தருகிறார்கள். இது தான் அதில் இருக்கக் கூடிய முக்கியமான குறைபாடு.

அதற்கு அடுத்தபடியாக ஏக்கருக்கு இவ்வளவு என்று நிர்ணயிக்கிறார்கள். அப்படி நிர்ணயிக்கும்பொழுது எந்த அளவுக்கு விளைந்திருக்கிறது என்ற கணக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது. மேலும், அங்கே இருக்கிற கர்ணம் போன்றவர்கள் கொடுக்கும் கணக்கை வைத்துக் கொண்டு இங்கே உட்கார்ந்து லெவி திட்டத்தை தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு குறைபாட்டையும் கட்டிக் காட்ட விரும்புகிறேன். எடுக்கிற நெல்லை எடுத்துவிட்டு, இவ்வளவு தான் அவர்கள் கையிருப்பு வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படி அனுமதிக்கப்பட்டுள்ள அளவானது விவசாயி



1975 பிப்ரவரி 25] [திரு. செ. அரங்கநாயகம்]

களுக்குப் போதுமானதல்ல. அவர்களுடைய சாப்பாட்டிற்கும், அவர்கள் அடுத்த முறை விவசாயம் செய்வதற்கும் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினால் இன்றைக்கு லெவி முறை என்பது நெல் விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் இல்லை.

கவர்னர் அவர்கள் உரையில் ஒன்று குறிப்பிட்டிருந்தார்கள். "கரும்புப் பயிரைப் பொறுத்த வரையில், 11 லட்சம் டன் வெல்லம் என்ற உற்பத்தி இலக்குக்கு மாறாக, 13.7 லட்சம் டன் வெல்லம் உற்பத்தியாகியது." என்று குறிப்பிட்டிருக்கிறார். இது குறித்து மகிழ்ச்சி அடையக்கூடிய நிலையில் நாம் இல்லை. காரணம், அடுத்த ஆண்டு கரும்பு உற்பத்தி இரண்டு மடங்காக உயர்ந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. லெவி முறை பற்றி நாம் தீவிரமாக அமல்படுத்துகிற நேரத்தில், நெல் விவசாயம் செய்யும் விவசாயிகள் நெல் விவசாயம் செய்வதற்குப் பதிலாக வேறு பல பொருள்கள் விவசாயம் செய்வதற்குத் தொடங்குகிறார்கள் என்பதைத் தான் இது சுட்டிக்காட்டும். ஆகவே, அதற்காக நாம் மகிழ்ச்சி அடையக்கூடிய நிலையில் இல்லை. லெவி முறையை அமுல் நடத்தும்பொழுது அங்கே போய் அதிகாரிகள் ஒரு கொள்ளைக் கூட்டம் போல் இருந்து கொண்டு, விவசாயிகளை மிரட்டுகின்ற நிலைமையில், விவசாயிகள் அச்சம் அடையக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, என்னுடைய கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன், லெவி முறை என்பதை எப்படி ஒரு நல்ல திட்டமாக அமல் நடத்த வேண்டுமென்றால், நெல் விவசாயிகளுக்கு அடுத்த ஆண்டு நெல்லை விவசாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களுக்கு அளிக்கக்கூடிய விதத்தில் லெவி முறையை மாற்றி அமைக்க வேண்டும். அதை எப்படிச் செய்ய வேண்டுமென்றால், மற்ற பொருள்களை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கும், நெல்லை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கும் ஒரு வேறுபாட்டை உணர்ந்து, அவர்களுக்குச் சில தனிச் சலுகைகளை இந்த சர்க்கார் தர முன்வர வேண்டும். அப்படிப்பட்ட தனிச் சலுகைகள் என்று சொல்கிற நேரத்தில், நான் குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு விவசாயிகள் உரத்தை பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் உரத்தை அதிகமான விலைக்கு வாங்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். பயன்படுத்துகிற உரமும் அதிக அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள். குறைவான அளவு உரத்தைப் பயன்படுத்தி, வீரிய வித்துக்களைப் பயன்படுத்தி, பூச்சிகொல்லி மருந்தைப் பயன்படுத்தி, சீராக தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்தால் விளைச்சல் அதிகமாகும் என்று

விவசாய ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. அந்த அடிப்படையில் எங்கள் கட்சியின் சார்பில் ஒரு யோசனையை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு உரத்தை இலவசமாகத் தாருங்கள். அப்படிப்பட்ட தனிச் சலுகையை நீங்கள் தருவீர்களேயானால், இந்த நாட்டு விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தைத் தரமுடியும். இந்த முறையைத் தமிழ் நாட்டில் பரவலாக பின்பற்ற முடியாவிட்டாலும், தஞ்சை, திருச்சி, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் மட்டுமாவது இலவசமாக உரத்தைத் தந்து அதே நேரத்தில், கட்டாயக் கொள்முதல் திட்டத்தையும் இணைத்து, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்தினால், நெல் விவசாயம் செழிக்கும், நெல் உற்பத்தி எதிர்பார்க்கும் அளவுக்கு மேலேயும் கிடைக்கும்.

இங்கே பேசிய நண்பர்கள் வறட்சிப் பணிகளைக் குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். வறட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாகிய இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் பஞ்சப் பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்று அண்ணா தி.மு.க.-வின் சார்பில் கேட்டுக் கொண்டோம். இன்றைக்கு அப்படி அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் கவர்னர் அவர்களின் உரையில் நாட்டு நிலைமையைப்பற்றி குறிப்பிடுகிற நேரத்தில், ஆங்காங்கு எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. அங்கே இருக்கிற மாடுகளுக்குத் தீவனம் இல்லை. அங்கே இருக்கிற மக்களுக்குக் கூலி வேலை கிடைக்கவில்லை. அங்கே இருப்பவர்கள் எல்லாம் பக்கத்து மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் பாதிக் கூலிக்கு வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். தொழிலாளர்களுடையே மோதல்; அடிக்கப்படுகிறார்கள். இப்படி நிலைமை என்றால் இதைவிட பஞ்ச நிலைமை நிலவுகிறது என்பதற்கு வேறு எந்த நிலைமை இருக்க வேண்டும் என்று சர்க்கார் சொல்ல வேண்டும். அ.தி.மு.க.வினர் சொல்வதற்காக என்பதில்லை. அல்லது நீங்கள் மறுக்கிறீர்கள் என்பதற்காக இல்லை. குறிப்பிட்ட நிலைமை இருக்குமேயானால், அதை ஆராய்ந்து பார்த்து, அந்த நிலைமை இருக்கிறது. பஞ்ச நிலைமை அங்கே நிலவுகிறது என்று அறிவிக்க வேண்டும். இல்லை, அப்படிப்பட்ட நிலை இல்லையென்றால், அப்படிப்பட்ட பஞ்ச நிலை இல்லை. ஆகவே பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வில்லை என்று சொல்ல வேண்டும். ஆகவே, இத்தகைய





நிலைமைகளின் அடிப்படையில் கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கக முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

<u>திரு. பூ. எட்டியப்பன் :</u> தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாக நம்முடைய தமிழகம் இப்போது இருக்கக்கூடிய நிலைமை, வருங்காலம் எப்படி இருக்க வேண்டும், என்னென்ன தேவை என்பதை எல்லாம் புள்ளிவிபரங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலே குறிப்பாக மின்சாரம் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை என்பவைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றி மாற்றுக் கட்சித் தலைவர்களும், நண்பர்களும் பேசும்போது இந்த வறட்சி மிக, மிக மோசமாக இருக்கிறது என்று அபிப்பிராயம் சொன்னார்கள். அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று குற்றஞ் சாட்டினார்கள். இதைக் கூறுவதற்கு முன்னதாக ஒவ்வொரு இடத்திலும் சென்று, வறட்சிப் பணிகள் நடக்கின்ற இடங்களில் வேலை எப்படிச் செய்கிறார்கள், என்ன கூலி கொடுக்கிறார்கள், வேலை எப்படி இருக்கிறது என்று பார்க்காமல் புகார் சொல்வதும், அதையே ஆதாரமாக எடுத்துக் கொண்டு வறட்சிப் பணிகள் மோசமாக இருக்கிறது என்று பேசுவதும் எனக்கு வருத்தத்தைத்தான் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இன்று தன்னுடைய பதில் உரையில் 3 ரூபாய்க்குக் குறையாமல் கூலி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது இருக்கிற விலைவாசியில் 3 ரூபாய் கூலியை வைத்து எப்படிக் குடும்பம் நடத்த முடியும். எத்தனை பேர் பிழைக்க முடியும் என்பதை எண்ணிப் பார்த்து, மேலும் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மூன்று ரூபாய் கூலி கொடுத்தாலும் கூட, வடாற்காடு மாவட்டத்தில் வருவாய்த் துறை அமைச்சரவர்கள் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட வந்திருந்தபோது நான் அவர்களிடம் தெரிவித்தேன். 3 ரூபாய் கூலி கொடுத்தால் போதும். ஆனால் அவர்களுக்கு நியாயவிலையில் உணவுப்பொருட்கள் கொடுக்க

[திரு. பூ. எட்டியப்பன்] [1975 பிப்ரவரி 25

வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இல்லாவிட்டால் 6, 7 ரூபாய் கொடுத்தாலும் போதாது என்று சொல்லியிருக்கிறேன். எனவே, வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களில் எல்லாம் நகரங்களில் கொடுக்கப்படுவதைப்போல் புஞ்சை தானியங்களையும் நஞ்சை தானியங்களையும் நியாயவிலையில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் மேலும் முனைப்பாக வேலை செய்ய முடியும். அதற்கான ஊக்கம் அவர்களுக்குப் பிறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

லெவி முறை பற்றிச் சொன்னார்கள். கிராம அதிகாரிகள் கொடுக்கிற கணக்கை வைத்துக் கொண்டு டி.எஸ்.ஓ.வும் மற்றுள்ள அதிகாரிகளும் லெவி வசூல் செய்கிறார்கள். அதிலும் கணக்குக் கொடுப்பது எப்போது என்றால் அறுவடை ஆவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் தான். அதனால் உரிய நேரத்தில் வந்து லெவி வசூல் செய்வதில்லை. அறுவடை ஆகி, நெல் தீர்ந்துபோன பிறகு லெவி வசூலுக்குப் போகிறார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறேன். குறித்த நேரத்தில் போய் வாங்காவிட்டால் அவர்கள் நெல்லை விற்று விடுவார்கள். அதன் பிறகு சாப்பாட்டுக்குக் கூட இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, கொள்முதல் செய்வதில் அதிகாரிகள் தீவிரமாகக் கவனம் செலுத்தி, காலாகாலத்தில் லெவி வசூல் செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகள் ஒரு நாள் லெவி கொள்முதலுக்கு வந்தார்கள். 20, 25 மூட்டை நெல்லை வாங்கி அங்கேயே போட்டு விட்டுச் சென்றார்கள். நெல்லுக்குப் பணமும் கொடுக்கவில்லை. ஒரு வாரம் கழித்துப் பணம் கொடுத்தார்கள். நெல்லை ஒரு மாதம் கழித்து தான் அங்கிருந்து எடுத்துச் சென்றார்கள். ஒரு மாதம் வரையில் அந்த நெல் ஈரப் பசையுடன் இருந்தது. உலர வைக்கவில்லை. இப்படி ஒரு மாதம் வரையில் நெல் ஈரமாக இருந்தால் எப்படி இருக்கும்? இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமலிருக்க, அதிகாரிகள் ஒழுங்காக நடந்து கொள்ள அரசாங்கம் சரியான கண்காணிப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறுகளை ஆழப்படுத்துவது பற்றி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்திருந்த போது கேட்டேன். அப்போது ரிசர்வ் பாங்க் கடன் வழங்க, கிணறுகள் இடைவெளி தூரம் இவ்வளவு இருக்க வேண்டுமென்ற



1975 பிப்ரவரி 25] [திரு. பூ. எட்டியப்பன்]

விதி இல்லை என்று சொன்னார்கள். ஆனால், இன்றுவரையில் இந்த வங்கிகளில் கடன் கேட்டால் எங்களுக்கு அந்தமாதிரியான உத்தரவு எதுவும் வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அம்மாதிரியான ஒரு முடிவை எடுத்துக் கொண்டால் உடனடியாகச் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உத்தரவு அனுப்பி கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். அப்படிச் செய்தால்தான் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 30, 35 ஆண்டு காலமாக அங்கே ஒரு சப்ளை கானல் வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் சர்வே செய்து, மதிப்பீடு செய்து, 43 லட்சம் ரூபாய் செலவாகும் என்ற விபரத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். கடந்த 3, 4 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் நானும் அதுபற்றி வற்புறுத்தி வருகிறேன். இது வரையில் அந்த வேலை நடைபெற வழி பிறக்கவில்லை. இந்த வறட்சிக் காலத்தில் அந்த வேலையைத் தொடங்கினால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை பணிவோடு தெரிவித்தது, அந்த வேலையை வறட்சி நிவாரணப் பணியாக இப்போதாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1975–76 ஆம் ஆண்டில் 60,000 பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்படும் என்று அரசு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது; கவர்னர் உரையிலும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் தாமதம் இல்லாமல் செய்ய வேண்டும். ஒரு கம்பம் அல்லது இரண்டு கம்பத்திற்குப் பக்கத்திலுள்ளவர்கள் முதலில் மின்சாரம் வழங்கப் பணம் கட்டிவிட்டு, தங்களுடைய ஆடு மாடுகளை விற்று பம்புசெட்டு அமைத்துவிட்டு மின்னிணைப்பு வேண்டுமென்று கேட்டால், கண்டக்டர் இல்லை, கம்பம் இல்லை, ஒயர் இல்லை என்று சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட இலாக்கா அதிகாரிகள் உடனடியாக சாமான்கள் வழங்கி, மின்னிணைப்பு செய்து தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பூ. எட்டியப்பன்] [1975 பிப்ரவரி 25

அடுத்தபடியாக, கிணறுகளை ஆழப்படுத்துவதில் துரித நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி, உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சிகளின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு பதில் அளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 18—12—74 அன்று தெரிவித்த கருத்துக்கள்தான், அதில் தெரிவித்த சலுகைகள்தான் இந்த கவர்னர் உரையில் இடம் பெற்றிருக்கிறதே தவிர, வறட்சியாலும், பஞ்சத்தினாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், விலைவாசி ஏற்றத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் ஒன்றும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் அரசின் பொறுப்பு என்ன, அரிசி விற்கப்பட வேண்டிய அதிகபட்ச விலை என்ன என்று சொல்லப்படவில்லை. 18—12—1974 ஆம் தேதி முதலமைச்சர் திட்டவட்டமாக, அழுத்தந் திருத்தமாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளில் கிலோ அரிசி ரூ. 1.60 முதல் ரூ. 1.90 வரை விற்கப்படும்; தனியார் கடைகளில் ரூ. 1.90 முதல் 2.20 வரை விற்கப்படும்; அதற்குமேல் விற்கப்படுவதோ வாங்கப்படுவதோ குற்றம்; அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்கள். அதை "முரசொலி" பத்திரிகையில் 8 பத்தி செய்தியாக வெளியிட்டார்கள். "முரசொலி" பத்திரிகையில் அரிசி விலை நிர்ணயம் பற்றிக் குறிப்பிடுகையில் "அண்ணாவின் தம்பிகள் தரும் ஆனந்தச் செய்தி" என்று வெளியிட்டிருக்கிறார்கள். "இந்து" பத்திரிகையில் அதை ஒரு பெட்டிச் செய்தியாக வெளியிட்டார்கள். ஆனால், நடந்தது என்ன? மத்திய அரசின் அங்கீகாரம் கிடைப்பதற்கு இங்கிருந்து அதிகாரிகள் டில்லிக்கு சென்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசின் அங்கீகாரம் இதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி இந்த உரையில் கவர்னர் குறிப்பிடாததின் மர்மம் என்ன என்று எங்களுக்குப் புரியவில்லை.



1975 பிப்ரவரி 25] [திரு. கே. பி. கோபால்]

வறட்சிக்கு மழை பொய்த்தது காரணமாக இருக்கலாம். ஆனால், உடனடியாக இந்த அரசாங்கம் கையாண்ட முரண்பாடான செயல் முறைகளும், உணவுக் கொள்கைகளும்தான் இந்தக் கடுமையான பஞ்சத்திற்குக் காரணமாகும். இதை நான் மாற்றுக் கட்சிக்காரர் என்ற முறையிலோ அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் காரணத்தினாலோ சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டியதில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே குற்றங் குறைகளைச் சொல்லாவிட்டாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மேலவை உறுப்பினர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்—ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் வெளியிலே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே சொல்கிறார்கள். சமீபத்தில் நடந்த கோவை மேற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் கடுமையான குற்றச்சாட்டு அவர்களது கட்சிக்காரர்களாலேயே சொல்லப்பட்டு பெரிய சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

அதுமட்டுமல்ல, சென்ற டிசெம்பரில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசும்போது உணவு அமைச்சர், உணவுத் துறை காரியதரிசி முதல் கீழ்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் வரை மாற்றப்பட வேண்டும் என்று உங்கள் கட்சியைச் சேர்ந்த மதுரை முத்து அவர்களே கூறியிருக்கிறார்களே என்று குறிப்பிட்டதற்கு—எதிர்க் கட்சிக்காரர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக மாற்றுவதா? அல்லது எங்கள் கட்சியில் உள்ள அர்த்தநாரீசுவரர் நிர்ப்பந்தத்திற்காக மாற்றுவதா, அது எல்லாம் முடியாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றையதினம் வேறு நிர்ப்பந்தத்தின் காரணமாக உணவுத் துறை அமைச்சரை மாற்றியிருக்கிறார்கள். உணவுத் துறை செயலாளரை மாற்றியிருக்கிறார்கள்.

அடுத்து, நீர்ப்பாசனக் கருத்தரங்கு மாவட்டத் தலைநகரங்களில் நடந்தது. அதில் பொதுப் பணித் துறை அமைச்சர் கலந்து கொண்டார்கள். அந்த நீர்ப்பாசனக் கருத்தரங்கு கண்துடைப்பு நாடகமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். காரணம், அந்த நீர்ப்பாசனக் கருத்தரங்கில் ஒருசில திட்டங்களை ஏற்றுக் கொண்டு அந்தத் திட்டங்களுக்கு நிச்சயமாக நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிப்புச் செய்தார்கள். அந்தப் பகுதியில் அவ்வாறு ஒத்துக் கொள்ளப்பட்ட வறட்டாறு திட்டம், கருக்கட்டன்குளம் தூர் எடுக்கும் திட்டம் ஆகிய இரண்டுக்கும் இதுவரை எதுவும் ஒதுக்கப்படவில்லை. இந்நாள்வரை எந்த

வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவேதான் அந்த நீர்ப்பாசனக் கருத்தரங்கு ஒரு கண்துடைப்பு நாடகமோ என்று கருத வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் இந்த அரசு சட்டசபையில் என்ன சொன்னாலும்—"முரசொலி" பத்திரிகை 16—1—75 இல் எழுதியுள்ளதைப்போல கலைஞர் அவர்கள் எவ்வளவு கட்டுரை எழுதினாலும் சரி, மக்கள் இவற்றை எல்லாம் நம்புவதற்குத் தயாராய் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு வறட்சி நிவாரணப் பணிகளின் மூலம் அவர்களது துயர் துடைக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், நிலைமை என்ன? இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தமிழ் நாட்டின் ஒரு கோடியில் உள்ள கம்பம் பகுதிக்கு பிழைப்புத் தேடி வந்துகொண்டிருக்கிறார்கள். "நீங்கள் கூலியே கொடுக்க வேண்டாம். என்ன வேலை சொன்னாலும் செய்கிறோம். எங்களுக்கு ஒருவேளை கஞ்சி கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். இந்தச் சர்க்கார் இராமநாதபுரம் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்கிற உறுதியில்லாத காரணத்தினால்தான் இன்றைக்கு இராமநாதபுரம் மக்கள் அந்த மாவட்டத்தைவிட்டே வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை மக்கள் இனியும் நம்புவதாக இல்லை.

வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பீட்டிருக்கிறார்கள். 60 லட்சம் மக்களுக்கு ஏறத்தாழ 9 மாதம் வேலை வாய்ப்புக் கிடைக்க வழி செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால், 60 ஆயிரம் மக்களுக்குக் கூட இவர்களால் வேலைவாய்ப்பு அளிக்க முடியாது என்கிற நிலைதான் இருக்கிறது. அங்குள்ள ஒரு பெரிய குற்றச்சாட்டு அந்தப் பகுதியில் ஜனவரி மாதத்தில் 4 நாட்கள் தான் வேலை கொடுத்திருக்கிறார்கள். பிப்ரவரியில் 19 ஆம் தேதி வரை 2 தினங்கள்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள் என்பதாகும்.

அதுமட்டுமல்ல. கமுதி அருகாமையில் கீழராமநதி கிராமத்தில் ஆயிரம்பேர் வேலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், 30 பேர்களுக்குக்கூட வேலை கிடைக்கும் என்கிற உத்தரவாதம் இல்லை.

கவர்னர் உரையில் இதுவரை கண்டிராத கடுமையான வறட்சி நம் மாநிலத்தில் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டில் இதுவரை கண்டிராத வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில் இந்த அரசு தங்களுடைய ஆடம்பர விழாக்கள் எதையாவது குறைத்துக்கொண்



ருக்கிறதா என்றால் இல்லை. பொங்கல்விழா போன ஆண்டுவரை ட்டு நாட்கள் நடந்தது என்றால் இந்த ஆண்டு ஒன்பது நாட்கள் நடந்திருக்கின்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> இதுவரை எட்டு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 2 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. கே. பி. கோபால்:</u> அனங்காநல்லூரில் பொங்கல் விழா அன்று ஜல்லிக்கட்டு விழா நடத்துவதை நிறுத்திவிடுங்கள் என்று முன்பே திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டும் 50 வெளிநாட்டுப் பயணிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு விழா நடத்தியிருக்கிறீர்கள். பலர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். ஒருசிலர் இறந்திருக்கிறார்கள். அனங்காநல்லூரில், வெளிநாட்டுப் பயணிகளுக்காக, காலரி, பரண் அமைத்திருக்கிறார்கள். அதில் அதிகாரிகளைத் தவிர— வெளிநாட்டுப் பயணிகளைக் கூட உட்கார அனுமதிக்கவில்லை. அதிகாரிகளே அமர்ந்துகொண்டார்கள்.

அடுத்து, வறட்சியும் துயர் துடைப்பும் என்று 16—1—75 தமிழரசுப் பத்திரிகையில் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறார்கள். அதில் உழவர்களை "பசிப் பிணி மருத்துவர்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் உழவர்களது பசிப் பிணியைத் தீர்க்க எந்த மருத்துவர் இருக்கிறார் என்று கேட்கிறேன். அதில் அழகாக கவிதை எழுதியிருக்கிறார்கள்.

"அழமாட்டாக் குறையாக அன்றொருநாள்
அரிசிக்கு வரிசை நின்ற
நிலைமாற்றிப் போட்டவர்கள் நீங்களன்றோ?
அன்று நம் கிடங்கு நிலையோ அந்தோ பரிதாபம்.
அதற்கெதிராய் இன்று ஐம்பைத்தைந்து லட்சம் டன்
அரிசி மட்டும் உற்பத்தி"

என்பதாக எல்லாம் அழகாக அரிசிக்கு வரிசை நின்ற நிலைமாற்றிப் போட்டவர்கள் என்று உழவர் பெருமக்களைப் பாராட்டி கவிதை எழுதலாம். காங்கிரஸ் ஆட்சியில் அரிசிக்கு வரிசை நின்றார்கள். ஒத்துக்கொள்கிறோம். இன்றைக்கு அரிசிக்கு வரிசை இல்லாமல் உடனடியாக அரிசி கிடைக்கின்றதா? அல்லது அவர்கள் வீடு தேடிச் சென்று அரசு அரிசியைக் கொடுக்கின்றதா என்று கேட்க விரும்புகிறேன்.

நேற்று இந்துப் பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதம் என்ற பகுதியில் வந்துள்ள ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரை மாநகராட்சியைச் சேர்ந்த பள்ளிகளில் மாணவர்களது எண்ணிக்கை குறைந்துவிட்டது. அதுபற்றி பெற்றோர்களைக் கேட்டபோது அவர்கள் சொல்கிறார்கள். "நாங்கள் உழைத்து சம்பாதித்துச் சாப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம். அரிசி வாங்கக் கடைக்குச் சென்றால் காலைமுதல் மாலைவரை ஆகிவிடுகிறது. ஆகவே பிள்ளைகளைக் கடைக்கு அனுப்பிவிட்டு நாங்கள் வேலைக்குப் போகிறோம். அதனால்தான் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை" என்கிறார்கள். இதுபோன்று பள்ளி படிக்கும் மாணவர்கள் எல்லாம் உங்கள் ஆட்சியில் அரிசிக்காக கடைகளின் முன் வரிசையாக நிற்க வேண்டிய நிலைதான் இன்றைக்கு இருக்கிறது.

இறுதியாக, எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை நாங்கள் ஒத்துழைப்புக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். உத்தமபாளயத்தைப் பொறுத்தவரையில் முன்பு உணவு அமைச்சராக இருந்த மாண்புமிகு ப.உ.ச.வுக்கும் தெரியும், மன்னை நாராயணசாமி அவர்களுக்கும் தெரியும், உணவு தானியக் கள்ளக்கடத்தலைத் தடுக்க நாங்கள் எவ்வளவு உதவி செய்திருக்கிறோம் என்பது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே மாவட்ட வளர்ச்சிக் குழு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள், உத்தமபாளயம் பகுதியில்தான் எதிர்பார்த்த லெவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு அரசோடு ஒத்துழைக்கிறார்கள் என்பதைத்தான் கவனிக்கவேண்டும். இதற்கு 1971 ஆம் ஆண்டு சம்பவத்தைச் சுட்டிக் காட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு ஒரு மாதச் சம்பளத்தை எல்லோரும் கொடுக்கவேண்டுமென்று முதல்வரும், சபையின் முன்னவரும் ஒரு அறிவிப்புச் செய்தார்கள். நமது செயலாளர் அவர்களும் ஒரு கடிதம் 16—7—71 இல் எழுதினார்கள். அவர்களது கட்சி அமைச்சர்களையே எடுத்துக்கொண்டால் ஒரு மாதச் சம்பளம் ஆயிரம் ரூபாயை 7 அமைச்சர்களேதான் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி 7 அமைச்சர்கள் 500 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்தான் அரசோடு





ஒத்துழைப்பு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாகவேண்டும். இந்த நேரத்தில் யார் தவறு செய்தாலும் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்கிற நினைப்பு இல்லாது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயங்கக் கூடாது. நீங்கள் முன்பு பிரச்சாரம் செய்தீர்கள். "பை நிறையப் பணம் கொண்டுபோனால் கை நிறைய அரிசி கிடைக்கும்" என்று. இன்றுள்ள நிலைமையை உடனடியாக நீங்கள் சமாளிக்கத் தவறினால் நாங்களும் அதே பிரச்சாரத்தைத்தான் செய்ய நேரிடும் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. டி. கணபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வரலாறு காணாத மழையின்மையால் உண்டான வறட்சியை முன்னெச்சரிக்கையாகவும், திறமையோடும் தமிழக அரசு சந்தித்து இருக்கிறது. இன்னும் ஒன்பது, பத்து மாதங்களுக்கு இந்த வறட்சி நிலைமை நீடிக்கும் என்று ஆய்ந்து மக்கள் துயர் துடைக்க ரூ. 55 கோடி ஒதுக்கி 61 லட்சம் நிலமில்லா ஏழை கிராமத் தொழிலாளர்களுக்கும் குறைந்த நிலமுள்ள எளிய குடியானவனும் பயன் பெறும் வகையில் தமிழக அரசு யுத்தகால நடவடிக்கையாக ரூ. 10 கோடி இதுவரை ஒதுக்கி திட்டங்கள் பல தீட்டி மாவட்டங்கள்தோறும் மாண்புமிகு அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் நேரில் சென்று துயர் துடைக்கும் பணி செவ்வனே நடந்து வருகிறது. எனவே, கன்னியாகுமரி தொகுதி ஆரல்வாய்மொழி, குமாரபுரம் பஞ்சாயத்துக்களுக்கும் இந்த வறட்சி நிவாரணம் கிடைத்திட உத்திரவிட வேண்டும். ஆக எதிர்க்கட்சிகளுக்கோ போராட்டத்திற்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் இடம் இல்லாமல் போய் விட்டது. இதுவும் செயலற்ற குறை இதுதான் என சுட்டிக்காட்ட முடியாதபோது பாரதமாதா—நீங்கள் இந்தியப் பிரதமரை அப்படிச் சொல்வதனால் சொல்கிறேன்—சென்னை வந்து பேசியதை பிடித்துக்கொண்டு பார்த்தனர். டாக்டர் கலைஞர், நமது முதல்வர் அவர்களும் நேற்றைய சட்டமன்ற கூட்டத்திலும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரும் அதற்கு பதில் சொல்லியிருப்பதை பார்த்து எதும் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள் எதிர்க்கட்சியில் வறட்சி நிவாரணத் திட்டங்களால் நீடித்த நிலைத்த பயனளிக்கவல்ல குடிநீர் வழங்குதல், பாசன வசதிகள் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன. நாங்குநேரி, இராதாபுரம், சாத்தான்குளம், மேலப்பாளையம் சட்டமன்ற தொகுதியின் ஒரு பகுதி பெரும்

[திரு. டி. கணபதி] [1975 பிப்ரவரி 25

வறட்சிக்கு உள்ளாகியுள்ளன. எங்குமே வறண்ட பின்தங்கிய பிரதேசங்கள். ஆகவே இராமநாதபுரம், தர்மபுரி போன்று வறட்சிப் பகுதி வேலைத் திட்டங்களை நாங்குனேரி வட்டத்துக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ரூரல் இண்டஸ்ட்ரீஸ் பிராஜக்ட் ஒன்று இருந்ததை இப்பொழுது எடுத்துவிட்டார்கள். ஆகவே, உடனடியாக அங்கு பின்தங்கிய நிலைமையை சீர்படுத்துவதற்காக ஏதாவது வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களில் குடி தண்ணீர் கிணறுகள் வறண்டுவிட்டன. போதிய கம்ப்ரெஷன் மெஷிகள் இல்லாமையால், வறண்ட கிணறுகள் பலவற்றை 70 அடிக்குக் கீழே ஆழப்படுத்த முடியவில்லை. ஆகவே, ஆழக்கிணறுகளில், வெடி வைத்து பாறைகளைத் தகர்த்தக்கூடிய கம்ப்ரெஷன் மெஷின்கள், ஆழதுளைபோடும் இயந்திரங்களை வேறு மாநிலம்களிலிருந்தாவது, பக்கத்து மாவட்டங்களிலிருந்தாவது கொண்டுவந்து, நாங்குநேரி, வள்ளியூர், களக்காடு போன்ற இடங்களில்—இந்த ஆழ்துளை போடும் இயந்திரங்களை நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்பொழுது வேலை செய்யும் மக்களுக்கு அளிக்கப்படுகிற ரேட்டுகள் ஒவ்வொருமாதிரியாக இருக்கிறது. அந்த ரேட்டுகளைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடி தண்ணீரைக் கூட விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. குடிநீர் வாரியம், ஒரு அவுட்லைன் புரபோசலை அரசுக்கு அனுப்பி, அது அரசின் ஆணைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த புரபோசலை நிறைவேற்றி, உடனடியாக சுற்றி 1 மைல் தூரத்தில் தாராளமாக தண்ணீர் கிடைக்கும் கிணற்றிலிருந்து பைப்புகள் போட்டு குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது-போன்று செட்டிகுளம், லெவிஞ்சிபுரம், வடக்கு வள்ளியூர் குடிநீர்த் திட்டங்களையும் குடிநீர் வாரியம் துரிதப்படுத்த விரும்புகிறேன்.

பழவூர் போன்ற பெரும்பான்மையான அரிசனங்கள் இருக்கிறவூர்களில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 25] [திரு. டி. கணபதி]

முன்பு சொன்ன சட்டமன்ற தொகுதிகளில் உணவுப் பயிர்கள் செய்ய உழவுக்கு இறைவைப் பாசன கிணறுகளைத்தான் நம்பியிருக்கிறோம். நிலவள வங்கியிலிருந்து கடன் பெற, முடியவில்லை. ஏனென்றால், வள்ளியூர் நிலவள வங்கிக்கு கடன் அனுமதிக்க கிரவுண்ட் லெவல் வாட்டர் கிணறுகள் ஆழப்படுத்த கிளியரன்ஸ் கிடைக்கவில்லை. அதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு இறவைக் கிணறுகள் ஆழப்படுத்த தக்காவிக் கடனை ரூ. 3,000 அளித்து, கடன் வசதி ஒன்றியங்கள் மூலம் செய்து கொடுத்தார்கள். நிலவள வங்கிமட்டும் கடன் வசதி செய்துவிட்டால் விரைவில் வேலை நடவாது. ஆகவே, முன்பு கொடுத்து வந்ததைப் போல் ஒன்றியங்கள் மூலம் தக்காவிக் கடனை ரூ. 3,000 வரை கிணறு ஒவ்வொன்றும் தோண்ட அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1974–75-ல் 30,000 மின் இணைப்பு கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1975–76-ல் 60,000 மின் இணைப்பு கொடுக்கவும் அதிகப்படியாக ரூ. 10 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கக் கூடிய அம்சம். இச்சந்தர்ப்பத்தில், நாங்குநேரி வட்டத்தில் 3, 4 வருடங்களாகப் பல தடவை நாங்கள் முறையிட்டும் மின்சார இணைப்பு கொடுக்காமலிருப்பதை இந்தத் திட்டத்தில் உடனடியாகக் கவனித்து, அவற்றிற்கு மின்சார இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுகிறேன்.

இறைவைப் பாசனத்தில் நஞ்சை பயிரிடுபவர்களுக்கு மின் கட்டணத்தில் சலுகை அளிக்கவேண்டும். முக்கியமாக, திரு. மாரிமுத்து அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். அணைக்கட்டு நீரைப் பயன்படுத்தினால், ஒரு ஏக்கருக்கு ரூ. 20 செலவாகிறது. ஆனால், இறைவை நீரைப் பயன்படுத்தினால் ஒரு ஏக்கருக்கு ரூ. 100 ஆகிறது. ஆகவே, இறைவை நீரைப் பயன்படுத்துபவர்களுக்கு 3 ஏக்கர் வரையாவது லெவியிலிருந்து விதிவிலக்கு அளித்து, மற்றும் உரச் சலுகை, மின் சலுகையெல்லாம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிரந்தர நீர்ப்பாசனத்துக்கும், கிணற்று நீர்நிலை உயரவும், மக்களுக்கு வேலை அளிக்கவும் கோயம்புத்தூரில் இருப்பது போல் எங்கள் பகுதி Pond scheme திட்டங்கள், சிறுபாம்பனி, குளம், வடமலையான் கால்வாய் சீரமைப்பு, நம்பியாற்று அணை, தத்துவனேரி

[திரு. டி. கணபதி] [1975 பிப்ரவரி 25

கால்வாய் ஆகியவை, நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் கன்கரன்ஸ்க்கும் அரசு உத்தரவுக்குக் காத்திருக்கிறது—இந்நேரத்தில் வறட்சி நிவாரணமாக அவைகளைத் தொடங்க துரித உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், சாத்தான்குளத்தில் சடையனேரி கால்வாய் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வேலையையும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிரந்தர நீர்ப்பாசனப் பணியாக ஆலத்துறையாறுக்கு அடிக்கல் நாட்டியதோடு, பச்சையாறு, குடமாடி அணைகளுக்கு 1974–75—அறிக்கை ஆண்டில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பச்சையாறு அணையையும், குடமாடி அணையையும் இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கி ஏற்று நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணியாக, மக்கள் துயர் துடைக்க விரைவில் அவற்றின் வேலையைத் தொடங்க வேண்டுமென்று பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுத் துறையும், கூட்டுறவுத் துறையும் ஒருங்கே தக்க சமயத்தில் திறமை மிகு அமைச்சரிடமிருக்கிறது. அந்த முறையில் இது வரைக்கும் உணவு விநியோகம் செய்யும்போது கிராமங்கள்தோறும் கோதுமை மாத்திரம் விநியோகம் செய்யப்படுகிறது. எங்கள் மாவட்டத்திற்கு அண்டை மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, பக்கத்திலேயுள்ள எங்கள் பகுதியிலும் நியாய விலைக் கடைகளைத் திறந்து எல்லாவற்றையும் கிரெடிட் சொசைட்டி, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக விநியோகம் செய்யவேண்டும். நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், குக்கிராமங்களுக்கும் குடும்பக் கார்டுகளுக்கு சிறிதாவது அரிசி வழங்க வேண்டும்.

சீனியை நாம் அதிகமாக கிராமங்களில் வீணாக விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அந்தச் சீனியை அடுத்த மாநிலங்களுக்கு அனுப்பி, சீனிக்குப் பதிலாக அரிசியைக் கொண்டு வர மார்க்கம் உண்டா என்பதை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது கேரளாவுக்கு கன்னியாகுமரியிலிருந்து உணவுப் பொருள் போவது தடுக்கப்பட்டுள்ளது. கேரளாவிலிருந்து கன்னியாகுமரிக்குக் கோதுமை வந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து



1975 பிப்ரவரி 25] [திரு. டி. கணபதி]

இராமனுதபுரம், நாங்குநேரி பகுதிகளுக்கு சிறிது உணவு தானியம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கூடுதலான முறையில் செக் போஸ்ட்கள் வைத்து, கன்னியாகுமரியிலிருந்து கேரளாவுக்கு கடத்தல் தானியங்கள் வருவதைத் தடுத்துவிட்டால், நமது நெல்லை மாவட்டத்தில் . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, the hon. Member is saying that wheat is being smuggled from Kerala into Kanyakumari. The hon. Member should not use this House for spreading such alarming news which is not good both for Kerala and Kanyakumari district people.

திரு. டி. கணபதி: அவர்கள் சொல்வது என்னவென்றே புரியவில்லை. கடத்தல் எல்லாம் நல்லமுறையில் ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது கன்னியாகுமரியிலிருந்து எங்களுடைய நாங்குநேரிக்கு அவர்களுடைய தானியம் வந்து கொண்டிருக்கிறது. கூடுதலாக நல்லமுறையில் காவல் போட்டால் கேரளாவுக்குப் போவது நின்று, கன்னியாகுமரியும் சர்ப்ளஸ் ஜில்லாவாக, எங்கள் ஜில்லாவும் அதனால் பயன்பெறும். எனவே, அப்பகுதியில் வாழ்வோரும், வேலைக்குப் போகிறவர்களும், அறுவடை செய்கிறவர்களும் அம்பாசமுத்திரத்திலிருந்து உணவு தானியம் நாங்குனேரி, களக்காடு பகுதிக்கு எடுத்துச் செல்ல ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

திருமதி சத்தியவாணிமுத்து: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அறிக்கைமீது எனது கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றம் கூடிய முதல் நாளே இந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. அடுத்த நாள், தமிழகத்தில் முதல் சட்டப் பேரவைத் தலைவராகச் சிறந்தவகையில் பணியாற்றி, எதிர்க்கட்சிகள் அனைவரது பாராட்டைப் பெற்று, ஒர வஞ்சனையற்ற முறையில் சபையை நடத்தியவர், கண்ணியமிக்க முறையில் நடத்தியவர், இறுதிக் காலம் வரையில் அடக்கமும், ஒடுக்கமும் சிறந்து விளங்கியவர், எளிமையாக இருந்தவர் என்ற அளவில் நம் மதிப்பைப் பெற்ற, இந்தச் சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த மதிப்புமிக்க சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கு இங்கே சரியான முறையில் அனுதாபம் தெரிவிக்க

வில்லையென்றுதான் நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர் அமைச்சராக இல்லாத காரணத்தால், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் அவருக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற முறையை விட்டுவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் மறைந்துவிட்டால் எப்படி தீர்மானத்தைப் படித்துவிட்டு அனுதாபம் தெரிவிப்போமோ, அம் முறையில்—நமது முதலமைச்சர் உட்பட இங்கு சபாநாயகர் வருகிறார் என்றால் அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தி, சபாநாயகர் உட்கார்ந்த பிறகு முதலமைச்சர் உட்பட அனைவரும் உட்கார்ந்து அவருக்கு மரியாதை தருகிறோம். அந்த அளவு முதலமைச்சரைவிட அதிக அளவு மரியாதை பெற்றிருக்கிற சட்டப் பேரவைத் தலைவர் மறைந்துவிட்டார்—அவருக்கு உறுப்பினருக்குத் தருகிற அஞ்சலித் தீர்மானத்தை வாசித்து விட்டு போவதுதான் இந்த மன்றத்தின் மரபு என்றால், அந்த மரபை மாற்றக் கூடாதா? மாற்றியிருக்க முடியாதா? மாற்றவில்லை, ஏன் மாற்ற வில்லை என்பதைத்தான் நான் தாழ்த்தப்பட்ட மக்கள் குரலாக இங்கே கேட்கிறேன். அந்த மரபை மாற்றி, எல்லாக்கட்சித் தலைவர்களாலும் அமைச்சர்களுக்குத் தருகிற மரியாதையைப்போல், இங்கு எல்லாக் கட்சிகள் சார்பிலும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டிருக்மானால், தாழ்த்தப்பட்ட மக்களது மனம் குளிர்ந்திருக்கும். ஆனால், அப்படிப்பட்ட உயர்வு அந்த அவையில் அவருக்குத் தரவில்லையென் பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன், வேதனைப்படுகிறேன், அதற் காக இந்த அரசைக் கண்டிக்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையைப் பற்றிச் சொல்லப்போனால், மத்திய அரசுக்கு மனுபோடுகிற அறிக்கையாகயிருக்கிறதே தவிர, இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதற்கான விவரங்கள் இதிலே காணோம்.

துவக்கப் பக்கத்திலிருந்து ஒவ்வொரு பக்கத்தையும் பார்த்தால் புரியும். அடுத்த 10 திங்களுக்கு திங்கள்தோறும் ஒரு லட்சம் டன் உணவு தானியங்கள் ஒதுக்கித் தருமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளோம் என்று கூறியுள்ளார்கள். அதற்குப்பிறகு பார்த்தால், 20 லட்சம் டன் பற்றாக்குறையில் 10 லட்சம் டன் உணவு தானியத்தை மத்திய அரசு கொடுக்கவேண்டுமென்று கூறியுள்ளார்கள். இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுடன் நாமே முன்வந்து நமது உபரியைப் பகிர்ந்துகொண்டுள்ளோம். அதேபோல் இன்று நமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்குங்கால், உபரி மாநிலங்களான



ஆந்திரப் பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்கள், மத்திய அரசிடமிருந்து தேவையான இசைவு கிடைக்குமாயின் நமக்கு உதவி செய்வதாகக் கொள்கையளவில் விருப்பம் தெரிவித்து உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் குறிப்பிட்டுள்ளார்கள், இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் நல்ல பயிர் விளைச்சல் இருக்குமெனத் தோன்றுகிறது, உணவு தானியங்கள் உள் நாட்டில் கிடைப்பதற்குக் கூடுதலாக பெருமளவில் மத்திய அரசு இறக்குமதி செய்யவும் திட்டமிட்டுள்ளது, மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு உதவி செய்யும் என்று கூறியுள்ளார்கள். வறட்சிப் பணிகளுக்காக 30 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மின்சாரத் துறைக்கு 10 கோடி ரூபாய் மத்திய அரசு சிறப்பு உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். மதுவிலக்கைச் செயலுக்குக் கொண்டு வந்துள்ளதால் இழப்பில் மத்திய அரசு 50 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள்.

விலைவாசிகள் கடுவேகத்தில் உயர்ந்துவந்துள்ளன, இந்நிலையில் திட்டப் பணிகளுக்கான மத்திய அரசின் உதவி கடந்த இரண்டு ஆண்டுகளாக உயராமல் ஒரே அளவாக இருப்பது முரணாகும், திட்ட நிதி ஒதுக்கீட்டை உயர்த்தவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பெருநகர் வளர்ச்சி நிதியிலிருந்து கிடைக்கின்ற உதவி, கல்கத்தா, பம்பாய் போன்ற பிற பெருநகர்களுக்கு அளிக்கப்படுகின்றது. மத்திய அரசு நமக்கும் உதவிட முன்வரும் என்று நம்புகிறோம் என்று கூறியுள்ளார்கள்.

இப்படி திருப்பித் திருப்பி இந்த அறிக்கையைப் பார்த்தால் மத்திய அரசைக் கேட்கிறோம் மத்திய அரசைக் கேட்கிறோம் என்றுதான் பக்கத்திற்குப் பக்கம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிற அறிக்கையாகத்தான் இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் சிறப்பாக இல்லை.

வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றி இன்று காலையிலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையிலே அந்தப் பணிகளைப்பற்றி கூறியிருக்கிறார்களா என்று நானும் துருவித் துருவிப் பார்த்தேன், ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் இதிலே அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. இதிலே 7-வது பக்கத்திலே 9-வது பாராவுக்கும் 10-வது பாராவுக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் பெரிய வித்தியாசம் ஒரு

முரண்பாடு இருக்கிறது. வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 55 கோடி ரூபாயில் பெரும்பகுதி அதாவது 65 சதவீதம் தொகை ஊதியம் கொடுப்பதில் செலவிடப்படும், என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஏறத்தாழ 55 கோடி ரூபாயில் 35 கோடி ரூபாய் வரையில் ஊதியத்திற்காக ஒதுக்கப்படும். மீதம் உள்ள 20 கோடி ரூபாய்தான் துயர்தணிப்பு மூலதன செலவுப் பணிகளுக்கு என்று செலவழிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 35 கோடி ரூபாய், பெரும் பகுதி ஊதியத்திற்குத்தான் போகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது 9-வது பாராவில். ஆனால் 10-வது பாராவைப் பார்த்தால் வறட்சித் துயர் துடைப்பதற்காகச் செய்யும் செலவுகளில் பெரும்பகுதி, மூலதனச் செலவுகளாக அமையுமாறு பார்த்துக்கொள்வதே இத்திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் நமது குறிக்கோளாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. முன்னாலே உள்ள பாராவில் 55 கோடி ரூபாயில் 65 சதவிதம் ஊதியமாகக் கொடுக்கப்படுமென்று பின்னாலே உள்ள பாராவிலே பெரும்பகுதி மூலதனச் செலவுகளாக செய்யப்படும் என்றும் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களைப் பொன்றவர்கள் எதை நம்புவது?

9, 10 மாதங்களுக்கு வெறும் ஊதியத்தைக் கொடுத்துவிட்டால், வறட்சியால், பசியால், பட்டினியால் வாடுகின்றவர்களுக்கு, உணவுப் பொருட்களை வேட்டையாடிப் பெறக்கூடிய நிலையில் உள்ள மக்களுக்கு ஒரு நாளைக்கு 3 ரூபாய் வீதம் 20 நாட்களுக்கு 60 ரூபாய் என்ற அளவிற்குக் கொடுத்துவிட்டால் வறட்சியை நிரந்தரமாக எப்படிப் போக்கப் போகிறீர்கள்? இந்த ஆண்டாவது வறட்சிக்குக் காரணம் கடந்த நூறாண்டுக் காலத்தில் இல்லாத அளவிற்கு மழையின்மை என்று சொல்கிறீர்கள். 1969-இல் வறட்சி இருந்ததே, மத்திய அரசிடமிருந்து பணத்தைப் பெற்றோமே அப்போது ஒழுங்காகச் செய்திருந்தால் இன்றைக்கு எதிர்க்கட்சிகளும் பிரதமரும் நிதி சரியாக செலவழிக்கப்படவில்லை என்று கேட்கிற நிலைமை இல்லாமல் போய் இருக்கும். அத்தனை கோடி கொடுத்தார்களே, அதையெல்லாம் மக்களுக்கு ஒழுங்கான முறையிலே பயன்படக்கூடிய வகையிலே நிவாரணப் பணிகளைச் செய்திருந்தால்—கிணறுகள் வெட்டி, தூர் வாரி, ஆழப்படுத்தி, சப்ளை சானல்ஸை அதிகப்படுத்தியிருந்தால்—பணிகள் எல்லாம் சரியாக நடைபெற்றிருந்தால் பயங்கரமான இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு தமிழகத்தைத் தள்ளியிருக்கமாட்டார்கள் என்பதை ஆளுங்கட்சியினர் எண்ணிப் பார்க்கவேண்டும்.





1969 இல் கொடுக்கப்பட்ட பணமே சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று பிரதமர் சொன்னார்கள் என்றால், அதற்கு முதலமைச்சர் சொன்னார்கள், எங்களைக் கேட்டார்களா என்று கேட்டார்கள். அப்போது கேட்டார்களா என்று கேட்டார்கள். அப்போது கேட்கவில்லையென்றால் அப்போது ஒன்றாக இருந்தோம், அதனால் கேட்கவில்லை என்று அவர்களே பதிலையும் கூறிவிட்டார்கள். ஒன்றாக இருந்தோம் கேட்கவில்லை என்கிறார்களா? புகார்கள் கொடுத்து என்ன பயன்? நாங்கள் என்ன என்ன புகார்கள் கொடுத்தோம், ஏன் கேட்கவில்லை? ஆதாரப்பூர்வமான புகார்களை இந்த மன்றத்திலே கொடுத்தோம். எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையைப் பற்றிச் சொன்னோம். என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஒரு குறிப்பிட்ட அமைச்சரைப்பற்றிச் சொன்னோம். ஒரு கம்பெனிக்கும் அந்த அமைச்சருக்கும் இருந்த தொடர்பைச் சொன்னோம். சட்ட மன்றத்திலேயே சொன்னோம், என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அதே அமைச்சர் எல்லா பத்திரிகையாளர்களையும் வைத்துக்கொண்டு சொல்கிறார். நான் மட்டுந்தான் செய்தேனா, முதலமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் எல்லாம் கையெழுத்துப்போட்டுவிட்டு என் மீது பழி சொல்கிறார்கள், இப்போது என்னைச் சொல்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்மீது துவேஷத்தின் பேரில்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று கூறியிருக்கிறார்கள் . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அப்படி பழியெல்லாம் போடவில்லை என்று அவர் நேற்றே சொல்லிவிட்டார். அதையே மீண்டும் சொல்வது சரியல்ல.

<u>திருமதி சத்தியவாணிமுத்து</u>: இவ்வளவு ஆதாரங்களையும் சட்ட மன்றத்திலே எடுத்துச் சொல்லிவிட்ட பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? புகார்கள் பிரதமருக்குப் போகின்றன. அந்தப் புகார்களை பிரதமர் இங்கே அனுப்புகிறார். என்ன விசாரணை செய்தீர்கள், என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இதோ கள்வன் என்று கையும் மெய்யுமாகப் பிடித்து அவன்மீது வழக்குப் போடு என்று சொன்னால் குற்றவாளி சொல்லிவிட்டான் இல்லையென்று, விட்டுவிடுங்கள் என்று இந்த மன்றத்திலே காரியங்கள் நடக்குமானால் என்ன ஆகும்?

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 பிப்ரவரி 25

1969 ஆம் ஆண்டிலே வறட்சி ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டிலே அண்ணா தி.மு.க. தலைவர் புகார்களைக் கொடுத்தார். அப்போது முதலமைச்சர் என்ன சொன்னார்? பார்த்தேன், படித்தேன், ரசித்தேன் என்று தேன் தேன் என்று தேனாக பதிலைச் சொன்னார்கள். ஆகவே இப்போது சொன்னாலும் அவர்கள் என்ன சொல்வார்கள், பார்த்தேன், படித்தேன், கிழித்தேன் என்பார்கள், பார்த்தேன், படித்தேன், கிழித்தேன் என்று கிழித்துத்தான் போடுவார்கள். புகார்கள் கொடுத்தால் என்ன ஆகிறது என்பதை மக்களும் அறிவார்கள் நாடும் அறியும். இந்த மன்றத்திலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரே எஸ்டிமேட்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்து அந்த அறிக்கையிலே கொடுத்த தகவல் ஒன்று, அதை வைத்துக்கொண்டு எடுத்த நடவடிக்கை என்ன?

நான் குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றி வெளியே பேசினேன். என்னிடம் விளக்கத்தைக் கேட்டார்கள். நான் பிறகு விளக்கம் தந்தேன். எதிர்க்கட்சியினர் விளக்கம் சரியா என்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் சரி என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லியதற்குப் பிறகு கூட்டுப் பொறுப்பு என்று சொல்லி என்னை வெளியேற்றினார்கள். கூட்டுப்பொறுப்பு என்றால் எதிலே கூட்டுப் பொறுப்பு? கொள்ளையடிப்பதிலே கூட்டுப் பொறுப்பா? அரசாங்கக் காரியங்கள் செய்வதிலே கூட்டுப் பொறுப்பா? முன்னாள் அமைச்சர்கள் திரு. மதியழகன், திரு. வேழவேந்தன் ஆகியோர், இந்த அவையிலே அவர்கள் அமைச்சர்களாக இருந்தபோது 1 மணிக்கு வீடு விஷயத்தைப்பற்றி சர்ச்சை ஏற்பட்டது. அவர்கள் பத்திரத்தைக் கொண்டுவந்து காட்டினார்கள்; 1 லட்சத்திற்கு 50 ஆயிரம் தானே கடன் கொடுக்கிறார்கள் இரண்டு லட்சத்திற்கு இரண்டு லட்சம் எப்படிக் கொடுத்தார்கள் என்று கேட்டார்கள். அவ்வளவுதான். அன்றைக்கு மாலை 6 மணிக்கு வானொலியில் மூன்று அமைச்சர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று செய்தி சொல்கிறார்கள். இவ்வளவு தீவிரமாக முதலமைச்சர் நடவடிக்கை எடுத்தார். ஆனால் இந்த விஷயத்தில் இந்தச் சட்டமன்றத்திலேயே விளக்கங்கள் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறோம். ஆனால் அந்த அமைச்சர் கொஞ்சமும் ஆடாமல், கலங்காமல், நெகிழாமல் கைதாட்டி மரம்போல் அங்கே கையைக் காட்டினார்கள். அவர் படிப்பார் என்கிறார்கள். ஆனால் அதே அமைச்சர் காவிரி நதி நீர்ப் பங்கீட்டைப்பற்றிப் பேசுகிறபோது எவ்வளவு கம்பீரமான குரலில் எவ்வளவு ஜெஸ்ச்சரோடு திரும்பித் திரும்பி எவ்வளவு ஏற்றம் எவ்வளவு இறக்கம் எவ்வளவு கிண்டல் கேலி. அவர் பேசியபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.



1975 பிப்ரவரி 25] [திருமதி சத்தியவாணிமுத்து]

அந்த ஜெஸ்ச்சர் அவருக்கு அதற்கு முன்னாலே வரவில்லையே. அந்த பாவனை தன்னைக் குற்றவாளியில்லை என்று நிரூபிக்க வரவில்லையே. ஏன் அவர் சொல்லக்கூடாது? அந்தப் பத்திரிகையாளர்கள் மாநாடு எப்பொழுது நடந்தது, யார் யார் கலந்து கொண்டார்கள்? எந்தெந்தப் பத்திரிகையாளர்கள் என்னென்ன கேள்விகளைக் கேட்டார்கள்? இவர் அதற்கு என்ன பதில் சொன்னார்? மடியில் கனம் இல்லை என்றால் வாயில் வார்த்தைகள் அழுத்தமாக வந்திருக்கும். ஆனால் நாங்கள் நேற்று பார்த்தோம், அவர் வேதனையோடு தலையைக் குனிந்து கொண்டு கையைக் காட்டுகிறார்கள். இதிலேயிருந்து புரிவது என்ன? குற்றம் குற்றம்தான், அது நிரூபிக்கப்படத்தான் வேண்டும். பத்திரிகையாளர்கள் நிரூபிக்கத்தான் போகிறார்கள். முதலமைச்சர் மீதும் அவர் சொல்லியிருக்கிறார்.

* * * *

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * பற்றி விமர்சனம் செய்வது சரியல்ல.

திருமதி சத்தியவாணிமுத்து: இது * அறிக்கை மீதான விவாதம் தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * பற்றிய விமர்சனம் வேண்டாம்.

திருமதி சத்தியவாணிமுத்து: எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இன்னொன்றும் கேள்விப்பட்டேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பத்திரிகையாளர்களின் மாநாட்டில் பேசிக்கொண்டிருந்தபொழுது, இதற்குமுன் மத்திய அரசிலே பணியாற்றி, இப்பொழுது மாநில அரசில் ஒரு பெரும் பொறுப்பிலே உள்ள ஒருவர், முதலமைச்சருக்கு மிகவும் வேண்டியவர், அந்த மாநாட்டிற்குச் சென்றிருக்கிறார். அவரைப் பார்த்தபிறகும்கூட இவர் ஏதாவது வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வாரோ என்று பலரும் நினைத்தார்களாம். இருக்கட்டுமே, அவர் வந்து உட்கார்ந்தால் என்ன? போய்ச் சொல்லட்டும் என்று

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 பிப்ரவரி 25

சொல்லி, நானா, என்னை அல்லவா போட்டு உருட்டுகிறார்கள், நானா செய்தேன், அவர் அல்லவா செய்தார் என்றும் சொல்லியிருக்கிறாராம். இந்த அளவிற்கு நடந்திருக்கும்பொழுது ஏன் முதலமைச்சரவர்கள் அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது? ஏன் இந்த அமைச்சரை வெளியேற்றியிருக்கக் கூடாது? சாதாரண குற்றங்களைச் செய்தவர்களை வெளியேற்றியிருக்கும்பொழுது மிகப்பெரிய குற்றங்களைச் செய்தவரை ஏன் வெளியேற்றக்கூடாது? இதிலிருந்து நான் சந்தேகிக்கிறேன், முதலமைச்சருக்கும் இதிலே ஏதோ பங்கு இருக்கிறது. இதைச் சொல்வதற்காக நான் ஒன்றும் கவலைப்படவில்லை. ஏன் அவரை வெளியேற்றக் கூடாது? அந்தத் துணிச்சல் ஏன் இப்போது வரவில்லை. இதைத்தான் எதிர்க்கட்சிகளாகிய நாங்களும் கேட்கிறோம்.

வறட்சி வேலைகளிலே சரியான முறையில் பணி செய்யப்படவில்லை. கொடுத்த பணம் விரயமாக்கப்படுகிறது. சென்னையிலே அன்றைக்கு குடிதண்ணீருக்காக 12,000 குழாய்க் கிணறுகள் வெட்டப்படும் என்று அறிவித்தார்கள். அப்படி வெட்டப்பட்டபோது எல்லாக் குழாய்களையும் யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதைப் போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைக்குள்ள நிலைமை என்ன? இதைப்பற்றி கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்களா? ஒருக்கால் கவர்னர் மாளிகையில் தண்ணீர் நிறையக் கிடைக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

சென்னையிலே அரிசிக்காக பையைத் தூக்கிக்கொண்டு வேலைக்குக் கூடப் போகாமல் கடைகளின் முன்னால் "க்யூ"-வில் நின்று கொண்டிருக்கிறார்கள். இரவிலே தவலைகளையும், குடங்களையும் சைக்கிளிலே வைத்துக் கட்டிக்கொண்டு போய் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். 3 மணிக்குத் தண்ணீர் விடப்படுகிறது. வீட்டிலே உள்ள பெண்கள் உறங்காமல் விழித்திருந்து தண்ணீர் பிடிக்கிறார்கள். பிறகு பார்த்தால் 6 மணிக்கெல்லாம் சங்கு ஊதுகிறது. ஒருநாள் விட்டு ஒருநாள், இரண்டு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் சென்னைக்குக் கொடுப்பதாகத் தனி அதிகாரி விளம்பரம் செய்கிறார். ஆனால் 3 மணிக்குத்தான் தண்ணீர் வருகிறது, நிற்பதோ 5 மணிக்கெல்லாம். பிறகு மீதி நாள் பூராவும் தண்ணீர் வரவில்லை. கிட்டத்தட்ட 9,000 கிணறுகளை வெட்டுவதாகக் கூறுகிறார்கள். 1969 ஆம் ஆண்டிலே போடப்பட்ட 12,000 குழாய்க் கிணறுகள் என்னவாயின? அதைப் போல இந்த முறையும் செலவழித்து அதற்கு இத்தனை கோடி ரூபாய்



1975 பிப்ரவரி 25] [திருமதி சத்தியவாணிமுத்து]

ஆயிற்று என்று கணக்குக் காட்டி, சில பங்குதாரர்கள், சில காண்ட்ராக்ட்காரர்கள் பயன் பெறுகிறார்கள் என்றால் அதை எதிர்க்கட்சிக்காரர்கள் கண்டிக்காமல் என்ன செய்வார்கள்? இதையேதான் இன்றைக்கு பிரதமர் அவர்களும் கூறுகிறார்கள்.

அதிலே இன்னொரு உண்மையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் சொல்வது, கொடுக்கிற உணவு தான்யங்கள் ஏழைகளுக்குப் போய்ச் சேரட்டும். செய்கிற நிவாரணப் பணிகள் யாருக்குத் தேவையோ அங்கே போகட்டும் என்று சொல்கிறார்கள். நான் மிகவும் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவைகள் வந்து சேரவேண்டும். வறட்சி நிவாரணப் பணிகளானாலும் சரி, கிணறு வெட்டுவதாக இருந்தாலும் சரி பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்குப் போக வேண்டும். வேலை வாய்ப்பு அளிப்பது என்றால் அப்படிப்பட்ட மக்களுக்கு ஏராளமான வேலைகள் தரப்படவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக்கும், கோவைக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றிய நேரத்தில், உணவுச் செயலாளரை அழைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட வேண்டுமென்றால் எவ்வளவு தேவைப்படும் என்பதைப்பற்றி நீங்கள் ஆலோசனை செய்து எனக்குத் தகுந்த முறையிலே கணக்கெடுத்துக் கொடுங்கள் என்று சொன்னார்கள். ஏன்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரிசி கொடுக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தில் அவர்கள் இருந்தார்கள். அதைப்போல யாருக்குத் தேவையோ, யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவில் இந்தப் பணி இருக்க வேண்டுமென்பதைத்தான் அம்மையார் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

எனவே, காண்ட்ராக்ட் முறையில் வறட்சி நிவாரணப் பணி இருக்கக்கூடாது, காண்ட்ராக்ட் மூலமாகச் செய்யப்படும் நிலையில் அவர்களுக்காக ஒதுக்கப்படக் கூடிய பணத்திலேயோ, உணவிலேயோ பங்கீட்டுக் கொடுப்பதிலே எந்தத் தவறும் ஏற்படக்கூடாது என்று மிகமிக அழுத்தமாக அறிவிக்கிறார்கள். எனவே, எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டாலும் செயல்முறைகளில் தவறு இருந்தால் நிச்சயமாக அவைகளையெல்லாம் நீங்கள் கண்காணிக்க வேண்டும். அந்தக் குறைபாடுதான் இன்றைக்கு ஏராளமாக இருக்கிறது.

எதிர்க்கட்சிக்காரர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கவர்னர் பெருமான் அவர்கள் கேட்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்களை ஆளும்கட்சி எப்படி நடத்துகிறது? எவ்வளவு கேவலமாக நடத்துகிறது? ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் தவறு செய்கிறார்கள், அதைக் கேட்பார் இல்லை. ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் தவறு செய்யாமல் இருந்தால்கூட அவர்கள்மீது பொய் வழக்கு போடப்படுகிறது. ஆளுங்கட்சியிலே இருந்த நேரத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சின்னசாமி அவர்கள் தவறு செய்து விட்டார் என்று, கட்சியைவிட்டு வெளியேறி தனிக் கட்சி வைத்துவிட்டபிறகு, அவர்மீது கேவலமான வழக்கு போடப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அவர் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. என்ன சொல்லி தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது என்றால் குற்றம் நடந்ததாகக் கூறப்படுவது மார்ச் மாதத்தில், வழக்கு போடப்பட்டது செப்டம்பர் மாதத்தில். மே மாதத்தில் சத்தியவாணிமுத்து பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஜூன் 2 ஆம் தேதி புதிய கட்சி துவக்கம். செப்டம்பர் 14 ஆம் தேதி சின்னசாமி மீது வழக்கு. இதை எங்கே போய்தான் சொல்வது? இதுதான் கண்ணியமா? அண்ணாவின் படத்தை இங்கே வைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று வைத்திருக்கிறீர்கள். அந்த கண்ணியம் என்ற இடத்தில் ஒரு கறுப்புக் காகிதத்தை ஒட்டிவிட்டு இதைச் செய்யுங்கள். அண்ணாவின் பெயரை யாரோ எதற்கோ பயன் படுத்துவதாக முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அண்ணா அவர்கள் சொன்ன கண்ணியத்தைவிட்டு, உங்கள் கட்சியிலே இருந்த பொழுது தவறு செய்தாரோ, செய்யவில்லையோ, அதற்குக்கூட நான் வரவில்லை, உங்கள் கட்சியிலே இருந்து வெளியேறிய பிறகு பயங்கர மான குற்றச்சாட்டுகளைச் சொன்னால் எதிர்க்கட்சிகள் எப்படி ஒத்துழைப்பு கொடுக்கும்? எந்த எதிர்க்கட்சிக்காவது மரியாதை கொடுக்கிறார்களா?

கஞ்சித் தொட்டியை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திறக்கிறார்கள். எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபொழுது நாம் இதுபோல் நிவாரணப் பணிகளில் ஈடுபட வில்லையா? மழை வந்த நேரத்தில் நந்தனம் தோட்டத்தில் எம்.ஜி.ஆர். உணவுப் பொட்டலங்கள் வாங்கிக் கொடுக்கவில்லையா? தீயினால் பாதிக்கப்பட்ட நேரத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் 10,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று நமக்குக் கொண்டுவந்து தரவில்லையா? அல்லது பணம் வேண்டுமென்றால், ரிக்ஷா தொழிலாளர்கள் பாதிக்



கப்படுகிறார்கள் என்றவுடன் மழை கோட்டு வாங்கிக் கொடுத்தாரே அப்பொழுது சொல்லியிருக்கலாமே, "ஐயா, நீங்கள் கொடுப்பதை அரசாங்கத்தின் கையில் பணமாகக் கொடுத்துவிடுங்கள்" என்று சொல்லி பணத்தை வாங்கி அரசாங்கத்தின் கையில் கொடுத்திருந்தால் நீங்கள் யோக்கியர்கள். அப்பொழுது நாங்களே செலவழிக்கிறோம் என்று செலவழித்தீர்கள். நானும் சேர்ந்துதான் செய்தேன். நான் 10,000 ரூபாய் வாங்கி என்னுடைய தொகுதியிலே, புளியந்தோப்பிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தேன். இப்படி அப்பொழுது நாமே வாங்கி மக்களின் நன் மதிப்பைப் பெறுவதற்காகச் செய்தோம். இப்பொழுது சொல்கின்ற இந்த ஞானோதயமோ அல்லது பெருந்தன்மையோ அப்பொழுது காணோமே? இந்த நல்ல காரியத்தை எப்படிச் செய்ய வேண்டு மென்ற உணர்வு அப்பொழுது இல்லையே? இப்பொழுதுதான், செய்வது எதுவாக இருந்தாலும் அரசாங்கத்தினிடம் கொடுங்கள் என்று சொல்கிறீர்கள். கஞ்சித் தொட்டி திறந்தால் நாங்களும் போட்டிக்கு கஞ்சித் தொட்டி திறப்போம் என்று கூறி பிறகு இரண்டு கஞ்சித் தொட்டிகளையும் மூடிவிட்டார்கள். பாவம், அதனால் ஏழைகளுக்காவது கஞ்சி கிடைத்துக் கொண்டிருந்தது, அதையும் தடுத்து ஏன் இவ்வாறு செய்ய வேண்டும். இதனால் உங்கள்மீது மக்களுக்கு ஏதாவது மதிப்பு வருகிறதா? இருக்கிற கொஞ்ச நஞ்ச மதிப்பும் இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நாளுக்குநாள் அந்தப் பக்கத்திலே இருக்கின்ற ஒவ்வொருவரும் இந்தப் பக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி நன்மதிப்பை இழப்பதற்குக் காரணம் என்ன? எத்தனை திட்டங்கள் போட்டாலும் அந்தத் திட்டங்கள் வெறும் ஏட்டுத்திட்டங்களாக இருக்கின்றன. ஒழுங்காக மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களாக இல்லை என்ற குறைபாட்டை சுட்டிக் காட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு கோடிகோடியாகப் பணத்தை ஒதுக்குகிறீர்கள். நீங்கள் போடும் திட்டங்கள் எப்படிப்பட்ட திட்டங்களாக இருக்க வேண்டும்? சப்ளை சேனல்ஸ் வெட்டுவது அல்ல. சிலதினங்களுக்கு முன்னால் முதலமைச்சர் ஒரு திட்டத்தைக் கூறினார்கள். உப்பு கரிக்கும் கடல்நீரைக் குடிதண்ணீர் ஆக்குவோம் என்றும், கழிவு நீரைப் பாசனத்திற்கு விடும் நீராக்குவோம் என்றும் சொன்னார்கள். இவ்வளவு கோடி ரூபாயைச் செலவழிக்கும்பொழுது அந்த முறை யில் செலவழித்து, கழிவு நீரைப் பாசனத்திற்குரிய நீராக்கவும், கடல் நீரைக் குடிதண்ணீராகவும் ஆக்கும் அந்தத் திட்டங்களைச் செய்யுங்களேன்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 பிப்ரவரி 25

நாங்கள் சொன்ன திட்டமா? எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகிற திட்டமா? மத்திய அரசுக்கு மனுப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைக்குக் குடிதண்ணீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால் சென்னைக்கு வீராணம் தண்ணீர் வருகிறது வருகிறது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். அறிக்கையில் பார்த்தால் 1976-ம் ஆண்டிற்குப் பிறகுதான் வரப் போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவரையில் எந்தத் தண்ணீரைக் குடிப்பது? கோடி கோடியாகத் திட்டங்களைப் போடுகிறீர்கள். அப்படிப் போடப்படுகிற திட்டங்களைப் பற்றிச் சொல்லும்போது "அசாதாரண நிலையில் அசாதாரணமாகப் போடப்பட்ட திட்டங்கள்" என்று சொல்லுகிறீர்கள். இந்த "அசாதாரண" என்ற வார்த்தையையே முன்னால் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த மதியழகன்தான் சொன்னதாக நினைவு. "அசாதாரண, அசாதாரண"—இன்றைக்கு எல்லோர் வாயிலும் இந்த "அசாதாரண" என்ற வார்த்தை வந்து கொண்டிருக்கிறது.

அசாதாரண நிலைக்கு அசாதாரணத் திட்டம் என்று வரும்போது கடல் நீரைக் குடிநீர் ஆக்குங்கள், கழிவு நீரைப் பாசன நீராக்குங்கள். அதற்காக 55 கோடி ரூபாய் அல்ல 100 கோடி ரூபாய் கேளுங்கள். நாங்களும் உங்களோடு இருந்து ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். அதை விட்டு விட்டு சிறு சிறு திட்டங்களாக துயர் தணிப்பு செய்கிறோம் என்று கூறி கால்வாயை அகலப்படுத்துகிறோம், கிணற்றை ஆழப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். கிணறுகள் ஒழுங்காக வெட்டப்படுவதே இல்லை.

தமிழகத்தில் இருக்கும் பல பகுதிகளிலிருந்து சொல்லுகிறார்கள். பத்திரிகைகண் புரட்டிப் பார்த்தால் தெரியும். ஏற்கெனவே கட்டியிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்கு வெள்ளையடித்துவிட்டு புதுப்பித்ததாக கூறி நிவாரணப் பணி என்று கூறுகிறார்கள். இப்படிப் பணம் செலவழிக்கப்படுகிறது. உண்மையிலேயே நிவாரண வேலைகள் என்றால் சரியான முறையில் அந்தப் பணிகள் நடைபெறவேண்டும். கட்சியில் உள்ள ஒருசிலருக்குப் பணம் இல்லை என்பதற்கான நிவாரணப் பணியாக ஆகிவிடக்கூடாது. அப்படி ஏற்பட்டு விட்டால் அது நிச்சயமாகக் கண்டிக்கத்தக்கது. அப்படி கட்சியில் இருப்பவர்களுக்குக் காண்டிராக்ட் கொடுக்கக்கூடாது. கட்சியில் இருப்பவர்களுக்குக் காண்டிராக்ட் இருக்கிறது என்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் சுட்டிக்காட்டும்போது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1975 பிப்ரவரி 25] [திருமதி சத்தியவாணிமுத்து]

இன்று மக்கள் உங்கள் மீது மதிப்பு வைத்திருக்கவில்லை. அவசரமான காரியங்கள், தேவையான காரியங்கள், இயற்கையின் உற்பாதத்தால் ஏற்பட்ட துயரத்தைப் போக்குவதற்கான காரியங்களைச் செய்ய மத்திய அரசு நிதி கொடுக்கிறது. எவ்வளவோ முறையில் பணத்தைக் கொடுத்தும் நீங்கள் ஒழுங்கான முறையில் பணத்தைச் செலவு செய்யவில்லை. ஆகவே, மத்திய அரசு இந்த முறை நாங்கள் பணம் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினாலும் அதிலே நியாயம் இருக்கிறது.

ஏதோ புகார்கள் சொன்னார்கள் என்று சொன்னால் எங்களைக் கேட்டார்களா என்று பதில் சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்களாகிய நீங்கள்தான் சொல்லுகிறீர்கள், ஆனால் நாங்கள் மிகப் பொறும்பான்மையாக இருக்கிறோம், எதையும் செய்வோம் என்று செய்துகொண்டு போனால் மத்திய மாநில உறவு நீங்கள் கூறுவது போல், நீங்கள் கேட்பது போல் இருக்க முடியாது. அந்த உறவு இனிப்பான உறவாக இருக்க முடியாது. கசப்பான உறவாகத்தான் ஆகும். எதிர்க்கட்சிக்காரர்கள் அதை மேலும் கசப்பானதாகத்தான் ஆக்குவார்கள். மாநில சுயாட்சி என்றெல்லாம் சொன்னாலும் கூட, மத்திய அரசு கொடுக்கிற பணத்தை நீங்கள் எவ்வளவோ தவறான வழியில் எல்லாம் செலவழிக்கிறீர்கள் என்பதை எதிர்க்கட்சிகள் எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். அந்த வகையில் இந்த அமைச்சரவை மீது எவ்வளவோ குற்றங்களை எடுத்துச் சொல்ல முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மத்திய அரசு பணம் கொடுக்கிறது. இந்த அரசு அதைச் சரியான வகையில் செயல்படுத்தவில்லை. இந்த அரசு சரியான வகையில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. அதை நான் சட்ட ரீதியாக கான்ஸ்டிட்யூஷன் முறைப்படி 339 (2)ன் பிரிவின்படி அப்படி அந்தத் தொகை செலவழிக்கப்படாவிட்டால் இந்த அரசைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னேன். ஃபைல் ஃபைலாக நிரூபித்தேன், எந்தவித நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை. ஆனாலும் மத்திய அரசுக்கு இந்த உண்மை தெரியாமலா போய்விட்டது. நான் அதைப் பற்றி வெட்ட வெளியிலா பேசினேன்? சட்டமன்றத்தில் ஃபைலைக் குறிப்பிட்டுப் பேசினேன். மத்திய அரசுக்கும் இதைப் பற்றி எழுதி அனுப்பியிருக்கிறேன். பிரதமர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். இலாகா மூலமாக விசாரணை செய்வதாகக் கூறினார்கள். உடனே

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 பிப்ரவரி 25

உங்கள் கழுத்தை வெட்டவில்லை என்பதற்காக "கொடுத்த புகார் என்ன ஆனது? புகார் புகார், பூம்புகார், பூவால் செய்யப் பட்ட புகார்" என்று வெளியே நீங்கள் கதை பேசிக் கொண்டிருப் பீர்களானால் உண்மை மக்களுக்குத் தெரியாமலா போய்விடப் போகிறது? உங்கள் மீது கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை மக்கள் கணக்கெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் "டேல் ஆப் டூ சிட்டிஸ்" என்ற காவியத்தில் நல்ல பாத்திரம் ஒன்று நினைவுக்கு வருகிறது. விடுதியை நடத்திக் கொண்டிருக்கும் பெண்கள் எதிரிகள் யார், யார், என்னென்ன செய்தார்கள் என்றெல்லாம் ஷால், ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருக் கும்போதே ஒவ்வொரு பெயராகப் பொறித்துக் கொண்டே போனார்கள். அதைப் போல் இன்றைக்கு நாங்கள் சொல்லும் குற்றங்களை எல்லாம் மக்கள் அந்தப் பெண்களைப்போல் குறித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் ஒருநாள் பதில் சொல்லித் தான் ஆகவேண்டும். ஆகவே, இந்த உரை ஒருதலைப்பட்சமான உரையாக இருக்கிறது என்று கூறி இந்த உரையை நான் முழுக்க முழுக்க கண்டித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அம்மையார் அவர்கள் பேசுகிற நேரத்தில் * அவர்கள் குறித்து கூறப்பட்ட வாசகங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

திருமதி சத்தியவாணிமுத்து : எந்த வாசகம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *

என்று வந்தது. அது வேண்டாம். That is an executive action or the advice of Chief Minister. [திரு. செ. அரங்கநாயகம்]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எதிர்க்கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியைப் பற்றியும் அதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளைப் பற்றியும் கூறப் பட்டிருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 பிப்ரவரி 25] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாயிகளுக்குப் பல சலுகைகள் வழங்கியிருப்பதாகச் சொல்லு கிறார்கள். இன்றைக்கு விவசாயிகள் இந்த நாட்டில் எந்த முறையில் இருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

"உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று வள்ளுவர் கூறினார். ஆனால் நாட்டிலுள்ள நிலை எப்படி இருக் கிறது என்று பார்த்தால்—

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் அதிகாரியின்பின்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்ற நிலைதான் இருக்கிறது.

இன்றைக்கு நாட்டில் 60, 70 சதவிகிதம் பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். இவர்கள் இன்று எந்த நிலையில் இருக்கிறார்கள்? விதை வேண்டுமென்றால் அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும். உரம் வேண்டுமென்றால் அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும். மருந்து வேண்டுமென்றால் அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும். பயிருக்குத் தண்ணீர் வேண்டுமென்றால் அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும். பயிர் செய்த நெல்லை அறுவடை செய்ய வேண்டுமென்றால் அரசாங்கத் தின் அனுமதி பெற வேண்டும். அறுவடை செய்த நெல்லை அளக்க வேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும். அந்த நெல்லை வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும். செங்கற்பட்டிலோ மற்ற இடத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் அந்த நெல்லை சென்னையிலே இருக்கக் கூடிய தன்னுடைய மகனுக்கு அனுப்ப வேண்டுமென்றால் அரசாங்கத் தினுடைய அனுமதி பெறவேண்டும். ஆகவே, இப்படி கீழ் மட்டத் திலிருந்து கடைசி வரை இந்த அரசு விவசாயிகளைப் பலவகைகளில் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

வறட்சிப் பணித் திட்டத்தில் எங்கள் பகுதியில் நீண்ட நெடு நாட்களாகக் கூறப்பட்டு வருகிற முக்கூடல்—வீரவநல்லூர் ஆற்றுப் பாலத் திட்டத்தைச் சேர்க்க வேண்டும். என்னுடைய தொகுதியில் 35 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத் திட்டத்தை இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்வதன் மூலம்

[திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1975 பிப்ரவரி 25

அந்தப் பகுதி மக்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்க முடியும். அதே நேரத்தில் ஒரு நல்ல திட்டத்தையும் செய்து முடித்ததாக ஆகும்.

எங்கள் பகுதியில் தற்சமயம் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. அரை ஏக்கருக்குக் குறைவானவர்களுக்கு லெவியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு ஏக்கர் நிலம் ஒருவருக்கு இருக்குமானால் 6 மூட்டை நெல் லெவி கொடுக்க வேண்டும். $1\frac{1}{2}$ ஏக்கர் இருக்குமானால் 9 மூட்டை நெல் கொடுக்க வேண்டும்.

விவசாய வருமான வரியை எடுத்துக் கொண்டால் 12,500 ரூபாய் வரை விதிவிலக்கு என்று சொல்லுகிறார்கள். 15,000 ரூபாய் வருமானம் வந்தால் 12,500 ரூபாயைக் கழித்துவிட்டு 2,500 ரூபாய்க்குத் தான் வரி விதிக்கப்படுகிறது. அதே போல் வருமான வரியில் 6,000 ரூபாய் வரை விதி விலக்கு அளிக்கப்படுகிறது. அதற்கு மேல் வருமானம் வந்தால் அந்தத் தொகைக்குத்தான் வருமான வரி விதிக்கப்படுகிறது. அதேபோல் ஒருவருக்கு $1\frac{1}{2}$ எக்கர் இருந்தால் லெவி வாங்கும்போது அரை ஏக்கருக்கு விதி விலக்கு கொடுத்துவிட வேண்டுமே தவிர $1\frac{1}{2}$ ஏக்கருக்கும் சேர்த்து வாங்கக் கூடாது. அது சரியல்ல. ஒரு மூட்டை நெல்லுக்கு 58 கிலோ இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஆனால் இன்றையதினம் லெவிக்குக் கொண்டு போனால் மூட்டையில் 58 கிலோவிற்கு மூன்று கிலோ குறைந்திருந்தால் கிலோவுக்கு இரண்டு ரூபாய் வீதம் பிடித்தம் செய்துவிடுகிறார்கள். ஆனால் அரசாங்கம் லெவி கொடுக்கக்கூடியது 83 பைசா லெவி ரேட்டாகக் கொடுக்கிறார்கள். குறைக்கும்போது கிலோவிற்கு இரண்டு ரூபாய் குறைக்கிறார்கள். இது எந்த வழியில் நியாயம்? ஆகவே இதை விசாரித்து அதிக வித்தியாசத்தை திரும்பக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லெவி முறையில் பல தவறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்றில், தீர்வை அடிப்படையில் லெவி முறை போட்டிருக்க வேண்டும் அல்லது, மண் வள அடிப்படையில் போட்டிருக்க வேண்டும். என் பகுதியில் இருபோகமும் உள்ளது, ஒரு போகமும் உள்ளது, இறவைப்பாசனமும் உள்ளது. ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாக லெவி முறை போட்டிருப்பது வருந்தத்தக்கது. ஒரு போகத்தில் விளையக் கூடியதைத்தான் விவசாயி ஆண்டு பூராவிற்கும்



1975 பிப்ரவரி 25] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

சாப்பாடுக்கு வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டு போகம் விளைவதில் ஆண்டுக்கு இரண்டு முறை நெல் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, இரண்டு போக நன்செய் உள்ளவர்களுக்கு ஒரு ஏக்கர், ஒரு போக நன்செய் உள்ளவர்களுக்கு இரண்டு ஏக்கர், இறைவைப் பாசனத்திற்கு $2\frac{1}{2}$ ஏக்கர் என்றளவிற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். மேல் மழை இல்லாததால் மேனி குறைந்திருக்கிறது. இரண்டு போக நன்செய் உள்ளவர்களுக்கு முக்காலிலிருந்து ஒரு மேனி இருக்கிறது. ஒரு போக நன்செய்க்கு அரையிலிருந்து முக்கால் வரைதான் மேனி இருக்கிறது. இறைவைப் பாசனம் உள்ளவர்களுக்கு, காலில் இருந்து அரை அல்லது முக்கால் வரைதான் மேனி போய்க்கொண்டிருக்கிறது. இதைக் கணக்கிட்டு ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

பின்னர், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கணக்கர்கள், தலையாரிகள் இவர்களது தொந்தரவு சகிக்கமுடியாத அளவிற்கு இருக்கிறது. ஒருவன் அறுவடைக்குச் செல்லவேண்டுமென்றால் கையில் நூறு ரூபாய் எடுத்துக்கொண்டு போய் வழியில் இருப்பவர்களுக்கெல்லாம் ஐந்து பத்து என்று கொடுத்து விட்டு வரவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. லெவி அளந்துவிட்டு வரவேண்டுமென்றால் கிட்டத்தட்ட இரவு 12 அல்லது 1 மணி ஆகிவிடுகிறது. எனவே காலாகாலத்தில் கண்டிப்பாக லெவி அளிக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க ஜீ.ஓ.வில் தாலுகா அளவில்தான் செக் போஸ்ட்ஸ் இருக்க வேண்டும் என்றிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் ஊருக்கு ஊர் வலது புறமும் இடது புறமும் செக் போஸ்ட்ஸ் போட்டு லெவி அளந்து விட்டு வருபவர்களிடம் கூட இடைஞ்சல் செய்து செக்போஸ்டில் நெல் அளக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அல்லது பத்து ரூபாய் கொடுத்துவிட்டு வரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது லெவி அளந்து விட்டுவருபவர்களுக்குக் கூட. எனவே லெவி அளந்து அதற்கான ரசீதைக் காட்டிவிட்டால் தாராளமாகக் கொண்டு போகலாம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதோடு தாலுகா அளவில் நெல் நடமாட்டம் இருப்பதற்கான உத்தரவையும் பிறப்பிக்கவேண்டும். அரை ஏக்கருக்குக் குறைந்தவர்களிடம் கூட லெவி அளக்கவேண்டுமென்று கெடுபிடி செய்யப்படுகிறது. அதையெல்லாம் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

எங்கள் ஊரை எடுத்துக்கொண்டால் இரண்டாயிரம் குடும்பங்கள் உள்ள ஊர் முக்கூடல். அதில் 200 குடும்பங்களுக்குத்தான் விவசாயம் செய்வதற்கான நிலம் இருக்கும். ஆனால் அதை நெல் விளையக் கூடிய இடம் என்று சொல்லி அங்கு எந்தவிதமான ரேஷனும் போடாமல் இருப்பது வருந்தத்தக்கது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கூட கொஞ்சமாவது ஏதோ ஒரு அளவிற்கு ரேஷன் அவர்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் நீங்கள் கண்டிப்பாக ரேஷன் போடு வதே இல்லை. வேறு யாரையும் அங்கு விற்பனை செய்ய அனுமதிப் பதும் இல்லை. அங்குள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே அங்கிருந்து லெவியாக வசூலிப்பதில் கால் பங்காவது ரேஷன் மூலம் அங்குள்ள மக்களுக்குப் போடவேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் கோவில்பட்டி சாத்தூரர், சிவகாசி போன்ற இடங்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் தீப்பெட்டித் தொழிலாகும். பொட்டாஷியம் கிளோரைட் கிடைக்காததினால் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு பொட்டாஷியம் கிளோரைட் கிடைத்து அந்தத் தொழில் ஓங்கி நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சாதாரண நாட்களிலே கோவில்பட்டி ஒரு வறண்ட பகுதியாகும். இப்போது வறட்சி காரணமாக அங்கு விவசாயம் பூராவும் தீர்ந்து விட்டது. எனவே அந்தப் பகுதி மக்களுக்காக அங்குள்ள தீப்பெட் டித் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவில் பொட்டாஷியம் க்ளோ ரைட் கொடுத்து உதவ வேண்டும்.

கடைசியாக, குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒரு வார்த்தை. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நான் தனிப்பட்ட முறையில் முழுக்க முழுக்க ஆதரிப்பவன். இரண்டு மூன்று குழந்தைகள் பெற்றவர்கள் கண்டிப்பாக குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளவேண்டும் என்று அரசு சட்டம் இயற்றினால்கூட அதை நான் மனப்பூர்வமாக வரவேற் கக் கூடியவன். ஆனால் எங்கள் பகுதியில் என்ன நடக்கிறது என்று கேட்டால் கல்யாணம் ஆகாதவர்கள், 55, 60 வயதைத் தாண்டியவர் கள் போன்றவர்களுக்கெல்லாம் அங்கு அறுவை சிகிச்சை நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. கார் வைத்திருப்பவர்களுக்குத் தெரியும். டயர் தேய்ந்துபோய்விட்டால் இரண்டு மூன்று தடவை ரிட்ரேட் செய்யலாம். அதேபோல் வறுமை காரணமாக சிலபேர்கள் இரண்டு மூன்று தடவைகள் கூட ஆப்பரேஷன் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி ஆப்பரேஷன் செய்து கொண்டவர்களுக்குக் கூட ஒழுங்காக





பணம் வழங்கப்படுகிறதா என்றால், இல்லை. 15 அல்லது 20 ரூபாயைக் கொடுத்துவிட்டு போகச் சொல்லிவிடுகிறார்கள். இப்படிப் பட்ட குறைகளை நீக்கவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக் கிறேன்.

திரு. அ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர் களது உரையில் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற பெரிய வறட்சி காரணமாக அதற்காக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றி தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசு 55 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்கள் தீட்டி மார்ச் மாதம் முடிவுற பத்து கோடி ரூபாய் செலவு செய்வதற்கான அனுமதி வழங்கி அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றி காலையில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றி காலையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறும்போது ஏறக்குறைய 17,000 கிராமங்கள் உள்ளதில் 10,000 கிராமங்களை வறட்சிப் பகுதி கள் என்று அறிவிக்கக்கூடிய அளவில் சூழ்நிலை இருக்கிறது என்று கூறினார்கள். அந்தச் சூழ்நிலையில் இன்றையதினம் தமிழக அரசு அதற் காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலமாக அந்தப் பகுதிகளை முன்னேற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளில் குளங்கள் வெட்டி குடிநீர் வழங்க வும், குளங்கள் வெட்டுவது போன்ற காரியங்களைச் செய்வதால் அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிப்பதைக் கண்டு நம் அரசைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல் நம் உணவு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பற்றுக்குறையை ஈடுசெய்கிற அளவிற்கு மத்திய அரசு அரிசி வழங்க வேண்டும், கோதுமை வழங்கவேண்டும் என்று மத்திய அரசிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். சற்றேறக்குறைய மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் அளவிற்கு தரவேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. நமது உணவு அமைச்சர் அவர்கள் வெளி நாட்டிலிருந்து உணவு இறக்குமதி செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு அதற்கான ஒப்புதலை அளிக்கவில்லை. ஆனால் 50,000 டன் கோதுமை தர இணங்கியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கும் நேரத்தில் தமிழக மக்கள் அதிகமாக அரிசி உணவுதான் சாப்பிட்டு பழக்கப்

[திரு. அ. இராசமாணிக்கம்] [1975 பிப்ரவரி 25

பட்டவர்களாதலால் அரிசியைச் சிறிது அதிகம் ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் உங்கள்மூலம் மத்திய அரசை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காலையில் இங்கு பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் தண்ணீர் இல்லாத குளங்களைத்தோண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டினைக் கூறினார்கள். இந்த ஆண்டு தண்ணீர் இல்லாத குளங்களை அதிகமாகத் தோண்டி ஆழப்படுத்திவிட்டால் வருகிற ஆண்டுகளில் மழை பெய்யுமானால் அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படும். அதோடு கூட அந்தப் பகுதி மக்களுக்கு இதனால் வேலைவாய்ப்புக் கிடைக்க வழி ஏற்படுகிறது என்பதோடு அவர்கள் வாங்கும் சக்தியும் அதிகமாகிறது என்ற காரணத்தால் அந்தத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என் தொகுதியில் பத்து கிராமங்கள் வானத்தை நம்பியிருக்கின்ற கிராமங்கள். வானம் பொய்த்தால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்த அளவிற்கும் பலன் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. வடக்கு பொய்கைநலலூர், தெற்கு பொய்கைநல்லூர், வேளாங்கண்ணி, பிரதாம ராமபுரம், திருபூண்டி கிழக்கு, புது பல்லி, விழுந்தமாவடி, வேட்டைக்காரனிருப்பு, காரப்பிடாகை தெற்கு, கருவேலங்கடை, அதேபோல் கடலோரப்பகுதி மக்களும் இன்று மழை இல்லாததால் அவதிப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வறட்சிப் பகுதி மக்களுக்கு நல்ல பலன் அளிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

வரிகளை ஒத்திவைத்திருக்கிறது, கடன்களை ஒத்திவைத்திருக்கிறது. அரசு செய்கிற நல்ல திட்டங்களைக் கீழே இருக்கிற அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஆகவே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது அந்தப் பகுதியை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவித்து அந்த மக்களுக்கு துயர்தணிப்பு வேலைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் இறவைப் பாசனத்தால் நீரில் உப்பு வந்துவிட்டது. அவற்றைப் போக்க அரசு உதவவேண்டுமென்று கேட்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.



1975 பிப்ரவரி 25]

[பிற்பகல் 1-00]

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக கவர்னர் பெருமான் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று நாட்டில் வரலாறு காணாத, ஒரு அதிர்ச்சிமிக்க, வேதனை தரக் கூடிய வறட்சி நிலை நிலவுவதால் இங்கே வாழும் 4½ கோடி மக்களில் ஏறத்தாழ 3½ கோடி மக்கள் பாதிக்கப்படும் அளவுக்கு குடிநீர்ப் பஞ்சம், உணவுப் பஞ்சம், உழைக்கத் தயாராக இருந்தாலும், உழைத்ததற்கு ஊதியம் கிடைக்காத நிலை, உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்க அரசு ஓரளவு முன்வந்தாலும்கூட பெரும்பாலான மக்கள் உழைக்கத் தயாராக இருக்க உண்ண உணவு இல்லை என்பதால் வாடிக் கொண்டிருக்கிற நிலையில் இந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்ற நிலையில் இந்த மன்றத்தில் நாம் இதனை விவாதித்துக்கொண்டு இருக்கிறோம்.

கவர்னர் உரையில் கண்டுள்ளபடி வருகிற 9 மாதங்களில் 61 லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, அதன் மூலம் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அழுகிற குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுக்கவேண்டும். எனக்கே சோறு இல்லை, நான் எங்கே குழந்தைக்குப் பால் கொடுப்பது என்று தாய் சொன்னால் அது வாதத்திற்கு வேண்டுமானால் சரியாக இருக்குமே ஒழிய நடைமுறைக்கு ஒத்து வராது. ஆகவே, அழுகிற குழந்தைக்குப் பால் கொடுக்கத் தாய் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில், பசியோடு இருக்கிற மக்களுக்கு உணவு வழங்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, அவர்கள் நினைத்த தொழிலைச் செய்வதற்கு உரிமை ஆகிய வற்றையெல்லாம் கான்ஸ்டிடியுஷன் ரீதியாக நாம் ஒர்கவுட் செய்து கொடுத்து இருந்தாலும் அதை நிறைவேற்ற முடியவில்லை. உழைப்பதற்குத் தயாராக இருக்கும் மக்களுக்கு உணவு இல்லை. இந்த நிலைமை சுதந்திரம் கிடைத்த 26 ஆண்டுகளுக்குப் பின்னாலும் இருக்குமானால் அது மிகவும் வேதனைப்படக்கூடிய ஒன்றாகும் என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, குறைந்தபட்சம் 1

*[திரு. கே. கந்தசாமி] [1975 பிப்ரவரி 25*

கோடி மக்களுக்காவது வேலை கொடுக்க அரசு முன் வரவேண்டும். 60 லட்சம் மக்களுக்கு வேலை கொடுப்பது என்பது குறைந்தபட்ச எண்ணிக்கை. 1 கோடி பேருக்குக் கொடுத்தால் தான் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொஞ்சமாவது போய்ச் சேரும்.

உணவைப் பற்றிச் சொல்கிறபோது, 10 லட்சம் டன் உணவுப் பொருள்கள் நமக்குத் தேவை, அடுத்த 10 திங்களுக்குத் திங்கள் தோறும் ஒரு லட்சம் டன் உணவு தானியங்கள் ஒதுக்கித் தருமாறு மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம். இந்த எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்திக் கேட்டு இருந்தால் நல்லது என்பது என்னுடைய கருத்து. அரசுக்கு இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கு ஒரு மாதத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்ட கணக்கு. அதிகாரிகள் அந்த நேரத்தில் எந்தெந்த நிலங்களில் பயிர் வரும் என்று எதிர்பார்த்து இருந்தார்களோ அவைகள் எல்லாம் இன்று காய்ந்து கருகிப்போய் விட்டன. புஞ்சை தானியங்கள் காய்ந்துபோய் விட்டன. தஞ்சை பிரதேசத்தில் நஞ்சை நிலங்கள் எல்லாம் காய்ந்து போய்விட்டன. கபினி ஆற்றில் நீர் பிடித்துக்கொண்டு விட்டதால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் கவலையோடு இருக்கிறார்கள். 15 நாளைக்கு முன்பு கணக்கு தயாரித்ததால், அதிகாரிகள் தங்கள் மனதில் நல்லெண்ணத்தைக் கொண்டு, இவைகள் எல்லாம் விளையும், நல்ல மகசூல் வரும் என்ற எண்ணத்தில் கொடுத்த புள்ளி விவரங்கள், அந்த அடிப்படையில் நாம் 10 லட்சம் டன் தேவை என்று சொன்னோம். ஆனால், இன்று நிலைமை வேறு. ஆகவே, இந்த 10 லட்சம் டன் என்பதை ஏறத்தாழ 20 லட்சம் என்ற அளவுக்கு நமக்குத் தேவை என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்திரா காந்தி அவர்கள் கொடுக்கப்போகிறார்களா இல்லையா என்பது அல்ல நம்முடைய பிரச்சினை.

Every man is born with mouth also, Though he is endowed with limbs he is not provided with employment. That is the price of our so-called freedom.

27 ஆண்டுகாலம் சுதந்திரம் கிடைத்தும் கூட ஒன்றும் கிடைக்காத நிலை இருக்கிறது என்பதைப் பார்க்க மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆகவே, 20 லட்சம் டன் கொடுக்கவேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்திக் கோரிக்கை எழுப்ப வேண்டும். அதை எப்படியும் தமிழக அரசு பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



*1975 பிப்ரவரி 25] [திரு. கே. கந்தசாமி]*

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படவில்லை என்று சொன்னாலும், முதலில் சொன்ன பார் முலாவே இதற்கும் பொருந்தும். பயிர் முதலில் வைத்து இருப்பார்கள். ஆனால் பின்னால் மழையும் பெய்யாமல், தண்ணீரும் கிடைக்காததால் அவைகள் காய்ந்து கருகிப் போய் இருக்கும். ஆகவே, இந்தக் கணக்கை எடுத்துக்கொள்கிறபோது 50 சத விகிதம் நிலங்களில் பயிர் செய்யப்படவில்லை என்று எடுத்துக்கொண்டால் கணக்கு சரியாக வரும். ஒரு மாதத்திற்கு முன்பே கலெக்டர்கள், தாசில்தார்கள், கணக்கு அனுப்பி இருப்பார்கள் என்பதால் அவர்களைத் தற்போது சென்று சுற்றிப் பார்த்து, நேரடியாக எல்லாவற்றையும் அறிந்து அறிக்கை அனுப்பசொல்லவேண்டும். ஏனென்றால் பின்னால் லெவி என்று போகிறபோது, இவ்வளவு விளைச்சல் வந்திருக்கும் என்று எதிர்பார்த்து இவ்வளவு கொடுங்கள் என்று கேட்பார்கள். ஆனால் உண்மையிலேயே அந்த விளைச்சல் அவ்வளவு இருக்காது. ஆகவே, இந்த வகையில் 50 சத விகிதம் விளைச்சல் இல்லாத பகுதி என்று கணக்கு எடுத்துக்கொண்டு, அதைச் சமாளிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்பதற்காக 9–10 மாதங்களாக மாவட்ட வாரியாக கணக்குகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்காக அரசு ரூ. 55 கோடி ஒதுக்கிட தயாராக இருக்கிறோம் என்று அறிவித்துள்ளது. (மணியடிக்கப்பட்டது) இது ஒரு முக்கியமான பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே, இரண்டு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

<u>திரு. கே. கந்தசாமி</u> : ரூ. 55 கோடி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. விவசாயிகளுக்கு எங்கே பார்த்தாலும் சரியானபடி கூலி கிடைக்கவில்லை. கூலி கொடுக்கக்கூடிய முதலாளிகள் எல்லாம் டிரௌட் காரணமாக வெளியே போய்விட்டார்கள். இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மாடுகளை விற்றுப் பிழைக்கவேண்டியிருக்கிறது. நல்ல மாடுகளை அடிமாடுகளாக விற்கிறார்கள். முன்பு மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் கவனத்திற்கு அடிமாடுகள் கேரளாவிற்குப் போவது கொண்டு வரப்பட்டு,

[திரு. கே. கந்தசாமி] [1975 பிப்ரவரி 25

அவற்றை தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனால் இப்போது நல்ல மாடுகளையே அடிமாடுகளாக விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். நாளைக்கே ஏதோ மந்திரம் செய்து மழை வந்து விட்டால, மாடுகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படவேண்டியிருக்கும். ஆகவே, இந்த மாடுகள் விற்பதைத் தடுக்கவேண்டியது அரசின் ப்ரைமரி, இம்பார்ட்டன்ட் கடமையாகும் என்று தெரிவித்துக்கொள் கிறேன். இதை அரசு கவனத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் இந்த மாடுகளைக் காப்பாற்றுவதற்காக ரூ. 2,000 வரை கடன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பாரதத்தின் தாயாக இருக்க வேண்டியவர்கள். தமிழகத்தில் கலைஞர் ஆண்டால் என்ன, காமராஜர் ஆண்டால் என்ன? தமிழகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் இந்தியர்கள். அந்த 4½ கோடி மக்களையும் பாதிக்கக் கூடிய பிரச்சினை இங்கே இருக்கிறது. இங்கேயுள்ள நிலைமை குறித்து அதிகாரிகள் வந்து பார்த்து அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். கொடுத்தபின்னால், மத்திய அமைச்சர் ஷின்டே அவர்கள் வந்து பார்த்துப் போனார்கள். அவர்களை கிராமந்தோறும் அழைத்துச் சென்றார்கள். அந்த நேரத்தில் நான் ஒன்றை எழுதிக்கொடுத்தேன், "ரோம் எரிகிறபோது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந் தான்" நமது அமைச்சர் சாதிக் அவர்கள் அப்பொழுது கூட இருந் தார்கள். சிரித்தார்கள். (மணி அடிக்கப்பட்டது). தயவு செய்து கொஞ்சம் டயம் கொடுங்கள். சொல்ல வேண்டிய கருத்துக்களை நான் சொல்லியாகவேண்டும். இது உயிர்ப் பிரச்சினை. கட்சிப் பிரச்சினை அல்ல. நான் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்றுகொண்டு பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் இல்லை. ஆகவே தான் சீக்கிரம் முடியுங்கள் என்று சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : "ஒய் திஸ் ஸ்டெப் மதர்லி ட்ரீட்மெண்ட்"; கஞ்சிப் பஞ்சத்தை வைத்து ஆளை இறக்கவேண்டும் என்று, கலைஞர் அவர்களை இறக்க வேண்டுமென்று திட்டம் போடுகிறார் பிரதமர் என்று நான் கருதுகிறேன். கபினி நீரைத் திறந்துவிடவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். 1924-ம் ஆண்டு அக்ரிமெண்ட்படி தஞ்சை ஜில்லாவிற்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரை கொடுத்தாகவேண்டும் என்று கர்நாடக அரசை



1975 பிப்ரவரி 25 [திரு. கே. கந்தசாமி]

வற்புறுத்த பிரதமர் அவர்களுக்கு நேரம் இல்லை. ஷேக் அப்துல்லா அவர்களைக் கூப்பிட்டு விருந்துவைத்து அவருடன் காஷ்மீர் பிரச்சினை யைப்பற்றி இரண்டு மணி நேரம் பேச பிரதமர் அவர்களுக்கு அவகாசம் இருந்தது. அந்த நாளில் அவருடைய அப்பா நேருஜி அவர்கள் காஷ்மீர் பிரச்சினையைப்பற்றி குழப்பினார்கள். இப்பொழுது அம்மையார் அவர்கள் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். காஷ்மீரை விட பல கோடி மக்கள், 4½ கோடி மக்கள் இந்தியாவிலேயே பிறந்தவர்கள் வாழ கடமைப்பட்டவர்கள். பிரதமர் அவர்கள் இங்கே வந்திருந்தபொழுது இராமனாதபுரம், தர்மபுரிக்கு ஹெலிகாப் டரில் வந்து ஒரு மணி நேரம் பார்த்துவிட்டுப் போகக்கூடாதா? அது முக்கியமல்லவா? மாறாக, கட்சி உறுப்பினர்களையும், ஊழியர் களையும் கூட்டிவைத்து தேர்தல் வேலை செய்தார்கள் . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இது ஒரு அபாண்டமான குற்றச் சாட்டு. கட்சி உறுப்பினர்களையும், ஊழியர்களையும் கூப்பிட்டு வைத்து தேர்தல் வேலை செய்தார் பிரதமர் அவர்கள் என்று கூறுவது அபாண்டம். பிரதமர் அவர்கள் டிரௌட் வேலைகளைச் செய்ய வேண்டும் என்று தான் அறிவுரை வழங்கினார்களே தவிர, எலெக் ஷனைப்பற்றி அங்கே ஒன்றும் பேசியது கிடையாது.

திரு. கே. கந்தசாமி : நாங்கள் கமுதியில் எங்கள் கட்சித் தலைவர் திரு. மூக்கையாத் தேவர், திரு. சக்தி மோகன் ஆகியோர்களோடு ஒரு கூட்டத்திற்குச் சென்றோம். அங்கே எங்களுடைய பேச்சைக் கேட்பதற்கு முன்னால் எங்களிடம் மக்கள் ஏராளமான பெடிஷன்களை சமர்ப்பித்தார்கள். அதை நான் இங்கு கொண்டு வந்திருக்கிறேன். இந்த பெடிஷன் பண்டிலை சபாநாயகர் அவர்களிடம் சமர்ப்பிக் கிறேன் . . . (மணி அடிக்கப்பட்டது):

(அநேகம் மனுக்கள் கொண்ட ஒரு கட்டை உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்தார்)

* THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Speaker, Sir, in support of the Motion of Thanks to the Governor's Address delivered by His Excellency to the Joint Session of both Houses, I wish to speak and express my ideas.

A perusal of the address shows that His Excellency has devoted almost the entire portion of his address to drought. But as head of the State he ought to have thought of other things also. But unfortunately he has confined himself to drought affair only.

I feel this is a fore-runner to the Budget Speech of the Hon. Chief Minister which will be given to us on the 1st of next month. His Excellency has said that this is an extraordinary situation created on account of the failure of the North-East monsoon throughout the State and also in certain portion of the neighbouring States and he has also clearly said that the South-West monsoon also has failed partially. Therefore, the entire State has been subjected to drought conditions and therefore the inflow of water into our reservoirs has not been proper, full and sufficient. As a consequence, certain areas of the State, especially Dharmapuri district and Ramanathapuram district have been declared as drought affected areas. The spectre of drought had been haunting in these two areas.

But the unfortunate thing is this. Though the Governor has clearly stated that Ramanathapuram and Dharmapuri districts are drought-affected districts, Dharmapuri district has not been fully declared as drought area. During the last session of the Assembly, the Hon. Chief Minister also stated that these two districts are really affected by drought and even now some of the Hon. Members here while speaking on this Governor's Address and on the adjournment motions have said that Dharmapuri and Ramanathapuram are seriously affected dy drought. But what is the real situation? Instead of declaring the entire district of Dharmapuri as drought affected, the officers there have not done justice to the people; they have recommended only a certain number of villages as drought affected. The Hon. Minister for Revenue also just now stated that only 50 per cent of the villages are drought affected there. But what about the other villages? When they accept that the north-east monsoon has failed in the entire State and the South-West monsoon has also inadequate and had not been quite timely, I am not able to understand how only a portion of the Dharmapuri district is declared as drought affected and the rest left out. Therefore, I think it is not just; it is unjust and improper; that only 50 per cent of the villages are included in drought affected areas and the other 50 per cent of the villages have been left out. What is the fate of these villages? Government are giving so many concessions to the areas declared as drought affected. That means only 50 per cent of the villages in Dharmapuri district are going to get all the benefits and the rest will not get any of these facilities, even though they are also equally affected by drought. I am not able to understand how the District Collector there found out drought conditions of villages. They do not consult M.L.As.; they only depend on village officers, revenue inspectors and Tahsildars. We all know how the village officers



write up their accounts in villages. It is all far from truth. Depending on these faulty accounts, and without caring to hear M.L.As. and without having confidence in the elected representatives like M.L.As. Panchayat Presidents and Panchayat Union Chairmen they depend on their own revenue officials and send reports to Government.

Recently I met the Hon. Minister for Revenue and I told him about my constituency. For example, most part of my constituency is ex-]Zamindari areas, i.e., Berikai and Bagalur Firka. We know it was Zamindari area for centuries and we know how these areas had been neglected for years and years. Therefore, I told the Hon. Minister for Revenue that the Collector has recommended only 50 per cent of villages and left out the other 50 percent. Then the Hon. Minister said that the Government was prepared to give help to all the villages and let the Collector can make the recommendation again. Then I went to the Collector. He wants his sub-Collector to report. The Sub-Collector is expecting his Tahsildars to recommend and the Tahsildar in turn expects his Revenue Inspector to recommend and the Revenue Inspector depends for his report from the village Officer, i.e., the Karnam. The Karnam is afraid of the Revenue Inspector; the Revenue Inspector is afraid of the Tahsildar and the Tahsildar is afraid of the Sub-Collector. It goes on like this.

But, what is the position? Everbody knows that the entire district is drought affected. They are afraid of giving the correct information. They fear that if they tell the truth something will happen to them. Therefore, I request the Hon. Minister to permit the Collector there that he may recommend for declaring the entire Dharmapuri district as drought affected. For Dharmapuri district is a backward district it is backward industrially, it is backward agriculturally and it is backward in every respect. It was the backward part a back yard of the Salem district for a number of years. Now all the concessions, all the facilities and all the blessings that Government give only to 50 per cent of the area and the other 50 per cent will go without getting any help. All the concessions etc., given to Ramnad also should be given to the entire Dharmapuri district. Otherwise, there is no meaning in our pleading the case here.

If only the Hon. Minister for Revenue would go to Dharmapuri district, take all the M.L.As. with him and visit the places, he will know how difficult the position is and how people are suffering there. I have explained the situation to the Revenue Board Member, I have also spoken to the Collector and the Sub Collector. I do not know if they have seen the entire area. Unless they go and find out the

[Thiru K. S. Kothandaramiah] [1975 பிப்ரவரி 25

real position, there is no meaning in simply referring about it in the Governor's address. Certain villages are left out and there is discrimination. Ultimately, the people come to us and complain to us. People do not go to the Sub Collector or the Collector. They are afraid of them. Therefore, my submission is that the entire district of Dharmapuri should be declared as drought affected area and all the concessions, blessings and facilities that are given to such areas should be extended to the entire district of Dharmapuri without leaving out any part of the area or any of the villages. Otherwise, people will suffer and they will only come to us and tell their sufferings to us.

Government has done so many things for rural works. But where is the MLA here? Government is believing its officials, its Revenue officers but not MLAs who are representatives of the people. The people do not ask the officials. They ask us. We are their servants and they are our masters. But we do not know how much is allotted to our district except when a press statement is issued by the Collector. We do not know how much is given to the district, to the panchayat union or to panchayat. It is said in the Governor's address that non-officials and M.L.As. should co-operate in this drought relief works. But how could there be help if we are ignored. The Zamindari areas of Dharmapuri district are absolutely famine-stricken. The Hon. Minister Sadiq Pasha knows it. Thiru Mathialagan toured our place once when he was Revenue Minister and he remarked how crops could be grown in those zamin-areas. So what I say is, declare the whole of Dharmapuri district as drought-affected district and do the needful in the matter. With these words, I conclude.

திரு. சித. சிதம்பரம்: பேரவைத் தலைவரவர்களே, நெருக்கடியான நேரத்தில், நெருக்கடியான நிலைமையில் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு பல நன்மைகளை, பல சலுகைகளைக் காட்டக்கூடிய நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று, நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், ஆளுநர் அவர்களும், மத்திய ராஜாங்க அமைச்சரவர்களும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டு, இருக்கக் கூடிய நிலைமைகளை எல்லாம் அறிந்து, வறட்சியை எப்படி எல்லாம் தீர்க்கலாம் என்ற நல்ல கருத்துக்களை தெரிவித்திருப்பதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 25] [திரு. சித. சிதம்பரம்]

இங்கே எதிர் வரிசையில் இருக்கக்கூடிய நண்பர்கள் எல்லாம், வறட்சிப் பணிகள் சரியாக நடக்கவில்லை; மக்கள் எல்லாம் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித் தார்கள். அதைப்போலவே எங்களுடைய மாவட்டத்திற்கு மேதகு ஆளுநர் அவர்கள் வருகை தந்திருந்தபோது எதிர்க்கட்சிக்காரர்கள், வறட்சிப் பணிகள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்கு ஆளுநர் அவர்கள், "நான் சுற்றிப்பார்த்துவிட்டு வருகிறேன், எல்லாப் பகுதிகளிலும் மக்களுக்குத் தேவையான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; ஆகவே, புகார் சொல்வதை விட்டு விட்டு நல்லப் பணிகள் நடைபெற ஒத்துழைப்புத் தாருங்கள்" என்று அங்கே தெரிவித்தார்கள். அதைத்தான் நான் இங்கே எதிர் வரிசை வரிசையிலே இருக்கிற நண்பர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வறட்சிப் பணிகள் நடைபெறுவதைப்பற்றி பல நல்ல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் வறட்சிப் பணிகள் சிறப்பாக நடைபெறவில்லை. நம்முடைய முதலமைச்சரவர்கள் மாவட்டங்களில் வறட்சி என்றவுடன் உடனடியாக நிதி உதவி செய்து, சிறப்பாக நடைபெறுவதற்கு, இருக்கின்ற இடையூறுகளை நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து நல்லமுறையில் உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உதவியை இன்னும் 10 மாத காலத்திற்குத் தொடர்ந்து செய்வதற்கான நல்ல முயற்சிகளை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருட்களை மாவட்டத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் இன்றையதினம் அரசாங்கம் நல்ல முறையில் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மக்களுக்கு குடும்பக் கார்டு அடிப்படையில் அங்கே உணவு வழங்கப்படுகிறது. இரண்டு பேருக்கும் அதே அளவு, 10 பேருக்கும் அதே அளவு என்ற முறையில் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி, நபர்கள் அடிப்படையில் உணவுப் பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. சித. சிதம்பரம்] [1975 பிப்ரவரி 25

மின்சாரத்தைப் பொறுத்த அளவில், 1974–75 ஆம் ஆண்டில் 30,000 பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன; 1975–76 ஆம் ஆண்டில் 60,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அது மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மின்னிணைப்பு கொடுப்பதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. தேவையான சாமான்கள் இல்லை; ஆகையால் மின்னிணைப்பு கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களிடம் இந்தக் குறையைப்பற்றி ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இந்தக் குறையை நீக்கி, விரைவிலே மின்னிணைப்பு கொடுப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார பற்றுக்குறையைப் போக்குவதற்கு மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு உதவி செய்யவில்லை; இனிமேலாவது செய்ய வேண்டுமென்ற கருத்தை ஆளுநர் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். மின்சார உற்பத்தியில் மாநில அரசுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களை உணர்ந்து, ஏற்ற வகையில் மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்றும், மாநில அரசு கொடுத்திருக்கிற திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பதில் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளில் குடிதண்ணீர் வசதி, சாலைகள் வசதி, கண்மாய்கள் தூர் எடுத்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே குடிதண்ணீருக்கு முதலிடம் கொடுத்து, நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் சாக்கோட்டை ஒன்றியத்தில் 200 அடி, 300 அடி ஆழத்தில்தான் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் போர்வெல் போட்டு, தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குடிநீர் வாரியத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சாலைப் பணிகள் இருக்கின்றன. சாலை வசதிகள் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம் சாலைகள் போட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் போடுகிற சாலைகள் அவசரப் பணியாக இல்லாமல் அவசியப் பணியாகப் போடப்படுகிற சாலைகளாக அவைகள் போடப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 25] [திரு. சித. சிதம்பரம்]

குடிதண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான காரைக்குடி நகராட்சிக்கு அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் ஒரு லட்சம் ரூபாய் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சிப் பணிகள் என்ற பெயரால் குளங்கள் வெட்டுவதா என்று சிலர் கேட்டார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குளங்கள்தான் வேண்டும். அங்குள்ள மக்கள் குளங்கள்தான் அவசியம் என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது பெரும்பாலானவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்றால் குளம் வெட்டினால்தான் அதிகம் வேலை வாய்ப்பு கொடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, குளம் வெட்டும் பணியையும் வறட்சிப் பணிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கு 600 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அந்த முறையை மாற்ற வேண்டும். இந்த வறட்சிக் காலத்தில், இந்த அவசர காலத்தில் எப்படியும் கிணறுகள் வெட்ட வேண்டுமென்ற அடிப்படையில் சட்டத்திட்டங்களை மாற்றி, ஒன்றியங்களுக்கு நிதி வசதிகளை வழங்கி, தேவையான இடங்களில் எல்லாம் கிணறுகள் வெட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு விதிகளைத் தளர்த்தி, தேவையான இடங்களில் எல்லாம் கிணறுகளை வெட்டுவதற்கும், சாலை இல்லாத இடங்களில் எல்லாம் சாலைகள் போடுவதற்கும், குளங்களை வெட்டுவதற்கும், தூர் எடுப்பதற்கும் நம்முடைய அரசு தேவையான அளவுக்கு நிதி உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### Statutory Rules and Orders

80. Notification issued in G.O. Ms. No. 675, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Sankarankoil local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

81. Notification issued in G.O. Ms. No. 1865, Rural Development and Local Administration, dated the 17th August, 1974 in regard to declaration of the areas forming the Kumbakonam local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

82. Notification issued in G.O. Ms. No. 1867, Rural Development and Local Administration, dated the 17th August, 1974 in regaard to declaration of the areas forming the Thanjavur local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

83. Notification issued in G.O. Ms. No. 2340, Rural Development and Local Administration, dated the 31st October 1974 in regard to declaration of the areas forming the Karaikudi local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971, Tamil Nadu Act 35 of 1972)].

84. Notification issued in G.O. Ms. No. 679, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Courtallam local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

### B. *Reports, Notifications and Other Papers*

Nil.



## இணைப்பு -I

[467 ம் பக்கத்தில் 73 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

சென்னையிலுள்ள புள்ளி விவரத் துறை இயக்குநர் இப்பயிர்கள் குறித்து வெளியிட்ட இறுதி, திருத்த முன் அறிவிப்பு அறிக்கைகளில் அறிவிக்கப்பட்டுள்ளபடி 1970–71 முதல் 1973–74 வரையிலான கால அளவில் சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை பயிரிடப்பட்ட பரப்பளவு, அவற்றின் உற்பத்தி குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | பரப்பளவு (ஹெக்டேரில்) | | | உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | சோளம் | கம்பு | ராகி | சோளம் | கம்பு | ராகி |
| 1970–71 | 6,50,800 | 4,74,000 | 2,83,800 | 4.82,800 | 3,11.900 | 3,34.000 |
| 1971–72 | 7,17,400 | 4,93,600 | 2,92,400 | 5,14,600 | 2,96,600 | 3,29,200 |
| 1972–73 | 6,79,700 | 4,28,000 | 2,78,800 | 5,37,200 | 2,90,500 | 2,82,000 |
| 1973–74 | 6,69,600 | 4,29,000 | 2,81,200 | 5,62,500 | 2,96,900 | 2,88,900 |
| 1967–68 பருவ-பயிர அறிக்கையின்படி இயல்பான அளவு— | 7,51,130 | 4.34,320 | 3,26,340 | 5.56.980 | 2.85,670 | 3,20,150 |

1972–73 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1973–74ல் இம்மாநிலத்தில் சோளம், கம்பு பயிர்கள் பயிரிடப்படுகிற பரப்பளவு குறைந்துவிட்ட போதிலும், அவற்றின் உற்பத்தி பாதிக்கப்படவில்லை. ஆயினும் 1970–71 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1973–74-ல் கேழ்வரகு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கம்பு, கேழ்வரகு, சோளம், ஆகியவை பயிரிடப்படும் பரப்பளவு, அவற்றின் உற்பத்தி ஆகியவற்றில் ஏற்ற இறக்கங்கள் கீழ்க்கண்ட காரணங்களால் ஏற்பட்டன :—

(1) இப்பயிர்களின்கீழ் உள்ள 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பரப்பளவில் இப்பயிர்கள் மழையை நம்பியே விதைக்கப்படுகின்றன. எனவே, பருவ மழை பெய்வதன் உறுதியற்ற தன்மை, பயிர் நோய்கள், பூச்சிகள், ஆகியவற்றினால் விளையும் சேதம் ஆகியவற்றிற்கு இப்பயிர்கள் ஆளாகின்றன.

(2) பாசனம் பெறாத சிறு தானியப் பயிர்களின் விளைச்சல், பரவலாகப் பெய்கிற மழை மொத்த அளவையும் பயிர் நோய்கள், பூச்சிகள் ஆகியவை எந்த அளவுக்கு அவற்றை பாதிக்கின்றன என்பதையும் பொறுத்து உள்ளது.

(3) கடந்த மூன்று ஆண்டுகளாக அதிலும் குறிப்பாக கம்பு, சோளம், கேழ்வரகு பயிர்கள் விதைக்கும்போது போதிய மழை பெய்யவில்லை. பெய்த மழை கூட சீராக இல்லை. அதனால், மேற்படி பயிர்களை விதைப்பது பாதிக்கப்பட்டது.

(4) பெரும்பாலான கோட்டங்களில், பயிர் நோய்களாலும், பூச்சிகளாலும் பயிர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. அதன் விளைவாக இப் பயிர்களின் விளைச்சல் குறைந்தது.

(5) ஏறக்குறைய கம்பு, சோளம், கேழ்வரகு ஆகியவற்றை மானாவாரி நிலைமைகளில் விதைக்கும் அதே சமயத்தில் வேர்க்கடலைப் பயிர் விதைக்கப்படுகிறது. அந்தப் பருவத்தில் உள்ளூர் அங்காடியில் வேர்க்கடலைப் பயிருக்கு அதிக விலை கிடைக்கிறது. அதனால், பெரும் பரப்பளவுகளில் சிறு தானியங்களைப் பயிரிடுவதற்குப் பதிலாக உழவர்கள் வேர்க்கடலையைப் பயிரிட அது தூண்டுகோலாக அமைந்தது.

(6) மழை ஒரே சீராகப் பெய்யாததாலும், வேர்க்கடலைப் பயிருக்கு சிறு தானியப் பயிர்களைக் காட்டிலும் அதிக விலை கிடைத்ததாலும், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை பயிரிடப்படும் பரப்பளவு கடந்த மூன்று ஆண்டுகளாகக் குறைந்துவிட்டது.

*A.*—

The area and production of cholam, cumbu and ragi from 1970-71 to 1973-74, as reported in the final and revised forecast reports issued by the Director of Statistics, Madras, for these crops for the corresponding years are furnished below :—

| Year. | Areas in the acres: Cholam. | Cumbu | Ragi. | Production in metric tonnes: Cholam | Cumbu. | Ragi. |
|---|---|---|---|---|---|---|
| 1970-71 | 6,5[illegible],800 | 4,74,000 | 2,8[illegible],800 | 4,82,800 | 3,11,900 | 3,34,000 |
| 1971-72 | 7,17,400 | 4,[illegible]3,600 | 2,92,400 | 5,14,600 | 2,96,600 | 3,2[illegible],200 |
| 1972-73 | 6,79,600 | 4,2[illegible],000 | 2,78,800 | 5,37,200 | 2,90,500 | 2,[illegible]2,000 |
| 1973-74 | 6,69,600 | 4,29,000 | 2,81,200 | 5,62,500 | 2,96,900 | 2,86,900 |
| Normal as per season and crop report, 1967-68 | 7,51,130 | 4,34,320 | 3,23,310 | 5,56,980 | 2,85,670 | 3,20,150 |



There is no set back in production of cholam and cumbu in the State during 1973-74 in comparison to the production of these crops during the previous year 1972-73 though the area under the crop has dwindled. There has however, been a set back in the production of Ragi during 1973-74 when compared to the year 1970-71. The fluctuations in area and production of Cumbu, Ragi and Cholam are due to the following factors :—

(i) More than 75 per cent of the area under these crops are sown under rainfed condition and are, therefore, subject to vagaries of monsoon and the damage caused by pests and diseases.

(*ii*) The yield in unirrigated millets is purely governed by the total distribution of rainfall and the incidence of pests and diseases.

(*iii*) Adequate rains were not received during the past three years particularly during the main sowing season of Cumbu, Cholam and Ragi crops. Even the rains received were uneven, which hampered the sowing of the above crops.

(*iv*) In most of the divisions, the crops were very badly affected by pests and diseases, which caused reduction of yield at the end.

(*v*) Sowing of groundnut crop more or less coincides with sowing of Cumbu, Cholam and Ragi in rainfed condition. Ground crop also fetches higher price in the local market during the season which factor induced the farmers for the division of crop from millets to groundnut in larger extants.

(*vi*) The inadequate and uneven distribution of rainfall and the comparatively higher price of groundnut crop contributed to the reduction of area in Cholam, Cumbu and Ragi for the past three years.

## இணைப்பு-II.

[474-ம் பக்கத்தில் 77 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The staff of the Mobile Squad consists of one Research Assistant and one Driver. The Mobile Squad for Artificial Insemination of cattle was inaugurated on 5—9—1974. Since then, the Mobile unit is functioning, by attending to the requisitions of the breeders residing within the Madras Corporation limits and the response from them is very encouraging. Mobile van for artificial Insemination work has also been anached to the squad.

(1) A fee of Rs. 5 only is levied for every visit made by the Technical staff of the Mobile Squad, Madras Veterinary College to carry out Altificial Insemination on the cow or she-buffalo at the residence of the owner|breeder within the city limits.

(2) The fee is collected from the owners for every visit made by the Mobile Squad, irrespective of the fact whether the animal was inseminated or not, after conducting proper examination of the animal.

(3) No refund of the fee is made, even if the animal has not settled.

(4) The services of the Mobile Squad is available on all days from 8 a.m. to 5 p.m.

(5) The Mobile Squad proceeds to the owners' residence on receipt of requisition (i.e., calls received either in person or through a telephonic message), and

(6) The amount collected by the Mobile Squad, is remitted at the college office on the next working day.

A fee of Rs. 5 is collected per visit and a flat rate of Rs. 5 is collected for each additional animal at the residence of the breeder; owner. The fee charged is only to cover the transport charges and no fee will be collected from the breeders for subsequent visits, if any, by the Squad on its own, to collect scientific data, etc. From 5th September 1974 to 18th November 1974, 262 calls have been attended to, on requisition by owners| breeders of the animal and the amount collected in this regard works out to Rs. 1,310.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1975 பிப்ரவரி 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பலர் பேசவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனால் கேள்வி நேரத்தைத் தள்ளி வைக்கலாமா என்பது குறித்து அவையினரின் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன். எல்லோரும் பேசவேண்டுமென்று என் அறையில் வந்து என்னைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கேள்வி நேரத்தை ஒத்திவைப்ப தென்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யோசனை கேட்கிறேன். அவ்வளவுதான். விவாதத்தில் பேசித்தான் ஆகவேண்டுமென்று உறுப்பினர்கள் வற்புறுத்துவதால், இதுகுறித்துக் கருத்து அறிய விரும்புகிறேன்.

(ஒருவரும் கருத்து தெரிவிக்கவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது கேள்விகளை எடுத்துக் கொள்வோம், கேள்வி எண் 81.

*Post of Headmasters.*

* 81 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to grant Gazetted Status to all the Headmasters in the State; and

(b) if so, from when?

[1975 பிப்ரவரி 26.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ): மற்ற துறைகளிலும் அரசிதழ் பதிவு பெறாத பல பதவிகளை அரசிதழ் பதிவு பெற்றவர்களாக்குவது பற்றிய முடிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது அரசிதழ் பதவிபெறாத தலைமை ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாய இலாக்காவில் ரூ. 425 சம்பளம் வாங்குகிறவர்கள்கூட அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளாக செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைமையாசிரியர்கள் ரூ. 450 சம்பளம் வாங்கும்போது அவர்களுக்கும் அரசிதழ் பதிவு அந்தஸ்து அளிப்பதில் என்ன தடை இருக்க முடியும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது பெரும்பாலான பதவிகளுக்கு ஊதியம் ரூ. 400-க்குமேல் உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி சில துறைகளில் உள்ளவர்கள் பதவி உயர்வு காரணமாக அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் பிளாக் டெவலப்மென்ட் அதிகாரிகள், தாசில்தார்கள் போன்றவர்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதே அளவுக்கு சம்பளம் வாங்குகிறவர்கள் தங்களையும் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளாக ஆக்க வேண்டும் என்று கோருகிறார்கள். இதேமாதிரி பல்வேறு துறையினர் கேட்பதன் காரணமாக, எல்லாவற்றையும் சேர்த்து ஒரு முடிவு செய்யலாம் என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அரசிதழ் பதிவு பெற்றவர்கள்--அரசிதழ் பதிவு பெறாதவர்கள் என்றிருக்கும் நிலைமையைக்கூட நீக்கிவிட்டு, பிரிவு 1, பிரிவு 2, பிரிவு 3, பிரிவு 4 என்ற அளவுக்கு அலுவலர்களையும் அதிகாரிகளையும் ஆக்கலாமா என்கிற ஒரு கருத்தும் இருக்கிறது. இதைப்பற்றி விரைவில் முடிவு எடுப்பதற்கான ஆலோசனை இருந்து வருகிறது. தலைமை ஆசிரியர்களிலேயே கெஜட்டெட் தலைமையாசிரியர்கள் என்று ஏற்கெனவே இருக்கிறார்கள். மற்றவர்களையும் சம்பளத்தை அடிப்படையாக வைத்து அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் என்ற முறையில் ஆக்கலாமென்றால், ஏற்கெனவே அந் நிலையில் உள்ளவர்களுக்கு வேறு பெயர் கொடுக்க வேண்டியிருக்கும். விரைவில் இதைப்பற்றி அரசு முடிவு எடுத்ததற்குப் பிறகு இதிலே ஒரு தீர்மானமான தன்மையை நாம் காணலாம்.



1975 பிப்ரவரி 26]

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, கெஜட்டட் போஸ்ட் அந்தஸ்து கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு என்ன, என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று அரசு எதிர்பார்க்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றி முழு விவரக் குறிப்புகள் இல்லை. அரசிதழ் பதிவு பெறாதவர்களுக்குச் சிலபல சலுகைகள் இருக்கின்றன. பதிவு பெற்றவர்களாக ஆக்கப்பட்டால் சில சலுகைகள் குறையும். ஆனால் சர்ட்டிபிகேட்டுகளில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கலாம்: நேரடியாகச் சம்பளத்தை டிரஷரியிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். இப்படிச் சிலபல நிலைமைகள் வருகின்றன. தனிக் கேள்வி போட்டால் அதன் முழு தன்மையையும் எடுத்துச் சொல்லலாம்.

**திரு. எட். சுரேந்திரன் :** அரசிதழ் பதிவு பெற்றவர்கள்—அரசிதழ் பதிவு பெறாதவர்கள் என்ற ஒரு நிலை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாகி வந்தது. இப்போதும் அது தொடர்ந்து இருப்பதன் காரணமாக, ஒருவர் எஜமானர்-ஒருவர் வேலைக்காரர் என்ற உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது. ஆகவே, அரசிதழ் பதிவு பெற்றவர்—அரசிதழ் பதிவு பெறாதவர் என்ற தன்மையை இப்போதாவது அகற்றுவதற்கு விரைவான நடவடிக்கை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி நான் முதலில் குறிப்பிட்டேன். ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட பதவிகள் அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்கப்பட்டிருந்தன. பல்வேறு பதவிகள் ஒரே சம்பள அடிப்படையில் வரும்போது அவற்றை அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இதே கோரிக்கையை நாம் பரிந்துரை செய்தோம். என்றாலும், பல்வேறு துறைகளிலிருந்து இத்தகைய கோரிக்கைகள் வந்திருப்பதன் காரணமாக, எல்லாவற்றையும் யோசித்து முடிவு எடுக்கலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அரசிதழ் பதிவு பெற்றவர்கள்—பதிவு பெறாதவர்கள் என்னும் நிலையை நீக்கிவிட்டு, பிரிவு 1, பிரிவு 2, பிரிவு 3, பிரிவு 4 என்ற வகையில் சம்பளத்தைப் பொறுத்தும் வேறு பல

தகுதிகளைப் பொறுத்தும் ஆக்கலாமா என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி பொதுத் துறை முடிவு எடுக்கும்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, தலைமையாசிரியராக வருவதற்குத் தகுதிபெற்ற தமிழாசிரியர்கள் அந்தப் பொறுப்புக்கு வர அவர்கள் தமிழாசிரியர்களாகப் பணியாற்றிய காலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எம். இ. ஆர். என்ற முறை இருக்கிறது. அறுபதாம் ஆண்டுக்குப் பின் தொடங்கப்பட்ட . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகும்?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைமையாசியரைப்பற்றித்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதுக் கேள்வி போட்டால் எப்படி? மூலக் கேள்வி, "தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் அரசிதழ் பதிவு அந்தஸ்து வழங்க அரசு கருதியுள்ளதா?" என்பதாகும். அந்தக் கேள்வியையொட்டித் துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்யாகுமரி மாவட்டத்தில் 1960-ம் ஆண்டுக்குப் பிறகு ஆரம்பித்த பள்ளிக்கூடங்களில் எம்.இ.ஆர். படி சம்பளம் வழங்கப்படுகிறது. எம்.இ.ஆர். படி ரிகக்னிஷன் வழங்கப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு எம்.இ.ஆர். படி சம்பளம் வாங்க அருகதை இருக்கிறது. மற்ற தலைமையாசிரியர்களுக்கு அந்த உரிமை வழங்காமலிருக்கக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இத் துணைக் கேள்வி மூலக் கேள்வியோடு பொருந்தி வராது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.



திரு. அ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, கெஜட்ட் தகுதியை நிர்ணயிக்கும்போது மாணவர்களுடைய எண்ணிக்கை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறதா? எல்லாத் தலைமையாசிரியர்களுக்கும் பொருந்தும்படி செய்ய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றித்தான் நான் முதலில் குறிப்பிட்டேன். ஆயிரம் மாணவர்கள் கொண்ட பள்ளிகளில் இருக்கும் தலைமையாசிரியர்களுக்கு அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர் பதவி உயர்வு தந்து நியமித்தோம். ரூ. 450-க்கு மேல் தலைமையாசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்தியதன் காரணமாக, அவர்களையெல்லாம் அரசிதழ் பதிவு தலைமையாசிரியர்களாக ஆக்கலாமென்றால், பிற துறைகளிலிருந்தும் அந்தச் சம்பளம் பெறுபவர்களுக்கு அரசிதழ் பதிவு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. கோரிக்கையின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டது. இதுபோன்று பல்வேறு துறையினர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்று நான் முதலில் குறிப்பிட்டேன்.

* 82 வினு.—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'எ' வின் உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு 2-10-1970-ல் ஏற்பட்ட சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி வருடாந்தர ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அமுலாக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு கல்வி சார்நிலைப்பணியிலுள்ள தலைமையாசிரியர் பதவிகள் (அ பிரிவு) புதிய உயர் பதவியாகக் கருதப்படுவதால் அப்பதவிகளுக்கு தனி விதிகள் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அவ்விதிகள் வெளியிடப்படும் வரை முறையாக நியமனங்கள் செய்ய இயலாததால் தற்காலிக நியமனங்கள் செய்யப்பட்டு ரூ. 450-25-750 என்ற ஊதிய விகிதத்தில் துவக்க ஊதியமான ரூ. 450 அவர்களுக்கு தற்காலிகமாக அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மற்ற தலைமையாசிரியர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படும்போது, 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு சம்பளக் கமிஷன் சிபார்சுப்படி வருடாந்தர ஊதிய உயர்வு வழங்குவதில் ஏன் இவ்வளவு காலதாமதம் இருக்கிறது என்பதை அறியலாமா? இனியாவது உடனடியாக அவர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு கிடைக்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 'ஏ' பிரிவு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களைப் பொறுத்தவரையில், அண்மையில் விதிகளுக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டுவிட்டன. தற்காலிக தலைமை ஆசிரியர்களாக நியமனம் அளிக்கப்பட்டவர்களது நியமனங்கள் விரைவில் வரன்முறை செய்யப்பட்டு விதிகளின்படி அப்பதவியில் ஊதிய நிர்ணயம் செய்யப்படும். இதைச் செய்ததற்குப் பிறகு 'பி' பிரிவு பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களின் நிலைமை ஆராயப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளை 'ஏ' பிரிவு என்றும், 'பி' பிரிவு என்றும் பிரிக்க என்ன காரணம்? அந்தப் பாகுபாட்டை மாற்ற அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசினரால் நடத்தப்படும் அரசுப் பள்ளிகளை 'ஏ' பிரிவு என்றும், ஏற்கெனவே மாவட்டக் கழகத்தின் (டிஸ்ட்ரிக்ட் போர்டு) கீழிருந்த பள்ளிகளை 'பி' பிரிவு என்றும் வைத்திருந்தோம். ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கு இருந்த முறைகள் வேறுபட்டிருந்தன. அவர்களிலிருந்து தலைமையாசிரியராக நியமிக்கும் முறைகளும் வேறுபட்டிருந்தன. அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மாநில அளவில் மாற்றங்கள், பதவி உயர்வு தரப்பட்டன. முன்னாள் மாவட்டக் கழகத்தின்கீழ் இருந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் அந்தந்த மாவட்டத்திற்குள் மாற்றங்கள், பதவி உயர்வு முதலியவற்றைப் பெற்றிருந்தார்கள். இப்படி வெவ்வேறு சூழ்நிலைகள் இருந்தன. இரண்டையும் ஒன்றாக ஆக்குவதற்கு நான்கைந்து ஆண்டுகளாக முயற்சி எடுக்கப்பட்டாலும், இரு தரப்பினரும் ஒத்துவராத காரணத்தால்





தனித்தனியாக வைத்து, அவரவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அதற்கான சிலபல விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். நாளாவட்டத்தில், 15-20 ஆண்டுக் காலத்தில் 'ஏ' பிரிவு மட்டுமே வந்துசேரும் அளவுக்கு முயற்சிகள் இருந்து வருகின்றன. 'பி' பிரிவு பள்ளிகளில் இருக்கிறவர்கள், அவர்கள் ஆசிரியாக இருக்கும் காலம் வரையில் அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த முறையில் பதவி உயர்வு கொடுக்கப்படும். இப்பொழுது இரண்டு பிரிவாக வைத்துக் கணக்கிட்டு வருகிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The division of schools into A and B wings has created lot of difficulties and is also creating a feeling of inferiority and superiority amongst teachers Left to themselves, teachers are not able to come to a decisio So, may I know from the Hon. Minister for Education and Tourism whether Government will take steps to see that these two wings are merged into one wing?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. இதில் ஏற்பட்டிருக்கிற சங்கடங்களைத்தான் குறிப்பிட்டேன். இருசாராருக்கும் திருப்தி ஏற்படுகிற ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அந்த வகையில் இருசாராரும் ஒத்து ஒரு முடிவைத் தெரிவித்தால் அரசாங்கத்தின் சார்பில் அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொல்லி நான்காண்டுகள் விட்டுவைத்திருந்தோம். என்றாலும் அவரவர்கள் தங்கள் தங்களுக்குள்ள சலுகைகள் நீடிக்க வேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தினால் ஏ விங், பி விங் வைத்து அந்தந்தச் சலுகைகள் நீடிக்கப்படும். படிப்படியாக புதியதாக அமைக்கப்படுகிற பள்ளிகள்—நியமிக்கப்படுகிற ஆசிரியர்கள் ஏ விங்கில் மட்டும் வரத்தக்க அளவுக்கு 15 ஆண்டுகளில் இந்த 'பி' விங் என்பதையே எடுத்துவிடக்கூடிய அளவில் இப்போது நாம் செயல்பட்டு வருகிறோம். இன்றைக்கு ஏ விங். பி விங் என்று நீடிப்பதனால் சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதை சர்க்காரே ஏற்றுக்கொண்டுதான் நடத்த வேண்டியதாக இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : இப்படிப்பட்ட சலுகைகள் தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பொருந்துமா? இல்லையென்றால் அவர்களுக்கும் பொருந்தும்படியாகச் செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தனியாக விதிகள் இருக்கின்றன. ஆயினும், சம்பளம், படி முதலியவைகள் எல்லோருக்கும் ஒன்றாக இருக்குகும்படியாகத்தான் அமைந்திருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஏற்கெனவே போர்டு ஸ்கூலில் பணியாற்றியவர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் அளிக்கப்பட்டிருப்பது போல, தற்காலிகமாக கன்னியாகுமரியில் பணியாற்றியவர்களுக்கும் அளிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏது இருந்தாலும் அவற்றை எல்லாம் முறையாகப் பரிசீலித்து படிப்படியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருக்கக் கூடிய விதிமுறைகள் தடையாக இருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்து வருகிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி:** எ. விங், பி விங் ஆகிய இருதரப்பாரும் ஒத்துவராததற்குக் காரணம் பி விங் தலைமை ஆசிரியர்கள் மாநில அளவில் மாற்றம் செய்வதை விரும்பாத காரணம் தான். ஆகவே மாவட்ட அளவிலேயே மாற்றம் செய்வதற்கு எல்லா ஆசிரியர்களுக்கும் ஒத்த ஒரு முடிவை எடுத்து இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த ஒன்று மட்டும் காரணம் அல்ல. அதோடு வேறுசில பிரச்சினைகளையும் அவர்கள் எழுப்புகிறார்கள். அதன் காரணமாகத்தான் சில காலத்திற்கு பி விங் என்று தனியாக வைத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுமட்டுமின்றி இன்றைக்கு நகராட்சிப் பள்ளிகளையும் எடுத்து வருகிறோம். இப்போது 13 பள்ளிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவற்றை என்ன செய்வது—ஸி விங் என்று தனியாக வைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை கூட இருக்கிறது. பொதுவாக எந்தப் பிரிவு ஆசிரியர்களும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் நாம் செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது.



*Tourist Bungalow, Ootacamund.*

*83 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether an additional block has been added to the Tourist Bungalow at Ootacamund; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) கட்டிமானச் செலவு ரூ. 10.90 லட்சமாகும்.

இடவசதி: இருவர் தங்கும் அறைகள் 24.
8 படுக்கைகள் கொண்ட துயிலிடம்.

மூன்றாவது மாடி முழுவதும் உணவுக் கூடமாகவும் சமையலறையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தமாதிரி விடுதிகள் கட்டக் கூடிய சமயத்தில் குறைவாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் வசதியாக குறைந்த வாடகையில் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உதகமண்டலத்தில் இருக்கிற விடுதிகளை எடுத்துக்கொண்டால் சுற்றுலா வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற விடுதி ஓரளவுக்கு வாடகை குறைவானதாகவே இருக்கிறது. 80 படுக்கைகள் இருந்த நிலையை மாற்றி இன்றைக்கு 184 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அரசினர் பள்ளி விடுதியை பள்ளி விடுமுறை காலத்தில் எடுத்துக்கொண்டால் 5 ரூபாய், 2 ரூபாய் என்ற அளவுக்கு குறைந்த வாடகைக்கு நடுத்தர மக்களுக்கு அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமா என்பதும் ஆராயப்பட்டு வருகிறது.

*Special Dispensary at Erode for Government employees.*

*84 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that special dispensaries for Non-Gazetted Government Officers in the District Headquarters Hospital, Erode have been opened; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தனியாக விதிகள் இருக்கின்றன. ஆயினும், சம்பளம், படி முதலியவைகள் எல்லோருக்கும் ஒன்றாக இருக்குகும்படியாகத்தான் அமைந்திருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்கெனவே போர்டு ஸ்கூலில் பணியாற்றியவர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் அளிக்கப்பட்டிருப்பது போல, தற்காலிகமாக கன்னியாகுமரியில் பணியாற்றியவர்களுக்கும் அளிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட குறைபாடுகள் எது இருந்தாலும் அவற்றை எல்லாம் முறையாகப் பரிசீலித்து படிப்படியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருக்கக் கூடிய விதிமுறைகள் தடையாக இருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: ஏ. விங், பி விங் ஆகிய இருதரப்பாரும் ஒத்துவராததற்குக் காரணம் பி விங் தலைமை ஆசிரியர்கள் மாநில அளவில் மாற்றம் செய்வதை விரும்பாத காரணம் தான். ஆகவே மாவட்ட அளவிலேயே மாற்றம் செய்வதற்கு எல்லா ஆசிரியர்களுக்கும் ஒத்த ஒரு முடிவை எடுத்து இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த ஒன்று மட்டும் காரணம் அல்ல. அதோடு வேறுசில பிரச்சினைகளையும் அவர்கள் எழுப்புகிறார்கள். அதன் காரணமாகத்தான் சில காலத்திற்கு பி விங் என்று தனியாக வைத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுமட்டுமின்றி இன்றைக்கு நகராட்சிப் பள்ளிகளையும் எடுத்து வருகிறோம். இப்போது 13 பள்ளிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவற்றை என்ன செய்வது— வி விங் என்று தனியாக வைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை கூட இருக்கிறது. பொதுவாக எந்தப் பிரிவு ஆசிரியர்களும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் நாம் செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது.



### *Tourist Bungalow, Ootacamund.*

* 83 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether an additional block has been added to the Tourist Bungalow at Ootacamund; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) கட்டுமானச் செலவு ரூ. 10.90 லட்சமாகும்.

இடவசதி: இருவர் தங்கும் அறைகள் 24.
8 படுக்கைகள் கொண்ட துயிலிடம்.

மூன்றாவது மாடி முழுவதும் உணவுக் கூடமாகவும் சமையலறையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தமாதிரி விடுதிகள் கட்டக் கூடிய சமயத்தில் குறைவாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் வசதியாக குறைந்த வாடகையில் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உதகமண்டலத்தில் இருக்கிற விடுதிகளை எடுத்துக்கொண்டால் சுற்றுலா வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற விடுதி ஓரளவுக்கு வாடகை குறைவானதாகவே இருக்கிறது. 80 படுக்கைகள் இருந்த நிலையை மாற்றி இன்றைக்கு 184 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அரசினர் பள்ளி விடுதியை பள்ளி விடுமுறை காலத்தில் எடுத்துக்கொண்டால் 5 ரூபாய், 2 ரூபாய் என்ற அளவுக்கு குறைந்த வாடகைக்கு நடுத்தர மக்களுக்கு அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமா என்பதும் ஆராயப்பட்டு வருகிறது.

### *Special Dispensary at Erode for Government employees.*

* 84 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that special dispensaries for Non-Gazetted Government Officers in the District Headquarters Hospital, Erode have been opened; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் அரசிதழ் பதிவு பெருத அரசு ஊழியர்களுக்காக எம்.பி.பி.எஸ். மருத்துவர் ஒருவருடன் சிறப்பு மருந்தகம் ஒன்று 20-5-1974-ல் தொடங்கப்பட்டு, அந்நாளிலிருந்து செயல்பட்டுவருகிறது.

*Dental Units.*

* 85 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health with reference to Question No. 37 answered on 13th August 1974 be pleased to state whether there is any proposal under the consideration of the Government to open a Dental Wing in the Taluk Headquarters Hospital at Kuzhithurai in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

* 86 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலுள்ள அரசினர் மருத்துவமனையில் பல் வைத்தியப் பிரிவு எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாயூரத்திலுள்ள அரசினர் மருத்துவமனையில் பல் வைத்தியப் பிரிவு ஒன்று 29—9—1972 முதல் தொடங்கப்பெற்று இயங்கி வருகிறது.

**உதகை மருத்துவ மனைக்கு டயட்டிஷன்**

* 87 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உதகை நகரத்திலுள்ள தலைமை மருத்துவ மனையில் டயட்டிஷன் ஒருவரை நியமிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.





ஆனைமலையாற்றின் குறுக்கே அணை

* 88 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆனைமலை ஆற்றின் குறுக்கே அணை கட்டி அதன் தண்ணீரை பரம்பிக்குளம் ஆழியார் திட்டத்திற்கு கொண்டுவரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ்நாட்டுக்குள், ஆனைமலையாறு அணைத்திட்டம் குறித்த ஆய்வு நடத்துவதானால், அந்த ஆய்வின் முடிவுகளைத் தமிழ்நாடு அரசிடம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அந்த ஆய்வுப்பணியை நடத்துவதற்குக் கேரள அரசைத் தமிழ்நாடு அரசு தற்போது அனுமதித்துள்ளது.

திரு. சே. என். குமாரசாமி: இந்தத் திட்டம் பற்றி ரொம்பகாலமாக யோசிக்கப்பட்டு வருகிறது, இந்த பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் ஏக்கரா பாசன வசதி ஏற்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக இரு அரசுகளும் சீக்கிரமாகப் பேசி ஒரு முடிவுக்கு வர நமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போதுள்ள ஆய்வு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 2.5 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கக் கூடும். இது இரண்டு அரசும் பேசி முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும்.

**நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்**

* 89 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோமனூரில் நொய்யல் ஆற்றில் மேம்பாலம் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா?

(இ) பஞ்சாயத்தில் இருந்து விண்ணப்பம் இது சம்பந்தமாக அரசுக்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, சோமனூரில் நொய்யலாற்றுக்குப் பாலம் இல்லாததால் போக்குவரத்துக்கு மிக இடைஞ்சலாக உள்ளது. மாட்டு வண்டிகள் மிகவும் கஷ்டப்படுகின்றன. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து இந்தப் பாலத்தை அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தத் திட்டத்திற்கு ரூ. 5 லட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது நிதிநிலை சரியில்லை. நிதிநிலை சரியான பிறகுதான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

## இராமநாதபுரத்தில் புதிய நூற்பாலை

* 90 வினா—**திரு. க. சுப்பு:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில், புதிதாக நூற்பாலை தொடங்குவதற்கான விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆம்.

**திரு. க. சுப்பு:** அருப்புக்கோட்டையிலும், ராஜபாளையத்திலும் இருக்கிற ஏகபோக பஸ் கம்பெனிக்காரர்கள்தான் இராமநாதபுரத்தில் நூற்பாலையை அமைக்க உரிமம் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையா? அதற்குமாறாக அங்கே ஏன் கூட்டுறவுத் துறையில் நூற்பாலையை அமைக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுறவுத்துறைகளிலும் நூற்பாலைகளை அமைக்கிறோம். தனியார்களது மனுக்கள் வரும்போது அவற்றை நாம் மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி:** இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகையால் அங்கே புதிய தொழில்களை ஆரம்பிக்க மத்திய அரசின் உதவியோடு உதவி வழங்கப்படுகிறதா? அந்த உதவி இதற்கும் அளிக்கப்பட்டுள்ளதா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசாங்கம் இதற்கு 15 சதவிகிதம் மானியம் வழங்குகிறது.

**திரு. த. சோணையா:** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்படுகின்ற நூற்பாலைகள் எல்லாம்—அரசோ அல்லது கூட்டுறவுத் துறைகளோ ஆரம்பிக்கும்போதெல்லாம்—மேற்கு இராமநாதபுரத்திலே ஆரம்பிக்கப்படுகின்றன. கிழக்கு இராமநாதபுரத்திலே இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, கிழக்கு இராமநாதபுரத்திற்கு, வேலை வாய்ப்பை உத்தேசித்தாவது தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ் நாட்டில் எங்கே ஆரம்பித்தாலும் அதற்கு உதவி செய்யப்படும்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, என்னுடைய கேள்வி அருப்புக்கோட்டை—இராஜபாளையத்தில், ஒன்று காலங்குடி, மற்றொன்று இராஜபாளையம், மற்றொன்று முதுகுளத்தூரில் உள்ள ஏகபோக பஸ் உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இப்பொழுது மத்திய அரசாங்கம் டெக்ஸ்டைல் பாலிசியில் புதிதாக நாங்கள் முடிவெடுத்ததற்குப் பின்னாலேதான் இந்த மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அனுமதி கிடைக்கும். அவர்கள்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்த அப்ளிகேஷன் போட்டிருக்கிற நிறுவனம் ஏற்கனவே மில் வைத்து நடத்துகிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை ஒருவரே பல தொழில்களை நடத்தக் கூடாது என்பது. அந்த அடிப்படையில் இந்த மனுவை நிராகரிக்க அரசு என் முயற்சி செய்யவில்லையென்பதை அறியலாமா?

[1975 பிப்ரவரி 26

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை ஒருவரே பல தொழில்களை ஆரம்பிக்கக் கூடாது என்பதல்ல. இந்த லைசன்ஸ் கொடுக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம்தான் இதைப் பரிசீலித்து அனுமதிக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வியில் வேறு விவரம் கேட்கவில்லை. இராஜபாளையம்—அருப்புக்கோட்டையிலிருக்கிற ஏகபோக மில் முதலாளிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்பதுதான். அதையாவது அமைச்சரவர்கள் ஞாபகம் வைத்துச் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அமைச்சருக்கு நிறைய ஞாபகம் இருக்கிறது. இதிலே இருப்பதெல்லாம் மனு போட்டவர்கள் யார் என்பது. இப்பொழுது மத்திய அரசு அனுமதி வழங்குவதாக இல்லை. அவர்கள் டெக்ஸ்டைல் பாலிசியில் ஒரு முடிவு எடுத்தபிறகுதான், அனுமதி யாருக்குத் தொடுப்பது என்று முடிவெடுப்பார்கள். நாம் மத்திய அரசாங்கத்துக்கு அனுப்புகிறோம். அவர்கள் தான் அதைப்பற்றிக் கூறவேண்டும்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** அருப்புக்கோட்டை என்ற பெயர் வந்ததாலே நானும் அது சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்கலாம் என்று நினைக்கிறேன். அருப்புக்கோட்டையில் ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தனிப்பட்ட முறையிலே மில் நடத்த முன் வந்தால், அவர்களுக்கு ஊக்கம் தர, மில் வைக்க அரசு சிபாரிசு செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட முயற்சிக்கு முதலிடம் தரப்படும். அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு தரும்.

**திரு. பெ. சீனிவாசன்:** இந்த அனுமதி கோரி விண்ணப்பம் கொடுத்திருக்கிற நிறுவனத்தின் பெயரை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?



1975 பிப்ரவரி 26]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 6 பேர் மனு போட்டிருக்கிறார்கள். ஆர்.என். சபாரத்தினம், சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட், வி. ஆர். இராஜாராம், மதுரை, கே. ஆர். அழகப்பன், திருநகர், மதுரை, ஸ்ரீ ஜெய விலாஸ், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், ஒ. எம். எஸ். எல். மெய்யப்ப செட்டியார், குவாலிட்டி ஸ்பின்னிங் மில்ஸ், ஜெயரங்க விலாஸ், இராஜபாளையம்.

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு விசைத் தறிகள்**

*** 91 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்படும் விசைத் தறிகள் கொள்முதலுக்கென பெங்களூரில் உள்ள "சன்ரைஸ்" கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1973-ம் ஆண்டுக்கு முன், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக கைத்தறித்துணித் துறை விசைத்தறிகள் செய்யும் கம்பெனிகளிடமிருந்து விலைவாசி விபரங்களைப் பெற்று மிகவும் குறைந்த விலையைக் குறிப்பிட்ட "பெங்களூர் சன்ரைஸ் இன்டஸ்டிரியல்ஸ்" கம்பெனியிடம் பேசி, மற்றும் கொள்முதல் நிபந்தனைகளை முடிவு செய்தபின், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான விசைத்தறிகளை வாங்க அக் கம்பெனிக்கு எழுதியது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த 'சன்ரைஸ் கம்பெனி' அதனை ஒப்புக்கொண்ட அளவிலே இந்தத் தறிகளைத் தந்துவிட்டார்களா? இம்மாதிரியான ஒரு கம்பெனியே இல்லையென்ற ஒரு புகார் கிளம்பி, இம்மாதிரி மோசடியான காரியம் நடந்திருப்பதாகச் சொல்லப்பட்டதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப்பற்றி நான் விசாரித்ததிலே, அந்தக் கம்பெனியிடத்திலே வாங்கியிருப்பதாகத்தான் எனக்குத் தகவல். இப்பொழுது அங்கத்தினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே இதைப்பற்றி மேலும் விசாரிக்கலாம்.

[1975 பிப்ரவரி 26

**திரு. கி. ஜெயராமன் :** தலைவரவர்களே, அலாட்மெண்ட் செய்யாமல் மீதியிருக்கிற விசைத்தறிகளைக் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்க அரசுக்கு நோக்கம் இருக்கிறதா ? அல்லது ஏற்கனவே விண்ணப்பம் செய்திருக்கிற தனிப்பட்ட நபர்களுக்கு அலாட்மெண்ட் செய்ய அரசு யோசனை செய்திருக்கிறதா ? அவ்வாறாயின், எப்பொழுது அந்த அலாட்மெண்ட் செய்து முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் நாட்டிலே அன்ஆதரைஸ்ட் ஆர் இல்லீகல் பவர்லூம்ஸ் ஏராளமாக இருக்கின்றன. அன்ஆதரைஸ்ட். இல்லீகல் பவர்லூம்ஸ்களுக்கு அனுமதி கொடுக்கலாம் என்று மாநில அரசுக்கு மத்திய அரசு தந்திருக்கிற எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவேதான் யாருக்கு அதைக் கொடுப்பது என்ற பிரச்னை எழுந்தது. நாம், எல்லோருக்கும் அனுமதி கொடுத்து விடுகிறோம். இனிமேல் அனுமதி கொடுக்க எங்களுக்கு அனுமதி கொடுங்கள். நாங்கள் மத்திய அரசுக்குத் தற்போது எவ்வளவு அன்ஆதரைஸ்ட், இப்படி அன்ஆதரைஸ்ட் பவர்லூம்ஸ் வராமலிருக்க நாங்கள் சட்டம் கொண்டு வரவும் தயாராக இருக்கிறோம் என்று மத்திய இல்லீகல் பவர்லூம்ஸ் உள்ளனவோ, அவை அத்தனைக்கும் அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு மறுத்து விட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** எவ்வளவு தறிகள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது ? அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ? அப்படி நிறைவேற்றப்படாவிட்டால், அதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே நான் சொன்னேன். 286 பவர்லூம்கள் வாங்க முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் வாங்கவில்லையென்று சொன்னார்கள். வாங்கியதாக எனக்குத் தகவல். ஆகவே, அது பேலூர் விசாரிக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, கைத்தறி பாதிக்கப்பட்டிருக்கிறது விசைத்தறிகளால் என்பது முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அனுமதி பெறாமலே விசைத்தறிகள் இயங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்



1975 பிப்ரவரி 26]

...

ஞர்கள். அது எந்த அடிப்படையில் என்று தெரியவில்லை. பல கூட்டுறவுக் கடன்களை வாங்குகிறார்கள் கைத்தறியாளர்கள். ரூ. 50,000 கடன் வாங்குகிறார்கள். ஆனால், ரூ. 1 இலட்சம் அளவு துணிகள் தேங்கியிருப்பதால், வேலையில்லாமல் கால் வயிறு கஞ்சிகூடச் சாப்பிட முடியாமலிருக்கிறார்கள் நெசவாளர்கள். ஆகவே, கைத்தறி பாதிக்கப்படாமலிருக்கிற அளவிலே விசைத்தறியை அரசாங்கமே தடுத்து நிறுத்துமா ? அல்லது கைத்தறிகள் உற்பத்தி செய்கின்ற துணியை அரசாங்கமே வாங்கி, இரண்டு தறிகளும் நடக்க முயற்சி செய்யுமா ? ஏழை எளிய மக்கள் ஈடுபட்டிருக்கிற கைத்தறியை வாழவைக்க அரசாங்கம் இம்முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விசைத்தறியே கூடாது என்று முடிவு எடுக்க முடியாது. அகில இந்தியாவிலும் அது அனுமதிக்கப்படுகிறது. ஆனால், விசைத்தறியிலே கைத்தறிக்குப் போட்டியாக சில ரகங்களை உற்பத்தி செய்யக் கூடாது என்று சட்டப்படி, பூரணமாகத் தடுப்பதுதான் கைத்தறிக்குப் பாதுகாப்பு என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

**திரு. க. சுப்பு :** பெங்களூரிலே 'சன்ரைஸ் இண்டஸ்ட்ரீஸ்' எவ்வளவு காலமாகச் செயல்பட்டு வருகிறது, அதனுடைய உரிமையாளர்கள் யார் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தற்பொழுது விவரம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விசைத்தறியே கூடாது என்பது கொள்கையல்ல, ரகங்களை ஒதுக்குவதுதான் கொள்கை என்று சொன்னார்கள். விசைத்தறியில் சில ரகங்களை உற்பத்தி செய்யக் கூடாது, அவற்றை கைத்தறியில்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று—அதற்கு ஒதுக்க வேண்டுமென்று ஒருபுறம் சொல்லிவிட்டு, விசைத் தறிகள் எண்ணிக்கை அதிகரித்து வந்தால், நடைமுறையில் எப்படிப் பொருந்திவரும் என்பது புரியவில்லை. அப்படி விசைத் தறிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது நாம் எடுத்துவரும் கொள்கையை முறியடிப்பதாக அமையாதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, இம்மாதிரி புதிதாக விசைத்தறிகளை வாங்குவதைத் தடுக்க அரசு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விதைத்தறியைக் கொண்டு வருவதா இல்லையா என்பது அகில இந்திய அளவிலே மத்திய அரசாங்கம் முடிவெடுக்க வேண்டிய ஒன்று. நம்மைப் பொறுத்த அளவிலே, விசைத்தறி கைத்தறிக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமே தவிர, போட்டியாக இருக்கக் கூடாது என்பது கொள்கை. அதற்கு ஒரே வழி, கைத்தறிக்காக ஒதுக்கியிருப்பதை விசைத் தறியில் உற்பத்தி செய்யக் கூடாது என்று சொல்வதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சர்க்கரை ஆலைகளை நாட்டுடைமையாக்கல்

* 92 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க மாநில அரசு மத்திய அரசின் கருத்தினைக் கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) நாடு முழுவதும் தனியார் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகளை உடனடியாக நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற தனது கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்துள்ளது. ஆயினும், இந்தியா முழுவதிலுமுள்ள சர்க்கரை ஆலைகளை நாட்டுடைமையாக்குவது எக்காரணத்தை முன்னிட்டும் சாத்தியமாகாது என்று இந்திய அரசு கருதுமேயானால், மாநில அரசு தனது ஆட்சி வரம்பிற்குள் அமைந்துள்ள சர்க்கரை ஆலைகளை நாட்டுடைமையாக்க அதற்கு மத்திய அரசு இசைவளிக்கலாம் என்று இந்த அரசு கருத்து தெரிவித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்குவது சம்பந்தமாக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் ஏதாவது நேரடியாகக் கருத்தினைப் பரிமாறியிருக்கிறதா? அதற்கு அவர்கள் என்ன பதிலளித்தார்கள் என அறியலாமா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கமிஷனிடத்திலே இந்தக் கருத்தை வலியுறுத்திட 25—8—1974 அன்று முதலமைச்சரவர்கள் பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நம் கருத்தை ஏற்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லி. இது சம்பந்தமாக முடிவு செய்யும்போது மாநில அரசினுடைய கருத்துக்களும் கவனிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி: சார், மத்திய அமைச்சர் பதில் சொல்லக் கூடிய காலத்தில் எல்லா மாநில சர்க்கார்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு முடிவெடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே உத்திரப் பிரதேசத்தில் இரண்டு ஆலைகளை மாநில சர்க்கார் எடுத்திருக்கிறது. அதேபோல், சமீபத்தில் ஆந்திரா அசெம்பிளியில் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு, தேசியமயமாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள கரும்பின் விலை குறைவாக இருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. ஆகவே, முக்கியமான 4, 5 மில்களையாவது சர்க்கார் எடுக்க முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசு கருத்துக் கேட்பதற்கு முன்னாலேயே 25-8-1974 ஆம் நாளன்று நம்முடைய மாநில அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் கொடுத்திருக்கிற பதிலிலே

The Union Minister for Agriculture and Irrigation has stated that the recommendations made by both the Groups of the Sugar Industry Enquiry Commission in regard to nationalisation of Sugar is under the consideration of the Government of India and that the suggestions contained in the Chief Minister's D.O. letter will be taken into consideration while arriving at a decision.

என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த ஷுகர் இன்டஸ்ட்ரீஸ் என்குயரி கமிஷன் அரசுடைமையாக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து, பார்லிமெண்டிலே இருக்கக்கூடிய 300 உறுப்பினர்கள் கூட அப்படிச் சொல்லியிருக்கிறார்களே, அதேமாதிரி நம்முடைய

தமிழ்நாட்டிலேகூட சில மில்களையாவது எடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்லா சர்க்கரை ஆலைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றுதான் சொல்லி யிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம், பதில் இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** உத்திரப் பிரதேசத்தில் அவற்றை எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதே, தமிழ் நாட்டிலே உள்ளவற்றை ஏன் ஆக்கக்கூடாது? நமக்குள்ள சிக்கல்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றி நாம், அந்த கமிஷனுக்கு, எதிர்காலத்திலே நாம் கூட்டுறவுத் துறையிலும் சர்க்கார் துறையிலும்தான் அந்தத் தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இப்போதுள்ள தனியார் ஆலைகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். உத்திரப் பிரதேசத்தில் எழுந்துள்ளதுபற்றி சட்ட சிக்கல்கள்— அட்வகேட் ஜெனரல் ஒரு கருத்துச் சொல்கிறார், சொலிசிட்டர் ஜெனரல் ஒரு கருத்துச் சொல்கிறார்—மத்திய அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. கோவை செழியன் :** தமிழ்நாட்டிலே உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளில் கோடிக்கணக்கான ரூபாய்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். அதிலே வெள்ளைப் பணம், கறுப்புப் பணம் எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த லாபம் விவசாயி களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பிரைஸ் பிக்சேஷனால் பாதிக்கப்படுகிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு போனஸ் தரமுடியும், டிவிடண்ட் தரமுடியும். ஆனால், அதைத் தராமல் இருப்பதற்குக் காரணம் கறுப்புப் பணத்திலே போய்விடுகிறது என்பதுதான். ஆகவே, நாமே சட்ட மன்றத்திலே அவ்வகளை யெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தீர்மானம் போட்டு அனுப்பலாம். அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வேண்டுமானால் அதற்காக



போராட்டமோ அல்லது வேறு முறைகளிலோ முடிவு செய்தால் அதற்கு எல்லாக் கட்சிகளும் தயாராக இருக்கிறோம். மாநில அரசு அதைச் செய்யுமென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. கோவை செழியன் :** கேள்வியை முடிப்பதற்குள் மைக்கை நிறுத்திவிட்டார்கள். அதற்கான வழிவகைகளை நம்முடைய மாநில அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து சில வாசகங் களைச் சொன்னால் மாண்புமிகு அங்கத்தினருக்குப் புரியும் என்று நினைக்கிறேன். அதிலே கறுப்புப் பணத்தைப்பற்றி ஒன்றும் கிடையாது.

"...... We strongly feel that sugar which is an item of mass consumption should be produced in the public or co-operative sector. This is important from the points of view of consumers of sugar as well as cane growers. As you know, in the past there have been frequent complaints that the private sugar industry has not been playing fair to the cane growers and consequently the cane growers have not been receiving as good a price as they should have. We therefore feel that the sugar industry in the private sector only should be nationalised forthwith. Since the industry is located all over the country, we would naturally prefer that the nationalisation is made in the entire country. However, if for any reason, the Central Government does not find it possible to nationalise the sugar mills all over India, I would request that the Government of India may give concurrence to the State Government to nationalise the sugar factories in their jurisdiction . . ."

என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே, நம்முடைய அரசின் சார்பிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கிடைக்கா விட்டால்தான் தீர்மானம் போடுவது போன்ற பிரச்னைகள் எழும்.

[1975 பிப்ரவரி 26

### மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை

* 93 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்கப்படவிருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் புதிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கேற்ற வளம் பொருந்திய இடங்களில் மாயூரம் பகுதியும் ஒன்று.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, கீழத் தஞ்சையிலே அமைப்பதைப்போல் மேலத் தஞ்சையிலும் அமைக்கின்ற செயற்குறிப்பு இருந்ததே அது என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தஞ்சாவூர் தாலுகாவிலே ஒரு ஆலை அமைப்பதற்கான குறிப்பு இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால் பேலும் மேலும் சர்க்கரை ஆலைகளைத் தமிழ்நாட்டிலே உருவாக்காமல் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 8 ஆலைகள் துவக்குவதாகக் குறிப்பு இருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே மற்ற மாநிலங்களிலே மகாராட்டிரம் போன்ற மாநிலங்களிலேயெல்லாம் மிக அதிகமான எண்ணிக்கையில் சர்க்கரை ஆலைகள் இருக்கும்போது நமக்கு மட்டும் ஏன் குறைவாக இருக்கிறது? அதிகமான சர்க்கரை ஆலைகளை



1975 பிப்ரவரி 26]

பெற்றால் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும். நம்முடைய பொருளாதாரமும் பெருகும். ஆகவே, அதிகமான சர்க்கரை ஆலைகளைக் கேட்டுப் பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலைகள் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்த 8 ஆலைகளை எந்தத் துறையிலே துவங்குகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பொதுத் துறையிலே (Public Sector) கரும்பு உற்பத்தியாளர்களின் பங்குடன் (Participation) ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

### *Sale of Molasses.*

* 94 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether the State Government have imposed any restriction on the sale of molasses from the Sugar Mills; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) கரும்புச்சாற்று கசண்டின் விற்பனை, 1961ஆம் ஆண்டு மத்திய கரும்புச்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு உத்தரவின் நிபந்தனைகளுக்குட்பட்டு நடத்தப்படுகிறது. இந்த உத்தரவின் கீழ், சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கரும்புச்சாற்றுக் கசண்டு முழுவதும் மாநில கரும்புச்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு அதிகாரி தனது தனி அல்லது பொது ஆணையின்படி ஒதுக்குவோருக்கு வினியோகம் செய்யப்பட வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த மொலாஸஸ் கொடுக்கக் கூடிய முறையிலே ஒரு டன்னுக்கு 5 ரூபாய் கொடுக்கிறார்கள். வெளி மார்க்கெட்டிலே 400 ரூபாய்க்கு டன் விற்கிறது. 100 டன் கரும்புக்கு 40 டன் மொலாஸஸ் கிடைக்கிறது. இதனால் ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது, ஆனால் தனிப்பட்டவர்கள் லாபம்

பெறுகிறார்கள். ஆகவே, சர்க்கார் அந்த ஆர்டரைத் தளர்த்தி நேரடியாக ஒரு டன் 400 ரூபாய்க்கு விற்கக்கூடிய முறையில் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. விநியோக அதிகாரம் மொலாஸஸ் கண்ட்ரோல் ஆர்டரின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசீலனை செய்து அதைச் செய்வார்கள்.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** இந்த மொலாஸஸ் அடுத்த மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா? அங்கே நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அடுத்த மாநிலங்களுக்கு அனுப்பினால் அதனால் எக்ஸைஸ் டியூட்டி கிடைக்குமல்லவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மத்திய சர்க்கார் அனுமதித்தால் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. பெரும்பாலும் நம்முடைய மாநிலத்திலேயே அது செலவிடப்படுகிறது.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலைகளில் பொதுவாக கோவாப்ரேடிவ் செக்டாரில் இருக்கின்றவற்றில் நஷ்டம் வருகிறது, ஆனால் தனியார் செக்டாரில் இருப்பவற்றில் லாபம் வருகிறது. அதற்குக் காரணம் கோவாப்ரேடிவ் செக்டாரில் இருக்கின்ற ஆலைகளில் உள்ளவர்கள் அதிகாரிகள், டெக்னிஷியன்கள் பணத்தை வாங்கிக் கொண்டு மொலாஸஸிலே சர்க்கரைச் சத்தை விட்டுவிடுகிறார்கள். அதனால் மொலாஸஸில் ஷுகர் கன்டன்ட் நிறைய இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுத்தால்தான் ஒழுங்கீனமான முறைகள் இல்லாமல் இருக்கும், ஆகவே அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் நஷ்டம் ஏற்படவில்லை, லாபம்தான் வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த மொலாஸஸைப் பயன்படுத்தி கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று புகார்கள் எல்லாம் வருகின்றனவே, அப்படி இல்லாமல் இதைப் பயன்



படுத்தி க்ளுகோஸ் தயாரிக்க முடியும் என்று சொல்கிறார்களே அப்படிப் பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய வழியை அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புகார்கள் முறையாக வந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது நான் கொடுத்திருக்கிற தகவல்கள்தான் என்னிடத்திலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லசாமி. . .

**திரு. எஸ். நல்லசாமி:** கோவை செழியன் அவர்கள் கேட்டபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லசாமி. நீங்கள் இருப்பது உங்கள் இடம் இல்லை, உங்கள் இடத்திலிருந்து கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் மொலாசஸ்பற்றிக் குறிப்பிடும்பொழுது கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளில் அதிக சர்க்கரை சேதப்படுகிறது என்று சொல்கிறார்கள். மொலாசஸை எடுத்து டெஸ்ட் பண்ணத் தெரிந்தவரா? டெக்னிகல் சைட் பற்றி அவருக்குத் தெரியுமா? தெரியாத ஒன்றைத் தெரிந்ததுபோலப் பேசுவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம்.

### சேலத்தில் சாக்கடை அமைப்புத் திட்டம்

*95 வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரத்தின் மையத்தில் அமைந்திருக்கும் திருமணிமுத்தாற்றுப் பாதையில் ஓடும் சாக்கடை நீரை மையப்படுத்தி ஓடுகின்றவாறு நீண்ட சாக்கடையைக் கட்டுகின்ற திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது குறித்து சம்பந்தப்பட்ட நகரமன்றத்தின் கருத்து கோரப்பட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) பரிசீலனையில் இருந்து பின்னர் கைவிடப்பட்டது.

(இ) ஆம்.

திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்த சாக்கடை அமைப்புத் திட்டம் வருவாய் தரும் திட்டம் அல்ல. ஆகவே, அரசு இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களை அமைப்பதற்கு நகராட்சி மன்றங்களுக்கு ஓரளவிற்குக் கடன் தொகையும், மீதியை மானியமாகவும் கொடுப்பதற்கு யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அந்தந்த நகரசபைகளின் வருமானம், மற்றவைகளைப் பொறுத்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இதற்குத் தனியாக சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தி, இதற்கான எஸ்டிமேட் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## சங்ககிரி குடிநீர் வழங்கு திட்டம்

* 96 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரியில் குடிதண்ணீர் வினியோகஞ் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சங்ககிரிப் பேரூராட்சியின் உடனடி குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, ரூ. 88,000 செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்ட சிறு திட்டமொன்று நிறைவேற்றி முடிக்கப்பட்டு, தற்போது தினம் சுமார் 3,000 காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் சில தினங்களில் இது நாள் ஒன்றுக்கு 10,000 காலனாக அதிகரிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், சங்ககிரி பகுதியில் இந்தக் குடிநீர்த்திட்டம் அமலுக்கு வந்த பிறகும்கூட பல பகுதிகளில் குடிதண்ணீரை விலைக்கு வாங்கும் நிலைமையிருக்கிறது என்பதை



அரசு அறியுமா? அம்மாதிரியான நிலைமைகள் இல்லாமல் அவ்வளவு பேருக்கும் முழுதும் தண்ணீர் கொடுப்பதற்கான வழி வகைகளை அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, பலயிடங்களிலே இப்படி இருப்பதாக இதுவரையிலே கவனத்திற்கு வரவில்லை. இப்பொழுது நம்முடைய பஞ்ச நிவாரணத்தின் மூலமாக பலயிடங்களில் குடிதண்ணீருக்கு ஏற்பாடுகள், கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் உடனடித் தேவைக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். நிரந்தரத் திட்டங்களைப் பொறுத்தவரையில் இப்படி எதுவும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## *Zamin lands in Seithur.*

* 97 Q.—Thiru K. T. K. TANGAMANI
Thiru S. ALAGARSAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether the peasants of Seithur Thevathanam areas of Ramanathapuram district have demanded recently the distribution of nearly 7,000 acres of zamin lands; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இறைக் கோட்ட நிலங்கள் என அழைக்கப்படும் சுமார் 7,000-க்கும் அதிகமான நிலம் சேத்தூர் தேவதானப் பகுதியில் உள்ளது. விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஹைகோர்ட்டில் முடிவு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறதே, அப்படியிருந்தும் இதில் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு என்ன தயக்கம்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, மொத்த பரப்பளவு 25,000 ஏக்கர் நிலம். செட்டில்மெண்ட் காலத்தில் 7,000 ஏக்கர் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 13,000 ஏக்கர் நிலம் குன்று, மலைப் பகுதி விவசாயத்திற்குப் பயன்படாது என்று தள்ளப்பட்டது. மீதியுள்ள 5,000 ஏக்கர் நிலத்தில் காட்டிலாக்கா, எந்தெந்த வகையிலே மரம் வளர்க்க

வேண்டுமென்ற திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இதற்கிடையிலே இந்த வேண்டுகோளும் இருப்பதால் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, ஏற்கனவே இந்த நிலம் சாகுபடிக்கு மிகவும் லாயக்கான நிலம் என்றும், ஜமீன் காலத்தில் அங்கே சாகுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறது என்றும் தெரிகிறது. மத்தியிலே ஜமீன்தாரின் ஆடு, மாடுகள் மேய்வதற்காகப் பயன்பட்டு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஹைகோர்ட்டில் வழக்கு நடந்து, அவருக்கு இல்லை என்று தெரிந்து விட்ட பிறகு, அதை ஏழை அரிசன மக்களும் விவசாயிகளும் சாகுபடி செய்து கொண்டு வந்தார்கள். அவர்கள் மேல் கேஸ் போட்டு அரசு நடவடிக்கை எடுத்தும், அவர்களை அப்புறப்படுத்தியும் அவர்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதைத் தடுத்து நிரந்தரமாக அவர்கள் சாகுபடி செய்ய பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, பலவிடங்களிலே சாகுபடிக்கு நிலம் இருக்கிறது. எங்களுக்கு வேண்டும் என்று வேண்டுகோள் வருகிறது. அதற்கு ஒரு பாலிசி முடிவு எடுத்து, 50,000 ஏக்கர் தான் கொடுக்க முடிந்தது. மீண்டும் கொடுக்க வேண்டுமென்றால் பரிசீலனை செய்ய வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறுயிடங்களிலிருந்தும் வேண்டுகோள் வருகிறது, அதைக் கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அதுபோல இதுவும் பரிசீலனையில்தான் இருக்கிறது.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, மரம் வளர்ப்பதனால் ஏராளமான நஷ்டம்தான் வரும். ஆகையால் அதனைக் கைவிட்டு நிலமற்ற கூலி விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அரசு பண்ணை அமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அரசுப் பண்ணை நடத்த வேண்டுமென்ற ஆய்வு வேளாண்மைத் துறை செயற் குறிப்பிலே இருப்பதாக அறிகிறேன். ஆனால் காடு வளர்ப்புத் திட்டம் நஷ்டம் தருவதாகும் என்று சொல்வது தவறான கணக்கு ஆகும்.





*Animal Husbandry works in Padappai village.*

* 98 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether Intensive Village Development Camp has been started at Padappai village in Chingleput district for Animal Husbandry activities ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த அடிப்படையில் இந்த பைலட் ஸ்கீமினால் என்ன லாபம் இருக்கிறது? ஒரு பக்கத்தில் தீவனம் இல்லாமல் மாடுகள் ஏராளமாகக் கேரளா போன்ற மாநிலங்களுக்குச் செல்கின்றன. அடுத்த வருஷம் மழை பெய்தால் மாடுகள் கிடைக்காதுபோல் இருக்கிறது. ஒரு பக்கம் அப்படியும், ஒரு பக்கம் இப்படியும் இருக்கிறது. இதன் பலன் என்ன? மற்ற மாவட்டங்களிலும் நகரங்களுக்கு இப்படிப்பட்ட 'பேக்கேஜ் திட்டத்தை' ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, படப்பை பகுதியில் பரீட்சார்த்தமாக வைத்து மாடு, பன்றி, கோழி வளர்ப்பு போன்ற பல்வேறு அம்சத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிலர் பயனடைந்து இருக்கிறார்கள். உதாரணமாக கோழி வளர்ப்பில் 74 பேர் பங்கு கொண்டு நாள் ஒன்றுக்கு 4,100 முட்டைகள் கொடுக்கிறார்கள். இதுபோல் பேக்கேஜ் ஸ்கீமை விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் யோசனையாகும்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக எந்தெந்த முறையிலே உதவி கொடுக்கப்படுகிறது? ஏழை விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்களுக்கு, அவர்களை நம்பி இந்தக் கால்நடை வளர்ப்புக்கு அவர்களுக்கு முன் உதவி செய்ய அரசு முன்வருமா?

---

@ பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, கால்நடை வளர்ப்புக்கு—தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கோழி வளர்ப்புக்குப் பணம் கொடுக்கப்படுகிறது. அரசுத் துறையிலேயும் இதுபோன்று கால்நடை வளர்க்க முன் வருபவர்களுக்கு உற்சாகம் அளிக்கப் பல யோசனைகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தின் மூலம் சில உதவிகளைப் பெற்று, மாநில அரசும் இதற்குப் பங்குத் தொகை கொடுத்து குறுகிய அளவிலே செய்யப்படுகிறது. இதை விரிவாகச் செய்ய வேண்டுமென்பது தான் அரசின் யோசனை.

**திரு. அ. பரந்தாமன் :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள படப்பை கிராமத்தில் உள்ள கிராம வளர்ச்சி முகாமுக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் முதலாவது ஆண்டு விழாவிலே பங்கு கொள்ள வந்தார்கள். ஆனால் அங்கே கோழித் தீவனம் சரிவரக் கிடைப்பதில்லை என்றும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து இந்தக் கோழிப்பண்ணைகளை ஆரம்பிப்பதற்காகத் தனியார் முன் வந்தால் சரிவரக் கடன் உதவி செய்யவில்லை என்றும் புகார் இருக்கிறது. இதைச் சரி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, படப்பையிலே உள்ள கோழி வளர்ப்புச் சங்கத் தலைவர் சமீபத்தில் என்னைச் சந்தித்து இந்தக் குறையைக் கூறினார்கள். தீவனச் செலவு அதிகமாகிறது, சற்றுக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது 2 ரூபாய் சமீபத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் விவரத்தைப் பார்க்கும்பொழுது இது சரிவர நடைபெற்றால் நல்ல திட்டமாக இருக்கும் என்று தெரிகிறது. எனவே இது படப்பை என்ற கிராமத்தில் மட்டும் காட்சிப் பொருளாக இல்லாமல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கிராமம் என்ற அளவில் தீவிரத் திட்டமாக எடுத்து நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, பெரிய அளவில் செய்ய வேண்டுமென்று முயற்சி ஆய்வில் இருக்கிறது என்று கூறியிருக்கிறேன்.



**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட திட்டத்தை உண்டாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எல்லோரும் பார்த்துப் பின்பற்றும் அளவிற்கு ஓரத்தநாட்டில் இதுபோன்ற திட்டம் இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கால்நடை வளர்ப்புக்கு என்று மருந்தகங்களையும், டாக்டர்களையும் போட்டு கால்நடைகளை நல்லமுறையில் பராமரிக்கிறோம். ஆனால் நல்ல மாடுகளை அடிமாட்டிற்காக கேரளாவிற்கு வாங்கிப் போவதை முதலமைச்சர் தடுக்கப் போவதாக அறிவிப்புக் கொடுத்தார்கள். அப்படித் தடுக்கப்படுகிறதா? அப்படித் தடுக்காமல் கால்நடைகளை வைத்திருப்பதில் என்ன பிரயோசனம்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தடுக்கின்ற முயற்சியை எந்த அளவிற்குச் சட்டத்திலே செய்ய முடியும். என்பதுதான் இப்பொழுதுள்ள பரிசீலனையாகும். சட்டத்திலே சாத்தியக்கூறு இருந்தால் அதையும் செய்வது நல்லதுதான்.

*Milk from Soya Beans*

* 99 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon'ble the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to produce milk from Soya beans in this State?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இம்மாநிலத்தில் சோயா மொச்சையிலிருந்து பால் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சோயா பீன்ஸிலிருந்து பால் எடுக்கும் திட்டம் இப்பொழுது அரசினிடத்தில் இல்லை என்று சொன்னார்கள். இனிமேலாவது இந்தத் திட்டத்தை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், தமிழ்நாட்டில் பால் பற்றாக்குறை அதிகமாக இருப்பதை அறிகிறோம். இரண்டாவதாக, இருக்கின்ற பாலில் உள்ள சத்துக்களை விட சோயா

பீன்ஸிலிருந்து தயாரிக்கப்படும் பால் உடம்பிற்கும் நல்லது, 'ஹார்ட் அட்டாக்' வராது, உடலில் கொழுப்பு ஏற்படாது. இத்தகைய நல்ல சத்துக்கள் இருப்பதால் இதை உடனடியாக அரசு பரிசிலனை செய்து இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பால்வளத் துறையின் மூலம் பசுக்களில் இருந்து பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தைத்தான் தற்போது தமிழ்நாடு முழுவதும் தீவிரத் திட்டங்களாகப் போட்டு செயல்படுத்தி வருகிறோம். சோயா மொச்சையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற பால் பற்றிய இந்தக் கேள்விக்குப் பதில் வேண்டுமானால் அது வேளாண்மைத் துறை மூலமாகத்தான் வரவேண்டும்.

### காகித உறை தயாரிப்புப் பிரிவு, ஊத்துக்கோட்டை

* 100 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள காகித உறை தயாரிக்கும் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** ஊத்துக்கோட்டையில் நடைபெறுகிற காகித உறை தயாரிக்கும் தொழிற்சாலை இலாபத்தில் நடைபெறுவதாகச் சொல்லுகிறார்கள். இன்னும் நிறைய பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற முறையில் ரா-மெட்டீரியல்ஸ் கொடுத்து இதை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஊத்துக்கோட்டையில் இருக்கும் காகித உறை தயாரிக்கும் தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று 1973-74-ம் ஆண்டில் நம்முடைய தொழில் துறை இயக்குநர் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள்.



மத்திய அரசாங்கத்திலிருந்து இதற்கு ஒரு லட்சம் ரூபாய் அனுமதி கொடுத்தார்கள். ஆனால் இந்த அனுமதி தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய இதுபோன்ற தொழிற்சாலைக்கு டிரெயினிங் ப்ரோகிராமுக்கும் பயன்படுத்த வேண்டுமென்ற நிபந்தனை விதித்துவிட்ட காரணத்தால் மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய முடியவில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் பெறலாமென்றால் தொழிற்சாலையின் விதிமுறைகள் அதற்கும் இடம் தராத காரணத்தால் தொழிற்சாலையை விரிவுபடுத்த முடியாத நிலை உள்ளது.

**திரு. எஸ். வடிவேல்:** வைக்கோலை மூலப் பொருளாகக் கொண்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று சொல்லப் படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக வைக்கோல் கிடைப்பதை அடிப்படையாகக் கொண்டு அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்தால் அரசு அதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இது காகித உற்பத்தி செய்யப்படுகிற தொழிற்சாலை பற்றிய கேள்வி அல்ல. காகிதத்திலிருந்து கவர் செய்கின்ற தொழிற்சாலை பற்றியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### வேலூர் கிறித்தவக் கல்லூரி மருத்துவமனையில் வேலைநிறுத்தம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூர் கிறித்தவக் கல்லூரி மருத்தவ மனையில் வேலை நிறுத்தம் குறித்து டாக்டர் ஹாண்டே, திருவாளர்கள் கோவை செழியன், ஜே. ஜேம்ஸ், கே. டி. கே. தங்கமணி, என். மருதாசலம், என். கே. பழனிசாமி ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே பொருள்

பற்றி டாக்டர் ஹாண்டே, திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து ஏன் விவாதிக்க வேண்டுமென்பது பற்றிச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாகக் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தமிழ்நாட்டுக்கு மிக முக்கியமான ஒரு நல்ல காரியத்தை இந்த அரசு செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறேன்.

பொதுவாக நம்முடைய ஆசிய நாட்டிலே நல்ல சிறந்த மருத்துவமனையாக இருப்பது வேலூரில் இருக்கின்ற கிறித்துவ மருத்துவ மனையாகும். பெரிய பெரிய தீர்க்க முடியாத வியாதிகளை எல்லாம் அந்த ஆஸ்பத்திரியில் வந்து தங்கியிருந்து பல பேர் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். சமீபத்தில்கூட மிஸ்ரா மரணமடைந்தபோது அவருடைய இளவல் காயப்பட்டார்; அவர் கூட அந்த ஆஸ்பத்திரியில் வந்து தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள். இப்படி அகில உலகத்திலேயே சிறந்த மருத்துவ மனைகளில் ஒன்றாக இருப்பது வேலூர் மருத்துவ மனையாகும். அதற்காகத் தமிழ்நாடு பெருமைப்பட வேண்டும். இன்றைக்கு அவர்கள் செய்து வருகிற சேவை மனிதாபிமான அடிப்படையில் செய்து வருகிற சேவையாகும். அதைக் குலைக்கிற வகையில் சில காரியங்கள் நடைபெற்று வருவது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். இதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும் என்பதோடு நாட்டு மக்கள் இந்தப் பின்னணியில் என்ன அடங்கி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதும் என்னுடைய அவா ஆகும்.

இந்த மருத்துவ மனையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதற்கு இன்றைக்கு தொழிலாளர்களுடைய பிரச்சினைதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரை தொழிலாளர்களுடைய கோரிக்கைக்கு விரோதமாக என்றைக்கும் நடக்கமாட்டோம். அது தனிப் பிரச்சினை.



... ஆனால், தொழிலாளர் பிரச்சினை என்ற பெயரை வைத்துக் கொண்டு அந்த ஆஸ்பத்திரியை ஒழித்துக் கட்டுகிற காரியத்தை நம்முடைய அமைச்சரவையில் இருக்கும் சில அமைச்சர்கள் செய்து வருகிறார்கள். அதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். அதற்கான காரணத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

ஸ்ட்ரைக் ஆரம்பமாவதற்குக் காரணமே தொழிலாளர் பிரச்சினை அல்ல. அங்கிருக்கும் ஒரு டாக்டர், மருத்துவக் கல்லூரியின் புரொபசர் ஒரு மாணவியிடத்தில் பணத்தை வாங்கிக் கொண்டு அந்த மாணவி பெற்றிருந்த குறைந்த மார்க்கை மாற்றி உயர்ந்த மார்க் போட்டு அந்த மாணவிக்குப் பாஸ் அளித்து விட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த டிடெய்ல்சுக்குள் எல்லாம் போகக் கூடாது. ஸ்ட்ரைக் நடக்கிறது, வேலை நடக்கவில்லை என்பதைப் பற்றி மட்டுந்தான் சொல்ல வேண்டும். விவரங்களுக்குள் எல்லாம் சென்றால் அது விவாதமாகிவிடும்.

**திரு. கோவை செழியன் :** ஆரம்பத்தை மட்டும் சொல்லி விடுகிறேன். அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுத்தார்கள் அந்த மருத்துவ மனையைச் சார்ந்த அதிகாரிகள், அந்த டாக்டருடைய உறவினர் அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்கும் காரணத்தால் ஸ்ட்ரைக் செய்தார்கள். அதன் பின்னர் அரசாங்கத்திடத்தில் சில பேர் அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய கவலை எல்லாம்—அது தொழிலாளர் பிரச்சினை என்று சொன்னால் அந்தப் பிரச்சினை தொழிலாளர் நல அமைச்சருக்கோ அல்லது லேபர் டிப்பார்ட்மென்டுக்கோ, லேபர் கமிஷனருக்கோ சென்றிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் நேரடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு பல காரியங்களைச் செய்து வருவது எவ்வளவு வேதனைக்குரியது என்பதற்கு இரண்டொரு உதாரணங்களைக் கூறுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூட தவறாக இதைப் பற்றி எடுத்துச் சொல்லி அவருக்கும் தவறான முறையில் ஒரு எண்ணத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவருக்கும் சொல்லிக்

[திரு. கோவை செழியன்] [1975 பிப்ரவரி 26

கொள்ள விரும்புகிறேன்—உண்மையில் தொழிலாளர் பிரச்சினை அல்ல இதற்குக் காரணம். நம்முடைய அமைச்சரவையில் இருக்கும் தனி அமைச்சருடைய பிடிவாத குணத்தால் இது ஏற்பட்டிருக்கிறது. அவர் அந்த மருத்துவ மனையின் அதிகாரிகள் தன்னுடைய காலில் வந்து விழவேண்டு மென்பதற்காகத் தூண்டி விடப்பட்ட காரியம் இவ்வளவும். அதற்காக அவர் அந்த மருத்துவ மனையில் இன்றைக்கு செய்து வரும் காரியம் எவ்வளவு கொடுமை யானது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அவருடைய டிப்பார்ட்மெண்டில் இருக்கும் அதிகாரிகளை வைத்துக் கொண்டு அந்த ஆஸ்பத்திரியைச் சார்ந்த சுவர் 6 அங்குலம் தள்ளிக் கட்டப்பட்டிருக்கிறது என்று கூறி அந்தச் சுவரை இடிக்க வேண்டுமென்பதற்காக உத்தரவு போயிருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு வேண்டிய தண்ணீரைப் பாலாற்றில் இருந்து எடுத்து வருகிறார்கள். அதற்காக கடந்த நாலைந்து வருஷத் திற்குக் கணக்குப் போட்டு பணம் கட்ட வேண்டுமென்று கூறி யிருக்கிறார்கள். அப்படிப் பணம் கட்டாவிட்டால் தண்ணீரை நிறுத்து என்று சொல்லியிருக்கிறார்கள். 4,000 ரூபாய் கட்ட வேண்டிய பணத்திற்கு 7,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள், மின்சாரத்தை நிறுத்திவிடுவோம் என்று சொல்லுகிறார்கள்.

*        *        *        *        *

எப்படியாவது அந்த ஆஸ்பத்திரியில் இருக்கும் நிர்வாகம் தங்கள் காலடியில் விழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

நாட்டுக்கு மிக முக்கியமான பிரச்சினை. தயவு செய்து தலையிடாதீர்கள். நீங்கள் என்னைப் பேச அனுமதிக்காவிட்டால் நான் சத்தியாக்கிரகம் செய்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையானாலும் அந்த விவகாரத்திற்குள் இப்போது போகக் கூடாது. விவாதத்திற்கு அனுமதி கொடுத்த பிறகுதான் விவரங்களைக் கூறலாம். பேச அனுமதி கொடுக்காவிட்டால் சத்தியாகிரகம் செய்வேன் என்றெல்லாம் பேசுவது பார்லிமெண்டரி முறையல்ல.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1975 பிப்ரவரி 26]

**திரு. கோவை செழியன்:** குற்றச்சாட்டைச் சொல்லுகிறேன். இதைப்பற்றிப் பாராளுமன்றத்தில் கூட துணைச் சபாநாயகர் தீர்ப்புக் கூறியிருக்கிறார். இங்கே பேசுவதற்காக எனக்கு இருக்கிற உரிமையைப் பறிக்காதீர்கள், கட்டுப்படுத்தாதீர்கள். நான் பேசுவது தவறாக இருந்தால் அமைச்சர் மறுக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டுப்படுத்தப்பட்டுள்ள உரிமைதான் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப் பதற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டுந்தான் கூற வேண்டுமே தவிர அங்கே என்ன நடந்தது என்பதை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. விவாதத்திற்கு அனுமதி கொடுத்த பிறகு பேச வேண்டிய பேச்சை இப்போது பேசக் கூடாது.

**திரு. கோவை செழியன்:** அந்த நிர்வாகம் எப்படி சீர் குலைக்கப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

[முற்பகல் 10.00]

அந்த மானேஜ்மென்ட்டை அரசின் காலடியில் விழவேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சட்டப்படி தான் நடக்க முடியும் என்று அமைச்சரவர்களுக்குச் சொல்லியிருக் கிறார்கள். அதற்காக அவரை அந்த இடத்திலிருந்து மாற்றியிருக் கிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படியில்லை என்று சொல்லட்டும். நான் சொல்கிற குற்றச்சாட்டு தப்பு என்று இருந்தால் மறுக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. நாட்டின் மிகப் பெரிய மருத்துவ மனையை இந்த அளவுக்குச் சீர்குலைக்கச் செய்கிறார்கள். சில குட்டி தேவதைகள் கட்சியைக் கெடுக்கின்றன என்று சொல்கிறார்கள். அவர்கள் யார் என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல வேண்டாமா? பாவம் அவருக்கு உண்மை தெரியாது. அவர்கள் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதற்காக உண்மையைச் சொல்கிறேன். அங்கே இருக்கும்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

டி.எம்.ஓ.-வை மாற்றியிருக்கிறார்கள். அந்த ஆஸ்பிடல் விவகாரத்தில் அவர்கள் தலையிட மறுத்து இருக்கிறார்கள், அதற்காக * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செழியன், இது எல்லாம் எப்படி இதிலே வரும்? இது ஒத்திவைப்புத் தீர்மானம். இதை அனுமதிக்க வேண்டியதற்காக என்னென்ன முக்கியமான விஷயங்கள் தேவைப்படுகிறதோ அதைத்தான் சொல்லவேண்டும். இந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்ட பிறகு அந்த விவாதத்தில் என்னென்னவெல்லாம் சொல்லலாமோ அவற்றை யெல்லாம் இப்போது சொல்கிறீர்கள். பேசுவது என்று சொன்னால் எதை வேண்டுமானாலும் பேசலாமா?

[ * * * * * ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் இல்லாதவர்கள் மீது குறை கூறுவது, இந்த அவையில் வந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்கள் மீது குற்றச்சாட்டு கூறுவது கூடாது. குற்றச்சாட்டு சொல்கிற நேரத்தில், பாராளுமன்றத்தில் துணை சபாநாயகர் எந்த முறை மேற்கொண்டார் என்பது வேறு. நம்முடைய மன்றத்தைப் பொறுத்த வரையில், இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர் மீது வேறு ஒரு உறுப்பினர் குற்றம் சாட்ட விரும்பினால் (திரு. செழியன் நின்று கொண்டிருந்தார்—உட்காருங்கள், நான் நிற்கிறபோது - நீங்கள் உட்கார வேண்டும்.) அந்தக் குற்றச்சாட்டை எழுதி பேரவைத் தலைவரிடத்தில் கொடுத்து, பேரவைத் தலைவர் அதை அந்த உறுப்பினருக்குக் கொடுத்து, அந்த உறுப்பினர் பதில் அளிக்க வகை செய்யப்பட்ட பிறகு அதை இங்கே அனுமதிப்பது என்று இருக்கிறது. அந்த முறை இங்கேயுள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து எடுத்த முடிவு. அது நம்முடைய விதி முறையில் இல்லையென்றாலும், எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து எடுத்த முடிவு. அதோடு மட்டுமல்லாமல், இது எப்படி பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்கது என்று காரணம் கூறுகிற நேரத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டு. * * * * என்று பேசுவது முறையல்ல.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. கோவை செழியன் :** தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அமைச்சரைக் காப்பாற்றுகிற முறையில் ஈடுபடுகிறீர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளத் தேவையில்லை. உறுப்பினருக்கு இருக்கும் உரிமையைக் கெஞ்சிக் கேட்டு பெற்றுக் கொள்கிற வகையில், சபாநாயகருடைய தயவில் எந்த உறுப்பினரும் இருக்கக்கூடாது. நான் எந்த அமைச்சரையும் காப்பாற்றக்கூடிய நிலையில் இல்லை. காப்பாற்றுவது என்னுடைய கடமை அல்ல. உறுப்பினர்கள் அவர்களுடைய உரிமையை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அந்த இடத்தில் உட்கார்ந்து இருக்கிறவரை எந்தக் கட்சியையும் சேராதவர். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினருடைய உபதேசம் வேண்டாம். உறுப்பினர்கள் தங்களை உணர்ந்து பேச வேண்டும். உறுப்பினர் இந்தத் தீர்மானத்தின் மீது எப்படிப் பேசவேண்டும், அது ஒரு பெரிய நிறுவனம், அது செயலற்று இருக்கிறது, அதற்கு என்னென்ன காரணங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்தால், இது குறித்து விவாதிக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்ல வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** இந்தப் பிரச்னை எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காக இவற்றை யெல்லாம் சொல்கிறேன். பலபேர் அங்கே சாகப் போகிறார்கள். அதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். * * *

**திரு. நா. வீராசாமி :** இவையெல்லாம் குறிப்பேட்டில் ஏறிக் கொண்டு இருந்தால் எப்படி?

**திரு. கோவை செழியன் :** விசாரணை வையுங்கள். நான் அதை புரூவ் செய்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 பிப்ரவரி 26

(திரு. ஆலடி அருணா, திரு. நா. வீராசாமி நின்று கொண்டிருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூன்று பேரும் உட்காருங்கள். குற்றச்சாட்டுகள் கூறுவதற்கு ஒரு மரபு இருக்கிறது. அதை நாம் கடைப் பிடிக்க வேண்டுமென்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த மரபின் வழியாக சொல்லுங்கள். அதை விட்டு விட்டு, நான் சொல்கிறேன், விசாரணை வையுங்கள், நிரூபிக்கிறேன் என்று சொல்வது நாம் ஏற்றுக்கொள்ளாத முறை.

**திரு. கோவை செழியன் :** எப்படி இதையெல்லாம் பேசாமல் இருப்பது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டு சாட்டுகிற நேரத்தில் ஒரு மரபைக் கடைபிடிக்க வேண்டுமென்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த மரபை ஒட்டிப் பேசுங்கள். இல்லை, இல்லை நான் பேசுகிறேன், விசாரணை வையுங்கள், நான் புரூவ் செய்கிறேன் என்று சொல்வது முறையல்ல. விசாரணை வைக்க பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை. விசாரிக்கவும் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை. நீங்கள் அந்த மரபை ஒட்டித் தான் பேச வேண்டும். அந்த மரபை ஒட்டிப் பேசாதது சபைக் குறிப்பில் ஏறுவது முறையாக இருக்காது.

**திரு. ஆலடி அருணா :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மதிப்பிற்குரிய நண்பர் செழியன் அவர்கள் அவசியமும், பொது முக்கியத் துவமும் வாய்ந்த ஒரு பிரச்னையை இந்த அவைக்குக் கொண்டு வருகிறார்கள். அது எப்படி அவசியமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்தது என்பதை உணர்த்துவதற்காக அந்த நிகழ்ச்சியின் முக்கியமான சில விஷயங்களை எடுத்துக்காட்டி, இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியது கடமையாகும். அது எப்படி அவசியமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்தது என்பதை எடுத்துக்கூற அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கருவாக இருக்கும் சிலவற்றை கோர்வையாக எடுத்துச் சொல்ல வேண்டி



1975 பிப்ரவரி 26]

யிருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது உண்மை விவரம் (பாக்சுவல் பொசிஷன்) சொல்லும்போது அவைகள் குற்றச் சாட்டாக இருந்தால் அது எங்கள் குற்றம் அல்ல. இட்ஸ் எ பாக்ட். அதை ஒத்துக்கொள்ள வேண்டும். திரு. செழியன் பேசுவது 'அலிகேஷன், அக்யுசேஷன்' என்று சொன்னாலும், அதுவே 'பாக்சுவல் பொசிஷன்'.

**திரு. கோவை செழியன் :** அது மட்டுமல்ல, இந்த மன்றத்தில்...

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, குற்றச்சாட்டு சொல் வதைப் பற்றி கவலையில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எதையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறது. *

**திரு. கோவை செழியன் :** குற்றச்சாட்டு நான் சொல்கிறேன். விசாரணை வையுங்கள், நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் ஒரு நிலையில் இருந்து பேச வேண்டும். தன்னை மறந்து உணர்ச்சி வசப்பட்டு பேசக் கூடாது. நீங்கள் எனக்குப் பேசு வதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்வதுபோல், அப்படிப் பேசக் கூடாது என்று சொல்வதற்கும் எனக்கு உரிமை இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இப்படிப் பட்ட பயங்கரமான குற்றச்சாட்டுகளை, * என்று சொன்னதாகச் சொன்னால், உள்ளபடியே அதற்கு என்ன ஆதாரம்? இப்படி ஆதாரம் அற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்வது என்பதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதே என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர்.

**திரு. கோவை செழியன் :** நான் இதுவரையில் சொன்னது தவறு என்று நிரூபணமானால் எந்தத் தண்டனையும் ஏற்றுக் கொள்ளத் தயார். உண்மையைச் சொல்வதற்கு என்ன ஆதாரம் வேண்டும்? நாட்டில் மழை பெய்து இருக்கிறது என்று சொன்னால், அதைக் காட்ட முடியுமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திருப்பித் திருப்பி சொல்வதெல்லாம், இந்த மன்றத்தில் இருக்கும் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட மரபு. குற்றம் சாட்ட விரும்பினால், எந்த உறுப்பினர் மீது குற்றம் சாட்ட விரும்புகிறார்களோ அந்த உறுப்பினருக்கு பதில் அளிக்க வாய்ப்பளிக்கக்கூடிய நிலையில், குற்றச்சாட்டை முதலிலேயே எழுதி பேரவைத் தலைவரிடம் கொடுக்கவேண்டும். பேரவைத் தலைவர் அதை உறுப்பினருக்கு அனுப்பி வைப்பார். பின்னர் அது அவையில் எழுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படும். ஆகவே, குற்றம் சாட்டப்படுகிற உறுப்பினருக்கு பதில் அளிக்கிற முறையில் அவைகள் அவையில் எழுப்பப்பட வேண்டும். அது எல்லாக்கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்ட மரபு. ஆகவே, அந்த மரபை மீற வேண்டாம். நான் பேசுவேன், நீங்கள் விசாரணை நடத்துங்கள், நான் நிரூபிக்கிறேன், இல்லை என்று சொன்னால் எந்தத் தண்டனையும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று சொல்வது முறை அல்ல. ஆகவே, அந்த முறையை ஒட்டி ஆதாரம் இருக்க வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் சொல்லப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு பேரவைக் குறிப்பில் ஏறாது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. செழியன் அவர்கள் தன்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் இந்த அவையில் இல்லாத உறுப்பினரின் குடும்பத்தைப் பற்றிப் பேசுவது, இந்த அவையின் மரபு தானா, அதை சபைக் குறிப்பில் ஏற்றுக்கொள்வது இந்த அவைக்கு உகந்தது தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே அதற்கு தீர்ப்பு அளித்தாகி விட்டது.

**திரு. கோவை செழியன்:** நான் சொல்கிற இந்தக் கருத்துக்கள் இந்த நாட்டையே பாதிக்கும் ஒரு முக்கியமான கருத்தாக இருப்பதால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன். யார் மீதும் எனக்குத் தனிப்பட்ட முறையில் விருப்போ, வெறுப்போ கிடையாது. இந்த நாட்டின் மீது, இந்த நாட்டில் இருக்கும்



நிலைமைகள் மீது எனக்கு அக்கரை உண்டு. நான் சொல்வது பொய் என்று சொன்னால், நான் எந்தத் தண்டனை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்கிறேன்.

முதலமைச்சருக்கே தவறாக குறிப்பு தந்து இருக்கிறார்கள். முதலமைச்சருக்கு உண்மை தெரிந்தால் இப்படி நடந்து கொள்ள மாட்டார். இது லேபர் டிஸ்ப்யூட் என்று சொன்னால், லேபர் மினிஸ்டர் இதில் தலையிட்டு இருக்கவேண்டும். ஏன் மற்ற அமைச்சர், முதலமைச்சர் இதில் தலையிடுகிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு இது தான். லேபர் டிஸ்ப்யூட் என்றால், லேபர் மினிஸ்டர் இதில் தலையிட்டு இருக்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், தலைமைச் செயலக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். உடனடியாக அந்தச் சங்கத்தை ரிகக்னைஸ் செய்ய முடியாது என்று சொன்னீர்கள். அப்படி உள்ள இந்த அரசாங்கம் வேலூர் மருத்துவ மனையில் இத்தகைய அக்கரை காட்ட வேண்டிய நெசசிடி என்ன என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, என்னுடைய தீர்மானத்தின் முக்கியமான கரு எல்லாம் வேலூர் ஹாஸ்பிடலில் நடக்கும் வேலை நிறுத்தம் பற்றியதாகும். அந்த வேலூர் நகரமே அந்த மருத்துவமனையைத்தான் முழுவதும் நம்பி இருக்கிறது.

இன்றைக்கு அவர்கள் இந்த ஆஸ்பத்திரியை வேறு மாநிலத்தற்கு மாற்றுவதற்கு முயற்சி எடுக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் செய்கின்ற குற்றத்தை, நான் மந்திரி சபையில் இருக்கிற அமைச்சர் பேரில் உள்ள குற்றச்சாட்டை என்னுடைய பேச்சில் சொல்ல வேண்டாமா? வேண்டுமானால் அமைச்சர் அவர்களின் பெயரை நான் சொல்கிறேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர். அதனால் தமிழ்நாட்டிற்குப் பெரிய இழப்பு. ஆகவே இதைப்பற்றி விவாதித்தே தீரவேண்டும். விவாதிப்பதற்கு இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முன்பு கூறியது போல செழியன் அவர்கள் பேச்சிலே நாம் முறைப்படி ஏற்றுக்கொண்ட சபை கட்டுப்பாட்டை ஒட்டிப் பேசாத குற்றச்சாட்டுகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். அவைகளைப் பத்திரிகைகளும் வெளியிட வேண்டாம்.

[திரு. சி. ஆறுமுகம்] [1975 பிப்ரவரி 26

**திரு. கோவை செழியன்:** தயவு செய்து நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்: தாங்கள் இப்பொழுது சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து குற்றச்சாட்டுகளை ஒட்டிய பகுதிகள் நீக்கப்படும் என்று சொன்னீர்கள். இது எங்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை. பத்திரிகைக்காரர்களுக்கும் தெரியுமோ என்னவோ தெரியாது. எந்தப் பகுதிகளைத் தாங்கள் எக்ஸ்பஞ்ச் செய்யச் சொல்கிறீர்கள் என்பது எங்களுக்கு தெளிவாகத் தெரியவேண்டும். தெளிவாகச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய சுப்பிரமணியம் அவர்கள் எந்தப் பகுதிகள் என்று கேட்கிறார்கள். அந்தப் பகுதிகளை நான் சபை நடவடிக்கை குறிப்பிலிருந்து பார்த்து, எந்தப் பகுதிகள் என்று சொல்கின்ற வரையிலும் பத்திரிகை யாளர்கள் இதை வெளியிடவேண்டாம் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** செழியன் அவர்கள் பல விஷயங் களைச் சொன்னார்கள். தாங்கள் குறிப்பைப் பார்த்து எநதப் பகுதிகளை நீக்கவேண்டும் என்று சொல்வதாகச் சொல்கிறீர்கள்? அப்படியென்று சொன்னால் அதுவரையில் இங்கே பேசப்பட்ட விஷயங்கள் எதையுமே பத்திரிகையாளர்கள் வெளியிடக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வது,

* * *

இப்படி சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள்தான்.

**திரு. கோவை செழியன்:** என்னுடைய பேச்சை பூராவுமே எடுத்து விடுங்களேன். நான் சொன்னது சத்தியம், உண்மை. நான் சொன்னது பூராவும் உண்மை.

**திரு. ஆலடி அருணா:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



975 பிப்ரவரி 26]

**திரு. எம். சுரேந்திரன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் என்ன பேசினார் என்பது குறிப்பில் இருக் கிறதா, இல்லையா என்பதை அவ்வப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய வசதிக்கேற்ற முறையில் பார்த்துச் சொல்வது என்பது அவை உறுப்பினர்களுடைய உரிமைகளை எடுத்துக் கொள்வதாகும். அம்மாதிரி உறுப்பினர்களுடைய உரிமைகளுக்கு மாறாக நீங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பது நல்லது அல்ல. இது மரபுக்கு மாறாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும் புது மரபு அல்ல. ஏற்கனவே உள்ள மரபை ஒட்டியதுதான்.

**திரு. ஆலடி அருணா:** ஒரு உறுப்பினர் வெளியிட்ட கருத்துக் களில் அன்பார்லிமெண்டரியான வார்த்தைகள் அல்லது அவைக்கு இழுக்கு வரக்கூடிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருந்தால், அவைகளை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டும். நண்பர் செழியன் அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச சொன்னார். அந்தக் குற்றச்சாட்டுகளில் ஏதாவது அன்பார்லிமெண்டரி வார்த்தைகள் இருந்தால் அல்லது அவைக்கு இழுக்கு ஏற்படக் கூடிய வார்த்தைகள் இருந்தால் அவற்றைத் தான் நீக்கவேண்டும். அவைகள் எந்த வகையில் அன்பார்லிமென்டரி என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் ஏற்றுக்கொண்ட மரபுக்கு மாறாக சொல்லக் கூடாது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிய பேச்சுக்களிலிருந்து அந்தப் பேச்சினுடைய முழுப் பகுதியோ அல்லது ஒரு சில பகுதிகளையோ நீக்குவதற்கு சட்டமன்ற விதி முறைகளில் எந்தெந்த சூழ்நிலையில் இருந்தால், அவைகள் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான வரையறை இருக்கும்பொழுது, விதிமுறைகளில் ஒரு வரையறை இருக்கும் பொழுது, பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய சொந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியோ அல்லது அவையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளைப் பின்பற்றியோ நடவடிக்கைக்

குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கவேண்டும் என்று சொல்வது முறையல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய விதிகளில் விதி 235-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

A word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified or grossly iregular ..........

MR. SPEAKER: grossly irregular .........

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நம்முடைய கோவை செழியன் அவர்கள் பேச்சிலே ஏதாவது பகுதிகள் இந்த விதிக்குள் வந்திருக்குமேயானால் அவைகளை மட்டும்தான் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'கிராஸ்லி இர்ரெகுலர்' என்றால் என்ன அர்த்தம்?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** என்னுடைய கருத்து, கோவை செழியன் அவர்களுடைய பேச்சிலே எந்தப் பகுதியாவது இந்த விதிமுறைக்கு உட்பட்டு வந்தால், உங்கள் அதிகாரத்தைப் பயன் படுத்தி அந்தப் பகுதிகளை மட்டும் நீக்குவதில் ஆட்சேபனை இல்லை. இப்பொழுதுள்ள பிரச்னையெல்லாம் கோவை செழியன் அவர்கள் 10 நிமிடம் தன்னுடைய நிலையை விளக்கிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரிந்தாலும், அவர்களுடைய பேச்சின் எந்தெந்தப் பகுதி நடவடிக்கைக் குறிப்பில் எழுதியிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் அறையிலே போய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பொழுதே எந்தப் பகுதிகள் நீக்கப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதைப்பற்றி ஸ்பெஸிபிக்காகச் சொல்லவில்லை. நீங்கள் ஜெனராலாகத் தான் சொல்லியிருக்கிறீர்கள். பொதுப்படையாக இந்த இந்தக் கருத்துக்களைப்பற்றி பேசிய பேச்சு நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

* * *

என்று சொல்லப்பட்ட அந்தப் பகுதிகள் மட்டிலும் நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அது 'கிராஸ்லி இர்ரெகுலர்'. நாம் ஏற்றுக்கொண்ட ஒரு மரபு, கட்சித் தலைவர்களெல்லாம் ஒப்புக்கொண்ட ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்த மன்றத்தில் குற்றம் சொல்வதற்கு நாம் ஒரு மரபை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த மரபைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று கட்சித் தலைவர்களெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பதைத் தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த மரபு வேண்டாம் என்று சொல்லிவிட்டால் எனக்கு ஒன்றும் கவலை இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இதற்கு நேரடியாக பதில் சொல்ல முடியாது. இங்கே கோவை செழியன் அவர்கள் பேசினார்கள். தாங்கள் அதன் பேரில் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். குறிப்பாக, அவையில் இல்லாத ஒரு குறிப்பிட்ட முக்கியமான நபரைப்பற்றி அவதூறாக இங்கே சொல்வது சரியல்ல, அந்தப் பகுதியை நீக்கவேண்டும் என்று சொன்னீர்கள். அதுவரையில் சரி என்று நினைக்கிறேன். ஆனால், ஒரு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருகிற நேரத்தில் அரசாங்கமோ, அரசினுடைய ஒரு அங்கமோ தவறு செய்திருக்கிறது, அப்படி தவறு செய்திருக்கிறது என்ற காரணத்திற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தவறு செய்கிறார் என்று கூறுகிறபொழுது, ஒரு குறிப்பிட்ட அமைச்சர் தவறு செய்கிறார் என்று கூறும்பொழுது, அதிலே இருக்கக்கூடிய சில பதங்களை மாற்றலாம், 'வெர்டு ஆர் வெர்ட்ஸ்' மாற்றலாம். அப்படி இல்லாமல், ஒரு குறிப்பிட்ட அமைச்சர் மெனக்கிட்டு வேண்டுமென்றே மோட்டிவோடு இந்த ஸ்தாபனத்தை சீர்குலைவு செய்வதற்காக ஏற்பாடுகள் செய்தார் என்பது அவருடைய குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு அம்சம் இல்லாமல் போனால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே இடமில்லாமல் போய்விடும். ஒரு குறிப்பிட்ட பகுதி . . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

* * *

என்று சொல்லலாமா ?

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏதாவது ஒரு அமைச்சரைப் பற்றி அல்லது உறுப்பினரைப்பற்றி குற்றச்சாட்டான சில காரியங்களைச் சொல்ல வேண்டும் என்றால், கண்டிப்பாக அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவித்து, பிறகு அந்த உறுப்பினரும் பதில் சொல்வார். அது சரியான நிலைமை. இது அமைச்சர் அவை பேரில் குற்றச்சாட்டு. குறிப்பிட்ட அமைச்சர் பேரில் இடையே வரக்கூடிய குற்றச்சாட்டு. அப்படி ஒரு குற்றச்சாட்டை கூறுகிற பொழுது முன்கூட்டியே சொல்வதற்கு இடமில்லாமல் போய் விடுகிறது. இன்றைக்கு காலையில் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். ஒரு அவதூறான குற்றச்சாட்டு. பிரதமர் அவர்கள் சர்க்கரை ஆலை முதலாளிகளிடம் ரூ. 5 கோடி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜபல்பூர் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்ன பொழுது சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுந்திருந்து அது உண்மை இல்லை என்று சொல்லியிருக்கிறார். அப்பொழுது துணைச் சபா நாயகர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், குற்றச்சாட்டும் இருக்கட்டும், பதிலும் இருக்கட்டும், இரண்டும் நிகழ்ச்சிக் குறிப்பில் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். அது உங்களைக் கட்டுப்படுத்தாது என்பது வேறு விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொண்ட மரபைக் கடைப்பிடிக்க வேண்டாமா? பாராளுமன்ற துணைத் தலைவர் என்ன சொன்னார் என்பது அல்ல. நாம் ஒரு மரபைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒத்துக் கொண்டிருக்கிறோம். அதைக் கடைப்பிடிக்க வேண்டாமா என்பது தான் நான் கேட்பது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மரபு என்னவென்றால் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் பேரில் குற்றச்சாட்டு சொல்கிற பொழுது 'இது பற்றி நான் பேசப் போகிறேன்' என்று சொல்லி,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



ஒரு காபி தங்களிடம் கொடுத்து, நீங்கள் அதை அந்த உறுப்பினரிடம் காட்டிக் கேட்ட பிறகு, இவர் பேசலாம். அவர் பதில் சொல்லலாம். இல்லையென்றால் பேசாமல் இருந்து விடலாம். இது சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு விஷயம். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவையின் பேரில் குற்றச்சாட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அமைச்சர் அவையில் இருக்கிறவர் தவறு செய்திருக்கிறார் என்று தான் வரும். ஒன்றும் சொல்லாமல் இருந்தால் அப்படித்தான் வந்திருக்கும். ஹெல்த் மினிஸ்டர் இப்படி தவறு செய்துவிட்டார் அல்லது லேபர் மினிஸ்டர் இப்படி தவறு செய்துவிட்டார் என்று தான் ஒன்றும் சொல்லாமல் இருந்தால் வரும். ஆனால் பிரத்தியேகமாக ஒரு அமைச்சர் தலையிட்டார் என்று நண்பர் செழியன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்போது அந்த அமைச்சரே இல்லை என்று சொல்லிவிடலாம். அது சரியா இல்லையா என்று தாங்கள் முடிவு செய்து, தங்களுடைய முடிவைச் சொல்லலாம். அதோடு முடிய வேண்டியதே ஒழிய, இந்த அரசின்மீது சொல்கிற குற்றச்சாட்டுக்கள் குறிப்பில் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதில் சுவரை இடிக்கச் சொன்னார், தண்ணீர் விநியோகத்தை நிறுத்தச் சொன்னார், மின்சாரத்தை நிறுத்தச் சொன்னார் என்று சொன்னதை எல்லாம் நீக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. * *

(திருவாளர்கள் ஆலடி அருணா, கோவை செழியன், முனு ஆதி ஆகியோர் எழுந்தனர்).

அதுபற்றி திரு. தங்கமணியினுடைய கருத்து என்ன என்று நான் கேட்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உறுப்பினர் அவர்களே தான் சொன்னது உண்மை தான் என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் வேண்டுமானால் அது உண்மை அல்ல என்று சொல்லிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்ன எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் நீக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. * * * * *

என்பதை நீக்கச் சொன்னேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 பிப்ரவரி 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*     *     *

என்று சொல்லலாமா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏதாவது ஒரு அமைச்சரைப் பற்றி அல்லது உறுப்பினரைப்பற்றி குற்றச்சாட்டான சில காரியங்களைச் சொல்ல வேண்டும் என்றால், கண்டிப்பாக அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவித்து, பிறகு அந்த உறுப்பினரும் பதில் சொல்வார். அது சரியான நிலைமை. இது அமைச்சர் அவை பேரில் குற்றச்சாட்டு. குறிப்பிட்ட அமைச்சர் பேரில் இடையே வரக்கூடிய குற்றச்சாட்டு. அப்படி ஒரு குற்றச்சாட்டை கூறுகிற பொழுது முன்கூட்டியே சொல்வதற்கு இடமில்லாமல் போய் விடுகிறது. இன்றைக்கு காலையில் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். ஒரு அவதூறான குற்றச்சாட்டு. பிரதமர் அவர்கள் சர்க்கரை ஆலை முதலாளிகளிடம் ரூ. 5 கோடி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜபல்பூர் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்ன பொழுது சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுந்திருந்து அது உண்மை இல்லை என்று சொல்லியிருக்கிறார். அப்பொழுது துணைச் சபா நாயகர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், குற்றச்சாட்டும் இருக்கட்டும், பதிலும் இருக்கட்டும், இரண்டும் நிகழ்ச்சிக் குறிப்பில் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். அது உங்களைக் கட்டுப்படுத்தாது என்பது வேறு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொண்ட மரபைக் கடைப்பிடிக்க வேண்டாமா? பாராளு மன்ற துணைத் தலைவர் என்ன சொன்னார் என்பது அல்ல. நாம் ஒரு மரபைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒத்துக் கொண்டிருக்கிறோம். அதைக் கடைப்பிடிக்க வேண்டாமா என்பது தான் நான் கேட்பது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மரபு என்னவென்றால் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் பேரில் குற்றச்சாட்டு சொல்கிற பொழுது 'இது பற்றி நான் பேசப் போகிறேன்' என்று சொல்லி,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1975 பிப்ரவரி 26]     [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஒரு காபி தங்களிடம் கொடுத்து, நீங்கள் அதை அந்த உறுப்பினரிடம் காட்டிக் கேட்ட பிறகு, இவர் பேசலாம். அவர் பதில் சொல்லலாம். இல்லையென்றால் பேசாமல் இருந்து விடலாம். இது சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு விஷயம். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவையின் பேரில் குற்றச்சாட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அமைச்சர் அவையில் இருக்கிறவர் தவறு செய்திருக்கிறார் என்று தான் வரும். ஒன்றும் சொல்லாமல் இருந்தால் அப்படித்தான் வந்திருக்கும். ஹெல்த் மினிஸ்டர் இப்படி தவறு செய்துவிட்டார் அல்லது லேபர் மினிஸ்டர் இப்படி தவறு செய்துவிட்டார் என்று தான் ஒன்றும் சொல்லாமல் இருந்தால் வரும். ஆனால் பிரத்தியேகமாக ஒரு அமைச்சர் தலையிட்டார் என்று நண்பர் செழியன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்போது அந்த அமைச்சரே இல்லை என்று சொல்லிவிடலாம். அது சரியா இல்லையா என்று தாங்கள் முடிவு செய்து, தங்களுடைய முடிவைச் சொல்லலாம். அதோடு முடிய வேண்டியதே ஒழிய, இந்த அரசின்மீது சொல்கிற குற்றச் சாட்டுக்கள் குறிப்பில் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதில் சுவரை இடிக்கச் சொன்னார், தண்ணீர் விநியோகத்தை நிறுத்தச் சொன்னார், மின்சாரத்தை நிறுத்தச் சொன்னார் என்று சொன்னதை எல்லாம் நீக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.     *     *

(திருவாளர்கள் ஆலடி அருணா, கோவை செழியன், மூனு ஆதி ஆகியோர் எழுந்தனர்)

அதுபற்றி திரு. தங்கமணியினுடைய கருத்து என்ன என்று நான் கேட்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உறுப்பினர் அவர்களே தான் சொன்னது உண்மை தான் என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் வேண்டுமானால் அது உண்மை அல்ல என்று சொல்லிவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் நீக்க வேண்டுமென்று நான் சொல்ல வில்லை.     *     *     *     *     *

என்பதை நீக்கச் சொன்னேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அதை மறுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உதாரணமாக, எம்.ஜி.ஆர். தான் அப்படிச் சொன்னார்—அவர் சொல்லவில்லை—என்று சொன்னால் எம்.ஜி.ஆர். தான் இங்கே வந்து மறுக்க வேண்டும். மறுக்கத் தயாரா?

(திருவாளர்கள் கோவை செழியன், ஆலடி அருணா, கா. காளிமுத்து, முனு ஆதி ஆகியோர் எழுந்திருந்து) நாங்கள் இருக்கிறோம் மறுப்பதற்கு. அவர்தான் வந்து மறுக்க வேண்டுமென்று இல்லை என்றார்கள். (கூச்சல் குழப்பம்.)

திரு. முனு ஆதி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஒரு அமைச்சர்மீது ஒரு உறுப்பினர் கடுமையான குற்றச்சாட்டைச் சொல்கிறார் என்றால் சபாநாயகர் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். இந்த சபையிலே சபாநாயகர்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். * * * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: * * * அதே நேரத்தில் அப்படி சொன்னதாக—எம்.ஜி.ஆர். தான் அப்படிச் சொன்னார் என்று நான் கேள்விப்படுகிறேன். அதை அவர் இங்கு வந்து மறுத்துவிட்டால் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

(திருவாளர்கள் கோவை செழியன், ஆலடி அருணா, முனு ஆதி, எட்மண்ட் ஆகியோர் எழுந்திருந்து) அவர் ஏன் வர வேண்டும், நாங்கள் இருக்கிறோம் என்றார்கள். (கூச்சல், குழப்பம்.)

திரு. ஆலடி அருணா: அவையில் இல்லாத ஒரு உறுப்பினரைப் பற்றி கேட்பது முறையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எம்.ஜி.ஆர். அவையில் இல்லாத உறுப்பினரா?

திரு. முனு ஆதி: அவர் இன்று வரவில்லை; ஆதலால் அதை நாங்கள் மறுத்தாக வேண்டும்; மறுக்கிறோம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நண்பர் எம்.ஜி.ஆர். அவையில் இல்லாத உறுப்பினர் என்று சொல்ல முடியாது. அவர் இந்த அவையில் ஒரு உறுப்பினர்தான். (குறுக்கீடு—இப்போது இல்லை என்றால் அவையில் இல்லாத உறுப்பினர்தான்). இந்த அவையில் இல்லாத உறுப்பினர் என்று சொன்னால் பரங்கிமலை தொகுதியில் மறு தேர்தல் நடத்த வேண்டும். அவர் இந்த அவையில் இருக்கிறார். நான் சொல்கிறேன்.

* * * அப்படிச் சொல்லவில்லை என்று நான் கூறுகிறேன். அதைப்போல ஒவ்வொன்றையும் சொல்வது, உடனடியாக மறுப்பது என்றால் அதை ஏற்றுக் கொள்ளலாமா? அப்படிப்பட்ட ஒரு விஷயத்தை முதலமைச்சரே சொல்லியிருக்கிறார் என்று எம்.ஜி.ஆர். வந்து மறுத்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். (ஆளுங் கட்சியினர் கைதட்டல்). (கூச்சல் குழப்பம்—திருவாளர்கள் ஆலடி அருணா, கோவை செழியன், முனு ஆதி, ஏ. சுப்பிரமணியம், எட்மண்ட், வ. ஆர். மாரிமுத்து ஆகியோர் எழுந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். திரு. மாரிமுத்து தன்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லட்டும்.

திரு. வ. ஆர். மாரிமுத்து: இந்த விஷயம் இவ்வளவு சூடு பிடித்துப் போனது வருந்தத்தக்கது. இதுபற்றி உறுப்பினர்கள் பெரிய விவாதத்தை நடத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் * * என்ற குற்றச்சாட்டு அவ்வளவு சரியானதல்ல (குறுக்கீடு). ஆகவே, அந்தக் குற்றச்சாட்டை நண்பர்கள் வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் நண்பர் செழியன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அதற்கு எதிர் குற்றச்சாட்டு என்று வரும். ஆகவே, செழியன் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (ஆளுங் கட்சியினர் ஆரவாரம்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 பிப்ரவரி 26

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கோவை செழியன் அவர்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது ஒரு சூடான விவாதம் நடைபெற்றிருக்கிறது. கோவை செழியன் இந்த அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சர் மீது சொன்ன குற்றச்சாட்டை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த அமைச்சரின் சார்பில் மறுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தக் குற்றச்சாட்டுக்கு சம்பந்தப்பட்டவர் எங்கள் கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் தங்களுக்கு ஒரு வேண்டுகோளாகத் தெரிவிக்கிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் நான் பேசும்போது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு சரியான ஆதாரம் கொடுத்தால் அது நடவடிக்கைக் குறிப்பில் ஏறும். அதுவரையில் ஏறாது என்று தாங்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்தீர்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சையும் (திரு. கோவை செழியன்: வேண்டாம் உட்காருங்கள்) கோவை செழியன் பேசிய பேச்சையும் தற்காலிகமாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, கோவை செழியன் அவர்கள் நம்முடைய அமைச்சர் ப.உ.ச. மீது கொடுத்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அது மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் ஏற உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(திருவாளர்கள் கோவை செழியன், கே. கந்தசாமி, வி. கிருஷ்ணமூர்த்தி, நா. வீராசாமி, திருமதி சத்தியவாணி முத்து ஆகியோர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எனக்கூறி எழுந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லட்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கனம் சபாநாயகர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை நண்பர் கோவை செழியன் அவர்கள் வேலூர் மருத்துவ மனை சம்பந்தமாகக் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் இந்த அவைக்கு உபயோகமான விஷயங்களையும், அதைப்போல இந்தப் பிரச்சனை சீக்கிரத்தில் முடிய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பிரச்சனையை எழுப்பி இருப்பார்களேயானால்



1975 பிப்ரவரி 26] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இந்த சூடான விவாதம் இங்கு தோன்றியிருக்க வேண்டியதில்லை. அவர் அதிலிருந்து தவறிவிட்டார் என்று நான் கருதுகிறேன். அது மட்டுமல்ல. ரயில்வண்டி வேகமாக ஓடி, தண்டவாளத்தை விட்டு கீழே இறங்கி தடம் புரண்டு ஓடுகிற நேரத்தில் நீங்கள் பிரேக் போட முயற்சிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில நேரங்களில் டிரைவரையும் மீறிப் போவதுண்டு. (சிரிப்பு).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நான் சொல்வது 'ஸ்லீப்பிங் அலிகேஷன்' கொண்டுவரும் போதே தடுத்திருந்தால் அவர்கள் கூறக்கூடிய 'வொய்ல்டு அலிகேஷன்' வந்திருக்காது. ஆகையால் நானாக கேட்டுக் கொள்கிறேன், நண்பர் கோவை செழியன் அவர்கள் வேலூர் மருத்துவ மனைப் பிரச்சனை தீர வேண்டும்; மருத்துவமனை சுமூகமாக நடக்க வேண்டுமென்று விரும்பினால் அதை மட்டும் கவனத்தில் கொண்டு, * * * என்று சொன்ன வார்த்தைகளையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**திருமதி சத்தியவாணிமுத்து:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் ஒரு அமைச்சர் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். அது உண்மையாக இருக்கலாம்—உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டாகவும் இருக்கலாம். ஆனால் இந்த மன்றத்தின் நடவடிக்கைக்கு மரியாதை அளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுந்திருந்து அதற்குப் பதில் கூறுவது மரபு. அது ஒழுங்காகவும் முறையானதாகவும் இருக்கும். சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அவைக்குக் காட்டிய மரியாதையாகவும் இருக்கும். ஆனால் அவர் இருக்க—அவர் சொல்லாமல்—முதலமைச்சர் அவருக்கு வக்காலத்து வாங்கி அதை மறுப்பதும் வேறு புதிய குற்றச்சாட்டுகளை தருவதும் லாவணி வைப்பதுபோல * * என்று திரும்பச் சொல்வதும் இந்த மன்றத்திற்கு அழகா? இந்த மன்ற நடவடிக்கைகள் முறையாக நடக்க தாங்கள் இதுபற்றி ஒரு முடிவு கூறவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மற்ற அமைச்சர்களுக்காக முதலமைச்சர் சொல்வது முறைதான். நான் ஏற்கனவே இந்த அவையில் அந்த அம்மையார் அமைச்சராக இருந்தபோது—அவர்களுக்காகவும் பல நேரம் வக்காலத்து வாங்கியிருக்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நான் இப்படிப்பட்ட பெரிய குற்றங்கள் எதுவும் செய்யவில்லை. எனக்காக ....

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று சட்டசபையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் ஒரு நல்ல மரபை ஏற்படுத்துவதற்கு மாறாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

* * என்கிற குற்றச்சாட்டு இருக்கிறதே இது மிகவும் பயங்கரமானது. அமைச்சராக இருந்தாலும்—நாங்களே நாளைக்கு அமைச்சர் பொறுப்புக்கு வந்தாலும் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் விரும்பத்தக்கவை அல்ல. * * * *

என்று ஆணித்தரமாக அந்த உறுப்பினர் குற்றச்சாட்டைச் சுமத்துவதனால் அதற்கு ஆதாரமான உண்மையான தஸ்தாவேஜிகள் அல்லது டெலிபோனில் சொன்னார் என்றாரே அதற்கு ஏதாவது டேப்ரெக்கார்டு இருந்தால் அவற்றை முன் கூட்டியே பேரவைத் தலைவரிடம் கொண்டுவந்து காட்டி, அவரது அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொண்டுதான் இதுபோன்ற குற்றச்சாட்டை இந்த அவையில் எழுப்பியிருக்க வேண்டும். அப்படியின்றி இதுபோன்ற குற்றச்சாட்டுகளை எழுப்புவதற்கு தாங்கள் அனுமதித்தால் இது எல்லோரையும் பற்றி வெளியில் உள்ளவர்கள் தப்பாக நினைப்பதற்குத் தான் இடமளிக்கும். *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைத்தான் முன்பே சொன்னேன். நம்முடைய தங்கமணி அவர்கள் இரு முறைகளைச் சொன்னார்கள். பார்லிமென்றத்தில் ஒரு முறை, ஒருவர் ஒரு அமைச்சர் மீது குற்றஞ் சாட்டினார். அதனைப் பிரதமர் மறுத்தார்கள். அங்கேயிருக்கிற துணைச் சபாநாயகர் அந்த

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





இரண்டும் அவைக்குறிப்பில் இருக்கட்டும் என்று சொன்னார் என்று தெரிவித்தார்கள். நம்முடைய மன்றத்திற்கு என்று ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபை ஒட்டித்தான் இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் ஏறுவது நல்லது அல்ல என்று தெரிவித்தேன். அந்தக் கருத்துக்கு மாறாக பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்திருப்பதால் உறுப்பினர் அவருடைய குற்றச்சாட்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். அதற்கு முதலமைச்சர் கொடுத்த மறுப்பும் இருக்கட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

(திரு. ஜேம்ஸ் எழுந்திருந்தார்).

**திரு. பெ. சீனிவாசன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். முதலமைச்சர் அவர்கள் மெஜாரிட்டி கட்சியின் சார்பில் இருப்பது உண்மை. முதலமைச்சராக முதலில் இருக்கிறார் என்ற காரணத்தினால் நினைத்த நேரத்தில் அவர் எங்கள் கட்சியின்மீது அவதூறுப் புழுதியை வாரித் தூற்றுகிறார். *

* * என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வந்து அதற்கு மறுப்புத் தெரிவிக்கட்டும்.

**திரு. பெ. சீனிவாசன்:** அது பார்ட்டியின் கலெக்ட்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடி. அந்தக் குற்றச்சாட்டிற்கு எங்கள் கட்சியின் சார்பில் மறுப்பு அளிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். நீங்கள் கோவை செழியனின் குற்றச்சாட்டை மட்டும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கச் சொல்லி உத்தரவிட்டுவிட்டு—முதலமைச்சர் சொன்னது மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும் என்று சொல்வது சரியானது அல்ல. இரண்டு பேர்கள் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். எது உண்மை என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக்குறிப்பில் கோவை செழியன் சொன்னதும் இடம்பெறும், முதலமைச்சர் சொன்ன மறுப்பும் இடம் பெறும் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, நான் சாஸ்வதமான நல்லதொரு மரபு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. கோவை செழியன் சொன்ன குற்றச்சாட்டை அடியோடு நீக்க வேண்டாம். அவர் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கான தக்க ஆதாரங்களைக் கொண்டுவந்து அவர் கொடுக்கட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் அதை அவைக்குறிப்பில் தாங்கள் ஏற்றுங்கள். தற்போதைக்கு கோவை செழியன், முதலமைச்சர் ஆகிய இரண்டு பேர்கள் சொன்னதையும் அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இடம் பெறுதிருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தை உங்கள் கட்சியில் உள்ள எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வழக்கம்போல உண்மைக்குப் புறம்பான செய்திகளைக் கூறி என்னைக் களங்கப்படுத்துகின்ற முயற்சியில் இன்றைக்கும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: பாயின்ட் ஆப் ஆர்டர். என்ன வழக்கம்போல (திரு. கோவை செழியன், திரு. முனு ஆதி குறுக்கீடு—கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, * * * இவ்வளவு பெரிய அபாண்டம் என் மீது சொல்லியதை நான் மறுக்கிறேன். அப்பேர்ப்பட்டவர்களை —அண்ணா காலடியில் கேட்டுக் கொள்கிறேன்—அவர்களை மன்னிக்க வேண்டுமென்று.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டும் அவைக் குறிப்பில் இருப்பதாகத்தான் தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இனி என்ன முடிவு எடுக்கப் போகிறீர்களோ, தெரியாது. * * * என்கிற குற்றச்சாட்டை அந்த அமைச்சரே மறுத்திருக்கிறார். நான் ஒரு குற்றச்சாட்டு சொல்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



கிறேன், அப்படிச் சொன்னது எம்.ஜி.ஆர். தான் என்று. இந்தக் கட்சியைப் பற்றி சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்ட நேரத்தில் எல்லாம் கோழைத்தனமான பொறுமைசாலியாக இந்த அவையில் கடந்த பல நாட்களாக நான் இருந்து வருகிறேன். ஆனால், இப்படிப்பட்ட அபாண்டங்களை எல்லாம் மேலும் பொறுத்துக் கேட்டுக்கொண்டு இருக்கக்கூடிய அத்தகைய அளவு கடைந்தெடுத்த கோழையாக மாறிவிட விரும்பவில்லை. எங்களுக்கு இந்த ஆட்சியைவிட கட்சிதான் பெரிது. இந்த ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி எங்களது சுயமரியாதையை விட்டுக்கொடுத்துவிட்டு அபாண்டங்களைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. * * போன்றவர் அல்ல எம்.ஜி.ஆர். அவர் இந்த மன்ற உறுப்பினர் தான், வெளியில் இருப்பவர் என்று சொல்ல முடியாது. இந்த மன்றத்தில் அவருக்காக ஒரு சீட்—எம்.ஜி.ஆர். என்று எழுதிப் போடப்பட்டிருக்கிறது. அவரும் உள்ளே வராது இந்தப் பதவியைப் புதுப்பித்துக் கொண்டுதான் போகிறார். * * எம். ஜி. ஆர். தான் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்கிறேன். அவர் இங்கு வந்து நான் சொன்னதை மறுத்துவிட்டால் அதை நான் கண்ணியமாக ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: மருத்துவ மனை, எங்களுடைய மாவட்டத்திலிருக்கிற மிக முக்கியமானது. அது வேலூரிலே இருந்தாலும், சர்வதேசப் புகழ் பெற்ற சிறப்பான மருத்துவ மனையாகும். அந்த மருத்துவ மனையில் நடப்பவைகளைப் பற்றி களங்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் இங்கே பேசிய பேச்சுக்கள் உள்ளன என்று உணர்கிறோம். ஆகவே, நண்பர் எட்மண்ட் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல், செழியன் அவர்கள் சொன்னதையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நன்மையாக இருக்கும் என்று கூறி, அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான், தொடக்கத்திலே எடுத்த முடிவு அப்படித்தான் இருந்தது. சீனியர் மெம்பர்கள் ஒத்துழைக்காத காரணத்தால், இந்நிலைமை ஏற்பட்டது. ஆதார

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

யில்லாமல் சொன்ன குற்றச்சாட்டு நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீங்குகிறது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். * * * * ஆகியவை அவைக் குறிப்பிலிருந்து நீங்குகின்றன. பத்திரிகைகளிலும் வராது. * * ] என்று கூறப்பட்டதை யொட்டி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கூறிய மறுப்பும் அவைக் குறிப்பிலிருந்து நீங்குகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் இப்பொழுது, நமது அவை விதி முறைகள் 42-ன் கீழ் வேலூர் மருத்துவ மனை சம்பந்தமாகக் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நான் இதில் அரசியலைக் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை. இது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதனை நமது தலைவரவர்களாகிய நீங்கள் அறிவீர்கள். அதுபோல், இந்த நாடும் அறிந்திருக்கிறது. வேலூரில் உலகப் பிரசித்தி பெற்ற சி.எம்.சி ஹாஸ்பிட்டல் கடந்த 75 ஆண்டுகாலமாக உயர்ந்த நோக்கத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை உலகம் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறது. அதன் நோக்கத்தைப் பற்றி நான் இங்கே கூற வேண்டிய அவசியம் இல்லை. இந்த நாட்டில் மருத்துவத் துறை பல சேவைகள் செய்கின்ற முறையில் இருந்தாலும் கூட வேலூரில் செயல்படுகின்ற சி.எம்.சி. மருத்துவ மனையானது இந்த நாட்டு மக்களுக்கு ஏன் உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் சிறந்த சேவை செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்படுகிறது என்பதனை நாம் நன்றாக அறிவோம். அது எந்த முறையில் நடைபெறுகிறது என்று நீங்கள் அறிய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அகில இந்தியாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கவுன்சில் இருக்கிறது. இதை நிர்வகிப்பதற்கு அந்தக் கவுன்சிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டி ஒன்று இருக்கிறது.

இந்த நிர்வாகக் கமிட்டியில் இருக்கிற அங்கத்தினர்கள் யார் என்று சொன்னால், உலகப் புகழ்பெற்ற மருத்துவர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள். ஆக, சிறந்த முறையில் செயலாற்றுகின்ற

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



இந்த மருத்துவமனை கழிந்த 75 ஆண்டுக் காலத்தில் எந்த அளவு சேவை செய்திருக்கிறது என்று பார்த்தால், உலகத்தில் எந்த மருத்துவ டாக்டராலும் தீர்க்க முடியாத பல நோய்களை அந்த மருத்துவமனையில் சிகிச்சை செய்து குணமாக்கியிருக்கிறார்கள். ஒருவேளை, நமது நாட்டில் அல்லது உலகத்தில் வசதி பெற்றவர் மற்ற தேசங்களுக்குச் சென்று மருத்துவ வசதி பெற வழியிருக்கலாம். (மணி அடிக்கப்பட்டது) ரொம்ப முக்கியமான விஷயம்.

நான் ஒழுங்காகப் பேசினால் நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் போலிருக்கிறது. வசதி உள்ளவர்கள் சிறந்த மருந்துகளைப் பெறலாம். நமது அமைச்சர்கள் கூட ரஷியாவுக்குப் போகிறார்கள், ஜப்பானுக்குப் போகிறார்கள், மற்றும் பிற தேசங்களுக்குப் போய் சிறந்த மருத்துவ வசதிகளைப் பெறுகிறார்கள். ஆனால், நமது நாட்டிலிருக்கிற ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பண வசதி இல்லாதவர்களுக்கு அந்த அளவு மருத்துவங்களைச் செய்யத் தயாராக இருக்கிற மருத்துவ மனை சி.எம்.சி. மருத்துவ மனை என்று சொன்னால் நிச்சயமாக அது மிகையாகாது.

அண்மையில், நமது சர்வோதயத் தலைவர் ஜெயப் பிரகாஷ் நாராயணன்கூட, நமது வேலூர் மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சைபெற்று குணமடைந்து போனார்கள். இதுபோல், பல தலைவர்களும் வந்து போயிருக்கிறார்கள். ஆகவே, இதுபோல் சிறப்பாக மருத்துவ வசதியளிக்கிற மருத்துவ மனையைக் காப்பாற்ற வேண்டும், அதிலே இருக்கிற பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அங்கு நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைப் பற்றியும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது வேலை நிறுத்தம் நடைபெறுவதற்கு என்ன காரணம் என்று கோவை செழியன் அவர்கள் கூறினார்கள். இதுவரையில், கடந்த 75 ஆண்டுக்காலம் நடைபெறாத நிகழ்ச்சி அங்கே நடை பெற்றது.

அங்கே மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கிற முறை சிறந்த முறையாக இருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு இந்த முறையில் ஒரு அழுக்கு ஏற்பட்டதன் காரணமாக ஒரு டாக்டர் அவர்கள் ஊழல் காரணமாக யாரோ ஒரு மாணவியிடமிருந்து

கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு மார்க்குகளை அதிகம் கொடுத்ததன் காரணமாக, தகுதியற்ற மாணவிக்குக் கொடுத்ததன் காரணமாக, அது புகாராக, அதை மருத்துவ மனை அதிகாரிகள் விசாரித்தார்கள். அந்த மருத்துவ மனை அதிகாரிகள் விசாரித்ததன் காரணமாக அந்த மருத்துவ மனை எக்சிக்யூடிவ் கவுன்சில் தக்க நடவடிக்கை எடுத்தது. . .

திரு. நா. வீராசாமி: தலைவ்ரவர்களே, நான் இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை மிக வருத்தத்தோடு எழுப்புகிறேன். இப்பொழுது தான் ஒரு சம்பவம் இங்கே நடைபெற்றது. ஏதோ ஒரு கட்சியினுடைய தலைவர் இங்கே நியாயம் சொன்னார் என்பதற்காக அவருக்கே, வராண்டாவிலே. . .

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு வீராசாமி அவர்கள் எங்களுடைய கட்சித் தலைவரைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார். அது பத்திரிகையிலே வரவேண்டுமென்று சொன்னார். .

திரு. ஜே. ஜேம்ஸ்: அந்த கிறிஸ்தவ மருத்துவ மனையில் முறை தவறி நடந்த டாக்டர் மீது முறையான நடவடிக்கையை மேற்கொண்டதன் காரணமாக, அதனால் பாதிக்கப்பட்ட டாக்டர்தான் இத்தனை அசம்பாவிதங்களுக்கும் காரணமாக இருக்கிறார். அவர்தான் தொழிலாளர்களை முடுக்கி விட்டு இந்த நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணமாக இருக்கிறார்.

நிச்சயமாக இதனை மனிதாபிமானத்துடன் நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இது தொழிலாளர் பிரச்னையல்ல. அந்த நிர்வாகத்தில் 2,550 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது 15 தொழிலாளர்கள்தான். ஆனால், நடைபெற்றிருக்கிற வன்முறைகளைப் பார்த்தால், நிச்சயமாக உலகத்திலே எங்கும் நடைபெறாத அளவுக்கு நடைபெற்றிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டிடெய்ல்ஸ் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்பொழுது மணி 11-ஆகப் போகிறது. இது, எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி பேசுங்கள்.





திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த ஸ்டிரைக்கின்பொழுது, ஒரு ஹார்ட் பேஷன்ட் வந்திருக்கிறார். இன்னும் அந்த ஹார்ட் பேஷன்டுக்கு ஆப்பரேஷன் செய்வதற்கு வசதியில்லாமல் சில சமூகவிரோதிகள் இதில் ஈடுபட்டதன் காரணமாக ஆப்பரேஷன் தடைப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்னும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் அங்கங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், நான் கூறுவதெல்லாம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் தலையிட்டதாகவும் அவர்கள் முறை கேடான முறையில் தலையிட்டதன் காரணமாக. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் முதலிலேயே மறுத்தேன். தேவையில்லாமல் என் பெயரை இழுக்கிறார்கள். ப. உ. சண்முகம் முறைகேடாகத் தலையிட்டார் என்று பேசுவது சரியல்ல, நியாயமல்ல, முறையல்ல. அதுவும் நண்பர் ஜேம்ஸ் அவர்களிடமிருந்து அதை நான் எதிர்பார்க்கவில்லை. வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அதனைத் தீர்க்க முயற்சி செய்தோம். முயற்சி வெற்றி பெறவில்லை. அப்படியிருக்கும்போது, பத்திரிகையில் செய்தி வர வேண்டுமென்பதற்காக வேண்டுமானால் பேசட்டும். ஆனால், ப. உ. சண்முகம் முறைகேடாகத் தலையிட்டார் என்று பேசுவது, உண்மைக்குப் புறம்பான ஒன்றை திரும்பத் திரும்பச் சொன்னால் மெய்யாகிவிடும் என்ற தவறான வாதத்திற்குப் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: உண்மையைக் கூறவேண்டுமென்று கூறுகிறேனே தவிர, நான் வேண்டுமென்றே கூறவில்லை. உலகம் முழுவதும் கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுத்தால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாதிரியான நிகழ்ச்சி நடைபெறாமல் இருக்கவேண்டும்.

அதோடு, இந்த அளவு பெரிய பிரச்னை, மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பில்லையென்று பயங்கரமான சூழ்நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வளவு சிறந்த முறையில் இந்த மைனாரிட்டி சமுதாயம் நடத்துகிற மருத்துவ மனைக்கு இந்த அரசாங்கம் பாதுகாப்பு

அளிக்கவில்லை என்று சொன்னால், அது வரவேற்கத்தக்கது அல்ல. அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அதிலும், ஒருவேளை முதலமைச்சர் அவர்கள் தலையிட்டிருப்பதாகக் கூறலாம். ஆனால், நான் கூறுவதெல்லாம் நிச்சயமாக இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்குண்டான வழியை ஆராய வேண்டும். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே தான், இந்தப் பிரச்னையை இன்னும் வளரவிடாமல் உடனடியாகத் தீர்த்து அந்த மருத்துவமனையைக் காப்பாற்ற வேண்டும்.

இந்த மருத்துவ மனையை இன்று வேலூரிலிருந்து பெங்களூருக்கு மாற்றி விடப்போவதாக அறிகின்றோம். அப்படி மாற்றப்பட்டால் பாதிக்கப்படுவது தமிழகம்தான். குறிப்பாக வேலூர் பிரதேசம் பாதிக்கப்படும். ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். சில தொழிலாளர்கள், டிரைவர்கள், கடை வைத்திருக்கக் கூடியவர்கள் பாதிக்கப் படுவார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அந்த மருத்துவமனையை நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள், ஆகவே அமைச்சர் ப. உ. ச. வுக்கும் பொறுப்பு இருக்கிறது, அவர்கள் இந்தப் பிரச்னையைத் தீர்த்திருக்க முடியும். இந்த நாடு என்ன கருதுகிறது என்றால் மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்கள் தலையிட்டதால்தான் இப்படி ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அம்மாதிரி ஏற்பட்டும் இந்த அரசு உடனடியாகத் தலையிட்டு அந்த மருத்துவ மனையைக் காப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை இந்த அரசு. ஆகவே, இந்தத் தீர்மானத்தின் வழியாக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதித்தால் நல்லமுறையிலே தீர்வு காணுவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு சிறிய விளக்கம். மைனாரிட்டி சமூகத்திற்கு விரோதமாக செயல்பட்டதாக திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். எந்த மைனாரிட்டி சமூகத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறோம் என்று சொன்னால் நான் பதில் சொல்கிறேன்.





**திரு. ஜே. ஜேம்ஸ்:** சி.எம்.சி. யை நடத்துகிறவர்கள் கிறிஸ்துவ சமூகத்தினர். அவர்கள் மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுக்கு அங்கே பாதுகாப்பு இல்லை. அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் கூறுவது நியாயமாக ஆகிறது. அவர்களுக்கு வாதாடுவதற்காக நான் வரவில்லை. இந்த அரசாங்கத்திற்கு அவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவ சமூகத்திற்கு விரோதமாக எதுவும் செய்யப்படவில்லை. உலகப் புகழ்பெற்ற டாக்டர் ஜான்சன் என்பவர், பேரறிஞர் அண்ணாவுக்கு வைத்தியம் செய்தவர். ஜான்சன் என்பவர் எல்லாம் அடிபட்டிருக்கிறார். அதை மனசிலே கொள்ளவேண்டும். கிறிஸ்துவ சமூகத்திற்கு எதிராக எதையும் செய்யவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** யார் அடிபட்டார் என்பது பிரச்னையல்ல. தவறு செய்தவர்களைத் தண்டிக்கவேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாக அரசாங்கம் கூறுவது நியாயமா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனை சம்பந்தமான ஸ்ட்ரைக்கை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவருவதற்கான எதுவான நிலையில்லாமல் விவாதம் ஆரம்பத்திலிருந்தே சூடு பிடித்துவிட்டது. இந்த அவையிலே இருக்கக்கூடியவர்கள், நாட்டிலே உள்ளவர்கள் அத்தனை பேர்களுடைய கருத்தும் இந்த ஆஸ்பத்திரி தொடர்ந்து நல்லமுறையிலே நடக்க வேண்டுமென்பதுதான். அந்த ஆஸ்பத்திரி நிறைய பெருமை படைத்தது. அந்த ஆஸ்பத்திரி ரொம்ப நாளாக தமிழகத்திலே நல்லமுறையிலே செயல்படுகிறது. மிக நல்ல வசதிகள் உடைய மருத்துவ மனையாகும் அது. நீண்ட நாட்களாக அங்கே இருக்கிற பிரச்னைகள் பற்றி கவனிக்காதது வருந்தத்தக்கது. முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நிலையிலே அவர்கள் விட்டுவிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

நான் அறிந்தவரையிலே, நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் கட்டுப்பாடு இல்லாதவர்களை வைத்துக்கொண்டு தொடர்ந்து ஆஸ்பத்திரியை நடத்த முடியாது என்று பிடிவாதமாக

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1975 பிப்ரவரி 26

இருக்கிறார்கள். இரண்டு பேர்களும் பிடிவாதமாக இருக்கிறார்கள். நாம் மத்தியஸ்தம் பண்ணித்தான் ஆகவேண்டும். உலகத்திலே இன்றைக்கு எத்தனையோ பிரச்னைகள் மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்படுகிறபோது இந்தப் பிரச்னையும் மத்தியஸ்தத்தால் தீர்க்கப்பட முடியாதது அல்ல. நிர்வாகத்தினருடன் தொடர்ந்து பேசி ஒத்துக்கொள்ள வைத்துவிட வேண்டும். அல்லது தொடர்ந்து ஆஸ்பத்திரியை உடனடியாக இயங்கவிட்டு விட்டு இந்தப் பிரச்னையை பிறகு தீர்த்துக்கொள்ளலாம் என்ற முறையிலே ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டவேண்டும்; இன்னும் இரண்டொரு தினங்களுக்குள் நல்ல தீர்வு காணவேண்டும். முதலமைச்சர் அவர்கள் திறமையை, நல்ல எண்ணத்தை இதிலே காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை வெகு நாட்களாக நடக்கவிடக் கூடாது. இது முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தினாலே இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இது எவ்வளவு சிக்கல் வாய்ந்தது என்பதை இதுவரையில் இங்கே நடந்த விவாதமே எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு குழந்தையின் மேல் பாம்பு படுத்திருக்கிறது, குழந்தையையும் காப்பாற்ற வேண்டும், பாம்பையும் அடிக்க வேண்டும். இது எவ்வளவு கஷ்டமோ அம்மாதிரியான சிக்கலான விஷயந்தான் இதுவும்.

எங்கள் கட்சியிலே ஏதாவது ஒரு சைடை எடுத்துக் கொண்டு வாதிடக்கூடாது என்றே சொல்லியிருக்கிறார்கள். இரண்டு மூன்று முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட வேண்டுமென்று நினைக்கிறேன். இன்றைக்கு எங்கே வேலை நிறுத்தம் செய்தாலும் கூட வேலையில்லாத காலத்திற்கு ஊதியம் கிடைக்க சட்டம் இல்லை. அந்த முறையிலே கிட்டத்தட்ட 2 மாதகாலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள் தொழிலாளர்கள். அவர்கள் திரும்ப வேலைக்குப் போகக்கூடிய வழியை ஏற்படுத்துவது எங்களைப் பொறுத்தது மட்டுமல்ல, அரசாங்கத்தையும் பொறுத்தது. முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுகிறோம் என்றால் தனிப்பட்ட முறையிலே



1975 பிப்ரவரி 26] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வேண்டுகோள் அல்ல. அரசு இருக்கிறது, அந்த அரசின் தலைவராக அவர் இருக்கிறார், அவருக்கு வேண்டுகோள் என்ற முறையிலேதான். மற்றவர்களுக்கு வரக்கூடிய கோபதாபங்கள் அரசாங்கத்திலே இருக்கிறவர்களுக்கு வந்துவிட்டால் எங்கு போய் முறையிடுவது என்ற நிலைமை வந்து விடும். ஏதோ ஒரு காரணத்தினால் அவர்கள் கோபமாக இருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்படுவது யார் என்றால் தொழிலாளர்கள்தான்.

அது முக்கியமான மருத்துவமனை, இந்தியாவிலேயே நல்ல பெயர் பெற்றிருக்கிறது. அந்த் மருத்துவமனையை ஆரம்பித்த போது ஏழை எளியவர்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்ய வேண்டுமென்ற நிலைமைதான் இருந்தது. ஆனால் இப்போது பெரும் பணக்காரர்கள், கோடீஸ்வரர்கள் இவர்களுக்குத்தான் இருக்கிறது என்ற நிலைமை இருக்கிறது, அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இந்த நிலையில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய தவறுகள்—நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்—இந்த நிலைமைகள் வருகிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர் தலையிடாவிட்டாலும் முதலமைச்சர் தலையிடலாம். அப்படியில்லாமல் கூட்டுப் பொறுப்பு என்று சொல்லி அந்தப் பகுதியிலே உள்ள அமைச்சர் தலையிட்டது பொருந்தாத ஒன்றாக இருக்கிறது. மற்றப் பிரச்னைகளுக்கும் இது பொருந்தும் என நினைக்கிறேன். இரண்டு மாத காலமாகி விட்டது. வெகு சீக்கிரத்திலே அரசாங்கம் தன்னிடத்திலே உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இரண்டு சாராரையும் கூட்டிவைத்துப் பேசி சீக்கிரமாக முடிவு எடுக்கவேண்டும். அதிலே தவறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கு விவாதிக்கப்பட்டுள்ள விஷயங்கள் மிக முக்கியமானவை யென்பதை நான் உணராமல் இல்லை. நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஏழை எளியவர்களுக்காக என்று ஒரு காலத்தில் மூதாட்டி ஐடா ஸ்கட்டர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலூர் மருத்துவ

மனை இன்றைய தினம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் வருமானமுள்ள அளவிற்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்த மருத்துவமனை சிறப்பு வாய்ந்தது என்பதிலோ, நல்ல நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதிலோ இரண்டுவிதமான கருத்துக்களுக்கு இடமேயில்லை. அப்படிப்பட்ட புகழ்வாய்ந்த ஒரு மருத்துவமனையில் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக நடைபெறுகின்ற இந்த வேலை நிறுத்தத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்பதில் அரசு அக்கறை காட்டவில்லை என்று சொல்கின்ற குற்றச்சாட்டு பொருத்தமுடையது அல்ல என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய நம்முடைய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, ஏதோ தேர்வுத் தாள்களைத் திருத்திய வகையிலே ஏற்பட்ட ஒழுங்கீனங்களின் காரணமாகச் சிலபேர் தண்டிக்கப்பட்டார்கள் அல்லது அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, அதன் காரணமாக இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் ஏற்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அந்த விவரங்களில் நான் புகுந்திட விரும்பவில்லை. ஏனென்றால் அது இன்னும் விசாரணை முடிந்தும் முடியாமலும் இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே இருக்கின்ற விவகாரம். ஆகவே, அதைப்பற்றி நான் விமர்சிக்கத் தயாராக இல்லை. அந்த 5 பேரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அரசின் சார்பில் வாதிடவில்லை. ஒழுங்கற்ற முறையில் ஒரு தவறைப் புரிந்திருப்பார்களேயானால் அந்தத் தவறு நிரூபிக்கப்படுமேயானால் அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதையும் அரசு வலியுறுத்தாது.

இப்பொழுது இருக்கின்ற பிரச்னையெல்லாம் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 15 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த 15 பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் அரசு சமரச முயற்சியிலே ஈடுபட்டது. இந்த வேலைநிறுத்தம் தொடங்கியவுடன், இது தொழில் சட்டத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனம் அல்ல என்பதை நம்முடைய மாரிமுத்து அவர்களும், கே. டி. கே. தங்கமணி





அவர்களும், இந்த விவாதத்தைத் தொடங்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பவர்களும் உணர்வார்கள் என்றே நான் நம்புகிறேன். ஆகவேதான் அந்த மருத்துவமனைக்கு நீண்ட நெடுநாட்களாக மிகுந்த நட்புறவோடு, நெருக்கமாக இருக்கின்ற அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களைவிட்டு ஒரு சமரச முயற்சியிலே ஈடுபடுங்கள் என்று நானேதான் கேட்டுக் கொண்டேன். அந்த மருத்துவமனைக்கும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களுக்கும் விரோதம் இருப்பதாகக் கூறுவது பொருந்தாத கற்பனையாகும். ஏனென்றால் பல நேரங்களில் அந்த மருத்துவமனையின் விழாக்களுக்கு அண்ணா அவர்களை அழைத்துச் செல்வதிலேயும், நம்முடைய நாவலர் அவர்களை அழைத்துச் செல்வதிலேயும், என்னைப் பலமுறை அந்த மருத்துவமனையின் விழாக்களுக்கு அழைத்துச் செல்வதிலேயும் அவர் முன்னின்று பொறுப்பேற்று அதிக அக்கறை காட்டியிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையிலே இருக்கிற நிர்வாகிகளோடு அவர்களுக்கு நல்ல உறவு உண்டு. அந்தக் காரணத்தினால்தான் இந்த சமரச முயற்சியிலே நீங்கள் ஈடுபட்டு அதைத் தீர்த்து வையுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டேன். அவர்கள் முயற்சித்துப் பார்த்தார்கள். அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

அதற்குப் பிறகு நான் கோவைக்குச் செல்கிற வழியில் காட்பாடி புகைவண்டி நிலையத்தில், வேலூர் மருத்துவமனை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், கழகத்தைச் சேர்ந்த சில எம்.எல்.ஏ. க்களும், வேலூர் பொது மக்களில் சிலரும் என்னைச் சந்தித்து உடனடியாக ஒரு சமரசத்திற்கு வழி வகுத்தாக வேண்டும், அந்த சிறந்த மருத்துவமனையில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவது நல்லது அல்ல என்று எடுத்துக் கூறினார்கள். நான் பிறகு அவர்களைக் கேட்டேன், நிர்வாகத்தினருடனும் உங்களுடனும் நான் உட்கார்ந்து பேசத் தயாராக இருக்கிறேன், நீங்கள் சென்னைக்கு வருகிறீர்களா என்று கேட்டேன். அதற்குத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் ஒத்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு கோவை சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னைக்கு வந்தவுடன் அந்த நிர்வாகத்தை வரச் சொல்லி அவர்களுக்கு நான் தாக்கீது அனுப்பித்தேன். நிர்வாகத்ினரும் வந்தார்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும்

வந்தார்கள். பகல் 12½ மணிக்குத் தொடங்கிய பேச்சு வார்த்தை—கடந்த மூன்று நான்கு வாரங்களுக்கு முன்பு—பிற்பகல் 2½ மணி வரையில் நடந்தது. நான் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னதெல்லாம் 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்பது தான்.

இது ஒன்றும் புதிது அல்ல. அந்த 5 பேர் விவகாரத்தைப் பொறுத்தவரையில் என்னவென்று கேட்டார்கள். அதைத் தனியாக அவர்கள் உங்களுக்கு அப்பீல் செய்து கொண்டு உங்களுடைய கவுன்சில் இருக்கிறதே அது என்ன தீர்ப்பு வழங்குகிறதோ வழங்கட்டும். அந்த 5 பேரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அதில் அரசாங்கம் தலையிட விரும்பவில்லை. சமரச உடன்பாட்டிற்கு வர நான் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை எப்படியாவது சம்மதிக்க வைக்கிறேன் என்று சொன்னேன். அந்த 5 பேர் விவகாரத்தை விட்டுவிட வேண்டும். 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு நான் பரிந்துரை செய்கிறேன் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடத்திலே கேட்டேன். அவர்களும் இறுதியில் சம்மதித்தார்கள். அதற்குப் பிறகு நிர்வாகிகள் என்னிடத்தில் 15 பேரை எடுத்துக் கொள்ள முடியாது, கட்டுப்பாட்டையெல்லாம் மீறினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்பொழுதும் நான் சொன்னேன், கட்டுப்பாட்டை மீறியவர்கள் வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதிக் கொடுப்பதற்கு நான் அவர்களுக்குச் சொல்லி ஒத்துக்கொண்டால் எடுத்துக் கொள்வீர்களா என்று கேட்டேன். அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலும் சொல்ல, 15 பேர் வருத்தம் தெரிவித்து இனி ஒழுங்காக நடந்து கொள்கிறோம் என்ற உறுதிமொழியை எழுதிக் கொடுக்கத் தயாராக அந்த 15 பேரும் இருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். அதையும் நான் நிர்வாகத்தினரிடம் சொன்னேன். பகல் 2½ மணி வரையில் பேச்சு வார்த்தை நடந்தது. 3 மணிக்குத் தான் நான் பகல் உணவிற்காகச் செல்ல நேரிட்டது. பத்திரிகை நிருபர்களெல்லாம் அன்றைக்கு வெளியில் காத்திருந்து அந்தச் செய்தியை என்னிடத்தில் பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

இவ்வளவிற்கும் பிறகு என்ன சொன்னார்கள் என்றால், இதை கவுன்சிலில் வைத்து, முதலமைச்சருடைய சமரச யோசனை என்ற அந்தப் பொருளை எங்களுடைய கவுன்சிலில் வைத்து அதற்குப்



பிறகு முடிவு செய்கிறோம் என்று சொன்னார்கள். நான் அப்பொழுது அவர்களிடத்தில் சொன்னேன், 15 பேரை வேலை நீக்கம் செய்வதற்கு கவுன்சிலில் வைத்து அவர்களை நீக்கவில்லை, வேலை நீக்கம் செய்ததற்குப் பிறகு 'ரேட்டிபிகேஷன்' பெற்றிருக்கிறீர்கள். அதைப்போலவே, கவுன்சிலிலே இருக்கின்ற தலையாளவர்களெல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள், 15 பேரை எடுத்துக் கொள்வதாகச் சொல்லி விட்டு, பிறகு 'ரேட்டிபிகேஷன்' செய்து கொள்ளக் கூடாதா என்று நான் அவர்களைக் கேட்டேன். தாங்கள் வேலூருக்குப் போய் யோசனை செய்து நாளைக் காலையிலே முடிவு சொல்லுகிறோம் என்று சொல்லிச் சென்றார்கள். கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் அப்படிச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதற்குப் பிறகு எந்த முடிவையும் எனக்குச் சொல்லவில்லை. பிறகு கவுன்சிலையோ, கமிட்டியையோ கூட்டினார்கள். அதிலே என்ன தீர்மானித்தார்கள் என்றால், முதலமைச்சருடைய யோசனையைப் பரிசீலித்தோம். பிறகு கவுன்சிலில் இதைப்பற்றி அப்பீல் செய்து கொண்டால் கவனிக்கப்படும் என்ற அளவில் ஒரு மழுப்பலான வடிவத்திலே எழுதி அதைக் கொண்டு வந்து—என்னைக்கூடச் சந்திக்கவில்லை, சந்திக்க நேரமும் கேட்கவில்லை—என்னுடைய செயலாளரிடத்திலே கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்று விட்டார்கள். மரியாதை வைத்து, மதிப்பு வைத்து அழைத்து இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாகப் பேசிய முதலமைச்சருக்கு அவர்கள் காட்டிய மரியாதையாகக் கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போய் விட்டார்கள். அதற்குப் பிறகும் அங்கே சட்டம், ஒழுங்கு, அமைதி பாதுகாக்கப்பட வேண்டும், அதிலே எந்த அளவும் குறைவும் ஏற்படாது என்பதை நான் உறுதியாக பத்திரிகைக்காரர்களிடம் தெரிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க இயலாது.

அதற்குப் பிறகு வேலை நிறுத்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாக மருத்துவமனைக்கு வந்த, உணவு ஏற்றிக்கொண்டு வந்த லாரியையோ வேனையோ தொழிலாளர்கள் மறித்தார்கள் என்ற காரணத்தால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு தொழிலாளர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, போலீசார் மீதும் கல் வீசப்பட்டு அந்த அசம்பாவிதங்கள் நடந்தன. நான் இதன் பின்னும் ஏதாவது முயற்சித்தால் நல்ல முடிவு காண முடியுமா என்று

மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களை மறுபடியும் பேசச் சொன்னேன், அதிகாரிகளை விட்டுப் பேசச் சொன்னேன். அவர்கள் 15 பேர் விவகாரத்திலே விடாப்பிடியாக இருந்து விட்டார்கள். பத்திரிகைகளிலே 1, 2, 3 பக்கம் என்று விளம்பரங்கள் கொடுத்தார்கள். என்னிடத்தில் பேசுவதை விட்டு பிரதமருக்குத் தந்தி கொடுத்தார்கள், கவர்னருக்குத் தந்தி கொடுத்தார்கள், குடியரசுத் தலைவருக்குத் தந்தி கொடுத்தார்கள்.

தலைமைச் செயலகத்தில் நடந்ததைப்பற்றி நண்பர் செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தலைமைச் செயலக சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்துவிடவில்லையா என்று கேட்டார்கள். ரத்து செய்தோம். கட்டுப்பாடு குலைகிற நேரத்தில் சில நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆனால் அதற்குப் பிறகு சமரச ஒப்பந்தம் வரும் நேரத்தில் அந்த உத்தரவைத் திரும்பப் பெறுகிறோம். இதைத் தான் அவர்களுக்கும் சுட்டிக் காட்டினேன். தலைமைச் செயலகத்தைச் சுற்றிச்சுற்றி மூன்று நாட்கள் ஊர்வலம் வந்தார்கள். தலைமைச் செயலகத்திலேயே, எங்களுக்குப் பசி, வேலை செய்ய முடியவில்லை என்ற 'பேட்ஜோடு' உட்கார்ந்திருந் தார்கள். இன்னும் சில வன்முறைக் காரியங்களும் என்.ஜி.ஓ. க்களின் பெயரால் நடந்தன. விரும்பத்தகாத ஆபாச மான விளம்பரச் சுவரொட்டிகள் வைக்கப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னைப்பற்றி, என்னுடைய குடும்பத்தைப் பற்றி—மனம் திறந்து சொல்கிறேன், என்னுடைய மனைவியைப் பற்றி எழுதி அனுப்பினார்கள். அதற்குப் பிறகும், அந்த 600 பேரை, வேலை நீக்கம் செய்யப்பட்ட 600 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று அறிவித்த இந்த அரசு தான் மறு படியும் 15 பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கெஞ்சிக் கேட்கிறதே அல்லாமல், வேலூர் மருத்துவ மனையை மிரட்டவில்லை.

யாரும் மறந்திருக்க மாட்டார்கள், சிம்சன் கம்பெனி விவகாரத்தை முதலமைச்சரிடம் விடுவது என்று சமாசத்திற்கு வந்ததற்குப் பிறகு கிட்டத்தட்ட 150 பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்திற்கு முதலமைச்சருடைய தீர்ப்பு என்ற வகையில் எழுதி அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லையா? அவ்வளவு பெரிய நிர்வாகத்தில்



நடைபெறவில்லையா? கோயம்புத்தூர் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்ற நேரத்தில் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறவில்லையா? முதலமைச்சருடைய யோசனையை நிர்வாகம் கேட்கவில்லையா? தொழிற்சங்கங்களின் பிரதிநிதி களின் கோரிக்கைகளை ஏற்கவில்லையா? அண்மையில் ஆரூரான் மில்லில் 30 பேர் தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்குச் சென்றார்கள். அதனால் 1 மாதம் 2 மாதம் என்று சிறைச்சாலைக்குச் சென்ற வர்களை மறுநாளே அரசு விடுதலை செய்து அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்திடம் சொல்லி அதுவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்படி இரண்டு மூன்று எடுத்துக்காட்டுக்களைத் தான் சொன்னேன். இந்த ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் இப்படிப் பல தொழிலாளர் போராட்டங்களில், வேலைநிறுத்தங்களில், பல் தொழிலாளர் போராட்டமானாலும் சரி அல்லது வேறு பல நிறுவனங்களுடைய போராட்டங்களானாலும் சரி, எல்லாப் போராட்டங்களிலும் இந்த அரசு மிகுந்த மென்மையான உள்ளத் தோடு, நடந்தவைகளை மறந்துவிட்டு, பழி வாங்க வேண்டுமென்ற உணர்ச்சி இல்லாமல், வருத்தப்படுகிறோம் என்ற கடிதத்தைப் பெற்றோ, அல்லது சில நேரங்களில் அதுகூடப் பெறத் தேவை யில்லை என்ற கருத்திலே வேலைக்கு அமர்த்தியிருக்கிறது.

இது 15 பேருடைய விவகாரந்தான். இந்த 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாதா என்றுதான் நான் கேட்கி றேன். டில்லியில் பிரதமர் அவர்களிடத்தில் இதைப் பற்றிப் பேசினேன். 'இதிலே மத்திய அரசு தலையிடுவதாக ஒன்றும் இல்லை; அப்படி பத்திரிகையிலே கூடச் செய்திகள் வந்திருக் கின்றன' என்று கூட பிரதமர் அவர்கள் என்னிடத்திலே விளக்கம் சொன்னார்கள். 'அந்தத் தொழிலாளர்கள் டிசிப்ளின் இல்லாமல் இருக்கிறார்களா?' என்று கூட என்னிடம் கேட்டார் கள். 'அதிலே 5 பேரைப் பற்றிக் கவலை இல்லை; அது வேறு விவகாரம், அதிலே இந்த அரசு தலையிடவில்லை; ஆனால் மீதி 15 பேர் ஒழுங்கு மீறி நடந்திருப்பார்களானால் அந்தப் 15 பேரும் வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், அவர்களை மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று

சொல்லுகிறோம்' என்று பிரதமர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். 'எப்படியாவது சமரசம் செய்து முடியுங்கள்' என்று பிரதமரும் என்னிடத்திலே சொன்னார்கள்.

அந்த நிர்வாகத்தினர் 20-ம் தேதி ஒரு கடிதம் எழுதி என்னைச் சந்திக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் கடிதம் நேற்றுக் காலையில்தான் கிடைத்தது. எங்கோ கொஞ்சம் தாமதமாகிவிட்டது. நேற்றுக் காலையில் கிடைத்தவுடன் தொலைபேசி மூலம் மாலையிலேயே அந்த நிர்வாகிகளை வரச்சொல்லி பேசி முடிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது. மாலை 5½ மணிக்கு அவர்கள் வந்தார்கள். மேலவைத் தலைவர் அறையில் நான், மாவட்ட அமைச்சர், மேலவையின் தலைவர் மாண்புமிகு சி. பி. சி. அவர்கள்—வேலூர்காரர் என்ற முறையில் அவரும் கலந்து கொண்டார்—உட்கார்ந்து பேசினோம். கிட்டத்தட்ட 5½ மணியிலிருந்து 7 மணி வரை அவர்களோடு பேசினோம். மேலவைத் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள்—"கிறித்தவ சமூகத்தால் நடத்தப்படும் மருத்துவ மனை இது; கிறித்தவ சமூகம் முக்கியமாக ஏற்றுக் கொண்டிருப்பது 'பாவ மன்னிப்பு'. அப்படி பாவ மன்னிப்பு கொடுக்கிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த 15 பேரை மன்னிக்கக் கூடாதா?" என்று இரங்கத்தக்க குரலில் மேலவைத்தலைவர் அவர்கள்கூட இரங்கத்தக்க முறையில் கேட்டுக் கொண்டார்கள். நானும் சொன்னேன்—'15 பேர் பிரச்சினை இது. மறுபடியும் அவர்கள் தவறு செய்வார்களானால் அவர்களே தண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பிறகு நான் தலையிடமாட்டேன்' என்று சொல்லியும் கூட அவர்கள் '15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியாது' என்ற அளவோடு சென்றிருக்கிறார்கள்.

பிரச்சினையைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். பத்திரிகையில் ஏதேதோ சொல்லுகிறார்கள். போலீசைத் திரும்பப் பெறப் போவதாகவும். ......அதிகாரிகளை விட்டு மிரட்டுவதாகவும் சொல்லுகிறார்கள். எந்தப் போலீசையும் யாரையும் திரும்பப் பெறப் போவதில்லை. லா அண்டு ஆர்டர்—சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் அரசு மிகக் கிடமாக இருக்கும். நிலைமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.





இப்போது சட்டமன்றத்திலும் மேலவையிலும் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் போன்றவை வரக்கூடும். நிலைமைகளை விளக்கிய பிறகு முதலமைச்சர் இரண்டு மூன்று முறை முயற்சித்த பிறகும் விவகாரம் முடியவில்லை; ஆகவே, வேலைநிறுத்தத்தை வேறு திசைக்குத் திருப்புவோம் என்று தொழிலாளர்கள் தொடங்கி, மறியல் போன்றவற்றில் அவர்கள் ஈடுபட்டு, அதைத் தடுக்க போலீசார் முயன்று, தடியடி, கண்ணீர்ப்புகை போன்ற நிலைமைகள் எல்லாம் உருவாவது இந்தப் புகழ்பெற்ற மருத்துவ மனைக்குக் கெட்ட பெயரைத்தான் உண்டாக்கும்.

இந்த 15 பேரிடமிருந்து மன்னிப்புக் கடிதங்களை வருத்தம் தெரிவிக்கும் கடிதங்களைப் பெற்று அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் நேற்று கடைசியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்கிடையில் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். அது கிறித்தவர்கள் நிறுவனம் என்று சொன்னார்கள். எல்லோரும் கிறித்தவர்கள்தான். தொழிலாளர் பிரச்னையை வாதிடுகிறவர்களிடையேயும் கிறித்தவர்கள் இருக்கிறார்கள். நிர்வாகத்திலும் இருக்கிறார்கள். நிர்வாகத்திலும் கிறித்தவர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்கள். இதிலே கிறித்தவர்கள், கிறித்தவர்கள் அல்லாதார் என்ற பிரச்சினையோ, மலையாளிகள், மலையாளிகள் அல்லாதார் என்ற பிரச்சினையோ எதுவும் கிடையாது. அது இருக்கவும் கூடாது என்பது என்னுடைய எண்ணமாகும்.

நல்ல மருத்துவ மனை, புகழ்பெற்ற மருத்துவ மனை, புகழ் மேலோங்கி மேலும் வளருவதற்கேற்ற வகையில் இந்த அரசு எல்லா ஆக்கரீதியான முயற்சிகளையும் மேற்கொள்ளும். நேற்று அவர்கள் 'மீண்டும் முதலமைச்சரைச் சந்திக்கிறோம்' என்று சொல்லிப் போனதாகத் தகவல். ஒரு வேளை சந்திக்கக்கூடும். எந்தத் தொழிற்சங்கத் தலைவரும் 15 பேர் விவகாரத்தில் மருத்துவ மனை நிர்வாகிகள் இப்படித் தயக்கம் காட்டுகிறார்களே என்பதை எண்ணிப்பார்க்காமல் இருக்க மாட்டார்கள். இந்த விளக்கங்களுக்குப் பிறகு இதைப் பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தினசரி இப்படி அவசரத் தீர்மானங்கள் வந்து 12 மணி ஆகிவிடுகிறது. கவர்னர் உரை மீது பேசுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. அவசரத் தீர்மானங்களை நாங்களும் கொடுத்து தலைவர்களும் கொடுத்தால் தலைவர்களுக்குத்தான் பேச உரிமை தரப்படுகிறது. அவசரத் தீர்மானத்திலும் தலைவர்கள் பேசுகிறார்கள், கவர்னர் உரை மீது பேசும்போது அவர்களுக்குத் தான் அதிக நேரம் கொடுக்கப்படுகிறது. ஒன்று எங்களுக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ப்ரொசீஜரை யாவது மாற்ற வேண்டும்.

### 3. கவன ஈர்ப்பு

### சென்னை நகருக்கு போதிய குடிதண்ணீர் வழங்குவதன் அவசியம் குறித்து

Dr. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the necessity to provide adequate drinking water facility in the City of Madras.

Thiru N. K. PALANISAMY: Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the necessity to provide adequate drinking water facility in the City of Madras.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு வழங்கப்படும் நீர் புழலேரியிலிருந்தும் சோழவரம், பூண்டி ஆகிய ஏரிகளிலிருந்தும் கொண்டு வரப்படுகிறது. வடகிழக்குப் பருவக் காற்றினால் வரும் மழையால் இந்த ஏரிகள் நீரைப் பெறுகின்றன. 1973-ஆம் ஆண்டிலும் 1974-சனவரித் திங்களிலும் வடகிழக்குப் பருவக் காற்றினால் வரும் மழை பொய்த்து விட்டது. முன் கூறிய மூன்று ஏரிகளிலும் நீர் சேமிப்பு நிலை திருப்திகரமாக இருக்கவில்லை. நாளொன்றுக்கு



1975 பிப்ரவரி 26] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

வழங்கப்படும் 53 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுமானால் அக்டோபர் 1974 வரை நீர் வழங்க இயலாது என்று அஞ்சப் பட்டதனால் 1974 மார்ச்சு மாதம் முதல் நாளொன்றுக்கு வழங்கப் படும் நீர் 35 மில்லியன் காலனாக குறைக்கப்பட்டது. இனி மழை வரும்வரை இப்போது உள்ள நீரைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது. மேலும் 1974 பிப்ரவரித் திங்களிலிருந்து 10 மில்லியன் காலன் நீரை தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய குழாய்க் கிணறுகளிலிருந்து கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நாளொன்றுக்கு 35 மில்லியன் காலன் நீர் வழங்கினால் சில இடங்களில் நீர் சரியாகப் போய்ச் சேராது என்று அஞ்சியதனால், சென்னை மாநகராட்சியின் தனி அலுவலருடைய செயற்குறிப்புகளுக்கிணங்க லாரிகள் வாங்கவும், உருக்குத் தொட்டிகள் வாங்கவும், குழாய்க் கிணறுகள் தோண்டவும் ஏற்கெனவே உள்ள குழாய்க் கிணறுகளைப் புதுப்பிக்கவும் ரூ. 32.5 இலட்சம் (கடனாகவும் மானியமாகவும்) வழங்கப்பட்டது. இந்தத் தொகை குறிப்பாக சேரிப்பகுதிகளில் நீர் போய்ச சேருவதற்காக வழங்கப்பட்டது. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களிலுள்ள கிணறுகளிலிருந்தும் வரும் நீர் சேதமாகாமல் (புழலேரி) போய்ச் சேரும் பொருட்டு சோழவரம் (புழலேரி) ஆகிய ஏரிகளில் சிறு கால்வாய்கள் அமைப்பதற்காக பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளருக்கு ரூ. 15 லட்சம் வழங்கப் பட்டது. 1974 அக்டோபர் திங்களில் நீர்ச்சேமிப்பு நிலையை மறு ஆய்வு செய்த பின்னர், சென்னை மாநகராட்சியின் தனி அலுவலரைக் கலந்தறிந்து நகரில் பல இடங்களில் 200 கிணறுகள் தோண்டும் பொருட்டு ரூ. 3 லட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

துரதிருஷ்டவசமாக 1974-ல் வரும் என எதிர்பார்க்கப்பட்ட வடகிழக்குப் பருவ மழை பெய்யாது போய் விட்டது. கடந்த 100 ஆண்டுகளிலும் 1974-ல் பெய்த மழையே மிகக் குறைவானதாகும். 1974-இல் மேற்சொன்ன ஏரிகளில் இருந்த தண்ணீர் 1973 ஆம் ஆண்டில் இருந்ததை விட மிக மிகக் குறைவானதாகும். இது குறித்து மீண்டும் 1974 டிசம்பர் மாதத்தில் ஆய்வு செய்யப் பட்டது. அதற்கேற்ப கீழ்க்கண்டவாறு முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன.

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] [1975 பிப்ரவரி 26

1. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள கிணறுகளில் இருந்து வரும் நீர் சேதமுறாமல் (புழலேரி சேருவதற்காக) சோழவரம் (புழலேரி) ஆகிய ஏரிகளிலும் இவ்வேரிகளுக்கு நீர் வழங்கு கால்வாய்களிலும், சிறு கால்வாய்கள் அமைக்கும்படி பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர் அனுப்பிய செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன. இருப்பினும், இதில் கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு குறைந்த அளவு எவ்வளவு ஆட்கள் தேவையோ அவ்வளவு பேரை வேலைக்கு அமர்த்தி அவ் வேலையைத் தொடங்கும்படி தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்சொன்ன வேலை விரைவாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

2. (அ) தாமரைப் பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங் களிலிருந்து எவ்வளவு அதிகம் நீரைப் புழலேரிக்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு அனுப்பும்படி நிலநீர் கோட்டத்தின் தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதம் நீரை அனுப்புவதற்காக பன்னிரண்டு திங்களில் செலவாகக்கூடிய ரூ. 28 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கீழ்ப்பாக்கம் நீர் அனுப்பு நிலையப் பகுதிகளில் ஒவ்வொரு கிணறும் ஒரு லட்சம் காலன் நீர் தரும் வகையில் 4 கிணறுகள் தோண்டும்படி நில நீர் கோட்டத்தின் தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 3 கிணறுகள் முடிக்கப்பட்டு விட்டன. ஒன்று முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

(இ) மீஞ்சூர், பஞ்செட்டி ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள கிணறுகளையும் இணைத்து அதன் மூலம் மீஞ்சூரிலிருந்து புழலேரிக்கு நீர் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யும்படி நீர்க் கோட்டத்தின் தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. இவ்வேலைக்காக ரூ. 2.5 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேறு வகைகளில் சென்னை நகருக்கு தண்ணீர் கிடைக்க வசதி செய்ய அரசு மேலும் சில திட்டங்களைப் பரிசீலனை செய்துவருகிறது. பாலாற்றிலிருந்து பல்லாவரம் மற்றும் ஆலந்தூர் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்யும் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டம்



1975 பிப்ரவரி 26] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

விரைவில் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலிருந்து ஒரு பகுதி தண்ணீரை சென்னை நகருக்குத் தருவதற்கான ஏற்பாடுகளை அனுப்பும்படி சென்னை நகராட்சி ஆணையாளர் கேட்கப்பட்டுள்ளார். 7.6 லட்ச ரூபாய் செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. சென்னை மாநகராட்சி ஆணையாளரிடமிருந்து இதற்கான செயற்குறிப்பு வந்த பின்பு இதுபற்றி பரிசீலிக்கப்பட்டு தக்க ஆணை பிறப்பிக்கப்படும்.

கல்பாக்கத்திற்கு அருகில் பாலாற்றில் 20 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் இரும்புக் குழாய் மூலம் இத் தண்ணீரை திருக்கழுக்குன்றத்தில் ஒரு நீர்த்தேக்கத்தில் நிரப்பிவைக்கவும் அரசு ரூ. 1.12 லட்சம் பொதுப் பணித் துறைக்குத் தந்துள்ளது. திருக்கழுக்குன்றத்திலிருந்து சென்னைக்கு அமைக்கப்படும் வீராணம் குழாய் வழி மூலம் இத்தண்ணீர் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தண்ணீர் சென்னைக்கு கூடிய விரைவில் கிடைக்கச் செய்வதற்காக, இந்தக் குழாய் அமைக்கும் வேலையை துரிதப்படுத்தும்படி, குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விதமான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கிடைக்கக்கூடிய தண்ணீர் அக்டோபர் 1975-ல் எதிர் பார்க்கும் அடுத்த மழைக்காலம் வரை சென்னை நகரத்தின் முழு தேவைக்குப் போதுமானதாக இருக்குமாவென அச்சம் கொள்ள வேண்டி உள்ளது. எனவே, கிடைக்கும் தண்ணீர் எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலம் நீட்டிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது. எனவே, மாநக ராட்சியினர், முன்பு ஒரு நாளைக்கு கொடுத்து வந்த 31 மில்லியன் காலன் தண்ணீரை 6—2—1975-ல் இருந்து ஒரு நாளைக்கு 15 மில்லியன் காலன் அளவுக்குக் குறைத்தனர். முதலில் சென்னை நகரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்று ஒரு பகுதிக்கு ஒரு நாளைக்கு 15 மில்லியன் காலன் தண்ணீர் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டம் திருப்திகர மாக இல்லாமையால், 17—2—1975-ல் இருந்து நகர முழுவதற்கும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இருநாளைக்கும் 30 மில்லியன் காலன் தண்ணீர் தரப்பட்டது.

[திரு. மன்னை. ப. நாராயணசாமி][1975 பிப்ரவரி 26

சாதாரணமாகவே, தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் இந்தக் குறைந்த அளவு தண்ணீர் கஷ்டமுண்டாக்கும் என்பதால் சிறப்புத் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு சில பகுதிகளுக்கு, குறிப்பாக குடிசைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்வதற்காக அவசர நடவடிக்கையாக, நகராட்சிக்கு ரூ. 84.12 லட்சம் கடனாகவும் மானியமாகவும் வழங்கப்பட்டது.

மேற்கொள்ளப்படும் திட்டங்களாவன:

(1) 4—6 அடி குறுக்களவும் மேல்மூடியும், கொண்ட 400 கிணறுகள் அமைத்தல்;

(2) கையால் இயக்கும், 5,000 குழாய்க் கிணறுகள் அமைத்தல்;

(3) இரும்பாலோ அல்லது சிமெண்டாலோ ஆன 550 நீர் தொட்டிகள் நகரின் வெவ்வேறு பகுதிகளில் அமைக்கப்படும்.

இந்தத் தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் நீர் வழங்கப்படும். எங்கு குழாய் மூலம் நீர் அழுத்தம் குறைவாக இருக்கிறதோ அங்கு சிறிதளவேனும் குடிநீர் கிடைக்க வழி ஏற்படும். பம்புகள் பொருத்தப்பட்ட 24 புதிய லாரிகள் வாங்கிக் கொள்வதற்காக மாநகராட்சிக்குத் தேவையான பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்திலே தற்போதுள்ள, வழக்கத்திற்கு மாறான தண்ணீர் பற்றாக்குறை நிலை, இயற்கையின் சீற்றத்தாலும், தொடர்ந்து 1973-74 ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை தவறியதாலுமே ஆகும். மேலே கூறியபடி, இருக்கக்கூடிய தண்ணீரை அனைத்து வழிகளிலே சேகரித்து வைக்கவும் சிறந்த முறையிலே அதனை விநியோகிக்கவும் வழி முறைகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை நகரின் நீர் நிலைமை அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எந்தெந்த முறைகள் தேவையென்று கருதப்படுகிறதோ செயல்படுத்தக் கூடியவைகளோ, அவைகள் உடனே நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். அதிகார வரம்பிற்கு மீறிய தண்ணீர் செலவழிப்பவர்கள் மீதும், நீர்கழிவினை திறுத்தவும் மாநகராட்சியின் தனி அதிகாரி தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் தீவிரமாகவும் எடுத்து வருகிறார்.



1975 பிப்ரவரி 26]

DR. H. V. HANDE: Sir, arising out of the answer given by the Hon. Minister, I wish to know what are the clearcut steps taken to solve the problem, both long-range and short-range efforts. We do not find any such steps in the statement of the Hon. Minister. There was no mention about the Veeranam Project unless the Veeranam Project is put into effect, and unless that project is expedited, the difficulty cannot be solved. We would like to have information about that project.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** வீராணம் திட்டம், பெரிய திட்டம். அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறார்கள், என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்று ஒரு வார்த்தைகூட அதுபற்றி விளக்கிச் சொல்லவில்லை; அது குறித்து சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** அதற்காக ரூ. 84 லட்சம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். லாரிகள் வாங்கப் போகிறோம். எங்கெங்கே தண்ணீர் உடனடியாகத் தேவையோ அங்கே கொடுக்கப் போகிறோம். புதிதாக பாலாற்றில் ஒரு புதிய திட்டம் போட்டு இருக்கிறோம். அதற்காக 7.6 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அந்த வேலை நடந்து வருகிறது. இப்போது 30 மில்லியன் காலன் தண்ணீர் கொடுத்துக்கொண்டு வருகிறோம். எந்த வருஷமும் இல்லாத வகையில் இந்த வருஷம் நீர் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. குறிப்பாக சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு புழல் ஏரியில் எவ்வளவு நீர் இருந்தது என்றால், 1972-ல் 12.95 அடி இருந்தது, 1973-ல் 3.41 அடி இருந்தது. சோழவரத்தில் பார்த்தால், 12.78 அடி 1973-ல் இருந்தது. 1974-ல் 1.30 அடி இருந்தது. இப்போது 'நில்'-ஆகப் போய்விட்டது. பூண்டியில் பார்த்தால் 1973-ல் 27.18 அடி இருந்தது. இந்த ஆண்டில் ஒன்றும் இல்லை. இந்த நிலையில் மற்ற பகுதிகளில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. 24 லாரிகள் வாங்க இருக்கிறோம். புதிய கிணறுகள் 400 வெட்ட இருக்கிறோம். அதைத்தான் இப்போது நான் படித்துக் காட்டினேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் கேட்ட கேள்வி வேறு. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், தண்ணீர் சப்ளை வேண்டுமானாலும், கிணறுகள் தோண்ட வேண்டுமானாலும் ஒரு இடத்திற்கு போன் செய்யுங்கள் என்று டெலிபோன் நெம்பர் கொடுத்தார்கள். அதற்கு டெலிபோன் செய்தால் அது ஒரு கம்பெனியாக இருக்கிறது. இந்த தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு அதிகாரிகள் சென்று பார்வையிட வேண்டும். உடனடியாக பைப் போடவேண்டும், கிணறுகள் வெட்ட வேண்டுமென்று போன் செய்தால் அதிகாரிகள் வந்து பார்ப்பது இல்லை. அவர்கள் வந்து கவனித்தால் மிகவும் நன்றாக இருக்கும். அங்கேயுள்ள தாய்மார்கள் தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு 'ஹோல் நைட்' காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த தண்ணீர் கிடைக்காத பகுதிகளில் சுற்றிப் பார்த்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக 'ஒரு ஸ்பெஷல் ஸ்குவாடு' அமைத்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்தால் I think he problem can be solved.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** அதற்காக நடவடிக்கைகளை தனி அதிகாரி எடுத்து வருகிறார். வருகின்ற புகார்களை உடனடியாகக் கவனித்து வருகிறார்கள். 44 இடங்களில் தண்ணீர் களவாடுவதைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களைக் கூட அழைத்துச்சென்று பல இடங்களைக் காட்டி இருக்கிறார்கள். இன்னின்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறேன் என்று காட்டி இருக்கிறார்கள். பிரஸ் ரிப்போர்ட்டர்களை அழைத்துச்சென்று ஊர் பூராவும் காட்டியிருக்கிறோம். நாள் பூராவும் சுற்றிப் பார்த்து இருக்கிறோம். புதிதாக 4 கிணறுகளைத் தோண்டியிருக்கிறோம். ஒரு நாளைக்கு 1 லட்சம் காலன் தண்ணீர் அதன் மூலமாகக் கிடைக்கும். ஒன்றும் தெரியாதது போலவும், ஒன்றும் செய்யாதது போலவும் பேசுவது சரியல்ல. தனி அதிகாரி நல்ல முறையில் பணியாற்றுகிறார் என்று ஹாண்டே அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். டெலிபோன் நெம்பர் தவறாக இருக்கிறது என்று சொன்னால் அதை முன்பே சொல்லி இருக்கலாம். அவர்கள் டயல் செய்த நெம்பர் சரியா, அல்லது டெலிபோன் இயந்திரம் சரியாக இயங்கவில்லையா என்று பார்க்க வேண்டும். டெலிபோன் நெம்பர் தவறாக இருக்கிறது என்று சொல்வதற்காக ரூல் 41-ன் கீழ் தீர்மானம் கொண்டு வரவேண்டியது இல்லை. அதற்கு அதிகாரி





யிடத்தில் சொல்லியிருந்தால் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இருப்பார்கள். பத்திரிக்கையில் பெயர் வரவேண்டுமென்பதற்காக ஹாண்டே அவர்கள் இதைக் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். எங்களைப் பாராட்டாவிட்டாலும் நன்றாகப் பணியாற்றுகிற அதிகாரிகளைப் பாராட்ட வேண்டும். அது தான் பொதுவாழ்வில் இருப்பவர்களுடைய கடமை. 44 இடங்களில் தனியார் பவர் மிஷின் வைத்துக்கொண்டு தண்ணீர் திருடியிருக்கிறார்கள். அவர்களைப் போய் பிடித்து இருக்கிறார்கள். நாட்டில் உள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு பல எதிர்ப்புகள் இடையேயும் சமாளித்து வருகிறோம். நல்ல முறையில் எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்படும். நீங்கள் எல்லோரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

**திரு. என். கே. பழனிசாமி:** சர்க்கார் 'கிராவிடி ஆஃப் தி ஸிச்சுவேஷனை' புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. சென்னை நகரத்தில் ஒவ்வொரு மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களிலும் தண்ணீர் பற்றாக்குறை இருந்துகொண்டு வருகிறது. இந்த வருஷம் அதிகப்படியாக இருக்கிறது. சர்க்கார் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். கிணறுகளில் தண்ணீர் இல்லை. குழாய்க் கிணறுகள் பல இடங்களில் உடைந்து போயிருக்கின்றன. இருக்கிற குழாய்க் கிணறுகளும் 'டிச்சில்' இருக்கின்றன. அதனால் ஜனங்கள் தண்ணீர் பிடிக்க முடியவில்லை. மிகவும் நெருக்கடியான நிலைமை இருக்கிறது. ஜனங்கள் பஞ்சத்தினால் பெருவாரியாக கிராமப் புறங்களிலிருந்து பட்டணத்துக்கு வருவதற்குப் பதிலாக, சென்னையிலிருந்து மக்கள் தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் வெளி மாவட்டங்களுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பல பேர்கள் போயிருக்கிறார்கள். சர்க்கார் இப்பொழுது பாலாறு பேஸின் தண்ணீர் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அதுவும் போதாது. ஏதாவது மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டும். சமுத்திர தண்ணீரை குடிதண்ணீராக மாற்றுவதற்கான திட்டம் பற்றி பல வருஷங்களாக பரிசீலனை செய்வதாகச்

சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது மாதிரி ஏதாவது ஒரு மாற்றுத் திட்டம் கொண்டு வந்தால்தான் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைச் சமாளிக்க முடியும்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இதற்கான திட்டங்கள் பூராவையும் படித்துவிட்டேன். எத்தனை லட்சம் ரூபாயில் எந்தெந்த திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று விளக்கியிருக்கிறேன். அதற்காகத்தான் ரூல் 41-மூலம் விளக்கம் கேட்டார்கள். அதற்கான விளக்கம் தந்திருக்கிறேன். என்னென்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று விளக்கியிருக்கிறேன். குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கும், கிணறுகளையெல்லாம் மறுபடியும் சீர்திருத்துவதற்கும் எல்லா வேலைகளும் நடந்து கொண்டு வருகின்றன. நான் சொன்னதிலே ஏதாகிலும் விட்டுப் போயிருந்தால், அப்படி எங்கேனும் பழுது பார்க்கப் படாமல் இருந்தால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அவைகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்கிறேன்.

கடல் நீரை சுத்தம் செய்வதற்கு எவ்வளவு செலவாகும், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், எத்தனை மக்களுக்குக் கொடுக்க முடியும், எந்த நாட்டில் அப்படி செய்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இந்திய சர்க்கார்தான் அதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். அது பெரிய திட்டமாக இருக்கிறது. சாதாரணமாக பஞ்சாயத்து மன்றங்கள் போடுகின்ற திட்டங்களுக்குக் கூட நாம் முழுப் பணத்தையும் செலவு பண்ணுவதற்கு, சர்க்காருடைய முழு ஈடுபாடும் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிற காரணத்தினால், கடல் நீரை சுத்தம் பண்ணுவதற்கான திட்டத்தை மத்திய சர்க்கார்தான் பரிசீலனை செய்யவேண்டும். நாம் எடுத்திருக்கிற நடவடிக்கைகளை விவரித்திருக்கிறேன். பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் புதிய நிரந்தரமான திட்டங்களைப் போட்டிருக்கிறோம். உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். வேகமாக வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. வேறு ஏதாகிலும் தனிப்பட்ட முறையில் குறை சொன்னால், உடனுக்குடன் அந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கிறேன்.



## (4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அவர்களுடைய உரையிலே பெரும்பாலும் வலியுறுத்திக் கூறப் பட்டிருப்பது என்னவென்றால், தமிழ் நாட்டில் நாமெல்லாம் எதிர் பாராத விதத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமை பற்றியும், வறட்சியை ஒட்டி அதைச் சமாளிப்பதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் குறித்தும், செய்யப்படவேண்டிய காரியங்கள் குறித்தும், மத்திய அரசு செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த வறட்சி சம்பந்தப்பட்ட வரையில் இராமனாதபுரம் மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகவே, நாங்கள் பஞ்சத்தால் வாடுகிறவர்கள். நல்ல காலங்களில் கூட தஞ்சாவூர் போன்ற மாவட்டத்திற்கும், மற்ற மாவட்டங்களுக்கும் கூலி வேலை செய்வதற்காகச் சென்று வருபவர்கள். சாதாரணமாகவே பஞ்சத்தில் வாடுகின்ற நாங்கள் இந்தப் பெரிய பஞ்சத்தினால் மிகவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறோம். கிராமப் பகுதிகளில் மக்கள் குடிதண்ணீர் இல்லாமல், ஆடுமாடுகளுக்குக் கூட தண்ணீர் இல்லாமல், பயிர்களெல்லாம் வறட்சியால் பாதிக்கப் பட்டு வயல்களெல்லாம் வெடித்துக் கிடக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். நாங்கள் பஞ்சத்தைச் சமாளித்து பழக்கப்பட்டிருந்தாலும், இப்பொழுது வந்திருக்கிற பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிற காரணத்தினால், மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அதற்குரிய நடவடிக்கைகளை நமது அரசு மிக வேகமாகவும் விரைவாகவும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

மத்திய சர்க்காரிலிருந்து அமைச்சர் ஷிண்டே அவர்கள் வந்தார்கள். எங்களுடைய மாவட்டத்தில் அமைச்சர் மாதவன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். முதல் அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அதற்குப் பின்னாலே ஆளுநர் அவர்களும் வந்தார்கள். எல்லா அமைச்சர்களும் ஒவ்வொரு இடமாகச்

சென்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். நம்முடைய மாவட்டத்தைச் சேர்ந்த உணவு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் இந்த மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரையும் நேரடியாகக் கேட்டு, மனுக்களைக் கூட பெறாமல், நேரடியாக வாக்கு மூலம் கேட்டு, 'உங்கள் கிராமத்திற்கு என்னென்ன தேவை, என்னென்ன வேலைகளைச் செய்யலாம், எப்படி உணவு பங்கிட்டு முறையை அமைக்கலாம்' என்று நேரடியாகவே ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கேட்டு, அவர்கள் கூறுகின்ற கோரிக்கைகளின் பேரில் உடனுக்குடன் அதிகாரிகளிடம் உத்தரவு போட்டு, வறட்சி நிவாரண வேலைகள் இராமனாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மிக விரைவாக எடுக்கப்படவேண்டிய நேரத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் சில பேர்கள் வேறு மாதிரியாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். வறட்சி நிவாரண வேலைகளை அரசாங்கம் ஒழுங்காகச் செய்யவில்லை, வறட்சியால் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். என்ன எண்ணத்தின் பேரில் இப்படி பிரசாரம் செய்கிறார்களோ, பத்திரிகையில் வர வேண்டும் என்று பிரசாரம் செய்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், உண்மை நிலையைப் பார்த்தால், வறட்சியினால் ஏற்பட்ட பாதகத்தைத் தடுத்து நிறுத்த, வறட்சியால் வாடுகின்ற மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் செய்யப்பட்டு கொண்டு தான் வருகின்றன. நான் 35 நாட்கள் என்னுடைய தொகுதியில் இருந்தேன். கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்தேன். அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு அறிந்தேன். முப்பத்தைந்து நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லா கிராமங்களிலும் செய்யப்பட வேண்டிய வேலைகளை, கால்வாய் வேலை, கண்மாய் மராமத்து வேலை, ரோடு வேலை, இப்படி வேலைகளையெல்லாம் அங்கு இருக்கும் மக்களுக்குக் கொடுத்து, கிராமப் பகுதி மக்கள் கையில் பணம் போய்ச் சேரும்படியாகச் செய்து, பஞ்சாயத்துகளில் உணவுக் கமிட்டிகள் ஏற்படுத்தி, உணவுக் கமிட்டிகள் மூலம் மக்களுக்கு உணவு வழங்குவதற்கு ஏற்பாடுசெய்துவிட்டுத் தான் வந்திருக்கிறேன். நான் ஏன் இதைப்பற்றி எல்லாம் சொல்கிறேன் என்றால், இப்படி அநேகக் காரியங்கள் நடைபெற்றுக்





கொண்டிருக்கின்றன, செய்ய வேண்டிய காரியங்களைச் சரியான முறையில் செய்து கொண்டிருக்கும்பொழுது பிரசாரத்திற்காக அரசாங்கத்தின் பேரில் குற்றம் சாட்டப்படுகிறது. அது தேர்தல் தந்திரமாகக் கூட இருக்கலாம். அல்லது அரசியல் நோக்கத்தோடு செய்யலாம். அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. 1969-ம் ஆண்டில் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. அப்பொழுது ஏற்பட்ட வறட்சியின் அளவு, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியின் அளவு என்ன என்பதை நடுநிலைமை தவறாமல் நாம் யோசித்துப் பார்ப்போமானால், 1969-ம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியைவிட இரண்டு மடங்கு அதிகமாக இன்றைக்குத் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் 1969-ம் ஆண்டு மத்திய அரசு இந்த மாநிலத்திற்குக் கொடுத்த தொகையைவிட இப்பொழுது இரண்டு பங்கு குறைந்த தொகையைத் தான் கொடுத்திருக்கிறது. இது நியாயம் தானா? வறட்சி இரண்டு மடங்கு அதிகம், வறட்சிக்குக் கொடுக்கப்பட்ட பணம் இரண்டு மடங்கு குறைவு என்று சொன்னால், அது எந்த வகையில் நியாயம்? இங்கே ஆளுகின்ற கட்சி தி.மு.க என்பதினாலா அல்லது 1969-ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியைவிட இன்றைக்கு இரண்டு மடங்கு வறட்சி குறைவாக இருக்கிறதாக புள்ளிவிவரம் காட்டுகிறதா என்று நமக்கு விளங்கவில்லை. ஆகவே, மத்திய அரசு கருணை கூர்ந்து தமிழ் மக்கள் பால் இரக்கப்பட்டு, இப்பொழுது கொடுத்திருக்கும் தொகையைவிட மூன்று மடங்கு அதிகமான தொகையை ஒதுக்கித் தரவேண்டும். அப்படித் தந்தால்தான் வருகின்ற 6, 7 மாதங்களுக்குத் தமிழ் மக்களை, தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

ரூ. 7½ கோடியை மட்டும் வைத்துக் கொண்டு பெரிய காரியங்களைச் சாதித்துவிட முடியாது. மக்கள் தேவைகள் நிறைய இருக்கின்றன. பஞ்சம், வறட்சி நிலைமை கடுமையாக இருப்பதால், அதிகப்படியான தேவை இருக்கிறது. இதை அரசாங்கம்தான் பொறுப்பேற்றுச் செய்யவேண்டும். தனிப்பட்ட நபர்களால் ஒன்றும் பெரியதாகச் சாதித்துவிட முடியாது.

எல்லா பஞ்சாயத்துக்களிலும் கஞ்சித் தொட்டி திறந்துவிட முடியாது. தனி நபர் கஞ்சித் தொட்டி திறந்து வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிற அத்தனை மக்களையும் காப்பாற்றிவிட

முடியாது. ஏதோ ஒரு லட்ச ரூபாய் பணம் கொடுத்து கஞ்சித் தொட்டி திறந்துவிட்டால் போதுமா? நண்பர் வீராசாமி அவர்கள் சொன்னார், கஞ்சித் தொட்டி தொடர்ந்து நடக்கவில்லை, தன்னோடு வரட்டும், நண்பர் காளிமுத்து அவர்களுக்குக் காட்டுவதாகவும் சொன்னார். இராமநாதபுரம் மாவட்டத்தில் நான் பார்த்திருக்கிறேன். அங்கே கரியாப்பட்டியில் ஒரு கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டது. நாவுக்கரசர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் கஞ்சித் தொட்டியைத் திறந்து வைத்தார். ஓர் அண்டாவில் 10, 15 படி அரிசியைப் போட்டு காய்ச்சி அங்கு வந்திருப்பவர்களுக்குக் கஞ்சி ஊற்றினார். அதற்குப் பிறகு அங்கு கஞ்சி ஊற்றப்படவில்லை. திருச்சுளியில் ஒரு நாள் கஞ்சித் தொட்டி திறந்தார்கள். அதற்குப் பின்னாலே கஞ்சி ஊற்றவில்லை. நரிக்குடியில் கஞ்சித் தொட்டியில் ஒரு நாள் தான் கஞ்சி ஊற்றினார்கள். அதற்குப் பின் கஞ்சி ஊற்றவில்லை. நான் கஞ்சித் தொட்டிகள் திறந்ததுபற்றி ஆங்காங்கு என்னுடைய தொகுதியில் விசாரித்தேன். ஏதோ கஞ்சித் தொட்டி திறப்பு விழா நடத்தினார்களே தவிர, அதுவும் ஒரு நாளைக்கு ஒரு வேளை கஞ்சி ஊற்றினார்களே தவிர, பிறகு ஊற்றவில்லை. மக்களிடையே பிரசாரத்திற்கு வேண்டுமானால் அம்மாதிரி செய்யலாம். நண்பர் காளிமுத்து அவர்கள் என்னுடன் வந்தால் அவர்களுக்கு உண்மை நிலையைக் காட்டுவேன். கஞ்சித் தொட்டி ஒரு நாள் நடக்கிறதே தவிர, ஒரு நாள் கூட இல்லை. ஒரு நாள் ஒரு வேளை கஞ்சி ஊற்றுகிறார்களே தவிர, பிறகு கஞ்சி ஊற்றுவதில்லை. இப்படி ஒரு வேளை கஞ்சி ஊற்றிவிட்டால் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களை தனி நபர் காப்பாற்றிவிட முடியுமா? இம்மாதிரி செய்வது பிரச்சாரத்திற்காகப் பயன்படுமே தவிர, அரசியல் கட்சியை வளர்ப்பதற்குத் தான் பயன்படுமே தவிர, பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதற்குத் தான் பயன்படுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஒரு வேளை 10, 15 படி அரிசியைப் போட்டு அண்டாவில் காய்ச்சி திறப்பு விழா செய்து, கஞ்சி ஊற்றி விட்டால், பஞ்சத்தைப் போக்கிவிட முடியுமா? அரசாங்கம் அதிகமாகக் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்க வேண்டும். மற்ற அனுவசியமான வேலைகளுக்காக ஒதுக்குகின்ற பணத்தையெல்லாம் தள்ளிவைத்து விட்டு, இந்த வறட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, அதன் மூலம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.





அதற்குமேல் மத்திய அரசு இப்போது கொடுத்திருக்கும் உதவியைப்போல் மூன்று மடங்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்கவேண்டும். அதைச் செய்யாமல் இங்கே வந்திருந்து எதையோ சொல்லிவிட்டுப் போகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் எல்லாம் அரசியல் - பிரச்சனைதான். அரசியல் தான் எல்லாவற்றிற்கும் காரணம். வறட்சி வந்துவிட்டதா, அரசியல்தான். பஞ்சமா, அரசியல்தான். மழை இல்லையா அதற்கும் அரசியல்தான். இப்படி எதற்கெடுத்தாலும் அரசியலைத் தான் முன்னிறுத்துகிறார்கள். வறட்சி வந்துவிட்டது என்றால் உடனே தமிழ்நாட்டில் அடுத்த தடவை இந்த ஆட்சி வருமா வராதா என்று கணக்குப் போடுகிறார்கள். ஏதோ அவர்கள் எல்லாம் நிரந்தரமாக ஆட்சியில் இருக்கப்போவதைப் போல இந்த ஆட்சியைப்பற்றி கவலைப்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் தேவர் பெருமான் சொன்ன கருத்து என்னுடைய நினைவுக்கு வருகிறது. "பாம்பின் வாயிலிருக்கும் தேரை தனக்கு முன்னால் பறக்கும் ஈயைப் பிடிக்க நாக்கை நீட்டியது போல" என்று அடிக்கடி சொல்வார்கள். அதைப் போலத்தான் அவர்களின் பேச்சு இருக்கிறது. தேரை இருப்பது பாம்பின் வாயில். அது இப்போது சாகுமா, கொஞ்சம் நேரம் கழித்து சாகுமா என்ற நிலையில் இருக்கிறது. அந்த நிலையிலும் அதற்கு ஒரு நப்பாசை, முன்னால் பறக்கும் ஈயைப் பிடிக்கலாமா என்று நாக்கை நீட்டிப் பார்க்கிறது. அதைப்போல இப்போதோ கொஞ்சம் நேரங்கழித்தோ என்று தத்தளித்துக் கொண்டிருப்பவர்கள் தமிழ்நாட்டு ஆட்சியைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் விரும்பினால் ஆட்சியிலிருப்பவர்கள் நீடித்திருப்பார்கள். இல்லை என்றால் கீழே இறங்கிப் போவார்கள். அதைப்பற்றி நாம் என் கவலைப்பட வேண்டும்? நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளை நாம் இங்கே செய்ய வேண்டுமேயல்லாமல் நாளை ஆட்சி இருக்குமா இருக்காதா என்ற கணக்குப் போடுவதல்ல நம்முடைய வேலை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சனையை எப்படிச் சமாளிப்பது, எந்தெந்த வகையில் இந்த வறட்சியைப் போக்கலாம் என்பதைப்பற்றி தீவிரமாக யோசனை செய்து, அதற்காகப் பாடுபட வேண்டுமே அல்லாமல் அதை ஒரு அரசியல் பிரச்சனையாக ஆக்கக்கூடாது.

ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறார்களா என்பதைக் கண்காணித்து சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கு வேண்டிய காரியங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் அவர்கள் பொதுமக்களிடத்திலே தொண்டாற்றக்கூடியவர்கள்; மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை ஆட்சிக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள்; பிரச்சனைகளைச் சமாளிப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்குபவர்கள். அந்தக் கடமைகளை நாம் ஒழுங்காகச் செய்ய வேண்டும். தவறுகள் நடக்குமானால் அதை அந்தந்தக் கட்சிக்காரர்கள் கண்டிக்க வேண்டும். அண்மையில்கூட பத்திரிகையில் பார்த்தேன். முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள சில குட்டித் தேவதைகள் தவறு செய்வதாகச் சொல்கிறார்கள்; அதைக் கண்டிக்கிறேன் என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதைப்போல ஒவ்வொரு கட்சிக்காரர்களும் தங்கள் தங்கள் கட்சித் தொண்டர்களைக் கண்டிக்க வேண்டும். முதலமைச்சரவர்கள் பாணியில் குட்டித் தேவதைகள் என்று சொன்னார்கள். என்னுடைய பாணியில் சொல்ல வேண்டுமானால் நான் சுட்டித் தேவதைகள் என்று சொல்வேன்.

எங்களுடைய மாவட்டத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் நாவுக்கரசர் நாஞ்சில் மனோகரன் பேசுவதற்கு வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒருவர் என்னைப்பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் மிகக் கீழ்த்தரமாகப் பேசியதற்காக அங்கே இருந்த மக்கள் அவரைக் கண்டித்தார்கள். அந்தப் பேச்சாளர் என்னைப்பற்றிப் பேசியதும் தப்பு, முதலமைச்சரைப் பற்றிப் பேசியதும் தப்பு, பொதுமக்களைப் பற்றிப் பேசியதும் தப்பு என்று சொல்லி மன்னிப்பு கேட்டுவிட்டுப் போனார்.

நான் குறிப்பிடுவது என்னவென்றால் எந்தப் பிரச்சனையானாலும் அதை அரசியல் பிரச்சனையாக்கி, அதை ஒரு தேர்தல் பிரச்சனையாக்காதீர்கள். தேர்தல் 76-ல் வந்தாலும் சரி, 77-ல் வந்தாலும் சரி, தேர்தலே வராமல் போனாலும் சரி, ஷேக் அப்துல்லா, காஷ்மீரில் முதலமைச்சரானதால் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சண்டை வந்து தேர்தல் நடக்காமல் போனாலும் சரி, அல்லது நாளையே தேர்தல் வந்தாலும் சரி, கவலை இல்லை. வறட்சி நேரத்தில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும், பஞ்ச காலத்தில்





மக்களுக்கு என்ன செய்ய வேண்டும், வெள்ளப் பெருக்கா— மக்களுக்கு என்ன செய்யவேண்டும் என்ற காரியங்களில்தான் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தோடு அந்தக் காரியங்களுக்காகச் சண்டைபோட்டு, கூடுதல் பணம் ஒதுக்கச் செய்ய வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் சண்டை போட்டுக்கொள்ளலாமே தவிர, தேர்தல் சண்டைபோடும் நேரம் இதுவல்ல.

என்னுடைய தொகுதியாகிய காரியப்பட்டியில் நடைபெற வேண்டிய ஒரு கோரிக்கையைப்பற்றி நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த மாவட்ட அமைச்சர் மாதவன் அவர்களுக்கும் அது தெரியும். கிருதமால் நதித் திட்டத்திற்கு ஒரு சப்ளை சானல் வெட்டவேண்டும். அதற்கு 2 லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு எல்லாம் தயார் செய்திருக்கிறார்கள். அந்த வேலை வைகை டிவிஷன் சம்பந்தப்பட்டது. வைகை ஆயக்கட்டுக்குப் போக அதிகப்படியாக இருக்கும் தண்ணீரை இந்த கிருதமால் நதிக்கு விட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அதற்கு ஒரு கால்வாய்தான் வெட்ட வேண்டும். அந்தக் கால்வாயை வெட்டினால் அது காரியப்பட்டி மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இல்லை என்றால் கிருதமால், கிருதமால் என்று பேசிக்கொண்டிருக்கும் என்னை மக்கள் கிருதமாள், கிருதமாள் என்று மாற்றிவிடுவார்கள்.

அடுத்து, சென்னம்பட்டி கால்வாய்த் திட்டம் ஒன்று இருக்கிறது. அதற்கு 26 லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டமும் பெரிதும் உபயோகமான ஒரு திட்டமாகும். அதையும் விரைவில் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கோரிக்கையையும் நான் நீண்டகாலமாக வைத்துக்கொண்டிருக்கிறேன். எங்கள் தலைவர் தேவர் அவர்கள் மறைந்த உடனேயே அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். பல தலைவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்படுகிறது. அதைப் போல தென்பாண்டி மக்கள் தெய்வமாக மதிக்கும் முத்துராமலிங்க தேவருக்கு அவருடைய சமாதியில் ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்று ரொம்ப நாளாகவே கேட்டுக்கொண்டிருக்கிறோம். என்ன காரணத்தாலோ அது இன்னும் நிறைவேற

வில்லை. முதலமைச்சரவர்கள் கொஞ்சம் கருணை காட்டி, அரசாங்கத்தின் செலவிலேயே அந்த மணி மண்டபத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. அங்கே, வாழும் மக்கள் மிகவும் பின்தங்கியவர்கள். முத்துராமலிங்க தேவர் ஏழை மக்களுக்காகவே வாழ்ந்தார். ஏழை மக்களாக இருப்பதால் முத்துராமலிங்க தேவரின் மணி மண்டபம் கட்டுவதற்கு அவர்களிடம் பணம் வசூல் செய்ய முடியாது. யார் யாரோ இன்றைக்கு எங்களைப்பற்றி சில விஷயங்களை பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். பார்வேர்டு பிளாக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பிளவு என்றெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒருசிலர் பத்திரிகையில் அறிக்கை வெளியிடுவதனால் எங்கள் உறவு முறிந்து போகாது; பிளவு ஏற்பட்டுவிடாது. எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட செய்திகளுக்கு நாங்கள் மதிப்புக் கொடுப்பதில்லை. நாங்கள் வகுத்துக் கொண்டிருக்கிற கொள்கையின் காரணமாக எங்கள் கட்சி என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதுணையாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் ஒரு சிலரின் பத்திரிகைச் செய்தியைப்பற்றி கவலைப்படாமல், அரசாங்கத்தின் செலவிலேயே முத்துராமலிங்க தேவருக்கு அவருடைய சமாதியில் மணி மண்டபம் ஒன்றைக் கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முந்திய வறட்சிக் காலத்தில் சமுதாய நலக் கிணறுகள் வெட்டுவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இப்போது சமுதாய நலக் கிணறு வெட்டுவதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. அதற்குப் பணம் இல்லை என்ற காரணம் சொல்லப்படுகிறது. நாம் மத்திய அரசிடம் வாதாடி கொஞ்சம் அதிகமாகப் பணம் பெற்று அல்லது நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலாவது இந்தப் பணிக்குப் பணம் ஒதுக்கி, உடனடித் தேவையில்லாமல், அனாவசிய மாகச் செலவு செய்யப்படும் சில பணிகளைக் குறைத்துக் கொண்டாவது, அந்தப் பணத்தை சமுதாய நலக் கிணறுகள் வெட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





சமுதாயக் கிணறுகளை வெட்டினால் மழை பெய்யாவிட்டாலும், அந்தத் தண்ணீரை வைத்து விவசாயம் செய்யலாம். ஆகவே, நல்ல தண்ணீர் இருக்கக்கூடிய இடம் பார்த்து, இயற்கை ஊற்று இருக்கக்கூடிய இடம் பார்த்து சமுதாய நலக் கிணறுகளை வெட்ட வேண்டும். அப்படி வெட்டுவது இந்த வறட்சிக் காலத்தில் மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

நான் இங்கே தெரிவித்த கோரிக்கைகளான கிருதமால் நதித் திட்டம், சென்னம்பட்டி கால்வாய்த் திட்டம், ஆகியவை நிறை வேற்றப்பட வேண்டுமென்றும், எங்கள் தலைவர் முத்துராமலிங்க தேவருக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான வாக்குறுதியை இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளிக்கும்போதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் திரும்பத் திரும்ப 'பஞ்சம், பஞ்சம்' என்ற பல்லவியை முதலில் பாடி, 6 கோரிக்கைகளைக் கொண்ட ஒரு மனுவை மத்திய அரசுக்கு போடுகிற அனுபல்லவியைப் பாடி, கடைசியில் தமிழ்நாட்டு மக்கள் பஞ்சத்திற்குச் சரணம், பட்டினிக்குச் சரணம், ஊழலுக்குச் சரணம், விலையேற்றத்திற்குச் சரணம், எங்கே ஓடித் திரிந்து பிழைப்பு நடத்த முடியும் என்று ஓடித்திரிவதற்கு சரணம் என்று சரணத்தைப் பாடி முடித்திருக்கிறார்கள். பஞ்சம், பட்டினியைப் போக்குவதற்கு ஏற்ற உறுதியான நடவடிக்கைகளை, தேவையான சட்டத்தை மேற்கொள்வதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு ஏதாவது கவர்னர் உரையிலே இருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றம்தான். குறைகளைப் போக்க ஏதாவது திட்டங்கள் இடைக்காலத்தில் இருக்கிறதா இல்லையா, எவ்வளவு செலவாகும், என்னென்ன தேவைப்படும் என்பதைப்பற்றி ஒரு வார்த்தை கூட கவர்னர் உரையில் இடம் பெறவில்லை. இப்படிப்பட்ட குறைகளை எடுத்துக்காட்டுகின்ற இடத்தில், அதை எடுத்துக் காட்டக் கூடிய பொறுப்பில் நாங்கள் இருக்கிறோம்.

அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 1973-74 ஆம் ஆண்டில் 73 லட்சம் டன் உணவு தானியத்தை உற்பத்தி செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1974-75-ல் பருவ மழை பொய்த்துவிட்டதுதான், இப்படிப்பட்ட ஒரு கடுமையான நிலை தமிழகத்திற்கு வரக் காரணம் என்று சொல்கிறார்கள். தமிழகத்திற்குக் கடுமையான நிலை வருவதற்குக் காரணம் இயற்கை மட்டுமல்ல. இந்த மாநில அரசாங்கமும் அதற்குக் காரணமாகும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்னால் முதலமைச்சரே சொல்லியிருக்கிறார். 57 லட்சம் டன் உணவு தானியம் தேவை; 55 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம்; 2 லட்சம் டன் பற்றாக்குறை என்று சொல்லியிருக்கிறார். 2 லட்சம் டன்தான் பற்றாக்குறை என்றால் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? பஞ்சம், பஞ்சம் என்று மக்கள் கதறும் நிலை ஏற்பட்டிருக்குமா? வீதி வீதியாக மக்கள் குழந்தை குட்டிகளுடன் திரியும் நிலைமை உண்டாகுமா? அதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர்கள் தஞ்சை மாவட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவேரிப் பிரச்சினையில் நீங்கள் செய்த தவறின் காரணமாக, நீங்கள் ஏமாந்துபோய்விட்டதன் காரணமாக அந்தப் பகுதி வறண்டு போகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட அவல நிலையில் உணவுப் பங்கீடு விஷயமாக நீங்கள் சரியான கவனம் செலுத்தவில்லை என்றுதான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

தமிழகம், ஆந்திரம் போல என்றைக்கும் உபரி மாநிலம் அல்ல. இதுபோன்று மழை பொய்த்து, வறண்டுபோன காரணத்தினால் தான் 1966-67 இல் எங்கள் ஆட்சியில் அரிசிப்பஞ்சம் ஏற்பட்டு நாங்கள் ஆட்சியைவிட்டுப்போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்தில் மக்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருந்த சமயத்தில் நீங்கள் 3 படி அரிசி போடுகிறேன் என மக்களை வஞ்சித்து ஆட்சிக்கு வந்தீர்கள். இதுபோல என்றைக்குமே, இரண்டாண்டு—மூன்றாண்டுக்கு ஒரு முறை தமிழகத்தில் வறட்சி நிலைமை ஏற்பட்டுத்தான் வருகிறது. ஆனால் நீங்கள் உணவுப்





பங்கீட்டு விஷயத்தில் சரியானதொரு கொள்கையைப் பின்பற்றாத காரணத்தினால்தான் இன்றைக்கு நாட்டில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. நினைத்தபோது நினைத்தபடி பத்து ஆபீசர்களைப் போடுவது—உடனே திரும்பப் பெறுவது . . .

## 5. நடைமுறைக் கேள்வி.

### மேலவை உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் சட்டமன்ற விடுதியில் தாக்கப்பட்டது குறித்து.

**திரு. ஆலடி அருணா:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்றைக்குத் தக்க பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்களின் உயிருக்கே ஆபத்தான நிலைமை ஏற்பட்டு இருப்பதாக—சட்டமன்ற விடுதிப் பகுதியில் ஒரு கலவரமே ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இன்று காலை மேலவை உறுப்பினர் திரு. வெங்கா தாக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதுபோன்ற கலவரங்கள் எழாத வகையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரா? நாங்கள் எல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்கிறபோது அதனை எழுப்புவதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறீர்கள்.

**திரு. ஆலடி அருணா:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரா, இல்லையா என்று பேரவைத் துணைத்தலைவர் சொல்லட்டுமே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுபற்றி விசாரித்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கிறேன். திருமதி அனந்தநாயகி தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது ரொம்ப முக்கியமான செய்தி. விடுதியில் இருந்தும், எங்கள் அலுவலகத்தில் இருந்தும் செய்தி வந்திருக்கிறது. இன்று காலை 11.20 மணிக்குப் புது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 பிப்ரவரி 26

விடுதியில் மேலவை உறுப்பினர் திரு. வெங்கா தாக்கப்பட்டிருக்கிறார். அவரைக் கத்தியால் குத்தியவர்கள் டி.எம்.பி. 3129 டாக்சியில் தப்பிப்போயிருக்கிறார்கள். இன்றைய பேரவை நிகழ்ச்சிகள் முடிவதற்குள்ளாக தாங்கள் அதுபற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுபற்றி தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

**(4) ஆளுநர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.**

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உணவுப் பங்கீட்டு முறையைப் பற்றிச் சரியான கவனம் செலுத்தாது, நீங்கள் தொடர்ந்து தவறுதல்களைச் செய்து வந்திருக்கிற காரணத்தினால்தான் இன்றைக்கு நாட்டில் கடுமையான உணவுப் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை பொய்த்து உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பது உண்மை என்றாலும் நீங்கள் முன்பே உஷாராக இருந்திருந்தால் தமிழகம் இவ்வளவு கடுமையான பஞ்சத்திற்கு ஆளாகியிருக்க வேண்டாம்.

இன்றைக்கு உணவுப் பங்கீட்டு முறையைக் கொண்டு வாருங்கள் என்றால், 'என்னிடத்தில் உணவுப்பொருள் ஸ்டாக் இல்லை' என்று சொல்லக்கூடிய நிலையில் உணவு அமைச்சர் இருக்கிறார் என்றால், இது மக்கள் மத்தியில் எவ்வளவு பீதியை ஏற்படுத்தும் என்பதை நாம் யோசிக்க வேண்டாமா? பத்து லட்சம் டன் உணவுப் பொருள் கொள்முதல் செய்திருந்தால் இந்த நிலையே வந்திருக்காது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து 1½ லட்சம் டன்னுக்கு மேல் கொள்முதல் செய்ததே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடந்த சம்பவம் குறித்து பேரவைத் தலைவருக்கு விவரம் வந்து, அவர் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார். எல்லா உறுப்பினர்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்படி உணவுப்பொருள் பங்கீட்டு முறையில் நீங்கள் தவறு செய்தது மட்டுமல்ல, கொள் முதலுக்கென்று ஏஜெண்டுகளை வைத்தது பெரும் தவறு.



1975 பிப்ரவரி 26] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பத்திரிகைகளில் படிக்கிறோம். அதேமாதிரி இப்போது கூட்டுறவுச் சங்கங்களைக் கொள்முதல் செய்யச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போதே பல கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கொள்முதலுக்கு முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று பணத்தை வாங்கிக்கொண்டு ஊரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மிக முக்கியமான உணவுப் பிரச்சினையில் நீங்கள் பல தவறுகளைச் செய்திருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு மூன்று உத்தரவுகள். தஞ்சை மாவட்டத்தில் இருந்து அரிசியை எடுத்துச் செல்லலாம், உடனே கூடாது என்பதாக முன்புபோட்ட உத்தரவுபோல இன்றைக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து எடுத்துச் செல்லலாம் என்று 28-ஆம் தேதி உத்தரவு—கூடாது என்று 30-ஆம் தேதி உத்தரவு—நம்முடைய மாநிலத்தில் உணவுப்பொருள் உற்பத்தி குறையவில்லை. ஆனால் உணவுப் பங்கீட்டு முறையில் நீங்கள் சரியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் இன்றைக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் தாய்லாந்தில் இருந்து அரிசி தருவிக்க அனுமதி அளிக்க மறுத்துவிட்டது என்று சொல்கிறீர்கள். அரிசி விலை அங்கே என்ன? எவ்வளவு அந்நியச் செலாவணி ஆகும்? அதைவிட கோதுமையை வாங்கிக் கொடுத்தாலே பணம் எவ்வளவோ மடங்கு மிச்சமாகும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பிரதம அமைச்சர் அவர்களே மனமுவந்து அரிசி இறக்குமதி செய்கிறேன் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால் அம்மையார் பேசுகின்றதைப் பார்த்தால் அதைத் தடுத்துவிடுவார்களோ என்று தோன்றுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள்தான் தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது என்று தெரிவித்தீர்கள். பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. அடுத்தவர் கஞ்சித்தொட்டி திறந்திருக்கிறார்கள் என்கிறபோது அதைக் கிண்டல் செய்கிறீர்கள். பஞ்சகாலத்தில் மாவட்ட மக்கள் வெளியேறாது தடுக்க உடனடியாக அவசர அவசர நடவடிக்கையாக கஞ்சித் தொட்டிகளை அங்கங்கே திறப்பதைவிட அரசாங்கத்திற்கு வேறு என்ன முக்கியமான வேலை இருக்கிறது? பஞ்சநிவாரண வேலையாக இதை அல்லவா நீங்கள் முதலில் செய்திருக்க வேண்டும்?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 பிப்ரவரி 26

இன்றைக்கு இராமநாதபுரம் மக்கள் தலையில் தங்கள் சாமான்களைத் தூக்கிக்கொண்டு தஞ்சை மாவட்டத்தை நோக்கிச் செல்கிறார்கள். பஞ்சத்தில் அடிபட்ட மக்களைக் காப்பதற்கு உடனடியாகக் கஞ்சித் தொட்டியைக் கூடத் திறக்க வக்கில்லாத இந்த அரசுக்கு கப்பல் ஒரு கேடா என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எழுபத்தைந்து லட்சம் ரூபாயில் ஜப்பான் சென்று ஓட்டைக் கப்பலை உடனடியாக வாங்கவேண்டிய அவசியம் என்ன? எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது, எதற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்கிற பாகுபாடு தெரியாமல் நீங்கள் தாறுமாறாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

வறட்சிப் பணிக்கு மத்திய அரசாங்கம் பணம் தரவேண்டும் என்கிறீர்கள். நானூற்று அறுபத்தைந்து கோடி ரூபாய் வருமான முள்ள ஒரு அரசாங்கம் உடனடியாக பஞ்ச காலத்தில் கஞ்சித் தொட்டிகளைக் கூடத் திறக்காது—உங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறோம் என தபாலாபீஸ் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு பஞ்சத்தால் இராமநாதபுரம், புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ரேஷன் கார்டு விநியோகம் என்றால் அதையாவது ஒழுங்காகச் செய்திருக்கிறீர்களா? ஆயிரக்கணக்கான கார்டுகளை ஒரு கடைக்கே போட்டிருக்கிறீர்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த தலைவரைக்கொண்ட ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு 6,000 கார்டுகள்—500 கார்டுகளுக்கு மேல் ஒரு கடைக்கு இல்லை என்று வைத்திருந்தால்—போனால் மக்கள் ஒருசில மணிகளில் ரேஷன் தானியங்களை வாங்கி வர முடியும். இன்றைக்குக் காலை முதல் மாலை வரை காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. கார்டை வாங்கிக் கொண்டு எந்தக் கடைக்குப் போவது என்று கூடத் தெரியாது மக்கள் தவிக்கிறார்கள். கடைகடையாகப் போனாலும் ஏற்கனவே அதிகம் இருக்கிறது என்று ரிஜிஸ்தர் செய்து கொள்ள மறுக்கிறார்கள். இதில் ஒரு நிலையான சரியான ஏற்பாடு இல்லை. ரேஷன் கார்டு வழங்கவே எம்.எல்.ஏ. கையெழுத்து—கார்டு கிடைத்தாலும் ரிஜிஸ்தர் பண்ண வழியில்லை. ரேஷன் கார்டை வாங்கிவிட்டு எந்தக் கடையிலே போய் அரிசி வாங்குவது என்று தெரியாத அளவுக்கு வீதிவீதியாக சுற்றிக்கொண்டு வருகிறார்கள். ரேஷன் கார்டு விநியோகத்தை அவ்வளவு மோசமாகச் செய்து வருகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1975 பிப்ரவரி 26] [திருமதி த. ந. அனந்தநாயகி]

[நண்பகல் 12.00]

சில சாமார்த்தியமான கடைக்காரர்கள் போலிக் கார்டுகளை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். சில ஆசை பிடித்த பொதுமக்கள் 4, 5, 6 கார்டுகளை வைத்துக் கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உணவுப் பங்கீட்டு முறை நிரந்தரமாக இருக்கவேண்டும்.

The Civil Supplies Department should always be there. It must be a permanent fixture.

அது நிரந்தரமாக இருக்கவேண்டும். அவசர நிலைமைகளைச் சமாளிக்கக் கூடிய சக்தி இல்லையென்றால் நாம் கெட்டுவிடுவோம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். குடி தண்ணீருக்காக அலைய வேண்டியிருக்கிறது. சோற்றுக்கு அலைய வேண்டியிருக்கிறது. எந்தப் பொருளையும் வாங்க முடியவில்லை. ஒவ்வொன்றுக்கும் மக்கள் அவஸ்தைப்படுகிற அளவுக்குக் கொண்டு வந்துள்ள நிலையைக் காண்கிறோம். இதுவரைத் தமிழகத்தின் வரலாற்றிலே இப்படிப்பட்ட சாதனை எந்த ஆட்சிக்கும் இல்லையென்பதைத்தான் நான் மிகப் பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குக் குடி தண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக் கொள்வோம். குடத்தை எடுத்துக்கொண்டு இராத்திரி பூராவும் பெண்கள் திரிய வேண்டியிருக்கிறது. ஏதோ, வீராணம் ஏரித் தண்ணீர் வருகிறது, வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், வீராணம் தண்ணீர் வந்தாலும் தண்ணீர் தட்டுப்பாடு சமாளிக்கப்படுமா என்பது சந்தேகம் என்று. நாங்கள் அன்றைக்கே சொன்னோம்—கிருஷ்ணா விலிருந்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று. நீங்கள் அண்டை மாநிலங்களோடு பேசும்பொழுது வெற்றிகரமாகப் பேசி காரியத்தைச் சமாளிக்க முடியவில்லையென்றால், நீங்கள் பேசி என்ன காரியத்தைச் சாதிக்கப் போகிறீர்கள் ?

கவர்னர் உரையிலே, சமதர்ம சட்டங்களைக் கொண்டு வருவோம் என்று அறிவிப்பார்களென்று ஆசையோடு இருந்தோம். அது மாநிலத்தினுடைய பொறுப்பு. ஒவ்வொரு மாநிலமும் கமிட்டி போட்டிருக்கிறது. கமிட்டி போட்டும் கூட, உச்ச வரம்பு சட்டம் கொண்டு வர ஏன் தயங்குகிறீர்கள்? ஆம்னி பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குகிறேன் என்று சொன்னீர்கள். உங்கள் அமைச்சரவையிலே ஒற்றுமையில்லை போலிருக்கிறது.

தொடர்புடைய அமைச்சர் சொல்கிறார், இப்பொழுது இல்லை, தேர்தல் நிதி தேவை என்று. மாண்புமிகு முதலமைச்சர் தேசியமயமாக்குகிறேன் என்று சொல்கிறார்.

முதலமைச்சர், பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழை மக்களுக்குக் கல்வி கொடுக்க பட்டப் படிப்பு வரை இனிமேல் சம்பளம் இல்லாமல் படிக்கவைக்க யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார். ஆனால், கல்வியமைச்சர், சம்பளம் வாங்க யோசிக்கிறோம் என்று சொல்கிறார். இப்படி இருந்தால் மக்கள், உங்கள் கொள்கை என்ன என்று தெரியாமல் தவிக்கின்ற நிலைதான் இருக்கும்—இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு இலவசக் கல்வியைத் தீவிரமாக அளிக்கின்ற நிலைமையுள்ளது. பி.யு.சி. அல்லது பி.ஏ. கூட படிக்க வசதியில்லாதவர்களுக்காக, இலவசக் கல்வியை வைக்க வேண்டாமா? இன்றைக்கு கல்வியமைச்சர் தாராளமாகச் சொல்கிறார், பணம் இல்லாமல் படித்தால், ஒழுங்காகப் படிக்க முடியாது, தரம் கெட்டு விடும், ஆகவே, சம்பளம் வாங்க வேண்டுமென்ற அளவுக்கு அவர்கள் பேசுகிறார்கள் என்றால். . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, பொறுப்பு வாய்ந்த உறுப்பினரே நான் கூறிய கூற்றுக்களைப் பல்வேறு பத்திரிகைகளிலே தொடர்ந்து தெளிவாகப் படித்து விட்டுப் பேசுவாரானால் மிகமிக நன்றாக இருக்கும். நான் சொல்லியது, கல்வித் துறையைப் பற்றி

Educational Finance and Review Committee

என்ற ஒரு குழு அமைத்து, அது பல்வேறு தன்மையான பொருளாதாரத்தைப் பற்றி ஆராயும்போது, பல்வேறு கருத்துக்களை ஆராயும்படியாக நான் சொன்னேன். ஆராயும்படியாகச் சொன்னது பலதடவை நாட்டிலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், ஏழை எளியவர்கள், பணம் கட்ட முடியாதவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்; பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களுக்கு இலவசக் கல்வி வேண்டும். ஆனால், வசதி படைத்தவர்களுக்கு இலவசக் கல்வி வேண்டுமா என்ற கேள்வி எழும்புகிறது. வசதி படைத்தவர்களுக்குக் கட்டணத்தை விதித்து, மேல் வகுப்புகளுக்கு ஏழை எளியவர்களுக்கு இலவசமாகக் கல்வி அளிக்க வசதி இருக்கிறதா, வழியிருக்கிறதா, அவர்களால் இப்பொழுது பி.ஏ. படிக்க, எம்.ஏ. படிக்கக்





கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். அதிலே கூட இலவசக் கல்வி இங்கே வேண்டாமென்று சொல்லவில்லை. நான் ஆராயும்படியாகச் சொன்னேனே தவிர, அதுதான் கொள்கை என்று அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இலவசக் கல்வியை ஏற்றுக்கொள்கிற கொள்கையிலேதான் இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது. சமமாக இருப்பவர்களை வேறுபடுத்திப் பார்ப்பதும் தவறு, வேறுபட்டிருப்பவர்களை சமப்படுத்திப் பார்ப்பதும் தவறு, சோஷலிச சமுதாயத்தில் அவர்கள் ஆலோசித்து அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகுதான் முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, முடிவெடுக்கப்படாத ஒன்றைப்பற்றி இப்படிக் கூறக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படி சொன்னதை நான் குற்றம் என்று சொல்கிறேன். எம்.ஏ. வில் 10 பேர் படிப்பார்கள். 20 பேர் படிப்பார்கள். அதற்காக, 50,000 மாணவர்கள் கல்வியிலே மண் தூவப் பார்க்கிறீர்களா? இத்தனை கோடி ரூபாய் செலவு செய்யும்போது, பத்தாவது வரை இலவசக் கல்வி கொடுத்தால் என்ன கெட்டுவிடுகிறது? இப்பொழுது இலவசக் கல்வியென்று பெயரே தவிர, நன்கொடை கொண்டு வா, அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா என்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் தொல்லை கொடுக்கும் காரியங்களைச் செய்து கொண்டிருப்பீர்களென்றால், நீங்கள் என்ன மக்களுக்காக ஆட்சி செய்பவர்களாவீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: இப்பொழுது புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்விமுறை இருக்கிறது. அதற்கு மேற்பட்ட படிப்பிலே கூட 100-க்கு 70 பேர் எந்த வகையிலோ உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள். இப்பொழுது சென்ட்ரல் ஸ்கூல் முழுவதும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பல்கலைக் கழகத்தின் கீழே இருக்கிற அவ்வளவு மெட்ரிகுலேஷன் ஸ்கூல்களிலும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 5-வது வகுப்புக்குக் கீழேயிருக்கிற அத்தனை தனியார் பள்ளிகளிலும் கட்டணம் கட்டித் தான் பிள்ளைகள் பயின்று வருகிறார்கள். கான்வென்டில் பயில்பவர்கள் அத்தனைபேரும் கட்டணம் கட்டித்தான் பயில்கிறார்கள். வசதி படைத்தவர்கள் கட்டணம் கட்டிப் படிப்பதை அம்மையார் அவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏழை மக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், எம்.ஏ. படிக்கும்போது, இலவசக் கல்வி அளித்தால் அதில் என்ன தவறு? . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதைத் திட்டவட்டமாக மறுக்கிறேன். அல்லது அதற்காக வேதனைப்படுகிறேன். கான்வென்டில் படிப்பதைப் பற்றி நான் கல்வியமைச்சரைக் கேட்கவில்லை. பணம் இருப்பவன் எங்கோ படிக்க வைக்கட்டும், சென்ட்ரல் ஸ்கூலிலாவது படிக்க வைக்கட்டும், கான்வென்டிலாவது படிக்க வைக்கட்டும். ஏழைதானே அரசாங்கப் பள்ளியிலே பயில்கிறான். ஏழைகள் படிக்க வேண்டுமென்றுதானே காங்கிரஸ் அரசு 10-வது வரை இலவசக் கல்வியைக் கொண்டு வந்தது. இப்பொழுது பி.யூ.சி. வரை இலவசக் கல்வி. நீங்களே சொல்கிறீர்கள், வசதி படைத்தவர்கள் காசு கொடுத்து படிக்கிறார்கள் என்று. வசதி இல்லாதவன் தானே, அரசாங்கப் பள்ளிக் கூடத்திற்கு, உங்கள் பள்ளிக் கூடத்திற்கு வருகிறான். அதிலே இருக்கிற சலுகையை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது பிற்பட்ட இனத்தவர்களையும், வசதியில்லாதவர்களையும் மறைமுகமாகப் பாதிக்கக் கூடிய சதி என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்தக் கொள்கையில் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மக்களை ஏமாற்றக் கூடிய சட்டங்களை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. . . (மணியடிக்கப்பட்டது)

**திரு. மணலி சி. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநருடைய உரையின்மீது சென்ற 4 தினங்களாக பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்பாக மாண்புமிகு அம்மையார் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அம்மையார் பேசியதற்குப் பிறகு பேசுவது என்று சொன்னாலே ஒரு கஷ்டம். ஆகவே, என்னுடைய கருத்துக்களைக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு வெளியிலே பஞ்ச நிலைமையிருக்கிறது. வெளியிலே இன்றையதினம் 'டிரவுட்' காய்ச்சல், ஏற்பட்டிருக்கிற துர்பாக்கியமான சூழ்நிலைகளிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலிருந்து 4 கோடி தமிழர்களைப் பாதுகாக்க, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது இந்தச் சபையின் விவாதத்தில் எந்த அளவு தொனித்திருக்கிறது என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. இங்கே,



பெரும்பாலும் விவாதங்களிலே முன்னுக்கு வருவது, இவர்களை வெளியே அனுப்பிவிடவேண்டும், நாங்கள் அங்கே உட்கார வேண்டுமென்ற அதிகாரப் போட்டி தான் முன்னுக்கு நிற்கிறதே தவிர, பஞ்ச நிவாரணம் அல்லது, மேதகு ஆளுநரது உரையிலே இருக்கிற கருத்துக்களைப் பற்றிய விஷயம் மிகவும் பின்னுக்குப் போயிருக்கிறது. இன்றைக்கு நாட்டு மக்கள்—கோடிக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ன நடக்கப்போகிறதோ, தண்ணீர் எப்படி கொடுக்கப் போகிறார்களோ, எப்படி சாகுபடி செய்யப்போகிறோம், எப்படி வாழப் போகிறோம் என்று லோரும் கவனித்துக் கொண்டிருக்கிற நேரத்திலே, இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு போக்கு மேலோங்கி நிற்பதும் துர்ப்பாக்கியமான விஷயம் என்றுதான் நான் கருதுகிறேன்.

பஞ்ச நிவாரணத்தைப்பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு ரெவினியூ அமைச்சர் தெளிவாகச் சொன்னார்கள், நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று. இன்றைக்குக் காலைப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஒரு வாரத்திற்கு ரூ. 1 கோடி செலவு செய்யப் போகிறோம் என்றும், ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு தரப்போகிறோம், எவ்வளவு புதிய கிணறுகளை வெட்டப் போகிறோம், எவ்வளவு ஏரிகளுக்குத் தூர் வாரப் போகிறோம், எவ்வளவு பழைய கிணறுகளை ஆழப்படுத்தப் போகிறோம் என்று இப்படி பல்வேறு நடவடிக்கைகளுக்காக வாரத்திற்கு ரூ. 1 கோடி செலவழிக்கக்கூடிய விதத்திலே நிவாரணம் செய்யப் போகிறோம், தண்ணீர் கிடைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபோக, மத்திய சர்க்காருக்கு மனுப்போடக்கூடிய விஷயங்கள் இருக்கத்தான் இருக்கின்றன, அந்த நிலையிலேதான் நம்முடைய அரசியல் சட்டம் இருக்கிறது. அந்த அரசியல் சட்டம் இருக்கிறவரையில் மாநிலங்களுக்கு இந்த அளவிற்கு ஒடுக்கப்பட்ட அதிகாரங்கள் இருக்கிறவரையிலே நிச்சயமாக தமிழ்நாடு மாத்திரம் அல்ல, ஒவ்வொரு மாநில சர்க்காரும் மத்திய சர்க்காருக்கு மனுப்போட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கும். ஒரு நாளைக்கு மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து "எங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்று" கோரக்கூடிய நிலைமை ஏற்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இங்கே வந்திருந்தபோது பிரதம மந்திரி பேசி

ஞர்கள். உள்ளபடியே நான் அதற்காக வருத்தப்படுகிறேன். ஒரு பெரிய பதவியிலே இருப்பவர்கள், பாரதத்தின் தாய் என்று சொல்லக்கூடிய நிலையிலே இருப்பவர்கள், எல்லா மாநிலங்களிலும் இருக்கக்கூடியவர்களையும் தனது மக்கள் என்று நினைக்க வேண்டியவர்கள் என்ன பேசினார்கள்? 1969 ஆம் ஆண்டிலே வறட்சி வந்தபோது பணம் கொடுத்ததில் "சரியாக செலவழிக்கப்படவில்லை" என்று சொன்னால் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. அதைப்பற்றி 1975 ஆம் ஆண்டிலே பேசுகிறார்கள் என்றால் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சார் . . . .

**திரு. மணலி சி. கந்தசாமி:** நோ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சாரா, மேடமா . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 1975 ஆம் ஆண்டிலே பேசுகிறார்கள் என்றால் இன்றைக்கும் பஞ்சம் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கும் நிதி தரவேண்டுமென்ற நிலையிலே இருக்கிறார்கள். முன்பு அதற்காகத் தரப்பட்ட நிதியே ஒழுங்காக செலவழிக்கப்படவில்லை என்றால் இந்த நிதியைத் தருகிறபோது அப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் வரக்கூடாது என்ற நிலைமையைச் சொல்வதற்காகத்தான் சொன்னார்களே தவிர வேறு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் அவுட் ஆப் கான்டக்ஸ்ட்டில் வந்து ஏன் பேசினார்கள் என்று கேட்பது சரியல்ல.

THIRU MANALI C. KANDASAMI: I can understand her motive. She need not have told that. That is my opinion. If she wanted to tell anything, she could have called the Chief Minister and asked him to look atfer that. What I feel is that she should not have made use of that occasion for political propaganda. That is my contention.

அதனால்தான் நான் சொல்கிறேன், இன்றைக்கு எல்லாமே பாலிட்டிக்ஸ் ஆக இருக்கிறது. அந்த நிலைமையை நினைத்தால் ரொம்ப சங்கடமாக இருக்கிறது. பஞ்ச நிவாரணத்தைப்பற்றி எவ்வளவு பேசியிருக்கிறோம். அம்மையார் அவர்கள் மக்கள் எல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக தஞ்சாவூருக்கு ஓடுகிறார்கள் என்று அடுக்கடுக்காகச் சொன்னார்கள்—உங்கள் கட்சியெல்லாம்



அப்படிப்பேசுவதில் அம்மையாரிடம் நிற்கமுடியாது—அந்த அளவிற்குப் பேசுகிறார்கள். மக்களுக்கும் இந்த பணிகளுக்கும் தொடர்பு இருக்கவேண்டுமென்று பேசினார்கள்.

நான் ஒரு ஆலோசனையை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த டி.டி.சி. கவுன்சில் இருக்கிறதே அதை ட்ரௌட் ரிலீப் கவுன்சிலாக மாற்றுங்கள், வறட்சி நிலை போகிற வரையில் அது அப்படி இயங்கட்டும். மந்திரிகள் எல்லாம் ஒருவர் மாற்றி ஒருவர் அங்கங்கே போகவேண்டும். பல புகார்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். எவ்வளவு பணம் செலவழித்தாலும் நீங்கள்தான் சாப்பிட்டீர்கள் என்று சொல்கிறார்கள். 15 கோடி 10 கோடி ரூபாய் செலவு செய்கிறீர்கள், ஒரு பகுதிக்கு ஒதுக்குகிறீர்கள் என்றால் நீங்கள் அங்கே போங்கள், அதிகாரிகளை வைத்துக்கொண்டு நேரடியாகப் பாருங்கள். அங்கேயுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருக்கிறார்கள், எம்.பி.க்கள் இருக்கிறார்கள்; எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள், அவர்களையும் கேளுங்கள், கலந்துகொண்டு கவனியுங்கள். நல்ல முறையிலே செலவழிக்கப்பட வேண்டிய வழிவகைகளைச் செய்யுங்கள் என்று நேரடியாக அவர்களிடமே சொல்லுங்களேன், அப்படியில்லாமல் எதையெடுத்தாலும் "சாப்பிடுகிறார்கள்", "சாப்பிடுகிறார்கள்" என்று சொன்னால் என்ன செய்யமுடியும். நாங்கள் அந்தப் பக்கத்திலே உட்கார்ந்து கொள்ளப் போகிறோம் என்று சொல்கிறார்கள். உட்கார்ந்து கொள்ளுங்கள். 1976-ல் தேர்தல் வரப் போகிறது. அண்ணா தி.மு.க. வந்தால் அந்தப் பக்கத்திலே உட்காரட்டுமே. அம்மையார் அவர்கள் சொன்னார்கள் நானும் அந்தப் பக்கத்திலே உட்காருவேன் என்று. அவர்களுடைய கட்சியே அம்மையாரை விடமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என் கட்சி விடுவார்களோ விடமாட்டார்களோ கனம் உறுப்பினருக்கு விடக்கூடாது என்ற எண்ணம் இருக்கிறது.

**திரு. மணலி சி. கந்தசாமி:** எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது. காரணம் அவர்கள் வந்தால் இந்த சபையே நடக்காது அப்புறம். ஆகவே ஒரு பக்கத்திலே இந்த சர்க்கார் இன்னும் ஒரு வருஷத்திற்கு இருக்கத்தான் போகிறது, அதோடு நாம் டீல் பண்ணித்தான் ஆகவேண்டும். அந்த சர்க்காரில்

குறைகள் இருந்தால் ஆக்கப்பூர்வமான வழிகளைச் சொல்லி திருத்தலாம், தவறுகளைச் சுட்டிக் காட்டலாம். அப்படி திருத்தக் கூடிய ஒரு ஆரோக்கியமான மனப்போக்கு (ஹெல்தி ஆட்டிட்யூட்) இருந்தால்தான் நன்ருக இருக்கும்.

இங்கே நடக்கக்கூடிய விஷயங்களைப் பார்த்தால் எனக்குச் சங்கடமாக இருக்கிறது. நான் யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறேன், நான் அரசியலுக்கு லாயக்கில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. நானும் 45 ஆண்டுகாலமாக அரசியலில் இருக்கிறேன். சட்டமன்றக் காரியங்களில் எவ்வளவு உச்சத்திற்குப் போகவேண்டுமோ அவ்வளவுக்குப் போயிருக்கிறேன். இப்போது ரொம்ப சலிப்பு (ப்ரஸ்டரேஷன்) வந்துவிட்டது, எனக்கு விரக்தி வந்தாகிவிட்டது. அண்ணா தி.மு.க.-வில் இளைஞர்கள் இருக்கிருர்கள், அவர்களிடத்திலே எனக்கு ரொம்ப மரியாதை இருக்கிறது. அவர்கள் யங் அன்ட் எனர்ஜெட்டிக்காக இருக்கிருர்கள். அவர்கள் எதிர்காலத்தில் பெரிய அரசியல்வாதிகளாக வரக்கூடியவர்களாக இருக்கிருர்கள். ஆனல் அவர்கள் கொஞ்சம் கோபத்தை விட்டுவிட்டு ரொம்ப ரசாபாசமான நிகழ்ச்சிகளுக்குக் கொண்டுவரக்கூடாது, அப்படி சட்டசபை நிகழ்ச்சிகளைக் கொண்டுவந்தால் ஜனங்கள் ரசிக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நான் சொல்கிற யோசனை—டி.டி.சி.-யை பஞ்ச நிவாரண Drought Relief கவுன்சிலாக மாற்றி செலவழிக்கக்கூடிய பணம் முழுமையும் மக்களுக்குப் பயன்தரக்கூடிய காரியத்தில் செலவிடக்கூடிய முறையை ஏற்படுத்துங்கள்.

மாநில சுயாட்சிக் கோரிக்கைபற்றி சொல்லவிரும்புகிறேன். எத்தனை நாட்களுக்கு கேட்டுக்கொண்டிருப்பது? கொஞ்சம் சரித்திரத்தைத் திரும்பிப் பார்க்கவேண்டும் அவர்கள். 22 வருஷத்திற்குப் பின்னலே அமெரிக்காவின் கைக்கூலி என்றும் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர் என்றும் சொல்லப்பட்ட ஷேக் அப்துல்லா இன்றைக்கு காங்கிரஸ் கட்சி அங்கத்தினராகக்கூட இல்லாமல் காஷ்மீர் முதல்மந்திரியாகியிருக்கிருர். அப்படி வரக்கூடிய நிலையில் ஒரு சரித்திரமே இருக்கிறது. இருபத்தைந்து வருஷத்திற்குப் பின்னலே ஒரு உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் அமெரிக்க கைகூலியல்ல, காஷ்மீருக்கு ஒரு அந்தஸ்து வேண்டுமென்ற புனிதமான போராட்டத்தை நடத்தியவர் என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்களே ஒப்புக்கொண்டிருக்





கிருர்கள் இன்றைக்கு காஷ்மீரில் அவருக்கு இருக்கிற செல்வாக்கை குறைத்து மதிப்பிடமுடியாது அதனுல் நான் இதிலே ஈடுபட்டேன் என்று சொல்லியிருக்கிருர்கள்.

இன்றைக்கு நான் பந்தயம் கட்டுகிறேன். இந்த தேசத்திலே மாநில சுயாட்சி வராமல் இந்த நாடு உருப்படாது (கரவொலி) பிரிந்துபோகவேண்டுமென்று சொல்லவில்லை, பிரிந்துபோய்விடுவார்கள் என்று சொல்லவில்லை, யாருக்கும் அந்த பயம் கிடையாது, ஒன்றுபட்ட இந்தியா தான். அந்த நிலைமை வந்துவிட்டது. ஆனல் ஒன்றுபட்ட இந்தியா முன்னேறவேண்டுமானல் ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய முறையிலே மாநிலங்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய முறையிலே சுயாட்சி வந்தே தீர வேண்டும்.

ஆளுங்கட்சியைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். உங்கள்மீது இவ்வளவு வெறுப்பை வளர்க்கக்கூடிய இவ்வளவு குற்றச்சாட்டுகளை சொல்லக்கூடிய வகையிலே அவர்கள் இருக்கிருர்கள். லஞ்சம் வாங்கினீர்கள், ஒழுக்கக் கேடாக நடக்கிறீர்கள் என்று சொல்கிருர்களே என்று பார்க்கிறபோது உங்கள் ஆளுங்கட்சிக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதைத்தான் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலைமையிலே நம்மிடம் தப்பு தவறு இருக்கிறதா? இருந்தால் திருத்திக்கொள்ளலாம் என்ற முறையிலே சிந்திக்கவேண்டும். கர்நாடகத்திலே காங்கிரஸ் கட்சித் தலைவர் தன்னுடைய கட்சி அங்கத்தினர்கள் யார் யாருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று கணக்குக் கொடுக்கவேண்டும், அதற்கு மேல் இல்லை என்று நிரூபிக்கவேண்டும், அப்படிச் செய்தால்தான் அடுத்த தடவை சீட் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிருர்கள். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறமை மிக்கவர்கள், ரொம்ப கஷ்டமான நிலைமையில் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிருர்கள். அவரிடம் அன்பு, பணிவு எல்லாம் உண்டு. அனுபவம் உண்டு. அவர்கள் கட்சியைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் கட்சியிலே நடைபெறுகிற பல்வேறு விஷயங்களைப் பொறுத்தவரையில்—நீங்கள்தான் இதிலே சரியான முடிவுக்கு வரக் கூடியவர்கள், நாங்கள் சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல—பல்வேறு மட்டத்திலே உங்கள் கட்சியிலே தூற்றல் நடைபெறுகிறது, நோட்டீஸ் அச்சடித்துக்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 பிப்ரவரி 26

கொடுக்கிறார்கள், கட்சியை எப்படித் திருத்துவது என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் தைரியமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தி.மு.க. என்ற ஸ்தாபனம் உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எதிர்காலத்திலே அதனுடைய தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய பொறுப்பு உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு மட்டுமல்ல நீங்கள் பொறுப்பு, நடுத்தர வர்க்கத்தினர், தொழிலாளர்கள், இன்னும் பலர் இருக்கக்கூடிய ஒரு மாபெரும் ஸ்தாபனம் உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. காலஞ்சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் வெகு லாகவமாக கட்சியை உங்கள் கையிலே ஒப்படைத்திருக்கிறார்கள். இன்றைக்குப் பல கஷ்ட நஷ்டங்களும், ஒழுங்கீனங்களும், கட்டுப்பாடின்மையும் இருக்கிறது என்றால் மூன்று மூத்த தலைவர்களும் எப்படி அதைத் தீர்க்கப் போகிறீர்கள், உங்களுடைய கட்சியிலே யார் அதற்குத் தகுதியுடையவர்கள் என்பதைப்பற்றியெல்லாம் யோசித்துப் பாருங்கள். இந்த நிலையில் உங்கள் கட்சியைத் திருத்தினால் யாரும் ஒன்றும் உங்களைச் செய்ய முடியாது. திறமையாக அரசாங்கத்தை நடத்தக்கூடிய நீங்கள் கட்சியைத் திறமையாக நடத்துவதற்கு பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து அதை முன்னுக்குக் கொண்டு வந்தால், மிகப் பெரிய கட்சியாக, தென்னாட்டில் உள்ள கட்சி, மற்றப் பிரதேசங்களுக்கு வழிகாட்டும் வகையில் உள்ள கட்சி என்ற வகையில் இருக்கும். பல்வேறு பாதிக்கப்பட்ட மக்களையும் ஒன்றுதிரட்ட முடியும், செல்வாக்கு பெற முடியும் என்ற அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது எதுவாக இருந்தால் நாட்டிலே ஒரு 'பேஷன்', 'ப்ரோ-அமெரிக்கன்' என்று சொல்வது. 'ரைட் ரீயாக்ஷன்' என்று சொல்வது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் சில கோரிக்கைகளை வைத்தார், உடனே அவர்கள், பிற்போக்கு சக்திகள் தூண்டித் தான் செய்கிறார் என்று சொல்கிறார்கள். அவருடைய சரித்திரம், பாரம்பரியம், மிகப்பெரிய தியாகம் முதலியவைகள் நாட்டு மக்களுக்குத் தெரியும். அவரை வேர்க்பாலோ எதுவோ ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவரைப்போய் ஏகாதிபத்திய ஏஜண்ட் என்று பேசுவது சரியல்ல.

அம்மையார் அவர்கள் தாய்லாந்த் அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். பி.எல். 480-க்கு பணத்தைக் கொடுக்கலாமா? பர்மா, தாய்லாந்தைப்பற்றிப் பேசக்கூடாதா? அங்கேயிருந்து வாங்கினால்



1975 பிப்ரவரி 26] [திரு. மணலி சி. கந்தசாமி]

என்ன? பர்மாவிற்கும், தாய்லாந்திற்கும்தான் பணம் போகட்டுமே. பி.எல். 480 பெரிய சனியன். இது நாடு பூராவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு) சோவியத்கூட அமெரிக்காவிடமிருந்து கடன் வாங்கித்தான் கொடுக்கிறது, உங்களுக்குத் தெரியாது. நாம் அரிசி சாப்பிடக் கூடியவர்கள். நான் கேட்கிறேன், ஆந்திராவிற்கும் நமக்கும் இடையே அரிசி பேரம் செய்வதில் என்ன தடங்கல், இதற்கு செண்ட்ரல் க்ளீயரன்ஸ் வேண்டும். இப்படி மாநிலத்திற்கு மாநிலம், இராஜ்யத்திற்கு இராஜ்யம் பரிவர்த்தனை செய்து கொண்டு, பண்டமாற்று செய்து, தங்கள் துயரைப் போக்கிக் கொள்வதற்கு பரஸ்பரம் உதவி செய்து கொள்வதற்கு இடைஞ்சலாக இந்திய அரசு சட்டம் இருப்பது நல்லது அல்ல. நிச்சயமாக தாய்லாந்துடனும், பர்மாவுடனும் அரிசி விற்பனை செய்துகொள்வதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வது நாட்டிற்கு நல்லது, அமெரிக்க பிடிப்பும் தளரும். அமெரிக்காவிடமிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய் கடனை வாங்கி கடனைச் சுமத்துவதைவிட, ஆசிய நாடுகளிலிருந்து சாமான்களைப் பெற்று நிச்சயமாக உணவு கொடுக்க முடியும்.

இப்படிப்பட்ட நிலைமையில் நான் கேட்டுக்கொள்கிறேன், பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களை உணவுக் கவுன்சில் என்று மாற்றுங்கள், ஜில்லா கவுன்சிலை பஞ்ச நிவாரண கவுன்சில் என்று மாற்றுங்கள், மந்திரிகள் மாற்றிமாற்றி நேரடியாக அங்கே சென்று வேலைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

அடுத்தபடியாக, தண்ணீர்ப் பஞ்சம், எலெக்ட்ரிசிடி பற்றிப் பேசும்பொழுது ஏற்கனவே ஒரு தடவை no electricity is costlier than electricity என்று சொன்னார்கள். இப்பொழுது தண்ணீர். அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. சொந்த பூமி வைத்திருப்பவருக்கு 50 காலன் தண்ணீர் வந்தாலும் ஆதாயம்தான். குழாய்த் தண்ணீர் இல்லை என்று சொல்லும் அடிப்படையில், அறிவிப்பு கொடுங்கள், எங்கே தண்ணீர் கண்டுபிடித்தாலும் 5,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிப்பு கொடுங்கள். எந்த விவசாயி கண்டுபிடித்தாலும் 1,000, 2,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவியுங்கள். அவ்வாறு ஊக்குவியுங்கள்.

இவ்வாறு நான் கூறியவற்றை நிறைவேற்றும் விதத்தில் கவனத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விண்ணீரும் வற்றி, புவிநீரும் வற்றி, விம்மியழக் கண்ணீரும் அற்ற காலம் என்று கூறத்தக்க நேரத்தில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். தமிழகத்தைக் கவ்விக் கொண்டிருக்கின்ற இத்தகைய சூழலை அவர்கள் பஞ்சம் என்று குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும், கடுமையான, இதுவரையில் காணாத வறட்சி என்று சுற்றிவளைத்துச் சொல்லியிருப்பதே அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட கடுமையான பஞ்சம் அல்லது அரசாங்கத் தரப்பிலே சொல்லப்படுவதைப்போல மிகமிகக் கடுமையான வறட்சி இராமநாதபுரம் மாவட்டத்தையும் இன்னும் சில மாவட்டப் பகுதிகளையும் தாக்கி பல மாதங்கள் உருண்டோடி இருக்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்து மக்கள் புல் அரிசியையும், விஷக் கிழங்குகளையும் சாப்பிடுகிறார்கள் என்று போன சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது மாடுகளுக்குக் கூட தீவனம் இல்லாமல் பனை ஓலையைத் தின்பதற்குப் பழக்குகிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் அறிந்திருக்கக் கூடும். அதற்குப் பிறகும் சொந்த ஊரிலே இருந்தால் ஒவ்வொரு வீடும் கல்லறையாக மாறிவிடும் என்ற நிலை ஏற்பட்ட பிறகு இடம் பெயர்ந்து செல்ல ஆரம்பித்தார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சை மாவட்டத்திற்கு மாறிச் செல்கின்ற நிலைமை உருவானதற்குப் பிறகுதான் இந்த அரசு அதைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறது என்பதை நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் தூக்கக் கலக்கத்தில் இருந்த இந்த அரசு இப்பொழுதுதான் சோம்பல் முறிக்க ஆரம்பித்திருக்கிறது என்பது ஆளுநர் உரையைப் பார்த்த பிறகுத் தெரிகிறது.

பலயிடங்களில் பட்டினிச் சாவு ஏற்பட்டிருப்பதாக நேற்று இந்த மாமன்றத்திலே ஃபார்வர்ட் பிளாக் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் திரு. கந்தசாமி அவர்களும், அவர்களுடைய கட்சித் தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்களும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படி அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டதா





என்றுகூட அமைச்சர் பெருமக்கள் கேட்கக்கூடும். பரமகுடி பகுதியில் வளநாடு என்ற இடத்தில் பட்டினியால் ஒருவர் செத்திருக்கிறார். அந்த கிராம அதிகாரி வட்டாட்சி அலுவலகத்திற்குத் தகவல் தந்திருக்கிறார். கிராமத்தின் பெயர் 'வளநாடு', ஆனால் அங்குதான் பஞ்சத்தால் பட்டினிச் சாவு என்ற அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது.

குடிதண்ணீருக்காகத் திண்டாடும் அளவிற்குச் சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன. இராமநாதபுரத்திற்குப் போகும் ஒரு குடிநீர்க் குழாயில் கசிவு ஏற்பட்டு, அதற்கு ஏற்பட்ட இரக்கத்தின் காரணமாக ஒரு இடத்திலே குட்டையாகத் தேங்கியிருக்கிறது. அந்த தண்ணீரைத்தான் அந்தப் பகுதியிலுள்ள கிராமத்து மக்கள் குடிப்பதற்கும் சரி, குளிப்பதற்கும் சரி, மாடுகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கும் சரி, பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேதனையான சூழல் உருவாகியிருக்கிறது. இதை வருத்தத்துடன் அப்பொழுதே கவனிக்க வேண்டிய அரசாங்கம் இவ்வளவு காலதாமதமாகிக் கவனம் செலுத்தியிருக்கிறது என்பது மட்டுமல்ல, அங்கே சுற்றுப் பயணம் செய்கின்ற அமைச்சர் பெருமக்கள் நிரந்தரமாக அங்கே 10, 15 நாட்கள் முகாம் போட்டாவது பஞ்ச நிவாரண வேலைகளை முடுக்கி விட்டிருக்க வேண்டும். ஆனால் அதிகாரிகளுக்குக்கூட முன்கூட்டியே அறிவிக்காமல் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்து உடனடியாக விமானத்திலே புறப்பட்டு வருவது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரியவர் மணலி அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல அமைச்சர் பெருமக்கள் அங்கேயிருந்து பணிகளைக் கவனிக்க வேண்டும். இடைத் தேர்தல் நடக்கும் நேரங்களில் ஒவ்வொரு தொகுதியிலும் முகாம் போட்டு கட்சிப் பணியாற்றும் அமைச்சர் பெருமக்கள் இப்படிப்பட்ட நேரங்களில் அங்கே முகாம் போட்டு பணியாற்ற வேண்டுமென்பதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னென்ன செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் சார்பில் அரசாங்கத்திற்கு நாங்கள் கோரிக்கைகளை விடுத்தோம். அதிலே முடியாது என்று நிராகரித்த கோரிக்கையை முடிந்த அளவில் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் நிறைவேற்றி வருகிறோம். எல்லோருக்கும் கஞ்சி ஊற்றுகிறீர்களா, எல்லா நாட்களிலும் கஞ்சி ஊற்றுகிறீர்களா என்று நண்பர்கள் கேட்டார்கள். அரசாங்

கத்திற்கு எதிராக போட்டி அரசாங்கம் நடத்துவது எங்கள் நோக்கம் அல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் மறுத்ததற்குப் பிறகு அந்தக் காரியங்களை நாங்கள் செய்கிறோம். பல வடபுலத்து மாநிலங்களில் பீஹார், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில்கூட சில குறிப்பிட்ட மாவட்டங்களில் பஞ்சம் ஏற்பட்ட பிறகு உணவு அடையாள அட்டை கொடுக்கப்பட்டு உணவு வழங்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் பார்த்தோம். அப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்குப் பிறகும்கூட முடியாது என்று கையை விரித்ததற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தந்த நிதி உதவியைக் கொண்டு இன்றைக்குக் கஞ்சித் தொட்டிகளை நடத்திக்கொண்டிருக்கிறோம். சும்மா கொடுக்கிற மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பது என்று சொல்லுவார்கள். அதைப்போல இன்றைக்கு அதைப்பற்றி எள்ளனம் செய்கிறார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறொன்றும் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை; "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" என்ற குறளை மட்டும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாங்கம் அங்கேயுள்ள பஞ்ச நிவாரணப் பணிகளை நேரடியாகத் தலையிட்டுச் செய்யாத வரையிலும் நிச்சயமாக வறட்சி நிவாரணப் பணி முழுமை பெறாது. ஆங்காங்கு புதுப் பணக்காரர்களை உற்பத்தி செய்யப் பயன்படுமே தவிர, கருதுகின்ற எண்ணம் நிச்சயமாக நடைபெறாது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12.30]

ஆளுநர் அவர்கள் அங்கே சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்தில் கூட கூலி நிர்ணயம் செய்வதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று நேரடியாகத் தெரிந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணத்தின்போது கூடத் தெரிந்திருக்கிறது. ஒழுங்காக வேலை நடக்கிறதா என்பதைக் கண்காணிக்க சர்வகட்சிக் குழு நிச்சயமாக அமைக்கப்பட்டாக வேண்டும். முழு நாள் வேலை என்று கையெழுத்து வாங்கிக் கொண்டு பாதி நாளைக்குக் கூலி தரக்கூடிய நிலைமை இருக்கிறது. கூலி கொடுப்பதில் கூட இரண்டு பங்கு தானியமாகவும், ஒரு பங்கு பணமாகவும் கொடுத்தால் நலமாக இருக்குமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





உணவு நிலைமை மோசமாக இருக்கிறது என்று அவர்கள் சொல்லக்கூடும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூடத் தெரிவித்திருக்கிறார்கள்—தமிழகத்தின் உணவு நிலைமை புல்லாங்குழலைப்போல் இருக்கிறது என்ற உவமையைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அடிக்கடி அதிலிருந்து சோக இசைதான் கேட்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியினர் இங்கு இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லுவது அரசாங்கம் இந்தப் பணிகளை எல்லாம் நேரடியாகக் கவனிக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறார்களே தவிர, இந்த அரசாங்கத்திற்கு வரப் போகிற தேர்தலில் பெரும்பான்மை வந்துவிடும், அதற்குப் பிறகு எப்படி எதிர்ப்பது என்பது தெரியாமல் ஏதோ எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் இருட்டு மூலையில் தீப்பந்த வெளிச்சத்தில் உட்கார்ந்து கொண்டு இந்தச் சர்க்காரை எப்படிச் சாய்ப்பது என்று சதித் திட்டம் தீட்டவில்லை என்பதை ஆளும் கட்சி நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இருக்கும் தவறுகளை ஆங்காங்கே இருக்கிறவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று விட்டுவிடுவது நிச்சயமாக நலம் பயக்காது. இப்போது பல இடங்களில் இருந்து புகார்கள் வருகின்றன, தவறுகள் நடந்திருப்பதாக. அந்தந் தவறுகளுக்கு முழுக்க முழுக்க ஆளும் கட்சிதான் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால் 99.9 சதவிகிதம் ஆளும் கட்சிதான் காரணம். ஆளும் கட்சி என்று சொல்லும்போது, அந்தக் கட்சியில் கஷ்டநஷ்டத்தை ஏற்றவர்கள், துன்ப துயரத்தை ஏற்ற தூயவர்கள் இருப்பார்கள். அவர்களை நான் குறிப்பிடவில்லை. ஆளும் கட்சி என்றால் வெறும் அங்கவஸ்திரத்தின் மூலமாகக் காட்டிக் கொள்பவர்கள், அங்கவஸ்திரத்தின் அசைவில் அதிகாரிகளை அச்சுறுத்திக் கொண்டிருப்பவர்கள் சிலபேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த அரசாங்கத்திற்கு நிரந்தரமான கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிக்க, இந்தப் பணி ஒழுங்காக நடக்க சர்வ கட்சிக் கண்காணிப்புக் குழுவை நிச்சயமாக ஏற்படுத்தித் தீரவேண்டும். அது நிறைவுறாத வரையில் பஞ்ச நிவாரணப் பணி என்றாலும், வறட்சிப் பணி என்றாலும், வறட்சிப் பணிக்கு ஒரு கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்றாலும் அதன் மூலம் ஏழை மக்கள், பஞ்சப் பகுதியில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் நிச்சயமாக நலம் பெறமாட்டார்கள்.

ஆளும் கட்சி ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லுகிறது, இந்த வறட்சி நேரிட்டதன் காரணமாக மனிதாபிமானத்தோடு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிற ஆக்கபூர்வமான யோசனைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலைமையைப் பயன்படுத்தி இந்தச் சர்க்காரைச் சாய்ப்ப தற்கு என்ன திட்டம் என்று யாரும் சிந்திக்கவில்லை, யாரும் சதித் திட்டங்களை வகுக்கவில்லை. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டு மென்றால் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் யாரும் விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் "எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்" என்ற நிலைக்கு ஆளும் கட்சி வந்துவிடக்கூடாது என்பதைத்தான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சப் பகுதி மக்களை எண்ணிப் பார்க்கும்போது ஆளுநர் ஆற்றியிருக்கும் உரையானது அவர்களை வாழ்விக்கப் போதுமான அளவு செயல் திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை என்ற மனக் குறையைத் தெரிவித்து, இந்த உரையை வரவேற்க இயலவில்லை என்று கூறி அமைகிறேன்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே கடந்த 100 ஆண்டுக் காலமாக இல்லாத வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை மிகக் குறைவாகப் பெய்திருக்கிறது. அதன் காரணமாகத் தமிழகத்தில் பஞ்சமும், வறட்சியும் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சத் தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்ற முறையில் நம்முடைய அரசு சீரிய திட்டங்களைப் போட்டு அவற்றை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆனால் அதே நேரத்தில் எதிர்க்கட்சி நண்பர்கள் சர்வ கட்சிக் குழு அமைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 50 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. அதற்கு முன்பு எதிர்க்கட்சித்





தலைவர்கள் எல்லாம் அவசர அவசரமாக டில்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து தமிழ் நாட்டின் பஞ்ச நிலைமை நிவாரணத் திற்கு 5 கோடி ரூபாய் நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட் டார்கள். நம்முடைய அரசாங்கத்தின் செயல்களைத் திசை திருப்ப வேண்டுமென்று அப்படிச் செய்திருக்கிறார்கள். 50 கோடி ரூபாய் செலவு செய்ய தமிழக அரசு திட்டமிட்டிருக்கும் போது அவர்கள் 5 கோடி ரூபாய் கேட்டார்கள். இதை முடிவு செய்வதற்கு முன்பு நம்முடைய அரசு ரெவின்யூ போர்டு உறுப் பினர்களை எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து நேரடியாக நிலைமையைக் கண்டறிந்து அதற்குப் பிறகு பல நிவாரண வேலைகளை மேற்கொண்டிருக்கிறது. இதிலே 25 கோடி ரூபாய் நம்முடைய அரசும், 25 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு அந்த 25 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று இங்கு பேசிய உறுப்பினர் ஒருவர் கூடக் கூறவில்லை. மத்திய அரசு கோதுமை, அரிசி போன்றவற்றை வேகமாக அனுப்பி வைக்க வேண்டுமென்ற குரலை ஒருவரும் எதிர்க்கட்சியிலிருந்து எழுப்ப வில்லை.

நம்முடைய அரசு இருக்கிற நிலைமையை உணர்ந்து, போர்க் கால நடவடிக்கை போல் வேகமாகச் செயலாற்றி வருகிறது. எந்தப் பகுதியில் தண்ணீர் இல்லையோ அங்கே கிணறு வெட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறது; கிணற்றை ஆழப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று வேலை நடைபெறுவதை நேரடியாக, உரிய முறையில் கண்காணித்து வருகிறார்கள். மக்களுக்கு வேலை இல்லை என்றால் குளம் குட்டைகளை ஆழப்படுத்த நடவடிக்கை எடுத்து வேலை வாய்ப்பைத் தேடித் தருகிறார்கள். எப்படியாவது ஆளும் கட்சிமேல் பழி போட வேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறார்களே தவிர உருப்படியான யோசனை எதுவும் இதுவரை சொல்லவில்லை.

அதைப் போலவே பொதுப் பணித் துறையிலே சிறு பாசனத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றித் தந்தால் நாட்டுமக்களின் துயர் துடைப்புக்கு உதவியாக இருக்கும். 5 லட்சம், 10 லட்சம் என்று சிறுபாசனத் திட்டத்திற்கு செலவு செய்வதன் மூலம் பணமும் நல்ல முறையில் செலவாகும்; மக்களுக்கும் பஞ்ச நிவாரணம் அளித்ததாக இருக்கும்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வறட்சியின் காரணமாக இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதை நீக்குகிற வகையில் சிறு விவசாயிகள் வாங்கி இருக்கிற கடன்களைத் திரும்பப் பெற கோர்ட்டுகளுக்கு இன்னும் ஒரு வருடத்திற்குப் போக முடியாத படி தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பருத்தி சாகுபடி செய்கிற விவசாயிகள் இந்த ஆண்டு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு விலை குறைவாகியிருக்கிறது. அதனால் பருத்தியை விற்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். இந்த நேரத்தில் மத்திய அரசு பாகிஸ்தானிலிருந்து 20கோடி ரூபாய்க்கு மேல் பருத்தியை இறக்குமதி செய்வது பற்றிய திட்டத்தைப் பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். அப்படி இறக்குமதி செய்தால் நம்முடைய விவசாயிகள் நிலைமை இன்னும் மோசமாகும். மத்திய அரசு பாகிஸ்தானிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்யும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் இன்று பல இடர்பாடுகள் இருக்கின்றன. கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அவர்கள் போடும் உரத்திற்கு ஒரு பங்கு, இரண்டு பங்கு விலை உயர்ந்து இருக்கிறது. அவர்களுக்கு முட்டு வழிச் செலவும் அதிகமாகியிருக்கிறது. அதன் காரணமாக இன்று கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கு நம்முடைய சர்க்கரை ஆலை யிலிருந்து கொடுக்கும் விலை குறைவாக இருக்கிறது. பல முறை இதுகுறித்து அமைச்சர்களிடம் பேசி இருக்கிறோம். அவர்கள் லெவி சர்க்கரையின் விலை மிகவும் குறைவாக இருக்கிறது; அதனுடைய விலை பல ஆண்டுகாலமாக ஒரேமாதிரி இருக்கிறது; எத்தனையோ பொருள்களின் விலை உயர்ந்து உள்ள நேரத்தில் சர்க்கரையின் விலையை மட்டும் உயர்த்திக் கொடுத்து விவசாயி களுக்கு உதவ முடியவில்லை என்று சொல்கிறார்கள். லெவி சர்க்கரையின் விலையை இன்னும் கொஞ்சம் கூட்டினால், நம்முடைய





விவசாயிகளுக்கு, கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு கொஞ்சம் கூடுதலான பணம் கொடுக்க முடியும். கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகள் இப்படி கஷ்டப்படுகிற நேரத்தில், மத்திய அரசாங்கத்தின் சில காரியங்களையும் நாம் பார்க்க வேண்டி யிருக்கிறது. பருத்தி விலை இப்போது குறைந்து இருக்கிறது. ஆனால் துணி விலை மட்டும் ஏறிக்கொண்டே போகிறது. பருத்தி விலை குறைந்து இருக்கிறபோது, துணி விலை மட்டும் ஏறிக் கொண்டே போவது ஏன் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழ்நாட்டின் மீது குற்றச்சாட்டைக் கூறுபவர்கள், மத்திய அரசாங்கத்தைப் பார்த்து துணிவுடன் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில், நீராறு அணை வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலைகள் துரிதமாக நடக்குமானால் நம்முடைய விவசாயிகள் இந்த பஞ்ச காலத்தில் அந்த நீராறு அணையைப் பயன்படுத்தி நல்ல வகையில் பயிர் செய்ய முடியும். அதைத் துரிதமாக செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் மிக நல்ல முறையில் நமது அரசாங்கம் பஞ்சத்தைப் போக்குவதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் கூறியிருக்கிறது என்று எடுத்துக்கூறி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. பாலையா : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையின்மீது ஒரு சில கருத்துக் களைக் கூற விழைகிறேன்.

ஆளுநர் அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கும் வறட்சி பற்றியும், பஞ்சத்தைப் பற்றியும், அதனால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள் இவைகளைப் பற்றியும் மிக அழகாக, தெளி வாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதைப் படிக்கிற நேரத்தில் கழிந்த 100 ஆண்டுகாலமாக இல்லாத பஞ்சம் தமிழகத்திலே இன்று ஏற்பட்டு இருக்கிறது என்பதை அறிகிறோம். பஞ்சத்தின் கொடுமையைத் தாங்கிக்கொண்டு வாழும் மக்களுக்கு, கஷ்டப்படுகிற மக்களுக்கு துயர் துடைப்புப் பணியை அரசாங்கம் நிச்சயமாகச் செய்தாக வேண்டும். அதன் அடிப்படையிலேதான்

அரசாங்கம் 10 கோடி ரூபாய் பஞ்ச நிவாரண நிதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல் மத்திய அரசும் இன்றைய தினம் 7½ கோடி ரூபாய் பஞ்ச நிவாரண நிதியாக ஒதுக்கி இருக்கிறது. ஆக மொத்தம் 17½ கோடி ரூபாய் பஞ்ச நிவாரண நிதியாக இன்றையதினம் அரசு செலவு செய்ய அனுமதித்து இருக்கிறது. அரசு இந்த பஞ்ச நிலைமையை நல்ல முறையில் சமாளிக்க வேண்டும்.

1969-லே தமிழகத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அதற்குப் பின்னால், நான்கு ஆண்டுகளுக்குப் பின், இப்போது மிகப் பெரியதொரு பஞ்சம் தமிழக மக்களைத் தாக்கியிருக்கிறது. இந்தப் பஞ்சத்தை நாம் நிரந்தரமாகச் சமாளிக்க வேண்டும். அதற்காக இந்த அரசாங்கம் 55 கோடி ரூபாயில் நிரந்தரத் திட்டமொன்றை, 9–10 மாதங்களில் நிறைவேற்றி மக்களை இந்த பஞ்சப் பிடியிலிருந்து விடுவிப்பதற்கான ஒரு முயற்சி செய்வதற்கான திட்டத்தைத் தயாரித்து இருக்கிறார்கள். நிச்சயமாக, இது வரவேற்கக் கூடியதொரு திட்டமாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த பஞ்ச நேரத்தில் உணவு தானியங்களுக்கு மிகமிகக் கடுமையாகன தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. காரணம் காலாகாலத்தில் நமக்கு மழை இல்லாததுதான். ஆளுநர் அவர்கள் உரையில் நம்முடைய உணவு உற்பத்தி 20 லட்சம் டன் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது மொத்த உணவு உற்பத்தியில் 30 சதவிகிதம் குறைவாக ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த 30 சதவிகிதம் உணவு உற்பத்திக் குறைவு ஏற்பட்டதன் காரணமாக தமிழகத்திலே இன்று உணவுப் பண்டங்களின் விலை மிகக் கடுமையாக ஏறியிருக்கிறது. ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள், தொழிலாள மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அரிசி முதலான உணவுப் பண்டங்கள் வாங்க முடியாத அளவில் மிகக் கஷ்டமான முறையில் உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்து கொண்டு இருக்கிறது. இதை நிச்சயமாக அரசு தடுத்தாக வேண்டும். இதைச் சமாளிக்கவேண்டுமானால் தமிழ்நாட்டில் கட்டாய ரேஷன் அமலுக்குக் கொண்டு வரவேண்டும். கட்டாய ரேஷன் அமலுக்குக் கொண்டு வந்து அரசு நிர்ணயம் செய்யும் நியாய விலையில் உணவுப் பண்டங்கள், பொருள்கள்





நிச்சயமாக வழங்க வேண்டும். அப்படிச் செய்வதாக இருந்தால்தான் தமிழகத்தில் இருக்கும் உணவுப் பண்டங்களின் விலைவாசி என்றுமே நிரந்தரமாகக் குறைந்து விடும். நாமும் மக்களுக்கு அவற்றை நல்ல முறையில் கொடுக்க முடியும்.

அதைப்போலவே, கட்டாய ரேஷன் அமலுக்குக் கொண்டுவரவேண்டுமானால், கட்டாயக் கொள்முதல் அரசாங்கம் செய்தாக வேண்டும். இன்றைய தினம் அரசாங்கம் புட் கார்ப்பரேஷன் மூலம் தமிழகத்தில் நெல் கொள்முதல் செய்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய நெல் சரியான முறையில் வந்து சேரவில்லை. பெரிய நிலச்சுவான்தார்கள் கொடுக்கவேண்டிய லெவி நெல்லைக் கொடுக்காமல் பதுக்கிவைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் சரிவர நெல் கொள்முதல் செய்ய முடியவில்லை.

நான் உதாரணத்திற்குச் சொல்வேன். எங்கள் பகுதியில், பெரிய நிலச்சுவான்தார்கள் ஆயிரம் ஆயிரம் மூட்டை நெல்களை பதுக்கி வைத்துக்கொண்டு இருக்கும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் ஆனபின்னாலும் கூட அந்தப் பதுக்கல் நெல்லை வெளியே கொண்டு வருவதற்குத் தயங்குகிறார்கள். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அரசாங்கம் எப்படி கவனிக்கவேண்டுமென்றால், கட்டாயக் கொள்முதல் முறையைத் தமிழகத்தில் அமுலுக்குக் கொண்டு வந்தால்தான் இந்தப் பெரிய நிலச்சுவான்தார்களிடம் இருக்கிற பதுக்கல் நெல்லை வெளியே கொண்டு வர முடியும். அப்படி வெளியே கொண்டு வருவதாக இருந்தால்தான் தமிழகத்தில் நியாயமான வகையில் ரேஷன் வழங்க முடியும் என்பதை நான் தெள்ளத் தெளிவாகக் கூற ஆசைப்படுகிறேன்.

அதைப்போல், இன்று மக்கள் எவ்வளவு தூரம் பட்டினியாலும், பசியாலும் கஷ்டப்படுகிறார்களோ, தண்ணீர் இன்றி துன்பப்படுகிறார்களோ, அதைப்போலவே பஞ்சப் பிரதேசங்களிலும், வறட்சிப் பிரதேசங்களிலும் இருக்கின்ற கால்நடைகள் தண்ணீர் இல்லாமல் போதிய ஆகாரம் இல்லாமல் இன்று பஞ்சப் பிரதேசத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றன. மாடுகளின் விலை பாதியாகக் குறைந்துவிட்டது. எங்கள் பகுதி வழியாக, கன்னியாகுமரி மாவட்டத்தின் வழியாக கேரளத்திற்கு தினமும் ஆயிரம் ஆயிரம் மாடுகள் சென்று கொண்டிருக்கின்றன

[திரு. ஏ. பாலையா] [1975 பிப்ரவரி 26

என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதை அரசு நிச்சயமாகத் தடுத்தாக வேண்டும். மழை வருகின்ற நேரத்தில் விவசாயம் செய்வதற்கு மாடுகள் இல்லாமல் கஷ்டப்படவேண்டி வரும். விவசாயிகள் மாடுகளை வைத்து உழவு வேலை செய்ய முடியாது போய்விடும். ஆகவே, இந்த நிலைமையைத் தடுத்தாக வேண்டும். அதற்குத்தான் கேரளத்திற்குக் கடத்தப்படும் மாடுகளை உரிய நடவடிக்கை எடுத்து தடை செய்யவேண்டுமென்று கேட்கிறோம். அரசாங்கம் மாடுகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கட்டாய லேவியைப்பற்றிச் சொன்னேன். பொதுவாக மத்திய சர்க்கார் நம்முடைய மாநிலத்திற்கு 50,000 டன் கோதுமை அளிப்பதற்கு இசைவு தெரிவித்திருப்பதாக ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்று அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் மத்திய சர்க்காரால் கோதுமை அளிக்கப்பட்டு, அங்கே விநியோகம் செய்யப்படுகிறது. மத்திய சர்க்காரால் விநியோகம் செய்யப்பட்டிருக்கிற கோதுமை அவர்களுக்குப் போக மீதி தமிழகத்திற்கு ஏராளமாக வந்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையைவிட குறைந்த விலையில் கேரள மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு கோதுமை வருகிறது என்று சொன்னால், மத்திய சர்க்கார் கேரளத்திற்குத் தேவையான கோதுமையைவிட அதிகப்படியாகக் கோதுமை வழங்கியிருக்கின்றது என்பது தெரிகிறது. அதாவது அவர்களது தேவையை விட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகமாக கோதுமை அங்கே கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கு சர்ப்ளஸாக கோதுமை கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திற்கு 50,000 டன் கோதுமை தருவதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே பார்க்கிற நேரத்தில் தமிழகத்தில் நியாயவிலைக் கடைகளில் கோதுமை கிடைக்கவில்லை. அரிசியையும் கோதுமையையும் கலந்து எங்கள் மாவட்டத்தில் கொடுக்கிறார்கள். ஆனால் கோதுமை கிடைக்காத ஒரு நிலை. பற்றாக்குறை நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த விலை நிச்சயமாகத் தவிர்க்கப்பட்டாக வேண்டும். மத்திய சர்க்கார் தமிழகத்துக்கு அதிகப்படியான கோதுமையை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு மத்திய அரசு காலங்கடத்தினால் தமிழக சர்க்கார் நிச்சயம் மத்திய சர்க்காரோடு



1975 பிப்ரவரி 26] [திரு. ஏ. பாலையா]

போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், வாதாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், அதற்குத் தயங்கக்கூடாது. காரணம், அண்டை மாநிலமான கேரள மாநிலம் அதிகப்படியான கோதுமையைப் பெற்று குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில் தமிழகத்தில் என்றுமில்லாத பஞ்ச நிலவரம் இந்த நேரத்தில் இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் உண்ண உணவின்றி தவிக்கின்றார்கள். வாழ வழியின்றி வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மத்திய சர்க்கார் அலட்சியப் போக்கைக் கொண்டிருப்பது சரியாக இல்லை.

அடுத்தபடியாக, ஆந்திர மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு அரிசி தரவேண்டும் என்று தமிழக சர்க்கார் ஆந்திர சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனால், மத்திய சர்க்கார் ஆந்திர அரசாங்கத்திடமிருந்து அரிசி வாங்கிக்கொள்வதற்கு இதுவரையிலும் ஒப்புதல் அளிக்கவில்லை. நாம் இங்கே பஞ்சத்தால் வாடுகின்ற நேரத்தில் மத்திய அரசு தமிழகத்து மக்களை அலட்சிய நோக்கோடு பார்த்துக்கொண்டிருக்கிற நிலைமை தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக மத்திய சர்க்கார் எந்த வகையிலாவது தமிழக மக்களுக்கு அரிசி வழங்கி, அவர்களுடைய வறுமையையும், துன்பத்தையும் நிச்சயம் போக்கியாகவேண்டும்.

அரசாங்கம் 17½ கோடி ரூபாய் வறட்சிப் பணிக்காகக் குறிப்பாக குடி தண்ணீருக்காகவும், கால்வாய்களைப் பழுது பார்க்கவும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகிய திட்டங்களுக்காக ரூ. 17½ கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தை மிகவும் வறட்சிப் பகுதியாக அரசு பிரகடனப்படுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற அணைகளெல்லாம் தண்ணீரின்றி வறண்டுவிட்டன. அங்கே விளைநிலங்களில் 50 சதவீத நிலங்கள் கரிந்து தீய்ந்து விட்டன இந்த நிலையில். ஆனால், சர்க்கார் ரூ. 4 லட்சம்தான் வறட்சி நிதியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நிறைவேற்ற வேண்டிய ஏராளமான திட்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அரசு சொல்கிறது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நிச்சயம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று. நான் இந்த அவையிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலே விவசாயத்திற்கு வேண்டி, வீணாகப் பாயும் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். அதற்கான திட்டங்களை அரசாங்கம் பூர்த்தி செய்து தரவேண்டும்.

வள்ளியாற்றிலிருந்து வீணாகக் கடலுக்கு செல்கின்ற ஏராளமான தண்ணீர் எந்தவிதமான பயனுமின்றி சென்றுகொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப், பயன்படுத்திக் கொள்ளலாம். வறட்சி நிவாரண நிதியிலிருந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். இரண்டு, மூன்று இடங்களில் லிஃப்ட் வைத்து, அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றினால் நிச்சயம் ஆயிரம் ஆயிரம் ஏக்கரா நிலங்களில் அங்கே விவசாயம் செய்ய முடியும். அத்தகைய நிலைமை இல்லாத காரணத்தினால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்கள் இந்தத் தடவை கருகி தீய்ந்துவிட்டன. (மணி அடிக்கப்பட்டது). இந்த நேரத்தில் அப்படிப்பட்ட திட்டங்களை நிச்சயம் அமுல்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல குடி தண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதி பின்தங்கிய பகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் சர்க்கார் புறக்கணிக்கின்ற அளவில் இருந்துகொண்டிருக்கிறது. நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நான் மனுக்கள் மூலம் இந்த அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். கல்லுக்கூட்டம் குடி நீர் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அரசாங்கம் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வறட்சி நிதியிலிருந்தாவது இந்தத் திட்டத்தை ஏற்று எடுத்து முடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். குளச்சல் பகுதிக்கு அத்திட்டம் மிகத் தேவையான திட்டம். அங்கே நல்ல தண்ணீர் கிடையாது. கடலோரப் பகுதி மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுத்தாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கனவே உங்களுக்கு 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடங்கள் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சீக்கிரம் ஓரிரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.



**திரு. ஏ. பாலையா :** விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தாங்கள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கின்றன, அந்தக் கடன்கள் இப்பொழுது திருப்பி வசூலிக்கப்படமாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே வருகிற பயிருக்கு கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கூட்டுறவு இலாகாவிலிருந்து எந்தவிதமான உத்தரவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவுகள் வழங்கி அந்தக் கடன்களை வசூலிக்காமல் இருப்பதற்கும், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகிற கெடுபிடிகளைத் தடை செய்வதற்கும் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வறட்சிப் பணிகளுக்கு இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு என்னுடைய பாராட்டை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 40 கிராமங்களை வறட்சிப் பகுதிகள் என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டம் வளம் கொழிக்கும் மாவட்டம் என்று பெயர் பெற்றிருந்தாலும் அதில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய வேதாரண்யம், தலைஞாயிறு பஞ்சாயத்து யூனியன்களில் கிட்டத்தட்ட 40 கிராமங்கள் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சிப் பணிகளுக்காக பணங்கள் ஒதுக்கி நல்ல முறையில் இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும், இந்தப் பணம் போதிய அளவுக்கு இருக்கிறதா என்றால், மக்கள் துயரைத் துடைக்கப் போதுமா என்றால், போதாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வேன். ஆகவே, இந்த அரசு, வேதாரண்யம், தலைஞாயிறு

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1975 பிப்ரவரி 26

பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள வறண்ட பகுதிகளுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வேன்.

வறட்சி காரணமாக அங்கே இருக்கிற கிணறுகள், குளங்களெல்லாம் வற்றிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியில் இப்பொழுது சாகுபடி நடந்துகொண்டிருக்கிறது. புகையிலை, மிளகாய், கடலை போன்ற புஞ்சை தானியங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, விவசாய மக்களுக்குப் பலன் வந்து சேருமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தனியார்க்குச் சொந்தமாந் கிணறுகளைத் தூர் எடுப்பதற்கும், மற்றும் குளங்களை ஆழப்படுத்துவதற்கும், நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியாருக்குச் சொந்தமான கிணறுகளை வைத்திருப்பதற்கும் ஏதாவது தொகையை அரசு மானியமாகத் தந்தால் வேலை வாய்ப்பு நல்ல முறையில் மக்களுக்குக் கிடைக்கும், வேலைகளும் நல்ல முறையில் நடைபெறும், அங்கிருக்கிற விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற வகையிலே அரசு உடனடியாகத் தலையிட்டு அந்தத் தனியார்களுக்கு மானியம் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது அந்தப் பகுதிக்கு தாலுகாவிலிருந்து நெல் கொண்டு போகவேண்டுமென்றால், அதை இப்பொழுது சிவில் சப்ளைஸ் இலாகா தடுத்திருக்கிறதாகையால் நெல் நடமாட்டம் அங்கே இப்பொழுது இல்லை. அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், வறட்சிப் பகுதிக்கு நிவாரணம் தருவதோடு, மக்களுக்கு அரிசியைக் கொடுத்து உதவுவதற்கு, நியாயவிலைக் கடைகளை அங்கே திறந்து, அந்தப் பகுதி மக்களுக்கு அரிசி எளிதாகக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றுகூட அங்கிருந்து அரிசி கிடைக்கவில்லை என்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி அமைச்சரிடமும் சொல்லியிருக்கிறேன். தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பணத்தைச் செலவிடும்போது சில நேரங்களில் தவறு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கவனித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 26] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியம் மூலம் நடைபெறுகின்ற பணிகள் வேண்டியவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் அதிகமாகவும், வேண்டாதவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் வேலைகள் நடைபெறாமலும் இருக்கிறது; சில அதிகாரிகள் அதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்று புகார் வருகிறது. இந்தக் குறையைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் பரவலாக நிவாரணப் பணிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி வறட்சி நிவாரணப் பணிகள் இன்னும் அதிகமாக நடைபெற வேண்டுமென்றால் காண்ட்ராக்ட் முறைகளை எடுத்துவிட்டு, பஞ்சாயத்து தலைவர்களுக்கு பரவலாகக் கொடுத்து, துரிதமாக வேலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக பாதிக்கப்பட்ட இடங்களில் இன்னும் சில திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, ஆளுநர் உரையில் பெரும்பகுதி நம்முடைய தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சியைக் குறிப்பதாக இருக்கிறது. ஆனால் ஏற்பட்டிருக்கிற வறட்சியைப் போக்க, அதனால் ஏற்பட்டிருக்கிற பாதிப்பைத் தணிக்கக் கூடிய முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. சமீபத்தில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் எந்த அளவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். அதற்கடுத்து நெல்லை மாவட்டம், தர்மபுரி மாவட்டம், கோவை மாவட்டம் இருக்கிறது. பாதிக்கப்பட்ட பல இடங்களில் குடிக்கத் தண்ணீர்கூட இல்லை. அடுத்தபடியாக வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பில்லை. நியாயவிலையில் உணவுப்பொருட்களும் கிடைக்கவில்லை.

மாதத்திற்கு ஒரு ஆளுக்கு ஒரு கிலோ என்று கொடுக்கிறார்கள். அதை வைத்து கஞ்சி காய்ச்சி நாக்கை நனைக்கக்கூட போதாது. விவசாயிகள் கிணற்றையும், குடிநீர் கிணற்றையும், ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டோம். ஆழப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நிலவள வங்கியில் போய்க் கேட்டால் உத்தரவு வரவில்லை, பணம் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு பல சலுகைகள், கடன் நிவாரணம் எல்லாம் அளிக்கப்பட்டிருப்பதாக இங்கே சொல்கிறார்கள். ஆனால் அங்கே போய்ப் பார்த்தால் ஜப்தி நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆக சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது.

குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு ஒருசில இடங்களில் குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அதாவது கீழ் ஊற்றைப் பயன்படுத்தும் வகையில் கிணறுகளை வெட்டியிருக்கிறார்கள். ஆனால் தண்ணீர் சில இடங்களில் கிடைக்கிறது. எங்கள் பக்கத்தில் கூட இந்த வறட்சி நிவாரணப் பணிகளின் பேரால் குடிதண்ணீருக்காக குழாய்கள் போட்ட இடங்களில் உப்புத் தண்ணீர் வந்த இடங்களில்—சுத்தமான நல்ல தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதே இராமநாதபுரம் மாவட்டத்தில் நம்முடைய அமைச்சர் மாதவன் அவர்கள் தோட்டத்தில்—30 ஏக்கர் தோட்டம்—போர்வெல் போட்டு நல்ல தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எனக்கு 30 ஏக்கர் இல்லை. அங்கத்தினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார்கள். அவர்கள் கொடுத்தால் வாங்கிக்கொள்ளலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** 30 ஏக்கர் இல்லை என்றால் 25 ஏக்கர் இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 25 ஏக்கரும் இல்லை.. ஐந்து ஏக்கர்தான் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** ஆக, இராமநாதபுரத்தில் அறவே தண்ணீர் இல்லை என்று சொல்ல முடியாது. ஆழத்தில் நிறைய நல்ல தண்ணீர் இருக்கிறது. அறந்தாங்கி பகுதியில் கூட இருக்கிறது. அறந்தாங்கி எம்.எல்.ஏ. தோட்டத்தில் கூட 5 அங்குலம் பைப் போட்டிருக்கிறார்கள். 24 மணி நேரமும் நல்ல தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை நான் பொறாமைக்காக சொல்லவில்லை. இப்படி நிலத்திற்கு அடியில் தண்ணீர் இருப்பதால் பல இடங்களில் இதற்கு முன்பே அந்தத் தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தால் இந்த அளவுக்கு வறட்சி நிலை அங்கே ஏற்பட்டிருக்காது.





இன்றைக்கு தமிழ்நாடு முழுவதற்கும் 12 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. அனைத்தையும் ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. கடன் கொடுப்பது அறவே கிடையாது. நிலவள வங்கிகளில் கேட்டால் ஓவர் டியூ இருக்கிறது; அதனால் ரிசர்வ் பாங்க் கடன் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். தக்காவி கடன் ஒரு கிணற்றுக்கு 2,000 ரூபாய் என்று கொடுத்தால்கூட கிணறு வெட்டியிருப்பார்கள்; அல்லது ஆழப்படுத்தியிருப்பார்கள். பலருக்கு வேலை கிடைத்திருக்கும். கம்பு, சோளம், ராகி போன்ற உணவு தானியங்களையும் உற்பத்தி செய்திருக்க முடியும். அதனால் குடிதண்ணீரும் கிடைத்திருக்கும், உணவுப் பொருளும் உற்பத்தியாகியிருக்கும்; வேலை வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

வறட்சிப் பணிகள் நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகிறதே தவிர, உண்மையில் பல இடங்களில் நடைபெறவில்லை. தர்மபுரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், நெல்லை மாவட்டம் இப்படி பல மாவட்டங்களைப் போய் பார்த்திருக்கிறேன். அமைச்சர்கள் வரும்போது வேலை நடக்கிறது; அடுத்த நாளே நின்று விடுகிறது. எங்கள் மாவட்டத்திற்கு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் வந்து ஒரு கிராமத்தில் வறட்சிப் பணியைத் தொடங்கி வைத்தார்கள். அடுத்த நாளே அங்கே வேலை நடக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மறுநாள் வேலை நடக்கவில்லை என்றால் அதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் வேலையைத் தொடங்கி வைக்கிறோம். அது தொடர்ந்து நடக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1975 பிப்ரவரி 26

**திரு. சோ. அழகர்சாமி:** அதேமாதிரி மத்திய அமைச்சர் சின்டே வந்தபோது மதுரை மாவட்டத்தில் மறவன்குளம் என்ற கிராமத்தில் வேலை தொடங்கப்பட்டது. மறுநாளே வேலை நடக்கவில்லை.

கூலி கொடுப்பது, ஒரு யூனிட்டுக்கு 37 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அது போதாது. காலை 5 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வேலை செய்தால்தான் ஒரு ஆளுக்கு 1½ ரூபாய் கூலி கிடைக்கும். அதைக்கொண்டு பிடி அரிசி கூட வாங்க முடியாது. அப்படியானால் எப்படி கட்டுப்படியாகும்; எப்படி குடும்பம் நடத்த முடியும்?

மழை இல்லாவிட்டால் மண் வெட்டிப் போடுவது கஷ்டம். வட்டுவதற்கு உடலில் வலிவும் கிடையாது. இந்த நிலையில் னிட்டுக்கு 37 ரூபாய் என்பது மிக மிகக் குறைவு. அதனால்தான் ான்ட்ராக்ட் விட்டால் பழைய கிணறுகளை கண்மாய்களை ஆழப் டுத்துவது என்றால் வேலை நடக்கிறது. இல்லை என்றால் இந்த லி கட்டுப்படியாகாமல் யாரும் போவதில்லை, வேலை நடக்க ில்லை. ஒரு யூனிட் மண் வெட்டுவது என்றால் ஆண்கள் 8 பேர், பண்கள் 4 பேர், ஆக 12 பேர் வேலை செய்ய வேண்டியுள்ளது. தற்கு இந்த ரேட் கட்டுபடியாகவில்லை. ஆகவே, இந்த ரேட்டை ாற்ற வேண்டும்.

இந்த வேலைகள் சம்பந்தமாக கான்ட்ராக்ட் விடக்கூடாது ான்று சென்ற முறையே நாங்கள் தெரிவித்திருக்கிறோம். ானென்றால் பஞ்ச நிவாரணத்திற்கு ஒதுக்கும் பணத்தை அவர்கள் ஒதுக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் டிப்பார்ட்மென்டி ிருந்தே அந்த வேலைகளைச் செய்ய வேண்டும். இத்தனை பேர் ந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அதைக் கண் ாணித்து, 4 ரூபாய், 5 ரூபாய் கூலி கொடுக்க வேண்டும்.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் ஒத் துழைக்கமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஏன் நாங்கள் ஒத் துழைக்க மாட்டோம்? நாங்களே சொல்கிறோம் சர்வ கட்சிக் குழு அமையுங்கள் என்று. நீங்கள் அமைக்கவில்லை. எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட கமிட்டியைப் போடுங்கள். இந்தக் கண்மாயை வெட்டுங்கள் அல்லது இந்தக் கால்வாயை



1975 பிப்ரவரி 26] [திரு. சோ. அழகர்சாமி]

வெட்டுங்கள் அல்லது இந்த ரோட்டைப் போடுங்கள் என்று சொல்லுங்கள். அந்தந்த இடங்களில் இருக்கிற கமிட்டி அதைக் கண்காணித்துக் கொள்ளும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத் துக்கு 4 கிலோ வீதம் கொடுக்கிறார்கள். அதை வாங்குவதற்குகூட சிலருக்கு காசு இல்லை. ஒரிசா, பீகார், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் சிவப்பு கார்டு கொடுத்து, உணவுப் பொருட் களை வாங்க முடியாதவர்களுக்கு இலவசமாகவே கொடுக்கிறார்கள், என்று பத்திரிகையில் பார்த்தேன். அதை ஏன் இங்கே செய்யக் கூடாது?

உணவுப் பொருள் இப்போதும் கிடைக்கத்தான் செய்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் உரிய விலையில் எல்லோ ருக்கும் கிடைக்கவில்லை. 57 லட்சம் டன் அரிசி கிடைக்கக்கூடிய அளவுக்கு நெல் விளைந்திருக்கிறது. அது தமிழ்நாட்டிற்குப் போக மீதமிருக்கும். அப்போதும் பஞ்சம்தான். இப்போதும் பஞ்சம்தான். உண்மையிலே வறட்சி, பஞ்சம் என்றால் இந்த தை மாதத்திற்குப் பின்னால்தான் வந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்னாலேயே பஞ்சம், பஞ்சம் என்று சொல்லிக்கொண்டே இருக்கி றார்கள். வறட்சி ஏற்படுவதற்கான அறிகுறி தெரிந்தவுடனே கண்மாயை ஆழப்படுத்தல், கிணறுகளை ஆழப்படுத்தல், விவசாயி களுக்குக் கடன் கொடுத்தல் போன்ற பணிகளைச் செய்திருந்தால் இந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்காது.

அது மட்டுமல்ல. வறட்சி நிவாரணப் பணிகளில் பல வேலைகள் தப்பிதமாக நடைபெறுகின்றன. ஆங்காங்கிருக்கிற மக்களால் பல இடங்களில் அவை கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களால் தடுக்கப் பட்டு, ஓரளவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் போன வருஷம் ஆழப்படுத்தின கண்மாய்களையே இந்த வருஷமும் ஆழப்படுத்துகிறார்கள். இதை எல்லாம் கண் காணிக்க வேண்டுமென்றால் சர்வ கட்சிக் குழு போட்டால்தான் முடியும்.

பட்டினிச் சாவு இல்லை என்று சொல்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சத்தால் செத்திருக்கிறார்கள். கவர்னர் உரையில் அதைப்பற்றி சொல்லவில்லை. 33 பேர்கள் பட்டினியால் செத்திருக்கிறார்கள். இது வந்த கணக்கு; கணக்கில் வராதது

[திரு. சோ. அழகர்சாமி] [1975 பிப்ரவரி 26

எத்தனை பேர்கள் என்று தெரியாது. தேவகோட்டை ஆஸ்பத்திரியில் பலர் செத்திருக்கிறார்கள். நான் வேண்டுமானால் செத்தவர்க்ள் பட்டியலைப் படிக்கிறேன்.

பூமயில், பாக்கியம், கருப்பன், கருப்பையா, வீராயி, தமயந்தி, ஒப்பிலாமணி; காளிப்பயல், காளிமுத்து, சேதுராமன் சேர்வை, தோமாலை, மடத்தையா வீட்டில் 10 வயது பையன் ஒருவன், அஜீஸ் ராவுத்தர் மகன்—12 வயது, முத்தையா மகன்—12 வயது, பாலசாமி தம்பி—15 வயது, வேலையா நயினார், நம்புதாளையில் ஏழு முஸ்லீம்கள், யாக்கோபு, மாவிடுதிக்கோட்டையில் 2 பேர், ஆதியூர் கிராமத்தில் 3 பேர், திருவேலங்குறிச்சியில் ஒருவர், மு. புதூரில் 2 பேர், தரியம்பட்டியில் ஒருவர், முறையூரில் 2 பேர், பட்டமங்கலத்தில் 3 பேர்—இப்படி செத்தவர்கள் பட்டியல் இருக்கிறது. இதே போல் பல பேர் இராமநாதபுரம் மாவட்டத்தில் இறந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 12 வயது, 10 வயது பையன்கள் இறந்திருப்பதாகச் சொன்னீர்கள். அவர்களுடைய தகப்பனார்கள் இருக்கிறார்களா இல்லையா?

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, அந்த விவரங்களை வேண்டுமானால் நான் முதலமைச்சரிடம் முழுமையாகத் தருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சொல்லும்போதே சொன்னால் நல்லது. அந்தக் குழந்தையின் தகப்பனார் உயிரோடு இருக்கிறாரா?

**திரு. சோ. அழகர்சாமி:** அந்த விவரங்கள் எல்லாவற்றையும் தருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் சொல்லும்போது அஜீஸ் ராவுத்தர் மகன் பட்டினியால் இறந்துவிட்டதாகச் சொன்னீர்கள்? அஜீஸ் ராவுத்தர், அவரது மனைவி உயிரோடு இருக்கிறார்களா? அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்றால் அவர்களது குழந்தையைத்தான் பட்டினியால் சாகவிட்டார்களா என்று தெரிந்துகொள்ள கேட்கிறேன்.



1975 பிப்ரவரி 26]

**திரு. சோ. அழகர்சாமி:** நீங்கள் ரேஷனிலே கொடுக்கிற ஆட்டா மாவை அவர்கள் சாப்பிட்டு—குழந்தை அதை செரித்துக் கொள்ள சக்தியின்றி இறந்திருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்போது நீங்கள் தவறான செய்தியைச் சொல்கிறீர்கள். இதை பட்டினியால் செத்ததாகச் சொல்ல முடியாது.

**திரு. சோ. அழகர்சாமி:** சோறு கிடைக்காது பட்டினியால் கிடந்து—இந்த மாவை உண்டு இறந்தது என்றால் இது என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப் பார்த்தால் ஒரு நாளைக்கு உலகத்தில் எவ்வளவோ பேர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி குடும்ப நல அதிகாரிகளிடம் கணக்குக் கேட்டால் கூடச் சொல்வார்கள். இறக்கின்றவர்களை எல்லாம் பட்டினியில் செத்தார்கள் என்று கணக்குக் கொடுத்துவிட முடியாது. இந்த முஸ்லீம் பையனுடைய தாய் தந்தையர்கள் உயிருடன் இருக்கும்போது இந்தப் பையனை அவர்கள் பட்டினியால் சாகவிட்டார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. அவன் இறந்ததற்கு வேறு காரணம் இருக்கலாம். பட்டினியால் தம் மகனைச் சாகவிட்டார்கள் என்பதாகத் தெரியவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** பெரியவர்களுக்குத் தாக்குப்பிடிக்கிற சக்தி இருக்கலாம். நான் சொல்வது உண்மையா, இல்லையா என்பதை நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள்; எல்லா விவரங்களையும் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. இன்னும் 2 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** காலராவில் எத்தனை பேர் செத்துப் போகிறார்கள். பணக்காரர்களுக்கு காலரா வருகிறதா? பட்டினியால் கிடப்பது—அப்புறம் கிழங்கு போன்றவைகளைத் தின்றவுடன் காலரா வருகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நன்றாகச் சாப்பிடுகிறவர்களுக்கும் காலரா வருகிறது. காலரா வருவது குடிக்கிற தண்ணீரைப் பொறுத்து இருக்கிறது. பட்டினியால் கிடந்து

சாப்பிடுகிறவர்களுக்கு வருவது டயோரியா என்ற ஒரு வகை— எல்லாவற்றையும் ஒன்றாகக் காணுகிற ஒரு மனப்பான்மை—இதில் கம்யூனிசம் காட்டத் தேவையில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு வியாதியினால் இறக்கிறார்கள் என்றால் அதை அதைத் தனித் தனியாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: எப்போதுமே பஞ்சம், பிழைக்க இராமநாதபுரம் மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் போவார்கள் என்றால் இன்றைக்கு அப்படி அப்படியே கிராமங்களை, வீடு வாசலை விட்டு போய்க்கொண்டிருக்கிறார்கள் என்றால் ஒவ்வொரு கிரா மத்தை விட்டு எவ்வளவு பேர்கள் போயிருக்கிறார்கள் என்கிற விவரத்தையாவது இந்த அரசாங்கம் எடுத்து வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: போகிறவர்கள் கணக்குக் கொடுத்துவிட்டுப் போவதில்லை. நல்லவிதமாகப் போகிறவர்களே வாக்காளர் ஜாப்தாவுக்கு தாம் எங்கே போகிறோம் என்று கணக்குச் சொல்லிவிட்டுப் போகிற நிலைமை இல்லாத நிலையில்— மிக வருத்தத்தோடு போகிறவர்கள் கணக்குக் கொடுத்துவிட்டுப் போவார்களா? இதை நாங்களும் உணர்ந்துதான் வருத்தப் படுகிறோம். அங்குள்ள மக்களது வருத்தத்தைத் துடைக்கத் தான் அரசு பல வகையிலும் நிவாரண வேலைகளைச் செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: நிவாரணப் பணிகளைச் செய்வதற்கே இந்த விவரங்கள் தேவைப்படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்தந்த ஊர்களில் இருக் கிறவர்களைக் காப்பாற்ற நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவர்கள் எந்த ஊர்களுக்குப் போனாலும் அங்கங்குள்ள ரெவின்யூ அதிகாரிகள் அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அரசு எடுத்துக்கொள்கிற நிவாரணப் பணிகள் நன்கு நடைபெற பொதுமக்களது தலைவர்கள் ஒத்துழைத்தால் இன்னும் சிறப்புறச் செய்யலாம்.

திரு. சோ. அழகர்சாமி: மிக்க நன்றி. இன்றைக்குத் தஞ்சைக்குப் போயும் பஞ்சையாகத்தான்—என்ன கூலி கொடுத் தாலும் கொடுங்கள், வேலை செய்கிறோம் என்று பரிதவிக்கிற நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை ஏன் ஏற்பட்டது? அமைச்ச



ருடைய தோட்டத்தில் பம்ப் போட்டால் தண்ணீர் வரவில்லையா? அதைப்போல அந்த மாவட்டத்தில் பல இடங்களில் குழாய்க் கிணறுகளைப் போட்டிருக்கக் கூடாதா?

முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்கிறார்கள். முரசொலி பத்திரிகையில் வருகிறது. இவர்கள் அறிவித்த 1-90, 2-00, 2-10, என்கிற விலையில் எங்காவது அரிசி விற்கிறதா? இங்கே பாருங்கள்— எவ்வளவு பெரிய விளம்பரம்—தினமணி—பத்திரிகையில்—அரசு நிவாரணப் பணிகளாகச் செய்து வருவதைப்பற்றி. வறட்சியைப் போக்க நிலவள வங்கி மூலம் கிணறு எடுக்க தாராளக் கடன் எங்கே வழங்கப்பட்டிருக்கிறது? எத்தனை ஊர்களில் நிலவள வங்கி கடன் வழங்கியிருக்கிறது என்று சொல்ல முடியுமா? கேட்டால் பணம் கிடையாது—இல்லை பக்கத்துக் கிணறு இவ்வளவு அடி தூரத்திற்கு அப்பால் இருக்கவேண்டும்—இல்லை கடந்த 12 வருஷ சர்டிபிகேட்டைக் கொண்டுவா—இப்படி ஏதாவது சொல்லி மறுத்துத்தான் வருகிறார்கள். உண்மைக்கு மாறாக இப்படி பல ஆயிரக்கணக்கில் விளம்பரத்திற்குச் செலவு செய்கிற தொகையை ஒரு கிணற்றுக்குக் கொடுத்திருந்தால்கூட கிணற்றை வெட்டு வார்கள்—பத்து பேர்கள் வேலை பெறக்கூடும். அது இல்லை—வீண் விளம்பரச் செலவு—இந்த அவையிலே முதலமைச்சர் அவர்கள் இன்ன விலைக்கு மேல் யாரும் அரிசியை விற்கக்கூடாது என்று அறிவிப்பு செய்கிறார். அது என்ன ஆச்சு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் அமைச்சரே அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார். பத்திரிகையில் வந்திருக் கிறது.

திரு. சோ. அழகர்சாமி: அதை நானும் படித்துப் பார்த்தேன். ரீடெல் ப்ரைசை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியது மாநில அரசின் பொறுப்பு என்றுதான் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பத்திரிகையில் வந்ததைப் படிக்கவில்லை என்றே தெரிகிறது. இதே கோட்டையில்—அந்தக் கேள்வியை அவரிடம் பத்திரிகைக்காரர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்—விலை நிர்ணயம் செய்கிற பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததுதான். இதுபற்றி தமிழக அரசு எங்களிடம் கேட்டிருக்கிறது. நாங்கள் பரிசீலித்துக்கொண்

டிருக்கிறோம். பொதுவாக இதுபோல விலை நிர்ணயிக்கிற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி யிருக்கிறார்.

**திரு. ஆலடி அருணா:** முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அந்த அறிவிப்பைச் செய்தபோது—சில்லரை விலையை இதுபோல நிர்ணயிக்க அனுமதி கேட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக் கிறோம், அவர்களிடத்தில் இருந்து ஒப்புதல் வந்த பிறகு இது அமலுக்கு வரும் என்று சொல்லவில்லை. அவர் அறிவிப்புச் செய்த மறுதினமே இந்த விலை அமலுக்கு வரும் என்பதுபோலத்தான் அந்த அறிவிப்பைச் செய்தார்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விலை நிர்ணயிப்பதைப்பற்றி இவர் சொன்னார். அதை அமல்படுத்துவதற்கு என்ன முறையோ அதுதான் பின்னர் முறையாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** உணவு அமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. கொள்முதல் செய்கிற விலை, போனசு பற்றி எல்லாம்—இரண்டு விலை என்பதாக எல்லாம் சொன்னார்கள். என்ன ஆயிற்று? தனி ஏஜெண்டுகளைக் கொள்முதல் செய்ய அனுமதிக்கமாட்டோம் என்றார்கள். இன்றைக்கு தனி ஏஜெண்டுகளிடம்தான் விடப்பட் டிருக்கிறது. அதன் காரணமாக பல கேஸ்களும் வந்துகொண் டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்தெந்தப் பகுதியில் தனியாரைக் கொள்முதல் செய்ய அனுமதிப்பதில்லை, எந்தெந்தப் பகுதியில் அனுமதிப்பது என்பது வரன்முறைப்படுத்தப்பட்டு அந்த முறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தனியார்களை ஏஜெண்டுகளாகப் போட்டிருப்பதன் விளைவுகளைத்தான் நாம் பார்க்கிறோம். அவர்கள் பதுக்கி வைத்திருக்கிற தானியங்கள் வெளிக்கொணரப்பட்ட கேஸ்கள் ஒவ்வொன்றாக வருகின்றன. அறிவிக்கப்பட்ட பகுதி களில் சில்லரை வியாபாரிகள் யாரும் கொள்முதல் செய்யக் கூடாது என்றார்கள். இப்போது வந்துள்ள அறிவிப்பில் சில்லரை வியாபாரிகள் கொள்முதல் செய்துகொள்ளலாம் என்பது.





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தவறான கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லக்கூடாது. மொத்த வியாபாரிகள் வாங்குவது ஒன்றாகும். சில்லரை வியாபாரிகள் வாங்குவது அப்போதும் இருக்கிறது. இப்போதும் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** ஏஜெண்டுகள் மூலம் வாங்குவது என்கிற கொள்கையினால்தான் இத்தனை மோசடிகளும் ஏற்பட் டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏஜெண்டுகள் மூலம் வாங்குவது என்கிற முறைதான் ஆண்டாண்டுகளாகப் பின்பற்றப் பட்டு வந்த முறை. அதைத்தான் நாமும் பின்பற்றினோம்.

**திரு. சோ. அழகர்சாமி:** எத்தனையோ ஆண்டுகளாக இருக்கிற முறையைத்தான் மாற்ற வேண்டுமென்று சொல்கிறேன். பத்திரி கைகளில் வருகிற அறிவிப்புகள்—விளம்பரங்கள் ஆகியவற்றுக்கும் நடைமுறைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருக் கின்றன. ஷெட்யூல் ரேட்டை மாற்றியாக வேண்டும். இந்த ரேட்டுக்கு யாரும் வேலை செய்ய வரமாட்டார்கள். கிணறு எடுப்பது என்றால் கிட்டவே யாரும் வரமாட்டார்கள். அமைச்சர் தோட்டத்தில், அறந்தாங்கி எம்.எல்.ஏ. தோட்டத்தில் போட்டுள்ள குழாய்க் கிணறுகளைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் போட்டால் போதும். குடிதண்ணீர் கஷ்டம் இராது. அங்கேயே சாகுபடியும் செய்ய முடியும்.

அதற்கடுத்தபடியாக, அடிக் கிணறுகளை ஆழப்படுத்துவது பற்றியது. தமிழகத்திலே 12 இலட்சம் கிணறுகளுக்கு உதவி கிடைக்கவில்லையென்று சொன்னாலும், தண்ணீரில்லாத கிணறுகளை மேலும் ஆழப்படுத்த, எல்.டி. பாங்குகளை நம்பாமல், அரசே ரூ. 2,000 தக்காவிக் கடனாக கொடுத்து ஆழப்படுத்துங்கள், நியாய விலை அரிசியை ஒவ்வொரு வாரத்திற்கும் கொடுங்கள், மாதத்திற்கு கொடுத்தால் போதாது. அதே மாதிரி ஒரிஸா, பீகாரில் இருக்கிற மாதிரி, வேலையில்லாத—சக்தியில்லாதவர் களுக்கு கஞ்சித் தொட்டி திறவுங்கள் அல்லது சிவப்பு அட்டை கொடுங்கள், அல்லது கறுப்பு அட்டை கொடுத்தாலும் சரி . . .

(மணியடிக்கப்பட்டு திரு. எம். ஏ. லத்தீப் அழைக்கப்பட்டார்.)

[1975 பிப்ரவரி 26

திரு. தா. வெ. குருசாமி: ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். எனக்குப் பேசுவதற்கு எப்பொழுது அனுமதி அளிப்பீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. லத்தீப் பேசி முடிக்கட்டும், பிறகு யோசிப்போம்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் முன்மொழிந்த இந்த நன்றியறிவிப்புத் தீர்மானத்தின்மீது, அதை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தில் பரவி விட்டிருக்கிற வறட்சியைப் பற்றி விரிவாக விவாதத்திருக்கிருர்கள். இந்த வறட்சியால் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதனைப் பற்றியும் ஆளுநர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிருர்கள். இந்த வறட்சியைப் போக்குவதற்கு நாம் என்ன, என்ன திட்டங்களையெல்லாம் வகுத்து முனைப்புடன் செயல் படுத்த வேண்டுமென்பதனைப் பற்றியும் ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் காட்டியிருக்கிருர்கள். பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி, இன்றைக்கு நாட்டை வாட்டிக் கொண்டிருக்கிற இந்த வறட்சியைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கு நிவாரணங்களை அளிக்கும் முகத்தான் இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் நான் வரவேற்கிறேன். ஆளுநர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிற பிரச்னைகளையெல்லாம், மிக நிதர்சனமான பிரச்னைகளை நல்ல முறையிலே இந்த உரையிலே அணுகியிருக்கிருர்கள் என்பதை நான் எற்றுக்கொள்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் மிக முக்கியமான ஒரு பிரச்னையை நாம் ஒவ்வொரு ஆண்டும் மறந்து வருகின்ருேம். இந்த நாட்டிலேயிருக்கிற சிறுபான்மை மக்கள், இன்றைக்கு எல்லா வகையிலும் பின்தள்ளப்பட்டிருக்கிருேம். அவர்கள், தாம் நியாயமாகப் பெற வேண்டிய உரிமைகளைப் பெறக்கூடிய அளவுக்கு இன்றைக்கு உயர்த்தப்படாமல், அவர்களுடைய நிலை இன்றைக்கு மாற்றப்படாமல் இருக்கிறது. ஆகையினால் அவர்களுக்கு விசேஷமான திட்டங்களை



1975 பிப்ரவரி 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

வகுக்கவேண்டுமென்ற எந்தவிதமான அறிவிப்புகளும் இந்த உரையிலே மட்டுமல்லாமல், நாம் கடந்த ஆண்டுகளிலே பார்த்த மற்ற உரைகளிலும் இல்லாமலிருப்பது மெத்த வருந்தத்தக்கது.

இன்றைக்குச் சிறுபான்மை மக்கள், அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும், ஏனைய சிறுபான்மை இனத்தவர்களாக இருந்தாலும், ஒன்றைக் குறிப்பிட்டு சொல்கிறேன். சர்க்கார் நியமனங்களிலும், கல்வி ஸ்தாபனங்களிலும், மற்ற வாய்ப்புகளைப் பெறக்கூடிய வகையிலும் மிகப் பின்தங்கிய நிலையில், தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை அவர்கள் இழக்கக்கூடிய நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிருர்கள். இன்றைக்கு இந்த நாட்டில் பல்வேறு துறைகளை நாம் பல்வேறு இனங்களுக்காக ஏற்படுத்தியிருக்கிருேம். ஒவ்வொன்றுக்கும் தனித் தனித் துறையை ஏற்படுத்தியிருக்கிருேம், பிற்பட்டோர் நலத் துறை என்று ஏற்படுத்தியிருக்கிருேம், அரிசன நலத்துறை என்று ஏற்படுத்தியிருக்கிருேம். மலைவாசி மக்களுக்கு தனியாகத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி இருக்கிருேம்.

ஆனால், உண்மையாக எந்த ஜனநாயகத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற பெரும்பான்மை, சிறுபான்மை என்று ஏற்றுக்கொண்டால், பிற்பட்டோர் என்று எடுத்துக் கொண்டால், அதிலே யார் பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், யார் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்கும் போது சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பெரிய கடலிலே கலக்கப்பட்ட ஒரு துளியாக இங்கே ஆக்கப்படுகிருர்கள். ஆகையினால் மற்ற வகுப்பினர்களுக்குச் செய்யப்பட்டிருக்கிற நியாயமான திட்டங்களை வரவேற்றபோதிலும் இந்த நாட்டிலே உண்மையாக ஜனநாயகம் காக்கப்பட வேண்டுமானால் பெரும்பான்மை மக்களுக்கிருக்கின்ற திட்டங்களோடு சிறுபான்மை மக்களுடைய திட்டங்களை இணைக்கக் கூடாது. சிறுபான்மை மக்களுக்காகத் திட்டங்களைத் தனியாக வகுத்து—இதற்காகச் சிறப்பான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுத்தவேண்டும்.

இன்றைக்கு அரிசன நலத்துறையை ஏற்படுத்தியிருக்கிருேம், பிற்பட்டோர் நலத்துறையை ஏற்படுத்தியிருக்கிருேம். அதற்காகத் தனி இயக்குநர்களை ஏற்படுத்தியிருக்கிருேம். ஆனால், பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரால் பார்க்கப்படுகின்ற, கவனிக்கப்படுகின்ற,

சமூகங்கள், வகுப்புகள் என்று சொன்னால், அதிலே பெரும்பான்மைப் பிரிவுகள் வந்துவிடுகின்றன. சிறுபான்மையினரைக் கவனிப்பாரில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, எந்த நிலையிலே எடுத்தாலும் இன்றைக்கிருக்கிற அமைச்சர்கள் நல்லமுறையிலே கவனித்துச் செயல்படுத்தக்கூடியவர்கள் என்பதை அனுபவப் பூர்வமாக அறிந்து சொல்கிறேன். அது உண்மை. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அமைச்சர்களே எந்த திட்டத்தையும் செயல்படுத்துவதில்லை. அமைச்சர்களுக்குக் கீழே யிருக்கிற அதிகாரிகள் இன்றைக்கு அமைச்சர்களுடைய உள்ளத்திலேயிருக்கிற கருணையை, அன்பை, சிறுபான்மை சமுதாயத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கிற பற்றை அவர்கள் கொண்டிருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லையென்றுதான் அனுபவபூர்வமாக உள்ள எங்களைப் போன்றவர்கள் சொல்லவேண்டும்.

ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, எப்படி அரிசன நலத் துறைக்கு, பிற்பட்டோர் நலத்துறைக்குத் தனித்தனி டைரக்டர் இருக்கிறார்களோ அதைப்போல், டைரக்டரேட் ஆஃப் மைனாரிட்டி கம்யூனிட்டீஸ் என்று தனியாக அவர்களுக்கு ஒரு இயக்குநரை நியமித்து, தனியாக ஒரு துறையை ஏற்படுத்திச் செயல்பட்டால் தான் இந்த நாட்டிலே ஜனநாயகம் உண்மையாக உயிர் பெற்றிருக்கிறது, ஜனநாயகத்திற்குப் பொருள் கிடைத்திருக்கிறது என்பதை நாமும் உணர்ந்தவர்களாவோம். அந்தக் குறிப்பு, இந்த உரையிலே மட்டுமல்லாமல் கடந்த பல ஆண்டுகளாகச் சிறுபான்மை உரிமைகள் பற்றி தனிக் கவனம் செலுத்தப்படாமலிருப்பது, எந்த குறிப்பும் இல்லாமலிருப்பது, உண்மையிலே எங்களுக்கு மெத்த வேதனையைத் தருகிறது.

ஆகையினாலே, இந்த உரையிலே அதையும் குறிப்பிட்டிருப்பார்களானால் நாங்கள் மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்போம். உரையிலே இருந்தாலும், அரசியல் சட்டத்திலே இருந்தாலும் மனிதர்கள் தங்கள் உள்ளத்திலே ஏற்றிருக்கவேண்டும். ஆட்சிப்பொறுப்பிலே உள்ளவர்கள் தங்கள் எண்ணத்திலே கொண்டிருக்கவேண்டும். இந்த நாட்டினுடைய அரசியல் சட்டத்திலே சிறுபான்மை மக்களுக்கு வாக்குறுதிகள் தரப்பட்டிருந்தாலும், எழுத்தால் வடிக்கப்பட்ட வாக்குறுதிகள் பெரும்பான்மை மக்களின் சார்பாக அமைந்திருக்கிற பெரும்பான்மை அமைச்சர்களுடைய எண்ணத்





திலும் திட்டத்திலும் இடம் பெறுதவரையில், வெறும் அந்தப் புத்தகத்திலேயுள்ள வாக்குறுதிகள் எந்தவகையிலும் பயன்படாது. அந்த வகையிலே இன்றைக்கு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறோம், சிறுபான்மை மக்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நியாயங்கள் போதிய அளவுக்கு இல்லை. இன்றைக்கு சதவிகிதங்களை நீங்கள் நிர்ணயிக்கவேண்டும். எங்களுடைய சதவிகிதம் எவ்வளவு? ஜனத்தொகை எவ்வளவு? பத்து சதவிகிதம் என்று கூறுகிறீர்களா? அப்படியென்றால் 10 சதவிகிதம் நியமனங்கள் என்று நிர்ணயுங்கள். 8 சதவிகிதம் என்று வாதிடுகிறீர்களா? அப்படி என்றால் 8 சதவிகிதம் என்று நிர்ணயித்துக் கொள்ளுங்கள். எந்தச் சதவிகிதத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களோ, அந்த அளவு நீங்கள் நியமனங்களிலே, மற்ற சர்க்கார் துறைகளிலே, கல்விச்சாலைகளிலே முஸ்லீம்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, மற்ற சிறுபான்மை மக்களுக்கு அவரவர் விகிதாசாரப்படி நிர்ணயித்துக் கொடுத்தால், மைனாரிட்டி ரெப்ரசன்டேஷன் என்ற வாதத்திற்கு உண்மையான ஜனநாயகத்திற்கு நாம் விளக்கம் கொடுத்தவர்களாக இருப்போம் என்ற வகையில் நான் அதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வறட்சி நிவாரணத்தைப் பற்றி இங்கே பல்வேறு வகையிலே பேசப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வறட்சியைப் பற்றி திரு. லத்தீப் அவர்கள் நாளைப் பேசுவார்கள். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.29 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

85. Notification issued in G.O. Ms. No. 1200, Home, dated the 10th May 1974 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

86. Notification issued in G.O. Ms. No. 2688, Rural Development and Local Administration, dated the 1st December 1973 in regard to division of wards and reservation of one seat for women in the Ranipet Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

87. Notification issued in G.O. Ms. No. 2451, Rural Development and Local Administration, dated the 19th November 1974 in regard to declaration of certain contiguous areas of the Madras City forming part of the Madras Metropolitan Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

88. Notification issued in G.O. Ms. No. 2513, Rural Development and Local Administration, dated the 27th November 1974 in regard to an amendment to rule 11 of the Tamil Nadu District Municipalities Building Rules, 1972. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

89. Notification issued in G.O. Ms. No. 2231, Rural Development and Local Administration, dated the 16th October 1974, in regard to approval of list of parks in the area within the jurisdiction of Thanjavur Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Playfields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

B. *Reports, notifications and other papers.*

Nil



## இணைப்பு I.

605-ஆம் பக்கத்தில் 98-ம் என்றுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

The aim of the Village Development camp is to concentrate all the Animal Husbandry Development work in an intensive manner as a Package Pragramme. Padappai village was chosen for the village development camp as it is conducive for mixed farming and in view of its nearness to Madras city which facilitated easy marketing of Livestock Products of the camp area. The following benefits and incentives were envisaged to the villagers in the camp area :—

Contribution and Government subsidy towards—

(1) maintenance of Backyard poultry ;

(2) purchase of Day old chicks;

(3) construction of Deep litter house; and

(4) purchase of cows, rams and piggery.

The daily average egg production in the camp area is 4,100 per day. Besides, the State Bank of India, Tambaram, has advanced to the private poultry breeders a loan of Rs. 3 lakhs for poultry Development. A Chick House-*cum*-Godown to store poultry feed has been constructed under the World Food programme. Further, a Milk Co-operative for Dairy Development, a fodder seed production farm for fodder development, a Sheep Breeding Co-operative Society for Sheep development and a fattening scheme for piggery development have been organised for the best results in organising the camp. The First Anniversary Celebrations of the camp were held on 30th and 31st July 1974 in which the Hon'ble Chief Minister, the Hon'ble Minister for Agriculture and the Hon'ble Minister for Social Welfare have participated.

## தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1975 பிப்ரவரி 27

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 101.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இன்றைக்கே பொது விவாதம் முடிந்து பதில் அளிக்கப்படப் போகிறதா? அல்லது, நாளைக்கும் 'எக்ஸ்டெண்டு' பண்ணப் போகிறோமா? கட்சித் தலைவர்கள் பேசி முதலமைச்சரவர்கள் பேச வேண்டியிருக்கிறது. இன்றைக்குள் இதை எப்படிச் செய்வது? நேரம் போதாது என்று தோன்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே நான் கேட்டேன். கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாமா என்று. இப்பொழுது தலைவர்கள் முடிவு செய்யலாம்.

THIRU M. A. LATHEEF: Question hour may be dispensed with.

THIRU R. PONNAPPA NADAR: For the day, Question hour may be dispensed with.

### (1) அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை விதி 22-ன் கீழ் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ளதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### மேலவை உறுப்பினர் திரு. வி. வெங்கா, உறுப்பினர் விடுதியில் தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது அவையில் இல்லாததால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை . . .

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட்: பதில் சொல்வதற்கு முதலமைச்சர்தான் இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அமைச்சரவையில் யாராவது ஒருவர் பொறுப்பு எடுத்துக்கொண்டு பதில் சொல்லலாம்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: இது மிகவும் முக்கியமான பிரச்சினை. நாளைக்குப் பேசுவது முறையாக இருக்காது. ஆகவே, இப்போதே இதை எடுத்துக்கொண்டு முடித்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதலில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஜி. ஆர். எட்மண்ட், ஆலடி அருணா, திருமதி சத்தியவாணிமுத்து, திருவாளர்கள் எ. சுப்பிரமணியம், ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப், கோவை செழியன், பொன்னப்ப நாடார் ஆகியோர் the attack on a member of the Legislative Council Thiru Venga and the consequent tense situation prevailing in the campus of MLAs' hostel என்னும் பொருள்பற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை திரு. தங்கமணி அவர்கள் சுருக்கமாக எடுத்துச் சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான விஷயமாக இருப்பதால், எந்தவிதமான ஆத்திரமும் இல்லாமல் சில விவரங்களை உங்கள் முன்னால் எடுத்து வைப்பதற்கு நீங்கள் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நேற்றுக்கூட, ஜனாதிபதி உரையின்பேரில் பிரதம மந்திரி அவர்கள் பேசும்போது There is a politics of destruction என்று சொல்லியிருக்கிறார்கள். மிஸ்ராவைப்பற்றிக் குறிப்பிடும்போது அம்மாதிரியாக, குறிப்பிட்டவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற அளவுக்கு அரசியல் போகுமேயானால், அது ரொம்ப விபரீதமாகப் போகும் என்று சொல்லி அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இதை முளையிலேயே கிள்ளி விடுவதுதான் நல்லது. நேற்று நடந்த சம்பவத்திற்குரிய உறுப்பினரைப் பொறுத்த வரையில், அவர் பொதுவாக ரொம்ப அமைதியானவர். சாதாரணமாக யாரிடத்திலும் பேச மாட்டார். 'வணக்கம்' சொல்வதுதவிர அவர் யாரிடத்திலும் பேசிக்கூடப் பார்த்ததில்லை. அப்பேர்ப்பட்ட ஒருவர், உறுப்பினர்கள் விடுதியிலிருந்து வெளியிலே வரும்போது, திடீரென்று டாக்சியிலே வந்த சிலர் அவரைத் தாக்கியிருக்கிறார்கள். தாக்க வந்தவர்கள் அவரை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று தாக்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இன்றைக்குக் காலையில் போலீஸ் கமிஷனருடைய அறிக்கையை வைத்துப் பார்த்தாலும்கூட, காயங்கள் பூராவும் தலையில் விழுந்திருக்கின்றன—ஆழமாகவும் விழுந்திருக்கின்றன என்று குறிப்பிடுகிறார்கள்.

It is a clear case of attempt to murder.

அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. இம்மாதிரியான ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. நமது சென்னை மாநகரத்தில் எங்கேனும் ஓரிடத்தில் ஏதாவதொரு சம்பவம் ஏற்பட்டால் அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்குப் போலீசை ஐந்து நிமிடங்களில் 'ரஷ்' பண்ணும் அளவிற்கு உலகத்திலேயே இல்லாத அளவுக்கு அருமையான மெஷினரி போலீஸ் கமிஷனர் ஆபீசில் இருக்கிறது. ஆனால், நேற்று சம்பவம் நடந்து இன்று வரையிலும்கூட யாரும் கைது செய்யப்படவில்லை. நாங்கள் கார் நம்பரைக்கூட குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறோம். அதைக் கொடுத்தும்கூட இது விஷயத்தில் அரசாங்கம் ரொம்பவும் அஜாக்கிரதையாக இருக்கிறது. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். ஒரு உறுப்பினருக்கு நேர்ந்தது எந்த அரசியல்வாதிக்கும் நேரக்கூடும். எந்த ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவருக்கும் ஆபத்து இல்லாமல் இருக்கவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் முழுமூச்சாகச் செய்திருக்க வேண்டும். இன்றைக்கும் கைது செய்யப்படாமலிருப்பது ரொம்பவும் வருந்தத்தக்கது. அதிருஷ்டவசமாக அவருக்கு உயிருக்கு ஆபத்து இல்லை என்று சொல்லுகிறார்கள். அது நல்ல அம்சம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வது மட்டுமல்லாமல், இதற்குப் பின்னால் ஏதாவது சதிகள் இருந்து யாராவது தூண்டிவிட்டிருந்தால் அதையும் ஆழமாகக் கண்டறிந்து வெளியே

கொண்டுவருவது உதவிகரமாக இருக்கும். இதில் அரசாங்கத்தின் குறைபாடு இருக்கிறது. ஆகவேதான், சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, under rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice of the following motion. "I move that the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz :—

"the extraordinary and dangerous situation prevailing within the campus of the new MLAs' Hostel, due to the stabbing incident of Thiru V. Venga, Member of the Legislative Council by a group of rowdy elements."

பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சம்பவம் நேற்று காலை 11-20 மணிக்கு நடந்திருக்கிறது. எங்காவது நகரத்தின் ஓர் ஒதுக்குப் புறத்தில் நடந்திருந்தாலுங்கூட, ஏதோ தனிப்பட்ட முறையில் காழ்ப்பு உணர்ச்சியின் அடிப்படையில் சம்பவம் நடந்திருக்கிறது என்ற ஐயப்பாட்டுக்கு வழிவகை இருக்கலாம். ஆனால், இந்தச் சம்பவம் நேற்று காலை 11-20 மணிக்கு பட்டப் பகலில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற விடுதிக்கு முன்னாலேயே நடந்திருக்கிறது. நேற்றைய தினம் சட்டமன்றக் கூட்டம் நடந்து முடிந்த பின்னர், நான் மருத்துவமனைக்குச் சென்று திரு. வெங்கா அவர்களைப் பார்த்து அவரிடமிருந்து சில தகவல்களை அறிந்து வந்திருக்கிறேன். அவர் விடுதியிலே குளித்துவிட்டு வெளியே வந்து வாடகைக் காரில் ஏறினார். வாடகைக் காரில் அவர் ஏறிய பிறகு யாரோ ஒருவர், மிக அவசரமான காரியம் இருக்கிறது, உங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கூப்பிட்டு, அவர் காரை விட்டு வெளியே இறங்கியவுடனே, அந்த நபர் அவரைக் கத்தியால் குத்தியதற்குப் பிறகும், அவரை ஐந்தாறு பேர் சூழ்ந்துகொண்டு கத்தியால் தாக்கியதில் காயங்கள் தலையில் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே விடுதியில் இருந்த எங்கள் கட்சி உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் உடனடியாக இறங்கி வந்து தடுத்திருக்கிறார். அதற்குப் பிறகு குண்டர்கள் ஓடியிருக்கிறார்கள். பாதுகாக்க வந்த திரு. துரை கோவிந்தராசன் அவர்களைக்கூடத் தாக்குவதற்கு அவர்கள் முயற்சித்திருக்கிறார்கள். இதை என்னிடம் துரை கோவிந்தராசன் அவர்கள் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுமானால் பொது வாழ்வில் யாரும் ஈடுபடமுடியாது. குறிப்பாக நம்முடைய திரு. வெங்கா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக்



கழகத்திற்கு வந்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. எங்களுடைய கட்சிக்கு மாறியதற்காக இப்படி நடக்குமானால், இப்பேர்ப்பட்ட கட்சி மாறுதல் இனிமேல் நடக்கக் கூடாது என்று பயமுறுத்துவதற்காக இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடந்திருக்கின்றனவோ என்பது சந்தேகமாக இருக்கிறது. பொது வாழ்வில் ஈடுபடுகின்றவர்கள் அரசியலில் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். பின்னால் அந்தக் கருத்துக்களிலே அவர்களுக்கு மாற்றம் ஏற்படலாம். கொள்கை மாற்றம் ஏற்படும்போது, அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற இயக்கத்திற்குப் போவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. நியாயம் இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 15 பேர் இருக்கிறோம் என்றால்—16 பேர் இருக்கிறோம்—எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள். அந்த இயக்கத்தில் உள்ளவர்களின் சில கொள்கைகள்—போக்குகள்—பிடிக்காமல் நாங்கள் மாறியிருக்கிறோம். குறிப்பிட்ட சம்பவங்கள் போன்று இனிமேல் நடக்காமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன்.

இன்றைக்குக் காலையிலே வந்திருக்கின்ற பத்திரிகையிலே கூட ஒரு செய்தியைப் போட்டிருக்கிறார்கள். திரித்துக் கூறியிருக்கிறார்கள். தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித் திசை திருப்பிவிடுகிறார்கள். என்ன காரணத்தால் நடந்திருக்கிறது என்பதைப் பொறுத்தவரையில் அது ஒரு பிரச்சினை. நாம் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் சட்ட மன்றத்திலே இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதித்து இருக்கிறார்கள். இனிமேல் நாம் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்று அவர்கள் பயப்படுவார்கள். அந்தப் பயத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்—அந்த முறையிலே ஏற்கனவே நாம் இன்றைக்குக் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து இருக்கிறோம். அந்த ஒரு மணி நேரத்தையாவது இந்த முக்கியமான பிரச்னைபற்றி விவாதிப்பதற்காக எடுத்துக்கொண்டு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த முக்கியமான கருத்தை வலியுறுத்திக் கூறி இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* THIRU A. SUBRAMANIAM: Sir, under Rule 42 of the Legislative Assembly Rules, I have given notice of a motion that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance, viz. :—

"the dastardly attack with lethal weapons on Thiru V. Venga, M.L.C. by some persons at about 11.30 a.m. on 26th February 1975 in the Legislators' Hostel resulting in serious stab injuries on Thiru V. Venga's head and his hospitalisation".

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையிலே இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. மிகக் கடுமையாக நோக்க வேண்டிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. நடைபெற்று இருக்கிற சம்பவமானது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற விடுதியிலே பட்டப் பகலிலே நடந்திருக்கிறது. பல பேர்கள் இருக்கும்போது அவர்கள் முன்னிலையிலேயே நடந்திருக்கிறது. நான் விசாரித்த வரையிலேயே அங்கே அவர்கள் வந்திருந்த டாக்சியானது வெகு நேரமாக அங்கேயே காத்திருக்கிறது. அந்த நபர்கள் அங்கே வெகு நேரமாகக் காத்திருந்திருக்கிறார்கள் என்று நான் விசாரித்தவரையிலே எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. விடுதியிலிருந்து ஒரு நபர் டாக்சிக்கு ஓடியிருக்கிறார். திட்டமிடப்பட்டு காத்திருந்து உளவு பார்த்து இந்தச் சம்பவம் நடந்திருப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்ல, கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார், வந்தவர்கள் எல்லோரும் கத்தியை வைத்திருந்திருக்கிறார்கள்.

திரு. வெங்கா அவர்களை யாரோ ஒருவர் வெளியே அழைத்து பேசவேண்டுமென்று அழைத்து அழைத்த இடத்திலே முகத்திலே குத்தியிருக்கிறார், பிறகு அங்கு இருந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து தாக்கியிருக்கிறார்கள். கத்தியால் குத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே நல்ல வேளையாக விடுதி லாரி வந்திருக்கிறது, வந்து இருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. அந்த லாரி வந்ததால் துரை கோவிந்தராசன் அவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அந்த லாரி அந்த நேரத்தில் அங்கே செல்லாமல் இருந்திருந்தால் தாக்கியவர்களின் நோக்கம் நிறைவேறியிருக்கும். இம்மாதிரிச் சம்பவம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே நடந்திருக்கிறது. அரசியல்வாதிகளை ஒழித்துக்கட்டுகின்ற வேலையை யார் யார்மீது செய்தாலும் தவறுதான்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக ஆளுங்கட்சியிலே இருந்தார் அந்த உறுப்பினர் அ.தி.மு.க.வுக்கு வந்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. அதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அரசியல் பகை காரணமாக இருக்கக்கூடும் என்றுதான் யாருமே எண்ணுவார்கள். அரசியலிலே



மாற்றுக் கருத்துக்கொண்டவர்கள் வன்முறையைப் பயன்படுத்தி ஒழித்துக் கட்டப்படுவார்கள். அதுவும் பட்டப் பகலிலே நடைபெறும்—சட்ட மன்றக் கட்டடம், சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதி இவை பாதுகாப்பான இடங்கள் ஆகும் தனி உரிமைகள் இருக்கக்கூடிய இடங்கள் என்று கருதப்படுகின்றன. அப்படி இருந்தும் இப்படி நடக்கிறது என்றால் அந்த அளவிற்குத் துணிச்சல் சட்ட மன்ற விடுதியிலேயே மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை ஒழித்துக் கட்டுகின்ற அதுவும் பட்டப் பகலிலே ஒழித்துக் கட்டுகின்ற நிலைமை இருப்பதாலே—குத்தப்பட்ட திரு. வெங்கா அவர்கள் மட்டுமல்ல அத்தனை அரசியல் வாதிகளுக்கும் எச்சரிக்கை என்பதை நாம் உணர வேண்டும்.

மேலும் நேற்றையதினம் காலையிலே இது நடந்திருக்கிறது. ஏறத்தாழ 22 மணி நேரம் ஆகிவிட்டது. 22 மணி நேரம் ஆகியும்கூட சம்பந்தப்பட்டவர்கள் யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா என்றால் செய்யப்படவில்லை. வந்த டாக்சியின் நம்பரும் டி. எம். பி. 3927 என்று கொடுத்திருக்கிறார்கள். டாக்சியிலே நம்பர் இருந்திருக்கிறது. டாக்சியிலே ஓடிப்போனவர்களைத் தடுப்பதற்காக ஒரு கல்லை எறிந்திருக்கிறார்கள். அந்த கல் அதன்மேல் பட்டு அதிலே டெண்ட் விழுந்திருக்கும். நம்முடைய காவல் துறை திறமையானது, அப்படிப்பட்ட துறையே இன்னும் பிடிக்கவில்லை. காலை பத்திரிகை செய்தி வரையிலே பிடிக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. இவ்வளவு சீரியசான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

சட்ட மன்ற உறுப்பினர்கள் மக்களுக்காகச் சட்டங்களை இயற்றுகின்ற பொறுப்பை வகிப்பவர்கள், நாலரைக் கோடி மக்களின் காவலர்களாக இருப்பவர்கள் அவர்களுடைய நிலைமையே இப்படி என்றால் காவல் துறை மானியம் இன்னும் சில நாட்களிலே இங்கே வரப்போகிறது. திறமையும் புகழும் பெற்றவர்கள் அவர்கள் என்று இங்கே புகழுரைகள் வழங்கப்படுகின்றன, பேசுவார்கள். இவ்வளவு சிறப்பாக உள்ள காவல் துறையே 22 மணி நேரம் ஆகியும் பிடிக்கவில்லையென்றால், டாக்சி நம்பர் இருந்தும் பிடிக்கவில்லையென்றால், என்ன பொருள் என்று தெரியவில்லை, நான் கண்காட்சியிலே பார்த்தேன். எந்தவிதமான துப்பும் கிடைக்காது என்று கருதப்பட்ட எத்தனையே வழக்குகளிலேயே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் காவல் துறையினர். ஆனால் இதிலே டாக்சி நம்பர் தெரிந்தும் பிடிக்கவில்லை. பல விஷயங்கள் இதிலே அடங்கி இருக்கின்றன. ஆகவே இதைக் குறித்து இனிமேலாவது இம்மாதிரிச் சம்பவங்கள் நடக்காமல் இருக்கக்கூடிய வகையிலே அப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்கக்கூடிய முறையிலே என்ன செய்யவேண்டுமென்று ஆய்ந்தாக வேண்டும். அப்படி ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஆகவே சட்ட

மன்றத்தின் மற்றைய அலுவல்களை ஒத்திவைத்து தெளிவான ஒரு கருத்தை உருவக்காக இதைப்பற்றி இங்கே விவாதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேலவை உறுப் பினர் நண்பர் வெங்கா அவர்கள் நேற்றைய தினம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே தாக்கப்பட்டிருக்கிறார் என்பதையொட்டி மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சபையின் ஏனைய பணிகளை ஒத்திபோட்டு இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்பதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். இதிலே அரசியல் பிரச்னை என்பது நம்முடைய கவனத்திலே இருக்கக்கூடிய வகையிலே இருப்ப தாக நான் நினைக்கவில்லை. இருந்தாலும் அரசியல் காரணமாக தாக்குதல் நடைபெற்றதா அல்லது வேறு காரணமாக நடைபெற்றதா என்பது நம்மு டைய ஆராய்ச்சிக்குரிய ஒன்று என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் சட்ட மன்ற உறுப்பினர் விடுதியில் தாக்கப்பட்டிருக்கிறார். அதுதான் முக்கியமே தவிர அரசியல் காரணமாகத் தாக்கப்பட்டாரா அல்லது வேறு காரணமாகத் தாக்கப்பட்டாரா என்பது விசாரணையின்மூலம் தெரிய வேண்டும். நம்முடைய கவலையெல்லாம் ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டிருக் கிறார்; அதுதான் முக்கியம். டாக்சியிலே வந்து தாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. அதற்குரிய டாக்சி நம்பரைக்கூட பார்த்துக் சொல்லி யிருக்கிறார்கள். குறிப்பாக டாக்சிக்காரர்கள் என்றால், டிரைவர்கள் என்றால் ஏதாவது சட்டப்புறம்பான காரியம் நடைபெறுமானால் நிச்சயமாக அவர்களுக்கு அது தெரியுமானால் அப்படிப்பட்டவர்களை ஏற்றிச் செல்ல மாட்டார்கள். திருட்டுக் காரியங்கள் செய்யக்கூடியவர்களை, கொலை செய்யக் கூடியவர்களை, அல்லது மற்ற காரியங்களைச் செய்யக்கூடியவர்களை, அவர்களுக்கு அவர்கள் அப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்தால் அவர்களை ஏற்றுவதற்கு மறுத்துவிடுவார்கள். ஓட்டுவதற்கு மறுத்துவிடுவார்கள் அதுதான் உண்மை.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே சொல்கிறார்கள், ஒரு டாக்சி யிலே வந்திருக்கிறார்கள், அந்த டாக்சியிலிருந்து இறங்கி இன்னொரு டாக்சி யிலே உட்கார்ந்திருந்த உறுப்பினரை அழைத்து பேசிக்கொண்டு அவரைத் தாக்கிவிட்டு டாக்சியிலே ஓடியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் விடுதி யினுடைய ரிஸப்ஷன் துறையினர் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த தாகச் சொல்கிறார்கள். அங்கே இருக்கிறவர்களும் வெளியிலிருந்து வந்த பொதுமக்களும் பார்த்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு



பேர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது உறுப்பினர் வெங்கா தாக்கப் பட்டிருக்கிறார். இதையெல்லாம் அந்த டாக்சி டிரைவர் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறார். அவர்கள் தப்பு செய்தவர்கள். அவர்களை அந்த டாக்சியில் ஏற்றி டிரைவர் ஓட்டிச் சென்றிருக்கிறார் என்றால் ஒன்று அந்த டாக்சியி னுடைய நம்பர் போர்ஜ்ட் ஆக இருக்கவேண்டும் அல்லது அதை ஓட்டி வந்த வர்களுக்கும் தாக்கினவருக்கும் இருவருக்கும் இடையே ஒரு கான்ஸ்பிரசி இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் டாக்சி டிரைவர் நிச்சயமாக வந்த வர்களை ஏற்றிச் சென்றிருக்க மாட்டார்கள். ஆகவே, திட்டமிட்டு செயல் பட்டதாக நமக்குத் தெரிகிறது. எற்கெனவே வரும்போது டாக்சியை ஓட்டி வந்தவர்களும், அசால்ட் செய்தவர்களும் திட்டமிட்டு நடந்ததாக இதிலிருந்து நமக்குத் தெரிகிறது.

இது அரசியல் காழ்ப்புணர்ச்சியால் நடந்தது என்று நாம் உடனடியாக நினைக்கத் தேவையில்லை. 16 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறினார்கள். மற்றவர்கள் ஒரு கட்சியிலேயிருந்து இன்னொரு கட்சிக்குத் தாவிப் போகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. எவ்வளவோ பேர் மாறிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படாத நிலைமை திரு. வெங்காவிற்கு மட்டும் ஏன் ஏற்பட்டது என்பதை போலீசாரின் விசாரணையிலிருந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

அது எப்படியானாலும் சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியிலேயே ஒரு உறுப்பினர் தாக்கப்படுவது என்பது மிகப் பெரிய ஆபத்தாகும். இதைச் சுட்டிக்காட்டத்தான் சட்டமன்ற உறுப்பினர் சம்பந்தமான மானியத்தில் பேசும்பொழுது நான் சொன்னேன், கட்டுப்பாடு வேண்டும், சட்டமன்ற உறுப் பினர் விடுதியிலே வெளியார்கள் வருவதற்குக் கட்டுப்பாடு வேண்டும்; அங்கே நடக்கும் காரியங்களை ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தி, அதிகாரிகள் அந்த விடுதியின் விதிகளைச் சரியாகச் செயல்படுத்தும் விதத்தில் உதவ வேண்டும்; அதற்கான முழு அதிகாரத்தை அவர்களுக்குத் தர வேண்டுமென்று சென்ற ஆண்டேகூட நான் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது நான் சொன்னது எவ்வளவு உண்மை என்றும், அதை எவ்வளவுதூரம் நாம் முனைப்புடன் செயல் படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தக்கூடியதாக இந்த நிகழ்ச்சி நடந் திருக்கிறது.

அது எப்படியானாலும் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயே பலபேருக்கு முன்னால் ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலையையும் அதிர்ச்சி யையும் தரக்கூடியதாக இருக்கிறது. இதைப்பற்றி இந்த மன்றம் உடனடியாக ஆய்வு செய்வது சிறப்புக்குரியதாக இருக்கும். இது மிகவும் அவசரமும், அவ

சியமும் ஆனது என்பதால் இதைக் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே சொல்லியபடி நமக்கு ஒரு மணி நேரம் கிடைத்திருக்கிறது. அந்த ஒரு மணி நேரத்தை இதைப்பற்றி விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளைத் தள்ளி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மிகவும் முக்கியமான இந்தப் பிரச்னைக்காக இந்தச் சட்டமன்றத்தின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

உண்மையிலேயே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடப்பதைக் காணும்பொழுது நாம் மெத்த வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இம்மாதிரியான நிகழ்ச்சி வங்காளத்திலே அடிக்கடி நடந்து கொண்டிருக்கிறது, கேரளாவிலே நடந்து கொண்டிருக்கிறது, பீஹாரிலே நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு 'பாலிடிக்ஸ் ஆஃப் மர்டர்' என்று சொல்லும் முறையில் பல மாகாணங்களில் நடந்த நிகழ்ச்சிகளைப்போல இங்கேயும் உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி திட்டமிட்ட செயல்களை, வன்முறைச் செயல்களைத் தாண்டி விட்டிருக்கிறார்களோ என்ற நிலைமைதான் வெங்கா அவர்களைத் தாக்கியதிலிருந்து நமக்குத் தெரிகிறது.

வெங்கா அவர்களைத் தாக்கியது எப்படி என்று இங்கே வக்கீல்கள் வாதிப்பதைப்போலச் சொல்வது பொருத்தமில்லாமல் இருக்கும் என்று கருதுகிறேன். அவர்கள் திடீரென்று கட்சி மாறினார்கள் என்றும், திடீரென்று ஒருசிலர் வந்து தாக்கினார்கள் என்றும் சொல்லும் நேரத்தில் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி இருந்தால் அவருடைய ஊரிலே இது நடந்திருந்தால் அதைத் தெரிந்திருக்கலாம், புரிந்திருக்கலாம். ஆனால் நேர்மாறாக, இம்மாதிரியான நிலைமைகளெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயே நடந்திருக்கிறது என்று காணும் நேரத்தில்தான் சந்தேகம் எழுகிறது. நான் வேண்டுமென்றே யாரையும் இழித்தும் பழித்தும் பேச வேண்டுமென்று நினைக்கவில்லை. கயவர்கள் இம்மாதிரி திட்டமிட்ட செயல்களைச் செய்திருக்கிறார்கள், எப்படிச் செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தையெல்லாம் ஒருசிலர் தந்திருக்கிறார்கள். சோடா பாட்டில் வீசியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அவர்கள் உபயோகப்படுத்திய கத்தியானது ஒரு கத்தி கைப்பற்றப்பட்டிருக்கிறது என்று போலீஸ் அறிக்கையிலிருந்து பார்த்தேன். நீளத்தைப் பார்க்கின்ற நேரத்தில் திடுக்கிடும் நிகழ்ச்சியாக இருக்கிறது, அதிலும் குறிப்பாக சுமார் 25 வயதுள்ள வாலிபன் ஏதோ வெங்கா அவர்களை ஒரு சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று அழைத்து அவர்கள் கீழே இறங்கியவுடனே அவரைத் தாக்க,



மற்ற 5, 6 பேர்கள் சூழ்ந்து கொண்டார்கள் என்ற விவரமெல்லாம் தந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதைப்பற்றி நினைக்கும்பொழுது இரத்தமெல்லாம் கொதிக்கிறது. வன்முறையிலே நடைபெறும் இத்தகைய நிகழ்ச்சியானது சட்டமன்ற உறுப்பினர்மீது அதுவும் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு அருகாமையிலேயே நடப்பதைக் காணும் நேரத்தில் நாமெல்லோரும் ஒரே முகமாக இதைக் கண்டிக்கத்தான் வேண்டும்.

அதிலும் குறிப்பாக இன்னொரு வேடிக்கையான, விந்தையான விஷயமும் இருக்கிறது. காரின் நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது இலாக்கா, டிராபிக் அண்ட் லைசென்சிங் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. இந்தக் கார் யார் பெயரில் இருக்கிறது என்று பார்த்து அதன் 'ஓனரைக் கேட்டார்களா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இதற்கு இவ்வளவு காலம் வேண்டுமா? உடனடியாகச் சந்தித்து அப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் பெற்று கயவர்களைக் கைது செய்திருக்கக் கூடாதா? என்று நியாய உணர்வின் அடிப்படையில் சந்தேகங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. இம் மாதிரி நிகழ்ச்சியை நாம் யாரும், எந்தக் கட்சியும் வரவேற்பதற்கில்லை. யார் அதிகாரத்தில் இருந்தாலும் இம்மாதிரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்தது. தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி இருந்தால் இதை இம்மாதிரி தீர்த்துக் கொள்வது, சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்கு அருகாமையிலேயே தீர்த்துக் கொள்வது என்றால் அது நிச்சயமாக விரும்பத் தக்கது அல்ல.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு இன்னும் அதிகப் பாதுகாப்பு தேவை. யார் யார் அங்கே வருகிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். அது மட்டுமின்றி எந்தெந்தக் கார்கள் வருகின்றன, எந்த நேரத்தில் வருகின்றார்கள், என்ன வேலைக்காக வருகிறார்கள் என்று நமது போலீஸ் துறையிலேயிருந்து வேண்டிய கண்காணிப்புகளைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். இரவு நேரங்களில் யார் யார் எல்லாம் வருகிறார்கள்.

பல்லாண்டு காலமாக விடுதியிலே நான் தங்கியிருக்கிறேன். ஆனால் அண்மையிலே இந்த விடுதியிலே நடக்கும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை நான் இங்கே சொல்வது சரியல்ல என்பதால் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே, இம்மாதிரி நிகழ்ச்சிகள் மறுபடியும் நடைபெறாமல் இருக்க வேண்டும். அதுவும், பட்டப் பகலில், 11¼ மணிக்கு கத்திக் குத்து நடந்திருக்கிறது. துரத்திப் பார்த்திருக்கிறார்கள், அப்படியும் அவர்

உறுப்பினர் விடுதியிலே
களைப் பிடிக்க முடியவில்லை. அந்தச் சட்டமன்ற
இருந்த கடைநிலை ஊழியர் தூரத்தியதாகக் கேள்விப்பட்டேன். கல் வீசிய
தாகவும் சொன்னார்கள். இம் மாதிரி நிலையிலே அவர்கள் திட்டமிட்டுச்
செயல்பட்டதன் காரணமாக அவர்கள் தப்பித்து ஓடிவிட்டார்கள். போலீஸ்
மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது என்ற, குற்றச்சாட்டைக் கூற
விரும்புகிறேன். எனவே இது சம்பந்தமாக இந்தச் சபையின் காலத்தை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புத்
தீர்மானத்தையொட்டி, அவர்கள் கூறிய கருத்துக்களையொட்டி, மேலவை
உறுப்பினர் மாண்புமிகு திரு. வெங்கா அவர்கள் நேற்று வன்முறைத் தாக்கு
தலுக்கு ஆளாகியிருப்பது உண்மையிலேயே மன்ற உறுப்பினர்கள் அத்தனை
பேர்களுக்கும் அதிர்ச்சியையும், வேதனையையும் தரக்கூடிய ஒன்றாகும். அதைத்
தான் அவர்களெல்லாம் சிறப்பாகச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு
மேலவை உறுப்பினர் வெங்கா அவர்கள்மீது வன்முறைத் தாக்குதல், அதுவும்
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு அருகாமையிலேயே நடைபெற்
றிருப்பது என்பது எல்லோருக்கும் அதிர்ச்சி தரும் ஒன்றாகும். அது வேதனை
யையும், வருத்தத்தையும் தரக்கூடிய ஒன்றுதான்.

நேற்றையதினம் மேலவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த
பொழுதுகூட மாண்புமிகு முதல்வரவர்கள் அதற்கான விளக்கத்தைத் தருகின்ற
பொழுது அதைத்தான் சுட்டிக்காட்டினார்கள். நேற்று காலை 11-20 மணிக்கு
மாண்புமிகு மேலவை உறுப்பினர் வெங்கா அவர்கள் விடுதியை விட்டுக் கீழே
இறங்கி காரில் ஏறும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்
போல, டாக்சி வந்து நின்று அதிலிருந்த ஒருவர் இறங்கச் சொன்னதாகவும்,
அதன்பேரில் இறங்கி வந்ததாகவும் அப்பொழுது அவரைத் தாக்க ஆரம்பித்த
பொழுது மேற்கொண்டு 6, 7 பேர் சுற்றி வளைத்துத் தாக்கினார்கள் என்றும்,
அதற்குப் பிறகு அந்த டாக்சியிலேயே ஏறிப்போய்விட்டார்கள் என்றும், அப்
பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் இருந்திருக்கிறார்கள் என்றும்
எடுத்துச் சொன்னார்கள். உடனே வெங்கா அவர்கள் பெரிய மருத்துவமனைக்கு
எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

இது கட்சிக்கு அப்பாற்பட்டு எல்லோருமே வேதனைபடத்தக்க ஒரு நிகழ்ச்சி
என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்,
திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி
னார்கள். ஆனால் தாக்கப்பட்டதிலே திட்டமிட்டுத் தாக்கி இருக்கிறார்கள்





என்பது மட்டும் இதிலே தெளிவாகத் தெரிகிறது. காரணம், தனிப்பட்ட
காரணமா, அரசியல் காரணமா என்பது, காவல் துறை தீவிரமாகப் புலன்
விசாரணை செய்து கொண்டிருக்கும் இந்த நிலையில் அது முடிந்தபிறகு தெரிய
வேண்டி வரும். ஆனால் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியவர்
களாக இருக்கிறோம் என்பதை அரசு சார்பாக முதல்வரவர்கள் நேற்று
மேலவையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு கட்சியை விட்டு வேறு
கட்சிக்குப் போனார்கள், ஆகவே இது நடந்திருக்குமோ என்று ஊகிக்கும்
அளவிற்கோ, உறுதியாகக் கூறும் அளவிற்கோ இன்றைக்கு நாம் எந்த முடிவிற்
கும் வருவதற்கில்லை.

(முற்பகல் 9.30)

இப்படிப்பட்ட சம்பவங்கள் பலப்பல நாட்டிலே நடைபெற்றுக் கொண்
டிருக்கின்றன. கட்சித் தாவல் காரணமாக அந்த நிகழ்ச்சி நடந்தது என்று
சொல்லுகிறார்கள். பல்லாண்டு காலமாக ஒரு கட்சியிலிருந்து இன்னொரு
கட்சிக்கு உறுப்பினர்கள் செல்லுவதும் திரும்ப வருவதும், திரும்பச் செல்வதும்
நாட்டிலே. சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. திராவிட
முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச்
சென்ற 2½ ஆண்டு காலமாகப் பல பேர் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்.
அதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக தீர்த்துக் கட்ட வேண்டு
மென்ற முடிவில்தான் செய்தார்கள் என்று ஊகித்துச் சொல்லுவது இந்த
நிலையில் பொருந்தாது. அரசியல் காரணமா, தனிப்பட்ட காரணமா என்பது.
தீவிரமாகப் புலன் விசாரணை செய்து வழக்குத் தொடுத்து அது வருகிற போது
தான் தெரியும்.

எப்படி இருந்தாலும் சட்ட மன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் தாக்கப்
படுவதும் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதும் அதுவும் விடுதி அருகிலேயே அது,
நடைபெறுவதும் தடுத்து நிறுத்தப்பட்டாக வேண்டும், கடுமையான
நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதற்கு யார் காரணமாக இருந்தாலும்
அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு முதல்வர்
அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்று காவல் துறை அதிகாரிகளை
அழைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

சம்பவம் நடந்த உடனேயே சென்னை கமிஷனர் அங்கு போய்ப் பார்த்திருக்
கிறார்கள். சட்டமன்றச் செயலாளரும், துணைச் செயலாளரும் உடன் சென்றி
ருக் கிறார்கள். இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
முதல்வர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.
டி.எம்.பி. 3927 அல்லது 3917 என்று இரு எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இரண்டு எண்கள் உள்ள வண்டிகளையும் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள். இதுபற்றிய வழக்கு தொடரப்பட்டு குற்றவாளிகள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள்.

இன்று நாம் சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் எல்லா முயற்சிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நேற்றுக் குறிப்பிட்டது போல் இன்று மேலவைத் தலைவர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் இன்று மாலை கூடி அதுபற்றிப் பேசி முடிவு செய்ய இருக்கிறார்கள். விதிமுறைகளில் கட்டுப்பாடுகள், எந்த அளவுக்கு அதைக் கடுமையாக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்தால் அத்தகைய கட்டுப்பாடுகள் செய்யலாம். இன்று யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் எந்த நேரத்தில் வருகிறார்கள் போகிறார்கள் என்ற நிலை இல்லாத நிலையில் உறுப்பினர்களின் தகுதி, அந்தஸ்து குறைந்துவிடும் அளவுக்குப் பல்வேறு நிலைமைகளில் பல பேர் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் கட்டுப்பாடாகச் சொல்லுவார்களானால் கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும். யாராக இருந்தாலும் இன்னார் என்று தெரிவித்து விட்டு வரவேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்துவது எல்லா வகைக்கும் பொருத்தமாக இருக்கும். இங்கு லாபியில்கூட உறுப்பினர்கள் தவிர வேறு யாரும் வரக்கூடாது என்று முடிவு எடுத்தோம். அதற்குப் பிறகு அந்த முடிவு ஓரளவு தளர்த்தப்பட்டது. உறுப்பினர்கள் விடுதியிலும் சரி, இங்கும் சரி உறுப்பினர் தவிர வேறு யாரும் வரக்கூடாது என்ற நிலை இருந்தால் பாதுகாப்புக்கு வழிவகை ஏற்படும்.

இந்த வேதனைக்குரிய சம்பவத்தைப் பொறுத்தவரை அரசு தீவிரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்ற நிலையில் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

**திரு. [illegible] சுப்பிரமணியம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நான் நேற்று முன்தினம் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் தவறான முறையைக் கடைப்பிடிக்கிறீர்கள். பேரவைத் தலைவரிடம் கொடுத்தது என்ன ஆயிற்று என்று பேரவைத் தலைவருடைய அறையில் கேட்க வேண்டும். கொடுத்துவிட்டு இந்த அவையிலே வந்து 'என்ன ஆயிற்று' என்று கேட்பது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. கோவை செழியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொன்னார்கள். தங்கள் மூலமாக ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இந்த அவையிலே விதிமுறைகள் மீறப்படுகிறபோதுதான் சுட்டிக்காட்ட வேண்டும். வேறு கருத்துக்களைச் சொல்ல பாயின்ட் ஆப் ஆர்டரைப் பயன்படுத்தக்கூடாது.

**திரு. கோவை செழியன்:** இங்கு பேசிய பேச்சுக்கள் தவறு என்பதைச் சுட்டிக்காட்ட பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்க உரிமை இருக்கிறது.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

## (3) ஆளுநர் அவர்கள் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் (தொடர்ச்சி).

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வறட்சியைப் போக்குவதற்காக ஒவ்வொரு வாரமும் ஒரு கோடி ரூபாயைச் செலவு செய்யும் திட்டத்தை வகுத்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய நிலைமையாகும். ஆனாலும் இதிலே உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கவனத்தில் கொண்டு சில திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலை இல்லாத காரணத்தாலும், விவசாயத் துறையிலே இன்றைக்கு வறட்சியின் காரணமாக வேலைகள் நின்று விட்ட காரணத்தாலும் இராமநாதபுரம் மாவட்டம் குறிப்பாகவும், மற்ற மாவட்டங்கள் பொதுவாகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் வேலையில்லாத நிலைமை நிலவுகிறது.

அதனால் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தஞ்சை மாவட்டத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, வேலை இல்லாத மக்களுக்கு, வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் அரசு சிறப்புத் திட்டத்தைத் தீட்டி வாரம் ஒரு கோடி ரூபாய் இதற்காகச் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

ஏற்கனவே, வறட்சியின் காரணமாக விவசாயத் துறையிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக வியாபாரத் துறையிலும் தொழிற் துறையிலும் தேக்கம் ஏற்பட்டிருப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையில் மக்களுக்குத் தேவையான அன்றாடப் பொருள்களை கொடுப்பதற்கு அல்லது அவர்கள் பெற்றுக் கொள்ளுவதற்கு சக்தியை உருவாக்கும் வகையில் சில திட்டங்களை வகுத்திருக்கிறோம். ஒருபக்கம் நாம் பெற்றுக்கொண்டிருந்த பொருள்களின் உற்பத்தி குறைந்து விட்டது. இன்னொரு பக்கம் ஏற்கனவே நாடு அதிகமான பண வீக்கத்தில் இருக்கும்போது ஒவ்வொரு வாரமும் ஒரு கோடி ரூபாயைச் செலாவணிக்கு விட்டுக் கொண்டிருக்கிறோம். செலாவணிக்கு அதிக ரூபாய் போகும்போது அதிகமாகப் பெறுகிற வருமானம் எதற்காகச் செலவழிக்கப்படும் என்றால் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் உணவுக்காகத் தான் முதலிடம் கொடுத்துச் செலவழிப்பார்கள். உணவுப் பொருள்களின் விலை இப்போதே ஏறியிருக்கிறது. மேலும் விலை ஏறக் கூடிய நிலை உருவாகி யிருக்கிறது. இது, ஒரு பயங்கரமான நிலைமை. வறட்சி ஏற்பட்டுவிட்ட நிலையில் வறட்சிப் பணிகளை மேற்கொண்டு செய்ய வேண்டியவர்களாக இருக் கிறோம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியவர்களாக இருக் கிறோம். அவர்களுக்குப் போதிய வருமானத்தை ஏற்படுத்தித் தரவேண்டிய வர்களாக இருக்கிறோம்.

அப்படி அவர்கள் புது வருமானத்தைப் பெறக்கூடியவர்களாக இருந்தால் அவர்கள் அந்தப் பணத்தை எதற்காக செலவழிப்பார்கள் என்றால் உணவுக்காகத்தான் செலவழிப்பார்கள். அப்படி அவர்கள் உணவுக்காக மேற் கொண்டு செலவழிக்கிறபோது—ஏற்கனவே உணவுப் பொருள்களின் விலை அதிகமாகியிருக்கிறது; தட்டுப்பாடு இருக்கிறது, படியரிசி ரூபாய் 6-7 என்று விற்றுக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது—மேலும் அந்தப் பொருள்களின் விலை உயருமே தவிர குறையாது. இதைத் தான் நாம் சிந்தித்துப் பார்த்து இந்த நிலைமை ஏற்படாத வகையில் செயல்பட வேண்டுமென்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





நாம் இப்போது மத்திய அரசிடம் ரூபாய் 25 கோடி கேட்டிருக்கிறோம். அவர்களும் சில கோடி ரூபாய்களை நமக்கு கொடுத்து இருப்பதாக, கொடுப்ப தாக ஒப்புக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். நாம் ரூபாயைக் கேட்டுப் பெறுவதற்கு பதிலாக, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும். எங்களுக்கு மானியமாகத் தரும் ரூபாய்க்கு பதிலாக உணவுப்பொருள்களைக் கொடுக்கவேண்டும். அரிசி, மற்ற தானியங்கள் கொடுக்கவேண்டும். அரிசி வேறு மாநிலங்களில் இல்லாவிட்டால், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அன்று சொன்னமாதிரி தாய்லாந்து நாட்டி லிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து தரவேண்டும். நாம் கேட்டு இருக்கும் உதவித் தொகையை 50 சதவிகிதம் உணவாகவும், 50 சத விகிதம் கடனாகவும்—மத்திய அரசு கொடுத்தால்—அது இன்றைக்கு இருக்கும் பண வீக்கத்தைக் குறைக்கும் வகையில்—விலையேற்றத்தைக் குறைக்கா விட்டாலும், தடுக்கக்கூடிய வகையில்—பயன்படும், அந்த அளவுக்கு அந்த முறையில் செய்து இருக்கிறார்களா என்றால் அதை அவர்கள் செய்யவில்லை என்று நான் கூறிக்கொள்கிறேன்.

அன்றைக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் பேசியபோது சொன்னார், தாய்லாந்து நாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு, உணவுப்பொருள் களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கத்தை அனுமதி கேட்டோம். தர மறுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இதை எந்த அடிப்படையில் மறுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தாய்லாந்து நாட்டிலிருந்து நமக்கு உணவு கொடுக்கிறார்களா, அல்லது மற்ற மாநிலங்களிலிருந்து நமக்கு உணவுப்பொருள்கள் கொடுக்கிறார்களா என்பதைப் பற்றி நமக்குக் கவலை யில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயத்துறை தாக்கப்பட்டு இருக்கிறது, உணவுப்பொருள்கள் உற்பத்தி இல்லை, மக்களுக்கு உணவு இல்லா விட்டால் பட்டினிச்சாவு ஏற்படும் என்று மத்திய அரசாங்கத்தை உதவி கேட் கிறார்கள் என்றால். மத்திய அரசாங்கமும் பணம் கொடுத்து விட்டு, என் கடமை முடிந்தது என்று இருந்தால், அதையும் நாம் ஏற்றுக்கொண்டால் இன்றுள்ள பண வீக்கம் அதிகமாகி. இன்பிளேஷன் மேலும் அதிகமாகி, இன்று 6 ரூபாய் விற்கும் அரிசி நாளைக்கு 10 ரூபாய் 12, 15 ரூபாய் என்று போனால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை

திடீரென்று ரூபாய் 55 கோடி நாம் செலவழிக்கப் போகிறோம். திடீரென்று இந்த 55 கோடி ரூபாயை நாம் சர்க்குலேஷனில் விடுக்கிறோம்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 பிப்ரவரி 27

Without there being corresponding production, without there being a corresponding labour, all on a sudden you increase circulation and there is new source of income to the people. எப்படி இதை உபயோகிக்க வேண்டும்? அவர்கள் இதை வைத்து என்ன செய்வார்கள்? ஏற்கனவே உணவுப் பொருள்கள் தட்டுப்பாடாக இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக என்ன திட்டத்தை வைத்து இருக்கிறீர்கள்? இதை நீங்கள் சிந்தித்துப் பார்த்து நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காண்டிராக்ட் முறை பற்றி பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நானும் சொல்வேன், காண்டிராக்ட் முறையைக் கொஞ்சம் கண்காணித்துக் கொடுக்கவேண்டும். காண்டிராக்ட் முறையில் பல சிக்கல்கள், ஊழல்கள் நடந்துகொண்டு இருக்கின்றன. இது சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். நிவாரணப்பணிகளுக்காகச் செலவிடப்படும் பணமெல்லாம் நீங்கள் காண்டிராக்ட் மூலம் கொடுத்து விட்டால் அது பல சந்து பொந்துகளில் போய் நுழையுமே தவிர நிச்சயமாக மக்களுக்குப் போய்ச் சேராது. அப்படிச் சேருகிறபோது அந்த நிவாரணப் பணிகளால் ஏழைகள் ஏழைகளாகவும், பணக்காரர்கள் பணக்காரர்களாகவும் மாறுவார்கள். இதனால் பொருளாதார சிக்கல் மேலும் வளருமே ஒழிய பொருளாதார சிக்கல் தீராது. ஆகவே, அரசு நல்ல முறையில் திட்டமிட்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு முறையை அரசாங்கம் வகுக்க வேண்டும்.

ஒரு முறையான 'பிஸ்கல் பாலிசி' வகுக்கவேண்டும். இந்தப் பணம் எங்கெங்கே போகும் என்று தெரிந்து வைத்து, அவர்களிடமிருந்து அந்தப் பணத்தை கறக்க செயல்படவேண்டும். அதிகமாகப் பணம் வைத்துள்ளவர்கள் மீது வரி போடுங்கள். ஏன் தயக்கம்? பணக்காரர்களாக இருக்கக்கூடியவர்கள், கள்ளமார்க்கெட்காரர்கள், காண்டிராக்ட் மூலம் சமுதாயத்திற்குச் செல்ல வேண்டிய பணத்தை சேர்த்து வைத்து வாழ்பவர்கள், இவர்களிடமிருந்து அதிகமான வரி போட்டு பணத்தை வசூல் செய்யுங்கள். இந்த முறையில் ஒரு 'பிஸ்கல் பாலிசி' வகுத்தால்தான் நிச்சயமாக இந்தப் பண வீக்கத்தைத் தடுக்க முடியுமே தவிர வெறும் நிவாரணப் பணிகளுக்கு மட்டும் நீங்கள் பணத்தைச் செலவழித்தால் நிச்சயமாக நான் சொல்கிறேன், மேலும் பொருளாதாரச் சிக்கல் இதிலே ஏற்படும் என்று திட்டவட்டமாகச் சொல்கிறேன்.



1975 பிப்ரவரி 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

இன்றைக்கு ரூபாயின் மதிப்பு குறித்து நம்முடைய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு மகிழ்ச்சியான செய்தியைப் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். இதை 'தினமணி' ஏடு கூட சொல்லியிருக்கிறது, 'இதைக் கேட்டு அழுவதா இல்லை சிரிப்பதா' என்று. மத்திய அரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக ரூபாயின் மதிப்பு கணிசமாக உயர்ந்து இருக்கிறது. எவ்வளவு உயர்ந்து இருக்கிறது என்றால், சென்ற ஆண்டு 24.5 ரூபாயின் மதிப்பாக இருந்தது. இந்த ஆண்டு அது எவ்வளவு அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்றால் 25.23 என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நிதி அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைக் கேட்டுக்கொண்டு, ஏடுகளில் காட்டப்படுகிற முன்னேற்றங்களைக் கண்டு கொண்டு, இப்படி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு முன்னேற்றம், புள்ளி விவரம் மக்களின் வயிறை நிரப்ப முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். இதை மத்தியில் இருப்பவர்களும், இங்கே இருப்பவர்களும் உணர்ந்து இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த அமைச்சரவையை நோக்கி ஒரு கேள்வியாகத் தொடுக்க விரும்புகிறேன். மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டில் நிவாரணப்பணிக்காக கொடுக்கப்பட்ட மானியம் சரியாக செலவழிக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த பல்வேறு நபர்கள் மத்திய அரசாங்கத்திற்கு மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள், குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட நிகழ்ச்சி. மானியம் பெறுவதும், மானியம் கொடுப்பதும் மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி. அவர்கள் இடையே நடந்த 'டிரான்சாக்ஷன்'* இந்த டிரான்சாக்ஷனைப் பற்றி 1969-ம் ஆண்டில் நடைபெற்ற டிரான்சாக்ஷனைப் பற்றி, மாநில அரசுக்கு, இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன என்று பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து ஏதேனும் விளக்கம் கேட்டு கடிதம் வந்ததா என்பதை இந்த மன்றம் அறிந்து கொள்ள விரும்புகிறது. அப்படி பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து தகவல் கேட்டு எந்த விதமான கடிதமும், தாக்கீதும் வராமல் இருந்தால் இந்த அரசாங்கத்தோடு செய்துகொண்ட நடவடிக்கை குறித்து, ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியின் கூட்டத்தில், இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் இல்லாது இருக்கிற நேரத்தில் சில குற்றச்சாட்டுகளை பிரதம அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதற்கான விளக்கம் கேட்டு மத்திய அரசுக்கு மாநில அரசிட

மிருந்து ஏதேனும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன். இது மத்திய மாநில அரசுகளின் உறவை பாதிக்ககூடிய அளவில், இருக்கிறது. மத்திய மாநில அரசுகளின் உறவில் முடங்கி இருக்கும் சமஷ்டி, அதில் இருக்கும் ரகசியத் தத்துவம் பாதிக்கக்கூடிய நிலையில் இந்தியாவின் பிரதம அமைச்சர் ஒரு அரசியல் கட்சியின் கூட்டத்தில் தனிப்பட்ட முறையில் இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் இல்லாத நேரத்தில், இந்த அரசாங்கத்தின் முதலமைச்சருக்குத் தகவல் கொடுக்காமல் பேசியிருப்பார்களானுல், இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், ஏன் அப்படிப் பேசினீர்கள், என்ன உங்கள் விளக்கம் என்று அவர்களிடமிருந்து விளக்கம் கோரியிருக்கிறூர்களா என்பதை இந்த மன்றம் அறிந்து கொள்ள விரும்புகிறது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கின்ற பிரச்னைகள் தீரவேண்டுமானுல் நான் நிச்சயமாக நம்பி ஒன்றைச் சொல்வேன். மாநில சுயாட்சி என்று நீங்கள் சொன்னுலும் சரி, அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொன்னுலும் சரி, எங்களுக்கு வேண்டியது காரியமே தவிர பெயர் அல்ல. இன்றைக்கு சொல்கிறூர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்—காஷ்மீரத்தைப் பற்றி. காஷ்மீரத்திற்கு ஒரு விசேஷ தன்மை இருக்கிறது. அந்த விசேஷ தன்மை காரணமாக சில விசேஷ பாதுகாப்புகளையும் நாம் அவர்களுக்குத் தந்து இருக்கிறோம். மத்திய அரசாங்கம் தந்து இருக்கிறது என்று சொன்னூர்கள். காஷ்மீரம் அண்டை நாடுகளை ஒட்டியிருக்கும் ஒரு மாநிலமாகும். அண்டை நாட்டோடு ஒட்டியிருக்கும் மாநிலத்திற்கே அதிக அதிகாரத்தையும், தனித் தன்மையையும் கொடுத்தால், நாட்டுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று ஏற்றுக்கொண்டு, இன்று காஷ்மீரத்திற்கு தனித் தன்மை கொடுத்து இருக்கிறோம். காஷ்மீர் முதலமைச்சருக்கு—வசீர் ஆசாம்—என்று பெயர் கொடுத்து இருக்கிறோம். அப்படி அண்டை நாடுகளோடு ஒட்டியிருக்கும் மாநிலத்திற்கே அதிக அதிகாரங்களையும், தனித் தன்மையையும் கொடுத்து இருக்கிறபோது. இந்தியாவின் தென்கோடியிலே இருக்கும்—தென்னகத்திற்கு—தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா—போன்ற மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி என்ற பெயரால் இல்லாவிட்டாலும் அதிக அதிகாரங்களைக் கொடுத்தால் எந்த விதமான ஆபத்து வந்து விடப்போகிறது, என்று கேட்க ஆசைப்படுகிறேன். சில பேர் பேசுகிறூர்கள்—அதிக அதிகாரங்கள் கொடுத்தால் 'பிசிபோரஸ் டென்டென்சிஸ்' பிரிவினை நோக்கம் ஏற்பட்டு விடும் என்று சொல்கிறூர்கள். தென்கோடியில் இருக்கும் தமிழ்நாட்டிற்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தால் பிரிவினை வந்து விடும். ஆனுல் வடகோடியில் இருக்கும் சைனுவிற்கும், பாகிஸ்



தானுக்கும் ஒட்டியுள்ள, எல்லைப்புற மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுத்தால் அதனுல் அபாயம் இல்லை என்று சொன்னுல், அந்தப் பாயிண்டை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். காஷ்மீரத்திற்கு புதியதாக ஏதோ தனி உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லிக் கொண்டு போகிறூர்கள் . . . ஆர்டிகிள் 370 அரசியல் சட்டத்திலே 1956 ஆம் ஆண்டு முதலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இதெல்லாம் விளக்கம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஷேக் அப்துல்லா அவர்கள் இப்பொழுது இந்தியாவோடு காஷ்மீர் இணைக்கப்பட்டது இறுதியானது, உறுதியானது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறூர்கள். ஆகவே, காஷ்மீருக்கு தனியாக, புதியதாக இப்பொழுது எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து எதையாவது பற்றி சொல்லிக் தொண்டிருக்கக்கூடாது.

**திரு. ஆலடி அருணு:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லும்பொழுது தவருன தகவல்களையோ அல்லது தேவையற்ற தகவல்களையோ, உள் நோக்கத்தோடு சில தகவல்களையோ இந்த மன்றத்தில் கொண்டுவருகிறபொழுது, அதைச் சந்திப்பதற்கு நியாயமான வாய்ப்பை சபாநாயகர் அவர்கள் கொடுக்காததால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரால் நாங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்வதற்கான திர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தந்தத் தலைவர்கள் பேசுகின்ற நேரத்தில் அதை மறுத்துக்கொள்ளலாம்.

**திரு. கோவை செழியன்:** என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன வென்றுல், இந்த மன்றத்திலே உறுப்பினர்களுக்கு பாயின்ட் ஆப் ஆர்டர், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், பாயின்ட் ஆப் ஸெல்ஃப்-எக்ஸ்ப்ளனேஷன் என்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நீங்கள் அதை மறுத்துக்கொண் டிருக்கிறீர்கள். அதனுல் தான் எங்களை பொய் பேச வைக்கிறீர்கள்.

பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், பாயின்ட் ஆப் ஸெல்ஃப் எக்ஸ்ப்ளனேஷன் கொடுப்பதற்கு நீங்கள் எங்களுக்கு வாய்ப்பு தராததினால்தான் நாங்கள் தவறான வழிக்குப் போகவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், அதாவது தன்னிலை விளக்கம் கொடுப்பதற்கு அந்த மாண்புமிகு உறுப்பினர் பற்றி பேசுகின்ற உறுப்பினர் ஏதாவது குறிப்பிட்டிருந்தால், அந்த நேரத்தில் தன்னிலை விளக்கம் கொடுக்கலாம். கிளாரிபிகேஷன் கொடுப்பதற்கு உறுப்பினர்களுக்கு இடமில்லை. பேரவைத் தலைவர் விரும்பினால் தான், பேசுகின்ற உறுப்பினர் இடம் கொடுத்தால் தான் அந்த நேரத்தில் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கலாம். எந்த நேரத்திலும் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்பதற்கு உறுப்பினருக்கு உரிமை இல்லை.

**திரு. கோவை செழியன் :** நீங்கள் தான் எங்களுக்கு சான்ஸ் தரமாட்டேன் என்கிறீர்களே ?

**திரு. ஆலடி அருணா :** இதைப்பற்றி சபாநாயகர் அவர்களுக்கு ஒரு தெளிவான கருத்து இருக்கவேண்டும். ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தைப்பற்றி நண்பர் லத்தீப் அவர்கள் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். எந்தக் கட்சியைப் பற்றி அவர்கள் குறைபாடு சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ, அந்தக் கட்சியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் அதைப்பற்றி விளக்கம் சொல்ல விரும்பினால் சபாநாயகர் அவர்கள் இடம் கொடுக்கவேண்டும். அந்த நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனுக்கு நீங்கள் அனுமதி கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் அத்தகைய வாய்ப்புகளை ஆளும் கட்சியினருக்கு கொடுக்கிறீர்கள். ஆளும் கட்சியைப்பற்றி விமர்சனம் செய்கின்றபொழுது, உடனே அமைச்சர்கள் விளக்கம் தருவதற்கு வாய்ப்பு கொடுக்கிறீர்கள். ஆனால் எங்களுக்குக் கொடுப்பதில்லை. அதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்தில் எல்லோரும் ஒன்று தான். இந்த மன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் என்ற வேறுபாடு இல்லை.



**திரு. எம். ஏ. லத்தீப் :** உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் இங்கே சொல்கிறார்கள். ஏற்கனவே அரசியல் அமைப்பு விதி 370-ன் அடிப்படையில் தான் காஷ்மீருக்கு தனி அந்தஸ்து இருக்கிறது. புதியதாக ஒன்றும் கொடுக்கப்படவில்லை. இருப்பதற்குத் தான் இன்றைக்கு ஒப்புதல் தந்திருக்கிறோம், முத்தாய்ப்பு வைத்து கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஏற்கனவே இருக்கிற விதி 370-ன்படி தான் இன்றைக்கு நீட்டித் தந்திருக்கிறோம் என்று சுப்பிரமணியம் அவர்கள் சொல்வதன் வாயிலாக என்னுடைய வாதத்திற்கு அவர் ஆக்கம் தேடித் தருகிறார். ஏற்கனவே தனி அந்தஸ்து கொடுக்கப்பட்டு, 25 ஆண்டு காலமாக அந்த நிலைமை நீடித்திருக்கிறது. அதன் வாயிலாக காஷ்மீர் தனியாகப் பிரிந்து சென்றுவிட்டதா ? ஏற்கனவே இருக்கிற விதியின் பிரகாரம் தனி அந்தஸ்து கொடுக்கப்பட்டு, இன்றைக்குக் கூட ஷேக் அப்துல்லா அவர்கள், காஷ்மீர் சிங்கம் என்று ஏகபோக உரிமையைக் கொண்ட தலைவர் இந்திய அரசு சொல்வதைக் கேட்கிறேன் என்று வந்திருக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே அப்படி தனி அந்தஸ்து கொடுப்பதால் மட்டும் நாட்டுப் பிரிவினை ஏற்பட்டுவிடாது. தென் கோடியில் இருக்கிற தமிழகத்திற்கு, சாதாரணமாக முனிசிபாலிடிகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் கூட இல்லாமல் இருக்கிற மாநிலங்களுக்கு மத்திய அரசு அதிக அதிகாரங்களைக் கொடுத்து உதவ வேண்டும். தாய்லாந்திலிருந்து அரிசி வரவழைக்க வேண்டுமென்று சொன்னால்கூட, நாட்டில் வறட்சியினால் வாடிக்கொண்டிருக்கிற மக்களுக்கு நிவாரணம் தேடுவதற்கு அரிசி வரவழைக்க வேண்டுமென்றால்கூட அதற்கு மத்திய அரசு ஒப்புதல் வேண்டும். அதிகாரங்களை ஒரே இடத்தில் குவித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் என்ன பயன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இன்றைக்கு மாநிலங்களிலுள்ள இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். வறட்சிப் பணிகளை வேகமாக நிறைவேற்றுவதற்கு நிச்சயம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது). இதோ முடித்துவிடுகிறேன் இரண்டு நிமிடங்களில்.

உணவுத் துறை அமைச்சர் ஒன்றை கவனிக்கவேண்டும். இன்றைக்கு மொத்தவிலை ஹோல்ஸேல் பிரைஸ் குறைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், துவரம்பருப்பு ரூபாய் 300-லிருந்து ரூபாய் 175 ஆகக் குறைந்திருக்கிறது. ஆனால் ரூபாய் 300-ஆக இருந்த பொழுது ரீடைல் பிரைஸ் என்னவாக இருந்ததோ அதே தான் இன்றைக்கும் இருக்கிறது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 பிப்ரவரி 27

துவரம்பருப்பு ரூபாய் 300-லிருந்து ரூபாய் 175-க்கு மொத்த விலை குறைந்திருந்தும் கூட, 2, 3 மாதங்கள் ஆகிய பிறகும் ரிடைல் பிரைஸ் அப்படியேதான் இருக்கிறது. சில்லரை விலை பழைய நிலையிலே தான் இருக்கிறது. இந்த நிலைமையை எப்படியும் கட்டுப்படுத்த வேண்டும். இப்படித்தான் எல்லாப் பொருள்களின் நிலைமையும் இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பாக இந்து பத்திரிகையில் ஒரு ஆய்வு உரை வந்திருந்தது. அதில் கூட ஹோல்ஸேல் பிரைஸ் குறைந்திருந்தும் ரிடைல் பிரைஸ் அப்படியே இருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தது. இதற்கு என்ன காரணம்? பங்கீட்டு முறைகளை, பிரைஸ் லைன், விலையின் நிலைகள் இருக்கிறதே இவைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். செப்பனிடவேண்டும், திருத்தி அமைக்க வேண்டும். அந்த வகையில் பங்கீட்டு முறைகள் இருக்கவேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்கே கவனப்படுத்தவிரும்புகிறேன். வறட்சி நிவாரணங்களுக்கு செலவழிக்கப்படுகின்ற பணங்களை நிச்சயம் ஒன்றியங்களுக்குக் கொடுக்கக்கூடாது. இது மிக முக்கியம். ஒன்றியங்களின் வாயிலாக நீங்கள் செலவழிப்பது என்பது மிகப் பெரிய அநியாயம். நிவாரண வேலைகளின் நிலைமைகளை உணர வேண்டும். ஒன்றியங்களில் பல காரியங்கள் நடைபெறுகின்றன. நிவாரண பணிகளுக்காக நீங்கள் கொடுக்கின்ற பணம் எல்லாம் நிச்சயம் நேரடியான வழிகளில் செலவழிக்கப்படவேண்டும். இதிலே இரண்டு கருத்துக்கள் முக்கியம். சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கே என்ன செலவழிக்கிறார்கள் என்பது கூடத் தெரியவில்லை. அவர்களை ஒன்றும் கேட்காமலேயே அவர்களுடைய சார்பு இல்லாமலேயே காரியங்கள் நடைபெறுகின்றன.

வறட்சிப் பணிகளுக்காக பணம் செலவழிப்பதைப் பொறுத்தவரையில் முனலி அவர்கள் சொன்னது போல டி.டி.ஸி-யை டிரௌட் ரிலீஃப் கமிட்டியாக மாற்றவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களையும் அப்பேர்ப்பட்ட காரியங்களில் இணைத்து, வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறவேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.



1975 பிப்ரவரி 27] [திரு. நா. வெ. குருசாமி]

இன்று தமிழகத்தில் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக நாட்டு மக்கள் தினம் தினம் உணவு இல்லை என்று செத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே போல் குடி நீர் பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற நிலைமைகளினாலும் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசி விஷம் போல் உயர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், கவர்னர் அவர்களின் உரையில் விலைவாசி உயர்ந்ததைப்பற்றி ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை. ஆகவே இன்று நாட்டு மக்களுடைய எண்ணங்களையெல்லாம் கவர்னர் அவர்கள் உணர்ந்ததாக அவர்களுடைய உரையில் ஒன்றும் இதைப்பற்றி குறிப்பிடாதது குறித்து நாம் மிகவும் வேதனைப்படவேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக, கடந்த 4, 5 நாட்களாக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம். அடுத்த 9, 10 மாத காலங்களில் வறட்சித் துயர் தணிப்பிற்காக ரூ. 55 கோடி கிராமக் குடி நீர் வழங்கும் திட்டம், சிறிய, நடுத்தர, பெரிய பாசன திட்டம், புதிய சாலைத் திட்டம் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருக்கிறது. நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் குறிப்பிட்டதுபோல மாவட்டம் தோறும் நீர்ப்பாசன கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அந்த கருத்தரங்குகளில் ஒரு நாள் முழுவதும் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்து, பெரிய திட்டங்களைப் பற்றியெல்லாம் பேசினார்கள். வறட்சி நிலைமை ஏற்பட்ட பிறகும் கூட அதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுத்ததாகத் தெரியவில்லை. அப்பொழுது குறிப்பாக பேசப்பட்ட குளங்கள் பிரச்னை, கண்மாய்கள் பிரச்னை ஆகியவைகளை வறட்சிப் பணிகளின் கீழ் சேர்த்து, உடனுக்குடன் அப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் செயல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் வேலையில்லாமல் இருக்கும் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும். அதன் மூலம் அவர்களின் கஷ்டங்கள் ஓரளவேனும் தீரும் என்று நான் எண்ணுகிறேன்.

(முற்பகல் 10.00)

அப்படி இன்று வேலைவாய்ப்பு கொடுக்கும்போது, இன்று படி அரிசி 8 ரூபாய் விற்கிறது. ஆனால் கூலி 3 அல்லது 4 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அந்தக் கூலியைக் கொண்டு ஒரு படி அரிசி வாங்கமுடியாத அவல நிலை இருக்கிறது. ஆகவே, கூலி வேலை செய்கிறவர்களுக்கு நியாய விலைகளில் ஓரளவாவது உணவு தானியங்களைக் கொடுத்தால்தான் அவர்கள் நிம்மதியாக வாழ முடியும். குறிப்பாக, இப்பேர்பட்ட கண்மாய் திட்டங்களை நிறைவேற்றி

னால், எங்கள் பகுதியில் கண்மாய்த் திட்டங்கள் அரசின் ஆய்விலும், பொறியாளர்கள் பரிசிலனையிலும் இருக்கின்றன; அவைகளை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலில், தெப்பம்பட்டி, லெட்சுமிபுரம், பாலக் கோம்பை கண்மாய்த் திட்டங்களை நிறைவேற்றினால் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கும்; வேலை வாய்ப்பும் இருக்கும். ஆகவே, இந்தத் திட்டங்களை உடனடியாக வறட்சி நிவாரணப் பணியில் சேர்த்து, வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் 65 சத வீத மக்கள் பயனடைகிறார்கள் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 35 சத விகித மக்களுக்கு அண்டை மாநிலங்களிலிருந்தாவது குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தவர்கள் கருவிகளை கொண்டு வந்து 'போர்' குழாய்கள் மூலமும் இங்கு எல்லாக் கிராமங்களிலும் கிணறுகளை வெட்டினால் ஓரளவு தண்ணீர்ப் பிரச்சினை தீரும் என்று நினைக்கிறேன். அதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்குள்ள கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த குடிதண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாக திர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியில் குன்னூரிலிருந்து குடிதண்ணீர் கிடைக்கும் திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதை இப்போதே மேற்கொண்டால்தான் பயன்படுவதாக இருக்கும். அதன் மூலம் மக்கள் குடிதண்ணீர் பிரச்சனையிலிருந்து விடுபட முடியும்.

இன்று விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எல். எம். பாங்க் மூலம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். 100 பேர் மனு செய்தால் அதில் 3 பேர்களுக்குத்தான் கடன் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் இரண்டு கிணறுகளுக்குள்ள இடைவெளி நஞ்சைத் தோட்டமாக இருந்தால் 325 அடி, புஞ்சைத் தோட்டமாக இருந்தால் 585 அடி தூரம் இருக்க வேண்டுமென்று வரை முறை வைத்திருக்கிறார்கள். இந்த முறையில் பார்த்தால் எந்தக் கிராமத்திலும் விவசாயி கடன் வாங்க முடியாது. ஆகவே, இந்தத் தூரத்தை குறைத்து, எல்லாக் கிணறுகளுக்கும் கடன் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இதுவரையில் 30,000 பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும், மேலும் 60,000 பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது பெயரளவிலோ அல்லது இந்த சட்டமன்றத்தின் அளவிலோ தான் இருக்கிறதே தவிர, மின்சார இணைப்பு கோரி விவசாயிகள் சென்றால் கம்பி இல்லை, ஒயர் இல்லை, கம்பம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மின்சார இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சரவர்கள் உடனடியாக மின்சார இணைப்பு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லெவி கொள்முதல் முறையில் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. அதை அரசாங்கம் அறிந்து, தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால் பணக்காரர்களுக்கு ஒருவிதமாகவும், ஏழைகளுக்கு ஒருவிதமாகவும் நடக்கிறது. அப்படி இல்லாமல் எல்லோருக்கும் ஒரே மாதிரியான லெவி கொள்முதல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கார்டுகள் மூலம் பல இடங்களில் உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. நகரப்புறங்களில் 1,500 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை திறக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் ஒரு கூட்டுறவுச் சங்கம் மூலமாக கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது 10 மைல் தூரத்திலிருக்கிறவர்கள்கூட அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, 500 மக்கள் கொண்ட கிராமமாக இருந்தாலும் கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை திறந்து கஷ்டமில்லாமல் எல்லா மக்களுக்கும் உணவு தானியம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசாங்கத் துறையைச் சேர்ந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன்களில், குறிப்பாக சென்னையிலிருக்கும் கோடவுன்களில் மைதா மூட்டைகள் நிறைய இருக்கின்றன. அவைகளில் புழுவும் வண்டும் அதிகமாக இருக்கின்றன. நேற்று கூட இதைப்பற்றி உணவு அமைச்சரிடம் கூறியிருக்கிறேன். உடனடியாக அதைக் கண்காணிக்க வேண்டுமென்றும், அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1975 பிப்ரவரி 27

என். ஜி. ஓக்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஓரிருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கைகளை கைவிட்டு, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. வி. பழனிவேலு**: பேரன்புமிக்க அவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நான் பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்து சிறிது நேரம் எனக்கு கூட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும், தீர்மானத்தின்மீது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இன்று ஆளுநர் உரையில் பெரும்பாலும் வறட்சியைப் பற்றித்தான் குறிப் பிட்டிருக்கிறார்கள். இன்று நாட்டிலே வறட்சி, கொடிய பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக அவர்கள் அருமையான திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்துடன் என்னுடைய சில கருத்துக் களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிலையைப் போக்குவதற்கு நாம் பெரும்பாலும் வெளி மாநிலத்திலிருந்து வருகிற தண்ணீரைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். மேட்டூர் அணைக்கு வெளிமாநிலத்திலிருந்து தண்ணீர் வரவேண்டியிருக்கிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்தை நம்பியிருக்கிற தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு தண்ணீர் பாய்ந்து நம்முடைய தமிழ்நாடு வளம் கொழிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அண்டை மாநிலத்தில் அடிக்கடி ஏற்படும் தண்ணீர் தகராறி னால் நமக்கு பாதகம் ஏற்படுகிறது. அண்மையில் ஏற்பட்டிருக்கிற இந்த கொடிய பஞ்சத்திற்கு, வறட்சிக்கு காரணம் அண்டை மாநிலத்திலிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காததாலும், 100 ஆண்டு காலம் இல்லாத அளவுக்கு மழை குறைவாக பொய்த்ததும்தான். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தக் கொடிய வறட்சியை நாம் சந்திக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். ஆனால் இந்த கொடிய கடுமையான வறட்சி அடிக்கடி நம்முடைய மாநிலத்தில் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறதே தவிர நிரந்தர மான வளம் இல்லை. இருந்தபோதிலும் நிரந்தரமாக இந்த வறட்சியைப் போக்க நாம் சரியான திட்டத்தைப் போட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். அதற்காகத்தான் மத்திய அரசும் மாநில அரசும் 50 கோடி ரூபாய் ஒதுக்கி அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கவர்னர் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள்.



1975 பிப்ரவரி 27] [திரு. வி. பழனிவேலு]

நம்முடைய மாநிலத்தில் எல்லா இடங்களிலும் தண்ணீர் பாய்வதற்கான வாய்ப்புகள் குறைவாகத்தான் இருக்கும். காவிரி ஆற்றில் இனி தண்ணீர் குறைவாகத்தான் வரும் என்று தெரிகிறது. ஒன்றிரண்டு மாதங்கள் மழை பெய்வதால் தண்ணீர் கிடைக்கும். மற்றக் காலங்களில் தண்ணீர் கிடைப்ப தற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. மழை பெய்தால்தான் தண்ணீர் கிடைக்கும் என்றிருக்கக்கூடிய இடங்களில், இப்போது கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் தண்ணீர் பஞ்சம் கடுமையாக இருக்கிறது. இதைப் போலவே ஒவ்வொரு ஆண்டும் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மழை பெய்யக்கூடிய காலங்களில் தண்ணீர் தேங்குவதற்கு ஏற்ற வகையில் சிறு சிறு குட்டைகளையும் ஏரிகளையும் கட்டி, தண்ணீரைத் தேக்குவதன் மூலம் வறட்சி காலத்திலும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய முடியும். அப்படிச் செய்தால் எல்லா இடங்களிலும் நல்ல நிலத்தடி நீர் நிலை கிடைக்கும். கிணறுகளிலே நீர் நிரம்ப இருக்கும். வறட்சி காலங்களிலும் எல்லாக் கிராமங்களிலும் பயிர் செய்ய முடியும். இன்று கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் 100 அடி, 120 அடி ஆழம் கிணறுகளை வெட்டி தண்ணீரை எடுத்து நல்ல முறையில் விவசாயம் செய்யும் முறை இருக்கிறது. சிறு சிறு குட்டைகளையும், ஏரிகளையும் வெட்டி, தண்ணீரைத் தேக்கி வைத்தால் எப்போதும் கிணறுகளில் தாராளமாகத் தண்ணீர் கிடைக்கும்.

*குறிப்பாக இராசிபுரம் பகுதியில் இரண்டாண்டுகளுக்கு முன்னால் இரண்டு சிறிய குட்டைகள் உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு அந்த பகுதியில் இரண்டாண்டு காலமாக நல்ல செல்வம் கொழிக்கக்கூடிய நிலையைப் பார்க்கி றோம். 40 அடி, 50 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கின்ற பாங்கினைப் பார்க் கிறோம். இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சிறு சிறு குட்டைகளையும் ஏரிகளையும் வெட்டும்போது, அதிலிருந்து தண்ணீர் பாசனத் திற்கு விட வகை செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் கிணறுகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலைமை உருவாகலாம். கிணறுகளில் எப்போதும் தண்ணீர் இருந்தால் 8 போகம் நல்லமுறையில் பயிர் செய்ய முடியும். அதற்கு ஏற்ற முறையில் குட்டைகளை அமைத்து, கிணறுகளில் தண்ணீர் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

இப்படி பஞ்ச நிவாரணத்திற்காகச் செலவழிக்கப்படுகிற பணத்தைக் கொண்டு ஏரிகளையும், குளம் குட்டைகளையும் நிரந்தரமான முறையில் ஆழப் படுத்தித் தண்ணீர் தேங்க ஏற்பாடு செய்தால் கிணறுகளில் எல்லாம் தண்ணீர் எப்போதும் கிடைத்துக்கொண்டிருக்கும். பஞ்சத்தை நிரந்தரமாக போக்க

இன்றைக்கு தஞ்சை, திருச்சி மாவட்டங்களை எடுத்துக்கொண்டால் மேட்டூரில் இருந்து வருகிற தண்ணீரைக் கொண்டு, காலால் தள்ளி விட்டு வயலில் தண்ணீரைப் பாய்ச்சி ஒரு போகம், இருபோகம் சாகுபடி செய்து விட்டு கால்வாயில் தண்ணீர் இல்லாத காலங்களில் தண்ணீர் இல்லை என்று நிலங்களை தரிசாகப் போட்டு விடுகிறார்கள். அப்படியின்றி அந்தந்த மாவட்டங்களில் 5 ஏக்கரா, 10 ஏக்கராவுக்கு ஒரு கிணற்றை எடுத்தால்—நிலத்தடி நீரைக்கொண்டே வருடம் முழுவதும் அந்தப் பிரதேசங்களில் சாகுபடியைச் செய்ய முடியும். என்றைக்கும் இது போன்ற வறட்சி ஏற்படாத நிலைமையை உண்டாக்க முடியும். இன்றும் அந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு கிணற்றைக்கொண்டு தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்கிற பழக்கம் வரவில்லை. அந்த மாவட்டங்களில் நிலத்தடி நீரைக்கொண்டு சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையில் ஏறக்குறைய அங்குள்ள 28 லட்சம் ஏக்கரா நஞ்சை நிலங்களில் இது போன்று விவசாயம் செய்கிற நிலையை அடைந்தாலேயே நம்முடைய மாநிலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட வழியில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பழைய ஏரிகளை மராமத்து செய்து, மதகுகளை எல்லாம் நன்றாக அடைத்து ஏரித் தண்ணீர் வெளியே போகாது மதகுகளை நன்றாக அடைத்து வைத்தாலேயே அந்தந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் நிறையத் தண்ணீர் எப்போதும் கிடைத்துக்கொண்டிருக்கும். இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாய காரியங்களுக்கு மின்சக்தி விநியோகம் செய்வதை முதலிடமாக முக்கியத்துவம் கொடுத்து, கிணறுகளில் வைக்கப்படுகிற பம்பு செட்டுகளுக்கு உடனடியாக மின்சக்தி சப்ளை செய்யக் கொடுத்தால் திருப்தியாக சாகுபடி செய்வதற்கு நல்ல வழிவகைகள் ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, எனக்கு பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தின்பேரில் நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். அந்த நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினரைக்கூட இங்கே காணோம்—இது சரியல்ல என்று கருதுகிறேன். தீர்மானத்தை முன்மொழிந்தவர் விவாதம் எந்த முறையில்



செல்கிறது என்பதை இங்கிருந்து கவனிப்பதுதான் முறையேதவிர தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டு சபையைவிட்டே போய்விடுவது என்பது சரியான மரபு அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையில் உள்ள இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் நான் ஏற்றுக்கொள்ள முடியும். சிலசமயத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாவற்றையுமே எதிர்க்கிறார்கள் என்கிற குறைபாடு சொல்லப்படுகிறது. அப்படியின்றி நான் அவரது உரையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு விஷயங்களில் ஒன்று—சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் Metropolitan Development Fund-Madras -ன்கீழ் -ஐ—விரிவுபடுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கக் கூடிய விஷயம். இதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்ய நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று சொல்லியிருப்பது. இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது கவர்னர் உரையில் இருக்கிறதா என்று பார்த்தால் எதையும் காணோம்.

வறட்சியான ஒரு பிரச்சினையிருக்கிறதே—அது அரசாங்கத்தின் கொள்கைகளை ஒட்டிச் செல்லக்கூடிய பிரச்சினையாக இல்லை. அவர் தம் உரையில் என்னென்ன விஷயங்களைச் சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதைத்தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் அவர் எதையெல்லாம் சொல்லவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம்.

அந்தமாதிரி வருகிறபோது முதலாவதாக இன்றைக்குக் காலையில் நமது மேலவை உறுப்பினர் ஒருவரை கொலை செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது ஒரு விஷயத்தைச் சொன்னேன். நேற்று பாரதப் பிரதமர் கூட—எதிர்க்கட்சிகாரர்களோ, மற்றவர்களோ ஆட்சியில் உள்ளவர்களது கருத்துக்கு மாறாகச் சொன்னால்—கருதினால் அவர்களை அழிக்க முற்படுவது—நாங்கள் பாலிடிக்ஸ் ஆப் மர்டர்—என்று சொல்வோம். பாரதப் பிரதமர் அவர்கள் பாலிடிக்ஸ் ஆப் டெஸ்ட்ரக்ஷன் என்பதாக எதிர்க்கட்சிக்காரர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று முற்படுகிற தன்மைக்கு அரசியலில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று எல். என். மிஸ்ரா சம்பவத்தை நினைந்து சொன்னார்கள். நேற்று திரு. வெங்கசாமியைப் பொறுத்தவரையில் நான் சொன்னேன்.

இன்று காலை ஒரு வருந்தத்தக்க செய்தி வந்தது. மலேயாவில் பிறந்து—மலேய அரசாங்கத்தால் தண்டனை விதிக்கப்பட்டு—அதில் இருந்து தப்பி நம் நாட்டிற்கு வந்து சேர்ந்து—இந்திய மண்ணில் சுதந்திர நாட்டில் இருக்கும் போது அவரது சொந்த கிராமம் வாணியம்பாடியிலேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்—அதற்காக நான் அதை கட்சிப் பிரச்சினையாக்க விரும்பவில்லை. முரசொலிப் பத்திரிகையில் கூடப் பார்த்தேன். சமீபத்தில் முதலமைச்சர் நிதியில் இருந்து அவருக்கு மூவாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது என்று, இந்தச் சம்பவம் குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முதலமைச்சரே சொன்னதாகவும் பார்த்தேன். ஆனால் போலீசாரைப் பொறுத்தவரையில் திரு. வெங்கா கேசாக இருந்தாலும், மலேயா சாம்பசிவம் கேசாக இருந்தாலும் போலீசார் பாராமுகமாகத்தான் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதைக் கொஞ்சம் டோன் அப் பண்ண வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் சம்பந்தமாக பல ரிப்போர்டுகள் வந்திருக்கின்றன.

29—1—1975-இல் முதலமைச்சர் உடுமலைப்பேட்டை கணியூருக்குச் சென்றபோது பலர் கைது செய்யப்பட்டார்கள். பலர் துன்புறுத்தப்பட்டார்கள். அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் அவர் பெயரே முட்டியடி முருகன்—திரும்பவும் பல பேர்களைக் கைது செய்து இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் யாரிடமும் புகார் செய்யக் கூடாது என்று கண்டபடியூரக பேசி மிரட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட அதிகாரிகளைக் கண்காணிக்க வேண்டும். அதே மாதிரியாகப் பார்த்தால் வேளாங்கூர் கிராமப் பக்கத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. நல்லவேளையாக யாரும் உயிரிழக்கவில்லை. கையில் ரிவால்வரை வைத்துக்கொண்டு போலீஸ் அதிகாரி தம் இஷ்டத்திற்குச் சுட்டிருக்கிறார்.

Luckily no one was killed. There were some injuries.

அவர் அங்கே இருந்துகொண்டுதான் இருக்கிறார். இந்தமாதிரி விஷயங்களை எல்லாம் போலீஸ் மானியத்தின் மீது பேசவேண்டுமென்றாலும்—என்னைப் பொறுத்தவரையில் போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல உணவுப் பிரச்சினைக்கு வந்தால்—இதைப்பற்றிப் பேச வேண்டாமென்றே நினைத்தேன். ஆயினும் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இங்கு கடுமையாக விவாதிக்கப்பட்ட விஷயம் தாண்டவராயன் விஷயம்—தொடர்ந்த கதை முடிவதாக இல்லை—அது முடியாத



ஒரு கதையாக இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி விசாரிக்கிறபோது சமீபத்தில் 3 ஆயிரம் டன் ஹரியானாவுக்குப் போகக்கூடிய அரிசி கண்டுபிடிக்கப்பட்டு—அது ஜி. எல். நாராயணன் என்ற பெயரில் அனுப்பப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு—விஜிலன்ஸ் செல் மூலமாக ஒரு கோடிக்கு இதுபோன்று அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்று எஸ்டிமேட் கமிட்டிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. லேட் சிவ ஓம் பிரகாஷ் கூட்டு—இந்தக் கொள்ளையைக் கண்டுபிடிக்கக்கூடிய நேரத்தில்தான் தாண்டவராயன் கேஸ் வந்தது. இன்றைக்கும்கூட அரிசி கடத்தப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. அரசாங்கச் சார்பில் 84 லட்சம் பெறுமான அரிசிதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. எஸ்டிமேட் கமிட்டி 1972 நவம்பர் மாதம் 6-ஆம் தேதி ஒரு கோடி என்று குறிப்பிட்டுச் சொல்லி—அதை 84 லட்சம் என்ற அளவுக்கு ஏற்றுக்கொண்டு இதைக்கூட எப்படியாவது ரைட் ஆப் பண்ண ஏற்பாடு செய்யவேண்டும் என்கிற முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டால் இது மிகமிக வருந்தக்கூடிய விஷயம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதை ரைட் ஆஃப் பண்ண வேண்டுமென்று புரியவில்லை. அதைச் சொல்ல வேண்டும்.

**Thiru K. T. K. Tangamani :** I should not reveal what happened in the Public Accounts Committee.

எனக்குக் கிடைத்த விவரத்தை வைத்துக்கொண்டு—இந்தக் குறிப்பிட்ட டிரான்சாக்ஷனிலே ஏற்பட்ட ரூ. 84 இலட்சம் நஷ்டத்தை ரைட் ஆஃப் செய்ய வேண்டுமென்று வந்ததாகச் சொன்னார்கள்—சொன்னேன்.

I am strictly within my rights. There is an attempt to write off Rs. 84 lakhs.

அது உண்மையென்று சொன்னால் ரொம்ப வருந்தவேண்டிய விஷயம். இல்லையென்று சொன்னால் அது ரொம்பப் பாராட்டக்கூடிய விஷயம்.

அடுத்தாற்போல், இந்த அரசு செய்யத் தவறியது என்பதற்காகப் பல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். என்.ஜி.ஓ.க்கள் வேலை நிறுத்தம்—என்.ஜி.ஓ.க்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை. மத்திய சர்க்கார் கொடுக்கின்ற அளவு பஞ்சப்படியைக் கொடுக்க வேண்டுமென்று ரூ. 108 வரை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதிலே நியாயம் இருக்கிறது. கொடுக்க முடியவில்லையென்று அரசாங்கம் சொல்லலாம். ஆனால், அதற்காக அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபொழுது, இங்கு அரசு நடந்துகொண்ட முறை

சரியல்ல. உடனடியாக சினிமாப் படம் எடுத்து அதைக்கொண்டு வந்து ஆஃபீஸர்களுக்கு முன்னாலே போட்டுக் காண்பித்து, யார் யார் உங்கள் இலாகாவிலே வேலை செய்கிறார்கள் என்று பார்த்து, பழி வாங்குகிற போக்கு இட்லர் காலத்திலேகூட ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அது ரொம்ப ரொம்பத் தப்பானது. இப்படி பழி வாங்கக் கூடிய முறையிலே—சினிமாப் படம் எடுத்தது, மக்களுக்குப் போட்டுக் காட்டுவதற்காக அல்ல—ஆஃபீஸர்களுக்கு போட்டுக் காட்ட எடுத்திருக்கிறார்கள். அதில் ஏமார்ந்தவர்கள் யார் என்று சொன்னால் டெம்பரரியாக இருக்கிறவர்கள்தான். டெம்பரரி தொழிலாளர்களைக் கட்டாயமாக, அவர்கள் குறிப்பிட்ட காலம் வேலை செய்திருப்பார்களானால், நிரந்தரமாக்க வேண்டுமென்று இயக்கம் நடத்தி, பல டிரிபியூனல்களிலே நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், இங்கு இந்த மாதிரி காரியம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் கல்வி இலாகா, அதிகமாகச் செலவழிக்கிற இலாகா. அந்த இலாகா இன்னும் கண்காணிப்பாக இருக்க வேண்டும். நான் ஒவ்வொரு முறையும் கல்வி இலாகாவைப்பற்றிச் சொல்கிறேன். இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே பாருங்கள். மத்தியக் கல்வி அமைச்சர் நூருல் உசேன், யூ.ஜி.சி. சம்பள விகிதத்தை எல்லாப் போராசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து எல்லா மாநிலங்களையும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று அவர் பேசியிருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இந்த மாதிரி கொடுக்கிற மாநிலம் உத்தரப் பிரதேசம். அதைக் கொள்கை ரீதியாக மகாராஷ்டிராவும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கேரளாவும் அதனைச் செய்யத் தயாராக இருக்கிறது. இப்பொழுது அந்தப் போராசிரியர்கள் பெரிய ஊர்வலத்தை நடத்தி, நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று சொன்னால், அதிலே ரொம்ப நியாயமிருக்கிறது. அதை உடனடியாகச் செய்வதற்கு இங்கே வாக்குறுதி கொடுக்க வேண்டும். அதாவது யூ.ஜி.சி. ஸ்கேல்லை இம்ப்ளிமெண்ட் செய்ய வேண்டும்.

அதற்கடுத்தாற்போல், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. தனியார் கல்லூரி போராசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தனியார் கல்லூரிகளில் ஒரு வருஷம் வேலை செய்த பிறகு விடுமுறை முடிந்து கல்லூரி மீண்டும் திறக்கும்போது, யார் தனியாரோ அவரிடத்திலே போய், கையை, காலைப் பிடித்து, எப்படியாவது வேலை கொடுங்கள் என்று கேட்கக் கூடிய அர்த்தமாதிரியான போக்கு இருக்கிறது. ஆகவே, வேலை உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.



அதேமாதிரி இன்றைக்கு சர்க்கார் புத்தகங்களை வெளியிடுகிறது. மாண்புமிகு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் அதை எடுத்துச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சர்க்கார் என்ன செய்கிறது? நேரடியாக 500 வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே கொடுங்களேன். 15%—மற்ற மாநிலங்களிலே கொடுக்கிற மாதிரி—அவர்களுக்குக் கமிஷன் கொடுங்களேன். அதற்குப் பதிலாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஆள் போட்டிருக்கிறார்கள் ஏஜென்ட் என்று. அவரிடத்திலே ரூ. 1 இலட்சம் அட்வான்ஸ் வாங்கினார்கள். அவருக்கு ரூ. 3 இலட்சம் கடன் கொடுக்க வேண்டிய நிலையிருக்கிறது. அவருக்கு 10% கமிஷன். அவர் என்ன செய்கிறார்? இந்தப் புத்தக வியாபாரிகளிடம் கொடுத்து, கிழிந்து போன புத்தகங்களாக, எதுவாக இருந்தாலும் வாங்கமாட்டேன் என்று சொல்கிறார். இந்த நடுவர்களை, இருக்கிற இடைத்தரகர்களை ஒழித்து, மற்ற மாநிலங்களிலே இருக்கிற மாதிரி செய்ய வேண்டும். கல்வி இலாகா இந்த அளவுக்காவது அதைக் கவனிக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்தாற்போல், தொழிலாளர் பற்றியது. தொழிலாளர் அமைச்சர் நல்லமுறையிலே செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இப்பொழுது என்ன ஏற்பட்டது? சுருட்டுத் தொழிலாளிகளுக்கும் பீடித் தொழிலாளிகளுக்கும் பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தினார்கள். அது செல்லும் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு சொன்ன பிறகு என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், கடந்த மூன்று மாத காலமாக திருச்சியிலே இருக்கக்கூடிய 1,500 தொழிலாளிகளுக்கு வேலை இடையாது, அதன் முதலாளிகள் குளோஷர் என்று போட்டுவிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நாகப்பட்டினம் தாலுகாவில் உள்ள பீடி முதலாளிகள் இந்தச் சட்டத்தைப் பின் பற்றாமல் குளோஷர் என்று மூடிவிட்டார்கள். அந்த முதலாளிகள் முதலமைச்சருக்கு எழுதியிருக்கிறார்களாம், அரசாங்கம் தொந்தரவு கொடுக்கிறது என்று. சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்று சொன்னால், பாக்டரியை மூடிவிட்டு அதே டிரேட் மார்க்கிலே வேறு லைசென்ஸ் வாங்கி வைத்துத் தொழிலை நடத்துகிறார்கள். 1,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு கொடுத்த பிறகு அதை நிராகரிக்க வேண்டுமென்று இவ்வாறு செய்கிறார்கள். சில விஷயங்களிலே Government will have to be form அதையாவது செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

டிரான்ஸ்போர்ட் அமைச்சருக்கு ஒரு சின்ன விஷயம். அநேகமாக பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் சர்க்கார் ஊழியர்கள் என்று சொல்கிறார்கள். சர்க்கார் ஊழியர்களாக இருந்தும், இப்பொழுது சர்க்கார் கொடுத்த பஞ்சப்படி ரூ. 10, டெப்புடேஷனிலே வந்த ஊழியர்களுக்குக் கிடையாது. இது என்ன விசித்திரமான நிலைமையோ தெரியவில்லை. அன்றைக்கு அவர்கள் பல்லவனுக்குப் போகும்போது என்ன சொல்லப்பட்டது? ஓரளவுக்கு, அந்தப் பழைய வசதிகள் பூராவும் கிடைக்கும் அவர்களுக்கு என்று சொல்லப்பட்டது. நான் திருத்தமே கொடுத்திருக்கிறேன், பல கார்ப்பரேஷன்களிலே சம்பளப் பாகுபாடு இருக்கிறது என்று. இன்றைக்குப் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனிலே ஒரே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களிடத்திலே பாகுபாடு இருக்கிறது.

ஏற்கனவே ஜாதி அதிகமாக இருக்கிறது. இப்பொழுது போக்குவரத்துத் துறையில் புதிய ஜாதி உற்பத்தியாகிறது. அது என்ன தெரியுமா? ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் இருக்கிற பகுதிக்கு முன்னாலே 10 நிமிஷம், எழிலகம் முன்னால் 10 நிமிஷம் என்று அங்கு மட்டும் பஸ்களை நிறுத்துகிறார்கள். இந்தமாதிரி புது ஜாதியை ஏற்படுத்த வேண்டாம். நாங்களெல்லாம் பஸ்ஸிலேதான் போகிறோம். எல்லோரும் ஒன்றாகப் போகட்டுமே.

இன்னொன்று, முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்—வெளியிலே சொன்னது. அதற்கு விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார் எங்களுடைய கட்சி உறுப்பினர் வடிவேல் அவர்கள். லெவி கொடுக்க வேண்டாம் என்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது, என்று சொல்லப்பட்டது. அதற்கு தமிழ்நாடு விவசாயச் சங்கச் செயலாளர் ஆதிமூலம் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள்.

சிதம்பரம் தாலுகா, புவனகிரியைச் சேர்ந்த பெருமாத்தூர், கம்யூனிஸ்டுகள் எஸ். வீரப்பன். ஜி. இராதாகிருஷ்ணன் மற்றும் சிலர் லெவி 500 கலம் சம்பா முதல் போகத்தில் கிரப்பாளையம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் ஏஜண்ட் டி. எம். டி. மகாலிங்கம் செட்டியார், மில்லில் 1-1-1975-ல் கொடுத்தார்கள். லெவி போட்டதற்கு முன்னாலே கொடுத்திருக்கிறார்கள். 7-ந் தேதி, அதற்குப் பிறகு போட்டவர்களுக்கு ரூ.10—5 ஆக, ரூ. 15 போனஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்குப் போனஸ் கிடையாது. ஏன்? அவர்கள் லெவி கேட்காமலே கொடுத்துவிட்டார்கள் என்பதால் அவர்களுக்குக் கிடையாது. இதில் இரண்டு விஷயம். ஒன்று, எங்கள் கட்சிக்காரர்களுக்குக் கொஞ்சம் நிலமிருக்கும். அவர்கள் லெவிக்கு முன்னாலே கொடுத்து விட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் போனஸ் கொடுக்கவில்லையென்பதையும் நான் இந்தச் சமயத்திலே குறிப்பிட்டுக் கூறிக்கொள்ளப்படுகிறேன்.



இன்னும் ஒரு விஷயம் என்னவென்றால், இந்தச் சர்க்கார் எந்த அளவுக்கு இருக்கிறதென்றால் There is no rationale behind this allocation of portfolios உதாரணம் கேளுங்கள், அனிமல் ஹஸ்பெண்டரி முதலிலே ஹெல்த் மினிஸ்ட்ரியிலே இருந்தது. Then it was shifted to Agriculture Minister. Now it is shifted to Minister for Commercial Taxes. அதற்கடுத்தாற்போல் பக்கத்திலே இருக்கிற மினிஸ்டருக்குப் போகும் போல் இருக்கிறது. இந்த மாதிரி நிலைமைகளை உண்டாக்கக் கூடாது. ஏதாவது குறிப்பிட்ட அதிகாரியின் கீழே, குறிப்பிட்ட அமைச்சரின் கீழே இருந்தால்தான் விரிவடையுமே தவிர, மாற்றிக்கொண்டிருந்தால் எப்படி? மற்றவைகளுக்கும் உதாரணம் சொல்ல முடியும்.

இன்னொரு முக்கியமான விஷயம். சில அரசியல் பிரச்னைகளை இங்கே எழுப்பினார்கள். நான் அந்த மாதிரி அரசியல் பிரச்னைகளை எழுப்ப வேண்டாம் என்று நினைக்கிறேன். எங்களோடு இருந்தார், இப்பொழுது அவர் மாஜி, அவர் எழுப்புகிறார். எல்லோரும் கைவிட்டு விட்டார்கள் அட்டானமியை. அட்டானமி இல்லாமல் என்ன என்று, எல்லோரும் விட்டுவிட்ட பிறகு இவர் கடைசியிலே அட்டானமி வேண்டும் என்று சொல்கிறார். இன்றைக்குக் காலையிலே பேசியவர் காஷ்மீர் மாதிரி வேண்டுமென்றார். அரசியல் படிக்கவேண்டும், சரித்திரம் படிக்க வேண்டும், காஷ்மீர் எந்த எல்லையிலே இருக்கிறது என்று. சமீபத்திலே நான் சோவியத் யூனியனுக்கு போனபோது I was in autonomous republic of Busteria இந்த மாதிரி அட்டானமஸ் நிலை வேண்டும். . .

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. தங்கமணி பேசிய பேச்சால் எனக்குப் பெரிய பயமே வந்துவிட்டது. காஷ்மீர் எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். காஷ்மீர் இந்தியாவில்தான் இருக்கிறது, என்று நாங்கள் அறிகிறோம். ஒரு வேளை திரு. தங்கமணி அவர்கள் காஷ்மீர் பாகிஸ்தானிலே இருப்பதாகத் தெரிவிக்கிறாரா?

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ்நாட்டுக்கு அடானமி வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு சோவியத் யூனியனிலே ஒருவர் கேட்டார், தமிழ் நாடு என்ன பேக்வர்ட் ஸ்டேட்டா என்று கேட்டார். Is it a very backward State? என்று கேட்டவுடன் எனக்கு ஷாக் அடித்தது. எங்கள் நாட்டிலே வெஸ்ட் பெங்கால், மகாராஷ்டிரம், தமிழ் நாடு எல்லாம்

பார்வேட் ஸ்டேட்ஸ்தான் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் உடனே நீங்கள்தான் யூனியனுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடியவர்கள் என்று சொன்னார்கள்.

Then you constitute the Union.

Autonomy should not be taken in the literary sense, we are not concerned with the dictionary meaning of Autonomy; in the present political context, it is unpatriotic to talk about it. ஆகவே பேக்வார்ட் ஸ்டேட் ஆக இருக்கிற ஒரிஸா கேட்கலாம், மேகாலயா கேட்கலாம் என்பதுதான் இதிலே முக்கியமான விஷயம் என்ற வகையிலே சொன்னார்கள். அட்டானமி என்பதை நீங்கள் டிக்ஷனரி மீனிங் வைத்துப் பார்க்கக் கூடாது, பொலிட்டிக்கல் கான்டெக்ஸ்டிலேதான் பார்க்க வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஒரு விளக்கம் கேட்கவிரும்புகிறேன் சுயாட்சி அல்லது அதிக அதிகாரங்கள்பற்றி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நீண்ட நாள் கொள்கை என்ன ?

திரு. கே. டி. கே. தங்கமணி : நீங்கள் கேட்பதற்கு முன்னாலேயே 1952-ஆம் வருட பார்லிமெண்ட் நடவடிக்கைகளைப் பார்த்தால் நாங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம் என்பது தெரியும். So we must see the political meaning of it and not merely dictionary meaning. இன்றைக்கும்கூட 'அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும் புன்மையாற் காணப்படும்' என்ற கருத்துக்கு உட்பட நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். மற்றவர்களுக்கு எப்படியோ ? புறஞ்சொல்லாமை என்ற அதிகாரத்திலே அந்தக் குறள் வருகிறது. சொல்வதை யார் சொல்கிறார்கள் எதற்காகச் சொல்கிறார்கள் என்ற காண்டெக்ஸ்டை பார்க்கவேண்டும், அதோடு இதை நிறுத்தி விடுகிறேன்.

நேற்று பேசும்போது இங்கே சொன்னார்கள், ஜெயப்பிரகாஷ் நாராயண் ரொம்ப நல்லவர் என்று சொன்னார்கள். நல்லவர், கெட்டவர் என்பதுபற்றி பிரச்னையில்லை. உங்கள் கட்சியிலே உள்ள முதலமைச்சர் நல்லவரா என்று என்னைக் கேட்டால் ரொம்ப நல்லவர் என்றுதான் நான் சொல்வேன். ஆனால் I am attacking his policy. The question is political and not personal. என்று சொல்வேன், முன்பு அப்படியிருந்தாலும் இப்போது எப்படியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும்.



வீர சவர்க்காரை எடுத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட வீரர் இப்போது யாராவது உண்டா ? இங்கிலாந்து தேசத்திலிருந்து தப்பிவரும்போது கப்பலிலிருந்து கடலில் குதித்து விட்டார். பிரான்சிலே கைது செய்யப்பட்டார். இண்டர்நேஷனல் லாவிலே அவரை கைது செய்ததே தப்பு என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட வீரர் அவர். ஆனால் காந்தியடிகள் கொலை கான்ஸ்ப்பிரஸியிலே அவர் ஒருவர். ஆகவே அன்றைக்கு அப்படி இருந்தவர் இன்றைக்கு இப்படிப் போய்விட்டார். வி. வி. எஸ். ஐயர் அவர் பெரிய புரட்சி செய்தார், இங்கிலாந்திலே அப்போது இருந்த மாணவர்களில் அவர் சிறந்த வீரமான பேச்சுக்களைப் பேசக்கூடியவர். அப்போது நல்ல பெயரை எடுத்தவர். அவர் குருகுலம் என்று ஆரம்பித்து கடைசியிலே ஜாதிப் பிரச்னையிலே கொண்டுவந்துவிட்டார்கள். அதேமாதிரிதான் ஜெயபிரகாஷ் நாராயண் அன்றைக்கு இருந்திருக்கலாம். இன்றைக்கு செய்துகொண்டிருப்பது நாட்டினுடைய நலனுக்கு ஒற்றுமைக்கு விரோதமானது. ஜனநாயகம் என்றால் ஓரளவிற்குத்தான் ஜனநாயகம்.

Jananayagam is not perfect; it is only a Parliamentary Jananayagam. மக்கள் வயது வந்தவர்கள் வோட்டுப் போட்டு தேர்ந்தெடுத்து ஐந்தாண்டுகளுக்கு இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதையே ரிவர்ஸ் பண்ணக்கூடிய அளவுக்கு அவர் சொல்கிறார் என்றால் எப்படிப் போகும் என்று பார்க்க வேண்டும்.

It is a subversion of Democracy.

அது மாத்திரமல்ல. இருக்கக்கூடிய அதிருப்திகளை தட்டிவிட வேண்டும் என்ற போக்கு இருக்குமானால் அது கடுமையான போக்கு, நான் அதைப்பற்றி அதிகம் சொல்லவில்லை, ஏற்கனவே ஒருவர் அதைப்பற்றி பேசியதால் நான் அதைப்பற்றிச் சொல்லவேண்டிவந்தது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இங்கே ஒரு சில கட்சிகள் 'ரைட் டு ரிகால்' என்று சொல்கிறார்களே, அதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா ?

THIRU K. T. K. TANGAMANI : Right of recall was in our Election Manifesto in 1952. Right of recall is a very good principle. இன்றைக்கும் அதை ஏற்றுக்கொள்கிறோம். சோவியத் யூனியனிலே இருக்கிறதா என்று கேட்கலாம். சோவியத் நாட்டிலே 'ரைட் டு ரிகால்' இருக்கிறதா

என்று கேட்கலாம். அங்கே சில பாடிகளுக்கு அப்படிப்பட்ட முறை இருக்கிறது. Right of re call என்ற அந்த முறை அமலில் இருக்கிறது. பஞ்சாயத்துக்களிலே அமல் நடத்தலாம், முனிசிபாலிட்டிகளிலே அமல் நடத்தலாம், கார்ப்பரேஷன்களிலே அமல் நடத்தலாம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. நாடாளுமன்றத்திலே 'ரைட் டு ரீகால்' சம்பந்தமாக தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது தி.மு.க. சார்பில் ஒரு உறுப்பினர் பேசினார். அவர் என்ன பேசினார் என்றே புரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தி.மு.க. சார்பில் என்ன பேசினார் என்று புரியவில்லை என்று சொல்கிறார்கள். 'ரைட் டுரீகால்' என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற கட்சியினர், கம்யூனிஸ்ட் கட்சியோடு உறவு வைத்துக்கொண்டு இருக்கின்ற கட்சியாகிய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றத்திலே அதைப்பற்றி என்ன பேசினார்கள் என்பதை அவர்கள் சொல்லவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. முருகானந்தம் அங்கே பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசிய பேச்சை பத்திரிகையிலே திரித்துப் போட்டிருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களோடு உறவாடுகின்ற ஒரு கட்சி, 'ரைட் டு ரீகால்' என்று சொல்லி அதற்காக கட்சியை வைத்திருக்கிறோம் என்று சொல்கிற கட்சி, நாடாளுமன்றத்திலே நீங்கள் கொடுத்த தீர்மானத்தின்மீது அந்தக் கட்சி பேசியதா இல்லையா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** விவரங்கள் நீங்கள் கொடுத்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை ஆதரிக்காமல் அவர்கள் பேசினால் அது தவறுதான். நீங்கள் எனக்கு விவரங்கள் கொடுத்தால் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஒரு தவறான தகவலை தெரிவிக்க விரும்பவில்லை. அவர்கள் அங்கே பேசியதாகவே தெரியவில்லை, அது கவனத்தில் இருக்கிறதா இல்லையா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தனியார் தீர்மானத்திலே எல்லோருக்கும் பேசுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்காது. சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கலாம். அல்லது உறுப்பினர் இல்லாமல் இருந்திருக்கலாம். அவர்கள் எதிர்த்துப்பேசியிருந்தால் அந்தக் கட்சித் தலைவரிடம் நாங்கள் சொல்வோம்.



பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி என்ற ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறோம். அதிலே கொடுக்கப்பட்ட அறிக்கையின் பத்தாவது பிரிவில் அவாய்டபிள் எக்ஸ்பெண்டிச்சர் என்று குறிப்பிட்டுவிட்டு சமயநல்லூர் பற்றி—நான் சமயநல்லூர் பற்றி பேசினால் முதலமைச்சர் அவர்கள் தங்கமணி சமயம் வரும்போதெல்லாம் சமயநல்லூரைப் பேசுகிறார் என்று சொல்வார்—அதிலே ரயில்வே சைடிங்ஸ் இருக்கிறது, அதற்காக ரூபாய் 80,334 கட்டப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

The Board reported on 7th January 1975 that the charges for the maintenance of the railway siding paid to the Railways amounted to Rs. 80,334 . . . .

The Committee would like the Government to pay their immediate attention to this problem with a view to examine whether the continued retention of the railway siding and the continued huge expenditure thereon have any justification at all.

என்று பக்கம் 6-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். 8-வது பிரிவில்

The Industrial Training Institute was connected with a power load of 65 H.P. During inspection in July 1969, the Assistant Engineer noticed that the Institute had been drawing an extra power loan of 302 H.P.......

The Committee also observes that the Industrial Training Institute should have been charged under High Tension Tariff.

என்று பக்கம் 5-ல் போட்டிருக்கிறார்கள். இப்படி நம்முடைய இலாகாவே நமக்கு சரியாக நடக்கவில்லையென்றால் எங்கே கொண்டு போய்விடும் என்பதைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

இன்னும் 2, 3 விஷயங்களைப்பற்றிச் சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அரசாங்கத்தின் சார்பில் அறிக்கை விட்டார்கள். மூன்றாவது போகம் யாராவது விளைவித்தால் எல்லாம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள், லெவி கூட கிடையாது என்று சொன்னார்கள். அன்றைக்கு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இன்றைக்கு மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். போதுமான ஸ்டாக் அரசாங்கத்தின் கையிலே இல்லை, நாட்டிலே இருக்கிறது என்றார்கள். யார் யார் கையில் இருக்கிறதோ அதையெல்லாம் கொண்டுவருவதற்கு துணிச்சல் வேண்டும். மூரட்டுத்தனமான காரியங்கள் செய்யவேண்டும். அந்த அளவிற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை. 3-வது போகம் சாகுபடி செய்யக்கூடியவர்கள் கண்டிப்பாக லெவி

கொடுக்கவேண்டாம் என்று சொன்னால் என்ன ஆகும் என்று பார்த்தால் சிறிய விவசாயிகள் எல்லாம் 3-வது போகம் செய்யமாட்டார்கள், பெரிய பெரிய விவசாயிகள்தான் செய்வார்கள், அவர்கள் இப்போது பதுக்கிவைத்துள்ள ஸ்டாக் இருக்கிறது, மூன்றாவது போகமும் விளைந்தால் பதுக்கிவைத்ததை மறைத்து இந்தக் கணக்கைக் காட்டிவிடுவார்கள். இப்படிப்பட்ட அபாயம் இருக்கிறது. அதிலே அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது அரசாங்கம் தன்னுடைய சாதனைகளைப்பற்றிச் சொல்வதிலே தப்பில்லை. 30,000 pump sets in another eight days. என்று சொல்லியிருக்கிறார்கள். இது என்ன சங்கதி? இந்தமாதிரி போகக் கூடாது. இருக்கிற கஷ்டம் ஏற்பட்டு விட்டது. ஏற்கனவே சொன்ன விஷயத்தை மேலும் டெவலப் செய்ய விரும்பவில்லை. எல்லாமே மத்திய சர்க்கார்தான் என்று ஆரம்பித்தால், மத்திய சர்க்கார் நமக்கு உதவுகிறது. இந்த அறிக்கையைப் பார்த்தால் மத்திய சர்க்கார் நமக்கு உதவி செய்யாவிட்டால் நாம் பட்டினியாகச் சாவோம் என்பது மாதிரி இருக்கிறது. இங்கே நமக்குக் குறையில்லையா? இங்கே தவறே செய்யவில்லையா? மத்திய சர்க்காரை எல்லாம் வேண்டுமென்று கேட்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

How weak has the demand for the so-called autonomy of your Government, become! ......

எந்த அளவிற்குப் போய் இருக்கிறது. எவ்வளவு நம்ப வேண்டியிருக்கிறது? பஞ்சாபிலிருந்து கோதுமை வர வேண்டும், ஆந்திராவிலிருந்து தானியம் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும், மைசூரிலிருந்து தண்ணீர் வர வேண்டும், மின்சாரத்தைக் கேரளா கொடுக்க வேண்டும்.

தண்ணீர் விஷயத்தைப் பொறுத்தவரையில், காவிரியைப் பொறுத்த வரையில் எல்லாக் கட்சிகளும் ஒரு நிலையை எடுத்திருக்கிறோம். அன்றைக்கு நானும் மாரிமுத்துவும் பேசும்பொழுது சொல்லியிருக்கிறோம்.

If the Central Government invites the concerned Chief Ministers, we must be prepared to go.

அதிலே பெருமளவு கண்டிஷன் போட வேண்டியதில்லை. நம்முடைய நிலை என்ன என்பதைச் சொல்லியிருக்கிறோம். பக்தவத்சலம் அவர்களுடைய அறிக்கையும் மிகவும் நன்றாக இருக்கிறது. நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டாம் என்ற நிலை இல்லை. நியாயம் கிடைக்க வேண்டுமென்று இருக் கிறோம். இன்றைக்குக்கூட தேவராஜ் அர்ஸ் அவர்கள் பிரசங்கத்தைப்



பார்த்தால் நம்மை குற்றஞ்சாட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர நம்முடைய கோரிக்கையின் நியாயத்தை அவர்கள் புறக்கணிக்க முடியவில்லை. ஆகவே, தமிழ்நாட்டிற்கு எந்தவிதமான பாதகமும் செய்ய மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரையில் வறட்சிப் பிரச்னை வரும் நேரத்தில் காவிரி நதி பிரச்னை பற்றி ஒருவிதமான குறிப்பும் ஏற்படவில்லை, அதுபற்றி இரண்டு வரிகள் போடக்கூடாதா? அதுகூடப் போடாமல் கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். வறட்சி நிவாரணம் சம்பந்தமாக நாங்களெல்லாம் போனோம். சேலத்திலே ஒரு விபரீதம். நேற்று இந்து பத்திரிகையிலே Letters to Editor பகுதியில் வந்திருக்கிறது. நாம் ஒரு பக்கத்தில் என்ன அறிவிக்கிறோம், கடன் ஒத்திவைக்கப்படும், கடன் வசூல் செய்யப்பட மாட்டாது என்று இவ்வளவையும் சொல்லிக்கொண்டு அதே மக்களிடத்திலேபோய்

There is intensive drive for small savings.

இதை என்னவென்று சொல்வது என்று எனக்கே தெரியவில்லை. ஸ்மால் சேவிங்க்ஸ்-க்காக இப்பொழுது பணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கோவார்டினேஷன் இருக்க வேண்டும். அரசின் உத்தரவை அமல் நடத்த இன்றைக்கு அதிகாரிகள் தயாராக இல்லை. அந்த நிலைமை ஏற்பட்டால் அது வேறு விஷயம். உண்மையிலேயே இன்றைக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி உச்சத்திற்குப் போய் அதனால் ஜனங்கள், நாங்கள் பழைய முறையிலே வாழ மாட்டோம் என்று சொன்னால் என்ன ஆகும். அரசாங்கத்தின் உத்தரவை கலெக்டர் கேட்கமாட்டார், கலெக்டரின் உத்தரவை தாசில்தார் கேட்க மாட்டார், போலீஸ் துறையின் உத்தரவை போலீசார் கேட்க மாட்டார்கள் என்று, it is called a revolutionary situation பிறகு சமுதாயத்திலே மாறுதல் ஏற்பட்டுவிடும். அதுதான் உண்மையே தவிர அப்படிப்பட்ட நிலை இன்றைக்கு வரவில்லை. இந்த நேரத்தில் ஜனங்களுக்குக் கஷ்டம் இருக்கிறது, ரொம்பவும் கஷ்டம், அதை வருணிக்க வேண்டுமென்றால் எவ்வளவோ வருணிக்கலாம், அவ்வளவு கஷ்டம் ஏற்பட்டு, இந்தக் கஷ்ட காலத்திலே என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி தீர்மானிப்பது

ஆளுங்கட்சியின் பொறுப்பாக இருக்கிறதே தவிர ஏதோ கம்யூனிஸ்ட்கள் இம் மாதிரி கஷ்டம் ஏற்பட்டால், மழையே பெய்யாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று பலபேர் கேட்டுக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள்.

that is called philosophy of poverty

அதாவது ஏழ்மை வந்தால் புரட்சி ஏற்படும், ஏழ்மை வந்தால் மாறுதல் ஏற்படும் என்று 100 ஆண்டுகளுக்கு முன்னால் ப்ராவ்தான் என்ற பேரறிஞர் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாயிடத்திலும் ஏழ்மை ஏற்பட்டால் மக்களுக்குக் கோபம் ஏற்படும். கோபம் ஏற்பட்டால் சமுதாயத்திலே மாறுதல் ஏற்படும் என்ற கருத்து ஏற்படுவதற்கு

it is called poverty philosophy — philosophy or poverty

என்று மார்க்ஸ் சொன்னார். அதை இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். அதை அவர்கள் தயவு செய்து படிக்க வேண்டும்.

Thiru L. GANESAN : I may inform hon. Member that I have studied it long back.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் அப்படிச் சொல்ல விரும்பவில்லை. அதைப் படித்துப் பார்த்தால் தெரியும். ஏழ்மை இருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஏழ்மையோ எல்லோருக்கும் இருக்க வேண்டும், அதன்மூலமாக ஏதாவது மாறுதல் ஏற்படும் என்று விரும்பும் கட்சி அல்ல.

கடைசியாக, குடிதண்ணீரைப் பொறுத்தவரையில் அதற்கு 'டாப் பிரையாரிட்டி' கொடுக்க வேண்டும். ஒரு மைல், இரண்டு மைல் நடந்து தாய்மார்கள் போக வேண்டிய அவசியமில்லாமல் செய்ய வேண்டும். அதற்கு நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். பக்கத்தில் ஆவடி இருக்கிறது. அங்கே நிறைய லாரிகள் நிற்கின்றன. லாரிகளை, மிலிட்டரி கமிட்டியோடு கொஞ்சம் 'காண்ட்ராக்ட்' வைத்துக்கொண்டு, கிராமம் கிராமமாக லாரிகள் இல்லை என்றால் அதை 'மொபிலைஸ்' செய்வோம். அதன்மூலமாக இந்தத் தண்ணீரைக் கொண்டு அவர்களிடம் சேர்க்க வேண்டும்.

இந்த அளவிற்குச் சொல்லிக்கொண்டு, இந்த கவர்னர் உரையிலே எந்தவிதமாகவும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. கவர்னர் உரையிலே சொல்லாத விஷயங்





சில விஷயங்களைத்தான் சொன்னேனே தவிர, முழுமையும் சொல்லவில்லை. நாட்டிலே இவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்பொழுது கவர்னர் அவர்களின் உரையை பரிதாபகரமான நிலையிலே, நம்முடைய 'கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ்' தயாரித்து அவர் மூலமாகக் கொடுத்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** Mr. Speaker, Sir, I want to ask for a clarification. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும் பொழுது போக்குவரத்துத் துறையைப்பற்றி இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒன்று, சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் டிரான்ஸ்போர்ட்டில் புதிய ஜாதியை உருவாக்குகிறார்களோ என்று ஐயப்படுகிறேன் என்று சொன்னார்கள். அப்படி ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரம் போன்ற பெரு நகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் தனிப்பட்டவர்கள் பயன்படுத்தும் கார்கள். ஆகவே, அந்தக் கார்களில் எந்த அளவிற்கு எண்ணிக்கையில் மாநகரத்தைப் பொறுத்த வரையில் குறைக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு நமக்கு மாநகரத்தில் நெரிசல் இல்லாமல் சீரான போக்குவரத்து ஏற்பட முடியும்.

காரிலே செல்பவர்கள் பெரும்பாலும் தொழில் நிறுவனங்களிலேயும், அரசு நிறுவனங்களிலேயும் பணியாற்றுபவர்களாகவும், மேலதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். ஆகவே, கார்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அளவிற்குத் தனியாக அத்தகையோருக்கு என்று பேருந்துகளை விடுவதன் மூலம் பாதை வசதியைச் சிறந்த முறையில் செய்யலாம் என்று யோசனை செய்யப்பட்டு அந்த அடிப்படையிலே அத்தகைய சிறப்புப் பேருந்துகள் விட்டிருப்பார்கள் என்றே கருதுகிறேன். அது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு என்றோ, குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு என்றோ விசேஷ சலுகைகள் எதுவும் போக்குவரத்துத் துறையின் மூலமாக அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளைப் பற்றியும், உத்தியோக நிலைமைகளைப் பற்றியும் ஒருமுகப் படுத்த வேண்டுமென்பதற்காக ஏற்கனவே போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாக இயக்குநர்கள் குழு கடந்த ஒரு மாதகாலமாக ஈடுபட்டு வருகிறது. ஆகவே, சம்பள வித்தியாசம், வேலை நிலைமைகளிலே உள்ள வேறுபாடுகள் விரைவில் நீக்கப்படும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ரஷ்யா வெல்லாம் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே மாநில சுயாட்சி கொள்கை கூடாது என்று ஏதோ அரசியலுக்காகச் சொல்லலாம். ஆனால் ஒரு கொள்கையைக் குறை கூறுதல் கூடாது என்று அவர்களே சொன்னார்கள். மாநில சுயாட்சியை மிகவும் தீவிரமாகச் செயல்படுத்தும் நாடு ரஷ்யா என்று நாங்களெல்லாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். அங்கேயுள்ள மாநிலங்களுக்கு ஐ.நா. சபையிலேயும் இடம் பெற்றுத் தந்த ஒரு நாடு, சமதர்ம நாடு என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம். புத்தகங்களிலேயெல்லாம் அப்படித் தான் இருக்கிறது. அரசியல் காரணங்களுக்காக எங்களை எதிர்க்கலாமே தவிர, அந்தக் கொள்கையை எப்படி எதிர்த்தார்கள் என்பது எங்களுக்குப் புரிய வில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஐ.நா. சபையைப்பற்றிச் சொன்னார்கள். பிலோ ரஷ்யாவும், உக்ரேனும் ஐ.நா. சபையில் இடம் பெற்றிருக்கின்றன. இந்த விஷயங்களைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினேன். யால்டா கான்ஃப்ரன்சின் பொழுது பிரசிடெண்ட் ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் 1945 ஆம் வருஷம், 1944 ஆம் வருஷக் கடைசியிலே, அநேகமாக யுத்தம் முடிந்த நேரத்தில் ஐ.நா. சபை ஏற்பட்டால் சோவியத் யூனியனுக்கு ஒரேயொரு ஓட்டுதான் கிடைக்கும், இரண்டு மூன்று ஓட்டாவது கிடைத்தால் நல்லது என்று ரூஸ்வெல்ட் சொன்னதாகவும், யாருக்கு கொடுக்கலாம் என்ற கேள்வி வந்த பொழுது, உக்ரேனுக்குக் கொடுக்கலாம் என்றும், பிலோ ரஷ்யாவின் தலைநகரத்தை நான் தான் உருவாக்கினேன், அது ஒழிந்து போய்விட்டது என்று சொல்லி இந்த இரண்டு இடங்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னதாகவும் தெரிகிறது. இஸ்டாரிகல் ஃபேக்ட், அந்த விவரத்தைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இது சோவியத் ரஷ்யாவைப் பற்றிய, அரசாங்கத்தைப் பற்றிய புத்தகமாகும். அதிலே அவர்கள் ஒரே ஒரு மாநிலத்திற்கு மட்டும் இடம் வேண்டுமென்று கேட்கவில்லை. எல்லா மாநிலங்களுக்கும் இடம் வேண்டுமென்று கேட்டார்கள். ஒவ்வொன்றும் ஒரு தேசிய அடிப்படையைக் கொண்டது என்று ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

Stalin made such a request of the planning group at Dumbarton Oaks and again at the Yalta Conference. The world now knows the compromise that was accepted by Franklin D. Roosevelt and by Winston Churchill under which Byelorussian and



Ukrainian Republics received members in the United Nations along with USSR while the other 14 Republics received no international recognition. 16 குடியரசுகளுக்கும் இடம் வேண்டுமென்று வற்புறுத்தினர். இங்கு ஏற்பட்ட உடன்பாட்டின்படி இரண்டு மாநிலங்களுக்கு மாத்திரந்தான் இடம் கிடைத்திருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமாவது இடம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தலாம் அல்லவா? கம்யூனிஸ்டு கட்சி அதற்கு ஒத்துழைக்குமா?

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு எங்கள் கட்சியின் சார்பாகப் பல்வேறு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களை வலியுத்துகிற வகையில் நான் ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்த கவர்னர் பெருமான் உரையிலே இந்த அரசாங்கத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்கள் இருக்குமென்று எதிர்பார்த்தேன். அண்மையில் அமைச்சர்களுடைய இலாகாக்கள் மாற்றியமைக்கப்படுவதற்கு என்ன காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை எல்லாம் உரையிலே எதிர்பார்த்தேன். அதிலே நான் ஏமாற்றம் அடைந்திருக்கிறேன் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையைப் படித்துப் பார்க்கிற நேரத்தில் இன்று தமிழ் நாட்டில் இருக்கும் வறட்சி நிலைமை எவ்வளவு ஆபத்தானதாக இருக்கிறது, எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது என்பதைக் கவர்னர் பெருமான் உரையிலிருந்து தெரிந்து கொள்ளும் நிலைமையில் இருக்கிறோம்.

மூன்று வகையான தட்டுப்பாடு இந்த மாநிலத்தில் பெரிய அளவில் ஏற்பட்டிருக்கிறது. மின்சாரத் தட்டுப்பாடு, தண்ணீர்த் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு. இந்த மூன்று தட்டுப்பாட்டுக்கும் 'முப்பெரும் விழா' நடத்தினால் ஒருவேளை பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அந்த அளவுக்கு இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நேரத்திலே தமிழகத்திலே இருக்கிற அரசியல் நிலை பற்றியும் நாம் சற்று நிதானமாகச் சிந்திப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். இன்று எதிர்க்கட்சிகளாக இருக்கிறவர்கள் என்ன முறையிலே நடத்தப்பட்டு வருகிறார்கள், என்பது பற்றி இங்கானாலும் சரி மத்தியிலானாலும் சரி ஆளுகின்றவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எல்லாக் கட்டுப்பாட்டுக்கும்

காரணம் எதிர்க்கட்சிகள் என்று சொல்லுவது வேடிக்கையாகவும், விதண்டா வாதமாகவும் இருக்கிறது. இப்படி ஆளும் கட்சியிலிருந்து கூறப்படுவது உண்மையா என்று நாம் எல்லோரும் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு இந்த மாநிலத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்னால் இந்த மாநில அரசின் கொள்கை காரணமாக, அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இந்தத் தட்டுப்பாடு இவ்வளவு கடுமையாக மேலோங்கி வளர்ந்திருக்கிறது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் எஸ்டிமேட் கமிட்டியின் அறிக்கையைப் பற்றியும் அன்று நடந்த அரிசிபேர ஊழலை பற்றியும், தாண்டவராயன் விவகாரத்தைப் பற்றியும் நல்ல முறையில் விவரமாக பல அரசியல் கட்சியினரும் கூறியிருக்கிறார்கள். அன்று தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெரிய அரிசிபேர ஊழல் காரணமாகத்தான் இன்று தமிழ்நாட்டில் இந்தக் கொடிய பஞ்சமே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும்.

அதே போல் இன்று வான் பொய்த்து, குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று நிலைமை என்னவென்று பார்க்க வேண்டும். மாநகராட்சியிலிருந்து ஒருசில அவசர நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இந்த உரையிலே பார்க்கிறோம். இது போதுமான அளவில் இல்லை; திருப்தியளிக்கும் வகையில் இல்லை என்பதை உணரவேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிதண்ணீர் ஒவ்வொரு பகுதிகளில் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம்?

ஆனால் அதே சமயத்தில் கோடிக்கணக்கான ரூபாயைப் பல திட்டங்களில் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். எளிதில் பலன் தரக்கூடிய உருப்படியான திட்டங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே கவர்னர் பெருமான் உரையிலே ஒருசில நடவடிக்கைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிலைமை என்ன? இன்று பல நீர்மின்சாரத் திட்டங்கள் எல்லாம் முடங்கிக் கிடக்கின்றன. சேர்வலாறுத் திட்டம் நடக்குமோ நடக்காதோ என்ற ஐயப்பாடான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சுருளியாறு திட்டம் என்ன நிலைமையில் இருக்கிறது என்று விளக்கம் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசாங்கம் அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் நேர்மாறாக ஒருசில புதிய திட்டங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். இவை எல்லாம் முழுந்து பலன் கிடைக்க பல ஆண்டுகள்



பிடிக்கக்கூடிய திட்டங்கள். நீண்டகாலத் திட்டங்களாக இருக்கின்றன. உடனடியாகப் பரிகாரம் காணக்கூடிய அளவுக்குத் திட்டங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இன்று இருக்கக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டு நிலைமைக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதையும் உணரவேண்டும். மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஆந்திராவிலிருந்து அரிசி வாங்க வேண்டும், வெளி நாட்டிலிருந்து அரிசி வாங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். இதுமட்டும் போதாது என்று கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்தப் பஞ்சத்தை, துயரத்தை, பிணியைத் தீர்க்க வேண்டுமென்றால் பஞ்சப் பகுதிகளில் எல்லாம் கட்டாயமாக நியாயவிலைக் கடைகள் (ஃபேர் பிரைஸ் ஷாப்) அல்லது சட்டபூர்வ ரேஷனை (ஸ்டாச்சுடரி ரேஷன்) கொண்டு வருவது சாலச் சிறந்தது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஸ்டாச்சுடரி ரேஷன் வந்தால் இதைவிடக் கடுமையான கொள்முதல் ஏற்படும் என்று ஐயப்பட இடம் உண்டு. உண்மையிலேயே துன்பப்படுகிற ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றால் அதுதான் பொருத்தமானதாக இருக்குமென்று கருதுகிறேன். இன்று ஏற்பட்டிருக்கும் பண வீக்கத்தைத் தடுக்க நல்ல ஒரு அம்சமாக அது இருக்கும்.

அரசாங்கம் இன்று விலையை நிர்ணயித்திருக்கிறது. அதன் காரணமாக என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு கணம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கொள்முதல் குவிண்டாலுக்கு 75 ரூபாய்; 10 ரூபாய் ஊக்க போனஸ்; 5 ரூபாய் சில்லறை கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது போதுமா என்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கட்டுபடியான விலை கொடுக்க வேண்டுமென்பது நியாயந்தான். உற்பத்தி செய்பவர்கள் ஒருசிலர்தான். ஐந்து சதவிகிதம் பேர்தான் இருக்கிறார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் 95 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். 95 சதவிகிதம் மக்கள் பசி, பட்டினியால் வாட 5 சதவிகிதம் மக்களைக் காப்பாற்ற மட்டும் அரசாங்கம் முனைந்தால் போதாது. தர்மத்தின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் ஏழை எளிய மக்களுக்கு உணவு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கம் வேறு ஒரு தவறையும் செய்திருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குவிண்டால் 74 ரூபாய்க்கு வாங்கி 130 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. 56 ரூபாய் அதிகமாக விற்கிறது. அதை வாங்குகிறவர்கள் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு குவிண்டா

லுக்கு 56 ரூபாய் ஹாண்ட்லிங் சார்ஜஸ் தேவையா? சாதாரணமாக வியாபாரி குவின்டாலுக்கு 2 ரூபாய் 3 ரூபாய் லாபம் வைத்து விற்றாலே "கொள்ளை லாபம்" என்று சொல்லுவோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு குவின்டால் நெல் 74 ரூபாய்; அரிசி 130 ரூபாய். அதுதான் கணக்கு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் கணக்குச் சொல்லுகிறேன். ஒரு குவின்டால் நெல்லை அரிசியாக்கினால் 65 சதவிகிதம் அரிசி கிடைக்கும். 130 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நெல் ஒரு குவின்டால் 74 ரூபாய். அரிசியாக 134 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரு குவின்டால் நெல் 74 ரூபாய்க்கு வாங்கி அரிசியாக 130 ரூபாய்க்கு விற்கிறார்கள். 56 ரூபாய் இடைவெளி வருகிறது என்பதுதான் கணக்கு.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்த ரூ. 74-லோடு ரூ. 10, ரூ. 5—ரூ. 15-ஐயும் சேர்த்துக்கொள்ள வேண்டாமா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது போனசாகக் கொடுக்கிற காரணத்தால் அதை வாங்கும் குடியானவர்கள் தலையில் வைக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் கூறுகிறேன். இது சம்பந்தமாக விவசாயிகள் பல கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏதோ விவசாயிகளுக்காக நான் வாதாட இங்கே வரவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். ரூபாய் 74-க்கு நெல்லை கொள்முதல் செய்து ஏறத்தாழ ரூ. 130-க்கு சுமார் ரூ. 56 அளவுக்கு அதிகமாக வைத்து விற்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கூட செய்து இருக்கிறார்கள். அப்படியில்லை என்று ஒரு வேளை மறுக்கக்கூடும். ஆனால் நிலைமை அப்படித்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். திருப்பதிசாரம் என்ற இடத்தில் அரசாங்க விதைப் பண்ணை ஒன்று இருக்கிறது. அங்கே லெவிக்கு நெல்லைக் கொடுக்காமல் ஏலத்தில் நெல்லைக் கொடுத்து இருக்கிறார்கள். எத்தனை ரூபாய்க்கு நெல்லைக் கொடுத்து இருக்கிறார்கள் என்ற விவரம் என்



னுடைய கையில் இருக்கிறது. திருப்பதிசாரம் விதைப் பண்ணையில் போன வருடம் பகிரங்க ஏலத்தில் ரூ. 190 முதல் ரூ. 230 என்ற அளவு வரையில் அவர்கள் நெல்லை விற்று இருக்கிறார்கள். இதுமாதிரி அரசாங்கப் பண்ணையில் செய்து இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஒரு நியதி, மற்றவர்களுக்கு ஒரு நியதி என்ற அளவில் செய்து இருக்கிறார்கள் என்றால் இதை எப்படி நியாயம் என்று ஒப்புக்கொள்ள முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் உணரவேண்டும்.

இன்று இருக்கும் உணவு நிலைமையில் கொடுக்கப்படும் உணவு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. 'பர்பிள் கலர் ரைஸ்' கொடுக்கிறார்கள். அரிசி பல வண்ணங்களில் இருக்கிறது. அந்தமாதிரியான அரிசியைத்தான் பல இடங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். சில இடங்களில் அவை உளுத்துப்போன அரிசியாக இருக்கிறது. புழு பிடித்த ஆட்டா மாவை வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட மாவை பஞ்சப் பகுதிகளில் கொடுத்து இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஆட்டா மாவை வாங்கிச் சாப்பிட்டதால் ஒருவர் உயிர் இழந்தார் என்று கூட அறிகிறோம். இதைப்பற்றி அந்த மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த கவர்னர் அவர்கள் கூட கூறியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அந்தப் பஞ்ச நிவாரண வேலைகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு ஆலோசனையையும் கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்ச நிவாரண வேலையைச் சரியான முறையில் செய்ய ஒத்துழைப்புத் தரவில்லையென்றால், அவர்களுக்கு அடுத்த தேர்தலில் வாக்களிக்கக் கூடாது என்று கவர்னர் பெருமான் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இந்த மாதிரி கருத்துக்களை அவர்கள் கூறுவது நியாயமா என்பதைப்பற்றி நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க வேண்டுமென்று நினைக்கவில்லை.

அரசு என்ன முறையில் அரிசி கொடுக்கிறது என்பதற்கு என்னுடைய கையில் ஒரு சாம்பிள் இருக்கிறது. நான் இந்தச் சட்ட மன்றத்தில் அதைக் கொண்டு வந்து காட்டவேண்டுமென்று நினைக்கவில்லை. இந்தமாதிரி தரம் கெட்ட அரிசி கொடுக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாது என்பார்கள்—ஒரு வேளை மலிவாகக் கொடுப்பதால் அப்படித் தரப்படுகிறதோ என்னவோ தெரியவில்லை. தரமான அரிசி, நியாயமான விலையில் கொடுக்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பஞ்சத்தைப்பற்றி இங்கே பல விவகாரங்களை கவர்னர் உரையிலே தந்து இருக்கிறார்கள். பஞ்ச நிவாரணத்திற்காக ரூ. 55 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், ஏறத்தாழ 9—10 மாதங்களில் பல நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் விவரங்கள் இதிலே தரப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே இது போதாது. ஏனெனில், மத்திய அரசாங்கம் அண்மையிலே 1972-லே ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது, அவர்கள் அதிகாரிகளை அனுப்பி வைத்தார்கள். அப்போது நம்முடைய அரசுத் தரப்பிலே 35 கோடி கேட்டு இருந்தார்கள் என்று நினைக்கிறேன். 35 கோடிக்குமேலாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கெடுத்து அதை எழுதியிருந்தார்கள். அங்கேயிருந்து ஓடி வந்த அதிகாரிகள், அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அவர்களுடைய கணக்கில் சுமார் 15 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு இருக்காது என்று சொன்னார்கள். கடைசியாக எவ்வளவு மானியமாகத் தந்தார்கள் என்றால் ஒரு பைசாக் கூடத் தரவில்லை. 4 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன்.

இதைப் பார்க்கிற நேரத்தில் இந்தமாதிரி பஞ்சம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில் மத்திய அரசாங்கம் அதிகமாக உதவி செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்தைப்பற்றி வேண்டுமென்றே குறை கூறுகிறோம் என்று சிலர் சொல்வார்கள். இன்னும் 3 மாதத்திற்குப் பிறகு சொல்லக்கூடாதா, அதுவரை பொறுத்து இருக்கக்கூடாதா என்று ஒரு வேளை எங்களுக்கு சிலர் ஆலோசனை சொல்வார்கள். ஆனால், குஜராத்தில் பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில் அங்கே உணவுப் பண்டங்கள் தாமதமான காலத்தில் செப்பு சேரவில்லையா? அதேமாதிரி தமிழ் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில் தமிழ் நாட்டின் உதவிக்கும் மத்திய அரசாங்கம் வரவேண்டும். மத்திய அரசாங்கம் வறுமையைப் போக்க முனைந்து இருக்கிறது. மாநில அரசும் வறுமையைப் போக்க முனைந்து இருக்கிறது என்று இங்கே ஆட்சியில், அதிகாரத்தில் இருப்பவர்களும் சொல்லிக் கொள்கிறார்கள். இரண்டு பேரும் சேர்ந்து பட்டினியால், பசியால் வாடும் மக்களுக்கு துயர் துடைப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாதா என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

வெள்ள பாதிப்பின்போது கொடுத்தமாதிரி, பஞ்ச நிலை உள்ள இப்போதும் கொடுத்து விடுவார்களோ என்று ஐயப்படவேண்டிய நிலை இருக்கிறது. இந்த அரசாங்கத்தின் சார்பாக ரூ. 30 கோடி கேட்டு இருப்பதாக அறிக்கையில் படித்தேன். இப்போது கொஞ்சம் பணம் கொடுத்து இருக்கிறார்கள். கொடுத்ததற்கு நன்றி. கொடுத்ததை இல்லை என்று சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. ஆனால், தமிழகத்தில் இன்று இருக்கும் நிலைக்கு அதிகமான தேவை



இருக்கிறது. தேவைக்கு ஏற்ப இந்த இக்கட்டான, கஷ்டமான நிலையைத் தவிர்க்க அதிக உதவியைச் செய்வதற்கு மத்திய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிற இன்னொரு கணக்கு எனக்குப் புரியவில்லை. 61 லட்சம் பேருக்கு 9—10 மாதங்களில் வேலை கொடுப்பதாகக் கூறி இருக்கிறார்கள். 61 லட்சம் பேருக்கு மொத்தமாக வேலை கொடுக்கப் போகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. 61 லட்சம் பேருக்கு மொத்தமாக வேலை கொடுக்கிறார்கள் என்று சொன்னால், இன்று அரசாங்கம் கொடுத்து இருக்கும் கணக்குப்படி பார்த்தால் குறைந்த கூலி ரூ. 3 தலை ஒன்றுக்கு என்று பார்த்தால் 18 கோடி சில்லரை ரூபாய் மொத்தமாக இந்தக் கணக்கில் வரும். 55 கோடி என்று சொல்கிற நேரத்தில் இதற்கும் அதற்கும் இடையில் இடைவெளி அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக 65 சதவிகிதம் இந்த செலவினங்களுக்கும், எஞ்சிய 35 சதவிகிதம் இதற்கான எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவினங்களுக்கும் என்று இதிலே திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் கூறப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. பொதுவாக இந்த ரூ. 55 கோடியில் குறைந்த கூலி விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால் 18 கோடி சில்லரை வரும். ஏன் இவ்வளவு இடைவெளி வருகிறது? இது மேன்-டேஸ் அடிப்படையிலா அல்லது தோராயமாக மதிப்பீடு கொடுத்து இதைச் சொல்லியிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை 61 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று பெரிய திட்டமாகச் சொல்லி பெரிய விளம்பரத்திற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியிருப்பார்கள். உண்மையிலேயே நிலைமை அப்படியில்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

இந்த பஞ்ச நிவாரண வேலைகள் செய்வது குறித்து ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனையாக இருக்கும் என்ற காரணத்தால்தான் இதைக் கூறுகிறேன். 35 சத விகிதம் எஸ்டாபிளிஷ்மெண்ட் சார்ஜ் தேவையா என்பதைச் சிந்திக்க வேண்டும். இது மிகவும் அதிகமாக இருக்கிறது என்று கருதுகிறேன். இத்தகைய வேலைகளைக் கண்காணிக்க பெரிய அதிகாரிகளை நியமனம் செய்யாமல், மக்களோடு நெருங்கிப் பழகுகிற முறையில் வொர்க்ஸ் சூப்பரின்டென்டென்ட்ஸ் நியமனம் செய்வது, அப்பணியை சரியான முறையில் கண்காணிக்க முடியும் என்று நம்புகிறேன். அது அல்லாமல், அதிகாரிகள் அந்த வொர்க்ஸ்பாட்டிற்கு எல்லாம் சென்று, வெய்யிலில் நின்றுகொண்டு இருப்பார்கள் என்று நம்பினால் நிச்சயமாக அவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, வறட்சி நிவாரண வேலைகளில் அரசியல் புகுந்து இருக்கிறது. இந்தப் பணிகள் அதற்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும், மத்தியில் உள்ளவர்கள் ஆனாலும் சரி, மாநிலத்தில் உள்ளவர்களானாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி நம்பிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும். சர்வ கட்சிக் குழு அமைக்க வேண்டுமென்று பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். இன்னொரு ஆலோசனையும் கூறினார்கள். மாவட்ட வளர்ச்சி மன்ற குழுவையும் அதற்காக ஒத்துழைக்கும் கவுன்சிலாக வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ஆலோசனையெல்லாம் எத்தகைய அளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவை என்பதை அரசாங்கம் கவனித்துப் பார்க்க வேண்டும். நிச்சயமாக இது ஒரு வேளை நல்ல ஆலோசனையாக இருக்கும் என்று கருதுகிறேன். இதிலே அரசியலைப் புகுத்தாமல் என்னென்ன வேலைகள் நடைபெறுகிறது என்பதை அரசாங்கம் உன்னிப்பாக கவனத்தோடு கண்காணித்து செயல்படுவது பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் பெருத்த ஏமாற்றம் அடைந்தேன். இளைஞர் அணி (Youth Corps) என்ற அமைப்பு ஒரு வருஷ காலத்திற்கு மேலாக இயங்கிவருகிறது. இதிலே பல பட்டதாரிகள், டிப்ளமா ஹோல்டர்கள் வேலையில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 175 ஊதியம் தரப்படுகிறது. அவர்களுடைய எதிர்காலம் எப்படியிருக்கும்? அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்குமா? என்பதைப் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் இந்த உரையில் குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். அவர்கள் மத்தியில் இன்றைக்கு ஒரு பெரிய கொந்தளிப்பு, அமைதியின்மை உருவாகிக் கொண்டு இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் அவர்களுக்கு தங்களுடைய எதிர்காலம் சிறந்த சூழ்நிலையில் இருக்குமா என்று அஞ்சுகிற காரணத்தால் இந்தமாதிரி நிலைமை இன்று படித்தவர்களிடம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இன்று இருக்கிற சமுதாய அமைப்பு, மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. தங்களுக்கு வாழ வழி இல்லாமல் தவிக்க வேண்டிய நிலை இருக்கிறது என்று படித்தவர்கள் நினைக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கு புதிய உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த அரசாங்கம் ஒரு வேளை பல சாதனைப் பட்டியலை எல்லாம் இங்கே தொகுத்துத் தந்திருந்தாலும், படித்தவர்கள் வேதனைக்குள்ளாகியிருப்பதை சற்று கவனிக்க வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேமாதிரி நெசவாளர்களைப்பற்றிய பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், எங்கு பார்த்தாலும் பஞ்ச நிவாரணப் பகுதிகளில் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், கஞ்சித் தொட்டிகளை நிரந்தரமான காலத்திற்கு வைத்துக்கொள்ள முடியாது. அவர்களுடைய துயரத்தைத் துடைக்கக்கூடிய அளவில் ஒரு சில காலத்திற்கு அவைகள் உபயோகப்படுமே தவிர, நிரந்தரமான ஏற்பாடாக அது இருக்க முடியாது. கஞ்சித் தொட்டி நிறுவுவதிலும் அரசியல் இருக்கிறது. அந்த அரசியலில் நான் புக விரும்பவில்லை. கஞ்சித் தொட்டிகள் திறப்பது என்றால், எந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்களோ, பட்டினிச் சாவு ஏற்படக்கூடிய இடங்களில்தான் அவைகளை நிறுவுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இராமநாதபுரம், தர்மபுரி, திருநெல்வேலி மாவட்டங்களில் பல பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. மற்ற இடங்களிலும் வறட்சிப் பகுதிகள் இருக்கின்றன. கன்னியாகுமரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் பாதிக்கு மேல் பயிர்கள் தீய்ந்துபோய் விட்டது. ரூபாய் 4 லட்சம் அங்கே செலவழிக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். அங்கிருக்கிற நிலைமைகளை சரியான முறையில் சமாளிக்கத் தவறிய ஒரு சில இன்ஜினியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் இருந்த தண்ணீரை பாசனத்திற்காக சரியான முறையில் விநியோகிக்காத காரணத்தினாலும், ராதாபுரம் கால்வாயை திறந்து விடாத காரணத்தினாலும், சட்டம் ஒழுங்கு முறைப்படி சரியான ஏற்பாடு செய்யாத காரணத்தினாலும், அந்தப் பகுதிகளில் பயிர்கள் காய்ந்து கருகி, தீய்ந்து போய்விட்டன. அந்தப் பகுதி மக்கள் அவதிப்படுகின்ற நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் எங்கு பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் உண்மை நிலை அப்படி இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பல பகுதிகளில், மானாவாரிப் பகுதிகளில் அத்தனைப் பயிர்களும் தீய்ந்துபோய்விட்டன. அதே போல் சானல், கடல் வரம்புப் பகுதிகளிலும் பயிர்கள் அத்தனையும் கரிந்துபோய்விட்டன. உதாரணமாக ஏறத்தாழ 50 சதவிகிதம் சானல் நிலங்களிலுள்ள பயிர்கள் கருகிவிட்டன என்ற நிலைமைதான் அங்கே நிலவுகிறது.

அங்கெல்லாம் கெடுபிடி வசூல்கள் இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களானாலும் சரி, மற்றவிதமான கடன் கொடுப்பது சம்பந்தமானாலும் சரி, கெடுபிடி வசூல் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. கேட்டால் சொல்வார்கள், சட்டம் இயற்றப்பட்டுவிட்டது, ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டு விட்டது என்று கூறுவார்கள். கோவையிலிருந்தும், சேலத்தி

விருந்தும் மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்திலிருக்கிற எல்லாப் பகுதிகளிலிருந்துமே இம்மாதிரியான கெடுபிடி வசூல் நடந்துகொண் டிருப்பதாகத்தான் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இங்கே அரசாங் கத்திலிருந்தும் அமைச்சர் அவையிலிருந்தும் பலவிதமான அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. ஆனாலும், அதிகாரிகள் அவைகளைக் கடைப்பிடிக்க வில்லை என்ற குற்றச்சாட்டினை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போலத்தான் அதிகமாக பம்பு செட்கள் போடுகிறோம் என்று அறிக்கையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன், பம்பு செட்கள் போடுகிறோம் என்று சொல்கிறீர்களே, டீசல் உபயோகப்படுத் துகிற பம்பு செட்கள் மட்டுமா அல்லது மின் இணைப்பு கொடுக்கக்கூடிய பம்பு செட்களுமா என்று ஒரு கணம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மின் தட்டுப் பாடு ஏற்பட்டிருக்கிறது, கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். இந்தமாதிரி தமிழகத்தில் ஒரு காலத்திலும் மின்சாரக் கட்டுப்பாடு இல்லை. ஆனால் லட்சக் கணக்கான பம்பு செட்களுக்கு மூன்று மாத காலத்தில் மின் இணைப்பு கொடுத்துவிடுவோம் என்று பறை சாற்றிக்கொள்கிறீர்களே மின் இணைப்புக் கொடுப்பது என்றால் எப்படி முடியும் என்று நான் கேட்கிறேன். கேரளத்தி லிருந்து நமக்குப் பவர் கிடைக்கப்போகிறதா? அல்லது கர்நாடகத்திலிருந்து பவர் கிடைக்கப் போகிறதா? எங்கிருந்து கிடைக்கப்போகிறது? எப்படி மின் இணைப்பு கொடுக்க முடியும்? ஒருவேளை விளம்பரத்திற்காகவேண்டி இத்தனை லட்சம் பம்பு செட்களுக்கு மின் இணைப்பு கொடுத்துவிட்டோம் என்று சொல்லி, இணைப்புக் கொடுத்துவிட்டு, விசையேற்றங்கள் இயங்க முடியாத நிலைமையில் தான் இருந்துகொண்டிருக்கிறது. சாதாரணமாக குடி தண்ணீர் பைப்பைத் திறந்தால் தண்ணீர் வராது, காற்றுத்தான் வரும். பம்புகளுக்கு மின் இணைப்பு கொடுத்தாலும் போதிய அளவில் கரெண்ட் அழுத்தம் இல்லாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் பல இடங்களில் விவசாயிகள் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அதையும் கவனிக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட வேண்டுமென்று நினைக்கிறேன். இன்று இருக்கிற நிலைமையில் என்ன செய்ய வேண்டும் அரசாங்கம் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நெசவாளர் களிடையே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய சரக்குகள் தேங்கி யிருக்கின்றன. பஞ்சுக்கு விலை குறைந்திருக்கிறது. ஆனால் நூலுக்கு விலை குறையவில்லை என்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. சேலத்திலிருந்து தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி ராஜபாளையத்திலிருந்தும்





எழுதியிருக்கிறார்கள். மதுரை போன்ற பகுதிகளில் நெசவாளர்கள் வாழ் கின்ற அவல நிலைமையைப்பற்றி உருக்கமாக செய்திகள் வந்துகொண்டிருக் கின்றன. அங்கெல்லாம் கஞ்சித் தொட்டிகள் திறக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்களுடைய தொழில் குன்றியிருக்கிறது. நெசவாளர்களுக்கு விசேஷமாக ஒரு சட்டத்தை இயற்றப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் முன்பு பல முறையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் புதிய சட்டத்தை உருவாக்குவ தற்கு திட்டங்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த சட்டம் என்ன நிலைமையில் இருக்கிறது என்பது என்னைப்போன்றவர்களுக்குத் தெரிய வில்லை. கவர்னர் உரையில் நாம் எதிர்பார்த்தது இந்த தொடர் கூட்டத்தில் வரக்கூடிய சட்டதிட்டங்களைப்பற்றி கூறுவார் என்பதுதான். சாதாரணமாக கவர்னர் அவர்களுடைய உரையில் இதற்கு முன்பெல்லாம் இந்தத் தொடர் கூட்டத்தில் என்னென்ன முக்கியமான சட்டதிட்டங்களை இயற்றப்போகிறோம் என்று கூறுவார். ஆனால், இந்த வருடம் அம்மாதிரியான விவரங்கள், எதுவும் கவர்னர் அவர்களுடைய உரையில் காணவில்லை என்ற குற்றச்சாட்டை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அம்மாதிரி வருகின்ற நேரத்தில் பல இடங் களில் மக்கள் துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகிக்கொண்டிருக் கிறார்கள்.

அடுத்தபடியாக இன்னொரு விவரத்தையும் இங்கே கூறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். அது மிகவும் ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. அதாவது காவேரி நதி நீர் பிரச்னையைப்பற்றி இங்கே இந்த அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதன் பேரில் பல கட்சித் தலைவர் களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் அதற்கு நல்ல பதிலைக் கூறியிருக்கிறார்கள். இன்றைய தினம் பத்திரிகையை நாம் எடுத்துப்பார்த்தால் கர்நாடக மாநிலத்தில் ஏற்பட் டிருக்கிற ஒரு நிகழ்ச்சியைப்பற்றி நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாடக மாநில முதல்வர் இந்தப் பிரச்னையைப்பற்றி அங்கே சட்டமன்றத்தில் பக்கங்கள் கொண்ட அறிக்கையில் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள சில கருத்துக்கள் பற்றி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இதற்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்ற காரணத்தினால்தான் நான் அவர்கள் கூறிய ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார். நாம் நவம்பர் 1974-ல் ஏற்பட்ட அண்டர் ஸ்டாண்டிங்-க்கு விரோதமாக போயிருக்கிறோம் என்று ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டினை, அபாண்டமான பழியை நம் மீது சுமத்தியிருக்கிறார். யார்

இந்த ஒப்பந்தத்திற்கு உண்மையிலேயே முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயம் கர்நாடக மாநிலம்தான் அந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

அடுத்தபடியாக இன்னொரு கூற்றையும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அதிகப்படியான தண்ணீரை நாம் செலவழிக்கிறோம் என்ற ஒரு குற்றச்சாட்டினையும் கூறியிருக்கிறார்கள். இன்னொரு வேதாந்தத்தையும் கூறியிருக்கிறார்கள். 'லிவ் அண்டு லெட் லிவ்' Live and Let Live என்றும் கூறியிருக்கிறார்கள். அதாவது அவர்களை வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும், வாழ விடவேண்டும் என்ற ஒரு கருத்தையும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் நாட்டில் தொன்றுதொட்டே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று, தமிழ் நாட்டில் இருக்கிற பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு தஞ்சை போன்ற மாவட்டங்கள் ஏனைய பகுதிகளுக்கு உதவியாக இருக்கின்றன. ஆனால் அவர்கள் இப்பொழுது கூறுகிறார்கள். கர்நாடக மாநிலத்திற்குக் கொடுப்பதற்கு தமிழ் நாட்டு மக்கள் அனுமதிக்கவில்லை என்ற அர்த்தத்தில், அந்த தொனியில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது வேதனைக்குரியது. அங்குள்ள மக்கள் வாழக்கூடாது என்று தமிழ் நாட்டில் இருக்கிற 4½ கோடி மக்கள் நிச்சயம் நினைக்கமாட்டார்கள். ஆனால், இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் அத்தனை பேர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால், தங்கள் நிலத்தை, தங்கள் பயிருக்குள்ள பாசனத்தை பாதுகாக்க வேண்டும் என்பதுதான். இந்த அரசாங்கம் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும், மத்திய அரசும் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும். மௌனம் சாதித்துக் கொண்டிருந்தால் நிச்சயம் ஒன்றும் நடக்கப் போவதில்லை. இது வேண்டுமா, வேண்டாமா; அல்லது வேறு முறையில் திருத்தி அமைக்க வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் இந்த அரசாங்கம் ஆர அமர சிந்திக்க வேண்டும். ஒரு வேளை ஆர்பிட்ரேஷன் என்ற நிலைக்கு வந்தால், தமிழ் நாட்டு மக்களுக்கு பாதகமான முடிவு ஏற்படாத வண்ணம் நாமெல்லாம் நடந்து கொள்ள வேண்டும். இந்த சிக்கலான, மிகவும் கஷ்டமான நிலையில் காவேரித் தண்ணீர் பங்கீட்டில் நமக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்ற உணர்வுடன்தான் நான் இங்கே இதை யெல்லாம் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு கூற்றையும் கூறியிருக்கிறார்கள். 'யுடிலைசேஷன்' அதாவது எவ்வளவு தண்ணீரை உபயோகப்படுத்துகிறோம் என்ற ஒரு கணக்கையும் அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் கர்நாடக மாநிலத்திலுள்ள முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 489 டி.எம்.ஸி. என்ற கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஒரு வாதத்தைக் கூறியிருக்கிறார்கள். அதேமாதிரி வேறு ஒரு கருத்தையும்



கூறியிருக்கிறார்கள். கர்நாடக மாநிலம் கபினி போன்ற அணைக்கட்டுகளுக்கு அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள், அதற்கு துரித நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். அங்கே அணை கட்டுவதில் தமிழ் நாட்டுக்கு ஆட்சேபணை இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை கூறி இருக்கிறார்கள். ஆனால் தண்ணீரைத் தேக்கி வைப்பதில் எவ்வளவு கொள்ளளவு இருக்க வேண்டும்; தமிழ் நாட்டுக்கு எவ்வளவு பங்கு இருக்க வேண்டுமென்று 'ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்' போட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இன்னொரு குற்றச்சாட்டையும் கூறி இருக்கிறார்கள். Tamil Nadu is Camouflouging the issue என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டின் அளவிலே என்னென்ன முட்டுக்கட்டையான காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால் நிச்சயமாக ஒன்றும் இல்லை. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தமிழ் நாட்டு அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை நியாயமானது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்னொரு குற்றச்சாட்டையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது தமிழ் நாட்டில் காவிரி தண்ணீரை விரயம் செய்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இது உண்மையான கூற்று அல்ல. இது வேண்டுமென்றே அவர்களால் சொல்லப்பட்டுவருகின்ற கருத்தாகும்.

இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாக கபினியில் தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக விட வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கேட்டது. அப்போது 13 டி.எம்.சி. தண்ணீர் இருந்தது. அதிலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீரைத் தந்தார்கள். ஆனால் இப்போது 12 டி.எம்.சி. தண்ணீர் பெருகி இருக்கிறது கபினியில். அதை நமக்கு விடாமல் ஒப்பந்தத்திற்கு விரோதமாக தேக்கி வைத்திருக்கிறார்கள். காவிரி வறண்டு கிடக்கிறது. காவிரி நீரை நம்பி இருக்கிற நிலங்கள் எல்லாம் வறண்டு கிடக்கின்றன. இந்த வறட்சியைப் போக்க வேண்டிய கடமை அவர்களைச் சேர்ந்தது. ஆனால் அதற்கு விரோதமாக அங்கே நீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். தேக்கி வைத்துக்கொண்டு நியாயம் பேசுகிறார்கள். இதில் மத்திய அரசு கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். மாநில அரசுக்கு சேரவேண்டிய தண்ணீரைக் கொடுக்க அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்கு வழிவகை

செய்ய வேண்டும். மீண்டும் பேச்சு வார்த்தை தொடங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் சுமூகமான முடிவு ஏற்பட வேண்டும். பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று சொல்லிக்கொண்டு காலத்தை கழிக்காமல், தமிழ்நாட்டை இருளாக்காமல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சனையில் அரசியலைப் புகுத்தக் கூடாது. அரசியலை யார் புகுத்தினாலும் அது இந்த தமிழகத்திற்கு பாதகத்தைத்தான் ஏற்படுத்தும். நியாயமான நம்முடைய உரிமை பாதிக்காத அளவில் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தையும் கூற வேண்டும். கரும்பு விவசாயிகள் இன்று பீதியடைந்துகொண்டிருக்கிறார்கள். கரும்பு விவசாயிகள் தரப்பில் பல மெமாரண்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பிரச்சனையைப்பற்றி முடிவு செய்ய 'பர்குவா கமிஷன்' ஒன்றை போட்டார்கள். அந்த கமிஷன் அறிக்கை கொடுத்திருக்கிறது. இங்கு கரும்பின் விலை எப்படி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்றால், ரெக்கவரி 8.5 சதவிகிதம் இருந்தால் 85 ரூபாய் என்றும் அதற்குமேல் 1 சதவிகிதம் இருந்தால் ஒரு ரூபாய் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் ஒரு பார்முலா செய்திருக்கிறார்கள். இந்த பார்முலா எப்போது உருவாக்கப்பட்டது என்று சொன்னால், கவர்ன்மெண்ட் லெவி 70 சதவிகிதம் என்றும் ஃப்ரீ மார்க்கெட் 30 சதவிகிதம் என்றும் இருந்தபோது உருவாக்கப்பட்டது. இப்போது அந்த எண்ணை மாற்றியிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் லெவி 65 சதவிகிதம் என்றும் ஃப்ரீ மார்க்கெட் 35 சதவிகிதம் என்றும் இப்போது வைத்திருக்கிறார்கள். ஃப்ரீ மார்க்கெட் 35 சதவிகிதம் என்று சொல்லும்போது சீனி உற்பத்தியாளர்களுக்கு அதிகமான பணம் கிடைக்கிறது; நல்ல லாபம் கிடைக்கிறது. இந்த லாபத்தின் அடிப்படையில் பார்த்தால் நிச்சயமாக கரும்பு உற்பத்தியாளர்களுக்கு விலையை கூட்டிக் கொடுக்க வேண்டும். மகாராஷ்டிரம், உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களில் கொடுக்கக்கூடிய அளவுக்கு, தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளுக்கு நியாயமாக 150 ரூபாயாவது ஏறத்தாழ கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால் நேர்மாறாக வேண்டுமென்றே அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். எங்களுக்கு எப்படியாவது நியாயம் வழங்கவேண்டுமென்று கரும்பு விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். விலையை கூட்டிக் கொடுக்காவிட்டால் 5 மாதங்களுக்கு முன்னால், இனி கரும்பு பயிரிடமாட்டோம் என்று விவசாயிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். இது அடுத்தாண்டு நிச்சயமாகப்



பாதிக்கும். இந்த ஆண்டு அதிகமாக சீனி உற்பத்தியாகி இருக்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படி சீனி அதிகமாக உற்பத்தியாகும்போது இந்த விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற பெருங்குடி மக்களுக்கும் அதன் பயன் கிடைக்க வேண்டுமென்ற அளவிலே தேவையான நடவடிக்கைகளை எல்லாம் செய்ய, இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, கல்லூரி பேராசிரியர்களைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன் சிபாரிசுப்படி சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கல்லூரி ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி செக்யூரிட்டி ஆப் ஜாப் வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இன்னொரு கோரிக்கை நேரடியாகச் சம்பளம் கிடைக்க வேண்டுமென்பது. இப்போது அரசாங்கத்திலிருந்து செக் கொடுக்கிறார்கள். செக்கை கல்லூரி கரஸ்பாண்டன்ட் அல்லது நிர்வாகி பெயருக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்த செக்கில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை உரியவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை பல தனியார் கல்லூரிகளில் என்ற நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நேரடியாக கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார்கள்; அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போல 'டெமான்ஸ்டிரேட்டர்ஸ், டியூட்டர்ஸ்' இருக்கிறார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பான சட்டம் போட வேண்டும். கேரளத்தில் யூனிவர்சிட்டி ஆக்ட் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில், மிஸ் மானேஜ்மெண்ட் இருக்கிற கல்லூரிகளை அரசாங்கத் தரப்பில் எடுத்துக் கொள்ள சட்டம் செய்திருக்கிறார்கள். இங்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தடவை கூறினார்கள். சட்டத் துறையை ஆலோசித்து, அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க முடியுமா என்பது பற்றி பரிசீலனை செய்யும் கருத்தைச் சொன்னார்கள். விரைவிலே அதுபற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் லட்சுமிபுரம் கல்லூரி இருக்கிறது. மானேஜ்மென்டாருக்கிடையே தாவா இருக்கிறது. கல்லூரி ஷேர் ஹோல்டர்ஸ் அந்தக் கல்லூரியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று சொல்லி, அதன் பிறகு அரசாங்கம் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை அங்கு நியமித்தது. ஸ்பெஷல் ஆபீசர் கல்லூரி நிர்வாகத்தை ஏற்று நடத்தி, காரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாகச் சம்பளம்

கொடுக்கவில்லை. ஆகவே, உடனடியாக அவர்களுக்குச் சம்பளம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் கல்லூரிகளை எடுத்துக் கொள்வது பற்றிச் சட்டம் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உணவு விநியோகத்தில், ஒரு சில இடங்களில் சில தவறுகள் நடைபெறுவதாக எனக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே ஒரு பக்கத்தில் டி.எஸ்.பி. 752 என்ற நம்பருள்ள போலீஸ்காரர் அரிசி கடத்தினார் என்று புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அந்தப் பகுதியிலுள்ள எல்லா முக்கியஸ்தர்களும் தகவல் தந்திருக்கிறார்கள். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் அடிக்கடி அங்கு நடக்கின்றன.

கோளத்திலிருந்து போலீஸ் வானில் அரிசி கடத்தினார்கள், சாராயம் கடத்தினார்கள் என்று கேஸ் இருக்கிறது. கட்டுப்பாடுடன் இருக்க வேண்டிய போலீஸ் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் எல்லாம் எங்கள் கையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகளை அனுமதிக்கக் கூடாது. மேலும் இந்தமாதிரியான தவறுகள் நடந்தால் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வேறு சில விபரங்களைப்பற்றி எல்லாம் பலரும் கூறினார்கள். காவிரி நீர்ப் பிரச்சனைப்பற்றிச் சொன்னார்கள். மாநில சுயாட்சிபற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்று ஒருசில அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஒரு பக்கம் இடது சாரிகளாக எல்லோரும் வர வேண்டும்; மறு பக்கம் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று சொல்லி, இன்று பலரும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு அரசியல் கொள்கை agitation and administration will go hand in hand என்று சொல்லக்கூடிய அளவிலே இன்று பலரும் காரியங்களைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரியான கடுமையான நிலைமைகள் இன்று இருந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது எந்தக் கட்சி என்று சொன்னால் நல்லது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி அவர்கள் அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். சி.பி.ஐ. விஜயவாடா யூனிட் தீர்மானம் போட்டிருக்கிறது. அது அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அவர்களுடன் அதுபற்றி சண்டை போடுவதற்குத் தயாராக இல்லை.



(முற்பகல் 11-30)

அவர்களுடைய சித்தாந்தம் நமக்குத் தெரியும்—ஒரு பக்கத்தில் யூனிடி என்று சொல்வார்கள்—மறுபக்கத்தில் ஸ்ட்ரகிள் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்லித்தான் அவர்கள் மற்ற நாடுகளில் அதிகாரத்திற்கு வந்தார்கள். இந்தியாவிலும் அப்படித்தான் அதிகாரத்திற்கு வருவதற்கு மக்களைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறபோது இந்த அடிப்படையில்தான் மக்கள் மத்தியில் தம் கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் கட்சியின் சார்பில் எங்களது கொள்கைகளையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு சிலர் வேண்டுமென்றே ஆளுங்கட்சியோடு ஸ்தாபன காங்கிரஸ் ரகசிய உறவை வைத்துக் கொண்டிருக்கிறது என்று—நான் ஒப்பாரி என்று சொல்லவில்லை—அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த மாதிரி கூற்றுகள் ஆதாரமற்றது—அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் உண்மையாக எதிர்க் கட்சியில் இருந்து இயங்கிக் கொண்டிருக்கிற அன்புத் தலைவர் திரு. காமராஜைப்பற்றி மாசு கற்பிக்கக்கூடிய அளவில், களங்கம் கற்பிக்கக்கூடிய அளவில் ஒரு சிலர் வேண்டுமென்றே கூறிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் சட்டமன்ற அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள். திரு. காமராஜர் அவர்களது பொதுவாழ்வு எப்படிப்பட்டது என்பதும், தெரியாததல்ல. அவரது பொது வாழ்வு களங்கமற்றது, தூய்மையானது. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் பற்றியும் அறிவீர்கள். இவரைப் "பிற்போக்குவாதிகள்" என்பது—நமக்கெல்லாம் தெரியும். 1942-இல் மகாத்மா காந்தி அவர்கள் க்விட் இந்தியா என்றபோது—வெள்ளையனே வெளியேறு என்று சொன்னபோது பீப்பிள் வாரில் இவர்கள் எல்லாம் எப்படி ஈடுபட்டார்கள் என்பதை நாடறியும். இவர்களைப் போய் பிற்போக்குவாதிகள் என்று எளிதாகக் கூறிவிடுகிறார்கள்.

இந்தமாதிரி அரசியல் காழ்ப்புணர்ச்சியில் எதையும் பேசிவிடுவது நல்லதல்ல. நியாயத்தின் அடிப்படையில் நாம் அணுக வேண்டும். புதியதாக ஏற்பட்டிருக்கிற உறவின் அடிப்படையில் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. இந்தமாதிரி பிரச்சினையில் காங்கிரஸ்காரர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1969-இல் ஜனாதிபதி தேர்தலின் போதும், 1971 பாராளுமன்றத் தேர்தலின் போதும் "உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்கிற அடிப்படையில் நடந்துகொண்ட முறைகள் எல்லாம் எனக்கு மறக்காது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 பிப்ரவரி 27

நாங்கள் தமிழ்நாட்டின் அரசியல் எந்தத் திசையில் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். நல்ல அரசியல் வேண்டும், நேர்மையான அரசியல் வேண்டும், ஊழலற்ற அரசியல் வேண்டும் என்கிற அடிப்படையில் எங்கள் தலைவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் இருக்கிற 4½ கோடி மக்களும் நல்லதொரு ஆட்சி ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். முடிவு திடீரென்று வந்தாலும் அதைச் சந்திப்பதற்குத் தயாராய் இருக்கிறோம் என்று கூறி—இன்றைக்கு நாட்டிலுள்ள பஞ்சத்திற்கானாலும் சரி, மின்சாரத் தட்டுப்பாட்டிற்கானாலும் சரி எல்லாவற்றுக்கும் காரணம் மாநில அரசு மத்திய அரசு ஆகிய இரண்டுந்தான் என்று குற்றஞ் சாட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எட்மண்ட் சரியாக 12½ மணிக்கெல்லாம் முடித்துவிடுங்கள்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுங் கட்சியின் சார்பில் ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து முன் மொழியப்பட்ட தீர்மானத்தைக் கண்டித்தும், ஆளுநர் அவர்களுடைய உரையைக் கண்டித்தும் அண்ணா தி.மு.க. சார்பில் என் கருத்துக்களை நான் சொல்வதற்கு முன்வந்திருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையைப் பொறுத்தமட்டில் நான் நம்முடைய மாண்புமிகு முதல்வரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த ஆட்சியினுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கிற ஆளுநர் அவர்களையே மத்திய அரசாங்கத்திற்கு எதிராக போர்க் கொடியை உயர்த்தச் செய்திருக்கிற ஓர் உயர் பணியில் நமது ஆளுநர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் ஈடுபடுத்தி இருக்கிறார்கள். இந்தத் திறமையை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பொதுவாக, ஆளுநர் அவர்கள் கூட்டு அவையில் தம் உரையை நிகழ்த்துகிறார்கள் என்றால் அந்த ஓராண்டுக் காலத்திற்கு அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிற திட்டங்களைப் பற்றிக் கூறுவதுதான் ஆளுநர் தம் உரையில் கூறுவது சம்பிரதாயம் என்பதை எல்லா மன்ற உறுப்பினர்களும் புரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் ஆளுநருடைய உரை 21 பக்கங்கள் நிரம்பியதாக இருக்கிறது—இந்த 21 பக்கங்களைப் படித்துப் பார்த்தால் இதில் பெரும்பகுதி தமிழக ஆட்சியினுடைய குறைகளை மத்திய அரசாங்கத்தின் மீது சுமத்துவதன் மூலம் தமிழக அரசைத் தப்புவிக்கும் முயற்சிதான் காணப்படுகிறது.



1975 பிப்ரவரி 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நாட்டில் இருக்கிற வறட்சியைப் பற்றியும், அந்த வறட்சியை நீக்குவதற்கு இந்த ஆட்சியில் இருக்கிறவர்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்று கூறுவதுமாகவே அவரது உரை இருக்கிறதே தவிர ஓராண்டுக் காலத்திற்கு இந்த அரசு செய்ய வேண்டிய வேறு நல்ல திட்டங்கள் எதுவுமே இல்லையா எதைப் பற்றியும் இல்லை. இதைக் கண்டு அண்ணா தி.மு.க. வருந்தாமல் இருக்க முடியவில்லை.

நம்முடைய ஆளுநர் அவர்கள் தம் உரையின் முடிவில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதைப் படித்துக் காட்டுவதே பொருத்தமாக இருக்கும் என்று படிக்கிறேன். "உணவுப் பிரச்சினை அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதை ஒப்புக் கொண்டு, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்குவர் என நான் நம்புகிறேன்" என்று ஒரு வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதற்காக ஆளுநரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆயினும், தமிழகத்தில் பெரும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது—பெரும் பகுதியில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது—குறிப்பாக முகவை மாவட்டப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்வதற்கு வழியில்லாமல் கன்னியாகுமரி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்குச் சென்று தஞ்சம் புகுகிறார்கள்—இதை இந்த ஆட்சியில் உள்ளவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் நாட்டில் இருக்கிற பஞ்ச நிலைமையைச் சமாளிக்க—பஞ்சத்தில் அல்லலுறுகிற நாட்டு மக்களைக் காப்பாற்ற என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆட்சியினர் எதிர்க் கட்சிகளைக் கூட்டி விவாதித்தார்களா என்பதைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் பற்றாக்குறை இருக்கிறது. பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. அண்ணா காலத்தில் நாட்டில் பற்றாக்குறைதான் இருந்ததே தவிர பஞ்சம் இல்லை. இதைத்தான் இந்தநேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இன்றைக்கு தபாலில் எனக்கு ஒரு பார்சல் வந்திருக்கிறது. அதைப் பிரித்துப் பார்த்தால் எப்பேர்ப்பட்ட உணவைத் தாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு அதில் மாதிரி அனுப்பியிருக்கிறார்கள். புல்லரிசி என்று சொல்லக்கூடிய இந்த உணவு—அறுவடைக் காலத்தில் புற்றுகளில் எலிகள் எறும்புகள் கொண்டு போய்ச் சேர்த்து வைத்திருக்கக்கூடிய அரிசி—இதை மனித ஜன்மங்கள் இன்றைக்குத் தேடித் துருவிக் கண்டுபிடித்து—இந்த அரிசியை அனுப்பியவர்களே எழுதியிருக்கிறார்கள்—3 மணி நேரம் தோண்டி எடுத்துப் பார்த்தால் ½ படி கிடைக்கும் என்று—இந்த

அரிசியைச் சாப்பிடுகிற அவல நிலைக்கு முகவை மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். அந்த அரிசியைக் கொண்டு வந்தே இங்கே காட்டுவேன். ஆனால் மன்ற விதிகள் அதற்கு இடமளிக்கவில்லை. இந்த அளவுக்கு மாநில மக்கள் பஞ்சத்தால் தாக்குண்டு வருந்திக் கொண்டிருக்கிற நிலையில் ஆளுங்கட்சியில் இருந்து பேசியவர்களும் சரி, ஆளுங்கட்சிக்குத் துணையாக இருந்து கொண்டிருக்கிற கட்சியில் இருந்து பேசியவர்களும் சரி, ஆளுங்கட்சியைக் காப்பாற்றுகிற வகையில் ஆளுங்கட்சியின் மீது வீசப்படுகிற களங்கத்தைத் துடைக்கின்ற வகையில் பேசியிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் உண்மை நிலையை எடுத்துச் சொல்லத் தவறியிருக்கிறார்கள். "வான் பொய்த்துவிட்ட காரணத்தினால் நாட்டுமக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள் அதற்கு நாங்கள்தானா காரணம்" என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். இதற்கு இயற்கைதான் கோளாறு என்கிறார்கள். அண்ணா தி.மு.க. சார்பில் ஒன்றை ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே இருக்கிற பஞ்சத்திற்குக், காரணம் இயற்கை பொய்த்தது மாத்திரமல்ல. வான் பொய்த்தது மாத்திரமல்ல. அரசாங்கத்தினுடைய கையாலாகாத்தனம், எடுக்க வேண்டிய காரியங்களை, செய்ய வேண்டிய காரியங்களை, செய்ய வேண்டிய நேரத்திலே, செய்யத் தவறிய காரணத்தாலே, இன்றையதினம் இந்தப் பஞ்சம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் சொன்னால், நீங்கள் மனச்சாட்சி உள்ளவர்கள் சிறிது நேரம் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை மறந்துவிட்டு, சொல்வது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மறந்துவிட்டு, அல்லது சொல்கின்றவர்கள், எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள், சதா குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், குறை கூறிக் கொண்டிருக்கிறவர்கள் என்பதை மறந்துவிட்டு, நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களானால் ஏற்றுக் கொள்வீர்கள்.

ஆளுநர் அவர்கள், கடந்த ஆண்டு இந்த நாட்டினுடைய விளைச்சல் ஏறத்தாழ 56 இலட்சம் அரிசி—இந்த ஆண்டு மழை இல்லை, தண்ணீர் இல்லை. எங்கே பார்த்தாலும் வறட்சியிருக்கிறது. காவிரி ஆற்றிலேயிருந்து நமக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீர், தேவையான அளவு, தேவையான நேரத்தில் கிடைக்கவில்லை யென்றாலும்—தன் உரையிலே கூறியிருக்கிறார் இவ்வாண்டிலேயே 43 இலட்சம் டன் அரிசி விளையலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்று

இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1969-ம் ஆண்டு, இதே மாதிரி—இதே அளவிற்கு இல்லாவிட்டாலும்—பஞ்சம்





தமிழகத்திலே இருந்திருக்கிறது. அன்றையதினம் தமிழகத்திலே வாழ்ந்த மக்கள் எந்த மாவட்டத்திலும் சரி, யாராவது பஞ்சத்தால் வாடினார்களா? பட்டினி கிடந்து இறந்தார்களா? வாழ வழியில்லாமல், உண்ண உணவில்லாமல், இருக்கிற இடத்தைவிட்டு இடம் பெயர்ந்து, வேறு இடம் நாடிச் சென்றார்களா என்றால், 1969-ல் அந் நிலை ஏற்படவில்லை. இப்பொழுதிருக்கிற நம்முடைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிதான் அப்பொழுது முதலமைச்சராக இருந்தார்கள். அதே முதலமைச்சர்தான் இப்பொழுது தமிழகத்திலே இருக்கிறார். எங்களுக்கிருக்கிற வேதனையும் ஆச்சரியமும் எல்லாம் 1969-லே பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில், அன்றையதினம் தமிழகத்தைக் காப்பாற்றத் திறமை கொண்டிருந்த முதலமைச்சர்—தமிழக முதலமைச்சர்—1974-லே வறட்சி ஏற்பட்டிருக்கிறபோது தமிழகத்தைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்பதுதான்.

1967-68-ம் ஆண்டு தமிழகத்தில் விளைந்த விளைச்சல் அரசு கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி ஏறத்தாழ 38.46 இலட்சம் டன். 1968-69-ல் உற்பத்தியான விளைச்சல் அளவு, அரசு கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி 35.50 இலட்சம் டன். அந்த அளவுக்கு உற்பத்தியாகி இருக்கிறது 1969-லே. நாட்டிலே வறட்சி இருந்த நேரம் அது. ஆனால், நாட்டிலே உற்பத்தியான விளைச்சல் 35.50 இலட்சம் டன். ஆனால், இப்பொழுது என்ன விளைச்சல் நீங்கள், தயவு செய்து உங்கள் எண்ணங்களைத் திருப்பிப் பார்க்க வேண்டும், சிந்தனையைக் கொஞ்சம் பின்னுக்கு ஓட்டிவிட வேண்டும். அன்றையதினம் படி அரிசி என்ன விலை விற்றது? இன்றையதினம் 43 இலட்சம் டன் அரிசி விளையும் என்று ஆளுநரே எதிர்பார்த்து, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். சென்ற ஆண்டு 56 இலட்சம் டன் விளைந்திருப்பதாகச் சொல்கிறார். ஆனால், 1969-ல் வெறும் 35 இலட்சம் டன்தான். இன்றைக்கு 43 இலட்சம் டன் விளைகின்ற அளவுக்கு விளைச்சல் இருந்தும், இன்றைக்குப் படி அரிசி ரூ. 7-க்கு விற்கிறது என்பது மாத்திரமல்ல உங்களாலே கிராமங்களிலே, குக்கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கு அரிசியை ஒழுங்காகப் பங்கீடு செய்ய முடியவில்லை யென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆகவே, ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் சொல்கின்றதைப் போல், இயற்கை பொய்த்தது மாத்திரம் காரணமென்றால், அதனை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இங்கே செயற்கை முறையிலே பஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கியவர்கள் ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கிறவர்கள். அவர்களுடைய அலட்சியமான போக்கு, அலட்சியமான மனப்பான்மை,

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1975 பிப்ரவரி 27

இவைகளினுல்தான் இன்றையதினம் இப்படிப்பட்ட ஆர்ட்டிஃபிஷியல் ஃபாமின் உருவாக்கப்பட்டு, பஞ்சம் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிற தென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

ஆளுநரது உரையிலே சொல்லியிருக்கிருர்கள் பருவ மழை அறவே பொய்த்து விட்டதால் ஏற்பட்டுள்ள அசாதாரணமான நிலே என்று. அசாதாரணமான நிலைமை நாட்டிலே இருக்கிறது. ஆளுகின்றவர்களுடைய கடமை—வருமுன் காப்பவர்களாக இருக்க வேண்டும். வந்த பின்னுலே அதற்குப் பரிகாரம் என்ருல் என்ன அர்த்தம்? கண்ணிருக்கும்போது சூரிய வணக்கம் செய்து கொள்ள வேண்டும். கண்ணே இழந்த பின்னுலே சூரிய வணக்கம் செய்ய முடியுமா என்ருல் நிச்சயமாக முடியாது. அதற்குப் பின்னுலே, வருந்திப் பயனில்லே என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனுக இருக்கிறேன்.

1969-ல் ஏறத்தாழ 35 இலட்சம் டன் அரிசி விளேந்த நேரத்தில், 9½ இலட்சம் டன் அரிசியை அப்பொழுது கொள்முதல் செய்து வைத்திருக்கிருர்கள். ஆனுல், 56 இலட்சம் டன் அரிசி உற்பத்தியான இந்த ஆட்சிக் காலத்திலே, கடந்த ஆண்டு நீங்கள் எவ்வளவு கொள்முதல் செய்து வைத்திருக்கிறீர்கள்? 47,000 டன் கொள்முதல் செய்திருக்கிறீர்கள். 35 இலட்சம் டன் அரிசி விளேந்த நேரத்தில், 9½ இலட்சம் டன் கொள்முதல் செய்து வந்திருந்தது எங்கே, இப்பொழுது 56 இலட்சம் டன் சென்ற ஆண்டு விளேச்சலிருந்தும் 47 ஆயிரம் கொள்முதல் செய்து வைத்திருப்பது எங்கே என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதனே எண்ணிப் பார்ப்பீர்களானுல் உங்களுக்கு ஒரு உண்மை புலப்படும்.

கொள்முதல் செய்யப்பட வேண்டிய காலத்திலே, போதுமான அளவு கொள்முதல் செய்து வைத்திருப்பீர்களானுல் இந்த அளவு இன்றையதினம் தமிழகத்திலே பஞ்சம் இருந்திருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விகிதாசாரப் பிரகாரம் பார்த்தாலும் உண்மை தெரியுமே. இன்றைக்கு 56 இலட்சம் டன் விளேந்திருக்கிறது. அதற்கு விகிதாசாரப்படி பார்த்தால், கடந்த ஆண்டிலே 15 இலட்சம் டன்னுவது நீங்கள் கொள்முதல் செய்து வைத்திருக்க வேண்டும். செய்யத் தவறிவிட்டீர்கள், ஆகவேதான் இன்றைக்கு நாட்டிலே பஞ்சம். அரிசி விலே ரூ. 76, முகவை போன்ற பகுதிகளிலே அரிசி கிடைக்காமல் புல்லரிசியைத் தேடிக் கொண்டு போக வேண்டிய அளவுக்கு, எறும்புகளோடு போட்டியிட வேண்டிய அளவுக்கு நிலேமை ஆகியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



1975 பிப்ரவரி 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

இதை யெல்லாம் பார்த்தால் தெரியும், இந் நிலேமைக்குக் காரணம் இப் பஞ்சத்திற்குக் காரணம், இயற்கையின் கோளாறு மாத்திரமல்ல என்பது.

இன்னும், ஆளுநர் அவர்கள் பல திட்டங்களேச் சொல்லியிருக்கிருர்கள். உடனடியாக இப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது பரிகாரம் இந்த உரையிலே இருக்கிறதா? பஞ்சத்தாலே மக்கள் வாடிக் கொண்டிருக்கிருர்கள். மாவட்டம் விட்டு மாவட்டம் போய்க் கொண்டிருக்கிருர்கள் மக்கள். உடனடி நிவாரணம் இல்லே. இதற்கு முன்னுலே பஞ்சம் ஏற்பட்டால் கஞ்சித் தொட்டி திறப்பார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பட்டினியாலே வாடிக் கொண்டிருக்கிற மக்களுக்குக் கஞ்சி ஊற்றுவார்கள். ஆனுல் அதை ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்கள் செய்யவில்லே. பொறுப்புள்ள அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் செய்கிறது. அதற்கு எத்தனேயோ இடர்ப்பாடுகள், அதற்கு எத்தனேயோ வண்ணப்பூச்சுக்கள், நிறம் பூசிக் கொண்டிருக்கிருர்கள், ஏதோ நாட்டை ஏமாற்றுவதற்காக.

எங்கே கஞ்சி ஊற்றுகிருர்கள் என்று திரு. பெருமாள் அவர்கள் கேட்கிருர்கள். ஏதோ அவர்களுக்குத் தெரியத்தான் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் கஞ்சி ஊற்றுகிறது என்ற எண்ணத்தில் திரு. பெருமாள் அவர்கள் பேசினுரோ என்னவோ தெரியவில்லே. ஆனுல், அண்ணு திராவிட முன்னேற்றக் கழக ஏடான 'தென்னகத்'திலேயும், 'மக்கள் குரலி'லேயும் படம் பிடித்துக் காட்டினுர்கள். வரிசையிலே நின்று மக்கள் கஞ்சி வாங்குவதைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிருர்கள். இன்றையதினம் நாங்கள் கஞ்சி ஊற்றுவதைப் படம் பிடித்துக் காட்டியும் கூட, ஆளுங்கட்சிக்கு உடந்தையாக இருக்கிற திரு. பெருமாள் அவர்கள் எங்கே ஊற்றினுர்கள் என்று கேட்கிருர். இவர்கள் ஊற்றினுர்களா, நான் பார்க்கவில்லேயே, எங்கே ஊற்றினுர்கள் என்று எங்களேப் பார்த்துக் கேட்கிருரே தவிர, அரசைப் பார்த்து, நீங்கள் செய்தீர்களா என்று கேட்கவில்லேயே என்பதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. அந்த அளவுக்கு உடனடியாக நிவாரணம் தேடாமலிருக்கிறது ஆளுநரது உரை.

இந்த நிவாரணம் எப்படி இருக்கிறது? அடுத்த 9, 10 மாத காலத்தில் அவர்களெல்லாம் இருக்கிருர்களா? அல்லது பட்டினியாலே செத்துப் போகிருர்களா என்பதை யெல்லாம் கவனிக்காத அளவுக்கு ஆளுநர் சொல்லியிருக்கிருர். அடுத்த 9 அல்லது 10 மாதக் கால அளவில், வறட்சித் துயர் தனிப்புக்காக 55 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பெருந் திட்டம் ஒன்றை நிறைவேற்ற முற்பட்டுள்ளோம். . ." என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்

கிறார்கள். இது எந்த அளவிற்கு இருக்கிறதென்றால், ஒருவன் தனக்குக் கல்யாணம் ஆகவில்லை யென்ற காரணத்தால், இன்னொருவனிடம் போய் நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும், எனக்குப் பெண் கொடு என்று கேட்டானாம். அவன் யாரிடம் பெண் கேட்டானோ, அவனுக்கே திருமணம் ஆகவில்லை. அவன் உடன் சொன்னானாம், "பொறு, பொறு. நான் திருமணம் செய்து கொண்டு, ஒரு பெண் குழந்தையைப் பெற்று, அந்தப் பெண் குழந்தை பருவ மங்கையான பிறகு, அவளை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்று அந்த கருத்தைப்போல், வறட்சி நிவாரணப் பரிகாரம் ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நிலைமையிருக்கிறது.

அதில் சொல்லியிருக்கிறார் ஆளுநர், ஏரிகளில் தூர் வாரப் போகிறோம், தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க என்று. இப்பொழுதுதான் தெரிகிறது அரசுக்கு. இச் சட்டமன்றத்திலே கடந்த 7 ஆண்டுகளாகப் பேசுகிறார்கள். எனது தொகுதியில் ஆழப்படுத்துங்கள், எனது தொகுதியில் ஆழப்படுத்துங்கள் என்று இங்கு சொன்ன நேரத்தில் அந்த வேலைகளைச் செய்யாமல், இப்பொழுது வறட்சி ஏற்பட்ட பின்னால், இனிமேல் வானம் பொழியும், வானம் பொழிந்தால் குளங்களெல்லாம் நிரம்பும், குளங்களெல்லாம் நிரம்பினால் பயிர் விளையும், பயிர் விளைந்தால் பஞ்சம் போகும் என்கின்ற அளவுக்குக் கற்பனை உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

தமிழ்நாட்டிலே இருக்கிற குளங்களைத் தூர் வாருவதற்கு இந்த அரசாங்கத்தால் முடியவில்லையா? முடியும். நானே எனது தொகுதியிலே எத்தனையோ திட்டங்களைக் கொடுத்திருக்கிறேன். நிறைவேற்றவில்லை. விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். கடலுக்குத் தண்ணீர் வீணாகப் போய்ச் சேருகிறது. அதை யெல்லாம் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய முறையிலே முயற்சியிலே ஈடுபடுங்கள் என்று சொன்னால், செய்யவில்லை அப்போது, இப்போது செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே எந்த அளவிற்கு ஆளுங் கட்சியினர் இதிலே அசமந்தமாக கவலையின்றி இருக்கின்ற நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்படவில்லை.

இப்போது சொல்கிறார்கள், குழாய்க் கிணறுகள் போடுவோம், கிணறுகளைத் தோண்டுவோம் என்று சொல்கிறார்கள். கிணறுகளைத் தோண்டுவதாலும், குழாய்க் கிணறுகளைப் போடுவதாலும் சென்னையிலே உள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு குடிநீர் கொடுக்க முடியுமா என்றால் எங்களுக்குச் சந்தேகமாக



இருக்கிறது. சென்னைக்கு எங்கேயிருந்து நீர் வருகிறதோ அந்த ஏரியை முன்னமேயே தூர் வாரியிருந்தால் தண்ணீர் தேங்கியிருக்கும். மழையில்லாத காலங்களிலே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்காது. விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை. வானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற குளங்கள் ஏராளம் இருக்கின்றன. தூர்ந்துபோய் இருக்கின்ற அவற்றை தூர் வாராததால் இன்றைக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. குளங்களை முன்பே தூர்வாரியிருந்தால் இப்போது தண்ணீர் இருந்திருக்கும், போன பயிருக்கு பயன்படுத்திய தண்ணீர் போக இப்போதும் பாசனத்திற்கும் தண்ணீர் இருந்திருக்கும்.

இதிலே வேடிக்கை என்ன வென்றால் விவசாயத்திற்குத் தண்ணீர் போதவில்லை என்ற நிலையிலே அந்தத் தண்ணீர் எந்த அளவிற்கு விரையமாக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி ஆற்றுப் பாசனம் இருக்கிறது. அந்த ஆற்றிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படுகிறது. பாபநாசம் அணையினுடைய தண்ணீர் 133.9 அடி இருந்தால் அந்த அளவிற்கு மழை பெய்து அங்கே தண்ணீர் நிரம்பினால் தாமிரவருணிப் பகுதியிலே பயிர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். சென்ற ஆண்டு அங்கே மழை பெய்யவில்லை. பாசனத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை, விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை, பயிர்கள் எல்லாம் வாடிக் கொண்டிருக்கின்றன. ஆற்றிலே தண்ணீர் வருகிறது, கால்வாயிலே தண்ணீர் வருகிறது. ஆனால் அந்தத் தண்ணீர் பயிர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதைவிட அத்தியாவசியமான காரியத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. அந்தத் தண்ணீர் தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் கம்பெனிக்குப் போய்க் கொண்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால், கொடுக்கிற தண்ணீரைக் குறைத்தாவது கொடுக்கிறார்களா என்றால் இல்லை, ஒரு நாளைக்கு 20 மில்லியன் காலன் தண்ணீர் கொடுக்கிறார்கள். ஏறத்தாழ ஒரு வினாடிக்கு 40 கியூபிக் பீட் தண்ணீர் கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு அத்தியாவசியமான விவசாயத்திற்குக் கொடுக்காமல் அந்தக் கம்பெனிக்குக் கொடுக்கிறார்கள்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, நண்பர் எட்மண்ட் குறிப்பிட்டதைப்போல் 40 மில்லியன் காலன் கொடுக்கப்படவில்லை, அதற்குக் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்கிறார்கள் என்றால் சேனலை லைன் செய்து மிச்சப்படுகிற தண்ணீரைத்தான் கொடுக்கிறார்களே தவிர அதிலே வருகிற தண்ணீரை எடுத்துக் கொடுக்கவில்லை. அதனால் வடகால் பாசனம் பாதிக்கப்படவில்லை, அங்கே விளைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரோ எட்மண்ட்: 40 மிலியன் காலன் என்று சொல்லவில்லை. 20 மிலியன் காலன் என்று இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

திரு. செ. கந்தப்பன்: மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்தைச் சொல்கின்ற காரணத்தினாலே அது ரெக்கார்டிலே போகக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தமிழக அரசு தூத்துக்குடியில் பல்வேறு தொழில்கள் வளர தூத்துக்குடி ஒரு பெரிய துறைமுகமாக ஆவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்கின்ற முறையிலே பல்வேறு தொழில்களுக்குத் தேவையான பணத்தை ஒதுக்கி, அந்தத் திட்டம் துவக்கப்பட்டு பல்வேறு தொழில்களுக்கு லைசென்சுகள் பெற்று தொழில்கள் துவங்கப்படுகின்ற கட்டத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தினை ஏஜண்ட் ஆகக் கொண்டு அங்கே இருக்கின்ற தொழில்களில் எந்த எந்தத் தொழில்களுக்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே குறிப்புகள் அனுப்பப்படுகின்றன. அந்த அளவு தண்ணீர்தான் ஒதுக்கப்படுகிறது, அதனால் அந்தப் பகுதி விவசாயிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. அந்த வட்டாரத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரும் கவனித்து—இன்னும் தெளிவாகவே சொல்ல வேண்டுமானால் முதலமைச்சர் அவர்களோடு பேசி—எந்த வகையிலும் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையிலே நல்ல முடிவு எடுக்கப்பட்டு பூர்த்தியானது.

இன்னும் பல்வேறு தொழில்கள் தண்ணீரை முழுமையாகக்கூட எடுக்கவில்லை, குறைவாகத்தான் எடுக்கிறார்கள். 20 மிலியன் காலனைப் பயன்படுத்த இன்னும் நாளாகும். திட்டம் முடிவடையவில்லை. அதனால் முழுமையாக எடுத்துக் கொள்ளவில்லை, குறைவான அளவில் எடுக்கிறார்கள். அதற்கான தொகையைக் கட்டித்தான் தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த விளக்கத்தைச் சொல்வது மிக மிக இன்றியமையாததாக இருக்கிறது. அடிப்படையாகவே ஒரு தவறான கருத்தை வெளியிலேயும் சொல்கிறார்கள். சில ஏடுகளிலேயும் வந்து கொண்டு இருக்கிறது என்ன காரணமோ தெரியவில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட்: 20 மிலியன் காலன் கொடுக்கிறார்கள். 35 காலன் அடிக்கு ரூபாய் 1,600 வரையில் கட்டணம் விதிக்கிறார்கள் என்று தெரிகிறது. ஸ்பிக்-க்கு கொடுக்கின்ற தண்ணீரில் சாதாரணமாக 1,500 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் கொடுத்து பாசனம் செய்ய முடியும்.



திரு. செ. கந்தப்பன்: தண்ணீர் ஏரியிலிருந்து எடுக்கப்படுகிறது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படவில்லை. அவர்களே முதலமைச்சர் அவர்களிடம் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நீங்களாகவே தகராறைக் கிளப்ப வேண்டாம். பல்வேறு தொழில்களுக்கு இணைப்புக் குழாய்கள் பொருத்தப்பட்ட வேண்டாம், பல்வேறு தொழில்களுக்கு இணைப்புக் குழாய்கள் பொருத்தப் பிறகு தண்ணீர் முழுமையாகத் தேவைப்படும். அந்தப் பணி இப்போது 1,000 மிலியன் காலன் தண்ணீருக்கு இவ்வளவு ரேட் தர வேண்டுமென்று பிக்ஸ் செய்திருக்கிறோம். அந்த ரேட்டைக் கொடுத்துத்தான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. நிர்வாகப் பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திலே இருந்து வருகிறது. ஒரு சில மாதங்கள் அல்லது ஓராண்டுக்கும் பிறகு இவ்வளவு தண்ணீருக்கு இவ்வளவு ரூபாய் என்று பில்லை அனுப்புகிறார்கள். ஆகவே, பணத்தைப் பெற்றுத்தான் கொடுக்கப்படுகிறது, யாருக்கும் சும்மா தண்ணீர் கொடுக்கப்படவில்லை, விவசாயிகள் பாதிக்கப்படுவதில்லை, எந்த ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் தண்ணீரைப் பிடுங்கி அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட்: குடிநீர் வாரியத் தலைவர் இப்படிச் சொல்கிறார்கள். நாங்கள் வேண்டுமென்றே குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. புதிய தகராறைக் கிளப்பவில்லை. வெளியே தகராறு நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உயர் மட்டத்திலே இருக்கிறீர்கள், அதனால் நீங்கள் சொல்வதை கேட்டுக் கொண்டு அவர்கள் போயிருக்கலாம், முதலமைச்சர், வாரியத் தலைவர் அதிகாரிகள் எல்லாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டு போயிருக்கலாம். ஆனால் வெளியே விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்காமல் ஸ்பிக்-க்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். Priority is given only to SPIC Co. and not to agriculturists பயிர் வாடிக் கொண்டிருக்கிறது. விவசாயத்திற்குத் தண்ணீர் கேட்டால் ஸ்பிக்குக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே தண்ணீர் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். தண்ணீருக்கு இவ்வளவு கட்டணம் என்று நிர்ணயித்திருக்கிறீர்கள். ஆனால் பணம் வசூலிக்கவில்லை.

(நண்பகல் 12-00)

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடு வேண்டாம். அவர் பேசி முடித்து, முதலமைச்சர் பேசியாக வேண்டும்.

**திரு. செ. கந்தப்பன் :** நான் விளக்கம் தரவில்லை. கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொன்னேன். கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. உரோ எட்மண்ட் :** தலைவரவர்களே, அந்த அளவிற்கு திரு. கந்தப்பன் அவர்கள் பேசும்பொழுது சொல்லிக் கொண்டு இருந்தார்கள். உரம் தேவையில்லையா ? நாங்கள் சொல்வதெல்லாம், விவசாயம் நடந்தால் உரம் தேவைதான். விவசாயத்திற்கே வழியில்லை. விவசாயத்தைத் தண்ணீரை வைத்துத்தான் செய்ய முடியும். அங்கே உர உற்பத்திக்கு மட்டும் தண்ணீர் கொடுக்கவில்லை, அதிகாரிகளின் வீட்டு உபயோகத்திற்கு, குடிப்பதவற்கு, குளிப்பதற்கு அந்தத் தண்ணீரைக் கொடுக்கிறார்கள். உர உற்பத்திக்கு மட்டும் தண்ணீர் கொடுக்கிறார்கள் என்றால் அதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைத் தவிர ஆளுநர் அவர்களின் உரையிலே வேறு எதையாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் குறிப்பிடவில்லை. முழுக்க முழுக்க வறட்சி. அந்த வறட்சியைப் போக்க என்ன செய்திருக்கிறோம் என்றால் மத்திய அரசாங்கத்தினிடத்தில் 30 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம், அவர்கள் 7½ கோடி ரூபாய்தான் தந்திருக்கிறார்கள் என்று ஆளுநர் அவர்கள் குறைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 22-ஆம் தேதி இங்கே வந்திருந்த நேரத்தில் ஒரு கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1969-ஆம் ஆண்டிலே வறட்சி நிவாரணத்திற்காகக் கொடுத்த பணத்திற்கு ஒழுங்காகக் கணக்கு கொடுக்கப்படவில்லை என்று பேசியதாக எல்லாப் பத்திரிகைகளிலேயும் பார்க்கிறோம். இந்த ஆண்டுகூட எனக்குத் தகவல் வந்திருக்கிறது. வறட்சி நிவாரணப் பணியில் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அந்த ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற குற்றச்சாட்டுகளை அந்த அம்மையார் அவர்கள் கூறிவிட்டுப் போய் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு வறட்சி நிவாரணப் பணி வேலைகள் மந்தமாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆட்சியானது ஒரு ஆண்டுக் காலத்தில் இந்த வறட்சிப் பணிகளை மட்டும் கவனித்தால் போதுமா ? இப்பொழுது அது அவசியம்தான், நாட்டிலே வறட்சி இருக்கிறது, அதைப் போக்குவதற்குண்டான வேலைகளைச் செய்யத்தான் வேண்டும் என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் இந்த ஒரு ஆண்டு காலத்திற்கு இந்தப் பணியை மட்டும் செய்துவிட்டால் முடிந்துவிட்டதா என்பதுதான் எங்களுக்கு இருக்கிற சந்தேகம்.



மாநகராட்சித் தேர்தல் நடைபெறவில்லை, நகராட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் இந்த ஆண்டாவது நடக்குமா என்பது தெரிய வேண்டும். அவைகள் நடக்கப் போகிறதா இல்லையா என்பது எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. அந்த அளவிற்கு நாட்டிலே எண்ணம் இருக்கிறது. போன சட்டமன்றத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சிகளிடம் கேட்டோம், அவர்கள் இந்த நகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்கச் சம்மதித்தார்கள், ஆகவே நாங்கள் ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் சொன்ன அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக நான் முதலமைச்சரவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்பொழுதாவது நகராட்சித் தேர்தல்கள் அடுத்து எப்பொழுது நடக்கும், அது நிச்சயமாக அறிவிப்பு செய்யப்பட்ட நேரத்திலே நடக்குமா, இல்லையென்றால் அந்த நேரத்திலே இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்து இன்னும் கொஞ்ச காலத்திற்கு நகராட்சிமன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுமா என்பது . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஒரு கட்சியின் சார்பில் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டதைப்போல இன்னொரு கட்சியின் சார்பில் ஒரு கோரிக்கையைக் கொடுத்தால் அந்தக் கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** முதலமைச்சரவர்கள் தந்திரமாகப் பதில் சொல்வதிலே கை தேர்ந்தவர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்த நேரத்தில் மார்ச் மாதத்தில் நிதி நிலை அறிக்கை கூட்டம் நடக்க இருக்கிறது, பிப்ரவரி மாதத்தில் ஆளுநர் உரை இருக்கிறது, ஆகவே, சட்டமன்றக் கூட்டம் நடக்கும் நேரத்தில் நகரசபைத் தேர்தல்களை நடத்தினால் அதில் பணியாற்ற வேண்டிய எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும், ஆகவே, சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு நடத்தலாம் என்று நானும் சொன்னேன். ஆகவே முதலமைச்சரவர்கள் ஒத்தி வைத்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சில இடையூறுகளைச் சொல்லி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. எட்மண்ட் அவர்கள் நகராட்சித் தேர்தல்களையும், உள்ளாட்சித் தேர்தல்களையும் ஒத்தி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போல இப்பொழுது யாராவது வறட்சி நிலவரத்தைக் காரணம் காட்டி அவைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொன்னால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** எங்கள் சந்தேகம் என்னவென்றால், நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்தக் காரணத்தைக் காட்டி நகராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்காக யாரையாவதுவிட்டு இந்தக் கோரிக்கையைக் கொடுப்பதற்காகத் தயார் செய்து வைத்திருக்கிறார்களோ என்னவோ என்ற சந்தேகம் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியானால் நீங்கள் சொன்னது கூட தயார்படுத்தப்பட்டதுதானா ?

திரு. க. உரோ. எட்மண்ட்: அன்றையதினம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நீங்கள் தற்செயலாகக் கேட்டீர்கள். அப்பொழுது நானும் தற்செயலாகத்தான் சொன்னேனே தவிர அது தயார் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குள்ள சந்தேகமெல்லாம், நீங்கள் இப்பொழுதே சொன்னீர்கள் வறட்சியைக் காரணமாகக் காட்டி யாராவது நகராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டால் ஒத்தி வைக்கப்படலாம் என்று சொல்வதால் அப்படி ஒருவேளை தயார் செய்திருக்கிறீர்களோ என்று சந்தேகம் இருக்கிறது.

மதுரை மாநகராட்சியைக் கலைத்தீர்கள், என்ன காரணத்திற்காகக் கலைத்தீர்கள்? அவர்கள் என்ன தவறு செய்தார்கள்? மாநகராட்சியின் காலம் முடிந்தது என்றால் இன்னும் ஒரு ஆண்டுக் காலம் நீடித்துக் கொடுத்திருக்கலாம். 1969 ஆம் ஆண்டில் தேர்தல் நடந்தது, பிறகு 1973-ல் தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குச் சட்டம் கொண்டு வந்து கூட ஒரு ஆண்டுக்காலம் பதவி நீடிப்புக் கொடுத்தீர்கள். 1975-ல் தேர்தல் நடக்க வேண்டும். மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் நடக்கும் காலம் வரையில் அந்த மாநகராட்சியின் காலத்தை நீடித்திருக்கலாம். ஆனால் அதைக் கலைத்தீர்கள். அப்படிக் கலைத்ததற்கு இந்த அரசாங்கம் எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை.

ஆனால், எங்களுக்கு ஒரு காரணம் தெரிகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு யார் காரணமாக இருந்தாரோ, அந்தத் தலைவரை அந்த இயக்கத்திலேயிருந்து வெளியேற்றுவதற்காக நம்முடைய முதலமைச்சரவர்களின் அந்தரங்க ஆளாக இருந்த முத்து அவர்கள்—முன்னாள் மேயர் முத்து அவர்கள்—உங்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கிறார்கள். காற்று திசை மாறி அடித்திருக்கிறது. உடனே நம்மை எதிர்க்கும் முத்து மேயராக இருக்கலாமா என்று நினைத்து அதற்காகவே மாநகராட்சியைக் கலைக்க வேண்டுமென்று கலைத்தீர்கள்.

அப்படிக் கலைத்ததைப் பற்றிக்கூட எங்களுக்குக் கவலையில்லை. எங்களுக்கு இருக்கின்ற கவலையெல்லாம் மாநகராட்சியைக் கலைத்திருக்கிறார்கள். மீண்டும் அந்த மாநகராட்சியை இயங்க வைப்பதற்கு தேர்தல் எப்பொழுது நடக்கும் என்று தெரிய வேண்டும். அதற்கான வரையறையைச் சொல்லியிருக்கிறார்களா என்றால் இதுவரையில் சொல்லவில்லை.

அதுபோல நகராட்சித் தேர்தல்கள் இன்னும் நடக்கவில்லை, என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், விவசாய அமைச்சர் மாண்புமிகு சி. பா. ஆதித்தன் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தொகுதியிலே





கவும் முக்கியமான நகரமாக இருக்கக்கூடியது ஸ்ரீவைகுண்டம். அது பெரிய பேரூராட்சி. அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடந்து, உயர்நீதி மன்றத்தில் அப்பீலுக்குப் போய், இப்பொழுது டெல்லியிலே சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போய் இருக்கிறது. இரண்டாண்டுக் காலம் முடிந்து விட்டது. ஆனால் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு இன்னும் தலைவர் தேர்தல் நடத்தவில்லை. அதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

அதேநேரத்தில் என்னுடைய தொகுதியிலே . தேமாங்குளம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் ஒரு சிற்றூராட்சி. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் பணம் கையாடல் செய்தார் என்று வழக்குப் போட்டு, நீதி மன்றத்தில் நிரூபிக்கப்பட்டு தண்டனை கிடைத்து பதவியை இழந்தார். ஆனால் அங்கே 6 மாத காலத்திற்குள்ளே தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீவைகுண்டத்திலே நடத்தாததன் காரணம் என்ன ? என்ன காரணம் என்றால் அது ஆதித்தன் தொகுதி. அவர் எதை நினைத்தாலும் செய்யலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆதித்தன் என்ன ஆணையிடுகிறாரோ அதைத்தான் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார். அந்த அளவிற்கு இரண்டு ஆண்டுகள் முடிந்தும் அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவர் தேர்தல் இன்னும் நடக்கவில்லை. தலைவர் இல்லாமல் துணைத் தலைவராக இருப்பவர் தற்காலிகமாகப் பதவி உயர்வு செய்யப்பட்டு, புரமோஷன் செய்யப்பட்டு பதவி வகித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு உங்களுடைய ஆட்சிக்கு, உங்களுடைய கட்சிக்குச் சாதகமாக யாராவது இருந்தால் அவர்களுக்கு ஒருவிதமாகவும், உங்களை எதிர்ப்பவர்களாக இருந்தால் அவர்மீது எதிர் நடவடிக்கைகளும், பதவியை விட்டு இறக்குவதுமாகிய இந்த முயற்சிகளிலே ஈடுபட்டு இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலையிலே எதிர்க் கட்சிகள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் வறட்சியைப் போக்குவதற்கு எங்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும், ஒத்துழைப்புத் தர வேண்டும், உற்சாகம் தர வேண்டும், ஊக்கம் தர வேண்டும் என்று கேட்டால் எதிர்க் கட்சிகள் என்ன செய்ய முடியும் ? அதை நம்முடைய தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே எடுத்துக் காட்டினார்கள். அவருடைய கட்சியைச் சார்ந்த திரு. சின்னசாமி அவர்கள் அன்றைக்குத் தவறு செய்தார்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான்கூட அப்பொழுதே திருத்த வேண்டுமென்று நினைத்தேன். தவறுதலாகச் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் சொன்னது அவர் திராவிட முன்னேற்றக்

கழகத்தில் இருந்தபொழுது செய்த தவறுக்காக என்று சொன்னார்கள். ஆனால், நான் சொல்வது, அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த பொழுது செய்யாத தவறுக்காக செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பொழுது அன்றைக்கு அவர் மேல் நடவடிக்கை எடுக்காமல், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்திற்கு வந்தவுடன் அந்த சின்னசாமி அவர்கள் மேல் வழக்கைப் போட்டார்கள். இன்றையதினம் அந்த வழக்கு என்ன ஆயிற்று? நான் உண்மையிலேயே சொல்கிறேன், அந்த வழக்கு என்றைக்கு நீதிமன்றத்திலே தோல்வி அடைந்ததோ அன்றைக்கே இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அதுதான் முறை. (குறுக்கீடு) நான் இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசவில்லை. ஆளுநர் உரைமீது பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்திருக்கிறேன். உங்களுடைய கவனத்திற்காகக் கொண்டு வருகிறேன். கட்சி மாறியவுடனேயே வழக்கைப் போட்டார்கள். இன்றைக்கு அதுதானே நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு இன்றைக்கு நாட்டிலே நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல, நேற்றைக்கு நடந்த சம்பவம். எதனால் அவர் தாக்கப்பட்டார்? ஏற்கனவே ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேசியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து சில நிலைமைகளைக் கொண்டு வருவதற்கு நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன் என்ற முறையில் பேச இருக்கிறேன். நேற்று அவர் தாக்கப்பட்டார். இத்தனை காலமாக தாக்கப்படாத திரு. வெங்கா அவர்கள் நேற்று தாக்கப்பட்டார் என்றால் மூன்றுநாள் வரையில் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்துவிட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறார்.

தி.மு.க. வில் இருக்கும்போது அவருக்கு எதிரிகள் இல்லையா? இந்த விரோதிகள் நேற்றுத்தான் முளைத்தார்களா? முதலமைச்சர் அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள்; பத்திரிகையிலே வந்திருக்கிறது. 'இது அவருடைய சொந்தக் கருத்து வேறுபாட்டால், விரோதத்தால் ஏற்பட்டது, என்ற அளவிலே சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தவறான தகவலைத் தர வேண்டாம். நெல்லையிலே பேசும்போது 'அரசியல் காரணமா அல்லது சொந்த விரோதமா என்பதெல்லாம் பின்னால்தான் தெரியும்; இப்போது அறுதியிட்டுக் கூற இயலாது' என்று தான் கூறியிருக்கிறேன்.





திரு. க. உசொ. எட்மண்ட்: அந்த அளவுக்கு திரு. வெங்கா அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நேற்றைய முன்தினந்தான் அண்ணா தி.மு.க. வுக்கு வந்திருக்கிறார்கள். இவ்வளவு காலமும் இல்லாத விரோதம் நேற்றைய தினம் முளைத்திருக்கிறதா? நீங்கள் நேர்மையான எண்ணத்தோடு, நியாயத்தின் பக்கம் நின்று கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் அரசியலைத் தவிர வேறு காரணம் இருக்குமென்று யாரும் முடிவுக்கு வர மாட்டார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: கட்சி மாறிய எல்லோரையும் இப்படித் தாக்கியிருக்கிறார்களா?

திரு. க. உசொ. எட்மண்ட்: கட்சி மாறிய எல்லோரையும் தாக்கவில்லை. ஆனால் நான் தாக்கப்பட்டிருக்கிறேன். என்னுடைய ஊரிலே தாக்கப்பட்டிருக்கிறேன். நான் இல்லாத நேரத்தில் என்னுடைய வீட்டுக்குச் சில ரவுடிகள் வந்து குழப்பம் செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்குச் சம்பவங்கள் நடக்கின்றன. இல்லையென்று சொல்ல முடியாது.

திரு. வெங்கா அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இன்னொரு உண்மையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வந்தவர்கள் எந்தக் காரில் வந்தார்கள் என்று குறிப்பிட்டு நம்பரைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய காவல் துறையின்மீது அண்ணா தி.மு.க.வுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட இந்த அரசு விடவில்லை. காவல் துறை சுதந்திரமாக இயங்கியிருந்தால் குற்றவாளிகள் இதற்குள் பிடிபட்டிருக்க முடியும். அந்தக் கார் நம்பரை வைத்து இன்வெஸ்டிகேஷன் செய்தால், கார் நம்பரை வைத்து டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அலுவலகத்தில் பார்த்தால் அது யாருடைய கார், சொந்தக்காரர் யார் என்று கண்டு பிடித்து விடலாம், அந்தக் காரை ஓட்டியவர் யார் என்று கண்டுபிடித்து விடலாம், அந்தக் கார் அந்த முதலாளி வீட்டுக்குத் திரும்ப வந்ததா, வரவில்லையா என்று கண்டுபிடித்து விடலாம். அந்த நிலையில் இன்னும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் காவல் துறை சுதந்திரமாக இயங்க முடியாத நிலைதான்.

என்னுடைய மாவட்டத்தில் சங்கரன்கோயில் சட்டமன்ற உறுப்பினர், பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் மீது வழக்குப் போடப்பட்டிருந்தது. என்ன வழக்கு என்பதைச் சொல்லுவது நாகரிகம் அல்ல, சொல்லத் தயாராகவும் இல்லை. வழக்கு உண்மையா, பொய்யா என்று சொல்லத் தயாராக இல்லை. உண்மையாக இருக்கலாம், அல்லது பொய்யாகவும் இருக்கலாம், அந்த வழக்கு விசாரணைக்குப் பின்னால் பொய் என்று தெரிந்த காரணத்தால்

தன்னுபடி செய்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். என்னுடைய குற்றச் சாட்டு எல்லாம் இந்த வழக்கைக் கொடுத்ததற்குப் பின்னால் அங்கிருக்கும் டி.எஸ்.பி. வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்; எஃப்.ஐ.ஆர். போட்டார் என்பதற்காக 24 மணி நேரத்தில் அவரை சங்கரன்கோயிலில் இருந்து மாற்றியிருக்கிறார்கள். எதற்காக மாற்ற வேண்டும்? அவர் ஒரு காவல் துறை அதிகாரி. யாரோ குற்றச்சாட்டு கொடுக்கிறார்கள். யார் மீது குற்றச்சாட்டு இருந்தாலும் குற்றச்சாட்டைக் கொடுத்தவுடன் வழக்கைப் பதிவு செய்யக் கடமைப் பட்ட காவல் துறை அதிகாரி வழக்கைப் பதிவு செய்த காரணத்தால் மாற்றப்பட்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் திரு. வெங்கா அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணா தி.மு.கவுக்கு இது என்ன முதல் சம்பவமா? நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மனோகரன் முன்பு தாக்கப்பட்டார்.

திரு. எல். கணேசன்: திரு. வெங்கா அவர்கள் தாக்கப்பட்டதற்கு அரசியல் நோக்கம் காரணம் என்றால் தஞ்சையிலே முசிறிப்புத்தன் எல்லாம் தாக்கப் பட்ட காரணம் அவர்களுக்குள்ளே இருக்கிற அரசியல் நோக்கமா?

திரு. க. உரொ. எட்மண்ட்: எங்களுக்குக் கிடைத்த தகவல் எல்லாம் தஞ்சையில் முசிறிப்புத்தனைத் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தாக்கியிருக்கிறார் கள் என்பது.

திரு. எல். கணேசன்: அது உண்மை என்றால் அதற்கான ஆதாரத்தைத் தரட்டும். அவர்களுக்குள்ளேயே தாக்கிக் கொண்டார்கள் என்பதற்கு என்னாலே ஆதாரத்தைக் காட்ட முடியும்.

திரு. கா. காளிமுத்து: மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் வைகை அணைப் பகுதியில் நடந்தபோது அவர்களுக்குள்ளாகவே தாக்கிக் கொண்டார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அது அரசியல் நோக்கமா என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காளிமுத்து விவகாரம் பற்றி அரசியல் நோக்கம் எதுவும் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: விமான நிலையத்தில் திரு. மனோகரன் தாக்கப் பட்டார். யார் அதற்குக் காரணம் என்று எழுதிக் கொடுத்தார்கள். எவ்வளவு ஆண்டுகள் ஆகிவிட்டது? தாக்கியதாகச் சொல்லப்பட்டவர்கள் மீது



நடவடிக்கை எடுத்தார்களா? வழக்குப் போட்டிருக்கிறார்களா? அந்த அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. பாண்டிச்சேரி முன்னாள் அண்ணா தி.மு.க. முதலமைச்சர் மதிப்பிற்குரிய நண்பர் ராமசாமி அவர்கள் சென்னையில் வந்து . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மனோகரனுக்கு ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி சம்பந்தமாக பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு முடிவாகியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் வேறு பிரச்சனை எழவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த அரசாங்கம் என்ன செய்தது என்று கேட்கிறார். இதுவரை கம்ப்ளெயின்ட் எதுவும் கொடுக்கவில்லையே.

திரு. க. உரொ. எட்மண்ட்: புகார் கொடுக்கவில்லை என்பது இதற்குச் சாக்குப்போக்காகாது.

It is cognizable offence. Mr. Ganesan is a lawer and he knows about it.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை முடிவாகிவிட்டதாக மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் சொல்லு கிறார்கள். பாராளுமன்ற சபாநாயகர் இந்த அரசாங்கத்திற்குத் தாக்கீது கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு அதைப் பற்றி விசாரிக்கும் என்ற அளவிலே அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு அதைப்பற்றி விசாரிக்கவில்லை. பாராளுமன்றம் கொடுத்த தாக்கீதை இந்த அரசாங்கம் செயல்படுத்தாமல் மீறியிருக்கிறது என்ற பயங்கரமான குற்றச்சாட்டுக்கு ஆளாவார்கள் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. க. உரொ. எட்மண்ட்: நம்முடைய பாண்டிச்சேரி முன்னாள் முதலமைச்சர் திரு. ராமசாமி அவர்கள் . . . .(குறுக்கீடு) ஒரு நாளாக இருந்தாலும், அரை நாளாக இருந்தாலும், ஒரு மணி நேரமாக இருந்தாலும் அதைப்பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அப்படிக் கவலைப்பட்டிருந்தால் நீங்கள் அன்றைக்கு எங்களோடு ஒத்துழைத்திருக்க வேண்டும். நீங்கள் தான் அதைக் கவிழ்ப்பதில் மிக அக்கறையாக இருந்தீர்கள். காங்கிரஸ் கட்சிக்குக் கூட அவ்வளவு அக்கறை இல்லை. உங்களுக்கு எவ்வளவு அக்கறை? உங்களோடு பழகியவர்கள் நாங்கள். நீண்டகாலம் ஒன்றாக இருந்தவர்கள். அண்ணாவின் கொள்கையைத்தான் எங்கள் கட்சியும் ஏற்றுக் கொண் டிருக்கிறது . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒத்துழைப்பு வேண்டுமென்று தி.மு.க.விடம் அண்ணா தி.மு.க. பாண்டிச்சேரியைப் பொறுத்தவரை கேட்டதா?

திரு. க. உரொ. எட்மண்ட்: நாங்கள் கேட்டோமா இல்லையா என்பது வேறு. இன்னும் சொல்லப் போனால் நாங்கள் கேட்கவில்லை என்றாலும் நீங்கள் கொடுத்திருக்க வேண்டும். நியாயத்தின் அடிப்படையில் பார்த்தால் அண்ணாவின் கொள்கையைத்தான் நாங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்க வேண்டாமா? அதைத்தான் எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது காமராஜராக இருந்தாலும், இந்திரா காந்தியாக இருந்தாலும், ராமமூர்த்தியாக இருந்தாலும் அவர்கள் அண்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொண்டால் ஆதரவு கொடுப்போம், ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்திரா காந்தி அம்மையார், இராமமூர்த்தி, காமராஜர் ஆகியோர் அண்ணாவின் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாவிகளாகிய நாங்கள்தான் அண்ணாவின் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: அவர்கள் அண்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று சொல்லவில்லை. இந்திரா காந்தி அம்மையாரோ, காமராஜரோ அண்ணாவின் கொள்கையைத் தங்களுடைய கொள்கையாக ஏற்றுக் கொண்டால் அவர்கள் முதலமைச்சராகவோ, பிரதம அமைச்சராகவோ இருந்தால் அவர்களுக்கு அண்ணா தி.மு.க. தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுக்கும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் குறுக்கிட விரும்பவில்லை. அண்ணாவின் வழி என்று சொன்னார்கள். அதற்கு ஒரு சிறு திருத்தம். அண்ணாவின் கொள்கையில் மாநில சுயாட்சி தவிர மற்ற கொள்கைகளையெல்லாம் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அந்த அடிப்படையில் பேச வேண்டும். மாநில சுயாட்சி என்ற கொள்கையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஆலடி அருணா: மாநில சுயாட்சி கருத்தில் வேறுபாடு இருக்கட்டும் [illegible]. மாநில சுயாட்சி பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய நன்மை தீமை பற்றி நான் விளக்க விரும்பவில்லை. மாநில சுயாட்சி அண்ணா சொன்னார் என்று சொல்வது தவறு.



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதற்கான விளக்கம் கொடுத்து அருணா அவர்களே இங்கே சொற்பொழிவு செய்தார்கள். மாநில சுயாட்சி குறித்து அவர்களே விளக்கியிருக்கிறார்கள். ஆகவே, மாநில சுயாட்சி அண்ணா சொல்லவில்லை என்று சொல்வது அவர் பேசிய பேச்சையே மறுப்பதாக ஆகும்.

திரு. ஆலடி அருணா: நான் மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசினேன். அதிலே கருத்து முரண்பாடு இல்லை. ஆனால், அண்ணா சொன்னார் என்று சொல்வது தவறு. நான் அண்ணா சொன்னதாகச் சொல்லவில்லை. என்னுடைய பேச்சைப் படித்துப் பார்க்கட்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மாநில சுயாட்சி பற்றி இப்போது குழப்ப வேண்டிய தேவை இல்லை. மாநில சுயாட்சி பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய கருத்தை, அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்கும். அந்த நேரத்தில் அதனுடைய கொள்கை என்ன என்பதைக் கூறும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சி பற்றி அண்ணா சொல்லவில்லை என்பதால் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மதுரை மாநாட்டில் உங்கள் கட்சியின் தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்களே, அதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாநில சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா சொன்னதாக நான் சொல்லவில்லை. மாநில சுயாட்சி என்பதை அண்ணா சொல்லவில்லை. அண்ணாவின் பெயரால் அதைச் சொல்வது தவறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா சொல்லவில்லை. ஆனால் உங்கள் தலைவராக இருக்கிற நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மதுரை மாநாட்டில் பேசியிருக்கிறார்களே, அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

திரு. ஆலடி அருணா: எங்களுடைய கட்சியின் தலைவர், அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அது அண்ணாவின் கொள்கை. அதை நாங்கள் சொல்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சி குறித்து ஒரு மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டை என் அண்ணா அவர்கள் இருக்கும்போது நடத்தவில்லை? அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தார்கள்.

கட்சியின் பொறுப்புள்ள பதவியில் இருந்தார்கள். அப்படி நடத்துவதற்கு அப்போது ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னையில் 1968-ம் ஆண்டு நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி பற்றி அழுத்தம் திருத்தமாக வரையறுத்துப் பேசியிருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: திரு. ம. பொ. சி. அவர்கள் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தோழமைக் கட்சி என்ற அளவில் கலந்து கொண்டு பேசினார்கள். அதற்காக அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலும் மேலும் தவறான வாதத்தைச் சொல்லக் கூடாது. கலந்து கொண்டார்கள். கலந்து கொண்டது மட்டுமல்ல, மாநில சுயாட்சி பற்றி நீண்ட நேரம் பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சு முழுவதையும் நான் இங்கே படித்துக் காட்டியிருக்கிறேன். அந்தக் காலத்திலேயே 'எக்ஸ்பிரஸ்' 'ஹிந்து' போன்ற பத்திரிக்கைகளில் அது வந்திருக்கிறது.

திரு. ஆலடி அருணா: அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி; நான் மாஸ்கோ செல்வேன், மாலங்கோவைச் சந்திப்பேன் என்றார்கள். இதனால் அவரை கம்யூனிஸ்ட் என்று கூறலாமா? ஒரு கட்சியின் கொள்கை என்பது வேறு. ஒரு கட்சிக்குத் தோழமையாக இருப்பதால் சொல்வது வேறு. ஒரு கட்சிக்கு ஒத்துழைப்புத் தருவது வேறு. அதுவே தலைவரின் கொள்கையாக ஆகிவிடாது.

திரு. இராம. அரங்கண்ணல்: அண்ணாவின் பாதையில் அண்ணாவால் உருவாக்கப்பட்டவர்கள் நாங்கள்: அவர்கள் சொன்ன கொள்கையின் அடிப்படையில்தான் நாங்கள் நடத்து வருகிறோம். அப்படி இருக்கிற நேரத்தில் அவர் மாநில சுயாட்சிபற்றிச் சொல்லவில்லை என்று சொன்னால் . . .

(திரு. ஆலடி அருணா, திரு. பெ. சீனிவாசன் எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சித் தலைவர் பேசட்டும்.





திரு. பெ. சீனிவாசன்: அண்ணாவின் பாதையில் அண்ணாவால் உருவாக்கப்பட்டவர்கள் என்று சொல்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் வேறு பாதையின் வரவில்லை. நாங்களும் திரு. அரங்கண்ணல் எப்படி உருவானாரோ, அதைவிட தீவிரமாக அண்ணாவால் உருவாக்கப்பட்டவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இன்னும் ஒத்துக்கொள்கிறேன். உங்கள் தலைவரைவிட நீங்கள் நல்ல தியாகிகள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

திரு. க. உசோ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய பாண்டிச்சேரியின் முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய ராமசாமி அவர்கள் இந்த ஆண்டுக்கு முன்னால் என்று கருதுகிறேன், நம்முடைய சென்னையில் இருக்கிற தாசப்பிரகாஷ் ஓட்டலில் தங்கியிருந்தார்கள். அங்கே வந்து அவரைச் சில பேர் தாக்கினார்கள். அந்தத் தாக்குதல் நடைபெறுகிறபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் செக்யூரிடி ஆபீசர் அங்கே இருந்தார் என்ற தகவல் எனக்குக் கிடைத்து இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள், மனோகரன் புகார் கொடுக்கவில்லை, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்கள். ராமசாமி அவர்கள் தாக்கப்பட்டபோது அவர்கள் வெளியே வர முடியாமல் பல பேர் சூழ்ந்துகொண்டு இருந்ததால் அவர் அங்கேயிருந்து தலைமைக் கழகத்திற்கு போன் செய்து தகவல் கொடுத்தார்கள், நாங்களெல்லாம் காவல் துறை தலைமை அதிகாரிக்குத் தகவல் கொடுத்தோம். என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலமைச்சரின் செக்யூரிட்டி ஆபீசர் இருந்தார் என்று கூறுவது தவறாகும். இதில் அரசியல் நோக்கங்கள், பெரிய எதிர்க் கட்சித் தலைவர் எட்மண்ட் போன்றவர்கள் பேசக் கூடாது.

திரு. க. உசோ. எட்மண்ட்: நான் எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன். முதலமைச்சர் இல்லை என்று மறுத்து இருப்பதாலே நான் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அங்கே செக்யூரிட்டி ஆபீசர் இருந்தார் என்ற தகவல் கிடைத்தது மட்டுமல்ல; பார்த்தவர்களைக்கூட இங்கே கொண்டு வந்து காட்ட முடியும். அவர்களை இங்கே விட்னஸ்ஸாகக் கொண்டு வரமுடியும். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்போது நாங்கள் கம்ப்ளெயின்ட் கொடுத்தோம், அந்த நேரத்தில் செக்யூரிட்டி ஆபீசர் இருந்தார் என்றும் கம்ப்ளெயின்ட் கொடுத்தோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஹாண்டே அவர்கள் அதை நிரூபிக்க வேண்டும். எந்த செக்யூரிட்டி ஆபீசர், அவருடைய பெயர் என்ன என்பதைச் சொல்ல வேண்டும். செக்யூரிட்டி ஆபீசரை எந்த முதலமைச்சரும் அனுப்ப மாட்டார் இன்னொருவரைத் தாக்க. இப்படிப்பட்ட குற்றச்சாட்டை ஹாண்டே அவர்கள் நிரூபிக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அட் எனி டைம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த அளவுக்கு எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. கடந்த சனிக்கிழமை 22-ம் தேதி நம்முடைய இந்திய நாட்டின் பிரதம அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். அவர்களுக்கு ஆசிரியர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள். மக்களாட்சித் தத்துவத்தில் ஏற்றுக் கொண்ட முறை, ஆளுகிறவர்கள் மீது தமக்கிருக்கிற எதிர்ப்பைக் காட்டுவதற்காக கறுப்புக்கொடி காட்டுவது அங்கீகரிக்கப்பட்டது. இதற்குச் சட்டம் குறுக்கே நிற்கவில்லை. அவர்கள் கறுப்புக் கொடி காட்டினார்கள். இங்கே ஆண்டு கொண்டு இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். இந்திரா காந்திக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டப்பட்டது. காட்டியவர்களையெல்லாம் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டு சில மணி நேரம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு இருந்தார்கள். பின்னாலே விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் என்னுடைய வாதம் எல்லாம், இதே வகையான இங்கேயிருக்கிற எதிர்க் கட்சிகள் இங்கேயுள்ள அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டினால் இதே முறையில் நடத்துகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டினால் வேறுமாதிரி நடப்பதாகச் சொன்னார்கள். நான் ராஜபாளையத்திற்குச் செல்கிறபோது அங்கே கறுப்புக் கொடி காட்டினார்கள். அதோடு மட்டுமல்ல, 300—400 பேர் சேர்ந்து கொண்டு கம்பால் காரை கூட அடித்து இருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் நான் தெரிவிக்கவில்லை. அந்தச் சம்பவம் குறித்து யாரும் கைதாகவும் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு சுகாதார அமைச்சருக்கு ராஜபாளையத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும். அன்றையதினம் மக்கள் வெள்ளம் திரண்டு . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மக்கள் வெள்ளம் திரண்டு இருந்தாலும், போலீசார் வேண்டுமென்று நினைத்து இருந்தால் அடிதடி நடத்தி இருக்கலாம். அல்லது அதில் ஈடுபட்டவர்களைப் போலீசார் கைது செய்து இருக்கலாம்.



இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று போலீசாருக்கு ஆணை பிறப்பித்து அவர்கள் நடப்பது இல்லை. ஆங்காங்கே உள்ள நிலைமைகளுக்குத் தகுந்த வகையில் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். அமைதியாகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டால் அதை ஒழுங்குமுறைப்படுத்த போலீசார் வருகிறார்கள். இன்றைக்கு அமைச்சர்களாக இருக்கிறவர்கள், அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டினால் அவர்களை உடனடியாகக் கைது செய்யுங்கள் என்று எந்த அமைச்சரும் சொல்வது இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நான் கூடப் பத்திரிகையில் பார்த்தேன். நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் . . . திரு. சுப்பு அவர்கள் சிரிக்கிறார்கள், எதற்காக என்று தெரியவில்லை.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, அங்கே மக்கள் வெள்ளம் திரண்டு வந்தது என்று சொன்னார்கள். பிரதமர் வரும்போது ஆளே இல்லையா? (சிரிப்பு)

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் ராஜபாளையத்திற்குச் சென்றபோது கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது. நான் அதையெல்லாம் பத்திரிகையில் பார்த்தேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பெருமையாகச் சொல்கிறார்கள், அங்கே யாரையும் கைது செய்யவில்லை . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நம் எதிர்க் கட்சித் தலைவர் கறுப்புக் கொடி காட்டுகிற பணியில் சில நேரத்தில் ஈடுபட்டு இருப்பார்கள். கறுப்புக் கொடி காட்டுகிற நேரத்தில் கார் போவதற்கு வழியை விட்டு விட்டு தூரமாக நிற்க வேண்டும். ஆனால் அங்கே என்ன செய்தார்கள் என்றால் நெருக்கமாக கார் அருகில் வந்து கம்பால் அந்தக் காரை அடித்தார்கள். அது வேறு ஒருவரின் கார். கார் மீது கம்பு அடி பட்டு, அந்தக் கார் ஓட்டியின் திறமையால் அசம்பாவிதம் ஏதும் நடக்கவில்லை. போலீசாரும் இரண்டு பக்கத்திலும் இருந்தார்கள். அப்படி நடந்து இருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதற்காகக் கூறினேன்.

(பிற்பகல் 12-30)

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ராஜபாளையத்தில் கறுப்புக் கொடி காட்டியபோதிலும், கறுப்புக் கொடி காட்டியதில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யவில்லை என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு வேளை அப்படிச் செய்தது அவர்களுடைய பெருந்தன்மையாக இருக்கலாம். அல்லது, அங்கிருக்கிற சூழ்நிலையில் காவல் துறையைச் சேர்ந்த

வர்கள் மேற்கொண்டு யாரையாவது கைது செய்தால் அதைவிடக் கொடுமையான சம்பவம் நடைபெறலாம், அசம்பாவிதம் நடைபெறலாம் என்று அவர்கள் கருதி கைது செய்யாமல் விட்டிருக்கலாம். அதைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை.

கடந்த ஜனவரி 29-ம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில், கனியூர், கடத்தூர் என்ற இரண்டு கிராமங்களுக்கிடையே ஒரு பாலத்தைத் திறப்பதற்கு ஒரு விழாவில் கலந்து கொண்டார்கள். விழாவை மிக ஆடம்பரமாக நடத்தினார்கள். நாட்டில் இவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிற நேரத்தில், பஞ்சத்தால் நாட்டு மக்கள் குடிபெயர்ந்து கொண்டிருக்கிற நிலையில், மக்கள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிற நிலையில், இவ்வளவு ஆடம்பரமாக ஒரு விழாவை நடத்துகிறார்கள். இந்த விழாவில் முதல் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள் என்பதற்காக அங்கிருக்கிற அனைத்து எதிர்க் கட்சிகளும் சேர்ந்து ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். கறுப்புக் கொடி காட்டினார்கள். அப்பொழுது அங்கே என்ன நடந்திருக்கிறது என்றால் கறுப்புக் கொடி காட்டிய அத்தனை பேர்களையும் காவல் துறையினர் கம்பால் அடித்திருக்கிறார்கள். அங்கே எத்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை. நடந்திருந்தால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி எவ்வித அசம்பாவிதமும் நடக்கவில்லை. மிகவும் அடக்க ஒடுக்கத்தோடு சட்டதிட்டத்திற்கு உட்பட்டுத்தான் எதிர்ப்பைத் தெரிவிக்க கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்பொழுது காவல் துறையினர் என்ன செய்தார்கள் என்றால், எல்லோரையும் லத்தி சார்ஜ் செய்தார்கள். பூட்ஸ் காலால் உதைத்தார்கள், காவல் நிலையத்தில் அடைத்துப் போட்டு கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். கேவலமான வாசகங்களை அள்ளி வீசியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே நிலைமை போயிருக்கிறது.

நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஆளுநர் ஒரு எக்ஸிக்யூடிவ் ஹெட். அவர் ஆளும் கட்சிக்கும் துணை போகக் கூடாது, எதிர்க் கட்சிகளின் மீதும் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது, நாட்டில் நடக்கின்ற நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டி, எங்கேயாவது தவறுகள் நடந்திருந்தால் அவைகளை ஆளும் பொறுப்பில் இருப்பவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் தன்னுடைய ஆலோசனையை தன்னுடைய உரையிலே சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு எதிர்க் கட்சியினரை ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வறட்சியைப் போக்குவதற்கு என்னென்ன பணிகளை, நிவாரணப் பணிகளைச் செய்திருக்கிறோம் என்று மாத்திரம் சொல்லியிருக்கிறார்களே ஒழிய, நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற எத்தவித முக்கியமான காரியங்களையும் ஆளுநர் அவர்கள்



தம்முடைய உரையில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்காக ஆளுநர் அவர்களுடைய உரையை நாங்கள் எதிர்த்து, அண்ணா தி.மு.க.-வின் சார்பிலே ஆளுநர் அவர்களுடைய உரைக்கு எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது அருமை நண்பர் கணேசன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டியும், திருத்தங்களைத் தந்து அதனை ஒட்டியும் இந்த அவையிலே மிகச் சிறப்பான விவாதங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் ஆளுநர் உரையைக் கண்டிக்கிறேன் என்று குறிப்பிட்டு, முதல் அமைச்சரைப் பாராட்டுகிறேன் என்று தன்னுடைய வாதத்தைத் தொடங்கினார். அந்தப் பாராட்டுக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் பாராட்டியதற்கான காரணத்தைத் தொடர்ந்து குறிப்பிட்டார். முதல் அமைச்சர் மத்திய அரசின் மீது எப்படிப்பட்ட குறைபாடுகளைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறார்களோ, அவைகளையெல்லாம் கவர்னர் வாயிலாக எடுத்துச் சொல்வதில் வெற்றி பெற்றிருக்கிறார், ஆகவே அவரைப் பாராட்டுகிறேன் என்று எனக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டபோதும், ஆளுநர் உரையாற்றியிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள். இந்த மன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்கள். எட்மண்ட் அவர்கள் சொன்ன வாதத்தின்படியும் மற்றும் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிற அடிப்படையிலும் ஆளுநர் உரைகள் அரசின் உரைகள்தான். ஆளுநர் உரை என்பது ஒரு சம்பிரதாயம். அரசினுடைய கொள்கைகள்தான் அதில் எடுத்துச்சொல்லப்படுகின்றன. அரசினுடைய திட்டங்கள், எதிர்கால நடவடிக்கைகள் இவற்றிற்கான குறிப்புகள் ஆளுநர் உரையில் காட்டப்படுகின்றன. 1967-ம் ஆண்டு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபொழுது ஆற்றிய உரையிலும், எப்படி இன்றைக்கு ஆளுநர் உரையிலே முதல் அமைச்சருடைய கருத்துக்கள் எதிர் ஒலிக்கின்றன மத்திய அரசைப்பற்றி

என்று குறிப்பிட்டிருக்கிறாரோ அதைப்போலவே, அன்றைக்கும் அண்ணா அவர்களுடைய கருத்துக்கள்தான் அந்த உரையிலே எதிரொலித்திருக்கின்றன. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது :

"கூட்டு அரசியல் அமைப்பு முறை" (Federal Constitution) ஒன்றிற்குட்பட்டு மாநில அரசாங்கம் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை நெறிமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தை சார்ந்தது. எனவே, மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காண முடியாத ஒரு நிலை இருப்பதையும் இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது . . ."

அது மாத்திரமல்ல.

"மக்களின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு தனக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவதற்கான ஏற்ற தருணம் வந்துவிட்டது என்றும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கூட்டு ஆட்சி நடைமுறையில் மலர வேண்டும் என்ற எண்ணம் இன்று எங்கும் மேலோங்கியுள்ளது . . . ."

அடுத்த சில பக்கங்களுக்குப் பிறகு,

"நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி இயல்பை வலியுறுத்திச் சொல்லவேண்டிய அவசியமும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் நிலை எப்படியிருக்க வேண்டுமென்று முதலில் கருதப்பட்டதோ அந்த நிலையை அளிக்கவேண்டிய அவசியமும் இன்று தோன்றியுள்ளன. திட்டத்தை தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும் செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்கு கொள்பவர்களாக மாற வேண்டும் . . ."

அது மாத்திரமல்ல, கவர்னர் உரைதான், முதல் அமைச்சரைப் பாராட்டினாரே எட்மண்ட் அவர்கள், அந்த முதல் அமைச்சர் தயாரித்த உரைதான்.

"மத்திய அமைச்சகங்களின் தற்போதைய பணியை மறு ஆய்வு செய்து, மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் முற்றும் அடங்குகிற துறைகளில் மத்திய அமைச்சகங்கள் கடந்த சில ஆண்டுகளில் நிதி வரையறைகளையும், ஏனைய வரையறைகளையும் விதிப்பதன் வாயிலாக அதிகமாய்த் தலையிடத் தொடங்கியுள்ள இப்போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும்."



மேலும் 1968-ம் ஆண்டு கவர்னர் உரையில் குறிப்பிடுகிறார் :

"கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும் அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித்துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்".

முதலமைச்சர் கருணாநிதி ஆளுநர் அவர்களுடைய உரையின் மூலமாக அந்தக் கருத்துக்களையெல்லாம் ஏற்றி, மத்திய அரசோடு ஆளுநரை போராட வைத்துவிட்டதாக திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். இது 1967-68-ல் அண்ணா அவர்கள் காட்டிய வழியே அல்லாமல், நாங்களாக உருவாக்கிக்கொண்ட வழி அல்ல என்பதையும், உள்ளபடியே அண்ணாவின் தம்பிகளாக இருப்பவர்கள் ஆட்சியை நடத்துகின்ற காரணத்தினால் 1967-ம் ஆண்டில் ஆளுநர் உரையில் எந்தக் கருத்துக்கள் இடம் பெற்றனவோ, அந்தக் கருத்துக்கள்தான் இப்பொழுது அறிவிக்கப்பட்ட ஆளுநர் உரையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையிலே இந்த அவையிலே பெரும்பாலும் இன்றைக்கு தமிழகத்திலுள்ள வறட்சி சூழல் பற்றி விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியை எப்படி நாம் சமாளிப்பது என்பதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களும் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டன. எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எதிர்த்தே தீரவேண்டும் என்கின்ற நிலைமையிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும், நான் அவைகளையெல்லாம் பெரிதுபடுத்திக்கொண்டிராமல், எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளவேண்டிய கருத்துக்கள் இருக்குமேயானால் அவைகளையெல்லாம் நிச்சயம் ஏற்றுக்கொண்டு, இந்த வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை மிகவும் சீரிய முறையிலே செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 பிப்ரவரி 27

தமிழகத்தில் இருக்கிற மொத்தம் ஏறத்தாழ 17,000 ரெவின்யூ கிராமங்களில் 11,000 கிராமங்கள் வறட்சியால் தாக்கப்பட்டுள்ளன. இந்த 11,000 கிராமங்களில் வறட்சிப் பணிகளை நாம் தீவிரப்படுத்தவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்தக் காரணத்தினாலேதான் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாயை இந்த வறட்சி துயர் தணிப்பிற்காக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதற்காக 10 கோடி ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும் வருவாய்த் துறை அமைச்சர் அன்றைக்கு வெளியிட்ட கருத்திற்கேற்ப இதுவரையில் 29,000 வேலைகள் 11½ கோடி ரூபாய் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்கப்பெற்றுள்ளன.

இதன்னியில்—வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கியிருக்கிற அந்த 10 கோடி ரூபாய் அல்லாமல் இயல்பான திட்டச் செலவுகளுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் ஒதுக்கியிருக்கிற பணத்திலிருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கு, அந்த வேலைத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு திருப்பி விடப்பட்டிருக்கிற தொகை 7 கோடியாகும். ஆக, நடப்பு நிதியாண்டில் 17 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாம் செலவிடுவதற்கு முனைந்துள்ளோம்.

இந்த 17 கோடி ரூபாய் அல்லாமல் குடிநீர் திட்டத்திற்காக—அதிலும் குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் வேறுபல ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டத் திட்டங்களின் தன்மையிலும் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்துக்கொள்வோமேயானால் கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் அளவுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று கணக்கிடலாம்.

இந்த வறட்சி நிவாரணப் பணிகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென்பதும், அப்படி வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகிற நேரத்தில் உருவாக்கப்படுகின்ற திட்டங்கள் நிரந்தரமாகப் பயன்படக்கூடிய திட்டங்களாக அமைய வேண்டுமென்பதும் அரசின் கொள்கையாகும். அதற்கேற்பத்தான் சிறிய, நடுத்தர, சற்று பெரிய தீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இந்தப் பணியில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, சொல்ல வேண்டுமானால் மிகப்பெரிய கண்மாய்களான இராஜசிங்கமங்கலம் ஏரியும், இராமநாதபுரம் பெரிய ஏரியும், திருப்பத்தூர் ஏரியும், புதுக்கோட்டையில் கபினூடு கண்மாயும்—இவைகள் எல்லாம் இந்த வறட்சி நிவாரணப் பணிகளையொட்டி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற மிகப் பெரும் பணிகளாகும்.



1975 பிப்ரவரி 27] [டாக்டர் மு. கருணாநிதி]

திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். வேறுபல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போதும் எடுத்துச் சொன்னார்கள். வறட்சி வருகிற வரையில் இவைகளை ஆழப்படுத்த காத்திருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். வறட்சி வராமல் தண்ணீர் தேங்கி இருக்கிற காலத்தில் இவைகளை ஆழப்படுத்துவது என்பது இயலாத காரியம்.

கடந்த 1969-ம் ஆண்டு வறட்சி வந்தபோதுகூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, நான் அறிவித்தது நன்றாக நினைவிருக்கிறது. 'நாம் இந்த பாதகத்தை சாதகமாக ஆக்கிக்கொண்டு, இந்த வறட்சியை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு, குளங்கள், ஏரிகள், கண்மாய்கள், வாய்க்கால்கள் இவைகளை எல்லாம் ஆழப்படுத்துகின்ற பணியை உடனடியாக உருவாக்க வேண்டும்' என்று எடுத்துச் சொன்னேன். அதற்கேற்ப அன்றைக்கு ஆழப்படுத்தப்பட்ட மதுராந்தகம் போன்ற ஏரிகள் எல்லாம் மறுபடி பெய்த மழையின் காரணமாக ஏற்கெனவே இருந்த கொள்ளளவைவிட அதிகம் கொள்ளளவு பெற்றன என்பதை யாரும் மறுத்திட இயலாது. அப்படி பல நிரந்தரமானப் பணிகள் 1969-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டன.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். 60 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்று ஆளுநர் பெருமான் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறதே; அது எங்ஙனம் இயலும் என்று கேட்டார்கள். மனித நாள்—அதாவது மனித உழைப்பு நாள் (மான் டேஸ்) என்ற வகையிலேதான் வருகின்ற 8, 9 மாதங்களில் ஏறத்தாழ 60 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை தீட்டியிருக்கிறோம்.

அவர்கள் இன்னொரு ஐயப்பாட்டையும் எழுப்பினார்கள். 65 சதவிகிதம் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது—ஊதியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது; 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறதே; அது சரியா, நியாயமா? அது தேவையா என்ற ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதிலே 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவு என்று கூறப்படவில்லை. 65 சதவிகிதம் ஊதியமாகத் தரப்போகிறோம்; மீதம் 35 சதவிகிதம் இருக்கிறது என்பது சரியான வாதமாகும். ஆனால் அந்த 35 சதவிகிதம் பொதுவாக இந்த வேலைவாய்ப்புக்களைப் பெறுபவர்களுக்காக வழங்கவேண்டிய மூலப் பொருட்கள்—சிமெண்ட், உருக்கு, செங்கல் மற்றும் குழாய்கள்—இவைகளை எல்லாம் வாங்குவதற்காக அந்த 35 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறதே அல்லாமல் அதை எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவு என்று நாம் எண்ணிடத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டுமென்பதையும் இந்த அரசு வரையறை செய்திருக்கிறது. ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்களுடைய மேற்பார்வையிலே எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகள் இவர்கள் அனைவரும் கலந்து இந்தப் பணிகள் ஒழுங்காக நடைபெறுகிறதை அடிக்கடி கண்காணித்து வருகிற முறைகளையெல்லாம் வகுத்து, 5,000 ரூபாய் வரையுள்ள பணிகளுக்கு பி.டி.ஓ.—வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அளவில் அனுமதிக்கலாம் என்றும், 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரையுள்ள பணிகளை கோட்ட ஆட்சி அதிகாரிகள்—ஆர்.டி.ஓ.—அனுமதிக்கலாம் என்றும், 10,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கலாம் என்றும் அதற்கு மேற்பட்ட தொகையினை நிர்ணயித்து நடைபெறுகின்ற திட்டங்கள் அந்தந்தத் துறை தலைமை அதிகாரிகளையும் அரசையும் கலந்து முடிவெடுத்து அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் வரையறை செய்திருக்கிறோம்.

இதிலே கண்காணிப்புகள் வேண்டும், தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஏதோ அரசு இதில் கண்காணிப்பு இருக்கக்கூடாது என்று எண்ணுவது போலவும், அல்லது தவறு நடக்க வேண்டும்; அதன் காரணமாக ஒரு கெட்ட பெயரை இந்த அரசு வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி இருப்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு கண்காணிப்பு வேண்டும், தவறு நடக்கக்கூடாது என்று பேசியதை அறிவுரைகளாக நான் எடுத்துக்கொள்கிறேன். ஆனால் தவறு நடக்கிறது, நடக்கிறது என்று வேண்டுமென்றே சுட்டிக்காட்டுவது நல்ல மரபை நிச்சயமாக வளர்க்காது; அது இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய உற்சாகத்தை குறைத்துவிடக் கூடும் என்பதை, 'தவறு, தவறு' என்று அடிக்கடி எடுத்துக்காட்டுபவர்களுக்கு எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாகும் என்று குறிப்பிடுவேன்.

எட்மண்ட் அவர்கள் கூறினார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1969-ம் ஆண்டு நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளில் தவறுகள் இருந்தன என்று தனக்கு புகார் வந்தது என்று சொன்னார்; அதற்கு முதலமைச்சர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்டார். அவர் அப்படி கேட்காவிட்டாலும், அவர் கேட்ட தோரணை அதற்கு என்ன பதில் என்பது போல் இருந்தது.





நான் என்ன பதில் சொல்வது? எட்மண்ட் அவர்களே பதில் சொன்னார்கள். இதே முதலமைச்சர் 1969-ம் ஆண்டு இந்த பொறுப்பில் வீற்றிருந்தபோது 17 கோடி ரூபாய் செலவில் ஏற்பட்ட வறட்சி நிவாரண பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்றன; இப்போது ஏன் நடைபெறவில்லை என்று எட்மண்டே கேட்டு பிரதமருக்கு பதில் சொல்லியிருக்கிறார்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, நான் சொன்னதெல்லாம், பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் 22-ம் தேதி சென்னையில் பேசிய பேச்சில் '1969-ம் ஆண்டு மத்திய அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தமிழ் நாட்டுக்குக் கொடுத்த பணத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து இன்னும் கணக்கு அனுப்பப்படவில்லை' என்று குற்றஞ்சாட்டி சொல்லியிருக்கிறார்கள், என்று சொன்னேன். அதற்கு முதலமைச்சரின் விளக்கம் தேவை என்பதுதான்; பணி நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் பணிகளைச் செய்திருக்கலாம்; அதற்கான கணக்கை அனுப்பவில்லை என்று பிரதமர் சொன்னதாகச் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கணக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னதாக எட்மண்ட் அவர்கள் சொல்லவில்லை. அனுப்பினோமா இல்லையா என்பதற்குப் பின்னால் பதில் சொல்கிறேன்.

1969-ம் ஆண்டு பணிகள், நற்பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்ற பணிகள். இதே முதலமைச்சர் கருணாநிதி தான்—கருணாநிதி என்று ஆரம்பித்து திருத்திக்கொண்டார், பிறகு கலைஞர் கருணாநிதி என்று திருத்திக் கொண்டார்—அன்றைக்கு முதலமைச்சராக இருந்தார். அவர் இன்றைக்கு ஏன் இதை ஒழுங்காக நடத்தவில்லை என்று கேட்டார். 1969-லே ஒழுங்காக நடந்தது என்று அவரே ஒப்புக்கொண்டு, பிறகு இன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் புகார் சொல்கிறார் என்று சொல்வது ஒன்றுக்கொன்று பொருத்தமாக இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவிடப்பட்டத் தொகை 18.64 கோடி ரூபாய். இந்த 18.64 கோடி எப்படி மாநில அரசுக்கு கிடைத்தது, எப்படி செலவிடப்பட்டது என்பதை விபரமாகச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

மத்திய அரசு 11.25 கோடி ரூபாயைக் கடனாகவே வழங்கி இருக்கிறது; 3 கோடி ரூபாயைத்தான் மானியமாக வழங்கியிருக்கிறது. 14.25 கோடி ரூபாய் 1969-ம் ஆண்டு மத்திய அரசு நமக்கு வழங்கிய தொகை. அதிலே கடன் 11.25 கோடி ரூபாய், மிச்சம் உள்ள தொகை 3 கோடியே சொச்சம் ரூபாய்—நம்முடைய மாநில அரசு 1969-ம் ஆண்டு செலவழித்திருக்கிறது.

ஒன்று, கணக்கை அனுப்பவில்லை என்று சொன்னார். அவர்களுக்குத் தெரியும். 1969-70 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட். அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் அக்கவுண்டண்ட் ஜெனரல் கையெழுத்திட்டு, அது மட்டுமல்ல, ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் அறிக்கை. அந்த அறிக்கையில் 1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளில் ஊழல் எதுவும் நடந்ததாக எந்த விதமான குறிப்பையும் அவர்கள் எழுதவில்லை. அதன் தொடர்பாக பார்வையிட்ட பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி—நம்முடைய மாநில அரசின் சார்பில் போடப்பட்ட கமிட்டி—அதுவும் வறட்சி நிவாரணப் பணிகளில் கணக்கு வழக்குகளை பார்வையிட்ட பிறகு, எந்தவிதமான ஊழலும் நடைபெற்றதாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆக, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமக்குக் கணக்கு வரவில்லை என்று சொன்னதாக திரு. எட்மண்ட் கூறியது புதிய கூற்று ஆகும். ஆனால் இந்திராகாந்தி அம்மையார் சொன்னதாக—ஒழுங்கான பத்திரிகைகளில் நான் படித்தது, 'அதுபற்றி புகார்கள் வந்தன. இப்படிப்பட்ட புகார்கள் பல மாநிலங்களில் இருந்தும் வருகின்றன. நாம் செலவழிக்கிற பணம் மக்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும்' என்பதைத்தான் திருமதி இந்திராகாந்தி அம்மையார் கூறினார்களேயல்லாமல் வேறு எதையும் கூறவில்லை. அதை வைத்துக்கொண்டு திருமதி இந்திரா காந்தி அவர்களே குறை கூறிவிட்டார்கள் என்று—பழிபோட முடியாதா என்ற எண்ணத்தில் செய்திகளை தேடி அலைந்து கொண்டிருக்கிறவர்கள் எதையாவது இந்த ஆட்சிக்கு எதிராக எழுத வேண்டும் என்று தவறான தலைப்புகளைக் கட்டி எழுதியிருப்பார்களே தவிர வேறு அல்ல.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்று திரு. லத்தீப் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். '1969-இல் நடைபெற்ற வறட்சிப் பணிகள் குறித்து புகார்கள் வந்திருக்கின்றனவா, அதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறீர்களா' என்று. நான் அந்தக் கேள்விகளை ஆராய்ந்து நமக்கு பதில் அளிக்கும்படியாக நமது அரசு வருவாய்த்துறை செயலாளரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் எனக்கு வழங்கியுள்ள பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"I have carefully gone through the Secretariat Personal Registers of the Revenue Department for the period from September 1968 to July 1970 relating to the subject 'Drought Relief'. It is seen that no petition alleging misuse of drought funds has been forwarded by the Government of India to the State Government either for investigation or for remarks during this period."



என்று ரெவின்யூ செக்ரடரி கையெழுத்திட்டு இந்தப் பதிலை எனக்கு அனுப்பியிருக்கிறார். இதைத்தான் நண்பர் ஜேம்ஸ் அவர்களும், இன்றையதினம் திரு. லத்தீப் அவர்களும் கேட்டார்கள். '1969-இல் நடந்த வறட்சி பணிகள் குறித்து புகார்கள் வந்திருக்கின்றனவா; அதுபற்றி மத்திய அரசு நம்மிடத்தில் ஏதாவது விளக்கம் கேட்டிருக்கிறதா" என்று. இந்த அரசுக்கு அதுபோல எதுவும் வரவில்லை என்பதைத்தான் வருவாய்த்துறை செயலாளரின் விளக்கம் சுட்டிக் காட்டுகிறது.

பிறகு '1972-ஆம் ஆண்டிலே வெள்ளம் ஏற்பட்டது. அந்த வெள்ளத்தைச் சமாளிக்க அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 13.61 கோடி ரூபாய். அந்த 13.61 கோடி ரூபாயிலும் மத்திய அரசு நமக்கு கடனாக 8.89 கோடி தந்தது. மானியமாக 87 லட்சம் தான் தந்தது. ஆக, மத்திய அரசு கடனாகவும், மானியமாகவும் தந்தது 9.76 கோடிதான். இதில் கடனாக இருப்பது 8.89 கோடியாகும். மீதி நான்கு கோடி ரூபாயையும் மாநில அரசே தான் அப்போது செலவு செய்திருக்கிறது. மிச்சமுள்ள பெருந்தொகை கடன் நிலையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

1969-இல் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளானாலும், பிறகு 1972-இல் நடைபெற்ற வெள்ள நிவாரணப் பணிகளானாலும்—இவைகளில் எந்தத் தவறும் நடைபெறவில்லை. எந்த ஊழலும் நடைபெறவில்லை என்பதை நான் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

நான் ஒன்று சொல்வேன்: பல கோடி ரூபாய் காரியங்கள் நடைபெறுகிற காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தவறுகள் நடைபெற்று—அந்தத் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தத் தவறுகளைக் களைவதற்காக தவறு செய்தவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் இந்த அரசின் மீது குறை சொல்வதில் நியாயம் இருக்க முடியும். நான் இன்றைக்கும் சொல்கிறேன் இதை மேற்பார்வை பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி—தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஆக நம் அனைவருக்கும் இந்தக் கடமையிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களல்லாத பொதுமக்களுக்கும் கூட அந்தக் கடமை இருக்கிறது. அவர்கள் அந்தக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி—எங்கு தவறு நடந்தாலும்—"என்னை ஒரு கமிட்டியில் போட்டால்தான் அந்தத் தவறைக் கண்டுபிடிக்க முடியும்" என்றில்லாமல்—பொறுப்பைக் கொடுத்தால்தான் அதைக் கண்டு

பிடிப்போம் என்று பிடிவாதம் பிடிக்காமல்—அவரவர்கள் தங்கள் தங்கள் கடமையை உணர்ந்து எங்கு தவறு நடந்தாலும் அதைச் சுட்டிக்காட்ட முற்பட்டால் இந்தக் காரியங்கள் இன்னும் திறம்பட நடைபெறும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். வறட்சி நிவாரணப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவதற்கு அரசுதான் அங்கங்கே சர்வகட்சி கமிட்டிகளைப் போட்டால்தான் என்ன? போடக் கூடாது என்பதில் பிடிவாதம் காட்ட வேண்டிய அவசியம் என்ன? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சர்வ கட்சி கமிட்டி போடுவது என்றால் சில இடங்களில்—நம் நாட்டில் எத்தனை கட்சிகள்தான் இருக்கின்றன என்பதற்கு எண்ணிக்கையே தெரியவில்லை. சில இடங்களில் சர்வகட்சி என்கிறபோது பிரதிநிதிகளே இல்லாமல் இருப்பார்கள். அப்படிப்பட்ட சங்கடங்கள் காரணமாகத்தான் சர்வகட்சி கமிட்டி தேவையில்லையென்று கருதுகிறேன். இந்த கண்காணிப்புப் பணிகளை பொதுமக்களேகூட ஏற்றுக் கொள்ளலாம்

அடுத்து, நமது குடிநீர் வாரியத்தின் சார்பாக என்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதாக நமது கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும் போது கூடக் குறிப்பிட்டார்கள். 2, 3 மைல் தூரம் நடந்து சென்று குடிதண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலையில் பல இடங்களில் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் அல்லலுறுகிறார்கள் என்று சொன்னார். நான் அவைகளை அறவே மறுக்கவில்லை. இந்த நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைத் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். குடிதண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்க குடிநீர் வாரியத்தின் சார்பாக மாத்திரம் வறட்சி நிவாரண சிறப்புப் பணிகளாக 2,392 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன இந்த நடப்பு நிதியாண்டில். அதைத்தவிர இந்த நிதி ஆண்டில் கிராமங்களில் 1,107 மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கும், 2,150 இடங்களில் ஹாண்டு பம்பு போடுவதற்கும் பணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றுக்குமாக சுமார் 5½ கோடி ரூபாய், நான் முதலில் குறிப்பிட்ட 19 கோடி ரூபாயை உள்ளிட்டு, 5½ கோடி ரூபாய் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு செலவிட திட்டமிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



வறட்சி நேரத்தில் உணவுத் தட்டுப்பாடும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த உணவுத் தட்டுப்பாட்டை நாம் முழுமையாகப் போக்க முடியாமல் இன்றைக்கு தவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதும், அதற்கு மத்திய அரசினிடத்தில் உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதும், பொதுமக்களும் சங்கடத்தை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதும் இந்த அவையில் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களாகும்.

உணவு தானியங்களைப் பரவலாக விநியோகம் செய்வதற்கு அரசின் சார்பில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தொகையோடு நாம் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிற குடும்பக் கார்டுகள் இவைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 90 லட்சத்தில் இருந்து 95 லட்சம் குடும்பக் கார்டுகள் இருந்திடல் வேண்டும் நம் மாநிலத்திலுள்ள மக்கள் தொகை கணக்கின்படி. இதில் இதுவரை 37 லட்சம் குடும்பக் கார்டுகளை நாம் இப்போது வழங்கி, நியாய விலையில் உணவு தானியங்களை வழங்கி வருகிறோம். இதை மேலும் விரிவுபடுத்த, நமது வருவாய்த் துறை அமைச்சர் குறிப்பிடுகின்ற நேரத்தில் கூட 70 லட்சம் குடும்பங்களுக்கு உணவு தானியம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த முயற்சியின் காரணமாக அந்த 70 லட்சம் குடும்பங்கள் என்பதைக்கூட 75 லட்சம் குடும்பங்கள் வரை உணவு தானியம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்வேன். இப்படி வழங்குவதற்கே நமக்கு மாதந்தோறும் 55 ஆயிரம் டன் அரிசி, 55 ஆயிரம் டன் கோதுமை தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வழங்குவதற்கே கூட இது தேவைப்படுகிறது. ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக நமக்கு மத்திய அரசு தரவேண்டுமென்று நாம் கேட்டோம். அதிலே பிப்ரவரி திங்களில் இருந்து ஏற்கெனவே தந்துகொண்டிருக்கிற 9 ஆயிரம் ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது. அண்மையில் நான் பிரதமரையும் திரு. ஜகஜீவன்ராம் அவர்களையும் சந்தித்து மீண்டும் வலியுறுத்தியதற்கு, வருகிற மார்ச் திங்கள் முதல் 50 ஆயிரம் டன் கோதுமைக்குப் பதிலாக 60 ஆயிரம் டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அன்றைக்கு சுகாதார அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது மத்திய அரசு நமக்கு 50 ஆயிரம் டன் கோதுமையை பிப்ரவரி திங்களில் தர ஒத்துக்கொண்டிருக்கிறதே தவிர இன்னும் அது

மக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் அது நமக்குக் கிடைத்திருக்கிறது என்கிறாரே, இதில் எது உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த 50 ஆயிரம் டன் கோதுமை வருவது என்ற அடிப்படையில் அரிசியும் இவ்வளவு வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அது முழுவதும் கிடைக்கவில்லை என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

**திரு. எஸ். வடிவேல் :** முதலமைச்சர் அவர்கள் 75 லட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்த 75 லட்சத்தில் விவசாயத் தொழிலாளர்களைச் சேர்த்திருக்கிறார்களா அல்லது விட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவசாயத் தொழிலாளர்களிடத்தில் நண்பர் வடிவேல் அவர்களைவிட, இந்த அரசுக்கு அதிக அக்கறை உண்டு என்பதை நண்பர் வடிவேல் அவர்களே உணர்வார்கள்.

வருகிற மார்ச் திங்களிலிருந்து கோதுமை 60,000 டன்னாக நமக்குக் கிடைக்கவிருக்கிறது. அந்தத் தகவல் நமக்கு நேற்றைய தினம்தான் கிடைத்திருக்கிறது. ஆகவே அதை இந்த அவையில் தெரிவிப்பது பொருத்தம் என்ற வகையில் இப்போழுது தெரிவிக்கின்றேன்.

அரிசி தேவை என்பதை வலியுறுத்தி நானும் உணவு அமைச்சர் நண்பர் மாதவனும் டெல்லிக்குச் சென்று பிரதம அமைச்சரிடமும் மாண்புமிகு ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலும், மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலும், மாண்புமிகு சிண்டே அவர்களிடத்திலும் மீண்டும் மீண்டும் கேட்டிருக்கிறோம். வெளிநாட்டு அரிசியையாவது வரவழைத்துக் கொடுங்கள். விலை கொஞ்சம் கூடுதலாகயிருந்தாலும் அதுபற்றிய பிரச்சினையை மத்திய அரசும் மாநில அரசும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கலாம். ஆகவே, வெளிநாட்டு அரிசியையாவது வரவழையுங்கள் என்று நாம் கேட்டிருக்கிறோம். அதிலும் நாம் நம்பிக்கையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இதுவரையிலே அதுபற்றிய நல்ல செய்தி நமக்கு கிடைக்கவில்லையென்றாலும், விரைவிலே அதுபற்றிய நல்ல செய்தி கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.





இந்த அவையிலே லெவி கொள்முதல் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன. நாம் நிர்ணயித்திருக்கிற லெவி கொள்முதல் ஆற்றுப் பாசனத்திலே ½ ஏக்கருக்குக் குறைவாக இருந்தாலும் லெவி இல்லையென்றும் ஆற்றுப் பாசனம் இல்லாத மற்ற இடங்களில் 1 ஏக்கர் வரையிலே லெவி இல்லையென்றும் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதனைப் போலவே ஆற்றுப் பாசனத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கும் ½ ஏக்கருக்குப் பதிலாக 1 ஏக்கராக ஆக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கள் இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டன. அதை ஏற்க இயலாதிருப்பதற்கு உள்ள முக்கியமான காரணத்தை நான் குறிப்பிடுவது அவசியம் என்றே கருதுகிறேன்.

நஞ்சை நிலம் படைத்தவர்கள், 1 ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு மொத்தமாக நஞ்சை நிலம் படைத்தவர்களில் 50 சத விகிதம் இருக்கிறார்கள். இந்த நஞ்சை நிலம் படைத்தவர்களுக்கு, ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு நாம் விதிவிலக்கு அளித்து விடுவோமானால் நம்முடைய கொள்முதல் பெரிதும் பாதிக்கப்படும்.

அதேபோல், குத்தகைதாரர்களிடமிருந்து அவர்களுடைய பங்கிலிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்பட்டது. அப்படி கொள்முதல் செய்வதில்லையென்று நாம் அவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டால், குத்தகைதாரர்களுடைய சதவிகிதம் நம்முடைய மாநிலத்தில், மொத்தத்தில் 20 சதவிகிதம் என்று இருப்பதால் அந்த 20 சதவிகிதத்தினரிடமிருந்தும் கொள்முதல் மூலமாக நமக்கு எதுவும் கிடைக்காமல் போய்விடும். அதற்காகத்தான் ஒரு சமரச ஏற்பாடாக குத்தகைதாரர்களும் நில உடைமையாளர்களும் கூட்டுப் பொறுப்பாக அரசாங்கக் கொள்முதலுக்கு நெல் தரவேண்டுமென்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இவைகளையெல்லாம் மாற்றுவது என்பது இயலாத காரியம். ஒருபுறத்திலே கொள்முதல் தீவிரப்படுத்தப்படவில்லையென்று வாதிடுகிறார்கள். இன்னொரு புறத்திலே பொது விநியோக முறை போதாததாக இருக்கிறது என்று வாதிடுகிறோம். கொள்முதலைத் தீவிரமாக்க வேண்டுமென்று வாதிடுவதிலும் பொது விநியோக முறையை அதிகமாக்கு, விரிவாக்கு என்று வாதிடுவதும் ஒன்றுக்கொன்று முரணான வாதங்கள் என்பதை உணர்வார்களானால் இந்த வேறுபட்ட கருத்துக்களைச் சொல்ல மாட்டார்களென்றே நான் நம்புகிறேன்.

பொது விநியோகத்திலே கூட தவறுகள் ஏற்பட்டு விடாமலிருக்க வேண்டுமென்பதற்காகத் தனியாரிடத்திலே இந்த விநியோகத்தை ஒப்படைக்காமல் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்

மூலமாகவும் இந்த இரண்டு அமைப்புக்களும் இல்லாத இடங்களில் கிராமப் பொது மக்களுடைய குழுக்களின் மூலமும் இந்தப் பொது விநியோகத்தை, தானிய விநியோகத்தை நடத்திக்கொண்டு வருகிறோம்.

பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் நெல் கொள்முதலுக்குச் செல்வதில்லை யென்ற ஒரு கூற்று இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. அது தவறானது. பெரிய நிலக் கிழார்களிடத்திலே கொள்முதல் செய்ய இந்த அரசு அஞ்சுகிறது என்கிற வாதத்தினை நான் ஏற்றுக்கொள்ள இயலாது. நாட்டு மக்கள் அதனை நன்றாக உணர்வார்கள்.

எங்கேயாவது, எந்த அதிகாரியாவது பெரிய மிராசுதார்களிடத்திலே கொள்முதல் செய்ய பயந்தார், அல்லது தவிர்த்தார் என்று எந்த அதிகாரி மீதாவது குற்றத்தை நீங்கள் சுமத்துவீர்களானால் அது ஆதாரம் உள்ள குற்றச் சாட்டாக இருக்குமானால் அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நேரத்தில் பட்டினிச் சாவு ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருந்தால் . . .

**திரு. கே. டி. கே தங்கமணி :** மார்ச் மாதம் முதற்கொண்டு, 60,000 டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படியானால் 6 கோடி கிலோ ஆகிறது. அவர் ஏற்கனவே சொன்ன குடும்ப அடிப்படையிலே பார்த்தால், கிராமப் புறத்திலே விவசாயத் தொழிலாளிகள் உட்பட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 7 கிலோவாவது கிடைக்குமே, அதற்கு உத்தரவாதம் செய்ய அரசாங்க ஏற்பாடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த அளவிற்கு அதிகமாகக் கொடுக்க இயலாது என்ற காரணத்தாலேதான் குறித்த அளவு, அந்தந்த மாவட்ட நிலைமைக்கு ஏற்ப, பகுதி நிலைமைகளுக்கேற்ப, நாம் அந்த அளவை தர முடியும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதிக அளவு கொடுப்பதற்கேற்ற அளவுக்கு நம்மிடத்திலே உணவு தானியங்கள் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

பட்டினி சாவு பற்றி பேசுகிற நேரத்தில் மிக அதிகமாகப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் பகுதியில் 40 பேர், 50 பேர் இறந்து விட்டார்கள். அவர்களெல்லாம் பட்டினி காரணமாகச் செத்து விட்டார்கள் என்று பத்திரிகையிலும் செய்திகள் வருகின்றன. இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதை எடுத்துப் பேசினார்கள்.



இலங்கையிலிருந்து வந்த அகதிகள் 3-7-1974 முதல் 10-1-1975 வரை இந்தத் திருவரங்குளத்திலே வந்து குடியேறினார்கள். அப்படிக் குடியேறிய குடும்பங்களுடைய மொத்த எண்ணிக்கை 246. இந்த 246 குடும்பங்களின் மொத்த தொகை 1,800. இந்த 1,800 பேரில் 42 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்—எவ்வளவு காலத்திலே? 26—7—1974 முதல் 29—1—1975 வரை, 6 மாதங்களில் 42 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** முதன் முதலிலே புதுக்கோட்டை பகுதியிலே நான் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது, அவர்கள் இதை அறிவித்தனர். அங்கு அவர்கள் ஆஸ்பத்திரியிலும் மற்ற விதத்திலும் தெரிவித்தது, 3 மாத காலத்திலே 32 பேர், குறிப்பாக, சிலோனிலிருந்து வந்த அகதிகள், திருவரங்குளம் காலனியிலிருந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். சாதாரணக் குழந்தைகளும், மற்றவர்களும் இறந்திருக்கிறார்கள். அதனை இன்றைக்குப் பரிசிலனை செய்து பார்த்தால் எப்படி இறந்தனர் என்று தெரியும். நாங்கள் பட்டினியால் செத்தார்கள் என்று சொல்லலாம். நீங்கள் அப்படி இல்லை, குறைந்த சாப்பாடு, அல்லது டையரியா ஆகிய காரணங்களால் இறந்தார்கள் என்று சொல்லலாம். இப்படி போதுமான வசதியில்லாத காரணத்தாலே, குறிப்பிட்ட பகுதியிலே அவர்கள் கணக்குப்படியே 42 பேர் இறந்திருப்பது, பாராட்டத்தக்க விஷயமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** யாரும் அதற்காகப் பாராட்டுக் கூட்டம் போட வேண்டுமென்று விரும்பவில்லை. மொத்தமுள்ள 1,800 பேரில் இறந்தவர்கள் 42 பேர், அது 6 மாத காலத்தில். நம் அதிகாரிகள் மூலமாகவும், மற்றும் விசாரித்த அளவில் வலிப்பு நோயால், வயோதிகத்தால், பாம்புக் கடியால், கருச் சிதைவால், பிரசவ நேரத்தில் இப்படி இறந்தவர்கள் என்கின்ற காரணங்கள்தான் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த மொத்தம் உள்ள 246 குடும்பங்களில் வசதி படைத்த குடும்பங்கள் போக, மீதமுள்ள 203 குடும்பங்களுக்கு இந்த 6, 7 மாத காலத்தில் பிழைப்பு மானியமாக, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் என்ற வகையில், அவர்களுக்கு ரூ. 1,03,500 வழங்கப்பட்டிருக்கிறது. 203 குடும்பங்களுக்கு அது வழங்கப்பட்டது போக, மொத்தமுள்ள 246 குடும்பங்களுக்கும் விவசாயக் கடனாக ரூபாய் 1 இலட்சம் இதுவரையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே வரும்போது, ரூபாய் 5,000 லிருந்து ரூபாய் 10,000 வரை சொத்துடையவர்கள் அல்லது ரூபாய் 5,000 வரை சொத்துடையவர்கள் என்கின்ற பாகுபாட்டின் அடிப்படையிலே கூடப் பல அகதிகள் வந்திருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து வந்ததும் அங்குள்ள மாறிய தட்ப வெப்பங்களுக்கும் இங்குள்ள தட்ப வெப்பங்களுக்குமுள்ள மாறான சூழ்நிலைகளாலும் சிலருக்கு வியாதிகள் ஏற்பட்டன என்கின்ற காரணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஏதோ பட்டினிச் சாவு இருந்து அதை மறைக்க வேண்டுமென்று அரசு ஒரு காலும் விரும்பவில்லை. பட்டினிச் சாவு, பசி, இவைகளையெல்லாம் போக்கத்தான் நாமனைவரும் இங்கு சொல்லப்பட்ட, எல்லா விவாதங்களிலுமிருக்கிற நல்ல காரியங்களையெல்லாம் குறித்துச் செய்வதற்கு முயன்று வருகிறோம்.

நான் அறிவித்தேன், சென்ற முறை, டீசல் பம்ப் செட் வைப்பதற்கு இப்பொழுது மானியம் வழங்கப்படுவதில்லை, இந்த வறட்சியையொட்டி ரூபாய் 1,000 அவர்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதிலே எத்தனை பேருக்கு வழக்கப்பட்டிருக்கிறது? இதெல்லாம் வெறும் ஏட்டளவிலேதானிருக்கிறது என்றெல்லாம் கூட பேசப்பட்டது. நான் அவர்களுக்குக் கூறுவது, நாம் தனியாக 17-12-1974-ல் ஜி.ஓ. போட்டு, 31-12-1974 வரையில் 578 டீசல் பம்பு செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். 15—2—1975 வரை 861 டீசல் செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். ஆக மொத்தம் 1,439 டீசல் பம்ப் செட்டுகளுக்கு ரூபாய் 1,000 வீதம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நீங்கள் தர வேண்டிய ரூபாய் 1,000 மானியத்தை முதலிலேயே தருவதில்லை. டீசல் பம்ப் செட்டுகளை, அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கூட்டுறவு சங்கத்திலே வாங்கிய பிறகு கடைசித் தவணையாகத்தான் ரூ. 500, ரூ. 500 என்று கொடுக்கிறார்கள். ஆகவே, ஒரு 500 ரூபாயை கடைசி தவணையாகவும் ஒரு 500 ரூபாயை முதல் தவணையாகவும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு முன்னால் 500 பின்னால் 500 என்றுகூட இல்லாமல் முதலிலேயே 1,000 ரூபாயை அரசு மானியமாக வழங்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ளுவேன்.

திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது விளம்பரங்களுக்கு செலவழிக்கிறீர்கள், விளம்பரங்களில் வந்த விஷயங்கள் நிறைவேறவில்லை என்றார். கிணறுகளை ஆழப்படுத்துதல், கிணறுகளுக்கு அடிவெட்டு வெட்டுதல் போன்ற இவைகளுக்கு என்ன கடன் கொடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். கிணறுகளை ஆழப்படுத்துதல், அடிவெட்டு வெட்டுதல் ஆகியவற்றிற்காக 1-4-1974 முதல் 31-1-1975 வரையில் நிலவள வங்கி மூலம் 33.51 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் வறட்சிக் காலமாகிய டிசம்பர் 1974 முதல்



ஜனவரி 1975 வரையில் 2 மாத காலத்திற்கு மாத்திரம் 5.66 லட்சம் ரூபாய் 289 பேர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு சில குற்றச்சாட்டுக்களையும் இங்கே எடுத்துக்காட்டியுள்ளார்கள். அண்ணா தி.மு.க. சார்பிலே பேசிய நண்பர் குழ. செல்லையா அவர்கள் ஏதோ நெல் கொள்முதல் செய்வதற்காக உணவுக் கார்ப்பரேஷன் மூலமாக ஆர். பி. முருகன் செட்டியார் என்பவருக்கு ரூ. 1,74,685-க்கு 17-1-1975 அன்று ஒரு செக் வழங்கப்பட்டது என்றும் அந்த செக் நம்பர் குறித்தும் அதே போல் ஆளே கிடையாது என்றும் சொன்னார்கள். குற்றச்சாட்டு வரையிலே சரிதான். ஆனால் அந்த ஏமாற்றுக்காரர் அந்த செக்கைக் கொண்டு வங்கியிலே மாற்ற முடியாமல் அதற்கு முன்பே பிடிக்கப்பட்டார். அவர் 1.74 இலட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் நெல்லைக் கொடுத்ததாக ஒரு போலிக் கணக்கைக் தயாரித்து, பட்டுக்கோட்டை தண்டாயுதம் அரிசி எண்ணெய் ஆலையின் சொந்தக்காரரான திரு. முருகையன் செட்டியாரின் பெயரில் ஒரு கணக்குக் கொடுத்துள்ளார். முருகையன் செட்டியாரின் பெயரில் கொள்முதல் செய்ய ஒருவரையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நியமிக்கவில்லை. ஆனால் அதிகாரிகளின் கையெழுத்தையும் முருகையன் செட்டியாரின் கையெழுத்தையும் போலியாக இவரே கையெழுத்திட்டு அம்மாபேட்டை இளநிலை கணக்கு அதிகாரியிடம் பொய்க் கணக்குக் கொடுத்து செக்கை வாங்கினார். ஆலையின் சொந்தக்காரரான இப்ராஹீம்—இப்ராஹீம் என்பவரின் மகன் ஆனசு என்பவர்—அவருடைய தகப்பனாருக்கே தெரியாது செய்த இந்த மோசடி பற்றி அவருக்குத் தெரியவந்து அவர்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து இப்ராஹீம் மகனுடன் அவரோடு சம்பந்தப்பட்ட வேறு இருவர் பேரிலும் போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. அந்த செக் வங்கியில் போய் பணம் கொடுக்கப்படவில்லை. அதற்கு முன்பே இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏதோ 60 லட்ச ரூபாய் தான் விதை நெல்லுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் அது புதுக்கோட்டைக்கே போதுமா என்று புதிய அ.தி.மு.க. உறுப்பினர் இளஞ்செழியன் அவர்கள் கேட்டார்கள். 60 லட்சம் ரூபாய் என்று போட்டிருந்தால் புதுக்கோட்டைக்கே போதாதுதான். ஆனால் மேலும் 60 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்படும் என்றுதான் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தமாக, மாநிலத்திற்கு விதை நெல்லுக்காக 60 லட்ச ரூபாய் என்று குறிப்பிடப்பட

வில்லை. மொத்த விதை நெல் 19 ஆயிரம் டன் என்றும் அதற்காக மதிப்பீட்டுச் செலவு 3 கோடியே 10 லட்சம் என்றும் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குறிப்பாக சொல்லப் பட்ட வாசகங்களுக்கு அதுவும் அரசியல் ரீதியாகச் சொல்லப்பட்ட வாசகங்களில் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் எடுத்துச் சொன்னது மாநில சுயாட்சி பற்றியது ஆகும். மாநில சுயாட்சி பற்றி தங்கமணி அவர்கள் கவர்னர் உரையிலேகூட அதிகக் கவனம் செலுத்தாமல் திரு. தங்கமணி அவர்கள் மாநில சுயாட்சி கொள்கையை எதிர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டியபோது அதற்கு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் ரஷ்ய நாட்டிலே இருப்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டி அதற்குப் பதில் கேட்டபோது சின்னப் பிள்ளைகளுக்கு எல்லாம் நான் என்ன பதில் சொல்வது என்று எண்ணியோ என்னவோ திரு. தங்கமணி அவர்கள் பதில் சொல்லலாமலேயே அமர்ந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ரஷ்ய நாட்டைப்பற்றி காட்டிய உதாரணம் தவறு என்று நான் அந்த அமைச்சரிடம் தனியாக தெரிவித்தேன். ரஷ்ய நாட்டில் இருக்கிற கான்ஸ்டிட்யூஷனில் பிரிந்து போகக்கூடிய உரிமை கொடுக் கப்பட்டிருந்தாலும்கூட எப்போதும் அது அமுலுக்கு வருவது கிடையாது. காரணம், ஒரே கட்சி ஆட்சியிலே இருப்பதால் அந்த நிலைமை வராது என்பதால் அப்படி வைத்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரே கட்சி ஆட்சியிலிருப்பதால் அமுலுக்கு வராது, பல கட்சி ஆட்சியிலிருந்தால் அமலுக்கு வரும். ஆகவே சுயாட்சி கொடுங்கள் என்று கேட்கிறோம் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ரஷ்ய அரசியல் சட்டத்திலே மாநில சுயாட்சியும் பிரிந்து போகும் உரிமையும் ஏட்டளவிலே தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே யொழிய நடைமுறையிலே கொடுக்கப்படவில்லை. ஐ.நா. சபையில் இடம் பெறுவதற்கு மட்டுமே உக்ரேனும், பைலோ ரஷ்யாவும் தனியாகக் கூறப் பட்டன. ஆனால் லாட்வியாவும், லித்தோனியாவும் தனியுரிமை கேட்டபோது அது கடுமையாக ஒடுக்கப்பட்டது. இதுதான் வரலாறு.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது ஒரு சாதாரண அக்கடமிக் பிரச்னையாகி விடக்கூடாதே என்பதற்காக நான் பதில் சொல்லவில்லை. என்னிடம் பதில் சொல்வதற்கு விஷயங்கள் இருக்கின்றன. பைலோ ரஷ்யா, உக்ரேனியா ஆகிய



இரண்டுக்கும் ஐ.நா.விலே இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவை இரண்டும் ரஷ்யாவிலே இணைந்து இருக்கவேண்டுமென்று விரும்புகின்ற பகுதிகள் ஆகும். அவர்கள் பிரிந்து போகவேண்டுமென்று சொல்லவில்லை. ஸ்டாலினைப் பொறுத்தவரையில் முதன் முதலில் என்ன மினிட்ஸ் சொல்லப் பட்டதோ அதனுடைய காப்பியை நான் பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யுத்தம் முடிந்ததற்குப் பிறகு முதலாளித்துவ நாடுகள் எல்லாம் சேர்ந்துகொள்ளக் கூடும். ரஷ்யா பெரிய நாடாக இருக்கிறது, இரண்டு கோடி மக்களை இழந்துவிட்டிருக்கிறது, ஆகவே அங்கே ஒரு பிரதிநிதித்துவம் போதாது, ஆகவே மூன்றுவது கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், அதனால்தான் கொடுக்கப்பட்டது. அதனால்தான் நான் ஹிஸ்டாரிக்கல் பேக் ரவுண்ட் இருக்கிறது என்று சொன்னேன். இங்குகூட அட்டானமி என்று வரக்கூடிய காலத்திலே ரொம்பப் பின்தங்கிய பகுதிகளுக்குத்தான் இன்னும் அதிகமான வசதியைக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே அந்த கன்சப்ஷன் இருக்கிறதே தவிர தமிழ்நாட்டிற்கு அட்டானமி வேண்டுமென்று சொல்வது

It is taking us in a reverse direction. என்ற முறையிலே அந்தக் கருத்து பொருத்தமில்லை என்றுதான் எடுத்துச்சொன்னேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிபற்றி அண்ணா சொன்ன மாநில சுயாட்சி என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில சுயாட்சிபற்றி ஒரு மாநாடு நடத்தி ஒரு தனிக்கொடி இந்த மாநிலத் திற்கு வேண்டுமென்று கேட்டார்கள். ஆகவே தமிழ்நாட்டிற்கு ஒரு தனிக் கொடியும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தனி இடம் வேண்டும் என்பதுதான் தி.மு.க. வினுடைய கொள்கையா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. இராமச்சந்திரன் ஐ.நா. விலே தனி இடம் ரஷ்யாவிலுள்ள ஒரு மாநிலத்திற்கு இருந்தது என்று குறிப் பிட்டது அந்த அளவிற்கு அங்கே மாநில சுயாட்சி இருக்கிறது என்ற அளவிற்குத் தெரிவிப்பதற்குத்தானே தவிர ஐ.நா.விலே தமிழ்நாட்டிற்கு ஒரு தனி இடம் வேண்டுமென்பதற்காக அல்ல. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ரஷ்யாவிலே பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஏட்டிலேதான் அங்கே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அங்கே ஏட்டிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கே ஏட்டிலே இருந்தால் நாட்டிலே கொண்டுவரக்கூடிய தைரியம் எங்களுக்கு இருக்கிறது. ரஷ்யாவிலே ஏட்டிலேதான் இருக்கிறது நடைமுறையில் இல்லை, ஏட்டிலேதான் இருக்கிறது, நாட்டிலே இல்லை . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நடைமுறையில் வராது என்றுதான் ஏட்டிலே வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ரஷ்யாவிலே இருப்பது பிரிந்து போகக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் கோருவது பிரிந்துபோகக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி அல்ல. நாடு பிரிந்துபோகாமல் இருப்பதற்குத்தான் மாநில சுயாட்சி வேண்டும் என்று தி.மு.க. கேட்கிறது. இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி கொள்கையைப் பற்றி யாருக்கு ஐயம் வராது என்று கருதுகிறேன்.

பெரியவர் மணலி அவர்களுடைய உரையில், அவருக்குரிய வயது, அனுபவம், தியாகம், தொண்டு இவைகளின் அடிப்படையிலே எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சில அறிவுரைகள் கூறி ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறார்கள். ஒரு கட்சியை நடத்துவது என்பது எவ்வளவு பெரிய சிரமமான காரியம் என்பது மணலி போன்றவர்கள் புரிந்துகொள்ளாதது அல்ல. அவர்களே கூறியதைப்போல் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பெற்று இன்றைக்கு மட்டுமே பல சோதனைகளைச் சந்திப்பது அல்ல, அண்ணா அவர்களுடைய காலத்திலேயே பல சோதனைகளைச் சந்தித்து அவர்களை அண்ணா அண்ணா என்று அன்பொழுக அழைத்தவர்களே மேடைகளிலும் ஏட்டிலும் திருவாளர் அண்ணாதுரை என்று அழைக்கின்ற அளவிற்கு அவரே அந்த சோதனையை சமாளிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டு அண்ணா அவர்கள் அதனைச் சமாளித்தார்கள். பெரியவர் மணலி போன்றவர்கள், பிற்பட்ட மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் நடத்தப்படுகிற இந்த இயக்கம் அழிந்து போகாமல் காப்பதற்கு இந்தக் கழகத்தினுடைய தலைவர்கள் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை சொன்னார்கள். அதைச் செயல்படுத்த நாங்கள் அண்ணா வழியிலே என்றென்றும் அயராது உழைப்போம் என்ற



அதோடு, கவர்னர் உரையிலே பல திருத்தங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே திருத்தங்களை வலியுறுத்துவது மரபு அல்ல என்பதையொட்டி அவைகளைத் திரும்பப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆளுநர் உரையைச் சில கட்சியினர் புறக்கணித்ததாகச் சொல்லப்பட்டது. அதை நான் நம்பவில்லை. யாரும் ஆளுநர் உரையைப் புறக்கணிக்கவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் ஆளுநர் உரையைப் புறக்கணித்து இந்த அவையின் பக்கமே வராமல் இருந்துவிட்டது. ஆனால் இப்பொழுது ஆளுநர் உரை நிகழ்த்தும்பொழுது யார் யார் புறக்கணிக்கப் போவதாகச் சொன்னார்களோ, அவர்கள் இந்த அவையின் தாழ்வாரம் வரையில் வந்து கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். கையெழுத்துப் போட்டாலும் அவைக்கு வந்ததாகத்தான் அர்த்தம். எம்.ஜி.ஆர். அவைக்கு வரவில்லை யென்று வாதிடும்போது அவர் கையெழுத்துப் போடுகிறார். ஆகவே அவைக்கு வந்ததாக அர்த்தம் என்று கூறுகிற அந்த வாதத்தின் அடிப்படையில் பார்த்தால் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள் . . .

ஆகவே, நீங்கள் அனைவரும் ஆளுநர் உரையில் கலந்து கொண்டீர்கள் என்ற மகிழ்ச்சியோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, ஆளுநர் உரையை நாங்கள் பகிஷ்காரம் செய்யவில்லை என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். நாங்கள் அவைக்கு வந்திருந்ததாகவும், கையெழுத்துப் போட்டதாகவும் சொன்னார்கள்.

Yes, we signed.

நாங்கள் எதற்காகக் கையெழுத்துப் போட்டோம் என்பதை விளக்க வேண்டும், நாங்கள் எதற்காகக் கையெழுத்திட்டோம் என்றால், முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், நம்முடைய சட்டமன்றத்தில் லாபிகூட சட்டமன்றத்தின் பகுதிதான் என்று. அந்த விதி எங்களுக்கும் தெரியும். ஆனால் எங்களுடைய நோக்கமெல்லாம் ஆளுநர் உரையை நாங்கள் பகிஷ்கரிப்பதாகக் கூறினோம், அது அவர்களுக்குத் தெரிய வேண்டும். அன்று திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமன்ற கட்டிடத்துக்குள்ளே

வந்திருந்தார்கள். தங்களுடைய வருகையை நிரூபிக்கப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஆளுநர் உரை நிகழ்த்தும் நேரத்தில் அந்த மன்றத்தில் இருக்கமாட்டோம் என்பதைக் காட்டத்தான் அவ்வாறு செய்தோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி நார், கடைசியிலே முதலமைச்சரவர்கள் ரொம்ப லேட்டாக an attack on political parties ரொம்ப லேட்டாகப் பேசி ஏதோ நாங்களெல்லாம் **** இங்கே வந்தோம் என்று சொன்ன நிகழ்ச்சி கண்டிப்பாக நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும். கட்சியைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையைப் பகிஷ்கரிக்கிறோம் என்றால் Boycotting Governor's Address அந்த சிட்டிங் பூராவும் பகிஷ்கரிக்கவில்லை என்று அறிக்கை விட்டிருக்கிறோம். இங்கே ஒரு மரபு இருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற மரபு என்னவென்றால், ஜனாதிபதி இரண்டு அவைகளையும் கூட்டி வைத்துச் செய்யும் பிரசங்கம் இருக்கிறதே அது பிரசங்கமே இல்லை. அது பொதுவாக நடத்தும் ஒரு பிரசங்கம். பிறகு அரை மணி நேரம் கழித்து தனியாக இரண்டு சபைகளையும் கூட்டுகிறார்கள், அப்பொழுது அங்கேயிருக்கும் ஜனாதிபதி உரை சபைக்கு முன்னால் வைக்கப்படுகிறது.

After that it is laid on the table of the House. The House takes note of that அந்தமாதிரி முறை இங்கே இல்லை. இரண்டையும் சேர்த்து வைத்து ஒரு கூட்டம் மாதிரி நடக்கிறதே தவிர அந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின் கருத்துக்களைச் சொல்வதைப் பகிஷ்கரிக்கிறோம் என்று அரசியல் ரீதியாகச் சொன்னோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. கே. டி. கே தங்கமணி அவர்கள் வருத்தப்படுவார்களேயானால், நான் சொல்கிறேன், **** வந்தார்கள் என்று நான் சொல்லவே இல்லை. அப்படி எதாவது நான் சொன்னதாகக் காதில் விழுந்திருந்தால் அது நிச்சயமாக நடவடிக்கைக் குறிப்பில் இருக்கவேண்டாம். அப்படி நான் சொல்லவேயில்லை. கையெழுத்துப் போட்டால் வந்ததாகத்தான் அர்த்தம், எனவே அவைக்கு வந்தார்கள் என்று மகிழ்ச்சியைத்தான் தெரிவித்தேன். ஏன் போட்டீர்கள் என்று கேட்கவில்லை.

**** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



திரு. எட்மண்ட் அவர்கள் தாழ்வாரம் வரையில்தான் தாங்கள் வந்ததாகவும், அங்கே வந்ததால் இங்கே வந்ததாக அர்த்தம் அல்ல என்றும் குறிப்பிட்டார்கள். இந்த வாதம் வரும்பொழுது வேறொரு விஷயத்திற்கு வேறொரு மாதிரியாக அந்த வாதம் திரும்புகிறது. வீட்டு வாசலையே மிதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு பிறகு தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்திருந்துவிட்டு வீட்டிற்கே போகவில்லை என்று சொல்லும் வாதத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, நாங்கள் கையெழுத்துப் போட்டோம் என்றால் எதற்காகப் போட்டோம்? கையெழுத்துப் போடவில்லை என்றால்

It would mean we were absent. We wanted to make it known to the Governor that we were present in the lobby but not present during the Governor's Address. There is difference between absence and boycotting.

திரு. பெ. சீனிவாசன் தலைவரவர்களே, சில நேரங்களில் வாக்-அவுட் செய்கிறோம். **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நடவடிக்கைக் குறிப்பிலே இருக்க வேண்டாமென்று சொன்னதை மறுபடியும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு விட்டு வாக்-அவுட் செய்தால் அந்தக் கையெழுத்து ரத்தாகாது. அந்த அடிப்படையில் வந்ததாகத்தான் கருதப்படும். எனவே, அந்த அடிப்படையிலேயே இப்பொழுதும் நாங்கள் வெளியே இருந்தோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே பல்லாயிரக்கணக்கான கார்டுகளை ஒரே கடைக்கு அளிப்பதால் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். எனவே, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று ஏற்படுத்தப்படுமா? அல்லது 1,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்றாவது ஏற்படுத்தப்படுமா? என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள்? ஏனென்றால் கூட்டுறவுச் சங்கக் கடைகளும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளும் குறைந்த அளவில்தான் இருக்கின்றன. எனவே என்ன அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏற்கனவே 7,000 கார்டுகள் என்ற அளவில் கொடுக்கப்பட்டது. இப்பொழுது 2,000 கார்டுகள் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் கூறும் கருத்தை யோசித்து இன்னும் தகுந்த அளவிற்கு ஆக்க முடியுமா என்பதை யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : I am pressing my amendment. There have been precedents for it in the Upper House where amendments to the motion of thanks to the Governor for his address have been moved and voted upon.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I am not pressing all my amendments, except amendments 1 and 2 relating to public distribution system of all essential articles and public control committee at different levels for drought relief work.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே அவர் மூவ் செய்திருக்கிறார். இப்பொழுது மறுபடியும் படிப்பது என்பது இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மூன்று திருத்தங்களும்கூட 'கிளப்' பண்ணிப் போட்டிருக்கிறார்கள்.

I am pressing the first two amendments relating to public distribution system and public control committees for drought relief work.
இந்த இரண்டையும் ஓட்டுக்கு விட வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சங்கமுத்து தேவர், கோவை செழியன், ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.



திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, என்னுடைய திருத்தத் தீர்மானத்தை நான் வலியுறுத்துகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I want to respect the convention. I am not pressing my amendment.

திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. எம். சுரேந்திரன் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—" 1975-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 20-ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் "..

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

### 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

90. Notification issued in G.O. Ms. No. 736, Labour, Employment and Housing, dated the 29th August 1974 in regard to certain amendments to the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Rules, 1971. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971)].

91. Notification issued in G.O. Ms. No. 2338, Home, dated the 28th September 1974, in regard to an amendment to rule 155-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

92. Notification issued in G.O. Ms. No. 490, Co-operation, dated the 10th September 1974, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. [Laid on the table of the House under section 38-A of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934)].

93. Notification issued in G.O. Ms. No. 2259, Home, dated the 18th September 1974, in regard to an amendment to rule 148-D of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

B. *Reports, Notifications and Other Papers.*

27. Notification issued in G.O. Ms. No. 596, Commercial Taxes and Religious Endowments, dated the 20th November 1974, in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of sale deed to be executed in favour of the Managing Trustees, Arya Samaj (Central) Trust Board, Andiappa Naicken Street, Madras.

## HOW TO USE THE INDEX.

The index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion | ... Adjournment Motion. |
| Ann. | ... Announcement. |
| B.O.H. | ... Business of the House. |
| C.A. | ... Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... Calling Attention Statement. |
| Consid. | ... Consideration stage of a Bill. |
| | ... This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. |

| | | |
|---|---|---|
| | | (ii) Amendment to refer to Select/Joint Select Committee. |
| | | (iii) Amendment to circulate. |
| | | (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. |
| | | (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H.Dis/H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

21ST, 22ND, 24TH, 25TH, 26TH AND 27TH FEBRUARY 1975.

VOLUME LXII—(Nos. 1 TO 6)

## A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—
Governor's Address (M) ... ... ... ... 285—291

ACT(S)—
Prosecution of Adulteration of Food Act, reconstitution of State Advisory Committee ... ... ... 189—191

ADMINISTRATION—
Petitions from the public at taluk level, quick disposal. 23

AGRICULTURE—
Basumati rice, cultivation in Thanjavur district ... 464—467
Cereals, set back in production ... ... ... 467—470
Farm Advisory Council, working ... ... ... 210—211
Loans for purchase of plough bulls ... ... 32—33
Pine-apple, intensive and extensive cultivation in Kanyakumari district ... ... ... ... 464

PAGES

ALAGARSAMY, Thiru S.—
Governor's Address (M) ... ... ... ... 511, 512, 699—709

Headmasters in 'A' Wing High Schools, sanction of annual increment in accordance with recommendations of Second Pay Commission ... ... 581—584

Zamin lands, demand for distribution from peasants of Seithur Thevathanam areas ... ... ... 603—604

ALAGU THEVAR, Thiru S.—
Governor's Address (M) ... ... ... ... 445—447

ALDA M. FOWLER, Thirumathi—
Governor's Address (M) ... ... ... ... 266—268

ANANTHANAYAKI, Thirumathi T. N.—
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 630, 650

Doctors working in rural areas, concessions ... ... 181—187

Dog biting cases, Coimbatore .. .. .. 333

Drought Relief Fund, utilisation, Prime Minister's statement (Point of order) ... ... ... 356

Governor's Address (M) ... ... ... ... 55, 57, 59, 76, 77, 109, 425—426, 667—669, 670—674, 675, 676, 678, 679 814, 815, 816, 827, 829





PAGES

ANBAZHAGAN, Thiru K.—
Governor's Address (M) ... ... ... ... 77, 118, 122, 705—706, 798, 799, 802—803, 816

ANIMAL HUSBANDRY—
Artificial insemination, mobile van, commissioning in Madras ... ... ... ... ... ... 474

Intensive Village Development Camp at Padappai, starting .. .. .. .. .. 605—607

ARANGANAYAGAM, Thiru S.—
Governor's Address (M) ... ... ... ... 524-529

ARANGANNAL, Thiru Rama
Governor's Address (M) ... ... ... ... 754,795, 800

ARUMUGAM, Thiru C.
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 618

ARUNA, Thiru Aladi V.
Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators' Hostel (Point of order) ... ... ... ... 669

Attack on Thiru Venga, M.L.C., in the Legislators' Hostel (A.M.) ... ... ... ... ... 718

Committee on Public undertakings, report on Electricity Board, presentation ... ... ... 422

C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 616,620, 621,626,636

Governor's Address (M) ... ... ... ... 56,57,708, 737,738,798, 799,800

A—*cont.*


PAGES

ARUNA, Thiru Aladi V.—*cont.*

P.W.D. Minister's press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... 377, 378, 383

Students, special coaching scheme in sports ... ... 452-456

AUTOMOBILES—

Scooters, allotment against state quota ... ... 215

Tyre and Tube distribution centres ... ... ... 29-30


B


BILLS—

Contingency Fund (Amendment) Bill, 1975 message from Governor ... ... ... ... ... ... 422

Contingency Fund (Amendment) Bill, 1975 (Int.) ... 422

BOMMAN, Thiru K. H.—

Freedom fighters, house-sites ... ... ... 343-345

Headquarters Hospital, Ooty, appointment of a dietician ... ... ... ... ... ... 586

BRIDGES AND CULVERTS—

Bridge across Kuzhithurai river ... ... ... 336

Bridge across Nallaru at Ammapalayam on Tiruppur—Avanashi Road ... ... ... ... ... 16

Bridge across Noyyalaru, construction ... ... 587-588

Bridge at Thickurichy across Kuzhithurai river ... 337

Bridge on Madurai—Thondi Road, Construction ... 196

Bridge on Padamathur—Thiruppachethi Road, repairs .. .. .. .. .. 196—197

Dam across Anamalayaru, construction ... ... 587

BUILDINGS—

Sub-taluk office buildings, Chingleput district ... 346




C


PAGES

CALLING ATTENTION—

Madras City, necessity to provide adequate drinking water facility ... ... ... ... ... 650-658

CEYLON REPATRIATES—

Correction to answer given on 29th March 1974 about rehabilitation (St) .. .. .. 220-221

CHAIR—

Announcement, B.O.H. ... ... ... ... 39

Panel of Chairmen ... ... ... ... ... 39

Obituary reference, Sivashanmugam Pillai, Thiru J. (R) ... ... ... ... ... ... ... 2—3

*Rulings and Observations—*

Adjournment Motions—

*Attack on Thiru V. Venga, M.L.C., in the Legislators' Hostel.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statement given by the Leader of the House ... ... 730

*Failure of inter-State talks with regard to the sharing of Cauvery river water.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statements given by the Chief Minister and the Public Works Minister ... ... ... ... ... 421

*Need for proper implementation of Drought Relief Works.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter, after the explanatory statement by the Minister .. .. .. .. 505

*Strike in Christian Medical College Hospital, Vellore.*

Consent was withheld after the explanatory statement by the Chief Minister ... ... ... 650

PAGES

**CHAIR**—*cont.*

Rulings and Observations—*cont.*

Adjournment Motions—*cont.*

The Member who had given notice of an adjournment Motion while seeking consent for the same had only a restricted right to explain how the matter was so important as to be considered as an adjournment motion. He could not go into the merits of the case at that stage ... ... ... ... 613, 614, 615

While explaining as to how a matter was of urgent public importance and should be discussed as an adjournment motion, Members should be brief and should not go into the subject matter, or discuss what should be done or what had happened ... ... ... ... 481,483,490

Allegations—

If a Member wanted to make an allegation against another Member, he must first apprise the Speaker of the same in writing and the Speaker would in turn pass it on to the Member against whom the allegation was made, thus enabling him to be in a position to reply to the same. Then only, the Member would be permitted to make the allegation on the floor of the House. This procedure, decided upon by the Leaders of all the parties, should be followed ... ... ... ... ... 614, 616 618

It was not in order for a Member to make allegations against others without apprising the Speaker in advance of his intention to do so, and giving them an opportunity to defend themselves; it was also not in order to state that an enquiry be conducted into the allegations and he might be punished if his allegations were not proved. There was no provision for such enquiry by the Speaker. So, certain allegations made by a Member without observing such a procedure were ordered to be expunged by the Speaker on 26th February 1975 and the press also was directed not to publish the same.





PAGES

**CHAIR**—*cont.*

Rulings and Observations—*cont.*

In the short discussion that followed, some Members took exception to the expuncion and certain counter-allegations were also made and the allegations were denied. At one stage, the Speaker observed that the allegations and the counter-allegations might find a place in the proceedings. But in deference to the wishes of some members, the Speaker confirmed his original direction on expunction of the objectionable portions which he had already indicated ... ... ... ... 620—634

Should not be made against persons not present in the House or who could not defend themselves 614

Debate—

*Challenge*

It was not in order for Members to challenge each other in the House ... ... ... ... 241

Decorum—

Members should not speak sitting ... ... ... 271

While speaking, Members should not be emotional. Just as a Member claimed that he had a right to speak, the Speaker also had the right to pull up a Member when he spoke emotionally ... ... 617

Expressions used in the House—

'I will resort to Satyagraha' in the sentence, 'If you do not allow me to speak on a very important matter, I will resort to Satyagraha'—It was not proper to use such an expression ... ... 612

The use of the expression 'உங்களுக்கு வக்கு இல்லாவிட்டால்' (If you have not got the guts) in the sentence 'உங்களுக்கு வக்கு இல்லாவிட்டால் எங்களைக் குறை சொல்ல வேண்டாம் If you have not got the guts to do it......., do not find fault with us)—Deprecated, being a harsh words. 240

PAGES

**CHAIR—*cont.***

Rulings and Obsrvations—*cont.*

Governor's Address—

*Amendments to Motion of Thanks.*

With reference to a point of order that Members might be allowed to move amendments to the Motion of Thanks as soon as the Motion of Thanks was moved, the Speaker observed that all the amendments would be placed before him for consideration after the expiry of the last date fixed for receipt of amendments. Only such of those amendments found to be in order could be allowed to be moved in the House. On many previous occasions, amendments had been allowed to be moved only later, the next day or some days after the Motion of Thanks was moved. It was not proper to allow the amendments to be moved piecemeal as and when they were received even before scrutiny ... 41—46

PERSONAL EXPLANATION—

Could be made only when the Member who was on his legs had made some reference about the Member who wanted to make a personal explanation ... 738

*Point of Clarification*—

Generally there was no provision for Members to seek clarification. Only if the Speaker desired and the Member who held the floor yielded, clarification could be sought. Members had no right to make a point of clarification at any time they liked ... ... ... ... 738

*Point of Information*—

Information regarding the date on which a privilege matter given notice of, would be taken up, should be sought only in the Speaker's chamber and not in the House ... ... 39—40



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Point of Order*—

If any rules of procedure had been transgressed, a point of order might arise. But, raising a point of order simply for seeking information would not be allowed, and it would not also be published in the Press. Trivial matters, or points which had no substance could not be raised as points of order ... ... ... 506

It was not in order to raise in the House the subject matter of an Adjournment Motion about which the Member had been given a reply ... ... ... 219—220

It was not in order to rise under the pretext of point of order and ask whether a privilege matter would be taken up immediately ... ... ... ... 505

On a Member raising a point of order to point out that a statement made by the Leader of the House was wrong, the Speaker observed that a point of order should be raised only when the rules were transgressed in the House and not for expressing one's views. The Member's further remarks to justify the point of order were ordered to be expunged as it was not a point of order .. 731

With reference to a point of order raised by a Member about the reported statement by a Member in the Karnataka Legislature, the Speaker, ruling that it was not a point of order, observed that it was not in order to raise in the House what took place in the other Legislatures ... 218—219

With reference to a point of order raised during question hour by a Member about the discrepancy in the statements made by the Ministers on a particular matter, the Speaker observed that during question hour points of order could not be raised. If the Members thought that there was any such discrepancy, there were other ways of raising it in the House and the question hour need not be availed of for that purpose ... .. .. 468, 470

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matters—

*Disparaging and derogatory remarks alleged to have been made against the Chairman, Estimates Committee, by the Minister for Public Works at a Press Conference.*

On 24th February 1975, Members of three opposition parties raised a matter of privilege against the Minister for Public Works. They stated that, in a Press conference, he was reported to have attacked the Chairman of the Committee on Estimates and had used derogatory remarks against him and had also cast aspersions on him and the Members of the Committee and their conduct in preparing the Committee's 24th Report at Mahabalipuram. They contended that those remarks were meant to cause disaffection upon the House and constituted a breach of privilege of the House.

The Minister for Public Works (Thiru P. U. Shanmugam) stated that he had given his views on the matter in his letter to the Speaker. In the letter which was read by the Speaker, at the Minister's request, it was stated that he had not made any statements casting aspersions on the Estimates Committee, or its Chairman, or any Member.

The Chair observed that if the statement attributed to the Minister and which appeared in the paper was true, it was doubtless a breach of privilege. But, as the Minister had stated that he had not made the remarks attributed to him, they had to take his denial into account just as a Member's denial of a particular statement attributed to him by others was taken into account, and further discussion might be dropped.



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matters—*cont.*

As for a suggestion that the Speaker *suo motu* might refer to the Committee of Privileges the case of the newspaper which published such news which was nature, he could not act and decide in a matter or incident which took place outside the House on which he had not received any notice ... 379—381, 382, 383

It was for the Speaker to decide whether there was a *prima facie* case or not. Before so deciding. he might, if he so desired, ask the concerned Members and the Ministers, and in some cases, some senior Members to clarify how the matter raised was a privilege issue. But, it was not obligatory on his part to seek such clarification ... 359—360 362

*Publication in 'Makkal Kural', 'Annai Nadu', 'Thennagam', 'Sama Neethi' and 'Statesman'*—

On 25th February 1975, the Speaker announced that some Members had given notice of breach of privilege against the four newspapers about a news item containing details of the Press interview given by the Minister for Public Works which referred to the 24th Report of the Committee on Estimates and attributed motives to the Chairman and its Members and observed that the publication in these papers of derogatory remarks attributing motives to the Chairman and Members of the Committee on Estimates constituted a breach of privilege. So, he referred the matter to the Committee of Privileges so far as it related to all these papers, except 'Statesman'. As the Members had not furnished a copy of the paper 'Statesman', he could not give his ruling in regard to that paper ... ... ... ... ... 477—478

CHELLIAH, THIRU KUZHA—

Governor's Address (M) ... ... ... ... 227—239

C—*cont.*

PAGES

CHEZHIAN, THIRU KOVAI—
Attack on Thiru Venga, M.L.C., in the Legislators' Hostel (A.M.) ... ... .. ... ... 718
C.M.C. Hospital at Vellore, strike (A.M.) .. 610—614, 615, 616, 617, 618, 619, 620
Drought Relief Fund, utilisation, Prime Minister's statement, (Point of Order) ... ... ... 354
Governor's Address (M) ... ... ... ... 59, 74, 221, 737, 738
P.W.D. Minister's Press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... 358, 369—372, 383—384

CHIDAMBARAM, THIRU T.—
Governor's Address (M) .. 568—571

COLLEGE(S)—
Chingleput Medical College, recognition .. .. 187—189
Homoeopathy Medical College, opening ... ... 8—12

COMMITTEES—
*Public undertakings—*
Report on Electricity Board, Presentation .. 422

CO-OPERATIVES—
Co-operative Oil Mill, establishment in Thuraiyur taluk .. 217
Handloom Weavers Co-operative Societies, purchase of powerlooms from Sunrise Company, Bangalore. 591—594
Hosiery Unit at Tiruppur .. .. .. 18

COTTON—
Committee for cotton development, setting up .. 207—209

COURTS—
Additional courts in Tiruchirappalli; ... ... 463—464
Second class Magistrate court at Kuzhithurai, opening. 462—463



D

PAGES

DENNIS, THIRU N.—
Bridge across Kuzhithurai river ... ... ... 336
Bridge at Thickurichy across Kuzhithurai river ... 337
Cancer Centre, Neyyoor, Government assistance ... 331—332
Gandhi Mandapam at Kanyakumari, renovation ... 17—18
Governor's Address (M) ... ... ... ... 437—441
Oriental Manuscripts Library, grants from Central Government ... ... ... ... ... 449—451
Pine-apple, intensive and extensive cultivation in Kanyakumari district ... ... 464
Prosperity Brigade, amount allotted to Kanyakumari district for the execution of works ... ... 473—474
Second Class Magistrate Court at Kuzhithurai, Opening ... ... ... ... ... ... 462—463
Taluk Headquarters Hospital at Kuzhithurai, opening of a Dental Wing ... ... ... ... ... 586

DHARMALINGAM, THIRU A. P.—
Drought relief works, need for proper execution (A.M.) ... ... ... ... ... ... 493—505

DISTRICT ADMINISTRATION—
Revenue Department, Bifurcation ... ... ... 328—329

DORAISAMY, THIRU S.—
Bridge across Nallam at Ammapalayam on Tiruppur—Avanashi road ... ... ... ... 16
Dam across Anamalayaru, construction ... ... 587

DRINKING WATER-SUPPLY—
Drinking Water-Supply in Sankari ... ... ... 602—603

E

EDMUND, THIRU G. R.—
Attack on Thiru Venga, M.L.C. in the Legislators' Hostel (A.M.) ... ... ... ... ... 720—721
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 621—622, 628, 632

E—*cont.*

PAGES

EDMUND, THIRU G. R.—*cont.*
Governor's Address (M) ... ... ... ... 780—787, 788, 789, 790—798, 799, 801, 802, 803—805, 811, 825—826, 827
Issue of visitors' gallery tickets, (Point of Information) ... ... ... ... ... ... 41

ELANGOVAN, THIRU K.—
Governor's Address (M) ... ... ... ... 520—524

EMPLOYEES—
Government employees, Family Benefit Scheme ... 323—327

EMPLOYMENT—
Poultry farming, provision of employment opportunities to the educated unemployed youths ... ... 29

ETTIAPPAN, THIRU P.—
Governor's Address (M) ... ... ... ... 529—532

EXHIBITIONS—
Science, district headquarters ... ... ... 451—452

EXPUNCTION—
C.M.C. Hospital at Vellore, strike (A.M.) ... ... 612, 614, 615, 617, 620, 623, 624, 625, 626, 627, 629, 630, 631, 632, 633, 634
Governor's Address (M) ... ... ... ... 271, 272, 276, 277, 280, 547, 554



F

PAGES

FACTORIES—
Cigarette factory, setting up ... ... ... ... 342—343

FAMILY PLANNING—
Intensive Programme ... ... ... ... 333—336

FOOD—
Food articles, supply to card holders ... ... 197—204

FREEDOM FIGHTERS—
House sites ... ... ... ... ... ... 343—345

G

GANAPATHY, THIRU T.—
Governor's Address, (M) ... ... ... ... 46 537—541

GANESAN, THIRU L.—
Family Benefit Scheme for Government employees ... 323—327
Governor's Address (M) ... ... ... 46—61

GOPAL THIRU K. P.—
Governor's Address (M) ... ... ... 532—537

GURUSAMI, THIRU N. V.—
Governor's Address, (M) ... ... ... ... 740—744

H

HANDE DR. H. V.—
Cauvery river waters, failure of inter-State talks (A.M.) ... ... ... ... ... ... 389—392, 410, 412, 415, 420
Drinking water supply in Sankari ... ... ... 602—603
Drought relief works, need for proper execution (A.M.) ... ... ... ... ... ... 479—482, 483—484

H—cont.

PAGES.

HANDE, DR. H. V.—*cont.*

Governor's Address, (M) ... ... ... ... 65, 66, 112—113, 797, 801, 828

Madras City, necessity to provide adequate drinking water facility (C.A.) ... ... ... ... 650, 655, 656

Mini Hospitals in the city, opening ... ... ... 7—8

Motion of thanks to Governor's Address, moving of amendments (Point of order) ... ... ... 41—42, 44, 45, 46

Physically handicapped, rehabilitation scheme ... 347—351

Prisoners, study in jails ... ... ... ... 338—340

P.W.D. Minister's Press Statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... 381—382

HANDLOOM(S)—

Weavers Co-operative Societies, purchase of power looms from Sunrise Company, Bangalore ... ... 591—594

HARIJAN WELFARE—

Harijan colonies at Ellapuram, water supply ... 351

Sulur and Palladam Panchayat Unions, water facilities. 351—354

HISTORICAL MONUMENTS—

Gandhi Mandapam at Kanyakumari, renovation ... 17—18

HOSPITALS AND DISPENSARIES—

Cancer centre, Neyyoor, Government assistance ... 331—332

Committee on the working of hospitals, constitution. 3—7

Dispensaries, Special, for Non-Gazetted Officers in the District Headquarters Hospital, Erode, opening. 585—586

Doctors working in rural areas, concessions ... ... 181—187



H—cont.

PAGES.

HOSPITALS AND DISPENSARIES—*cont.*

Government Hospital at Mayuram, opening of a Dental Wing ... ... ... ... ... 586

Government Hospital, Sulur, expansion scheme ... 461

Headquarters Hospital, Kancheepuram, increase in bed strength ... ... ... ... ... 460—461

Headquarters Hospital, Ooty, appointment of a dietician ... ... ... ... ... ... 586

Mini Hospitals in the city, opening ... ... ... 7—8

Primary Health Centres, aid from Central Government ... ... ... ... ... ... 458—460

Primary Health Centres, posting of a trained staff nurse and a laboratory technician ... ... ... 458

Taluk Headquarters Hospital at Kuzhithurai, opening of a Dental Wing ... ... ... ... ... 586

Tuberculosis Sanatorium, Tiruchirappalli taking over. 330—331

I

ILANCHEZHIYAN, THIRU V. S.—

Governor's Address, (M) ... ... ... ... 426—430

INDUSTRIES—

Ceramic and Pottery Units, transfer ... ... ... 205—206

Industrial Complex for Hosur area ... ... ... 206—207

Manavalakurichi area ... ... ... ... ... 340—341

Paper cover manufacturing unit at Uthukkottai, expansion ... ... ... ... ... 608—609

J

JAILS—

Madurai Central Jail, expansion ... ... ... 337—338

Prisoners, study in jails ... ... ... ... 338—340

PAGES.

JAMES, THIRU J.—

Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators hostel, (AM) ... ... ... ... ... 718

C.M.C. Hospital, Vellore, strike, (A.M.) ... ... 634—636, 637—638, 639

Drought Relief Fund, utilisation, Prime Minister's statement, Point of order ... ... ... ... 356

Drought relief works, need for proper execution (A.M.) ... ... ... 484—486

Governor's Address, (M) ... ... ... ... 72—84 223

Teachers absorbed in Municipal Services ... ... 35—36

JAYARAMAN, THIRU K.—

Sewage channel to divert sewage water running along side of Thirumanimutharu, formation ... ... 601—602

Urban Land Taxes, utilisation in Municipalities ... 24—26

K

KALIMUTHU, THIRU K.—

Governor's Address, (M) ... ... ... ... 684—688

KAMATCHI, THIRU K.—

Tanks in Thiruverumbur constituency, reclamation ... 16

KANDAPPAN, THIRU S.—

Governor's Address, (M) ... ... ... ... ... 788, 789, 790



PAGES.

KANDASAMI, THIRU MANALI C.—

Governor's Address, (M) ... ... ... ... 676—684

KANDASAMY THIRU K.—

Drought relief works, need for proper execution (A.M.) ... ... ... ... ... ... 486—491

Family Benefit Scheme for Government employees ... 323—327

Governor's Address, (M) ... ... ... ... 561—565

Scooters, allotment against State quota ... ... ... 215

KARUNANIDHI, DR. M.—

Cauvery river waters, failure of Inter-State talks, (A.M.) ... ... ... ... 413—419 420, 421

C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 626, 627, 630, 632, 633, 641—649

Contingency Fund (Amendment) Bill, 1975 ... 422

Drought Relief Fund, utilisation—Prime Minister's statement (Point of order) ... ... ... 354—355 356—357

Governor's Address (M) ... ... ... ... 704, 705, 753, 756, 766, 791, 794, 796, 797, 798, 800, 801, 802, 805—822, 823, 824—825 826—827, 828

KHADER BATCHA ALIAS VELLAICHAMY—

Governor's Address (M) ... ... ... 281—285

K—*cont.*


PAGES

KITTAPPA, THIRU N.—
Documentary film on Tourism ... ... ... 36—38
Family Benefit Scheme for Government employees 323—327
Family Planning, Intensive Programme ... ... 333—336
Government Hospital at Mayuram, opening of a Dental Wing ... ... ... ... ... 586
Governor's Address (M) ... ... ... ... 102—107
Homoeopathy Medical College, opening ... ... 8—12
Loans for purchase of plough bulls ... ... 32—33
Madras Metropolitan Development Scheme, assistance from World Bank ... ... ... 12—15
Physically handicapped, rehabilitation ... ... 347
Rehabilitation of Tappers ... ... ... 30—32
Sinking of new wells, financial aid from the International Development Association ... ... 19—23
Sugar Mill at Mayuram area, starting ... ... 598—599
Tuberculosis Sanatorium, Tiruchirappalli, taking over 330—331
Tyre and Tube Distribution Centres ... ... 29—30

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Governor's Address (M) ... ... ... ... 565—568

KRISHNAMOORTHY, THIRU V (NELLIKUPPAM)—
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 628—629
Public Works Department Minister's Press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... ... ... ... ... 378—379

KUMARASAMI, Thiru K. N.—
Bridge across Noyyalaru, construction ... ... 587—588
Government Hospital, Sulur, expansion scheme 461
Governor's Address (M) ... ... 107—112
Irugur-Neelambur road, metalling ... ... 213
Sulur and Palladam Panchayat union, water facilities ... ... ... ... ... 351—354




L


PAGES

LANDS—
Zamin lands, demand for distribution from peasants of Seithur Thevathanam areas ... ... 603—604

LATHEEF, THIRU M. A.—
Attack on Thiru V. Venga, M.L.C., in the Legislators' hostel (A.M.) ... ... ... ... ... 724—726
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... 633
Governor's Address (M) ... ... ... 710—713, 731—737, 739—740

LIBRARIES—
Oriental Manuscripts Libraries, grants from Central Government ... ... ... ... ... 449—451


M


MADHAVAN, THIRU S.—
Governor's Address (M) ... ... ... 64—65, 66, 671, 700, 707—708, 709, 749, 778

MARIMUTHU, THIRU A. R.—
Cauvery river waters, failure of Inter-State talks (A.M.) ... ... ... ... ... 393—396, 421
C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... 627, 639—640
Governor's Address (M) ... ... ... 78, 79, 91, 109, 423, 507—510, 511, 512—520

M—*cont.*

PAGES.

MEENAKSHISUNDARAM, THIRU M.—
Governor's Address (M) ... ... ... 697—699

MILK AND MILK PRODUCTS—
Milk from Soya Beans, production ... ... 607—608

MILLS—
Spinning mill (new) in Ramanathapuram district, starting ... ... ... ... ... 588—591
Sugar Mill at Mayuram area, starting ... ... 598—599
Sugar Mills in Tamil Nadu, nationalisation ... 594—597
Sugar Mills, sale of molasses ... ... ... 599—601

MOHAMED KOTHER MOHIDEEN, THIRU S.—
Governor's Address (M) ... ... ... 435—437

MOTION(S)—
*Ad Motions*,
Attack on Thiru Venga, M.L.C., in the Legislators' hostel ... ... ... ... ... ... 718—731
Cauvery river waters, failure of Inter-State talks ... 384—421
C.M.C. Hospital at Vellore, strike ... ... 609—650
Drought Relief Works, need for proper execution 478—507
Governor's Address, Motion of Thanks ... 46—123, 221—299, 423—447, 507—571, 659—669, 670—713, 731—829,
Suspension of Rule 22. ... ... ... ... 717

MUNICIPALITIES—
Utilisation of Urban Land Taxes, ... ... 24—26



M—*cont.*

PAGES.

MUNU ADHI, THIRU—
C. M. C. Hospital, Vellore, strike (A.M.) ... 626
Governor's Address (M) ... ... ... ... 56

MUTHIAH, THIRU M.—
Death of a Harijan in lock-up at Ottapidaram (Point of order) ... ... ... ... ... 219
Governor's Address (M) ... ... ... ... 297—299

N

NARAYANASAMY, THIRU MANNAI, P.—
Madras City, necessity to provide adequate drinking water facility (C.A. St.) ... ... ... 650—654, 655, 656—657, 658

NARAYANASAMY, THIRU M. V.—
Governor's Address (M) ... ... ... 441—445

NATARAJAN, THIRU E. M.—
Wild Life Sanctuary, Bargur hill, development 475

NEDUNCHEZHIAN, DR. V. R.—
Attack on Thiru Venga, M.L.C., in the Legislators' hostel (A.M.) ... ... ... ... 728—730
Governor's Address (M) ... ... ... 674—675, 676
Suspension of Rule 22 (M) ... ... ... 717

O

OBITUARY REFERENCE—
Jamal Mohideen, Thiru M. J., Mary Clubwala Jadav Thirumathi and Misra Thiru L. N. ... ... 1
Sivashanmugam Pillai, Thiru J. (R) ... ... ... 2—3

OFFICES—
Labour Department, reorganisation ... ... 26—28

P

PAGES

PALANIAPPAN, Dr. S. M.—

Governor's Address (M) ... ... ... 84—92

PALANISAMY, Thiru N. K.—

Agricultural University, master plan for development 470—472

Basmati rice, cultivation in Thanjavur district, ... 464—467

Ceramic and Pottery units, transfer ... ... 205—206

Cereals, set-back in production ... ... 467—470

Children's Theatres, construction in districts ... 217—218

Chingleput Medical College, recognition ... 187—189

Cigarette factory, setting up ... ... ... 342—343

Committee for Cotton development, setting up 207—209

Co-operative Hosiery unit at Tiruppur ... ... 18

Dispensaries (Special) for Non-Gazetted Government Officers in the District Headquarters Hospital, Erode, opening ... ... ... ... 585—586

Family Planning, Intensive programme ... 333—336

Farm Advisory Council, working ... ... 210—211

Food and Drug testing Laboratories, setting up 191—192

Food articles, supply to card holders ... 197—204

Governor's Address (M) ... ... ... 114—115, 291—294

Headmasters, grant of Gazetted status ... ... 577—581

Hospitals, constitution of a committee to examine the working of ... ... ... ... ... 3—7

Industrial Complex for Hosur area ... ... 206—207

Industry for Manavalakurichi area ... ... ... 340—341

Intensive Village Development Camp at Padappai, starting ... ... ... ... ... 605—607



PAGES

PALANISAMY, Thiru N. K.—cont.

Labour Department, reorganisation ... ... 26—28

Madras City, necessity to provide adequate drinking water facility (C.A.) ... ... ... 650, 657—658

Madras Metropolitan Development Scheme, assistance from World Bank ... ... ... ... 12—15

Madurai Central Jail, expansion ... ... 337—338

Petitions from the public at taluk level, quick disposal ... ... ... ... ... 23

Physically handicapped, rehabilitation ... ... 347

Poultry farming, provision of employment opportunities to the educated unemployed youth ... 29

Prevention of Adulteration of Food Act, reconstitution of State Advisory Committee ... ... 189—191

Primary Health Centres, aid from Central Government ... ... ... ... ... ... 458—460

Primary Health Centres, posting a trained staff nurse and a laboratory technician ... ... ... 458

Revenue department, bifurcation ... ... 328—329

Sugar Mills in Tamil Nadu, nationalisation ... 594—597

Sugar Mills, sale of molasses ... ... ... 599—601

Tourist Bungalow at Ootacamund, construction of additional block ... ... ... ... 585

Tourists, agency to secure accommodation ... 456—458

Urban Development Fund, constitution ... 24

Youth Centres, administration ... ... ... 33—35

P—*cont.*


PAGES.

PALANIVELU, THIRU V.—

Governor's Address (M) ... ... ... ... 744—746

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, notifications. 123, 126, 130, 131

Betting Tax Act, 1935, notification ... ... 131

Collection of Statistics (Work-stoppages) Rules, 1972, notification ... ... ... ... 129

Co-operative Land Development Banks Act, 1934, notification ... ... ... ... ... 830

Co-operative Societies Act, 1961, notification ... 299—300

Co-operative Societies (Amendment) Bill, 1974 ... 301

Delimitation of Parliamentary and Assembly Constituencies, notification ... ... ... 136

District Municipalities Act, 1920 notifications ... 124, 125, 126, 132, 135, 136, 300, 714.

Division of wards in Thanjavur Municipality, errata to notification ... ... ... ... 301

Entertainments Tax Act, 1939 ... ... ... 128, 129

Excise Act, 1971, notification ... ... ... 135

General Sales Tax Act, 1969, notifications ... ... 124, 126—127, 131.

Governor's Address to the Members of the Legislature on 20th February 1975 ... ... 138

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1968, notification ... ... 127

Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974. 301




P—*cont.*


PAG

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Indebted Agricuturists (Temporary Relief) Ordinance, 1975 ... ... ... ... ... ... 1

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Ordinance, 1975 ... ... ... 1

Local Authorities Finance Act, 1961 ... ... 1

Madras City Municipal Corporation Act, 1919, notifications ... ... ... ... ... 124—1 130, 1 3

Madurai City Municipal Corporation Act, 1971, notifications ... ... ... ... ... 124—12 1

Motor Vehicles Act, 1939, notifications ... ... 133, 13 300, 71 829, 8

Motor Vehicles Taxation Act, 1931, notifications — 126, 13 131, 13 13

Panchayats Act, 1958, notifications ... ... ... 124, 13 13

Parks, Playfields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, notification ... ... 71

Prohibition Act, 1937, notifications .. .. 127, 13 136, 44

Public Undertakings Committee's Report ... ... 44

Rural Development and Local Administration Notifications errata ... ... ... ... ... 136, 137 44

Reduction in the rate of Central Sales Tax in respect of sale of housing goods, notifications ... ... 137

PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Remission of Stamp duty Chargeable under the Indian Stamp Act, 1889, notifications ... ... ... 136, 137, 138

Slum Areas (Improvement and Clearance) Act, 1971, notification ... ... ... ... ... 829

Stamp duty reduction to Arya Samaj (Central) Trust Board, Madras, notification ... ... ... 830

Table of fees published with late Judicial Department Notification No. 177, notification in regard to an amendment ... ... ... ... ... 300

Tamil Nadu Small Industries Development Corporation Limited, Review and Report .. .. 136

Town and Country Planning Act, 1971, notifications 123, 124, 125, 127, 128, 132, 133, 134, 448, 572, 714

(Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965, notification ... ... ... ... 126

PAULIAH, Thiru A.—

Governor's Address (M) .. .. .. .. 691—697

PERUMAL, Thiru A. R.—

Governor's Address (M) .. .. .. 659—667

PONNAPPA NADAR, Thiru R.—

Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislative Hostel (A.M.) ... ... ... ... ... 726—728

Cauvery river waters, failure of inter-State Bills (A.M.) .. .. .. .. 384—388, 412



PAGES

PONNAPPA NADAR, THIRU R.—*cont.*

Governor's Address (M) ... ... ... ... 58, 76, 77, 79, 115, 755, 763—780

Motion of Thanks to Governor's Address, moving of amendments (Point of Order) .. .. 42—43,

PRIVILEGE—

Motion against Makkal Kural, Annai Nadu, Samaneethi, etc. ... ... ... ... ... ... 477—478

P.W.D. Minister's Press statement attacking Estimates Committee Chairman .. .. .. 357—384

PROHIBITION—

Rehabilitation of Tappers .. .. .. 30—32

PROSPERITY BRIGADE—

Amount allotted for works in Kanyakumari district ... 473—474

Rest House in Madras, Construction .... ... 472

PUBLIC HEALTH—

Dog biting cases, Coimbatore ... ... ... 333

Food and Drug testing Laboratories, setting up ... 191—192

Sewage channel to divert sewage water running along side of Thirumanimutharu, formation .. .. 601—602

R

RAJAMANICKAM, THIRU A.—

Governor's Address (M) .. .. .. 559—560

RAJANGAM, THIRU N.—

Correction to answer given on 29th March 1974 about rehabilitation of Ceylon repatriates (St.) ... 220—221

RAMACHANDRAN, Thiru S.—

Governor's Address (M) ... ... ... ... 761—763

R—*cont.*

PAGES

RAMAKRISHNAN, Thiru Kuppal K. S.—

P.W.D. Minister's Press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... 378

RAMALINGAM, Thiru R.—

Governor's Address (M) ... ... ... ... 257—262

RATHINASABAPATHY, Thiru M.—

Governor's Address (M)

REHABILITATION—

Physically handicapped .. .. .. .. 347

REST HOUSES—

Madras, Construction for Prosperity Brigade .. 472

ROAD(S)—

Irugur—Neelambur road, metalling .. .. 213

Rural road works scheme, details .. .. .. 211—212

S

SADIQ PASHA, Thiru S. J.—

Governor's Address (M) .. .. .. .. 111, 233—234, 235—236, 250, 274, 275, 276, 288, 291, 701

SANCTUARY—

Wild life, Burhner hill, development ... ... ... 475

SANGUMUTHU THEVAR, Thiru S.—

Governor's Address (M) ... ... ... 222

S—*cont.*

PAGES

SATHIAMOORTHY, Thiru M.—

Governor's Address (M) ... ... ... ... 257—262

SATHYAVANIMUTHU, THIRUMATHI—

Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators' hotel (A.M.) ... ... ... ... ... 718

C.M.C. Hospital at Vellore, strike (A.M.) ... 629

Governor's Address (M) .. .. .. 541—554

SERICULTURE—

Development in South Arcot district ... ... 209—210

SHANMUGAM, Thiru P. U.—

Cauvery river waters, failure of Inter-State talks (A.M.) ... ... ... ... ... ... 401—412, 419—420, 421

C.M.C. Hospital, Vellore, strike (A.M.) .. 632, 637, 638, 639

SHANMUGAM, THIRU P. U.—

Drought relief works, need for proper execution (A.M.) ... ... ... ... ... ... 482

Governor's Address (M) ... ... ... 236—237

Public Works Department Minister's Press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... ... ... ... ... 377, 378

SHANMUGASUNDARAM, THIRU A.P.—

Governor's Address (M) ... ... ... 688—691

SIVAPRAKASAM, THIRU D.S.A.—

Governor's Address (M) ... ... ... ... 554—559

SOCIAL WELFARE—

Family Benefit Scheme for Government employees ... 323—327

Physically handicapped, rehabilitation scheme ... 347—351

PAGES


**SONIAH, THIRU T.—**

Bridge on Madurai—Thondi road, construction ... 196

Bridge on Padamathu—Thiruppachethi road, repairs. 196—197

Governor's Address (M) ... ... ... 294—297

**SOUNDARAPANDIAN, THIRU P.—**

Additional sub-courts in Tiruchirappalli, opening ... 463—464

Co-operative oil mill, establishment in Thuraiyur taluk ... ... ... ... ... 217

Governor's Address (M) ... ... ... 61—64, 67—73, 222, 829

Registration numbers for Motor Vehicles, separate charges for applying for particular numbers ... 213—215

Rest House in Madras, Prosperity Brigade, construction ... ... ... ... ... ... ... 47

Science exhibitions at district headquarters ... 451—452

Sericulture, development in South Arcot district ... 209—210

Sugar Mills in Tamil Nadu, nationalisation ... 594—597

Urban Development Fund, constitution ... ... 2

**SPORTS—**

Special coaching scheme for students ... ... 452—456

**SRINIVASAN, THIRU P.—**

C.M.C. Hospital, Vellore, strike (A.M.) ... ... 631, 632

Governor's Address (M) ... ... ... ... 102, 799, 801, 823, 827

**SUBBIAH, THIRU A. K.—**

Cauvery river waters, failure of Inter-State talks (A.M.) ... ... ... ... ... ... 399—401

Governor's Address (M) ... ... ... 253—257




PAGES


**SUBRAMANIAM, THIRU A.**

Attack on Thiru V. Venga, M.L.C., in the Legislators' hostel (A.M.) ... ... ... ... ... 722—724

C.M.C Hospital, Vellore, strike (A.M.) ... 620

Governor's Address (M) ... ... ... ... 423—425, 737, 822, 823, 824

Public Works Department Minister's Press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... ... ... ... ... 372—377

Ship "E.V.R. Periyar", repairs .. .. .. 192—196

**SUGAR—**

*See* 'Mills'

**SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—**

Governor's Address (M) ... ... ... ... 98—102

**SUPPU, THIRU K.—**

Aruppukkottai-Kalkurichi bus service ... ... 215—216

Spinning mill (new) in Ramanathapuram district, starting .. .. .. .. .. 588—591

**SURENDRAN, THIRU M.—**

C.M.C. Hospital at Vellore, strike (A.M.) ... ... 621

Governor's Address (M) ... ... ... ... 67, 120, 223, 268—280

Handloom Weavers Co-operative Societies, purchase of powerlooms from Sun Rise Company, Bangalore 591—594

**SURULIVEL, THIRU M.—**

Governor's Address (M) ... .. .. ... 431—434

## T


| | PAGES |
|---|---|
| **TANGAMANI, Thiru K. T. K.—** | |
| Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators' hostel (A.M.) ... ... ... ... ... | 718—720 |
| Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators' hostel (Point of order) ... ... ... ... | 396—670 |
| Cauvery river waters, failure of Inter-State talks (A.M.) ... ... ... ... ... ... | 396—399 |
| C.M.C. Hospital, Vellore, strike (A.M.) .. .. | 623, 624—625, 640—641 |
| Drought Relief Fund, utilisation, Prime Minister's statement (Point of order) .. .. .. | 356 |
| Drought relief works, need for proper execution (A.M.) .. .. .. .. .. | 478—479, 482, 491—493 |
| Governor's Address (M) .. .. .. | 58, 59, 77, 92, 113—114, 118, 746—761, 762, 818, 819, 822—823, 826, 828 |
| Matter of Privilege, notice (Point of information) .. | 39, 40 |
| Motion of Thanks to Governor's Address, moving of amendments (Point of order) .. .. | 42, 44 |
| Public Works Department Minister's press statement attacking Estimates Committee Chairman (Privilege Matter) ... ... ... ... ... ... | 357—358, 360—369, 378 |
| Zamin lands, demand for distribution from peasants of Seithur Thevathanam areas .. .. .. | 603—604 |
| **TANK(S)—** | |
| Thiruverumbur Constituency, reclamation ... ... | 16 |




## T—*cont.*


| | PAGES |
|---|---|
| **TAXES—** | |
| Urban Land Taxes, utilisation in Municipalities ... | 24—26 |
| **TEACHERS—** | |
| Headmasters, grant of Gazetted status .. .. | 577—581 |
| Headmasters in 'A' Wing High Schools, sanction of annual increment in accordance with recommendations of Second Pay Commission .. .. .. | 581—584 |
| Municipal Services .. .. .. .. | 35—36 |
| **THEATRES—** | |
| Children's Theatres, construction in districts ... ... | 217—218 |
| **TOURISM—** | |
| Agency to secure accommodation for tourists .. | 456—458 |
| Documentary film .. .. .. .. | 36—38 |
| Tourist Bungalow at Ootacamund, construction of additional block .. .. .. .. | 585 |
| **TOWN AND COUNTRY PLANNING—** | |
| Madras Metropolitan Development Scheme, assistance from World Bank .. .. .. .. | 12—15 |
| **TRANSPORT AND COMMUNICATIONS—** | |
| Aruppukkottai-Kalkurichi bus service .. .. | 215—216 |
| Broadway-Pennalurpet bus route, suspension .. | 476 |
| Madras-Elavoor bus route, extension to Cumbuli village, .. .. .. .. .. | 475—476 |
| Registration numbers for motor vehicles, separate charges for applying for particular numbers .. | 213—215 |
| Ship "E.V.R. Periyar", repairs ... ... ... | 192—196 |

## U


| | PAGES |
|---|---|
| **UNIVERSITIES—** | |
| Agricultural University, master plan for development | 470—472 |
| **URBAN DEVELOPMENT—** | |
| Constitution of a Fund .. .. .. .. | 24 |


## V


| | PAGES |
|---|---|
| **VADIVEL, THIRU S.—** | |
| Governor's Address (M) ... ... ... ... | 115—123 |
| **VEERASAMI, THIRU N.—** | |
| Attack on Thiru V. Venga, M.L.C. in the Legislators' Hostel (Point of order) .. .. .. | 669 |
| C.M.C. Hospital, Vellore, strike (A.M.) .. .. | 615, 617, 636 |
| Governor's Address (M) .. .. .. .. | 66, 74, 120, 239—252, 511, 512 |
| Lengthy answers, supply to Members in advance (Point of order) ... ... ... ... ... | 476—477 |
| Views of Karnataka State's Public Works Minister on Cauvery water dispute (Point of order) .. | 218—219 |
| **VENKATASWAMY, THIRU B.—** | |
| Artificial insemination, Mobile van, commissioning in Madras .. .. .. .. | 474 |
| Governor's Address (M) .. .. .. | 223—227 |
| Hospitals, constitution of a committee to examine the working .. .. .. | 3—7 |
| Milk from Soya Beans, production ... ... ... | 607—608 |





| | PAGES |
|---|---|
| **VEZHAVENDAN, THIRU K.—** | |
| Broadway-Pennalurpet bus route, suspension .. | 476 |
| Harijan colonies, Ellapuram, water supply ... ... | 351 |
| Headquarters hospital, Kancheepuram, increase in bed strength .. .. .. .. .. | 460—461 |
| Madras-Elavoor bus route, extension to Cumbuli village .. .. .. .. .. | 475—476 |
| Paper cover manufacturing unit at Uthukkottai, expansion .. .. .. .. .. | 608—609 |
| Rural road works scheme, details .. .. | 211—212 |
| Sub-taluk office buildings, Chingleput district .. | 346 |


## W


| | PAGES |
|---|---|
| **WAHAB, THIRU K. A.—** | |
| Governor's Address (M) ... ... ... ... | 92—98 |
| **WATER-SUPPLY—** | |
| Harijan colonies, Ellapuram, water-supply ... | 351 |
| Madras city, necessity to provide adequate drinking water facility (C.A.) ... ... ... ... | 650—658 |
| Sulur and Palladam Panchayat Unions ... ... | 351—354 |
| **WELL(S)—** | |
| Financial aid from the International Development Association for sinking new wells ... ... ... | 19—23 |
| **YOUTH CENTRES—** | |
| Administration ... ... ... ... ... | 33—35 |